திருவாசகம்

சில சிந்தனைகள்

திருப்பொற்கண்ணம் - கோயில் திருப்பதிகம்

3



பேராசிரியர்
அ.ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

திருவாசகம்

சில சிந்தனைகள்

{ திருப்பொற்சுண்ணம் – கோயில் திருப்பதிகம்}

③

பேராசிரியர்

அ. ச. ஞானசம்பந்தன்



13, தீனதயாலு தெரு,

தி.நகர், சென்னை - 600 017.

முதற் பதிப்பு : ஜூலை, 2000
இரண்டாம் பதிப்பு : அக்டோபர், 2001
மூன்றாம் பதிப்பு : பிப்ரவரி, 2007
உரிமை : ஆசிரியருக்கு

2000 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் சென்னையில் நடைபெற்ற எட்டாவது சேக்கிழார் விழாவில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரால் வெளியிடப்பெற்றது.

விலை : ரூ.100.00

TITLE	:	**THIRUVASAGAM - SILA SINTHANAIGAL - 3**
AUTHOR	:	**Prof. A.S. GNANASAMBANDAN**
LANGUAGE	:	TAMIL
EDITION	:	Third Edition, February, 2007
NO. OF PAGES	:	viii + 424 = 432
PUBLICATION	:	**GANGAI PUTHAKA NILAYAM** 23, Deenadayalu Street, Thyagaraya Nagar, CHENNAI - 600 017. Phone : 24342810 / 24310769
PRICE	:	**Rs.100.00**

Laser Typeset at : Sivasakthi Laser Prints, Chennai-600 041.
Printed at : Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891, 28446166

படையல்

என்னைவிடப் பல்லாண்டுகள் மூத்தவர்களாயினும்,
1932ஆம் ஆண்டு முதல் என்னோடு நெருங்கிப் பழகி,
என்னை மகனாகவே பாவித்து,
தேவை ஏற்பட்டபோதெல்லாம்
என் வாழ்க்கையைத் திசை திருப்பியவர்கள் இருவர்.

மனத்திற்பட்டதை
மேடையில் அஞ்சாமல் கூற ஊக்கம் தந்தவரும்,
திருவாசகத்திற்கு என்போக்கில் உரைகாணவேண்டும்
என்று என்னைத் தூண்டியவரும்

தமிழ்த் தென்றல்
திரு. வி. கலியாணசுந்தரனார்
அவர்களே ஆவார்.

ஆன்மிகத் துறையில் என்னை உந்திச் செலுத்தி, தம்
பூத உடலை நீத்த பிறகும், இன்றும் அத்
துறையில் என்னை வழிநடத்திச் செல்பவர்

பல்கலைச் செல்வர்
டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
அவர்களே ஆவார்.

இந்த இரு மகான்களுக்கும் மிக்க பணிவன்புடன்
இந் நூலைப் படையல் செய்து
அவர்களின் ஆசியை வேண்டி இறைஞ்சுகின்றேன்

அ. ச. ஞானசம்பந்தன்

முன்னுரை

1950ஆம் ஆண்டில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள், திருவாசகத்தை விஞ்ஞானக் கண்கொண்டு பார்த்து நான் ஓர் உரை காணவேண்டுமென்று பலமுறை தூண்டினார்கள். அத்தோடு நில்லாமல் தம்முடைய வாழ்க்கைக் குறிப்பில் என்னைப்பற்றி எழுதிய பகுதியிலும் இக் கருத்தை வெளியிட்டிருந்தார்கள். ஏனைய பக்தி நூல்களினின்றும் 'திருவாசகம்' மாறுபட்டது. இந்நூல் ஓர் இறையன்பரின் 'அனுபவப் பிழிவு' என்ற கருத்தைத் தொடக்கத்திலிருந்தே கொண்டிருந்தேன். வாலாயமாகக் கூறும் பதவுரை, பொழிப்புரை முதலியன இந்நூலுக்கு ஏற்றதல்ல என்ற கருத்தும் என் மனத்தில் வலுவாக இடம் பெற்றிருந்தது. அன்றியும், திருவாசகத்தைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் ஓர் அச்ச உணர்வு தோன்றியமையால் இம்முயற்சியில் அப்போது ஈடுபடவில்லை.

தமிழ்த் தென்றல் அவர்கள் கூறி நாற்பத்தொன்பது ஆண்டுகள் கழித்து திடீரென்று சில எண்ணங்கள் மனத்தில் தோன்றலாயின. இந்த எண்ணங்களும், அவற்றைத் தோற்றுவிக்கும் திருவாசக அடிகளும் அடிக்கடி படம்போல் மனத்தில் தோன்றி மறைந்தன. திருவாசக அடிகள் இந்த எண்ணங்களைத் தோற்றுவித்தன என்பது உண்மைதான். ஆனால் அச் சொற்கள், அவை குறிக்கும் பொருள்கள் என்பவை நேரடியாக இவ் எண்ணங்களைத் தோற்றுவிக்க வில்லை. அதன் மறுதலையாக, அச்சொற்கள் குறிப்புப் பொருளாக (suggestion) இவ் எண்ணங்களைத் தோற்றுவித்தன. அவ் எண்ணங்களுக்குக் கோவையாக ஒரு வடிவு கொடுக்கும் ஆற்றல் என்பாலில்லை. எனவே, சில அடிகளைப் படித்தவுடன் அத் தொடர்கள் என் மனத்தில் என்ன எண்ணங்களைத் தோற்றுவித்தனவோ அவற்றை அப்படியே கூறியுள்ளேன். இவ்வாறு சொல்வதற்குத் தொல்காப்பியத்தில் வரும் 'இறைச்சி' என்ற சொல் வலிவு தந்தது.

அனுபவத்திற்கு வடிவு கொடுக்கும் திருவாசகப் பாடல்கள் ஒரு கோவையாக, ஒரு வரன்முறைக்கு உட்பட்டு வருமென்று சொல்வதற்கில்லை. கோவையும், வரன் முறையும் வேண்டுமானால், அங்கே அறிவு தொழிற்பட வேண்டும். அறிவு தொழிற்படத் தொடங்கினால், உணர்வு குறையத் தொடங்கிவிடும்.

இக்கருத்துக்களை மனத்தில் கொண்டு ஒரு அடியையோ, சில அடிகளையோ அவ்வப்பொழுது படிக்கச் சொல்லிக் கேட்கும்போது என்ன சிந்தனைகள் மனத்தில் தோன்றினவோ அவையே இங்கு இடம் பெற்றுள்ளன. இச்சிந்தனைகள் என்னுடைய அறிவின் துணைகொண்டோ, அறுபது வருட இலக்கியப் பயிற்சியின் விளைவாகவோ தோன்றியவை அல்ல.

யாழ்ப்பாணம் திரு. சு. மார்க்கண்டு அவர்கள் இரண்டு அடிகளையோ, நான்கு அடிகளையோ படித்துக் காட்டிய உடன் அந்த விநாடி என் மனத்தில் தோன்றிய சிந்தனைகளே இங்கு இடம்பெற்றுள்ளன. அதனாற்றான், 'திருவாசகம் – சில சிந்தனைகள்' என்று இந் நூலுக்குப் பெயரிடப்பெற்றுள்ளது.

மணிவாசகரின் அருள் துணைகொண்டு 'திருவாசகம்– சில சிந்தனைகள்' பகுதி–1, பகுதி–2, என்பன முன்னரே வெளிவந்துள்ளன. இப்பொழுது மூன்றாம் பகுதி வெளி வருகிறது. இதனை அடுத்து நான்காவது பகுதியும், ஐந்தாவது நிறைவுப் பகுதியும் வெளிவர உள்ளன.

திருப்பொற்சுண்ணம் முதல் கோயில் திருப்பதிகம் வரையான திருவாசகப் பாடல்கள் இந்த மூன்றாம் பகுதியில் இடம் பெறுகின்றன. வழக்கம்போல பின்னுரையும் நூலுடன் இணைந்துள்ளது.

இந்த மூன்றாம் பகுதியை என் வாய்மொழி மூலம் கேட்டு எழுதியவர்கள் யாழ்ப்பாணம் திரு. சு. மார்க்கண்டு

அவர்களும், இந்திய இரயில்வேயில் மின்னியல் தலைமைப் பொறியாளராக இருந்து ஓய்வுபெற்ற திரு. C. P. கௌரிசங்கர் அவர்களும், திருமதி ஞா. மீரா அவர்களும் ஆவர். எழுதி முடித்த பின்னர் ஒவ்வொரு வரியாகப் பார்த்து தடை விடைகளை எழுப்பி ஒரு முழுவடிவம் பெறுமாறு செய்ததுடன், படிகளைத் திருத்தும் பணியையும் மேற் கொண்டவர்கள் இதய மருத்துவ நிபுணர் டாக்டர். ந. சிவராசன், முனைவர். ம. ரா. போ. குருசாமி (கோவை), பொறியாளர் திரு. C. P. கௌரிசங்கர், திரு. ச. மார்க்கண்டு என்போர் ஆவர். இவர்கள் அனைவருக்கும் மணிவாசகப் பெருமான் இன்னருளைப் பொழிந்து வாழ்த்துமாறு அப்பெருமானின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

'திருவாசகம்–சில சிந்தனைகள்' இரண்டாவது பகுதிக்கு 'எங்கள் பிராட்டியும் எங்கோனும் போற்றிசைந்த பொங்கு மடு' என்ற திருவெம்பாவை பாடலினை விளக்குமுறையில் முகப்புப் படம் தீட்டியவர் ஓவியர் பத்மவாசன் ஆவார். அதேபோல இப்பகுதிக்கு, 'உன்னை உவப்பன் குயிலே உன் துணைத் தோழியும் ஆவன்' என்ற குயிற் பத்துப் பாடலை அடித்தளமாகக் கொண்டு படம் வரைந்துள்ளார். தெய்வப் படங்கள் தீட்டுவதில் ஈடிணையற்று விளங்கும் ஓவியர் திரு. பத்மவாசனுக்கு மணிவாசகப் பெருமான் திருவருள் பொழிவதாக என அப் பெருமானின் திருவடிகளை இறைஞ்சுகிறேன்.

வழக்கம்போல இதனை நன்முறையில் அச்சுக்கோத்துத் தந்த 'சிவசக்தி கணினி அச்சுக்கோப்பாளர்'களுக்கும் மணிவாசகரின் இன்னருள் பாலிப்பதாக.

சிறப்பாக நூலை வெளியிட்ட 'கங்கை புத்தக நிலைய' உரிமையாளர் திரு. திருநாவு. இராமநாதன் அவர்களுக்கு மணிவாசகரின் நல்லருள் கிட்டுவதாக.

சென்னை–83
ஜூலை, 2000.

அ.ச.ஞானசம்பந்தன்

பொருளடக்கம்

1.	திருப்பொற்சுண்ணம் – சில சிந்தனைகள்	1
2.	திருக்கோத்தும்பி – சில சிந்தனைகள்	39
3.	திருத்தெள்ளேணம் – சில சிந்தனைகள்	77
4.	திருச்சாழல் – சில சிந்தனைகள்	105
5.	திருப்பூவல்லி – சில சிந்தனைகள்	135
6.	திருவுந்தியார் – சில சிந்தனைகள்	157
7.	திருத்தோள்நோக்கம் – சில சிந்தனைகள்	171
8.	திருப்பொன்னூசல் – சில சிந்தனைகள்	187
9.	அன்னைப் பத்து – சில சிந்தனைகள்	199
10.	குயிற் பத்து – சில சிந்தனைகள்	213
11.	திருத்தசாங்கம் – சில சிந்தனைகள்	227
12.	திருப்பள்ளியெழுச்சி – சில சிந்தனைகள்	235
13	கோயில்மூத்த திருப்பதிகம்–சில சிந்தனைகள்	271
14	கோயில் திருப்பதிகம் – சில சிந்தனைகள்	293
	பின்னுரை	323
	பாட்டு முதற்குறிப்பு அகராதி	422

9. திருப்பொற்சுண்ணம்

[ஆனந்த மனோலயம்]

பொற்சுண்ணம் என்பது அழகிய வாசனைப் பொடி என்பதாகும். மிகப் பழங்காலத்திலேயே இத்தகைய சுண்ணத்தைக் கிராமங்களில் வாழும் மக்கள் தாங்களே இடித்துத் தயாரித்துக்கொண்டனர் என்று அறியமுடிகிறது. இவ்வகைச் சுண்ணத்தை மகளிர் குளிப்பதற்குப் பயன் படுத்தியதோடு சாதாரண நிலையிலும் பூசிக்கொண்டனர் என்று நினைப்பதில் தவறில்லை.

இச் சுண்ணம் பல்வேறு வகைப்பட்ட பொருள்களை ஒன்றுசேர்த்து இடிக்கப்படுவதாகும். வசதி குறைந்தவர், ஒன்று அல்லது இரண்டு வாசனைப் பொருட்களை மட்டும் இடித்துப் பயன்படுத்தினர். [மாதவி குளிப்பதற்குப் பயன்படுத்திய பொடி. மிகப் பல வாசனைப் பொருள்கள் சேர்த்து இடிக்கப்பட்டதாகும் என்று சிலம்பு பேசுகிறது.]

குணமாலை, சுரமஞ்சரி இருவரும் தத்தம் வாசனைப் பொடியே உயர்ந்தது என்றுகூறி மனம் மாறுபாடு கொள்ள, இவற்றுள் சிறந்தது எது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பைச் சீவகநம்பியிடம் விட்டுவிட்டனர் என்பதைச் சீவக சிந்தாமணி பேசுகிறது.

பல்வேறு வாசனைப் பொருள்கள் மிகுந்த அளவில் சேர்த்து இடிக்கப்படுதலின் ஒருவர்மட்டும் நின்று இடித்தல் சற்றுக் கடினமாகும். எனவே, இருவரோ அல்லது நால்வரோ எதிர் எதிராக நின்றுகொண்டு இடித்தனர் என்பதை அறிய முடிகிறது. உரலில் உள்ள சிறிய குழியில் ஓர் உலக்கைக்கு மேல் ஒரே நேரத்தில் உள்ளே செல்ல முடியாது. எனவே, இந்த நால்வரும் ஒரு தாள சுதியை

அடிப்படையாக கொண்டு ஒன்று, மூன்று, இரண்டு, நான்கு என்ற முறையில் மாறிமாறி இடித்தனர் என்பதைத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் வள்ளைப்பாட்டு மூலம் அறிகிறோம்.

இந்தத் தாள கதிக்கு ஏற்ப உலக்கை விழவேண்டுமானால் அதற்கேற்ற இசையோடுகூடிய பாடல் ஒன்று வேண்டும்.

திருவாசகத்தில் வரும் திருப்பொற்சுண்ணம் இந்தத் தாள கதிக்கு ஏற்ப அமைக்கப்பெற்ற ஓசைநலம் கொண்ட இசைப் பாடல்களைக் கொண்டதாகும்.

பெரும்பாலும் எட்டுச் சீர்களைக் கொண்ட விருத்தப் பாடல் ஆயினும், சில பாடல்கள் ஆறு சீர், ஏழு சீருடன் அமைந்துவிட்டன. இந்த நுணுக்கம் அறியாத பிற்காலத்தார் சொற்களைப் பிய்த்து எட்டுச் சீரோ, ஏழு சீரோ எல்லா அடிகளிலும் வரும்படியாக எழுதிவிட்டனர். இசைப் பாவின் நுணுக்கம் அறியாதார் செய்த பிழையாகும் இது. இப்பெருமக்கள் தேவாரத்திலும் தம் கைவரிசையைக் காட்டத் தவறவில்லை.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் திருவிராகம் என்ற பெயரில் வரும் முடுகு அமைந்த பாடல்கள் ஐந்து சீர்கள், நான்கு சீர்கள், என்ற முறையில் முதலடியும் அடுத்த அடியும் மாறுபட்டு வருதலைக் காணலாம். இப்பாடல்களுக்கு உயிர்நாடி இசை ஆதலால் பல இடங்களில் விருத்தப் பா இலக்கணம் மீறப்பட்டுள்ளது.

அடிகளாரின் திருப்பொற்சுண்ணமும் இவ்வகையினதே ஆகும். திருவாசகத்தின் பிற பாடல்களில் காணப்பெறாத இசை அமைப்பு திருப்பொற்சுண்ணத்தில்மட்டும் அமைந்திருத்தலைக் காணலாம்.

சுண்ணம் இடிப்பதைக் கூறும் பழைய பாடல்கள் அகத்திணையின்பாற் பட்டு இயற்பட மொழிதல் (தலைவனைப் புகழ்ந்தும்) இயற்பழித்து மொழிதல் (தலைவனைப் பழித்தும்) என்ற முறையிலும் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி துயரத்தை வெளிப்படுத்தும் முறையிலும் அமைந்துள்ளன.

ஆனால், அடிகளாரின் திருப்பொற்சுண்ணம், எல்லா உயிர்கட்கும் தலைவனாகிய இறைவனின் புகழை, உரலின் எதிரெதிராக நிற்கும் பெண்கள் பாடிக்கொண்டே மாறி மாறி இடிக்கும் தாள கதியில் அமைந்துள்ளது. உள்ளன்போடு இறைவன் புகழைப் பாடுதலின், மனம் இறையன்பில் மூழ்கி யிருக்க, பாடலின் தாள கதிக்கு ஏற்ப உலக்கை பிடித்த கைகள்மட்டும் மாறி மாறி இடிக்கின்றதைக் காணலாம்.

இத் தொகுப்புக்கு 'ஆனந்த மனோலயம்' என்று முன்னோர்கள் பெயரிட்டுள்ளனர். இது எவ்வகையில் பொருத்தமாகிறது என்று தெரியவில்லை. ஆனந்தம் காரணமாக எழும் மன லயத்தில் கண்ணீர் அரும்பி வாய் குழறுமே தவிரத் தாள கதிக்கு ஏற்பப் பாடல் வெளிவராது. முன்னர்ப் பல இடங்களில் நாம் குறித்துள்ள இறைப் பிரேமைதான் (Divine Ecstacy) ஆனந்த மனோலயம் எனப்பெறும். இதனை விளக்கவந்த அடிகளார், 'சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்' (திருவாச: 386) என்ற பாடலில் ஆனந்த மனோலயம் உடையார் செயல்களை விரித்துக் கூறியுள்ளார். இந்நிலையில் உள்ளவர்கள் எந்த ஒரு செயலையும் தொடர்ந்து செய்யமுடியாது. தாள கதிக்கு ஏற்ப உலக்கையை இடித்தல் இயலாத காரியம். இதனால் இத்தலைப்பின் பொருத்தமின்மை அறியலாம்.

இதுபோன்ற தவறுகள் இடைக்காலத்தில் புகுந்துள்ளன என்பதற்கு மற்றோர் உதாரணத்தையும் காணலாம். சைவத்திலும் திருவாசகத்திலும் எல்லையற்ற ஈடுபாடு கொண்டு, அன்றாடம் திருவாசகப் பாராயணம் செய்யும்

யாழ்ப்பாணம்வாழ் சைவப்பெருமக்கள் வீட்டிலும், தென்பாண்டிச் சைவர்கள் பலர் வீட்டிலும் இன்றும் ஒரு தவறு நிகழ்ந்துவருகிறது. மங்களகரமான பொற்சுண்ணம் இடிப்பதை என்ன காரணத்தினாலோ சாவு வீட்டில் செய்துவருகின்றனர். இது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று.

(இறைவனுக்குப் பொற்சுண்ணம் இடித்தல் மனத்தில் ஆனந்தத்தை நிரப்புவதால் ஆனந்த மனோலயம் என்ற உள்தலைப்பு பொருத்தமானதேயாம்).

195. முத்து நல் தாமம் பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டு இசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொள்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 1

தாமம்–மாலை. சோமி–திருமகள். சத்தி–ரௌத்திரி. சித்தி–கணபதியின் சத்தி. கௌரி–காளி. பார்ப்பதி–உமை.

மகளிர் குளிப்பதற்குப் பயன்படுத்தும் வாசனைப் பொடி அன்றாடம் இடித்துப் பயன்படுத்தக் கூடியதன்று. நான்கு பெண்கள் கூடி உரலில் இட்ட பொருள்களை இடித்து, சலித்து தயாரிக்க வேண்டிய இப்பொடி இரண்டு அல்லது மூன்று மணிநேர வேலையாகும். எனவே, சில மாதங்களுக்கு வேண்டிய பொடியைத் தயாரிக்கத் தொடங்குமுன் அதை ஒரு விழாவாகக் கொண்டாடினர்போலும். அன்றியும் இங்குத் தயாரிக்கப்படும் பொடி இறைவனுடைய அபிடேகத்தில் பயன்படுத்தப்படும் பொடியாதலின் மக்களுக்குத் தயாரிப்பதுபோல் அல்லாமல் இறை பக்தியோடு அனைவரும் ஒன்றுகூடி இதனைச் செய்தனர்.

ஒரு நல்நிகழ்ச்சி நடைபெறவேண்டுமானால் வீட்டைத் தூய்மை செய்து மாலைகள் தோரணங்கள் முதலியவை தொங்கவிடப்படுதலைக் கிராமங்களில் இன்றும் காணலாம். அந்த முறையில் இறைவனுக்குரிய பொற்சுண்ணத்தை இடிக்கத் தொடங்குமுன் 'நல்ல முத்துக்களால் ஆகிய மாலைகளை வீடு முழுவதும் தொங்கவிடுங்கள்' என்று பாடலைத் தொடங்குகின்றார்.

திருமணம் முதலிய நல்விழாக்கள் நடைபெறும் பொழுது நவதானியங்களை முளைக்கச்செய்து சிறு கிண்ணங்களில் நிரப்பிவைத்தல் இன்றும் நடைபெறுவதாகும். இதனை முளைப்பாரி என்பர். முளைப்பாரி கொண்ட சிறு கிண்ணங்கள் வட்டமாக வைக்கப்பெற்று, அதன் நடுவே பூரண கும்பம் வைக்கப் பெறும். இதனைச் சுற்றி அகல் விளக்குகள் ஏற்றி வைக்கப்பெறும். இதனையே அடிகளார் 'முளைக்குடம் தூபம் நல் தீபம் வைம்மின்' என்று பேசுகிறார்.

அடுத்து சக்தி, சோமி, பார்மகள், நாமகள் என்ற பெயர்களையுடைய பெண்களை அழைத்துப் பல்லாண்டு பாடும்படியாகப் பணிக்கின்றார்.

சித்தி, கௌரி, பார்வதி, கங்கை என்ற பெயருடைய பெண்கள் நால்வரும் கவரி வீசப் பணிக்கப்படுகின்றனர்.

இரண்டு கூட்டத்தாருக்கும் குறிப்பிட்ட பணி பகிர்ந்து அளிக்கப்பட்டபின் ஐயாறன் ஆகிய பெருமான் நீராடும் பொழுது பூசுவதற்குரிய சுண்ணத்தை இடிக்கத் தொடங்குவோம் என்கிறார் அடிகளார்.

சந்தி முதல் கங்கை வரை உள்ள எட்டுப் பெயர்களும் உலகெலாம் வாழும் சாதாரண மானிடப் பெண்களின் பெயர்கள் என்றே உரை காணப் பெற்றுள்ளது. காரணம், அபிடேகத்துக்கு உரியவனாக இருப்பவன் ஐயாறன் ஆவான். அவனுடைய அபிடேகத்திற்குத் தேவையான

பொற்சுண்ணம் இடிக்கத் தொடங்கவேண்டும் என்றே பாடல் தொடங்குகிறது. ஐயாறனுக்குரிய சுண்ணத்தை இடிக்கும்பொழுது மேலே கூறிய எட்டு மகளிரும் அவ்வப்பெயருக்குரிய தெய்வ மகளிர் என்று கூறுவதிலும் எவ்விதத் தவறும் இல்லை.

196. பூ இயல் வார் சடை எம்பிராற்குப்
பொன் திருச்சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடு வகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்து உடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எம் கோன் எம் கூத்தன்
தேவியும் தானும் வந்து, எம்மை ஆளச்
செம் பொன் செய் சுண்ணம் இடித்தும் நாமே 2

'மலர்கள் நிறைந்த சடையை உடைய இறைவனுக்கு அபிடேகப் பொருளாகிய பொற்சுண்ணத்தை இடிக்கத் தொடங்க வேண்டும். ஆதலால் பிளந்த மாவடுப் போன்ற கண்ணையுடைய பெண்களே! இல்லத்தின் வெளியே நிற்கும் அடியார்களைக் கூவி அழையுங்கள். அனைவரும் சேர்ந்து இறைவன் புகழைப் பாடுங்கள்; குனிந்து அவனைத் தொழுங்கள்.

'தில்லைக் கூத்தன் தன் தேவியோடு எம்மை ஆள இதோ வந்துவிட்டான்; உடனடியாகப் பொற்சுண்ணத்தை இடிக்கத் தொடங்குவோமாக' என்கிறார்.

197. சுந்தர நீறு அணிந்து, மெழுகி,
தூய பொன் சிந்தி, நிதி பரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழில் சுடர் வைத்துக் கொடி எடுமின்
அந்தரர் கோன் அயன் தன் பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை

எம் தரம் ஆள் உமையாள் கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே 3

நிதி பரப்பி–நவமணியும் பொன்னுமாகிய நிதிகளைப் பரப்பி. அந்தரர்–தேவர்கள். ஆழியான்–திருமால்.

'நெற்றியில் அழகிய நீறணிந்த பெண்களே! வீடு முழுவதையும் மெழுகி, அழகிய நிறமுடைய பொடிகளைத் தூவி, இடையிடையே பொற்காசுகளைப் பரப்புங்கள். இவற்றினிடையே கற்பகச் செடிகளை நாட்டி, விளக்கு வைத்து, கொடிகளை நடுங்கள்'. [இவை அனைத்தும் வீட்டின் முகப்பிலும் வீட்டின் முற்றத்திலும் செய்யப்படும் செயல்களாகும்.]

'இந்திரன், நான்முகன், திருமால் ஆகியோர்க்குத் தலைவனும்— வேலவனின் தந்தையும்— எங்கள் பெருமாட்டியின் கணவனும் ஆகிய பெருமானுக்கு நீராடப் பொற்சுண்ணம் இடிக்கத் தொடங்குங்கள்' என்கிறார்.

ஆங்கிலத் திறனாய்வில் மிக உயர்ந்த பொருளையும் மிக இழிந்த பொருளையும் அடுத்து அடுத்து வைத்துக் கூறுவதை மிக உயர்விலிருந்து தாழ்வுவரை கூறுதல் (from sublime to the ridiculous) என்று சொல்கின்ற மரபு உண்டு. அந்த மரபு இந்தப் பாடலின் மூன்று, நான்காம் அடிகளில் இடம் பெறுவதைக் காணலாம். ஈடு இணையின்றி மிக உயர்ந்து நிற்பதை 'Sublime' (இறைத் தன்மையோடு கூடிய உயர்வு) என்ற ஆங்கிலச் சொல் குறிக்கும். இறைவனின் இந்த உயர்வைக் கூறவந்த அடிகளார் அந்தரர் கோன், அயன்தன் பெருமான், ஆழியான் நாதன் என்ற மூன்று தொடர்களில் அனைவர்க்கும் தலைவன் என்று குறிக்கின்றார். இம்மூவரும் விண்ணுலகிலும் சத்தியலோகத்திலும் வைகுந்தத்திலும் இருப்பவர்களாவர். நம்முடைய மனம் எல்லைக்கு அப்பாற்பட்டு நிற்கும். இந்த மூன்று பிரதேசங்களின் தலைவர்களைக் கூறி, அவர்கள் மூவருக்குமே

இவன் நாதன் என்று கூறுகையில் சாதாரண மனத்தில் ஓர் அச்சங் கலந்த வியப்புத் தோன்றுகிறதே தவிர நெருக்கம் எதுவும் தோன்ற முடியாது. இதனைப் போக்க வேலன் தாதை என்றும் உமையாள் கொழுநன் என்றும் கூறுகையில் நம்மையும் அறியாமல் ஒரு நெருக்கம் உள்ளே தோன்றுகிறது. இவ்வாறு நாம் கூறுவது சரியே என்பதற்குச் 'செந்தில் மேய நம் வள்ளி மணாளர்க்குத் தாதை கண்டாய்' என்ற நாவரசரின் பாடல் துணை செய்கிறது. (திருமுறை: 6:23.4) அந்த நெருக்கம் தோன்றியவுடன் 'எம் தரமும் ஆள்' என்ற தொடரை வைத்தது மிகச் சிறந்த முறைவைப்பு ஆகும். எம் தரமும் ஆள் என்பதன் மூலம் எந்தக் கீழான நிலையில் உள்ளவர்களையும் ஆள்கின்றவன் என்று எளிவந்த தன்மைக்கு ஒரு தனி இடம் தருகிறார் அடிகளார்.

தீமையை அழிப்பதற்கு மட்டுமல்லாமல் நன்மையைக் காப்பதும் கடப்பாடாதலின் 'நல்வேல்' என்றார் அடிகளார்.

198. காசு அணிமின்கள் உலக்கை எல்லாம்
காம்பு அணிமின்கள் கறை உரலை
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திரு ஏகம்பன் செம்பொன் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 4

காசு–பொன்வடம். காம்பு–பட்டுத்துணி. கறைபுரல்–கருங் காலியால் செய்யப்பட்ட உரல்.

'நேசமுடைய அடியவர்கள் நின்று நிலாவுக' என்ற தொடர் ஆழ்ந்து சிந்திப்பதற்குரியது. நேசமுடைய அடியவர் கள் என்ற தொடருக்கு இறைவன்பால் நேசம் உடைய

அடியவர்கள் என்று பொருள் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. காரணம், நேசமில்லா அடியவர்கள் என்பது பொருந்தாக் கூற்றாகும். அடியவர்கள் என்ற சொல்லே இறையன்பில் தலைநின்றவர்கள் என்ற பொருளைத் தரும். எனவே, நேசமுடைய என்ற சொல் வேறொரு பொருளைக் குறிக்கின்றது என்பதை எளிதில் விளங்கிக்கொள்ளலாம். உண்மையான இறையன்பு உடையவர்கள் தங்கள் சமயத்தவர், தங்களுக்கு வேண்டியவர் என்ற சிறிய கூட்டிற்குள் அகப்படாமல் இறைவனால் படைக்கப்பெற்ற ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு உயிர்வரை உள்ள எல்லா உயிர்களையும் நேசிப்பவர்கள் ஆவார்கள். இவ்வுயிர்களை யெல்லாம் 'நிறை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய்' அங்கங்கே இறைவன் நிற்கின்றான். ஆதலின் இப் பெருமக்கள் எல்லா உயிர்களையும் நேசிக்கின்றனர் என்க.

இதன் எதிராக, தத்தம் சமயமே உயர்ந்தது என்ற குறுகிய நோக்கத்துடன் இருப்பவர்கள் தம் சமயத்துள் சேராத பிற உயிர்களை நேசிக்கமாட்டார்கள். ஆதலால்தான், இவர்களை விலக்கி நேசமுடைய அடியவர்கள் என்றார் அடிகளார். இத்தகைய பெருமக்கள் உலகம் முழுவதும் நிறைந்து நிலைத்து வாழ்ந்தால் உலகம் உய்கதி அடையும். மிகப் பரந்துபட்ட மனநிலையில் 'நேசமுடைய அடியவர்கள் நின்று நிலாவுக' என்று அடிகளார் வாழ்த்துகிறார்.

இதனை அடுத்து நிற்கும் தொடர் 'தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித் திருவேகம்பன் செம்பொன் கோயில் பாடி' என்பதாகும். இத்தொடரில் கச்சி (காஞ்சி) மாநகருக்கு அடிகளார் கொடுத்த அடை, வரலாற்று அடிப்படையில் அமைந்ததாகும். ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவரசர் பெருமான் 'கல்வியைக் கரையிலாத காஞ்சி மாநகர்' (திருமுறை: 4:43-8) என்றார். எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அடிகளார் 'தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சி' என்றார்.

பல்லவர்களுடைய தலைநகராக இருந்தமைக்காகக் கச்சி, புகழப்படவில்லை. கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, காஞ்சியிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் நூற்றுக்கணக்கான புத்தப்பள்ளிகள் இருந்து கல்வியைப் பரப்பிவந்தன. கிறிஸ்து பிறப்பதற்கு இரு நூற்றாண்டுகள் முன்னர் மிகப் பிரசித்தியுடன் பீகாரில் திகழ்ந்த நாலந்தா பல்கலைக் கழகத்திற்குத் துணை வேந்தராக ஒரு தமிழரும், பேராசிரியராக ஒரு தமிழரும் காஞ்சியிலிருந்து சென்றனர் என்பதை நினைக்கும்போது நாவரசர் பாடியது முற்றிலும் உண்மை என்பது விளங்கும்.

இன்று புத்த சமயத்தின் முடிமணியாகத் திகழும் சென் புத்திசம் (Zen Buddhism) என்று வழங்கப்படும் தியான பௌத்தத்தைச் சீன நாட்டில் புதிதாக நிறுவியவர், காஞ்சி புரத்தில் இருந்து சென்ற தர்மபாலர் என்ற தமிழராவார். எனவே, தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் (கொண்டாடும்) கச்சி என்று கூறியது முற்றிலும் பொருத்தமுடையது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

அத்துணைச் சிறப்புடைய கச்சியிலுள்ள திரு ஏகம்பன் கோயிலைப் பாடினால் என்ன நிகழும் என்பதை அடிகளார் அடுத்துக் கூறுகிறார். திரு ஏகம்பன் கோயிலைப் பாடினால் நீக்க முடியாத பாச வினையை அலட்சியமாக வேரொடு பறித்து எறியும் ஆற்றல் நம்பால் வரும் என்கிறார் பெருமான்.

ஏகம்பன் கோயில் பாடுதல் என்ற செயலில் பாசவினையைப் பறித்தெறியும் ஆற்றல் பிறக்கின்றது. அந்த மனநிலையுடன் பொற்சுண்ணம் இடிக்கலாம் என்கிறார்.

வினை பறிக்கப்பட்டபின் தோன்றும் எக்களிப்பில் நிறைந்த மனத்துடன் இறைவன் புகழைப் பாடிக்கொண்டே பொற்சுண்ணம் இடிக்கலாம் என்கிறார்.

199. அறுகு எடுப்பார் அயனும் அரியும்
அன்றி, மற்று இந்திரனோடு அமரர்
நறுமுறு தேவர் கணாங்கள் எல்லாம்
நம்மில் பின்பு அல்லது எடுக்க ஒட்டோம்
செறிவு உடை மும் மதில் எய்த வில்லி
திரு ஏகம்பன் செம் பொன் கோயில் பாடி
முறுவல் செவ்வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 5

நம்மில் பின்பல்லது–நமக்குப் பின்னாலல்லது.

பொதுவாக மக்களினும் தேவர்கள் உயர்ந்தவர்கள் என்ற நம்பிக்கை நிலவிவருகிறது. பருவுடம்பின்றிச் சூக்கும உடல் பெற்றிருக்கின்ற ஒரு வேறுபாடுதவிர வேறு எவ்வகையிலும் தேவர்கள் அடியவரிலும் மேம்பட்டவர்கள் அல்லர். 'மேவன செய்து ஒழுகும் தேவர்கள்' (குறள்: 1073) அடியவரைவிட மேம்பட்டவர்கள் அல்லர் என்பது உறுதி, எனினும், தாம் தேவர்கள் என்ற தருக்கால் இறைவனுக்கு அறுகுப்புல் கொண்டு நெய் பூச முற்படுகின்றார். ஆதலின் அவரை இடைநிறுத்தி அடியவர்கள் முன் சென்று அப்பணியைச் செய்ய வேண்டும் என்கிறார் அடிகளார்.

200. உலக்கை பல ஓச்சுவார் பெரியோர்
உலகம் எலாம் உரல் போதாது என்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாது என்றே
நலக்க, அடியோமை ஆண்டுகொண்டு
நாள் மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே 6

ஒருவர் அல்லது இருவர் பொற்சுண்ணம் இடிக்கத் தொடங்கினால் ஓர் உரல் போதுமானதாக இருக்கும். உலகிலுள்ள அடியவர் பலரும் பணி செய்ய வேண்டு

மென்று விரும்பி வந்தார்கள். ஆதலின், உலகமெலாம் உரலாக மாறினும் போதாது என்கிறார் அடிகளார்.

201. சூடகம் தோள் வளை ஆர்ப்ப ஆர்ப்ப
தொண்டர் குழாம் எழுந்து ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல் அடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மா மலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 7

சூடகம்–கைவளை. பாடகம்–காலணி. ஆடகம்–பொன்.

இப்பாடலில், உலக்கையால் இடிக்கும் பெண்கள் அணிந்துள்ள ஆபரணங்கள் அவர்கள் உடலசைவிற்கு ஏற்ப அசைகின்றன என்பதை வரிசைப்படுத்துகிறார்.

இப்பாடலின் உயிர்நாடியாக உள்ள தொடர் 'நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப, நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப' என்பதாகும். இங்கு ஆர்ப்ப என்ற சொல் எள்ளி நகையாடி ஆர்ப்பரித்தல் என்ற பொருளைத் தந்து நிற்கின்றது.

துறவுக்கோலம் பூண்ட அடியவர்கள் மிகுதியாகக் காணப்பட்ட அற்றை நாளில் அவர்களைக் கண்டு யாரும் நகைத்ததில்லை. அப்படியிருக்க, 'நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப' என்று அடிகளார் கூறக் காரண மென்ன? அன்றுமுதல் இன்றுவரை உலகிடைக் காணப்படும் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றுண்டு. நூற்றுக் கணக்கான அடியவர்கள் இருந்தும் அவர்களை யாரும் ஆர்ப்பரிக்கவில்லை. ஏன்? அவருடைய கோலம் இயல்பானது என்று மக்கள் கருதினர். ஆனால், அடிகளார் இரண்டாம் வரகுணனிடம் அமைச்சுத் தொழில் பூண்டிருந்தார். அதற்குரிய படா

மேலாபரங்களோடு அன்றுவரை வாழ்ந்தவர், திடீரென்று ஒரே நாளில் அனைத்தையும் துறந்து துறவு பூண்டுவிட்டார். திருப்பெருந்துறையில் நடந்த நிகழ்ச்சிதான் அவருடைய துறவுக்குக் காரணம் என்பதைப் பலரும் அறிந்திருக்க நியாயமில்லை. எனவேதான், மிக உயர்ந்த பதவியாகிய அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு ஆண்டி ஆனவரைக் கண்டு உலகத்தார் எள்ளி நகையாடுகின்றனர்.

இங்கு ஆர்ப்ப ஆர்ப்ப என்று பொதுவாகக் கூறினாரேனும், என்ன சொல்லி ஆர்த்தனர் என்பதைத் திருவாசகத்தின் பிற்பகுதியில் 431 ஆவது பாடலில் 'பித்தன் என்று எனை உலகவர் பகர்வது ஓர் காரணம் இது கேளீர்' என்ற இடத்தில் விரிவாகவே சொல்லியுள்ளார். அமைச்சுப் பதவியைத் துறந்து ஆண்டியான அடிகளாரைப் பயித்தியம் என்று உலகத்தார் ஏசினர் என்று தெரிகிறது. மகான்களை அவர்கள் காலத்தில் அறிந்துகொள்ளாத உலகம் இன்றும் அப்படித்தான் பேசுகிறது.

அவர்கள் தம்மைப் பயித்தியம் என்று கூறவும் உண்மைப் பொருளை அறியாமல் உலக பந்தத்தில் ஈடுபட்டு அதுவே சதம் என்றிருக்கும் உலகத்தாரை நோக்கி உண்மை அறியாத பயித்தியங்கள் என்று அடிகளார் நகைத்தார். இதனையே 'நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப' என்ற தொடர் குறிக்கின்றது.

202. வாள் தடம் கண் மட மங்கை நல்லீர்
வரி வளை ஆர்ப்ப வண் கொங்கை பொங்கத்
தோள் திருமுண்டம் துதைந்து இலங்கச்
சோத்தெம் பிரான் என்று சொல்லிச் சொல்லி
நாள்கொண்ட நாள் மலர்ப் பாதம் காட்டி
நாயின் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 8

வாள்–ஒளி. வரி வளை– கீற்றுக்கோடுகூடிய வளையல். முண்டம்–நெற்றி. சோத்து–தோத்திரம். நாள் கொண்டமலர்–தண்டோடு கூடிய தாமரை.

இப்பாடலில் இலக்கியத்தில் அதிகம் காணப்பெறாத ஒரு சொல்லை அடிகளார் புகுத்துகின்றார். அடிமைத் திறத்தில் நிற்பவர்கள் தம்முடைய தலைவனை அல்லது எஜமானனைக் கண்டபொழுது 'வணக்கம்' என்று சொல்கின்ற மரபு அன்றில்லை. அதற்குப் பதிலாகத் 'தலைவனே! சோத்து' என்று கூறினர். இறைவன் யாவர்க்கும் தலைவன் ஆதலின் அவனிடம் அடிமைத்திறம் பூண்ட அடிகளார் 'சோத்து எம்பிரான்' என்று கூறுகிறார்.

203. வையகம் எல்லாம் உரல் அது ஆக
மா மேரு என்னும் உலக்கை நாட்டி
மெய் எனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக் கை பற்றி
ஐயன் அணி தில்லைவாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 9

அட்டி–இட்டு. மெய்–உண்மை.

சாதாரணமான மனிதர்களுக்குப் பூசும் பொடி இடிக்க வேண்டுமானால் சிறியதோர் உரலும் உலக்கையும் போதுமானதே யாகும்.

நாம் ரூபம் கடந்த பர்ம்பொருளை ஓர் உருவத்துடன் கற்பித்த காரணத்தால் அவனுக்கும் இவ்வாறு குறிப்பிட்ட அளவுடைய உரலில் பொடி இடித்தால் போதுமானது என்ற கருத்தில் இதுவரை பாடிவந்தார்.

'இப்பொழுது இடிக்கப்படும் பொடி யாருக்கு?' என்ற நினைவு விரிவாக வந்தவுடன், அது தில்லைவாணனுக்கே

என்ற விடை மனத்திடை வருகின்றது. அகிலப் பிரபஞ்சத்திலும் எல்லாப் பொருளிலும் இருந்து ஆடிக்கொண்டேயிருக்கும் ஒருவனுடைய அடையாளமே தில்லைவாணன் வடிவம் என்ற நினைவும் உடன் தோன்றுகிறது.

அப்படியானால், பிரபஞ்சம் முழுவதிலும் நிறைந்து நிற்கின்ற ஒருவனுக்கு இந்தச் சிறிய உரலில் பொடி இடித்து மாளாது என்று நினைக்கின்றார் அடிகளார். அந்த நினைவின் பயனாக ஒரு கற்பனை தோன்றுகிறது.

பிரபஞ்சம் முழுதும் விரிந்திருக்கின்ற ஒரு பொருளுக்குப் பொடியிடிக்க எவ்வளவு பெரிய உரல் வேண்டும்; நாம் வாழும் இந்த உலகம்போன்ற பல உலகங்கள் விண்ணிடை உள்ளன. அவை அனைத்தையும் ஒன்றுசேர்த்து ஓர் உரலாகச் செய்யவேண்டும் என்ற கருத்தில் 'வையகம் எல்லாம் உரலதாக' என்றார்.

சிறிய உரலுக்குச் சிறிய உலக்கை போதுமானதாக இருக்கலாம்; வையகம் எல்லாம் உரலதாகும்போது, அதற்கேற்ற உலக்கை மாமேரு மலையேயாகும். எனவே, 'மாமேரு என்னும் உலக்கை நாட்டி' என்றார்.

சாதாரணச் சுண்ணம் இடிப்பதற்கு மஞ்சள் முதலிய மணப்பொருட்கள் போதுமானவையாகும். ஆனால், இங்கு இவ்வளவு பெரிய உரலிலிட்டு இடிப்பதற்கு என்ன தேவை? 'மெய் எனும் மஞ்சள் நிறைய அட்டி' என்று அடிகளார் கூறுவதால் சத்தியமே மணப்பொருளாக இங்குப் பேசப்பெற்றது. மணப்பொருட்களுள் மஞ்சள் இடத்தைப் பெறுவதுபோல இங்குச் சத்தியம் முதல் இடத்தைப் பெறுகின்றது. மஞ்சளுடன் ஏனைய பொருட்கள் சேர்வதுபோலச் சத்தியத்துடன் மனத்தில் உண்மை, சொல்லில் வாய்மை, செயலில் மெய்ம்மை ஆகியவை கலக்கப் பெறுகின்றன.

வாசனைப் பொடியில் தனித்தனியான வாசனையுடைய பல பொருட்கள் மஞ்சளுடன் ஒன்றாகச் சேர்ந்து புதியதோர் மணத்தைத் தருவதுபோல, இங்கும் சத்தியப் பொருள் மன, வாக்கு, காயங்களுடன் சேர்ந்து புதிய வடிவம் பெறுகின்றது.

பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து நிற்கின்ற ஒரு பொருளுக்கு— சத்தியமே வடிவான அந்தப் பொருளுக்கு— மனம் வாக்குக் காயங்களின் சத்தியம், பூசும் பொருளாகவும் அமைகின்றது. சத்திய சொரூபீ எனப்படும் தில்லைவாணனுக்கு, நம்முடைய மனம் வாக்குக் காயம் ஆகியவை முழுதும் சத்தியமாக மாறியவுடன் அவன் பூசிக்கொள்வதற்குரிய பொருளாக இவை சிறப்புப் பெறுகின்றன.

மனம், வாக்கு, காயம் ஆகியவை சத்தியத்துடன் கலக்கும்பொழுது அது மெய்யன்பாக மலர்கின்றது. இந்த மெய்யன்பே தில்லைவாணன் பூசிக்கொள்ளும் மணப் பொடி என்கிறார் அடிகளார்.

204. முத்து அணி கொங்கைகள் ஆட ஆட
மொய் குழல் வண்டு இனம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செம் கயல் கண் பனி ஆட ஆட
பித்து எம்பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 10

பொற்சுண்ணம் இடிக்கின்ற மகளிரை முன்னிலைப் படுத்தி இப்பாடல்கள் தோன்றின என்பது உண்மைதான். இப்பாடலில் பல்வேறு ஆபரணங்களை அணிந்த மகளிர் ஒன்றுசேர்ந்து பொற்சுண்ணம் இடிக்கும்போது அவர்

உடல் உறுப்புகளையும், அந்த உறுப்புகளில் அணியப் பெற்ற ஆபரணங்களையும் முதலடியில் குறிப்பிடுகிறார்.

புற உடம்பில் நிகழும் இந்த ஆட்டத்தை விவரித்துக் கொண்டிருக்கும்பொழுதே அவர்களில் ஒருத்தி அதீத நிலைக்குப் போவதை அடிகளார் காண்கின்றார். தாம் முன்னர் இந்த அனுபவத்தைப் பெற்றவர் ஆதலின் அதனையே அவள்மேல் ஏற்றிப் பாடுகின்றார்.

அன்பு என்பது புறமனத்திடைத் தோன்றுகின்ற ஓர் உணர்வாகும். விலங்குகளிடமும் காணப்பெறும் அந்த அன்பை மிகப் பெரிதாகப் பெரியோர்கள் பாராட்டுவதில்லை.

இதே அன்பு புறமனத்தைத் தாண்டி, அகமனத்துள் நிறைந்து வழிந்து ஓடி, சித்தத்தின் மேற்பரப்பில் நிறைந்து, இறுதியாக எளிதில் அணுகமுடியாத சித்தத்தின் அடிப்பரப்பில் நிறைந்துவிடுகிறது.

சித்தத்தின் அடிப்பகுதியில் இந்த அன்பு நிறைந்த பொழுது, அதன் பழைய இயல்பு மாறி, முழுவதும் இறைவனிடம் செலுத்தப்பெறும் பெருங்காதலாக மாறிவிடுகிறது. அந்தக் கருத்தைத்தான் 'சித்தம் சிவனொடும் ஆட; ஆட'. (ஆட ஆட-பொருந்த) என்றார் அடிகளார்.

புறமனம், அகமனம், மேல்சித்தம், அடிச்சித்தம் என்பவற்றின் இடையிலுள்ள வேறுபாட்டை அடிகளார் நன்கு அறிந்திருந்தாராதலின் 'தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி' (திருவாசகம்: 4-42) என்பது போன்ற தொடர்கள் திருவாசகத்தின் பல இடங்களில் காணப் பெறுகின்றன. அடிகளாருக்கு ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்டு வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் இவ்வேறுபாட்டை நன்குணர்ந்திருந்தார் என்பதைச்

'சித்தத்தைத் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்' (திருமுறை: 7-39- 10) என்ற தொடர் தெரிவிக்கின்றது.

சித்தத்தில் சிவம் வந்து நிறைந்துவிடுவதாகிய இறை அனுபவத்தை ஒருவர் பெற்றுள்ளார் என்பதைப் பிறர் எவ்வாறு அறியமுடியும்? இவ்வாறு நிறைந்தவர்களின் கண்களில் ஓயாது கண்ணீர்த் திவலைகள் துளித்துக் கொண்டே இருக்கும்.

கண்களில் குபுகுபு என்று கண்ணீர் பொங்குவதும் அருவிபோல் பாய்வதும் உண்டு. அடிகளார் குறிப்பிட்ட 'கண் பனி ஆட ஆட' என்றது இதனின்றும் முற்றிலும் மாறுபட்டதாகும். துயரம் முதலிய உணர்ச்சிகள் மேல் மனத்தைப் பற்றி ஆட்டும்பொழுது கண்ணீர் ஆறாகப் பெருகுதல் உண்டு. மேல்மனம் அடிமனம் என்ற இரண்டிலும் பக்தி பெருக்கெடுக்கும்போது கண்ணீர் பெருகி ஓடுவதும் உண்டு. இந்த இரண்டு நிலைகளிலும் கண்ணீர் பெருகுவது பொதுத்தன்மை. இரண்டிற்கும் அடிப்படையான உணர்ச்சிகள் (துயரம், இறைபக்தி) நிலைபேறுடையவை அல்ல. ஒரு விநாடியில் தோன்றி, விறு விறு என வளர்ந்து, பொங்கி, ஒரு நிலையை அடைந்து பிறகு இறங்கிவிடும் இயல்புடையவை இந்த உணர்ச்சிகள். இவை நீண்ட நேரம் நிலைபெற்றிருப்பதில்லை. என்றாலும், இவை உணர்ச்சிப் பெருக்கால் விளைபவை என்பதால் இவை உச்ச கட்டத்தை அடையும்போது கண்ணீர் பெருகி ஓடும்.

அடிகளார் இப்பாடலில் குறிப்பிடும் நிலை இவற் றிற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். திடீரென்று தோன்று வதோ பொங்குவதோ பக்திக்கு உண்டே தவிர, இறை அனுபவத்திற்கு இல்லை. பக்தி மேல்மனத்தில் தோன்றுவ தாகும் இறையனுபவம் சித்தத்தின் அடிப்பகுதியில்

தோன்றுவதாகும். இந்த இறையனுபவத்தில் கண் பனிக்குமே தவிர, குபு குபு என்று அருவிபோல் கொட்டுவதில்லை.

சித்தத்தில் சிவம் தோன்றுவது என்பது தொடக்க நிலை. சித்தத்தின் உள்ளே நிகழ்ந்த இந்நிகழ்ச்சிக்குப் புறத்தே காணப்படும் மெய்ப்பாடு கண்பனித்தல் ஆகும். இரண்டாவது நிலை என்று சொல்லப்படுவது, சித்தம், சிவம் என்று இரண்டாக இருந்தவை ஒன்றாக ஆகிவிடும் நிலையாகும். அதனையே அடிகளார் 'பித்து எம்பிரானொடும் ஆட ஆட' என்றார்.

சித்தம் என்ற ஒன்று தனித்துநிற்கின்றவரையில் எவ்வளவுதான் அதில் சிவம் குடிகொண்டாலும், அந்தச் சித்தத்தை அடுத்துள்ள புத்தி, அகங்காரம் என்ற இரண்டும் இருந்தே தீரும். இந்த அகங்காரம் இருக்கின்றவரையில் சித்தம் முழுவதும் சிவம் நிரம்பினாலும், சித்தம் வேறு சிவம் வேறாகத்தான் இருக்கும்.

சித்தம், சிவம் என்று வெவ்வேறாக நிற்கும் இந்நிலை மாறி, சித்தம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றும் சிவத்துள் அடங்கிவிடுவதே இரண்டாவது நிலை ஆகிய பித்து நிலை ஆகும்.

அகங்காரம் தொழிற்படாமல் அடங்கிவிட்டால், மனிதர்களுக்குரிய தனித்தன்மை நீங்கிவிடுகிறது. அவ்வாறு உள்ளவர்களையே பித்தர் என்று உலகோர் கூறுவர்.

இறையனுபவத்தில் முழுவதுமாகத் தோய்ந்து 'நான்' என்பதை இழந்தவர்களும் பித்தர்போன்றே காணப்படுவர். அவ்வாறாயின் இவர்களிடையே உள்ள வேறுபாடு என்ன என்பதைச் சிந்தித்தால், ஒரு சிறிய வேறுபாட்டைக் காண முடியும்.

அகங்காரம் செயலிழந்த நிலையில் மனம், சித்தம், புத்தி என்பவை எவ்வித ஒருங்கிணைப்பும் இல்லாமல் தனித்தனியே பணிபுரியும். இவர்கள் பயித்தியக்காரர்கள் எனப்படுவர். அகங்காரம் செயலிழந்தாலும் மனம், சித்தம், புத்தி என்பவை ஒருங்கே இறையனுபவத்தில் தோய்ந்து நிற்பவர்களை இறையனுபவ அதீதர் என்று கூறுவர். இந்த ஒருங்கிணைந்த நிலையைத்தான் 'பித்து எம்பிரானொடும் ஆட, ஆட' என்கிறார் அடிகளார்.

பிரான் எனப்படுபவன் நாம, ரூபம் அற்று, குணங்குறி கடந்தவனாய் உள்ளான். அப்படியானால் எதற்கும் எட்டாது நிற்கும் அவனோடு கடவுட்பித்துக் கொண்டவர்கள் எவ்வாறு இணையமுடியும்? குணங்குறி கடந்த அப்பொருள் மிக உயர்ந்த நிலையில் இருக்கின்றது. பருவுடலோடு, பொறி புலன்களோடு, அந்தக்கரணங்களோடு வாழும் ஒருவன் எந்த அளவு கடவுட்பித்துக் கொண்டாலும் குணங்குறி கடந்த அப்பொருளைச் சென்று பொருந்துதல் இயலாத காரியம். அப்படியானால் இதற்கு வழி என்ன? அனுபவத்தால் இதனை உணர்ந்தவர்கள்மட்டுமே இந்த ரகசியத்தை உணரமுடியும். குணங்குறி கடந்த பொருள் எவ்வளவு உயர்ந்திருப்பினும் உயிர்கள்மாட்டு அப் பொருளுக்குள்ள கருணை, கடல் போன்று அகன்றும் விரிந்தும் ஆழ்ந்தும் இருக்கின்றது. அப்பொருள் உயர்ந்துள்ளது எனினும் அதன் கருணை கீழ்நோக்கிப் பாய்தலின் இந்த இறையனுபவப் பித்தர்கள் அக்கருணையோடு பொருந்துகின்றனர்.

பித்து, எம்பிரானோடு சென்று பொருந்த முடியாது என்று ஐயுறுவார்க்கு, தம் அனுபவத்தால் கண்ட விடை யைக் கூறப்புகுந்த அடிகளார், 'அத்தன் கருணையோடு பொருந்த (ஆட)' என்கிறார். சுருங்கக் கூறுமிடத்து சித்தம் சிவனொடு இணைதல் (ஆட ஆட) ஒரு நிலை; செங்கயற் கண் பனி துளித்தல் அதன் வெளிப்பாடு.

சித்தம் அகங்காரம் முதலியவை மறைந்து பித்தாகிச் சிவனொடு பொருந்த முயலுதல் மற்றொரு நிலை; இந்த முயலும் நிலையையே அடிகளார் 'புத்துமாய் மரமுமாய்' (399) என்ற பாடலில் எடுத்து விளக்குகிறார். உடலை வருத்தி ஊண் உறக்கம் அற்று இருப்பது இந்த இரண்டாவது நிலையின் வெளிப்பாடாகும். அத்தன் கருணை கீழ் இறங்கிவருதலின் பித்து அதனோடு இரண்டறக் கலந்து விடுதல் இறுதி நிலை.

தத்தம் நிலைமை மாறாமல் ஒன்றுசேர்ந்து இருத்தல் இணைதல் எனப்படும். பொருந்துதல் என்பது தன் நிலைகெட மற்றொரு பொருளோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிலை.

இங்குக் கூறிய மூன்று நிலைகளும் பரு உடம்புடன் கூடிய மக்களுக்கே உரியதாகும். முதல் நிலையில் காலடி எடுத்து வைப்பவர் முதல், பலரும் இப்பிறவி நீங்கவேண்டும், மீண்டும் பிறவா நெறி வேண்டும் என்று விரும்புகின்றனர். எவ்வளவு விரும்பினாலும், முயன்றாலும் அதனை எளிதில் பெறமுடியாது. மேலே கூறப்பட்ட மூன்று நிலை வளர்ச்சியில் பிறவி எப்பொழுது போகும் என்பதற்கு அடிகளார் அற்புதமாக விடையளிக்கிறார். அந்தக் கரணங்கள் நான்கும் அடங்கி ஒடுங்கி, எம்பிரான் கருணையில் பொருந்தத் தொடங்கியவுடன் பிறவி தானே கழன்று விடுகிறது. இந்த வழியில் வாராத பிறரைப் பிறவி தொடர்ந்து பொருந்திக்கொள்கிறது என்ற நுண்மையான கருத்தையும் 'பிறவி பிறரொடும் ஆட ஆட' என்ற தொடரில் பெற வைக்கிறார்.

மிக உயரிய இந்தத் தத்துவத்தை, பொற்சுண்ணம் இடிக்கும் பெண்களிடையே வைத்து, இறையனுபவம் எத்தகையது என்பதை எத்தகையவர்களும் புரிந்துகொள்ளும் வகையில் பாடுதல் அடிகளார்போன்ற இறையனுபவத்தில் தோய்ந்து வெளிப்பட்டவர்களுக்கே இயலுவதாகும்.

205. மாடு நகை வாள் நிலா எறிப்ப
வாய்திறந்து அம் பவளம் துடிப்பப்
பாடுமின் நம்தம்மை ஆண்ட ஆறும்
பணி கொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெருமானைத் தேடிச்
சித்தம் களிப்பத் திகைத்து தேறி
ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 11

மாடு–பக்கம். நகை–பல்

பாடுதல், ஆடுதல், தேடுதல் ஆகிய மூன்றும் இப்பாடலில் இடம் பெற்றுள்ளவேனும் இவற்றிற்கு மேலோட்டமாகவும் வாலாயமாகவும் பொருள்கூறாமல் ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பார்க்கத் தொடங்கினால் அடிகளார் பல நுண்மையான கருத்துக்களை இப்பாடலில் பெய்துள்ளார் என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

'வாள் நிலா எறிப்ப வாய் திறந்து அம்பவளம் துடிப்பப் பாடுமின்' என்ற தொடர், ஒளி பொருந்திய பற்கள் வெளியே தெரியுமாறு வாய் திறந்து பாடுமின் என்ற பொருளைத் தருவதாகும். அதாவது, முணுமுணுக்காமல் உரக்கப் பாடவேண்டும் என்பதை இத்தொடர் குறிக்கிறது. ஆனால், நன்கு வாயைத் திறந்து பாடும்பொழுது உதடுகள் ஓரளவு அசையுமேதவிரத் துடித்தல் இயலாத காரியம். உணர்ச்சிப் பெருக்கில் வாயை நன்கு திறக்காமல் ஏதோ ஒன்றைச் சொல்லத் தொடங்கினால் அந்த உணர்ச்சி வெளிப்பாட்டின் விளைவாக உதடுகள் துடிக்கும். இந்நிலை தவிர நன்கு வாய் திறந்து பாடும்பொழுது உதடுகள் துடிப்பது கடினம். ஆனால், அடிகளார் இவை இரண்டையும் ஒன்றாக்கிப் பாடுகிறார் என்றால், வாய் திறந்து பாடப்பெறுகையில் வெளிவரும் சொற்கள் வெறும் ஒலிக்கூட்டம் அன்று என்பதைத் தெரிவிக்கின்றார்.

வாய் திறந்தும் பாடவேண்டும்; உதடுகளும் துடிக்க வேண்டும் என்றால்— அந்தப் பாடலின் அடித்தளத்தில் இறைவன்மேல் கொண்ட காதல் பொங்கித் ததும்ப வேண்டும். அந்த உணர்வு வெளிப்படும்பொழுது உதடுகள் துடிக்கின்றன. அந்த உணர்வில் தோய்ந்து வெளிவரும் சொற்கள் அடக்கமுடியாத உணர்ச்சியுடன் இணைந்து வருதலின் வாயை நன்கு திறந்தே அவை வெளிவர வேண்டியிருக்கிறது.

'காதலாகி, கசிந்து. கண்ணீர் மல்கி' (திருமுறை: 3- 49-1) இறைவன் புகழைப் பாடத் தொடங்கினால் அப்பாடல் எவ்வாறு வெளிப்படும் என்ற அற்புதமான கருத்தை உடற்கூறு வேறுபாடுகள் (physiological functions) மூலம் அடிகளார் தெரிவிக்கின்றார். 'உதடுகள் துடிக்கும் உணர்ச்சிப் பெருக்கோடு முழுவதுமாக வாய் திறந்து பாடுமின்' என்பதே அடிகளாரின் கூற்றாகும். உணர்ச்சிகள் எல்லை மீறியவழி அதன் அடிப்படையில் வெளிப்படும் சொற்கள் வாயை முழுவதுமாகத் திறந்த நிலையில் உரக்கவே வெளிப்படும்.

இதனைப் படிக்கும் நமக்கு இவ்வளவு ஆழமானதும் அதீதமானதும் ஆகிய உணர்ச்சி என்ன காரணத்தால் தோன்றிற்று என்ற வினா மனத்தில் தோன்றுவது இயல்பு. அதற்குரிய விடையை அடுத்த அடியில் அடிகளார் விளக்குகின்றார். நம்தம்மை ஆண்டவாறும் பணிகொண்ட வண்ணமும்தான் இந்த உணர்ச்சி தோன்றுவதற்குக் காரணமாயின. நம்தம்மை என்று பன்மையால் கூறினாரேனும் ஆளப்பெற்றதும் பணிக்கப்பெற்றதும் அவர் ஒருவரைத்தான் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். காதல் இன்பத்தில் ஈடுபட்டவர்கள் உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் தம்மைப்போலவே இன்பத்தில் ஈடுபட்டுள்ளன என்று நினைப்பது இயல்பு. இந்த கருத்துப் பழைய தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஒன்றாகும்.

அதேபோலத் திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப் பெற்றதும் 'கோலம் ஆர்தரு பொதுவினில் வருக' என்று பணிக்கப்பெற்றதும் அவர் ஒருவரைத்தான் என்றாலும், தாம் பெற்ற ஆனந்தம் காரணமாக, அனைவருமே அந்த ஆனந்தத்தைப் பெற்றுள்ளார்கள் என்று அடிகளார் நினைப் பதில் தவறு ஒன்றும் இல்லை. அதன் பயனாகவே 'என்தன்னை' என்று தன்மை ஒருமையில் கூறவேண்டிய வர், 'நம் தம்மை' என்ற தன்மைப் பன்மை வாய்பாட்டில் கூறுகிறார்.

எங்கோ சென்றுகொண்டிருந்த தம்மை இழுத்து ஆட்கொண்டதும், பணிகொண்டதும் எப்பிறவியிலும் யாருக்கும் கிடைத்தற்கு அரிய பெரும்பேறு ஆகும். அந்தப் பேற்றை நன்றி உணர்ச்சி பொங்கவும், அதன் பயனாக உதடுகள் துடிக்கவும் வாயை நன்றாகத் திறந்து உரக்கப் பாடவேண்டும் என்ற கருத்தை இரண்டு அடிகளில் கூறுகிறார். அத்தோடு நில்லாமல், அந்த அனுபவத்தைத் தந்தவர் தம் எதிரே இல்லாமையால், 'பாடிக்கொண்டே தேடுங்கள்' என்கிறார்.

நம்தம்மை என்று பன்மையில் கூறியதற்கு ஏற்ப எதிரே உள்ளவர்களையும் உளப்படுத்தி, 'நீங்களும் பாடிக் கொண்டே தேடுங்கள்' என்கிறார்.

திருப்பெருந்துறையில் தமக்குக் கிடைத்த இறையனு பவம் அனைவருக்கும் கிடைத்துள்ளது என்று கருதினார். ஆதலின், 'தேடிச் சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி ஆடு மின்' என்கிறார். செய்யுள் ஆதலின் சொற்கள் முன்பின்னாக அமைந்துள்ளன. பின்வரு முறையில் கொண்டு கூட்டுச் செய்துகொண்டால் பொருள் எளிதில் விளங்கும். 'தேடித் தேடித் திகைத்து, தேறிச் சித்தங் களிகூர ஆடுமின்' என்று கொள்வது நலம். தேடாமல் இருக்கும் பொழுது தமக்கு எளிதில் கிடைத்த பொருள் இப்பொழுது

கைநழுவி விட்டது. நழுவிப்போன ஒன்றைத் தேடுகிறார்; கிடைக்க வில்லை; திகைக்கிறார்; மறுபடியும் தேடுகிறார். இதோ கிடைத்து விட்டது; இது கை நழுவிப் போகாது எனத் தேறுகிறார். அந்தத் தேற்றத்தின் பயனாக, மனம் மட்டும் மகிழ்ச்சி அடையவில்லை. அடிமனத்தையும் தாண்டி ஆழத்தில் இருக்கும் சித்தம் மகிழ்ச்சியல்லாமல் களிப்பையே பெறுகிறது. பலகால் தேடி., திகைத்து, மறுபடியும் தேடிய நிலையில், பொருள் அகப்பட்டு விட்டால் அதனால் ஏற்படும் களிப்பு, சித்தத்தில் நிறைந்து உடல் முழுவதும் பரவுதலின், தம்மையும் அறியாமல் ஆடத் தொடங்குகிறார். 'நீங்களும் ஆடுங்கள்' என்று சொல்கிறார்.

206. மை அமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத்து ஆட்கொண்டு அருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யினை மெய்யர் மெய்யைப்
போது அரிக்கண் இணைப் பொன் தொடித் தோள்
பை அரவு அல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 12

மை–விடம். மருந்து–அமுதம். பிரான்–வள்ளல். போது–அரிக்கண்–பூப்போலும் செவ்வரிபரந்த கண்கள்.

இப்பாடலில் வரும் 'நம்மை அகப்படுத்து ஆட்கொண்டு அருமை காட்டும் பொய்யர்தம் பொய்யினை மெய்யர் மெய்யை' என்ற பகுதி ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். 'பொய்யினை' என்ற சொல்லுக்குப் பதிலாகப் 'பொய்யனை' என்று பாடங்கொண்டு, வெளிப்படாமல் இருப்பவன் என்று பலரும் உரைகண்டுள்ளனர். பொய்யன் என்ற சொல் பொய் பேசுபவன், பொய்யாக நடப்பவன் என்ற பொருள்களைத் தருமே தவிர, வெளிப்படாமல் இருப்பவன் என்ற பொருளைத் தருவது கடினம்.

எனவே 'பொய்யினை' என்று பாடங்கொண்டு பொருள் காண்பது சிறப்புடையதாகத் தோன்றுகிறது. அவ்வாறானால் இறைவனைப் பொய் என்று கூறுதல் பொருத்தமுடையதோ என்ற ஐயம் தோன்றத்தான் செய்யும்.

இந்நாட்டில் தோன்றிய சைவம், வைணவம் என்ற இரண்டிற்கும் தனிச்சிறப்பு ஒன்று உண்டென்றால், அது முரண்பாட்டில் முழுமுதலைக் காண்பதேயாகும். பொய்-, மெய்; குற்றம்-குணம்; நன்மை-தீமை; பகை-நட்பு முதலிய முரண்பட்ட இரட்டைகள், இறைவனைப் பொறுத்தவரை ஒரே பொருளையே சுட்டுகின்றன என்று கண்டு கூறினர். உதாரணமாகப் பின்வரும் தொடர்களைக் காணலாம்.

குற்றம் நீ குணங்கள் நீ கூடல் ஆல வாயிலாய்
(திருமுறை: 3–52–3)

பாவம் நீ தருமம் நீ பகையும் நீ உறவும் நீ
(கம்பர்: வாலிவதை: 129)

சோதியனே துன் இருளே
(திருவாச: 1–72)

தோய்ந்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற சுடர்
(கம்பர்: சரபங்க. பி. நீ. படலம்–27)

வெளியோடு இருளில்லை மேல் கீழ் இல்லை
(கம்பர். சரபங். பி.நீ. படலம் 28)

இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு அடிகளாரின் 'பொய்யர் தம் பொய்யினை மெய்யர் தம் மெய்யை' என்ற தொடருக்குப் பொருள் கண்டால், பொய்யென்று சுட்டப் படுபவனும் அவனே; மெய்யென்று சுட்டப்படுபவனும் அவனே என்பதை நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

'ஆட்கொண்டு அருமை காட்டும்' என்ற தொடர் நுண்மையானது. ஒரு பொருளின் தன்மையைப் புறத்தே

இருந்து கண்டு கூறுதல் ஒரு வகை. அப்பொருளின் உள்ளே புகுந்து அதனோடு இணங்கிநின்று அதன் இயல்பை அறிந்து கூறுவது மற்றொரு வகை. கடவுட்பொருள் சுற்பனைக்கும் எட்டாதது என்றெல்லாம் அதன் அருமைப்பாட்டைப் புறத்தேநின்று கூறியவர் பலர். ஆனால், அடிகளார் போன்ற சிலரை அவனே வந்து ஆட்கொண்டான்; இறையனுபவத்தில் மூழ்கவைத்தான். மூழ்கியிருந்த அடிகளார் பிறகு அந்த அனுபவத்திலிருந்து வெளிவந்து, அந்த அனுபவத்தின் அடிப்படையில் நின்று அவன் அருமைப்பாட்டைக் கூறுகின்றார். முதல் வகையினர் சர்க்கரை இனிக்கும் என்று பிறர் சொல்வதைக் கேட்டுப் பேசுபவர். இரண்டாம் வகையினர் சர்க்கரையை உண்டு, சுவைத்து, பின்னர் சுவையிலிருந்து மீண்டு, அதன் அருமைப்பாட்டை உணர்ந்தவர்கள். இதனையே அடிகளார், 'அகப்படுத்து ஆட்கொண்டு அருமை காட்டும்' என்கிறார்.

207. மின் இடை செம் துவர் வாய் கரும் கண்
வெள் நகை பண் அமர் மென் மொழியீர்
என்னுடை ஆர் அமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண் முலை மங்கை நல்லீர்
பொன் திருச்சுண்ணம் இடித்தும் நாமே. 13

கேள்வன்–உலகத்தைப் படைத்தற்காக இறைவன் சிவமும் சத்தியும் ஆனபோது கணவன். மகன்–சத்தியினின்று சதாவித்துவம் தோன்றுதலின் மகன். தகப்பன்–சிவத்தினின்றே சத்தியிறத்தலால் சத்திக்குத் தகப்பன்.

இப்பாடலில் வரும் 'இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன், தமையன்' என வரும் பகுதிக்குச்

சைவசிந்தாந்த அடிப்படையில் பலர் விரிவாகப் பொருள் எழுதியுள்ளனர்.

இங்குக் கூறப்பெற்ற உறவுப் பெயர்கள் அனைத்தும் பரு உடலை அடிப்படையாக வைத்தே பெறப்பட்டவை ஆகும். தனித்து இயங்கும் ஆன்மாவிற்கு இந்த உறவுப் பெயர்கள் பொருத்தமில்லாதவை. அவ்வாறாயின் அடிகளார் இவ்வளவு விரிவாகக் கூறியதன் கருத்தென்ன என்று சிந்தித்தால், ஒன்றை விளங்கிக்கொள்ள முடியும். உடம்பெடுத்த ஒவ்வொரு மனிதனுக்கும் சிற்சில உறவுகளில் தனித்த ஈடுபாடு இருத்தல் இயல்பு. 'ஏகம் சத்' என்ற வாக்கின்படி உள்ளது ஒரே பொருளேயாகும். அது நாம ரூபம் கடந்தது.

அப்பொருள் தனித்து நிற்கும்பொழுது, எவ்விதத் தொழிற்பாடுமின்றி இருக்கும்பொழுது, சிவம் என்ற பெயரை அறிவுடைப் பெருமக்கள் அதற்குத் தந்தனர். தனித்து நின்ற அப்பொருள், படைத்தல் முதலிய செயல்களைச் செய்யும் போது, அதனைச் செய்யும் ஆற்றலுக்குச் சக்தி என்ற பெயரிட்டு வழங்கினர்.

மூலப்பொருளை, அதன் இயல்பை அறியமாட்டாத உயிர்கள், அப்பொருள் தமக்குச் செய்த பேருபகாரத்தைக் கருதி, தாய் என்று கூறி வழிபட்டன. இந்த உறவுமுறை விரிவடையும்போது, வேறு உறவுப் பெயர்களும் அங்கு இடம்பெறலாயின். உள்ளது ஒரே பொருளாதலின் அதனைத் தாய் என்று கூறினாலும், தந்தை என்று கூறினா லும், தமையன் என்று கூறினாலும் குறிக்கப்படும் பொருள் ஒன்றே என்பதை அறிந்துகொண்டால் அடிகளார் கூறும் தொடர்களுக்குரிய பொருளை எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

'எங்கள் அப்பன், எம் பெருமான், இமவான் மகட் குத் தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன், தமையன், எம்

ஐயன்' என்று பாடும்பொழுது இத்தனை உறவுப் பெயர்க ளுக்கும் மூலமாக இருப்பவன் எம் ஐயனே என்பது விளங்கும்.

208. சங்கம் அரற்றச் சிலம்பு ஒலிப்ப
தாழ் குழல் சூழ்தரும் மாலை ஆட
செம் கனி வாய் இதழும் துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடைமுடியான் கழற்கே
பொங்கிய காதலின் கொங்கை பொங்கப்
பொன் திருச்சுண்ணம் இடித்தும் நாமே 14

கங்கை இரைப்ப–கங்கையாறு பேரொலி எழுப்ப. அரா இரைப்ப–பாம்பு புஸ்புஸ் என்று ஒலி எழுப்ப. சங்கம்–வளையல். அரா–பாம்பு.

பொற்சுண்ணம் இடிக்கின்றார்கள் ஆதலின் உலக்கை பிடிந்த கைகள் மாறிமாறி மேலும் கீழும் செல்லுதலின் அம்மகளிர் அணிந்த சங்கு வளையல்கள் இவ்விரைவான அசைவு தாங்காமல் அரற்றுகின்றன என்றார்.

சிவலோகம் பாடும்போது, செங்கனி வாய் இதழ் துடிக்கப் பாட வேண்டும் என்கிறார் அடிகளார். 205ஆம் பாடலில் வாயை முழுவதும் அங்காந்து இறைவன் புகழைப் பாடவேண்டும் என்று கூறுகையில், அம்பவளம் துடிப்ப என்றார். வாய் அங்காந்து இருக்கும்போது உதடுகள் துடிப்பது எளிதாக நடைபெறுவது அன்று என முன்னரே விளக்கப்பெற்றது. இந்தப் பாடலில் வாய் திறக்கும் பிரச்சினை தோன்றவில்லை. 'சிவலோகம் பாடி' என்றதால் தாம் பெற்ற அனுபவத்தை இங்கு யாரும் கூறவில்லை. அனுபவத்தைக் கூறும்பொழுது 'வாய் திறந்து அம் பவளம் துடிப்ப'ப் பாடினர்.

205ஆம் பாடலில் வாய்விட்டு உரக்கப் பாடுங்கள் என்று சொன்னதையும், இப்பாடலில் அவ்வாறு சொல்லாமல் சிவலோகம் பாடுங்கள் என்று சொன்னதையும் ஒன்றாக வைத்துப் பார்க்கும்போது, ஒரு புதிய சிந்தனை தோன்றுகிறது. வாய்விட்டு உரக்கப் பாடுங்கள் என்று கூறும் இடத்தில் உரக்கப் பாடவேண்டும் என்று எதனைக் கூறினார்? 'நம்தம்மை ஆண்டவாறும் பணிகொண்ட வண்ணமும்'பற்றி உரக்கப் பாடவேண்டும் என்கிறார் அடிகளார். சிவலோகம்பற்றிப் பாடும்போது உரக்கப் பாடுங்கள் என்று வெளிப்படையாகக் கூறாமையால் முணு முணுத்தபடியே பாடினாலும் தவறில்லை என்றாயிற்று.

ஏன் இந்த வேறுபாடு? அடிகளாரின் வாக்குப் படியே பார்த்தால், ஆண்டுகொள்ளப்படுவதற்குரிய தகுதி தம்பால் இல்லை என்றும், அவன் தம்மாட்டுக் கொண்ட கருணை காரணமாகவே ஆண்டான் என்றும் பல இடங்களில் கூறியுள்ளார். தம்மையும் ஒரு பொருளாக மதித்துத் திருவாசகம் பாடும் வாய்ப்பை நல்கினான் என்றும் அவரே பாடுகின்றார்.

அப்படியானால் என்ன பணியை இவர் செய்ய வேண்டும் என்று இறைவன் கருதினான்? 'பரா அமுது ஆக்கினன்' என்று சுருக்கமாகக் கூறினார் அடிகளார். பிற்காலத்தில் தோன்றிய அருணகிரிநாதப் பெருமான் 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' (கந்தரனுபூதி: 1) என்று வேண்டிக்கொள்கிறார். அப்படியானல் அடிகளா ரின் 'ஆண்டவாறும் பணி கொண்ட வண்ணமும்' என்ற தொடருக்குப் பொருள் நன்றாக விளங்கிவிட்டது. இதனையே வாய்விட்டுப் உரக்கப் பாடவேண்டும் என்று அடிகளார் விரும்புகிறார்.

பிறவிக் கடலில் சிக்கிக் கரையேறும் வழியறியாமல் அல்லலில் உழன்றுகொண்டிருக்கும் ஆன்மாக்களுக்கு, நேரிடையாக இறைவன் திருவடிகளைப் பற்றிக்கொள்ளும்

ஆற்றல் இல்லை. பற்றவேண்டும் என்ற எண்ணம், இல்லாமல்— பற்றிக்கொள்ளும் வழியும் அறியாத ஆன்மாக்களுக்கு ஒரு மாபெரும் நம்பிக்கையைக் கலங்கரை விளக்கம்போலத் தந்த பெருமை அடிகளாருக்கே உரியதாகும்.

எதிர்பாராமல் மாபெரும் அருளைக் குருவினிடம் பெற்று, அவர் இட்ட பணியைத் தலைமேற் கொண்டு செய்து இப்பிறப்பிலேயே உய்கதி அடையும் வாய்ப்பைப் பெற்றார் அடிகளார். ஆதலின், தம்முடைய அனுபவத்தை உரக்கக் கூறும் முகமாகப் (வாய் திறந்து பாடும் செயலில்) பொதுவாக மனித இனத்திற்கும், சிறப்பாகத் தமிழினத்திற்கும் நம்பிக்கை என்னும் · தோணியைத் தந்து உதவிய பெருமை அடிகளாருக்கே உரியதாகும்.

209. ஞானக் கரும்பின் தெளிவை பாகை
நாடற்கு அரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச் சுவை ஆயினானை
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனை பிறப்பு அறுத்து ஆண்டுகொண்ட
கூத்தனை நாத் தழும்பு ஏற வாழ்த்திப்
பானல் தடம் கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 15

ஞானக்கரும்பு–சிவம். நந்தா–கெடாத. பானல்–கருங் குவளை.

இப்பாடலில் இறைவனைக் கரும்பின் தெளிவு, பாகு, குறையாத தேன், பழத்தில் கிடைக்கும் சுவை என உருவகப் படுத்துகிறார். கரும்பிலிருந்து சாற்றை எடுக்க வேண்டுமானால் முயற்சி மேற்கொண்டே தீரவேண்டும். அந்தத் தெளிவையும் காய்ச்சிய பிறகுதான் பாகு கிடைக்கும். தெளிவிலிருந்து பாகு கிடைத்தலின் இவை இரண்டையும் பிரித்துச் சொல்ல வேண்டிய காரணம் என்ன? கரும்பிலிருந்து சாற்றை எடுக்க ஒரு முயற்சி, சாற்றிலிருந்து பாகை எடுக்க மற்றொரு முயற்சி. இவ்வளவு

முயன்று பெறக்கூடிய பாகாக ஏன் இறைவனைச் சொல்ல வேண்டும்?

அன்பின்வழிச் செல்பவர்கள், கண்ணப்பர், அடிகளார் போன்றவர்கள், அன்பு ஒன்றே துணையாகக் கொண்டு வேறு எவ்வித முயற்சியும் இன்றி இறையருளைப் பெற்றனர். மெய்யடியார்கள் கண்ட எளிதான இந்த நெறிக்கு மாறாக ஞான மார்க்கம் என்ற நெறியும் உண்டு. அவ்வழியில் நாம் யார், இறைவன் யார், நமக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது போன்ற வினாக்களை எழுப்பி, உடலை வருத்தித் தவம் செய்து இறுதியாக அவனை அடைவது ஞான மார்க்கம் என்பது. அதனைக் குறிக்கவே 'ஞானக் கரும்பு' என்றார் அடிகளார்.

அடிகளாருக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவராகிய நாவரசர் பெருமான் இதனைச் சற்று விளக்கமாகவே கூறியுள்ளார்.

"ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவேன் உனை நான் அலேன்"
(திருமுறை: 5–91–3)

இப்பாடலின்படி பார்த்தால் சில ஞானிகள்மட்டும் ஞான மார்க்கத்தில் ஈடுபடுவர் என்பது தெரிகிறது. இறுதியில் இறைவனை அடைதல் இரண்டு வழிக்கும் பொதுவாயினும் பெருமுயற்சி செய்து பயன்பெறுகின்ற வழி ஞான மார்க்கம். அதனைக் குறிப்பால் உணர்த்தவே 'ஞானக் கரும்பின் தெளிவை' என்றார். ஞானக்கரும்பு என்றும், தெளிவு என்றும், பாகு என்றும் அடிகளார் தனித் தனியே பிரித்துக் கூறியமையின் அதனைப் படிக்கும் பொழுது சில சிந்தனைகள் தோன்றுகின்றன. தெளிவும், பாகும் ஒன்றுக்கொன்று ஓரளவு மாறுபட்டவையாகும். உடலுக்குத் தேவையில்லாததும் ஓரளவு ஊறு செய்கின்றதும் ஆகிய சில பொருள்கள் கருப்பஞ்சாற்றில் உள்ளன. இது

கருதியே இன்றுகூடக் கருப்பஞ் சாற்றைக் குடிப்பவர்கள் எலுமிச்சம் பழச்சாற்றை அதனுள் பிழிந்து அருந்துவர்.

சாற்றில் உள்ள குறைபாடு நீங்கவேண்டுமானால் அதனை நெருப்பில் இட்டுக் காய்ச்ச வேண்டும். இந்த உருவகத்தால் தோன்றும் சிந்தனைகளை ஞான மார்க்கத்தில் செல்லுபவர்களுக்கு ஏற்றியும் காணலாம்

ஞான மார்க்கத்தின் அடிப்படை அறிவாகும். இவ்வழிச் செல்பவர் அறிவின் துணையோடு வினாக்களை எழுப்பிக் கொண்டு சென்று, இறைவனை அறிய முற்படுகின்றார்கள். இந்த ஆராய்ச்சியில் இறங்கிப் பெருமளவு முன்னேறிய நிலையில் ஒரு பெரிய ஆபத்து முன்னே நிற்கும். அதனைக் கடந்து செல்வது அவ்வளவு எளிதான காரியமன்று. அந்த ஆபத்துத்தான் 'நான் அறிகிறேன்' என்ற முனைப்பு ஆகும். இறைவன் பற்றிய ஆய்வு கரும்பின் தெளிவாக இருக்கின்றது. தெளிவில் உள்ள வேண்டத்தகாத பொருள்போல இறை ஆய்வில் இந்த 'நான்' கலந்து நிற்கின்றது. தெளிவை நெருப்பில் இட்டுக் காய்ச்சுவது போல 'நானோடு' கலந்த இறைபற்றிய ஆய்வை அவன் அருள் என்ற நெருப்பில் இட்டுக் காய்ச்ச வேண்டும். அவ்வாறு காய்ச்சி 'நானை' ஆவியாகப் போகச் செய்துவிட்டால், அந்த இறை ஆய்வு இறையுணர்வு என்ற கட்டியாகத் தங்கிவிடும். இத்தனைக் கருத்துக்களையும் உள்ளடக்கியே 'ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை' என்கிறார் அடிகளார்.

திருவாசகத்தில் பல இடங்களில் இறைவனைக் கரும்பின் தெளிவு என்றும், பாகு என்றும் பாடியுள்ளாரே— அவ்விடங்களில், இவ்விளக்கம் பொருந்துமா என்றால், பொருந்தாது என்பது விடையாகும். ஏனெனில் ஞான மார்க்கத்தை விட்டு அன்புவழியில் செல்பவர்கட்கு நான் என்ற பிரச்சினை தோன்றுவதேயில்லை. ஆதலால்தான் அடிகளார் ஞானக் கரும்பு என்று அடைகொடுத்துப்

பேசினார். ஆனால், இங்கே ஞானக்கரும்பு என்று சொன்னதாலேயே இச்சிந்தனை தோன்றலாயிற்று.

மூன்றாவதாக உள்ளது 'பழத்தின் சுவை'. பழத்தின் சுவையை அனுபவிக்க ஒரு சிறு முயற்சி செய்தாலே போதும். கரும்புக்கட்டி எடுப்பதற்குச் செய்யப்படும் பெருமுயற்சி போன்ற எதுவும் தேவையில்லை. எனவே, பெருமுயற்சி, சிறுமுயற்சி என்பவற்றினிடையே எவ்வித முயற்சியும் செய்யாமல் இன்பம் பெறுவதைத் தேனின் சுவை என்கிறார்.

210. ஆவகை நாமும் வந்து அன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டு அறியாச்
செம் மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சே வலன் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்தும் நாமே 16

ஆவகை–பொருந்தும் வகை. சேவகன்–வீரன்.

சிவபுராணம் தொடங்கி இதுவரை திருவடிப் பெருமையையே மிகப்பல இடங்களில் பாடியுள்ளார். அதற்குரிய காரணத்தையும் முன்னர்க் கூறியுள்ளோம். இந்தப் பாடலிலும் அந்தப் பழைய கருத்து, தொடக்கத்தில் இடம் பெறுவது உண்மைதான். தேவர்கள் கனவிலும் கண்டு அறியாச் செம்மலர்ப் பாதங்கள் என்றுதான் தொடங்குகிறார்.

சங்கப் பாடல்களிலேயேகூட 'நின்னில் சிறந்தவை நின் நாமங்கள்' என வருதலால் இறைவன் திருப்பெயரை விடாது கூறி, அதன் வழியாகவே வீடு பெற்றவர்களை இந்நாடு கண்டது உண்டு. தமிழ்ச் சான்றோர்களின் ஆழ்ந்த அனுபவத்தில் நன்கு ஊறிய இக்கருத்து அடிகளாரின்

இப்பாடலில் நான்காவது அடியில் இடம் பெற்றுள்ளது. சிவபெருமானை வெற்றி பொருந்திய இடபக்கொடியை வலக்கையில் ஏந்தியவன் சே வலன் ஏந்திய வெல்கொடியான்), சிவபெருமான், சேவகன் என்றெல்லாம் பாடி விளித்து அத்தகையவனுடைய நாமங்களைப் பாடிப் பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே என்கிறார் அடிகளார்.

211. தேன் அகம் மா மலர்க் கொன்றை பாடி
சிவபுரம் பாடி திருச் சடை மேல்
வான் அகம் மா மதிப் பிள்ளை பாடி
மால் விடை பாடி வலக் கை ஏந்தும்
ஊன் அகம் மா மழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனகம் ஆக நஞ்சு உண்டல் பாடிப்
பொன் திருச் சுண்ணம் இடித்தும் நாமே 17

மதிப்பிள்ளை–பிறைமதி. போனகம்–உணவு.

இப்பாடலின் நான்காவது அடி நீலகண்டனுடைய தனிச்சிறப்பைப் பாடுகிறது. சிவன் என்ற பெயரைச் சொல்லாவிட்டாலும் உருத்திரன் என்ற பெயரோடு இரண்டு பாடல்களைப் பாடும் இருக்கு வேதம் உருத்திரன் என்ற இடத்தைக் கூறுமிடத்து நீலகண்டன் என்று பேசுகிறது. கிருஷ்ண யஜுர் வேதத்தில் வரும் ஸ்ரீருத்திரத்தில் 'நீலகண்டாய' என்று சிவன் பெருமை பேசப்பெறுகிறது. ஆனால், இவ்விரு இடங்களிலும் எதற்காகச் சிவபெருமான் நீலகண்டத்தைப் பெற்றான் என்பது கூறப்படவில்லை.

உயிரின்மாட்டுக் கொண்ட கருணை ஒன்றே காரணமாக ஆலகால விடத்தை ஏனையோர் உணவு அருந்துவதுபோல (போனகமாக) மிக்க மகிழ்ச்சியுடன் உண்டான் என்பதை அடிகளார் 'உம்பரும் இம்பரும் உய்ய அன்று போனக மாக நஞ்சு உண்டல்' என்று பாடுகிறார்.

212. அயன் தலை கொண்டு செண்டு ஆடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயம்தனைக் கொன்று உரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயம் தனைப் பாடிநின்று ஆடி ஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே 18

செண்டு–பூப்பந்து. இயைந்தன–தம்முள் பொருந்தியனவாகிய. அருக்கன்–பகன் என்னும் சூரியன். கயம்–யானை. நயம்–மேன்மை.

இறைவனுடைய மாவீரச் செயல்களை முதல் மூன்று அடிகளில் பாடிய அடிகளார் பாட்டின் இறுதியில் ஏழை அடியோம் ஆகிய எங்களையும் ஆண்டுகொண்டார் என்று பாடுகிறார். எல்லை கடந்து நிற்கும் அவன் வீரத்தைப் போலவே ஏழை அடியார்களை ஆட்கொள்ளும் அவன் கருணையும் எல்லை கடந்து விரிகின்றது என்பதே இங்குக் கூறப்பெற்ற 'நயம்' ஆகும்.

213. வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடி
சிட்டர்கள் வாழும் தென் தில்லை பாடி
சிற்றம்பலத்து எங்கள் செல்வம் பாடி
கட்டிய மாசுணக் கச்சை பாடி
கங்கணம் பாடி கவித்த கைம்மேல்
இட்டு நின்று ஆடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே 19

வட்டமலர்–பிறை வடிவமான மலர். மத்தம்–ஊமத்தம் பூ. மாசுணம்–பாம்பு. கச்சை–அரைப்பட்டி. சிட்டர்கள்–மேலோர்கள்.

கவித்த கைம்மேல் இட்டுநின்றாடும் அரவம் என்ற தொடர் தூக்கிய திருவடியைக் காட்டிநிற்கும் வளைந்த கையின் மேல் கட்டப்பட்ட பாம்பு படமெடுத்து ஆடுகின்றது என்ற பொருளைத் தரும்.

214. வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்கு
சோதியும் ஆய் இருள் ஆயினார்க்கு
துன்பமும் ஆய் இன்பம் ஆயினார்க்கு
பாதியும் ஆய் முற்றும் ஆயினார்க்கு
பந்தமும் ஆய் வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 20

மேலே 206ஆவது பாடலில் . முரண்பாட்டின் இடையேமுழுமுதலின் சிறப்புக் கூறப்பெற்றது. அதனையே விரிவாக இப்பாடலில் பேசுகிறார்.

வேதம் என்பது ஒலிக்கூட்டம். வேள்வி என்பது சடங்குகள். ஒலிசிறந்த வேதம் என்றதால் சக்தி வாய்ந்த மந்திரங்களும் சடங்குகளும் அவனே என்றார்.

பொய்மை, இருள், துன்பம், பாதி, பந்தம் என்ற சொற்கள் அறிவு கொண்டு ஆராயும் நம் பார்வையில், முறையே மெய்ம்மை, சோதி, இன்பம், முற்றும், வீடு என்பவற்றிற்கு எதிரானவை என்றுகொண்டு பேசி வருகிறோம்.

ஒன்றே பொருள். எங்கும் எல்லாமாய் இருப்பது அதுவே என்று இறையிலக்கணம் வகுத்த பின்பு மேலே கூறப்பெற்ற இரட்டைகள் பொருளற்றுப் போய்விடுகின்றன.

பொய்ம்மை, இருள், பாதி என்பவை கருத்தளவில் உள்ளனவே தவிர இத்தகைய பொருள்கள் இல்லை என்று கூறுவாரும் உண்டு.

அதாவது சோதி இல்லாத இடம் துன்னிருள் என்றும், இன்பம் இல்லாத இடம் துன்பம் என்றும் நாம் பேசிவருகின்றோம். மனத்தளவில் இன்மைக்கோர் வடிவம் கொடுத்து அதனை இருள் என்றும் துன்பம் என்றும் பாதி என்றும் பேசி வருகின்றோம். இவ்வடிவு கற்பனை அளவில் நாம் கொண்ட ஒன்றேதவிர உண்மையில் இருள் முதலியவை இல்லை. மெய்ம்மைதான் என்றும் உள்ளது. அந்த மெய்ம்மையை முற்றிலும் அறிந்துகொள்ள இயலாத அறிவு தன்னுடைய வளர்ச்சிக்கு ஏற்ப ஒரு வடிவைக் கற்பிக்கின்றது. அந்த நிலையில் அதுவே மெய்யென்றும், ஒளியென்றும் முழுமையென்றும் மனம் கற்பனை செய்து கொண்டிருக்கிறது.

பின்னர், வளர்ச்சியடைந்த நிலையில், முன்னர் மெய்ம்மை என்று கற்பனை செய்து கொண்ட அது மெய்ம்மை அல்லாதது என்றும், ஒளி என்று கருதிய பொருள் ஒளியற்றது என்றும் அறிந்துகொள்ள முடிகிறது. இப்படி அறிந்து கொண்ட நிலையில், முதலில் கற்பனையில்பட்ட மெய்ம்மை, மெய்ம்மையன்று என்று தெரிந்தவுடன், இந்த மனம் அதற்கு ஒரு பெயரைத் தருகின்றது; அதுவே பொய்மை ஆகும். அதுபோலவே இருள், பாதி என்பனவும் ஆகும்.

மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார், சோதியும் துன்னிருளும் ஆயினார் என்று அடிகளார் கூறும்பொழுது வளர்ச்சியடைந்த, முதிர்ந்த, அறிவால் காணப் பெற்ற பொருளுக்குள்ள பெயரும் வளர்ச்சி குறைந்த அறிவு தந்த பெயரும் முன்னும் பின்னுமாக இங்கு இடம் பெற்றுள்ளன.

ॐ ॐ ॐ

10. திருக்கோத்தும்பி

[சிவனோடைக்கியம்]

தலைவனிடம் ஈடுபாடுகொண்ட தலைவி, அவன் வாராக் காலத்து, தன்னை மறந்துவிட்டானோ என்று அஞ்சி, வண்டு முதலியவற்றைத் தூதாக அனுப்புதல் தமிழ் இலக்கியத்தின் பழைய மரபாகும். பக்தி இயக்க காலத்தில் நம்மாழ்வார், நாரை முதலியவற்றைத் தூதாக அனுப்புகின்ற முறையில் (நாலாயிரத் திவ்விய பிரபந்தம்: திருவாய்மொழி 2ஆம் பத்து) பாடல்கள் பாடியுள்ளார். (திருமங்கை மன்னன் தும்பி, குயில் முதலிய பறவைகளைத் தூதாக அனுப்புவதாகவும் ஆண்டாள் நாச்சியார் குயிலை தூதாக அனுப்புவதாகவும் பாடல்கள் உள்ளன.) அக்கால இலக்கியங்களில் தூதாக அனுப்பப்படும் பொருள்கள் கிளிமுதல் வண்டுவரை எதுவாக இருப்பினும் அது அஃறிணைப் பொருளாகவே இருக்குமென்பது அறியப்பட வேண்டும்.

தூதாக அனுப்பப்படும் கிளி, வண்டு முதலியவற்றிற்குத் தலைவியின் பேச்சைப் புரிந்துகொள்ளும் ஆற்றலோ தலைவனிடம் சென்று சொல்லும் ஆற்றலோ இல்லை என்பது தலைவி முதல் யாவரும் அறிந்த ஒன்றாகும். அப்படியானால், தலைவனின் சிறப்புக்களையெல்லாம் ஒன்றாக அடுக்கி, அவனைப் பிரிந்திருப்பதால் தான் படும் துயரத்தை யெல்லாம் ஒன்றாக அடுக்கி இந்தக் கிளி, வண்டு முதலியவற்றிடம் கூறுவதன் பொருள் என்ன? இந்த அஃறிணைப் பொருள்களுடன் பேசும் தலைவியின் பேச்சு, பொங்கிவரும் அவள் உணர்ச்சிக்கு வடிகாலாய் அமைகின்றது.

மனித மனத்தின் மிக ஆழத்தில் தோன்றும் சில உணர்வுகளை, வாய்விட்டு வெளிப்படுத்தும்போது சில சங்கடங்கள் ஏற்படும். அதாவது, எதிரே யாரேனும் ஒருவரை அல்லது ஒன்றை வைத்துக்கொண்டு, எவ்வளவு பேசினாலும், யாரும் அதனைத் தவறாகக் கருதுவதில்லை. அவ்வாறில்லாமல் தாமே தனியாக நின்று இவற்றை வாய்விட்டுப் பேசினால், பேசியவரின் மனநிலையில் ஏதோ கோளாறு ஏற்பட்டுள்ளது என்று பலரும் நினைக்க ஏதுவாகும். இந்த அடிப்படையில்தான் அஃறிணைப் பொருட்களைத் தூது அனுப்பும் இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும்.

இக்காலத்திலும் ஐந்து மாதம் அல்லது ஆறு மாதம் ஆகும் சிறு குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டு, பெரியவர்கள் அதனோடு உரையாடிக்கொண்டிருப்பதைக் காணலாம். இவர்கள் பேசுவதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாத அக் குழவி அஃறிணைப் பொருள்களோடு வைத்து எண்ணப்பட வேண்டிய ஒன்றாகும். இதனை நன்கு புரிந்துகொண்டால் தூது இலக்கியத்தின் அடிப்படையைப் புரிந்துகொள்ள முடியும்.

அடிகளாரின் திருவாசகத்தில் குயில், கிளி, வண்டு என்பவை விளித்துப் பாடப்படினும் அப்பகுதியைத் தூது என்று சொல்வது பொருத்தமா என்பது சிந்திப்பதற்குரியது. தூதாக ஒன்றை அனுப்பினால் அனுப்புபவர் படும் துயரமும், அதனைத் தீர்ப்பதற்கு உரியவர் வந்து தீரவேண்டிய இன்றியமையாமையும் பேசப்பெறும். சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய தேவாரத்திலுள்ள

பறக்கும்எம் கிள்ளைகாள் பாடும் எம் பூவைகாள்
அறக்கண் என்னத்தகும் அடிகள் ஆரூரரை
மறக்கில்லாமையும் வளைகள் நில்லாமையும்
உறக்கம் இல்லாமையும் உணர்த்த வல்லீர்களே

(திருமுறை:7–37–2)

என்பன போன்ற தூதுப்பாடல்கள் இப்பகுதிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இந்த அடிப்படையில் பார்த்தால், திருக்கோத் தும்பியில் வரும் இரண்டு பாடல்கள் (திருவாச: 227, 233) தவிர ஏனையவை இந்த அடிப்படைக்குப் பொருந்து மாறில்லை.

வண்டு ரீங்காரம் இடுதல் எப்பொழுது நடைபெறு கிறது? உணவு தேடிச் செல்லும்போதும், துணையை நாடிச் செல்லும்போதும் வண்டுகள் பல்வேறு சுருதிகளில் ரீங்காரம் இடுகின்றன. மலரின்மேல் அமர்ந்து தேனை உண்ணத் தொடங்கியபோதும் பெடை வண்டின் அருகில் அமர்ந்து விளையாடத் தொடங்கியபோதும் இந்த ரீங்காரம் நின்றுவிடுகிறது. எனவே, வண்டு ரீங்காரம் இடுகின்றது என்றால் உணவையோ, உறவையோ நாடிச் செல்லுகின்றது என்பது பொருளாகும். இதனை வேறு வகையாகக் கூறவேண்டுமானால் இந்த ரீங்காரத்தின் பயன் மிகச் சாதாரணமானதொன்றாகும். உணவையும் புணர்ச்சியையும் நாடி, ரீங்காரமிட்டு வாணாளை வீணாளாக்கும் வண்டை நோக்கி, 'நிலையில்லாத பொரு ளுக்காக ரீங்காரம் இடும் வண்டே! நிலையான இன்பத் தைத் தருபவனை நோக்கி ரீங்காரம் இடுவாயாக' என்ற அடிப்படையில்தான் திருக்கோத்தும்பியின் பெரும்பாலான பாடல்கள் அமைந்துள்ளன.

அடிகளாருக்கு இரண்டு நூற்றாண்டுகள் முற்பட்டு வாழ்ந்த நாவரசர் பெருமான், ஊர்கள்தோறும் சென்று மக்களுடைய வாழ்க்கைமுறையைப் பார்த்து மனம் நொந்தார். உண்டு, உடுத்து, இன்பம் துய்க்கின்ற வாழ்க்கை தவிர அவர்கள் வாழ்க்கையில் குறிக்கோள் என்று எதுவும் இல்லை என்பதை உணர்ந்தார். இந்த அவல நிலையைத் தம்மேல் ஏறட்டுக்கொண்டு 'பாலனாய்க் கழிந்த நாளும்'

(திருமுறை:4-67-9) என்று தொடங்கும் பாடலில் 'குறிக்கோள் இலாது கெட்டேன்' என்று பாடினார்.

இதன்பிறகு சில காலம் கழித்து இந்த மனித சமுதாயத்திற்கு ஒரு குறிக்கோளைத் தரவேண்டும் என்ற பெருநோக்கில் மனித சமுதாயம் முழுவதையும் 'இங்கே வருக' என்று அழைத்தார், நாவரசர் பெருமான். மனிதர்கள் ஒன்றுகூடினர் போலும். அவர்களை நோக்கிக் 'கனி தந்தால் கனி உண்ணவும் வல்லிரே' *(திருமுறை: 5-91-7)* என்று ஒரு வினாவை எழுப்பினார். ஏதோ பெறுதற்கரிய பழத்தைத் தரப்போகிறார் என்ற எதிர்பார்ப்பில் அனைவரும் கனியுண்ணத் தயாராக இருந்தனர். ஆனால், பாடலின் மூன்றாவது அடி 'புனிதன் பொற்கழல் ஈசன் என்னும் கனி' என்று வந்தவுடன் அங்கு ஒருவரும் இல்லை. காரணம், திருவடியாகிய கனியை யாரும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

நாவரசர் பெருமானின் இந்த அனுபவம் பின்னே வந்த அடிகளார் போன்றவர்களை விழிப்படையச் செய்தது போலும். அதனாலேயே மனிதர்களை விட்டுவிட்டு, வண்டு குயில் என்பவற்றை விளித்துப் பெருமானின் புகழைப் பாடுங்கள் என்று பேசுகின்றார்.

'சென்று ஊதாய்' என்பது அவனை நாடிச்சென்று அவன் புகழை ஊதுவாயாக (பாடுவாயாக) என்ற பொருளைத் தந்து நிற்கின்றது.

215. பூ ஏறு கோனும் புரந்தரனும் பொற்பு அமைந்த
நா ஏறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மா ஏறு சோதியும் வானவரும் தாம்அறியாச்
சே ஏறு சேவடிக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 1

பூ ஏறு கோன்–பிரமன். புரந்தரன்–இந்திரன். நா ஏறு செல்வி–நாமகள். மா ஏறு சோதி–உருத்திரன். சே–இடபம். கோத்தும்பீ–அரசவண்டே.

இப்பாடலின் முதல் மூன்று அடிகள் வானவர்முதல் நாரணன்வரை உள்ளவர்களின் பட்டியலைத் தருகின்றன. போக போக்கியங்களுக்கே உரிமையுடைய புரந்தரன், அறிவுக்குத் தெய்வமாகிய கலைமகள், அபௌர்ஷேயம் ஆகிய வேதம், அதனை ஓயாது ஓதுகின்ற நான்முகன், செல்வத்தின் நிலைக்களனாம் நாரணன் என்பவர்களோடு 'மா ஏறு சோதி' என்ற தொடரும் இடம்பெற்றுள்ளது.

இத்தொடர் யாரைக் குறிக்கின்றது என்பதில் கருத்து வேற்றுமை உள்ளது. ஒரு சாரார் சூரிய, சந்திரர் என்றும் சைவசித்தாந்த அடிப்படையாளர் உருத்திரன் என்றும் பொருள் கொண்டுள்ளனர்.

இந்த இரண்டு விளக்கங்களுமே பொருத்தமுடையன வாகத் தோன்றவில்லை. இதன் உண்மைப் பொருள் விளங்கவில்லை.

இறைவனுடைய பெருமையை மூன்று அடிகளில் சிறப்பித்துக் கூறிவிட்டு அத்தகைய ஒருவன் திருவடியைப் பாடுவாயாக என்று முடிக்கின்றார். 'சே ஏறு சேவடி' என்பதற்கு இடப வாகனத்தின் மேலுள்ள என்று பொருள் கூறுவர். அதைவிட, செம்மை நிறம் மிகுதியும் ஏறியுள்ள திருவடி. என்று பொருள்கொள்வது சிறப்புடையது போலத் தோன்றுகிறது. வண்டுகள் நிற வேறுபாட்டை நன்கு அறிவன ஆதலின், திருவடியை எளிதாகக் கண்டுகொள்ள லாம் என்ற பொருள் தொனிக்க, சிவந்த திருவடி என்றார்.

216. நான் ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர் என்னை
யார் அறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல் மதி மயங்கி
ஊன் ஆர் உடை தலையில் உண் பலி தேர் அம்பலவன்
தேன் ஆர் கமலமே சென்று ஊதாய் கோத்தும்பீ 2

நான் யார்–ஆன்மாவாகிய நான் யார். உள்ளம்–ஆன்மாவிற்குச் சிறந்த கரணமாய் நன்மை தீமைகளை அறியச் செய்யும் மனம். பலி–பிச்சை. தேனார் கமலம்–திருவடித்தாமரை.

எவ்வகையில் பார்த்தாலும் எளிதாகப் பொருள்கூற முடியாத சிக்கல் நிறைந்த பாடலாகும் இது. ஒரு குறிப்பிட்ட கருத்தை எடுத்துக்கொண்டு அதற்கு ஒரு வடிவு கொடுத்துப் பாடுவதே ஒரு கவிதையின் இயல்பாகும். அறிவு, கற்பனை என்பவற்றின் துணைமட்டும் கொண்டு பாடப்பெறும் எல்லாப் பாடல்களுக்கும் பொது இயல்பாகும் இது.

ஆனால், உணர்ச்சியைப் பிழிந்து கொடுக்கும் திருவாசகப் பாடல்களில் இத்தகைய கட்டுப்கோப்பையும் கவிதைக்குரிய வரன்முறையையும் காண முற்படுவது பொருந்துவதாக இல்லை. எண்ணக்கோவைபோல, உணர்ச்சி கோவையாக வருவதில்லை. எனவே, முதலடியிலிருந்து நான்காம் அடிவரையில் ஒரு கருத்து, வளர்ச்சி, தொடர்பு என்பவை முறையாக இப்பாடல்களில் இடம் பெறவில்லை.

உணர்ச்சியால் உந்தப்பெற்ற எண்ணச் சிதறல்கள் அடுத்தடுத்து வைக்கப்பெறுதலின் கருத்துக் கோவையை இப்பாடல்கள் பெற்றிருக்கவில்லை. சொற்கள் அமைந்திருக்கும் விதம் எப்படி வேண்டுமானாலும் பொருள் செய்ய உதவுகின்றது.

மேலே உள்ள 'நானார்" என்ற பாடலுக்கு மரபுபற்றிப் பொருள் கூறுபவர்கள் 'மதி மயங்கி' என்ற சொல்லுக்கு அருளது மிகுதியால் என்றும் சிவபெருமான் என்றும் பொருள் கூறியுள்ளனர். அன்றியும், இவன் ஆட்கொள்ளத் தக்கவனா, அல்லாதவனா, என்றுகூட ஆராயாமல் மதிமயங்கி ஆண்டுகொண்டான் என்று விரித்துரைப்பவர்

களும் உளர். இவையெல்லாம் ஒருபுறமிருக்க, முதலிரண்டு அடிகளுக்கும் வேறு வகையில் பொருள் செய்யலாமோ எனத் தோன்றுகிறது.

வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல் என் மதிமயக்கத்தால் நானார் என் உள்ளமார் ஞானங்களார் என்ற வினாக்களுக்குப் பொருள் தெரியாமல் இருந்திருப்பேன். அன்றியும் யார் என்னை அறிந்துகொள்ள முடியும் என்ற இறுமாப்பும் அங்கு இருந்திருக்கும்.

அவன் என்னை ஆள்வதற்கு முன்னர் நான் யார் என்ற வினாவிற்கு என் மதி மயக்கம் காரணமாக, நான் திருவாதவூரன் இப்பாண்டி நாட்டு அமைச்சனும் நானே என்று சொல்லித் திரிந்தேன்.

'என் உள்ளம் ஆர்' என்ற வினாவை எழுப்பிக் கொண்டு திருவாதவூரனாகிய என்னுடைய அதிகார எல்லைக்கு உட்பட்டது என் உள்ளம், அந்த உள்ளத்தை ஆட்சி செய்பவன் நானே என்று நினைத்துத் திரிந்தேன்.

'ஞானங்கள் ஆர்' என்ற வினாவை எழுப்பிக் கொண்டு என் அறிவின் துணைகொண்டு ஆராய்ந்து அந்த ஞானத்தை அபர ஞானம், பரஞானம் என்று பிரித்து, அபர ஞானத்தில் எல்லையில்லாத பேரறிவு படைத்தவன் நான் என்று நினைத்துத் திரிந்தேன்.

'என்னுள்ளமார், ஞானங்களார்' என்ற இரண்டு இடங்களிலும் 'ஆர்' என்ற சொல் எது அல்லது யாது என்ற அஃறிணைச் வினாச்சொல்லின் உயர்திணை வடிவாக இடம் பெற்றுள்ளது.

வானோர் பிரான் என்னை ஆள்வதற்குமுன், என்னுடைய கல்வி, கேள்வி, ஞானம், பாடும் திறன், அதிகாரம், பதவி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு

திருவாதவூரனாகிய என்னை யார் முழுவதுமாக அறியமுடியும் என்று இறுமாந்திருந்தேன். இவையெல்லாம் நிகழ்வதற்குக் காரணம் இரண்டு உண்டு. முதலாவது, இயல்பாகவே எனக்குரிய மதிமயக்கம்; இரண்டாவது, அந்த மதிமயக்கத்தைப் போக்கக்கூடிய திருவருள் அப்பொழுது எனக்குக் கிட்டாமை ஆகும்.

வானோர் பிரான் என்னை ஆள்வதற்கு முன்னிருந்த நிலை இதுவாகும். என்ன அதிசயம்! திருப்பெருந்துறையில் திருவடி தீட்சை செய்த ஒரே வினாடியில் என் மதிமயக்கத்தைப் போக்கினார் குருநாதர்.

அந்த மயக்கம் போனவுடன் எல்லாவற்றிலும் ஒரு புதிய காட்சி தோன்றலாயிற்று. புதிதாகப் பிறந்த தெளிவுடன், பழைய வினாக்களை மறுபடியும் சிந்திக்கத் தொடங்கினேன். நான் யார் என்ற வினாவிற்குத் திருவாதவூரான் என்ற விடை வரவில்லை. தெளிவு காரணமாகக் குருநாதர் திருவடியில் கட்டுண்ட ஓர் அடிமை; எனக்கென்று ஊர், பெயர் எதுவுமில்லை என்ற விடை பிறந்தது.

'என் உள்ளமார்' என்ற அடுத்த வினா எழும்பிற்று. எனக்கே சிரிப்பு வந்துவிட்டது. காரணம் நான் என்ற ஒன்றே இல்லாதபோது, எனக்கென்று ஓர் உள்ளம் இருப்பதாக நினைத்து, அது யார் அல்லது எது என்று ஆய்வது அர்த்தமற்றது. பிரான் ஆள்வதற்கு முன்னர் எனக்கு என்று ஓர் உள்ளம் இருந்தது. சில சமயங்களில் என்வழி அதுவும், பல சமயங்களில் அதன்வழி நானுமாகச் சென்று கொண்டிருந்தோம். பிரான் ஆண்ட பிறகு, எனக்கென்று ஓர் உள்ளம் இல்லை. என் சித்தத்தில் அவன் புகுந்துவிட்ட காரணத்தால், அந்த உள்ளத்திற்குரிய தனித் தன்மை நீங்கி, அது அவன் தங்குமிடமாக மாறிவிட்டது.

அடுத்து 'ஞானங்கள் ஆர்' என்ற வினாத் தோன்றிற்று. நான் என்ற ஒரு பொருள் தனித்து நிற்கையில்தான் அந்த நானால் அறியப்படும் ஞானம் பற்றிய பிரச்சினை தோன்றுகிறது. அந்த 'நான்' வசிக்கும் இப்பிரபுஞ்சம் பற்றிய ஞானத்தை அபர ஞானம் என்றும், அதனைக் கடந்து நிற்கும் ஞானத்தைப் பர ஞானம் என்றும் கூறினார்கள். முன்னதில் அதிகமும், பின்னதில் ஓரளவும் அறிவின் துணைகொண்டு அந்த 'நான்' புகுந்தது. இப்பொழுது நானே இங்கில்லை. திருவடியில் தஞ்சம் அடைந்தபொழுதே என்னுடைய 'நான்' செத்துவிட்டது. அது போனமையால் அதுபற்றிய அறிவும் மாய்ந்துவிட்டது. அந்த அறிவு மாய்ந்தபிறகு பர ஞானம், அபர ஞானம் என்ற பிரிவிற்கோ அவைபற்றிய ஆராய்ச்சிக்கோ இங்கே இடமேயில்லை.

இனி; நான்காவதாக உள்ளது 'என்னை யார் அறிவார்' என்பதாகும். பிரான் என்னை ஆள்வதற்கு முன்னர்த் திருவாதவூரன் என்றும், பாண்டிய அமைச்சன் என்றும் மிகப் பலர் அறிந்திருந்தனர். பிரான் என்னை ஆண்டுகொண்ட பிறகு என்னில் நிகழ்ந்த இம்மாற்றங்களை யார் அறியமுடியும்? ஒருவரும் அறியவில்லை என்றபடி.

பாடலின் முதலிரண்டு அடிகளில், இரண்டு நிலைகள் பேசப்பெறுகிறது. பிரான் ஆள்வதற்கு முந்தைய நிலை; ஆண்ட பிந்தைய நிலை. இதனை முழுமாற்றம் (Metamorphosis) என்று கூறுவர்.

ஒரு தனி மனிதரை, மாபெரும் பதவி வகித்த ஓர் அமைச்சரை ஒரே விநாடியில் அவரின் மதிமயக்கத்தைப் போக்கி, இத்தனை மாற்றங்களையும் செய்தவன் மிகமிகப் பெரியவனாகத்தான் இருக்க வேண்டும். ஓர் அமைச்சரை ஆண்டியாக்கியவன் அமைச்சரைவிடப் பெரும் பதவியில் இருப்பவன் என்று பலர் நினைக்கலாம் அல்லவா?

இல்லை என்கிறார் அடிகளார். அதாவது இந்த மாற்றங்களைச் செய்தவன் மண்டையோட்டில் பிச்சை எடுத்து உண்பவன்; தனக்கென்று ஒரு தனி வீடுகூட இல்லாமல் அம்பலத்தே (வெட்டவெளி) ஆடுபவன் என்று கூறுகிறார் அடிகளார்.

இங்குக் கூறப்பெற்ற பொருள் பாடலிலுள்ள சொற் களைக் கொண்டுகூட்டுச் செய்து பெற்ற பொருளன்று. பாடலின் சொற்கள் அமைந்துள்ள முறையில் மனத்திடைத் தோன்றிய இறைச்சிப் பொருளாகும் இது.

217. தினைத்தனை உள்ளது ஓர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும் எப்போதும்
அனைத்து எலும்பு உள் நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 3

மேல் 215ஆம் பாடலில் மூன்று அடிகளில் இறைவன் பெருமையைக் கூறினார்; அத்தகையவன் புகழை ஓதுவாயாக என்றார். வண்டு அவ்வாறு செய்யவில்லை யென்று தெரிகிறது. ஏன்? அன்றாடம் வாழ்க்கை நடத்த, வயிற்றை நிரப்பப் பாடுபட்டுச் செல்லும் வண்டு, நாள் முழுவதும் அப்பணிக்கே செலவிடுதலின் இறைவன் புகழை ஊத நேரமேது? எனவே, இதிலிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். வண்டுமுதல் மனிதர்வரை ஒரு புதிய செயலில் ஈடுபட வேண்டுமேயானால், அச்செயலின் பயன் உடனடியாகக் கைக்கு வரவேண்டும். அவ்வாறில்லாமல். 'இதனைச் செய்தால் என்றோ ஒருநாள் பெருநலம் கிட்டும்' என்று எவ்வளவு எடுத்துக் கூறினாலும் சாதாரண உயிர்கள் அதனைக் கடைப்பிடிப்பது கடினம்.

கிட்டடியான் ஊதியம் கிட்டாததால் வண்டு இறைவன் புகழை ஊதவில்லை என்பதைக் கண்ட

அடிகளார், இப்பாடலின் இரண்டு அடிகளில் வண்டு இறைவன் புகழைப் பாடினால் உடனே கைமேல் பலன் கிடைக்கும் என்ற கருத்தைப் பெறவைக்கிறார்.

மலரிலிருக்கும் தேன் தினையைவிடச் சிறிய அளவுடையதாகும். அதனை உண்ணுகின்ற வண்டு நூற்றுக்கணக்கான மலர்களில் அமர்ந்து தேனை உறிஞ்சிய பிறகுதான் தன் பசியைப் போக்கிக்கொள்ள முடியும்.

அவ்வாறில்லாமல் மலரிலுள்ள தேனைப்பற்றி நினைத்த உடனேயோ, தேனையுடைய மலரைக் கண்டவுடனேயோ குறிப்பிட்ட இடத்தில் தேன் இருக்கிறது என்று பல வண்டுகள் ஒன்றுகூடிப் பேசும்போதோ முழுமையான இன்பமும் அவைகளுக்கு ஏற்படுவதில்லை.

அதற்குப் பதிலாக இறைவனை நினைத்தவுடன் இன்பம் ஏற்படுகிறது; கண்டவுடன் ஆனந்தம் பிறக்கிறது; தம்மையொத்த பலர் கூடி அவன் புகழைப் பேசும்போது எல்லையற்ற இன்பம் ஏற்படுகிறது. இம்மூன்றிலும் ஈடுபட்டுப் பழகிவிட்டால் இவையல்லாத பிற நேரங்களிலும் அந்த இன்பம் ஏற்படுகிறது.

அம்மட்டோ! தேனை உண்ணும்பொழுது நாவில் சுவை தட்டுகிறது; வயிறு நிரம்புகிறது. இதனால் தோன்றும் இன்ப உணர்ச்சி எலும்பை உருக்குகின்ற அளவிற்குச் செல்வதில்லை. தேனுக்கில்லாத, எலும்பை உருக்கும் இச்சிறப்பு, இறைவன் புகழுக்குமட்டுமே உண்டு. ஆம். அவன் புகழைப் பாடும்போது அனைத்து எலும்பும் உருகும்; உள்ளேயும் உருகும்.

ஒவ்வொரு பூவிலும் ஒரு சொட்டுத் தேனை உண்டுவிட்டு அடுத்த மலரைத் தேடிச் செல்கின்றவரையில் எவ்வித இன்பமும் இல்லை. மலர் கிடைத்தாலும் ஒரு துளி இன்பம்தான் கிட்டும். இதன் எதிராக இறைவன் புகழைப்

பாடும்போது ஆனந்தத் தேன் சொட்டுச் சொட்டாக வராமல் தாரையாகச் சொரிகின்றது.

குனிப்புடையான்' என்ற சொல்லுக்கு நட்டம் ஆடுபவன் என்ற பொருளைக் கொண்டுள்ளனர் சிலர். அப்பொருளும் ஏற்குமேனும் 'வளைதல்' என்ற பொருள் இன்னும் பொருத்தமுடையதுபோலத் தெரிகின்றது. குனித்த புருவம், குனித்த வில் என வரும் தொடர்களைக் காண்க. குனிப்புடையான் என்பதற்கு வளைந்துள்ளவன் என்று பொருள் கூறினால் அது எவ்வாறு பொருந்தும் என்று ஐயுறுவார், உடலளவில் வளைவு என்று பொருள் கொள்ளாமல், கருணை அளவில் குனிப்புடையான் எனப் பொருள் கொள்ள வேண்டும். வளைதல் என்பது நட்டமாக நிற்கும் தன் நிலையிலிருந்து இறங்கி வளைதலைக் குறிக்கும். அண்ட பிண்ட சராசரங்களை யெல்லாம் கடந்து உயர்ந்து நிற்கும் அவன் கருணை, உயிர்கள்மாட்டுக் கொண்ட பேரிரக்கத்தால் வளைந்து வந்து அவ்வுயிர்களை அணைத்துக்கொள்கிறது. இந்தக் குறிப்பையே குனிப்புடையான் என்ற சொல்லால் அடிகளார் குறிப்பிட்டார்.

தினைத்தனை தேனைக் கொண்ட ஒவ்வொரு பூவாக தேடிச்சென்று, முயன்று, அத்தேனைச் சேகரிப்பதைக் காட்டிலும், ஒரே இடத்திலிருந்து, ஒருவனைமட்டும் நினைந்து, அதனினும் மேம்பட்ட இன்பத்தைப் பெறலாம் என்று கூறுவது இப்பாடலின் தனிச் சிறப்பாகும்.

218. கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை கண்டபின்
என் அப்பன் என் ஒப்பு இல் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்து என்னை வா என்ற வான் கருணைக்
கண்ணப் பொன் நீற்றற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 4

அடிகளார் போன்ற அருளாளர்களுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. உலகப் பொருள்கள் எதிலும் நாட்டம், விருப்பு, பற்று என்ற எதுவும் கொள்ளாமல், மேலோங்கி நிற்பவர்கள் இவர்கள். இவர்கள் வாழ்க்கை முழுவதையும், அன்பு என்ற ஒன்று, பின்னிப் பிணைத்துக்கொண்டுள்ளது. என்றாலும், அன்பு என்ற இந்த ஒரு பகுதியில் மட்டும் அவர்கள் திருப்தி அடைவதே இல்லை. தம்மிடம் உள்ள அன்பு, எந்த நிலையிலும் முழுத் தன்மை பெற்றதாக அவர்கள் கருதுவதே இல்லை. இதற்கொரு காரணமுண்டு, இவர்கள் நினைக்கின்ற அளவிற்கு அந்த அன்பு வளர்ந்துவிட்டால், இந்த உடலை விட்டு நீங்கி, இறைவன் திருவடிகளில் ஐக்கியமாகியிருக்க வேண்டும் என்று நினைக்கின்றனர்.

இந்த உடம்பும், உடம்பு பற்றிய நினைவும், உடம்புக் குரிய சில செயல்களும் அடிகளார் போன்றவர்களுக்கு இந்நிலையிலும் இருந்ததாகலின், தங்களுடைய அன்பு முழுத் தன்மை பெறவில்லை என்றே கருதினர்.

கண்ணப்பர் ஒருவர்மட்டும், இந்த விதிக்கு விலக்காக வாழ்ந்தார் என்று இவர்கள் கருதினர். கண்ணப்பருக்கு உடம்பு இருந்தது. ஆனால், காளத்தி மலையைக் கண்டதிலிருந்து உடம்பு பற்றிய நினைவு (தேகப் பிரக்ஞை) அவர்பால் இல்லை. உணவு, உறக்கம் என்ற இரண்டையும் முற்றிலுமாக மறந்துவிட்டார். ஆதலின், உடலுக்குரிய செயலும் கண்ணனாரிடம் இல்லை. உடம்பு மட்டும் இருந்தது உண்மை. ஆனால், அந்த உடம்பு, உச்சந்தலை யிலிருந்து உள்ளங்கால்வரை அன்புப் பிழம்பாக இருந்தது என்பதை அடிகளாரும் சேக்கிழாரும் நன்கு அறிந்திருந்தனர்.

அதனாலேயே 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இன்மை' என்று அடிகளார் பாடுகிறார்

இனி, கண்ணப்பன் ஒப்பு; என் ஒப்பு என்று பிரித்து எடுத்துக் கொண்டு, கண்ணப்பன் ஒப்பு அன்பு; என் ஒப்பு (அன்பு) இன்மை என்று பொருந்திப் பார்த்தால் ஒரு புதிய சிந்தனை தோன்றுகிறது. அதாவது 'ஒப்பு நோக்கம் செய்தால் அன்புடைமைக்கு ஒரு எல்லையாக நிற்கின்றார் திண்ணனார்; அஃது இன்மைக்கு ஒரு எல்லையாக நிற்கின்றேன் நான்' என்றவாறு.

219. அத் தேவர் தேவர் அவர் தேவர் என்று இங்ஙன்
பொய்த் தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்து ஏதும் இல்லாது என் பற்று அற நான் பற்றி நின்ற
மெய்த் தேவர் தேவர்க்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 5

பொய்த்தேவு–பொய்யான தெய்வங்கள். பத்து–பற்று.

அறிவு வளர்ச்சியின் தொடக்கத்தில் உள்ளவர்களும் முழுத்தன்மை அடையாதவர்களும், இறை இலக்கணத்தை நன்கு அறியார். அவர்கள் தன்னலத்தையே அடிப்படை யாகக் கொண்டு வாழ்வதால் தத்தம் அறிவுக்கு ஏற்பச் சிறு தெய்வங்களை முதற்கடவுள் என்று கொண்டனர். இன்று மிக உயர்த்திப் பேசப்பெறும் இருக்குவேதம்கூட இந்திரனையே முதல் தெய்வம் என்று பேசுகிறது.

இங்குக் கூறப்பெற்ற தெய்வங்களை வழிபடுபவர்கள் தங்கள் ஆசைகளை வெளிப்படுத்தி, அவை நிறைவேறுமாறு இத்தெய்வங்கள் உதவவேண்டும் என்றே வேண்டுவர். வாழ்க்கையில் பற்றுடையவர்கள் வழிபடும் சிறு தெய்வங்கள், இவர்கள் பற்று நிறைவேற உதவுகின்றனவே தவிர, பற்றற்ற நிலைக்கு இவர்களை இட்டுச் செல்வதில்லை.

இக்கருத்தை மனத்துட்கொண்ட அடிகளார், பற்றற்ற நிலையைத் தரக்கூடிய ஒருவன் உண்டு என்கிறார். அத்தகைய ஒருவனையே தம் உள்ளம் பற்றி நின்றது ஆதலின், தம் பற்றை அறுக்க முடிந்தது என்கிறார்.

அதனை அறுக்க உதவிய ஒருவனே மெய்த்தேவனாக இருக்க முடியும் என்று தருக்க ரீதியாக இறைவன் பெருமையை நிலைநாட்டுகிறார்.

220. வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பு என்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 6

குறிக்கோள் இன்னதென்று அறியாது வாழும் மக்கள் நிறைந்த உலகைப் 'பித்த உலகம்' என்றார். இதில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் சித்த விகாரம் இருந்து வருகிறது. 'சித்த விகாரம்' என்பது ஆழ்மனத் திரிபு என்ற பொருளைத் தரும்.

இந்த மனத்திரிபுக்கு ஆதாரமாக இருப்பவை எவை? பிறந்த குலம், வைத்த செல்வம், இடையே வந்த பெண்டிர், இடையே வந்த மக்கள், இடையே வந்த கல்வி என்பவைகளாம். இவை எவ்வாறு சித்த விகாரத்திற்குக் காரணமாயின? உலகில் உடம்பெடுத்தபொழுதுதான் மேலே கூறிய தொடர்புகள் இடம்பெறலாயின. உடம்பில் உயிர் இருந்தும் மயக்கம் முதலியவை வந்துற்றபோது வைத்த நிதி முதல் குலம், கல்வி வரையில் அனைத்தும் பொருளற்றவை ஆகிவிடுகின்றன. அப்படிப்பட்ட நிலையில்லாத இவற்றைத் தம்முடையது என்று கருதும் அறியாமையை— திரிபுணர்ச்சியைச்— சித்தவிகாரம் என்றார் அடிகளார்.

மேலே கூறிய அனைத்தும் உலகிடை வாழ்பவருக்கு இயல்பாக அமைந்துள்ளன. அவற்றோடு கலந்து வாழ்க்கை நடத்தும்போதேகூட, இவை என்னுடையவை என்றும், என்னுடைய மகிழ்ச்சிக்கு இன்றியமையாதவை என்றும் நினைப்பது அறியாமையின்பாற்படும். இவற்றிடையே இருந்து

கொண்டு வாழும்பொழுதுகூட எனக்கும் இவற்றிற்கும் நிலையான தொடர்பு ஒன்றுமில்லை என்று உணர்வது சித்தத் தெளிவாகும்.

அதேபோல இறப்பு என்பது இயல்பாக நடைபெறு கின்ற ஒன்று. வாழ்க்கைப் பயணத்தில் இறப்பு என்பது ஒரு நிலை என்று உணர்வது சித்தத் தெளிவு. அவ்வாறின்றி அது கண்டு அஞ்சுவது சித்தக் கலக்கம். இதனையே 'இறப்பு என்னும் சித்த விகாரக் கலக்கம்' என்றார் அடிகளார்.

கல்வி முதலியவற்றால் மேலே கூறியவை நம்மிலும் வேறுபட்டவை, நிலையில்லாதவை, இடையே வந்து போகின்றவை என்பதை அறிவு சுட்டிக் காட்டினாலும், வாய் கிழியப் பேசினாலும் ஒருவருடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துள்ள இந்த எண்ணங்களை அறிவின் துணைகொண்டோ, தன்னிச்சையாகவோ போக்கிவிடுதல் இயலாத காரியம். இறைவன் துணை என்ற ஒன்று இருந்தாலொழியச் சித்த விகாரத்தைப் போக்குதல் இயலாத காரியம்.

சித்த விகாரத்தை ஏற்படுத்துகின்றவற்றைப் பட்டியலிட் டுக் காட்டியுள்ளார் அடிகளார். இதில் கல்வியைக் கூறியது சற்று வியப்பை அளிப்பதாகும். 'கல்வி என்னும் மூக்கடல் பிழைத்தும்' (திருவாச:4-38) என்று முன்னரும் கூறியுள்ளார். இங்குக் கூறப்பெற்றது, அறிவையும் அகங்காரத்தையும் வளர்க்கும் ஏட்டுக் கல்வியையே தவிர, பண்பாட்டையும் மெய்ஞ்ஞானத்தையும் வளர்க்கும் கல்வியை அன்று.

'சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த' என்ற தொடரில் உள்ள தெளிவித்த என்ற சொல் ஆழ்ந்து சிந்திப்பதற்குரியது. அந்நாளில், கலங்கியுள்ள நீரைத் தெளிவிப்பதற்கு தேத்தாங் கொட்டையை நீருள்ள பாத்திரத்தின் உள்ளே உரைத்து விடுவர். சற்று நேரத்தில் நீர் சுத்தமாகத் தெளிந்துவிடும். அதுபோலக் குலம், கல்வி முதலிய மாசுகள் கலந்துள்ள

சித்தத்தைத் தெளிவிக்க வேண்டுமானால் இறையருள் என்ற தேத்தாங் கொட்டையை அந்தச் சித்தத்துள் தேய்க்க வேண்டும். அப்பொழுது சித்தம் தானே தெளிந்து விடும். இதனையே 'கலக்கம் தெளிவித்த வித்தகத் தேவர்' என்கிறார் அடிகளார்.

கலக்கம் தெளிவித்த தேவர் என்று சொல்லாமல் வித்தகத் தேவர் என்று கூறியதன் காரணமென்ன? கலக்கத்தைத் தெளிவிக்க அத்தேவர் பல்வேறு விதமான வழிகளைக் (வித்தைகளைக்) கையாள்கிறார். குருவடிவாக நேரே வந்தும், சாதாரண மானிட வடிவுடன் அடியார்களின் எதிரே வந்தும், இவை இரண்டுமே இல்லாமல் அந்தரியாமியாய் உள்ளே நின்றும் பல்வேறு வழிகளில் சித்தக் கலக்கத்தைத் தெளிவித்தலின் அவனை வித்தகத் தேவர் என்றார்.

221. சட்டோ நினைக்க மனத்து அமுது ஆம் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரை நாம் உரு அறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 7

சட்டோ–விரைவாக; சற்று. சிட்டாய–அறிவுடைப்பொருளாகிய; நுட்பமாகிய என்றுமாம்.

சட்ட என்கிற சொல்லுக்கு அகராதி நான்கு பொருள்களைத் தருகிறது. அவையாவன செவ்விதாக, நன்றாக, முழுதும், விரைவாக என்பவையாகும். இந்த நான்கு சொற்களில் எதனை வைத்துக்கொண்டாலும் 'நினைக்க' என்ற சொல்லுடன் பொருந்தி அழகாகப் பொருள் தருகின்றது. இதே சொல்லைவைத்து அடிகளார் திருக்கழுக்குன்றப் பதிகத்தில் 469ஆம் பாடலில் 'சட்ட நேர்பட வந்திலாத சழக்கனேன்' என்று பாடுகின்றார். மேலே சட்ட என்பதற்குப் பொருளாகத் தரபெற்ற நான்கும்

இத்தொடரில் வரும் சட்ட என்ற சொல்லுக்கும் அழகாகப் பொருந்துவதைக் காணலாம்.

இப்பாடலின் பொருளை அறிய முற்படுமுன் பாடலின் சொற்களைப் பின்வருமாறு கொண்டு கூட்டுச் செய்து கொள்வது நலம்.

'சட்டோ நினைக்க மனத்து அமுதாம் சங்கரனை மறப்பேனோ? கெட்டேன்! கேடுபடாத் திருவடியை ஒட்டாத பாவி நாம் தொழும்பரை உருவறியோம்'.

இப்பாடலின் பொருளை இந்தக் கொண்டுகூட்டுக்கு ஏற்பக் காண்பது முறையாகும். 'செம்மையாக (சட்டோ) நினைக்கத் தொடங்கியவுடன் ஆழ்மனத்தின்கண் அமுதம் போல் ஊறுகின்ற சங்கரனை நான் மறப்பேனோ? ஒரு வேளை மறந்தால் அந்த விநாடியே கெட்டேன். (திருப்பெருந்துறையில்) திருவடிகள் என்னை மாற்றியவுடன் அக்கேடுபடாத் திருவடியை ஒட்டிக்கொண்டு சென்றிருக்க வேண்டும். சந்தர்ப்பத்தை நழுவவிட்டு அத்திருவடியோடு ஒட்டாத பாவியாகிவிட்டேன். அதனால் விளைந்த பயன் என்ன? அத்திருவடியை மறந்ததுமட்டு மன்றி அத் திருவடியை என்றும் தமது ஆழ்மனத்தில் தாங்கி நிற்கும் தொழும்பர் கூட்டத்தைகூட இனங்கண்டுகொள்ள முடியாத பாவியாகிவிட்டேன்', என்றவாறு.

ஒட்டாத பாவி என்ற தொடர் மத்திம தீபமாக நின்று சங்கரனை மறந்ததால் ஒட்டாத பாவி ஆனோம் என்றும், அடியார்களைக்கூட இனங்கண்டு, அவர்களோடு ஒட்டிச் செல்லாத பாவியானோம் என்றும் பொருள் தந்து நிற்கின்றது.

இப்பாடலிலும் வேறு பல பாடல்களிலும் தன்மை ஒருமையிலும் தன்மைப் பன்மையிலும் அடிகளார் தம்மைச் சுட்டுவதைக் காணமுடியும்.

உதாரணமாக, திருவாசகத்தின் 12ஆம் பாடலில்,

.....உன் அடியேன் செய்த வல்வினையைக்
கழிதரு காலமுமாய் எம்மைக் காப்பவனே

என்றும், 190ஆம் பாடலில்,

..... உணர்வாய் என் உட்கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோர் அறியா வழி எமக்குத் தந்தருளும்

என்றும் வருவதைக் காண்க.

அவ்வாறின்றித் தன்மைப்பன்மையில்மட்டும் தம்மைச் சுட்டிக்கொள்கின்ற பாடல்களும் உண்டு. எடுத்துக் காட்டாகத் திருவாசகத்தின் 180ஆம் பாடலில்,

நாட்டார் நகை செய்ய நாம் மேலை வீடெய்த

என்றும், 201ஆம் பாடலில்,

நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப

என்றும் வருவதைக் காணலாம்.

இது எவ்வாறாயினும் அடிகளாரின் பண்புநலனும், அடக்கமுடைமையும், இறை உணர்வும் அவர் தம்மைத் தாம் சுட்டும்பொழுது, தன்மைப்பன்மையில் சுட்ட மாட்டார் என்பதை அறிவுறுத்தும். நாம் என்றும், நமக்கு என்றும், எமக்கு என்றும் வருகின்ற இடங்கள் அனைத்திலும் சொல்லால் இவை பன்மையாயினும் பொருளால் இவை ஒருமையாகவே உள்ளன. நாம் என்பதை நான் என்றும், எம் என்பதை எனது என்றும், நமக்கு என்பதை எனக்கு என்றுமே பொருள் கொள்ள வேண்டும்.

திருவெம்பாவையில் வரும் யாம், எமக்கு என வரும் பன்மைச் சொற்கள் மேலே கூறப்பெற்ற பொது இலக்கணத்திற்கு மாறுபட்டுப் பன்மையாகவே பொருள் கொள்ளப்படும். காரணம், கூட்டமாக நின்று பெண்கள் பாடும் பாட்டாகும் அவை.

222. ஒன்று ஆய் முளைத்து எழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்று ஆக வைத்து என்னை நாய் சிவிகை ஏற்றுவித்த
என் தாதை தாதைக்கும் எம் அனைக்கும் தம் பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ 8

ஒன்றாய் முளைத்தெழுந்து–சிவதத்துவமாக முதலிற்றோன்றி. எத்தனையோ கவடுவிட்டு–கலை புவனங்கள் தத்துவங்களாகிற கிளைகளாகவிரிந்து. நாய்சிவிகை ஏற்றுவித்த–நாயைப் பல்லக்கில் ஏற்றினாற்போல என்னை ஆட்கொண்ட.

எல்லாவற்றிற்கும் மூலமாய் நிற்கும் பரம்பொருள் ஒன்றேயாதலின் 'ஒன்றாய் முளைத்தெழுந்து' என்றார். இனி .எல்லாப் பொருளிலும் வேறாயும் உடனாயும் அவனே நிற்றலின் 'எத்தனையோ கவடு விட்டு' என்றார்.

இறைவனை மரம் என்று உருவகம் செய்ததற்கு ஏற்ப 'முளைத்து, எழுந்து', என்ற சொற்களைப் பயன் படுத்தினார். அதுபோலக் 'கவடு(கிளை) விட்டு' என்ற தொடரையும் பயன்படுத்தினார்.

ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருள் முளைப்பதுமில்லை; எழுவதுமில்லை; கவடுவிடுவதுமில்லை. அவ்வாறிருக்க, அடிகளார் இந்த உருவகத்தை ஏன் பயன்படுத்தினார் என்று நினைக்கத் தோன்றுகிறது. விதையுனுள் மரமும், மரத்துள் விதையும் மறைந்திருப்பது போல, இறைவனில் உயிர்களும், உயிர்களுள் இறைவனும் மறைந்துநிற்றல் சிந்திப்பவர்க்குப் புலனாகும். பிரபஞ்ச

காரணன் என்ற தொடருக்குப் பொருளாக இப்பகுதி அமைந்துள்ளது.

அப்படிப்பட்ட ஒருவன், குன்றாத செல்வம் (அருள்) உடையவன், அவன் என்ன செய்தான்? வள்ளல்கள், யாருக்குச் செய்கிறோம் என்ற சிந்தனை இல்லாமல் வாரி வழங்கும் இயல்பினர். அதேபோல, கடையான நாயாகிய என்னைப் பொற்சிவிகையில் ஏற்றினான் இந்த வள்ளல்.

அவனுடைய அருள் காரணமாகப் பொற்சிவிகையில் ஏற்றினாலும், தாம் யார் என்பதை மறவாமல் அடிகளார் உள்ளார் ஆதலின் 'நாய் சிவிகை ஏற்றுவித்த' என்கிறார். இத்தொடருக்கு முன்னே உள்ள தொடர் 'நன்றாக வைத்து' என்பதாகும். நன்றாக வைத்தல் வேறு, நாய் சிவிகை ஏற்றுவித்தல் வேறு.

பல சமயங்களில் ஏதோ ஒரு காரணம்பற்றி எவ்விதத் தகுதியும் இல்லாதவர்கட்கும் பெரும்பதவி கிடைத்து விடுகிறது. இத்தகைய நிகழ்ச்சி உலகியலில்மட்டு மன்றி, அருள் அனுபவ நிலையிலும் ஒரோவழி வருவதுண்டு.

ஏதோ ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக நாயை ஒரு முறை சிவிகையில் ஏற்றினால், மறுமுறையும் அது நிகழும் என்று சொல்வதற்கில்லை. அதுபோல, அடிகளாருக்குக் கிடைத்த அருள் அனுபவம் ஏதோ ஒரு முறை வந்துபோய்விட்ட ஒன்று என்று நினைத்தால் அது தவறு என்பதைக் குறிக்கவே 'நாய் சிவிகை ஏற்றுவித்த' என்பதன் முன்னர் 'நன்றாக வைத்து என்னை' என்று பாடுகிறார்.

திருவடி தீட்சை கிடைத்தபிறகு, அந்த அருள் அனுபவத்தில் மேலும் மேலுமாக முக்குளித்துக் கொண்டிருந்தாரே யன்றி முற்றிலும் அதனை விட்டு நீங்கிவிடும் நிலைமை ஏற்படவேயில்லை. இதுவே 'நன்றாக வைத்த' செய்தி யாகும்.

இனி 'என் தாதை தாதைக்கும், எம் அ(ன்)னைக்கும்' என்ற தொடர் குடிப்பிறப்பின் நுணுக்கத்தை விஞ்ஞான உலகம் காண்பதற்குப் பன்னூறு ஆண்டுகள் முன்னரே இந்நாட்டவர் அறிந்திருந்தனர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

தந்தை வழி என்பது ஒன்று. தாய் வழி என்பது ஒன்று. இவர்களிடையே நம்பிக்கை, பண்பாடு என்பவை மாறுபட்டிருப்பின் பிறக்கும் குழந்தை எந்த ஒன்றிலும் ஆழ்ந்த நம்பிக்கை உடையதாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. தாய், தந்தை இருவரும் ஒத்த நம்பிக்கை உடையவர்களாக இருப்பின் வரும் சந்ததி வலுவான நம்பிக்கை உடையதாக இருக்கும். இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டே 'என் தாதை தாதைக்கும் எம் அ(ன்)னைக்கும் தம் பெருமான்' என்கிறார் அடிகளார்.

இந்நாட்டைப் பொறுத்தவரை 'பழ அடியார்' என்ற ஒரு தொடருண்டு. அதாவது, அடிமைத்திறம் பூண்டவர் களின் பரம்பரையில் வருகின்ற ஒருவர், மிக ஆழமான இறைப்பற்று உடையவராக இருக்கிறார் என்பதனைக் குறிப்பதற்கே அத்தொடர் தோன்றிற்று.

223. கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறை மிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தான் எனக்கு
மரணம் பிறப்பு என்று இவை இரண்டின் மயக்கு அறுத்த
கருணைக் கடலுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 9

கறைமிடற்றன்–நீலகண்டன். மயக்கு–கலப்பு.

'கரணங்கள் எல்லாம்' என்று கூறியமையின் புறக் கரணம், அகக் கரணம் ஆகிய அனைத்தையும் கூறினாராயிற்று. இனி, இந்தக் கரணங்கள் ஒன்றின் ஒன்று மேம்பட்டவை என்ற கருத்தும் உண்டு. கன்மேந்திரியம்,

ஞானேந்திரியம், அந்தக்கரணம் என்ற வரிசைக் கிரமத்தில், பருமையிலிருந்து நுண்மையை நோக்கிச் செல்கின்ற வரிசைப்பாட்டை அறியமுடியும். எனவேதான், இவை ஒன்றின் ஒன்று உயர்ந்தது என்று பேசப்படுகிறது. என்றாலும், இவை எவ்வளவு உயர்ந்து சென்றாலும், அவற்றையும் கடந்து நிற்பவன் கறைமிடற்றன் என்க.

உயிர்களைப் பொறுத்தவரை மரணம் பிறப்பு என்ற இரண்டுமே புரிந்துகொள்ள முடியாத புதிராகும். மரணத்தைக் கண்டு அஞ்சுதலும், பிறப்பில் மகிழ்தலும் உயிர்களுக்கு இயல்பாக அமைந்துள்ள தன்மையாகும். இதனையே 'மயக்கு' என்கிறார்.

இறை அனுபவம் கிடைத்தவுடன் இவை இரண்டும் பற்றிய மயக்கம் தெளிகிறது.

224. நோய் உற்று மூத்து நான் நுந்து கன்றாய் இங்கு இருந்து
நாய் உற்ற செல்வம் நயந்து அறியாவண்ணம் எல்லாம்
தாய் உற்று வந்து என்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேய் உற்ற செல்வற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 10

நுந்துகன்றாய்–தள்ளப்பட்டகாளையாய். நாயுற்ற செல்வம்–நாய்பெற்ற செல்வம் (போல).

இப்பாடலில் இரண்டு முதுமொழிகள் இடம்பெற்றுள்ளன. 'நுந்துகன்று' என்பது ஒன்று, 'நாயுற்ற செல்வம்' என்பது மற்றொன்று. நுந்துதல் என்ற சொல்லுக்குத் தள்ளுதல், ஒதுக்குதல் என்ற பொருள் உண்டேனும் ஒரு பசு தன் கன்றை எந்த நிலையிலும் ஒதுக்காது என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. எனவே, பசுவால் ஒதுக்கப்பட்ட கன்று என்று பொருள் கொள்ளாமல் பசுவினிடமிருந்து பிறரால் பிரிக்கப்பட்ட கன்று என்று பொருள் கொள்வதே பொருத்தமாகும். கன்றை விட்டுப் பிரிய வேண்டும் என்ற எண்ணம் பசுவிற்கும் இல்லை

பசுவை விட்டுப் பிரிய வேண்டும் என்ற எண்ணம் கன்றுக்கும் இல்லை. என்ன காரணத்தாலோ கன்று பிரிக்கப்பட்டு, அது நொந்துபோன நிலையை 'நுந்து கன்று' என்று அடிகளார் குறிப்பிடுகிறார். இவ்வாறு பொருள் கொள்வதற்கு அடிகளாரின் வாக்கே இடம் தருகிறது.

பெருந்துறையில் திருவடி தீட்சை பெற்று அடியார்களி டையே அமர்ந்திருந்த அடிகளார், சில விநாடிகளில் அனைத்தையும் இழந்தார். இப்போது அவர் மனத்தில் ஓர் ஆதங்கம். தம்மைக் கூவி அழைத்து ஆட்கொண்ட குரு நாதரே, இப்போது ஒதுக்கிவிட்டாரே என்ற ஓர் எண்ணம் தோன்றிற்று. அந்த விநாடியிலேயே கருணைக் கடலாகிய குருநாதர் தம்மை ஒதுக்கவில்லை என்றும் உணர்கின்றார். அக்கருத்தை, 'உடையான் அடி நாயேனை தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பு அன்று' (திருவாச:41)என்று அவரே பாடியுள்ளார். ஆதலின், கன்றைப் பிரியும் நோக்கம் பசுவுக்கு இல்லை என்ற கருத்து பொருத்தமுடையதாகத் தெரிகின்றது.

யாரோ ஒருவர் முன் நின்று கன்றைப் பிரித்ததால் அது நுந்துவதாயிற்று.

சாவா மூவாப் பெருவாழ்வளிக்கும் திருவடித் தொடர்பு தம்மை விட்டு நீங்கிவிட்டதாக அவர் நினைத்ததால் 'நோயுற்று மூத்து' என்று பாடுகிறார்.

பெருஞ்செல்வம் ஒருவருக்குக் கிடைத்தாலும் அதன் இயல்பு அறிந்து அதனை அனுபவிக்கக் கூடிய ஆற்றலும் சிந்தனையும் இல்லாதவர்க்கு அச்செல்வம் பயன்படாது போகும். எச்சில் சோற்றை உண்ணும் நாயைப் பஞ்சு மெத்தையில் ஏற்றி வைத்துப் பொற்கிண்ணத்தில் பால் சோற்றைத் தந்தாலும், அதனை ஒதுக்கிய நாய், நடு வீதிக்கு ஓடுவதுபோல, திருவடிப் பேறாகிய பெருஞ்செல்வம்

கிடைத்தும் அதனை இறுகப் பற்றிக்கொண்டு அனுபவிக்காமல் விட்டுவிட்டு வந்த தம்மைச் 'செல்வம் நயந்தறியா நாய்' என்று கூறிக்கொள்கிறார்.

'ஏ வண்டே, தாய்போல் வந்து என்னை ஆண்டுகொண்ட வண்ணமெல்லாம் இப்போது நீ சென்று ஒளிபொருந்திய செல்வற்குச் சொல்வாயாக' என்ற பொருளில் 'கோத்தும்பீ! தாயுற்று வந்து என்னை ஆண்டுகொண்ட வண்ணமெல்லாம் தேயுற்ற செல்வற்கே ஊதாய்' என்று அமைந்திருப்பதைக் காணலாம். பல்வேறு நிறங்களையுடைய பூக்களை நாடிச் செல்லும் பழக்கமுடைய வண்டு, அப்பூக்களின் நிறங்களையே இனங் கண்டுகொண்டு, அவற்றின்பால் செல்கின்றது. இந்த நுணுக்கத்தை அறிந்த அடிகளார், வண்டுக்கு இறைவன் பற்றி அடையாளம் சொல்லும்போது, வேறெதுவும் கூறாமல் தேயுற்ற செல்வன் என்ற இரண்டே சொற்களில் கூறிவிடுகிறார். தேயுற்ற செல்வன் என்பது ஒளிவடிவான, தேஜஸ் நிறைந்த செல்வன் என்ற பொருளைத் தருவதால், வண்டு எளிதாக அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்றவாறு.

225. வல் நெஞ்சக் கள்வன் மன வலியன் என்னாதே
கல் நெஞ்சு உருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னம் திளைக்கும் அணி தில்லை அம்பலவன்
பொன் அம் கழலுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 11

ஒருவருக்கு ஏதேனும் ஒரு நன்மையைச் செய்ய வேண்டுமானால் அதனைப் பெறக்கூடியவர்பற்றி நன்கு அறிய வேண்டும். கண் இழந்த ஒருவனுக்கு ஓவியத்தையும், முற்றிலும் காது கேளாத ஒருவனுக்குச் சிறந்த ஓசை ஒலிநாடாவையும், மஞ்சட் காமாலைக்காரனுக்கு இனிய பொங்கலையும் தருவது பயன் தராத செயலாகும்.

அப்படியே தரத்தான் வேண்டுமென்றால் முதலாவது ஆளுக்குக் கண்ணையும், இரண்டாமவர்க்குக் கேட்கும் செவியையும் தருவதுடன், மூன்றாமவர்க்கு நோயையும் போக்க வேண்டும்.

இதே போன்று இறையனுபவத்தைத் தரவேண்டும் என்று நினைத்த இறைவன், அடிகளாரைப்பற்றி ஆராய்ந் தான். அனுபவத்தைப் பெற வேண்டுமானால் மென்மை யான இதயமும் அன்பு நிறைந்து உருகக்கூடிய உள்ளமும் வேண்டும். அப்பொழுதுதான் அந்த அருளை அனுபவிக்க முடியும். இவை தம்பால் இல்லை என்கிறார் அடிகளார். 'வன்னெஞ்சக் கள்வன் மனவலியன்' என்ற தொடரில் தம்மைப்பற்றித் தாம் கொண்ட கருத்தை வெளியிடுகிறார். இதனை அறிந்த இறைவன் என்ன செய்தான்? இவருக்கு அமைதி உண்டாகுமாறு இவருடைய கல்போன்ற நெஞ்சை உருக்கினான் என்கிறார். ஆக, அடிகளார் கருத்துப்படி வன்னெஞ்சும், வலி மனமும் உடைய அவருக்கு அருள் செய்ய நினைத்த இறைவன், அவரிடமிருந்த இரு குறைகளையும் ஒருசேரப் போக்கினான். போக்கியதோடு அல்லாமல் உருகும் இயல்பையும் அதற்குத் தந்தான்.

வழியோடு போகும் ஒருவரை இழுத்து, அவருடைய வன்னெஞ்சத்தையும் கள்ளத்தையும் வலிய மனத்தையும் மாற்றி, கல் போன்ற நெஞ்சை உருக்கினான் என்றால், எதற்காக இதைச் செய்தான்? அவன் செய்த அருளிப் பாட்டைப் பெறக்கூடிய தகுதி, தம்பால் ஒரு சிறிதும் இல்லை என்பதை முதல் அடியில் கூறிய அடிகளார், பின்னர் இவற்றையெல்லாம் ஏன் செய்தான் என்ற வினாவிற்கு விடை கூறுவார்போல் 'கருணையினால் ஆண்டுகொண்டான்' என்று முடிக்கின்றார்.

நெஞ்சை உருக்குவதற்குக் 'கல்லைப் பிசைந்து கனியாக்கி' என்ற தொடரை அடிகளார் வேறுபல இடங்களிலும் பேசுகிறார்.

226. நாயேனைத் தன் அடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனது உள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனை
சீ ஏதும் இல்லாது என் செய் பணிகள் கொண்டருளும்
தாய் ஆன ஈசற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 12

சீ ஏதும் இல்லாது–வெறுப்புணர்ச்சி சிறிதும் இன்றி. உள்ளப்பிழை–தீயன சிந்தித்தலாகிய மனப்பிழை.

'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை' என்ற தொடரில் 'பாடுவித்த' என்ற சொல், அடிகளாரின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஓர் ஒப்பற்ற நிகழ்ச்சியைக் குறிப்பதாகும். திருவாசகம் முழுவதும் அடிகளார் பாடினார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. பெருந்துறையில் எல்லையற்ற இறையனுபவத்தை, பிறர் யாரும் பெறாத நிலையை, ஒரே விநாடியில் பெற்றார் என்பதிலும் ஐயமில்லை. அப்படியானால் மாபெரும் கவிஞராகிய இவர், தம் அனுபவத்தைச் சிறந்த பாடல்கள்மூலம் தாமே வெளிப்படுத்த வேண்டும் என்று நினைத்திருந்தால், அதனைத் தவறு என்று சொல்வதற்கு ஏதும் இல்லை. முன்னரே திருக்கோவையார் பாடி, சிறந்த கவிதை அனுபவம் பெற்றவர் ஆதலின், இப்போது திருவாசகம் பாடுவதில் புதுமை ஒன்றும் இல்லை.

அப்படியானால் அடிகளார் திருவாசகம் பாட உந்துசக்தியாக இருந்தது எது? புலமை, பாடலியற்றும் ஆற்றல், இறையனுபவம் என்ற மூன்றும் நிறைந்து நின்ற நிலையில், திருவாசகம் பாட வேண்டும் என்ற உந்துசக்தி அவருடைய உள்ளத்திலேயே எழுந்திருக்கலாமல்லவா?

இவ்வினாவிற்கு விடையாக 'இல்லை' என்கிறார் அடிகளார். 'நான் பாடவேண்டும் என்று நினைக்கக்கூட இல்லை. ஆனால் நாயேனாகிய என்னைத் தன்னடிகளைப் பாடுமாறு பணித்தவனும் அவனே, பாடுவித்தவனும் அவனே' என்ற கருத்தை முதலடியில் பேசுகிறார்.

திருஞானசம்பந்தர் 'எனதுரை தனதுரையாக' (திருமுறை: 1.76.6) என்று பாடியதும் நம்மாழ்வார் 'என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசன்' (நாலா:2832) என்று பாடியதும் அடிகளார் 'பாடுவித்த நாயகன்' என்று சொல்வதும் ஒரே பொருளைத் தருவனவாகும்.

அடிகளார் பாடலில் 'பாடுவித்த' என்ற பிறவினை வாய்பாடு பயன்படுத்தப்பெற்றிருப்பினும், உண்மையில் இது பாடினான் என்ற பொருளையே தரும். இதுபற்றித் திருவண்டப்பகுதியில் கூறவந்த அடிகளார் 'என்னில் கருணை வான்தேன் கலக்க அருளொடு பரா அமுது ஆக்கினன்' (திருவாச:3-179-181) என்று கூறியுள்ளமை இங்குச் சிந்திக்கத்தக்கது. மணிவாசகர் என்ற கருவியை எடுத்துக் கொண்டு, அதில் தன் கருணையாகிய தேனை நிரப்பி, பரா அமுது ஆக்கினான் என்று கூறுவதால், மணிவாசகர் என்ற தனிமனிதர் தம் உள்ளத்தில் தோன்றிய உந்து சக்தியால் இதனைப் பாடவில்லை என்பதை அண்டப் பகுதியின் இடமும், 'பாடுவித்த' என்ற இங்கு வந்த சொல்லும் நன்கு வெளிப்படுத்தும்.

இதே கருத்தை 'என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசனை' என்பது முதல் (நாலாயி: 2832—2842) பத்துப் பாடல்களிலும் நம்மாழ்வார் பாடியுள்ளார். அத்தோடு நில்லாமல், 'என் நெஞ்சத் துள்ளிருந்து இங்கு இருந்தமிழ் நூல் இவை மொழிந்து'

(நாலாயி: 3132) என்றும் பாடியுள்ளார். இந்த அருளாளப் பெருமக்கள் தாமே பாடியதாக நாம் நினைக்கின்றோம் என்றாலும் தம்முள் இருந்து இறைவனே பாடினான் என்று அவர்களே பாடியுள்ளனர்.

எதிரே உள்ளவர்கள் செய்யும் பிழையைப் பொறுத்துக் கொள்வதற்கு எவ்வளவு கருணையுள்ளவர்களுக்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லை வந்துவிட்டால் 'சீ! போ உனக்குச் செய்தது போதும்' என்று சொல்லும் நிலைமை தோன்றி விடும். தம்மைப் பொறுத்தவரை தில்லைக் கூத்தன் அவ்வாறு செய்யவில்லை என்பதைப் 'பேயேனது உள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை' என்ற தொடரால் கூறுகிறார் அடிகளார். எந்த அளவுக்கு அவன் பொறுத்தான்? 'சீ என்று சொல்லும் அளவுக்கு நான் பிழைசெய்தும் அப்படிச் சொல்லி ஒதுக்காமல் என் பணிகளை ஏற்றுக்கொண்டருளினான்' என்கிறார். எத்துணைப் பிழைகளையும் பொறுக்கும் பெற்றி, தாய் ஒருத்திக்கே உண்டு. ஆதலின் 'தாயான ஈசற்கே' என்றார்.

227. நான் தனக்கு அன்பு இன்மை நானும் தானும் அறிவோம்
தான் என்னை ஆட்கொண்டது எல்லாரும் தாம் அறிவார்
ஆன கருணையும் அங்கு உற்றேதான் அவனே
கோன் என்னைக் கூடக் குளிர்ந்து ஊதாய் கோத்தும்பீ 13

தனக்கு–இறைவனுக்கு. ஆன கருணை–அத்தகைய கருணை.

மேல் 218ஆம் பாடலில் கூறப்பெற்ற சில பகுதிகளை இங்கு நினைவில் கொண்டுவரவேண்டும். எவ்வளவு அதிகமாக அன்பிருந்தாலும் தமக்கு அன்பே இல்லை என்று சொல்லிக்கொள்வது பொதுவாக அடியார்களின் பொது இயல்பு.

'எனக்கு அவனிடத்து அன்பில்லை என்ற ரகசியத்தை நாங்கள் இருவர்மட்டுமே அறிவோம். ஆனாலும் அவன் குருநாதர் வடிவில் என்னைப் பிடித்து ஆட்கொண்டதைச் சுற்றி நின்றவர்கள்மட்டும் அல்லாமல் ஏனையோரும் அறிவர். என்னை ஆட்கொண்டதைக் கண்ட சுற்றி நின்றவர்கள், அவனிடம் எனக்கு அன்பு ஏதோ பெரிதாக இருந்தது, அதனால்தான் ஆட்கொண்டான் என்று நினைத்தனர். ஆனால், உண்மை அதுவன்று. அன்று அவன் ஆட்கொண்டதற்குக் காரணம் அவனது கருணை தவிர வேறில்லை' என்றவாறு.

'கோன் என்னைக் கூடக் குளிர்ந்து ஊதாய்' என்று பாடுவதால் இப்பாடலும் 224, 233ஆம் பாடல்களும் தூது இலக்கணத்திற்குப் பொருந்தி வருகின்றன.

228. கருஆய் உலகினுக்கு அப்புறம் ஆய் இப் புறத்தே
மரு ஆர் மலர்க் குழல் மாதினொடும் வந்தருளி
அரு ஆய் மறை பயில் அந்தணன் ஆய் ஆண்டுகொண்ட
திரு ஆன தேவற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 14

திருவான தேவன்–அழகிய ஞானாகாச வடிவான தேவன்.

இப்பாடலின் பொருள் எளிதாக விளங்குகின்ற ஒன்றாகும். என்றாலும், 'கருவாய் உலகினுக்கு அப்புறமாய்' என்ற தொடர் பல்வேறு சிந்தனைகளைத் தூண்டுகிறது. கருவாய் என்றதால் இப்பிரபஞ்சம் தோன்றுவதற்கு முதற் காரணன் என்பது பெறப்பட்டது. உலகினுக்கு அப்புறமாய் என்றதால் மீட்டும் கருத் தன்மையையே குறிக்கின்றார். அதாவது காணப்படுகின்ற பிரபஞ்சத்திற்கு அப்புறமாய், என்றதால், பிரபஞ்சத் தோற்றத்திற்கு முற்பட்ட நிலை யையே இது குறிக்கின்றது. 'உலகினுக்கு அப்புறமாய்

கருவாய்' என்று கொண்டுகூட்டுச் செய்தால் பொருள் எளிதாக விளங்கிவிடும்.

ஆலமரத்தின் சிறிய விதையிலிருந்து மாபெரும் மரம் தோன்றுகிறது. அதேபோல, பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமாகவுள்ள இறைவன், இப்பிரபஞ்சத்தைத் தன்னுள் அடக்கிய விதைபோல இருக்கின்றான்.

பொறி, புலன்களுக்கும் அறிவுக்கும் கற்பனைக்கும் பிரபஞ்சத்திற்கும் அப்பால், கருவாக இருந்த ஒருவன், இப்பொழுது வடிவுகொடு வருகிறான். இது திருப்பெருந்துறை நிகழ்ச்சியையே குறிக்கின்றது. அடிகளாரைப் பொறுத்த வரை குருநாதர் வடிவிலிருந்த இறைவன் இரண்டு காட்சிகளை நல்குகிறான். ஒன்று புறக் காட்சி, மற்றொன்று அகக் காட்சி. புறக் காட்சியில் 'மறை பயில் அந்தணனாகக்' காட்சியளித்தான். அந்த வடிவுடனேயே ஆட்கொள்ளவும் செய்தான். அடிகளாருக்குமட்டு மல்லாமல் ஏனை யோருக்கும் புறக்கண்ணாலும் காணக்கூடிய வடிவாய் அமைந்தது மறைபயில் அந்தண வடிவம்.

இந்தப் புறக் காட்சியை அடிகளார் கண்டுகொண் டிருக்கும்போதே அவருள் அகக் காட்சி கிடைக்கின்றது. அதில் 'மருவார் மலர்க்குழல் மாதினொடும்' காட்சியளித் தான். என்ன அதிசயம்! பலரும் காணும் நிலையிலிருந்த காட்சி வேறு; அடிகளார் அக மனத்தில் கிட்டிய காட்சி வேறு. இவை ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. ஒன்று துறவுக் கோலம் கொண்ட குருநாதர் வடிவம். மற்றொன்று மலர்க்குழல் மாதொடும் தோன்றிய திருவுருவம்.

முரண்பட்ட இந்த இரு காட்சிகளையும் ஒரே பாடலில் வைத்து ஏன் பாட வேண்டும்? எட்டாம் நூற்றாண்டில்மட்டு மல்லாமல் இன்றும்கூட இந்த வேறுபாடு பெரிதாகக் கருதப்படுகிறது. துறவுக் கோலம்

என்பது பெண்ணை ஒதுக்கிய கோலம் என்று பலரும் நினைக்கின்றோம். அன்றும் இப்படி நினைத்தவர்கள் பலர் உண்டுபோலும். இவ்வளவு ஏன்? அடிகளாரேகூட அவ்வாறு நினைத்திருத்தல் கூடும். அவ்வெண்ணம் தவறானது. கோலத்தைக் கொண்டு எந்த முடிவிற்கும் வரக்கூடாது என்பதை அறிவிக்கவே, இறைவன் இக்காட்சியை நல்குகின்றான். ஆண், பெண் வேறுபாடு புற உடம்புபற்றியதே தவிர, ஆன்மாபற்றியது அன்று. எல்லாவற்றிலும் அருவாய் இருக்கும் இறைவன், ஒரு குறிப்பிட்ட கோலத்தில் இருக்கமாட்டான் என்று நினைப்பது தவறு என்பதைக் காட்டவே ஒரு நேரத்தில் அடிகளாருக்கு இந்த இரண்டு காட்சிகளும் கிட்டின.

229. நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ் இடத்தோம்
தானும் தன் தையலும் தாழ் சடையோன் ஆண்டிலனேல்
வானும் திசைகளும் மா கடலும் ஆய பிரான்
தேன் உந்து சேவடிக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 15

உந்து–வெளிப்படுக்கின்ற.

சென்ற பாடலில் சொல்லப்பட்ட அதே கருத்து இன்னும் சற்று விரிவாக இங்குப் பேசப்பெறுகிறது. தூரம் தாண்டுதல், பந்தய ஓட்டம் என்பவற்றில் ஈடுபடுபவர்கள் சிலரிடை, சில சமயங்களில் இத்தகைய எண்ணம் தோன்று வதுண்டு. ஏதோ ஓர் உந்துசக்தி காரணமாகச் சாதாரண நிலையில் தங்களால் முடியாத ஒன்றை, இப்பொழுது இவர்கள் சாதித்துவிடுகின்றனர். சாதனை முடிந்த பிறகு பின்னோக்கிப் பார்க்கின்றனர். 'நானா இதனைச் செய்தேன்!' என்று அவர்களே ஆச்சரியப்படுகின்றனர்.

திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு அடிகளாருக்கே மேலே கூறப்பெற்ற மனநிலை தோன்றுகிறது. திருவாதவூர

ராக இருந்த பழைய நிலையும், மணிவாசகராக மாறிய, புதிய நிலையும் இரண்டு துருவங்கள்போல் அவருக்குக் காட்சியளிக்கின்றன. எங்கோ இருந்த நான், இப்பொழுது இந்த நிலையை எப்படி அடைந்தேன் என்று வியக்கின்றார். இக்கருத்தே பாடலின் முதலிரண்டு அடிகளில் பேசப்பெறுகிறது.

அமைச்சராக இருந்தபொழுதேகூட, சிறந்த பக்தராகிய இவர், ஆலவாய்ச் சொக்கன்மேல் அன்பு பூண்டு அவனே யாவர்க்கும் தலைவன் என்று எண்ணியிருந்தது உண்டு. பதவிக்கேற்பப் பல துறைகளில் ஈடுபட்டிருந்த இவருடைய சிந்தை என்பது, நாயகன்பற்றிய நினைவில் எவ்வளவு தூரம் தோய்ந்தது என்று சொல்வதற்கில்லை. ஆனால், ஆட்கொள்ளப்பட்ட பிறகு அதே உள்ளம் முற்றிலுமாக நாயகனிடம் ஆட்பட்டுவிட்டது. இக்கருத்தையே 'தாழ் சடையோன் ஆண்டிலனேல் நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம்' என்று பாடுகிறார்.

இவர் ஆட்கொள்ளப்பெற்றது திருப்பெருந்துறையிலாகும். திருப்பெருந்துறையில் அந்தண வடிவுடன் இருந்த குருநாதர் துறவுக் கோலத்தில்தானே இருந்தார்? அவர்தானே திருவடி தீட்சை செய்து ஆட்கொண்டார்? அப்படியிருக்கத் 'தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்' என்று பாடுவதன் நோக்கமென்ன?

அடிகளாருக்கு அகக் காட்சி, புறக் காட்சி என்ற இரு வகைக் காட்சிகளைக் குருநாதர் நல்கினார் என்று முன்னர்க் கூறினோமல்லவா? அது இங்கே நிறுவப் பெறுகிறது.

230. உள்ளப்படாத திருஉருவை உள்ளுதலும்
கள்ளப்படாத. களி வந்த வான் கருணை
வெள்ளப்பிரான், எம்பிரான், என்னை வேறே ஆட்
கொள் அப். பிரானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 16

உள்ளப்படாத–கரணங்களால் அறியமுடியாத. கள்ளப்படாத–வெளிப்பட்ட.

இப்பாடலின் முதலடி இறைவனை எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது.

இறைவனுக்கு நாம் கற்பிக்கும் வடிவை நம்முடைய எண்ணம், சொல், கற்பனை என்பவற்றுள் கொண்டுவர முடியும். ஆனால் அவ்வடிவு நாம் கற்பிக்கும் வடிவே தவிர அவனுடைய உண்மையான சொரூபமன்று. இதனையே, 'உள்ளப்படாத திருவுரு' என்கிறார். ஆனால் எண்ணம், சொல், கற்பனை மூன்றையும் கடந்து ஆழத்திலுள்ள அடிச்சித்தத்தில் அவனை உள்ளத் தொடங்கினால், அத்தகையவருக்கு ஒளிக்காமல் தன் சொரூபத்தைக் காட்டுவான் என்க.

'என்னை வேறே ஆட்கொள்ள' என்ற தொடரிலுள்ள 'வேறே' என்ற சொல் சிந்திக்கத்தக்கது. நூற்றுக் கணக்கானவர் உடனிருந்தும், என்னை அக்கூட்டத்தி லிருந்து தனியே பிரித் தெடுத்து ஆட்கொண்டான் என்ற கருத்தையே 'வேறே' என்ற சொல்லில் பெறவைக்கிறார்.

231. பொய் ஆய செல்வத்தே புக்கு அழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா என் ஆர் உயிரே அம்பலவா என்று அவன் தன்
செய் ஆர் மலர் அடிக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 17

பொய்யாய–அழிந்துவிடுவதாகிய. அழுந்தி–அதுவே நமக்கு எல்லாம் என்று எண்ணி.

இப்பாடலின் பொருள் வெளிப்படை.

232. தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசும் சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்து ஊதாய் கோத்தும்பீ 18

உமையொரு பாக வடிவத்தைக் கூறுவதாகும் இப்பாடல்.

233. கள்வன் கடியன் கலதி இவன் என்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தான் என் மனத்தே
உள்ளத்து உறு துயர் ஒன்று ஒழியாவண்ணம் எல்லாம்
தெள்ளும் கழலுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 19

கடியன்–கொடியன். கலதி–கீழ்மகன்.

'வள்ளல் தன்மை உடையவனாகிய இறைவன், நான் கள்ளமாகிய வஞ்சத் தன்மை உடையவன், உருகாத கடினச் சித்தம் உடையவன், தீக்குணமுடையவன் என்பதுபற்றி ஒரு சிறிதும் கவலையுறாமல் மெள்ள மெள்ள வந்து என் உள்ளத்துள் புகுந்தான்' என்றவாறு.

'வந்தொழிந்தான்' என்ற தொடர் வந்து தங்கி விட்டான் என்ற பொருளைத் தருவதாகும்.

பாடலின் மூன்றாம், நான்காம் அடிகள், வண்டைத் தூதாக அனுப்பும் முறையில் அமைந்துள்ளன. வண்டினிடம் என்ன சொல்லுகின்றார்? தம் மனத்திடை வந்து தங்கியவன் வந்தபோது வள்ளல் தன்மையோடு வந்தான்

என்றாலும், தங்கிய பிறகு தம்மைப்பற்றிக் கவலையே கொள்ளவில்லை என்கிறார்.

அடிகளாரின் உள்ளத்தில் ஒன்றிரண்டல்ல, எத்தனையோ துயரங்கள் குடிகொண்டுள்ளன. 'இவ்வளவு கருணையோடு வந்து தங்கியவன், உள்ளத்திலுள்ள நூற்றுக் கணக்கான துயரங்களில் ஒன்றைக்கூட ஒழிக்க முற்படாமல் இருப்பது என்ன நியாயம் என்பதை, ஏ வண்டே! அவன் திருவடிகளில் சென்று கூறுவாயாக' என்று முடிக்கின்றார்.

இப்பாடலில் ஓர் அழகு அமைந்துள்ளது. உள்ளத்தில் உற்ற துயர் ஒன்றைக்கூடப் போக்கவில்லை என்ற முறையீட்டைத் தலைவனிடம் சென்று சொல்லும்போது, அவன் காதுகளில் அல்லவா சொல்லவேண்டும், அதை விட்டுவிட்டுக் 'கழலுக்கு சென்றூதாய்' என்று கூறுவதன் நோக்கம் என்ன?

இந்த நோக்கம் இரு வகைப்படும். இவரை ஆட்கொண்டு மணிவாசகராக மாற்றியது குருநாதரின் திருவடியே ஆகும். தமக்குப் புனர்வாழ்வு அளித்த அத்திருவடியின்மேல் கொண்ட காதலால், திருவடியை உடையானிடம் சொல்ல வேண்டியதை 'திருவடியினிடமே சொல்லுக' என்று கூறுவது முதல் நோக்கம்.

இரண்டாவது ஒன்றுண்டு. மிகப் பெரிய அரசர்களிடம் தம் குறைகளைச் சொல்லச் செல்லும் குடிமக்கள் அரசரிடம் நேரிடையாகவோ அல்லது அவரின் காதின் பக்கத்திலோ சென்று சொல்ல முடியாது. அரசருடைய கால்அடியில்தான் குடிகள் நிற்கவேண்டும். குடிமக்கள் கூறுவதை அரசரிடம் எடுத்துச்சொல்லும் உரிமை அரச அலுவலர்களுக்கே உண்டு. அமைச்சராக

இருந்த அடிகளார் இதனை நன்கு அறிவார் ஆதலின், அவன் காதுகளின் பக்கத்தில் சென்று இந்த வண்டுகள் முறையிட்டுவிட வேண்டாம் என்று எச்சரிப்பவர்போலத் 'தெள்ளுந் சுழலுக்கே சென்றுரதாய்' என்று ஏகாரம் கொடுத்துப் பாடுகிறார்.

234. பூ மேல் அயனோடு மாலும் புகல் அரிது என்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய் மேல் தவிசு இட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீ மேனியானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ 20

பொருட்படுத்த–பொருளாகச் செய்த.

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் தனிச் சிறப்புடையன. மாலும் அயனும் அடியையும் முடியையும் தேடிச் சென்றனர். எப்படியாவது தேடிக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற உறுதிப்பாட்டோடு அப்பணியைத் தொடங்கினர். ஆனாலும், அம்முயற்சி வெற்றிபெறவில்லை.

'ஏமாறி நிற்க' என்ற தொடர் ஆழமான பொருளுடையது. ஏமாறும் செயல் எப்பொழுது நிகழும்? ஒன்றை எதிர்பார்த்து இருந்தவனுக்கு அது கிடைக்காத போது ஏமாற்றம் ஏற்படும். நான்முகனும் மாலும் தங்கள் அகந்தை காரணமாக எப்படியாவது முடியையும் அடியையும் கண்டுகொள்வோம் என்று எதிர்பார்த் திருந்தனர். ஆனாலும், கடைசியில் ஏமாற்றமே எஞ்சியது.

'அடியேன் இறுமாக்க' என்றதால் இவர்களோடு ஒப்பவைத்துத் தம்மை எண்ணி, அவர்களுக்குக் கிட்டாதது தமக்குக் கிட்டியது என்ற கருத்தில் இறுமாந்தார் என்று பொருள் கொள்வது அவ்வளவு பொருத்தமுடையது

அன்று. அடிகளார் பயன்படுத்திய இறுமாப்பு என்ற சொல். வெற்றியால் பெற்ற கர்வம் என்ற பொருளைத் தராது; இங்கே இறுமாக்க என்ற சொல் பெருமிதம் என்ற பொருளையே தந்துநிற்கும். நாவரசரின் 'இறுமாந்திருப்பன் கொலோ' என்ற தொடருக்கும் இவ்வாறே பொருள் கொள்ள வேண்டும்.

அயனும் மாலும் இம்முயற்சியில் தோற்றார்கள் ஆயினும், அவர்கள் பெருமையைக் குறைக்க விரும்பாத அடிகளார் 'பூமேல் அயனொடு மால்' என்றார். அவர்களுக்குக் கிட்டாத ஒன்று தமக்குக் கிட்டியிருப்பினும் அதனால் கர்வம் கொள்ளாமல் 'அடியேன்' என்ற சொல்லால் தம்மைக் குறிக்கின்றார்.

அகந்தை இல் வழி அவர்கள் இருவருக்கும் கிடைத் திருக்கவேண்டிய திருவடிப் பேறு, தகுதியில்லாத தமக்குக் கிடைத்ததை 'நாய்மேல் தவிசிட்டு' என்றார்.

ॐ ॐ ॐ

11. திருத்தெள்ளேணம்

[சிவனோடடைவு]

திருக்கோத்தும்பியை அடுத்துள்ள இருபது பாடல்கள் 'தெள்ளேணம் கொட்டாமோ' என்று முடிவதால், இப்பகுதிக்குத் திருத்தெள்ளேணம் என்று தலைப்புத் தரப்பெற்றுள்ளது. தெள்ளேணம் என்பதன் பொருள் நன்கு விளங்குமாறில்லை. 'அதெந்துவே' (திருவாச: 458) என்பது போன்ற பல புதிய சொற்கள் திருவாசகத்தில் இடம்பெற்றுள்ளன.

தெள்ளுதல் என்ற சொல் இன்றும் கிராமப்புறங்களில் வழங்கிவருகிறது. அரிசியில் கலந்துள்ள கல்லைப் போக்குவதற்கு, அதனை முறத்தில் கொட்டி, இரண்டு கைகளாலும் முறத்தைப் பிடித்துக்கொண்டு, இடமும் வலமுமாக அசைத்தலை, நேம்புதல், கொளித்தல், தெள்ளுதல் ஆகிய பல சொற்களால் கிராமத்தார் இன்றும் கூறுகிறார்கள். இது புடைத்தலிலும் மாறுபட்டது. புடைத்தல் மேலும் கீழுமாக முறத்தை ஆட்டுவதாகும். அவ்வாறு புடைக்கும்போது அரிசியுடன் சேர்ந்துள்ள பதர், உமி என்பவை இந்த அசைவின் விளைவாக முறத்தின் முன்னே தள்ளப்படும்.

அடிகளார் தெள்ளேணம் என்று பாடியுள்ள பகுதி, அப்பாடலின் ஓசை நயம்பற்றிக் கொடுக்கப்பட்ட தலைப்போ என்று ஐயுறவேண்டியுள்ளது. உரலில் விழும் உலக்கை இடிக்கேற்ப, ஒரு சந்தம் அமைத்துப் பொற்சுண்ணப் பாடல்களைப் பாடியதுபோலக் குறிப்பிட்ட ஓர் இசையை அடிப்படையாகக் கொண்டு தெள்ளேணம் பாடப்பட்டதுபோலும்.

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
(திருவாச: 235)

கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
(திருவாச: 244)

என்று வரும் பகுதிகள் இந்த ஓசையை நினைவூட்டுகின்ற எடுத்துக்காட்டுகளாகும். ஒவ்வொரு சீருக்கும், இடப்புறமோ வலப்புறமோ முறம் அசைவதைக் கற்பனையில் காணலாம். தெள்ளேணம் என்ற சொல்லுக்கு முந்தையோர் கூறிய உரையையும் தழுவி எழுதப்பெற்றதாகும் இப்பகுதி.

தெள்ளேணம் என்றுமட்டும் சொல்லாமல் 'தெள்ளேணம் கொட்டாமோ' என்று அடிகளார் கூறுவதால் மனத்தில் ஒரு நெருடலை இத்தொடர் உண்டாக்கிற்று. இதேபோலத் 'தோணோக்கம்' என்ற சொல்லைமட்டும் பயன்படுத்தாமல் 'தோணோக்கம் ஆடாமோ' என்று கூறுவதால், அது இடம் பெயர்ந்து ஆடும் ஒருவகை ஆட்டம் என்ற கருத்தைத் தோற்று விக்கின்றது. அதேபோலத் தெள்ளேணம் என்ற சொல்லைத் தனியே வைத்துக்கொண்டுதான் மேலே கூறிய முறையில் பொருள் காணப்பெற்றது. அதனாலேயே தெள்ளுதல், புடைத்தல் முதலிய கருத்துக்கள் இடம்பெற்றன.

ஏணம் கொட்டுதல் என்ற இரண்டு சொற்களையும் சேர்த்துப் பொருள்கொண்டால் கையில் அடித்து வாசிக்கும் சிறு பறை என்ற பொருளைத் தருமோ என்று எண்ணத்தோன்றுகிறது. கொட்டுதல் என்ற சொல்லுக்குக் கையாலோ அல்லது கம்பாலோ அடித்து வாசித்தல் என்ற பொருளே உண்டு.

பிற்காலப் பிள்ளைத் தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் சிறுபறைப் பருவத்தில் 'சிறுபறை முழக்கி அருளே' என்றுவரும் பகுதிகள் அடிகளாரின் 'தெள்ளேணம் கொட்டாமோ' என்பதிலிருந்து தோன்றியன

போலும். பெண்கள் அடித்து வாசிக்கும் கருவிக்குத் தெள்ளேணம் என்ற தனியான பெயர் இருந்திருக்கும் போலும். எனவே, பெண்களுக்குரிய வாத்தியமாக அது அமையும்போது, தெள்ளேணம் என்றும் ஆண்களுக்கான வாத்தியமாக அமையும்போது, சிறுபறை என்றும் வெவ்வேறு பெயர்களைப் பெற்றிருக்கலாம்.

ஏணம் (பாத்திரம்) என்ற சொல் ஏன என்று இரண்டு சுழி னகரத்தைப் பெற்றுவருவது காலாந்தரத்தில் ஏற்பட்ட மாறுதலாகும்.

பொதுவாக எந்த ஏனமும் அடிப்பகுதி மூடப்பெற்று மேற்பகுதி திறந்திருக்கும். இது சிறு பறையாகச் செய்யப்பெறும்போது அடிப்பகுதி திறந்திருக்க மேற்பகுதி பதப்படுத்தப்பட்ட மெல்லிய தெளிவான தோலால் மூடப் பெற்றிருத்தலின் 'தெள் ஏணம்' எனப் பெயர் பெற்றது போலும்.

சிறுபறை போன்ற கருவியைக் கையில் வைத்துக் கொண்டு, அதனைக் கையால் தட்டி வாசித்தலையே தெள்ளேணம் கொட்டாமோ என்று அடிகளார் பாடியுள்ளார் என்று பொருள்கொள்வது ஒரு புதிய சிந்தனையாகும்.

திருவாசகத்தின் பல பகுதிகளை, சிறுமியரின் விளையாடல்களை மனத்துட்கொண்டு, அடிகளார் பாடியுள்ளார் என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். மிக உயர்ந்த கருத்துடைய அனுபவப் பிழிவான பாடல்களை, மிக எளிய சொற்களில், சிறுமியர்க்கு முன்னரே பழக்கப்பட்ட இசையமைப்பில் தந்துள்ளமை அடிகளாரின் கருணைத் திறமாம். இத்தகைய இசையில் ஈடுபட்டு சாதாரணப் பொருளுள்ள பாடல்களை அல்லது பொருளே இல்லாத பாடல்களை அச்சிறுமியர் பாடி வந்தனர். அவர்கள் விளையாடும் விளையாட்டிற்கு

தெள்ளேணம், அம்மானை போன்ற பாடல்களின் அவற்றை விரும்பி பாடினர். இசையமைப்புப் பொருத்தமாக இருந்தமையின் அச்சிறுமியர்

இசையமைப்பில் ஈடுபாடு கொண்டு பாடும் சிறுமியர் மிக உயர்ந்த கருத்துள்ள திருவாசகப் பாடல்களை, அடிக்கடி பாடுவார்களேயானால் நாளாவட்டத்தில் அவர்களையும் அறியாமல் பாடல் கருத்துக்கள் அவர்கள் மனத்தில் சென்று தங்கிவிடும். காலம் செல்லச் செல்ல இக்கருத்துக்கள் அவர்கள் வாழ்க்கையையே ஓரளவு மாற்றும் ஆற்றல் உடையன. அவ்வாறு அவர்கள் பயன் பெறும்போது அடிகளாரின் குறிக்கோள் நிறைவேறி விடுகிறது.

235. திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராத் திருவடியை
உரு நாம் அறிய ஓர் அந்தணன் ஆய் ஆண்டுகொண்டான்
ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 1

இப்பாடலின் முன்னிரண்டு அடிகளும், பின்னிரண்டு அடிகளும் முரண்பட்ட பொருள்களைத் தருவனவாகும். முதலடி திருமால் வராக அவதாரம் எடுத்து, மண்ணைப் பிளந்துகொண்டு காண முற்பட்டபோதும் காணமுடியாமல், அதனினும் கீழே சென்ற திருவடி என்பதாகும்.

திருவடியைத் திருமாலேகூடக் காணமுடியவில்லை. காணமுடியாத திருவடிக்கு வடிவு கற்பித்தல் இயலாத காரியம். எனவே, அத்திருவடி எத்தகையது? என்ன வடிவும், என்ன நிறமும் பெற்றிருந்தது என்ற வினாக்களுக்கு இடமேயில்லை. திருமாலாலும் காணமுடியாத திருவடி, தன் வடிவைச் சுருக்கிக்கொண்டு அடிகளார் அறியும்படி காட்சி தந்தது.

இங்குப் பயன்படுத்தப்பெற்ற 'அறிய' என்ற சொல்லைச் சிந்தித்தல் வேண்டும். காண்டல் வேறு, அறிதல் வேறு. 'உரு நாம் காண' என்று பாடியிருக்கலாம். அப்படியில்லாமல் 'உரு நாம் அறிய' என்று சொல்லியதன் நோக்கமென்ன? 'கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை' (திருவாச:372) என்று பாடியுள்ளாரே! திருவடியைக் காணலாமே தவிர அதன் இயல்பை அறியமுடியாது என்றுதானே இவ்வடியில் கூறியுள்ளார்?

அப்படியிருக்க, 'உரு நாம் அறிய' என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? சற்று நின்று நிதானித்தால் ஓரளவு இதனை விளங்கிக்கொள்ள முடியும். 'உரு நாம் அறிய ஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்' என்பதுதானே அடிகளாரின் வாக்கு? குருநாதர் ஓர் அந்தண வடிவங் கொண்டு குருந்த மரத்தடியில் இருந்ததைத்தானே கண்டார்? 'நாமறிய' என்ற சொல்லைத் தனியே எடுத்துவிட்டு, ஓர் அந்தணனாய் உரு ஏற்று (வடிவெடுத்து) ஆண்டு கொண்டான் என்று கூறினால், பெருந்துறையில் நிகழ்ந்த புற நிகழ்ச்சியைக் கூறியதாகும். இது அடிகளாரின் காட்சி அளவையில் முற்பகுதியில் நடைபெற்ற ஒன்றாகும்.

ஒரு சில விநாடிகளில், அந்தண வடிவம் மறைந்து, உமையொருபாகன் அகக் காட்சி தந்தான் அல்லவா? அந்த அடிப்படையில்தானே அடிகளார், புவனியில் சேவடி தீண்டிய குருநாதரைச் சிவனெனத் தேறினார்? (திருவாச:3-61). ஆக, குருநாதர் வடிவில் மறைந்திருக்கும் மூலப் பொருளை புறக் கண்களால் காணாவிடினும் அகக் கண்ணால் கண்டார் அன்றோ! அதனாலேயே 'அந்தண உரு(வை) நாம் அறிய' என்று கூறினார்.

இப்படி வடிவும் உருவும் கூறிய பிறகு, அடுத்த அடியில் 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாதவன்' என்பது எப்படிப் பொருந்தும்?

வடிவு என்பது தூரத்தே உள்ளே ஒருவரை மனிதன் என்ற அளவில் அறிந்துகொள்வதாகும். உருவு என்பது குறிப்பிட்ட இன்னார் என்று அறிந்து கொள்வதாகும்.

திருமால் காணமுடியாத வடிவு, இப்பொழுது அந்தணக் கோலத்தில் காட்சியளிக்கிறது. புறக் கண்களால் அவ்வடிவைக் கண்டுகொண்டிருக்கும்போதே, அகக் கண்கள் உமையொரு பாகனைக் காண்கிறது. அடுத்த சில கணங்களில் அதையும் கடந்து அண்டமும் சிறிதென்னும் படியாகப் பெரியவனாக நிற்கும் நிலை தெரிகிறது. அடுத்த சில கணங்களில் 'இல் நுழை கதிரின் துன் அணுப் புரைய'ச் (திருவாச:3-5) சிறிய வடிவம் காட்சியளிக்கிறது. அப்படியானால் இதில் எது அவன் வடிவம்?

பல்வேறு வடிவுகளில் உள்ள இப்பொருளுக்கு என்ன பெயர் கொடுப்பது? எந்தப் பெயர் அல்லது எந்த வடிவம் கொடுத்தாலும் அதனுள்ளும் அதனைக் கடந்தும் நிற்கின்ற பொருளுக்கு என்ன பெயர் கொடுப்பது? எந்த வடிவைக் கற்பிப்பது?

இத்தனை வடிவங்களைக் கண்டாரே, அவற்றுள் எது அவனுடைய உண்மையான வடிவம்? எல்லாவற்றையும் ஊடுருவியும் கடந்தும் நிற்கும் பொருளுக்கு, எந்தப் பெயர் கொடுத்தாலும் பொருந்தும் என்ற உண்மையை உணர்ந்த அடிகளார் 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி, நாம் தெள்ளேணம் கொட்டாமோ' என்கிறார்.

'திருமால் பன்றியாய் சென்று உணராச் சேவடி' என்றது காண்பேன் என்ற எண்ணத்துடன் அவன் தருக்கிச் சென்றமையைக் குறிக்கின்றது. எனவே அவன் காணுமாறில்லை. காணவே முடியாத அந்தப் பொருளை உணர்தல் எங்ஙனம்? எனவே 'உணராச் சேவடி' என்றார்.

236. திரு ஆர் பெருந்துறை மேய பிரான் என் பிறவிக்
கரு வேர் அறுத்தபின் யாவரையும் கண்டது இல்லை
அரு ஆய் உருவமும் ஆய பிரான் அவன் மருவும்
திருவாரூர் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 2

இப்பாடலில் இரண்டாவது அடியில் வரும் 'யாவரையும் கண்டதில்லை' என்ற தொடர் சிந்தனைக்குரியது. 'பெருந்துறை மேய பிரான்' பிறவிப்பிணியை அடியோடு களைந்தான். அது போனபிறகு இந்த உடலும், அதிலுள்ள கருவி கரணங்களும் இறையனுபவம் ஒன்று தவிர வேறு எதிலும் ஈடுபடவில்லை. கண்கள் எதிரே உள்ளவற்றைக் காண்கின்றன. காண்கின்றன என்று சொல்வதுகூடச் சரியில்லை. எதிரே உள்ள பொருட்கள் கண்ணில் படுகின்றன. ஆனால், அவை யாவை என்று பகுத்தறியும் மனநிலை போய்விட்டதால், பொருள்களை இனங்காணும் சூழ்நிலை அங்கு இல்லை.

பெரிய மகான்களுடைய கண்களைப் பார்த்தவர்களுக்கு இது நன்கு விளங்கும். அக்கண்கள் எதிரே உள்ள நம்மைப் பார்ப்பதுபோல் தோன்றினாலும் உண்மையில் அவர்கள் நம்மைப் பார்ப்பதில்லை. எங்கோ சென்று லயித்திருக்கின்ற மனம், கண்ணாகிய பொறியுடன் சேராததால், அந்தப் பார்வை சூனியப் பார்வையாக ஆகிவிடுகிறது.

திருவாதவூராராக இருந்தவரையில், அரசன் முதல் அனைவரையும் இனங் கண்டுகொண்டிருந்தார் அடிகளார். பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு எதிரே உள்ளதை இனங் காணும் சக்தி அவரைவிட்டுப் போய்விட்டது. திருவாதவூரரின் பிறவியின் மூலத்தைப் பெருந்துறையான் வேரோடு அறுத்துவிட்டான் அல்லவா? அந்தப் பழைய பிறவியில் உடம்போடு சேர்ந்திருந்த இப்பொறி, புலன்கள் இப் புதுப்பிறவியில் தமக்குரிய பழைய பணிகளைப் பல

நேரங்களில் செய்யவில்லை. அதனையே 'கருவோர் அறுத்தபின் யாவரையும் கண்டதில்லை' என்று பாடுகின்றார்.

யாவரையும் என்று உயர்திணை வாய்பாட்டால் கூறினாரேனும் யாவையையும் என்ற அஃறிணையும் அதனுள் அடங்கும்.

237. அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்து அன்றி நின்ற சிவம் வந்து நம்மை
உருக்கும் பணி கொள்ளும் என்பது கேட்டு உலகம் எல்லாம்
சிரிக்கும் திறம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 3

தெரித்தல்-அறிவித்தல்.

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் இறைவனது மிக்குயர்ந்த நிலையையும், மிகுதியும் எளிவந்த நிலையையும் அடுத்தடுத்துப் பேசுகின்றன. 'நின்ற சிவம்' என்ற சொல் சிந்தனைக்குரியது. ஒரு பொருள் ஆடிக்கொண்டோ அசைந்துகொண்டோ ஓடிககொண்டோ இருக்குமாயின், அதன் இயல்பை முழுதுமறிதல் கடினம். அவ்வாறின்றி ஓர் இடத்தில் அப்பொருள் அசையாது நிற்பின் அதனைப் பெரிய அளவில் அறிந்துகொள்வது எளிது.

எவ்வித அசைவும் இல்லாமல் நின்றுகொண்டிருக்கின்ற ஒரு பொருளை அரி, பிரமன், தேவர்கள் ஆகியோர் (எத்தகையது) என்று தெரிந்துகொள்ளாமற்போனது வியப்பே ஆகும். இதனை உலகோர் நன்கறிவர்.

அப்படி அசையாது நின்ற பொருள், இப்பொழுது ஒரு மனிதரைத் தேடிவந்து, அவருடைய மனத்தை உருக்கிப் பணிகொண்டது என்பதைக் கேட்ட உலக மக்கள், சிரிப்பதில் ஒன்றும் வியப்பில்லை அல்லவா?

சிரிப்பிற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அரிக்கும் பிரமற்கும் அரிய சிவம், ஒரு மனிதரை ஆட்கொண்டது என்றால் சிரிப்பிற்கு அது முதற் காரணம். 'நின்ற' சிவம் வந்து உருக்கிப் பணிகொண்டது என்பது இரண்டாவது காரணம்.

238. அவம் ஆய தேவர் அவ கதியில் அழுந்தாமே
பவ மாயம் காத்து என்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவம் ஆய செம் சுடர் நல்குதலும், நாம் ஒழிந்து
சிவம் ஆனவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 4

அவமாய-பயனற்ற. அவகதி-கீழ்நிலை. பவமாயம்-பிறவிக்கு ஏதுவாகிய வஞ்சனை. நவம்-புதுமை.

எத்துணை உயர்ந்த தேவர்களும் பிறவிப் பெருங்கடலை நீந்தாதவரே ஆவர். அப்படியிருக்க, சாதாரண மனிதராகிய தம்மை, பரஞ்சோதி இழுத்து, பிறவாமல் காத்து, தன் அருட் சுடரில் ஒரு பகுதியைத் தந்ததால், அடிகளார் தம் மாத்திரையில் அரை மாத்திரை குறுகியதாகச் சொல்கிறார். அதாவது சிவன் சிவனான வரலாறு இதுவேயாகும்.

239. அருமந்த தேவர் அயன் திருமாற்கு அரிய சிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பு எய்தக் கொண்டருளிக்
கரு வெந்து வீழக் கடைக்கணித்து என் உளம் புகுந்த
திரு வந்தவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 5

திரு-சிவஞானத் திரு.

'தேவர் அயன் திருமாற்கு அரிய 'சிவன்' ஒரு வடிவு கொண்டு, அவ்வடிவைக் கண்டோர் மகிழ்ச்சியடைய பூதலத்தே வந்தான். அத்தகைய ஒருவன் அடிகளாரை இனிப்பிறவாமல் காத்தான்.

திருப்பெருந்துறையில் வடிவுடன் அவர் வந்தார்; அவரைக் கண்டோர் பன்னூற்றுவர் ஆயினும், அந்தக் குருநாதர் 'கருவெந்து வீழக் கடைக்கணித்தது' அடிகளார் ஒருவரையே ஆகும்.

240. அரை ஆடு நாகம் அசைத்த பிரான் அவனியின்மேல்
வரை ஆடு மங்கைதன் பங்கொடும் வந்து ஆண்ட திறம்
உரை ஆட உள் ஒளி ஆட ஒள் மா மலர்க் கண்களில் நீர்
திரை ஆடுமா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 6

அசைத்த-கட்டிய.

இப்பாடலின் இறுதிப் பகுதி திருப்பெருந்துறை நிகழ்ச்சியை ஆறு சொற்களில் வடித்துக் கூறுகிறது. அவையாவன உரை ஆட, உள்ளொளி ஆட, (கண்களில்) நீர்த்திரை ஆட என்பவையாம்.

உரையாடல் என்றால் இருவர் தம்முள் பேசிக் கொள்ள வேண்டும். ஆனால், திருப்பெருந்துறையில் குருநாதர் மட்டுமே பேசினார்; அதுவும் மூன்று வார்த்தைகள்தான் பேசினார். அவை 'கோலமார்தரு பொதுவினில் வருக' (திருவாச:2-128)என்ற சொற்களேயாம். இந்த மூன்று சொற்களும் அடிகளாரின் மும்மலத்தையும் ஒரே விநாடியில் சுட்டெரித்துவிட்டன. அதன் பயனாக (சித்தத்தின்) 'உள்ளே ஒளியாடத்' தொடங்கியது. அதன் பயனாகக் கண்களில் 'நீர்த் திரையாடத்' தொடங்கியது. இப்பொழுது ஓர் ஐயம். குருநாதரின் வார்த்தைகள் அடிகளாரின் கண்ணீரை வரவழைத்தனவா? இல்லை என்று உறுதியாகக் கூறலாம். 'பொதுவினில் வருக' என்ற சொற்கள் ஓர் ஆணையாக அமைந்தனவே தவிர, உணர்ச்சியைத் தூண்டிக் கண்ணீரை வரவழைக்கும் சொற்களல்ல அவைகள். அப்படியானால் கண்ணீர் வருவதற்குக் காரணம் உள்ளொளியே என்க.

241. ஆ ஆ அரி அயன் இந்திரன் வானோர்க்கு அரிய சிவன்
வா வா என்று என்னையும் பூதலத்தே வலித்து ஆண்டு
கொண்டான்
பூ ஆர் அடிச்சுவடு என் தலைமேல் பொறித்தலுமே
தே ஆனவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 7

யாவர்க்கும் அரிய சிவம் பூதலத்தே வந்தது ஒரு புதுமை. வழியோடு சென்றவரை வலிந்து ஆட்கொண்டது மற்றொரு புதுமை; ஆட்கொண்டபின் பூவார் திருவடியை அடிகளாரின் தலைமேல் சூட்டியது மூன்றாவது புதுமை. இந்த மூன்றைவிட அதிகம் சிறப்புப் பெறுவது அடிசூட்டப் பெற்றவுடன் திருவாதவூரர் 'தே ஆனார்' என்பதாகும். தே என்பது தெய்வம் என்ற பொருளை உடையது; இங்கே சிவத்தைக் குறித்தது.

242. கறங்கு ஓலை போல்வது ஓர் காயப் பிறப்போடு இறப்பு
என்னும்
அறம் பாவம் என்று இரண்டு அச்சம் தவிர்த்து என்னை
ஆண்டுகொண்டான்
மறந்தேயும் தன் கழல் நான் மறவாவண்ணம் நல்கிய அத்
திறம் பாடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 8

கறங்கோலை-பனையோலைக் காற்றாடி.

சிறுவர்கள் கையில் வைத்து விளையாடும் ஓலைக் காற்றாடியில் காற்றுப் பட்டவுடன் நான்கு, பக்கமும் நீட்டிக்கொண்டிருக்கும் ஓலை, வெகு வேகமாகச் சுழல ஆரம்பிக்கும். இந்த நான்கில் ஒரு பக்கத்து ஓலையைப் பார்த்தால் அது ஒரு விநாடி கீழேயும் அடுத்த விநாடி மேலேயும், அதற்கு அடுத்த விநாடி கீழேயும் மாறிச் மாறிச் சுழன்று வரும். இந்தக் காற்றாடியை (ஓலையை)க் கையிலுள்ள குச்சியோடு பொருத்தியிருக்கும் முள் அல்லது ஆணி, எவ்வித அசைவும் இல்லாமல் அப்படியே இருக்கும்.

கையிலுள்ள குச்சியும் அப்படியே இருக்கும். ஆனால், இதன்மேலுள்ள காற்றாடி ஆகிய ஓலை தான்மட்டும் சுற்றுகிறது. அதுபோல ஆன்மா என்பது குச்சியைப் போலவோ அதில் செருகப்பட்ட முள்ளைப் போலவோ இருக்கிறது. அதற்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை. குச்சியின்மேலுள்ள (ஓலை) காற்றாடியைப் போன்றது உடம்பின் தோற்றமும் மறைவும்.

இந்தக் காற்றாடி சுற்றவேண்டுமேயானால் அதன்மேல் காற்று அடிக்க வேண்டும். அதேபோலப் பிறப்பும் இறப்பும் மாறிமாறி வரவேண்டுமானால் அறம் அல்லது பாவம் என்ற காற்றுத் தேவைப்படுகிறது. அறம், பாவம் என்பவற்றைப் ஒரு பிறப்பில் செய்தோர், அதற்கேற்ற மறுபிறப்புப் பெறுவர்.

அறம் செய்தவர் மறுபிறப்பில் பெருஞ்செல்வராக வாழ்வர் என்று நினைப்பதும் பேசுவதும் பெருந்தவறு. அறம் செய்தவர் மறுபிறப்பில் நல்ல பண்பும், அமைதியான மனமும், ஆன்ம முன்னேற்றமும் உடைய வாழ்வைப் பெறுவர் என்பதே கருத்தாம். என்றாலும், இந்த அறமும் பிறவிக்கு வித்தாகலின் அதுவும் அச்சத்திற்குரியது என்கிறார் அடிகளார்.

இரண்டாம், மூன்றாம் அடிகளில் இரண்டு கருத்துக் களைக் கூறுகின்றார் அடிகளார். முதலாவது பிறப்பு, இறப்பு என்பவற்றால் ஏற்படும் அச்சத்தைக் குருநாதர் போக்கினார் என்பது. இரண்டாவது, இப்பொழுது எடுத் துள்ள பிறப்பு முடிகின்றவரை என்ன செய்யவேண்டும் என்பதையும் அந்தக் குருநாதர் அருளினார் என்பது. அதாவது இப்பிறப்பில் 'மறந்தேயும் தன் கழல் நான் மறவாவண்ணம் நல்கி'னான் என்பதாகும்.

எவ்வளவு உயர்ந்த நிலையிலும் மனித மனத்திற்கு உள்ள சில இயல்புகளை எளிதாகப் போக்கிவிட முடியாது.

அந்த் இயல்புகளுள் ஒன்று, எந்த ஒன்றிலும் நிலையில்லா மல் தாவித் திரிதலாகும். குருநாதர் எவ்வளவுதான் அருள் செய்திருந்தாலும், அவர் மறைந்த பிறகு பல்லாண்டுகள் வாழ்ந்த மணிவாசகர் மனம், ஒரோவழி அந்த அருளிப் பாட்டை மறந்துவிடுதல் இயல்புதானே? அப்படி மறவாமல், ஒரு கணமும் திருவடியின்மேலுள்ள நினைவு நீங்காமல் இருக்குமாறு அருளிச்செய்தார் குருநாதர். அதனையே 'மறந்தேயும் தன் கழல் நான் மறவாவண்ணம் நல்கி'னான் என்கிறார்.

243. கல் நார் உரித்து என்ன, என்னையும் தன் கருணையினால்
பொன் ஆர் கழல் பணித்து ஆண்ட பிரான் புகழ் பாடி
மின் நேர் நுடங்கு இடை செம் துவர் வாய் வெள் நகையீர்
தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டாமோ 9

கல் நார் உரித்தென்ன-கல்லில் நார் உரித்தாலொப்ப.

குருநாதர் தம் எல்லை மீறிய கருணையினால் என்னையும் ஆண்டார். எவ்வாறு ஆண்டார்? தம் திருவடிகளைத் தந்து (பணித்து) ஆண்டார் என்கிறார்.

இதைமட்டும் கூறியிருந்தால் அத்திருவடிகளைப் பெறுதற்குரிய தகுதி அடிகளார்மாட்டு இருந்தது என்று நினைக்கத் தோன்றும். திருவடிகளைப் பெறும் தகுதி தம்மாட்டு இல்லாதிருப்பினும், குருநாதர் கருணை காரணமாக அதனைத் தந்தார் என்று கூறிவிட்டார்.

ஆனாலும் ஒரு சிக்கல் தோன்றுகிறது. குருநாதர் கருணை காரணமாகத் திருவடியைத் தந்திருக்கலாம். அந்தத் திருவடி வந்து தங்குவதற்குரிய நிலைக்களம் அடிகளார்பால் இல்லையானால் குருநாதர் கொடை, பயனற்றுப் போயிருக்கும். இதே கருத்தை 'மழக் கையிலங்கு பொற் கிண்ணம் என்றலால், அரியை என்று உனைக் கருதுகின்றி லேன்' (திருவா:96) என்று முன்னரே அடிகளார் பாடியுள்ளார்.

சிறந்த விவசாயி தேர்ந்தெடுத்த விதைநெல்லை விதைப்பதற்கு முன்னர், நிலத்தை உழுது பண்படுத்துகிறான் அல்லவா? இதனைச் செய்யாவிடின் விதையின் சிறப்பு வெளிப்பட வாய்ப்பில்லை.

எனவே, தம் திருவடிகளை தருவதற்கு முன்னர், குருநாதர் அடிகளாருடைய உள்ளத்தைப் பண்படுத்தினார். அதனைக் கூறவந்த அடிகளார், இரண்டு சொற்களில் அக் கருத்து முழுவதையும் பேசிவிடுகிறார். 'கல்நார் உரித் தென்ன' என்ற சொற்கள் ஆழமான பொருளுடையவை. கல்போன்றிருந்தது அடிகளாரின் நெஞ்சம். அக்கல்லில் நார் உரிப்பதுபோல் அந்த நெஞ்சத்திலுள்ள உருகாத தன்மை யைப் போக்கி, உருகும் தன்மையைத் தந்தார் குருநாதர். 'கல்லைப் பிசைந்து கனியாக்கினான்' (திருவாச:179) என்று முன்னரும் பேசியுள்ளார்.

244. கனவேயும் தேவர்கள் காண்பு அரிய கணை கழலோன்
புன வேய் அன வளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப் பிடித்து ஆட்கொண்டவா நயந்து நெஞ்சம்
சின வேல் கண் நீர் மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ 10

கனலேயும்-கனவிலும். புன வேய் அன்ன-காட்டு மூங்கிலை ஒத்த. நனவே-நல்ல விழிப்பு நிலையிலேயே. சினவேல் கண்-சிறிய வேல் போன்ற கண்கள்.

திருப்பெருந்துறையில் இருந்தவர் குருநாதர். ஆண் வடிவில் இருந்த அவர், புறக்கண்ணுக்குத் தோற்றம் அளித்தாரே தவிர அடிகளாரின் அகக் கண்களுக்கு அவர் தட்டுப்படவில்லை. அதற்குப் பதிலாக உமையொரு பாகன் அங்கே காட்சியளித்தான். 'ஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்' (திருவாச:235) என்று ஓரிரு இடங்களில் கூறினாரேனும் ஏனைய இடங்களில் எல்லாம் இறைவியோடு வந்து தம்மை ஆண்டதாகவே அடிகளார்

கூறிச்செல்கிறார். 240ஆம், 243ஆம் பாடல்கள்போல், இப் பாடலும் அதனை எடுத்துக்காட்டுகின்ற ஓர் இடமாகும்.

245. கயல் மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக் கலந்து
ஆண்டலுமே
அயல் மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு
அவனியின்மேல்
மயல் மாண்டு மற்று உள்ள வாசகம் மாண்டு என்னுடைய
செயல் மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 11

'கயல் மாண்ட கண்ணிதன் பங்கன்' என்பதற்கு, கயல் மீனைப் போன்ற மாட்சிமைப்பட்ட கண்களை யுடைய இறைவியின் பங்கினன் என்பது பொருளாம். அன்றியும் மற்றொரு பொருளும் இதற்குண்டு. மீன்கள் நூற்றுக்கணக்கான முட்டைகளை இட்டு, சற்றுத் தூரத்தே சென்று, அம்முட்டைகளைத் திரும்பிப் பார்க்கும்போது குஞ்சுகள் வெளிப்படும் என்பது பழைய கால நம்பிக்கை. எனவே 'கயல்மாண்ட கண்ணி' என்பதற்குக் கயல் மீனைப்போலக் கோடிக்கணக்கான உயிர்களைத் தன் அருட்பார்வையினால் படைக்கும் கண்ணினை உடையாள் என்றும் பொருள் கொள்ளலாம்.

அடுத்துள்ள மூன்று அடிகளும் மிக ஆழமான பொருளுடையவையாம்.

கண்ணிதன் பங்கன், திருவாதவூரரை அவருடைய பெயர் முதலியவற்றை நீக்கி, மணிவாசகராக்கி, அவர் உட்புகுந்து முற்றிலுமாக ஆட்கொண்டுவிட்டான். அவ்வாறு அவன் ஆட்கொண்டவுடன் சற்றும் எதிர்பாராத பல நிகழ்ச்சிகள் ஒரே நேரத்தில் நடைபெற்றன. அவை யாவை என்று அடிகளார் விளக்குகின்றார்.

முதலாவது நிகழ்ச்சி குருநாதர், அயலாக இருந்த வாதவூரர் என்ற இருவராக இருந்த நிலை நீங்கி,

குருநாதரின் திருவடிகளில் வாதவூரர் மறைந்துவிட்டார் என்பதாம். இது 'அயல் மாண்ட' தாகும்.

வாதவூரர் என்று இருக்கும்போது எண்ணிலடங்காச் சுற்றம் இருந்தது. அந்தச் சுற்றமும் இரு வகைப்படும் முதலாவது பழவினை காரணமாக வந்த தாய், தந்தை, உடன்பிறந்தார் முதலிய சுற்றங்களாகும். இரண்டாவது வகை, பதவி காரணமாக வந்த அரசர், உடன் பணிபுரிவோர், ஆணையின்கீழ்ப் பணிபுரிவோர் எனப்படும் சுற்றமாகும்.

'அருவினை' என்பது இருவகையாகப் பொருள் கொள்ளப்படும். மிகப் பழைய வினையின் விளைவாக வந்த சுற்றம் என்பது ஒரு பொருள். இந்தச் சுற்றம் அடிகளார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர் வினைக்கு ஏற்ப வந்த சுற்றமாகும்.

அருவினை என்பது மிக உயரிய அமைச்சர் தொழில் என்ற பொருளையும் தந்து நிற்கும். இதனால் வரும் சுற்றம் மேலே விரிக்கப்பெற்றது.

'அவனியின் மேல் மயல் மாண்டு, மற்று உள்ள வாசகம் மாண்டு, என்னுடைய செயல் மாண்ட' என்பது அடுத்துள்ளதாகும். இங்குக் கூறப்பெற்றுள்ள மூன்றும் மனம், மொழி, மெய்களால் நிகழும் செயல்களாகும். உலகிலுள்ள பொருட்கள்மேல் பற்றுவைத்தல் மனத்தின் செய்லாகும். கிட்டாத பொருளாயினும், அதன்மேல் பற்று வைத்து, ஓயாது நினைந்து அவதிப்படுவது மனத்தின் செயலாகும்.

வாசகம் என்பது சொல். வள்ளுவரும்,

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்ப சொல்லின்கட் சோர்வு (குறள்:642)

என்ற குறளில் சொல்லால் விளையும் நன்மை தீமைகளை எடுத்துச் சொல்வதால், அதுவும் ஒழிந்தது என்ற கருத்தில் 'வாசகம் மாண்டு' என்றார்.

மனமும் மொழியும் போக, மூன்றாவதாக உள்ளது செயலாகும். மனம் ஈடுபட்டே செயல் நிகழ்கின்றது என்று கூறுவர். சில சமயங்களில் மனம் ஈடுபடாமலும் செயல் நடைபெறுவதுண்டு எனவே, மனம் ஈடுபட்டோ அல்லது ஈடுபடாமலோ நிகழும் செயலும் மாண்டது என்பார் 'செயல் மாண்டவா பாடி' என்றார்.

இங்கு அடிகளார் கூறியவற்றின் சிறப்பைச் சற்றுச் சிந்தித்தல் வேண்டும். ஓர் உயிர் உடம்பெடுத்து இந்நிலவுலகில் வாழ்கின்றவரை அருவினைச் சுற்றம் முதலியவை கூறியவை இருந்தே தீரும். இவை நீங்கவேண்டுமாயின் ஒரே வழி இவ்வுடம்பை விட்டு உயிர் நீங்க வேண்டும். இதனை அல்லாமல் மற்றொரு வழியும் உளது. அந்த ஒரு வழி இந்த உடம்புடன் இருக்கும்போதே இறைவனால் ஆட்கொள்ளப் படுவதாகும். அந்தத் திருவடி சம்பந்தம் கிடைத்துவிட்டால், மேலே கூறப்பெற்றுள்ளவை அவரைவிட்டுத் தாமே நீங்கிவிடும். இதில் வியப்பென்னவென்றால், திருவடி சம்பந்தம் பெற்றவரும். இந்த உடம்புடனேயே வாழ்வார். நம்மைப் போலவே அவருக்கும் பொறி புலன்கள் உண்டு; மனம் மொழி மெய் என்பவையும் உண்டு. என்றாலும், இவற்றுள் ஒன்றும் அவரைப் பாதிக்காது. இவற்றால் விளையும் பயன்கள் அவரை ஒன்றும் செய்வதில்லை. தாமரை இலைத் தண்ணீர், அந்த இலையின்மேல் இருந்தாலும், அதன்மேல் சுற்றிச் சுற்றி ஓடிவந்தாலும் இலையில் ஒட்டுவதில்லை. அதேபோலத் திருவடிசம்பந்தம் பெற்ற இவர்கள், உலகிடை வாழ்ந்தாலும் அதனிடைச் சுற்றிச்சுற்றி வந்தாலும், என்ன செய்தாலும் என்ன பேசினாலும் இவ்வுலகோடு ஒட்டி இரார். இதனையே அடிகளார் மாண்டு மாண்'டு என்ற சொற்களால் குறிப்பிட்டுள்ளார்.

246. முத்திக்கு உழன்று முனிவர் குழாம் நனி வாட
அத்திக்கு அருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி
தித்திக்குமா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 12

'அத்திக்கு அருளி அடியேனை ஆண்டுகொண்டு' என்றதால், ஒரு கை உடையதாகிய யானை (அத்தி)க்கு திருவானைக்கா, மதுரை, காளத்தி ஆகிய இடங்களில் அருள் செய்த பெருமான் இரு கை யானையை ஒத்திருந்த எனக்கும் அருள்செய்தான் என்றபடி.

ஆண்டுகொண்டதும் பக்திக் கடலுள் அமிழ்த்தியதும் உடன் நிகழ்ச்சிகளாகும்.

247. பார் பாடும் பாதாளர் பாடும் விண்ணோர்தம் பாடும்
ஆர் பாடும் சாரா வகை அருளி ஆண்டுகொண்ட
நேர் பாடல் பாடி நினைப்பு அரிய தனிப் பெரியோன்
சீர் பாடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 13

பாடும்-பக்கமும். நேர்பாடல்-நேரிடுதல்; எதிர்ப்பாடு.

இப்பாடலில் ஒரு மாபெரும் தத்துவத்தைக் கூறியுள்ளார் அடிகளார். எறும்பு முதல் யானை ஈறாய விலங்கு வர்க்கங்கள்கூடத் தம் இனத்தையும், இனமல்லாத பிற விலங்குகளையும் சார்ந்தே வாழவேண்டியுள்ளது. இவற்றின் உயர்ந்ததாகத் தம்மைக் கருதிக்கொண்டு, தருக்கித் திரியும் மனித இனமும், இந்த விதிக்கு விலக்கில்லை; உலகிடை வாழ்வோர் தம் இனத்தார், தேவர், நாகர் (பாதாளத்தார்) ஆகியோரை அண்டி வாழவேண்டியுள்ளது.

திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு இந்தப் பொதுவிதிக்கு விலக்காக, அடிகளார் வாழ முடிந்தது. யார் பக்கமும் சென்று அவர்கள் தயவை நாடும் சூழ்நிலை

தமக்கு ஏற்பட்டவில்லை என்கிறார். இந்நிலையைத் தந்தவன் பெருந்துறையான். மனித உடம்புடன் இருக்கும் பொழுதே அந்த 'தனிப் பெரியோன்' குருநாதர் வடிவில் வந்து காட்சியும் தந்து, ஆட்கொண்டு, அனுபவத்தையும் தந்தான். இவை இரண்டையும் பெற்றபிறகு மீட்டும் அதனை நினைக்கத் தொடங்கிய அடிகளார், 'நினைப்பரிய தனிப்பெரியோன்' என்று பாடுகிறார்.

வேறு எந்த உயிரினத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பு மனித இனத்திற்கு உண்டு. கண்டது, காணாதது, நடந்தது நடவாதது ஆகிய அனைத்தையும் அறிவாலும் மனத்தாலும் நினைக்கக்கூடிய ஆற்றல் மனித இனத்திற்கு உண்டு. இல்லாத பொருளையும் தன்னுடைய விருப்பம்போல் வடிவுகொடுத்து நினைக்கும் ஆற்றல் மனித மனத்திற்கு உண்டு. பல்வேறு வடிவுகளைத் தாங்கிநிற்கும். கடவுட் பொருளையும் நேரே காணாதபொழுதும் நினைத்துப் பார்க்கும் ஆற்றல் மனத்திற்கு உண்டு. ஆனால் இப்படி நினைத்ததெல்லாம் மனித மனம் தானே கற்பித்துக் கொண்ட வடிவங்களே தவிர வேறன்று. உண்மையான கடவுட் பொருளைக் காண முடியாவிட்டாலும் கற்பனையாகவேனும் நினைத்தாவது பார்க்க முடியுமா என்றால் ஏறத்தாழ முடியாது என்பதே விடையாகும்.

அடிகளார் போன்ற அருளாளர்கள் இப்பொருளைக் காண்பதற்கு முன்னரே முழுவதும் அந்நினைவாக இருந்தனர் என்று அறிகிறோம். அடிகளார் போன்ற ஒரு சிலருக்கு இது முடியுமாயினும் ஏனையோரைப் பொறுத்த மட்டில் இயலாது ஆதலின் 'நினைப்பரிய' என்றார். அரிய என்ற சொல், நம்மைப் பொறுத்தவரை முடியாத என்ற பொருளைத் தந்துநிற்குமேனும் அடிகளாரைப் பொறுத்த மட்டில் முற்றிலுமாக நினைந்து அறிந்து கொள்வதற்கு அரியவன் (அப்பாற்பட்டவன்) என்ற பொருளைத் தந்து நிற்கின்றது. யாராலும் ஏன் 'தன் பெருமை தான் அறியாத்

தன்மையானவன்' ஆதலின் அவனே கூட அவன் பெருமையை முற்றிலும் அறிய முடியாததலின், 'தனிப் பெரியோன்' என்றார். பெரியோன் என்ற சொல்லை மட்டும் பயன்படுத்தியிருப்பின் நம்முடைய சிற்றறிவைப் பயன்படுத்தி அவனுடைய பெருமைக்கு ஓர் எல்லை கட்டி விடுவோம். அந்தத் தவறு நிகழாமல் இருக்கவே 'தனிப்பெரியோன்' என்று பாடுகிறார்.

அவன் புகழைப் பாடித் தெள்ளேணம் கொட்டலாம் என்கிறார்.

248. மாலே பிரமனே மற்று ஒழிந்த தேவர்களே
நூலே நுழைவு அரியான் நுண்ணியனாய் வந்து அடியேன்
பாலே புகுந்து பரிந்து உருக்கும் பாவகத்தால்
சேல் ஏர் கண் நீர் மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ 14

நூலே நுழைவரியான்-நூல்களால் அறியமுடியாதவன். பாவகம்-முற்றிய பாவனை. சேலோர் கண்- சேல்மீனை ஒத்த கண்.

ஸ்தூல உடலுடைய மக்கள், சூக்கும உடலுடைய தேவர்கள், மூவரில் இருவர் (பிரமன், மால்) ஆகிய அனைவரும் அறிய முடியாதவன் என்றபடி,

இதில் தேவர்களுக்கும் இல்லாத ஒரு சிறப்புத் தம்பால் உள்ளதாய்த் தருக்கித் திரியும் மனிதர், நூலறிவினால் இறையருளைப் பெறுவோம் என நம்பினர். அந்த நூலறிவும் அவர்கள் தலைக் கனத்தைப் பெருகச் செய்ததே தவிர, அவன் அருகில் செல்லுமாறு உதவவில்லை.

இவற்றை வரிசைப்படுத்திக் கூறிய அடிகளார், இவர்களால் அறியப்படாத இறைவனுக்கு 'நுண்ணியன்' என்ற பெயரைத் தருகிறார். நுண்மை என்றவுடன் பருமை, சிறுமை, நுண்மை என்ற முறையில் நம்முடைய நினைவு செல்லும். அந்த நுண்மையை அடிகளார் இங்குக் குறிப்பிடவில்லை.

'அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க' (திருவாச:3-45) என்று கூறிய இடத்தில் பருமைக்கு எதிர்மறையான நுண்மையைக் கூறினார். இந்தப் பாடலில் கூறப்பெற்ற 'நுண்ணியன்' என்பது மேலே கூறியதற்கு மாறுபட்டதாகும்.

மனிதர்களுடைய அறிவு, உணர்வு என்பவை பருப் பொருளையும் சிந்திக்கும், நுண்பொருளையும் சிந்திக்கும். அணுவின் உள்ளீடாகவுள்ள எலக்ட்ரான், பாசிட்ரான், மீசோன் என்பவை நுண்மை வடிவிற்கு ஓர் எல்லையாய் அமைந்துள்ளன. விஞ்ஞானிகளின் அறிவு இந்த நுண்மை யிலும் புகுந்து அவற்றின் இயல்புபற்றி ஆராய்கின்றது. 'நுழைவு அரிய நுண்ணியன்' என்றதால் அறிவாலும் உணர்வாலும் சிந்திக்கப்படுகின்ற இந்த நுண்மையையும் அடிகளார் இங்குக் குறிப்பிடவில்லை. மிக நுண்ணிய அறிவும் மிக ஆழமான உணர்வும், கற்பனையும் எட்ட முடியாத, சிந்திக்க முடியாத (Inconcievable) ஒரு நுண்மையையே அடிகளார் இங்கே குறிப்பிடுகிறார்.

249. உருகிப் பெருகி உளம் குளிர முகந்துகொண்டு
பருகற்கு இனிய பரம் கருணைத் தடம் கடலை
மருவித் திகழ் தென்னன் வார் கழலே நினைந்து அடியோம்
திருவைப் பரவி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 15

பெருகி-உடல் பூரித்து. மருவி-சேர்ந்து.

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் மிக விரிவானதும், நுண்மையானதுமான ஒரு கருத்தை வெளியிடுகின்றன. இறைவனைப் 'பரங் கருணைத் தடங்கடல்' என்றார். கடல் என்று உருவகம் செய்தவுடன் அவ்வுருவகத்தான் வரும் நெருடல்கள் மனத்திடைத் தோன்றுகின்றன. எங்கு நோக்கினும் தண்ணீர் ஆயினும், ஒரு சொட்டும் உண்ணத் தகுதி அற்றிருப்பது நம் நினைவில் வரும். அதை மறுக்க 'பருகற்கு இனிய.... தடங்கடல்' என்றார்.

கருணை, கடல் போன்றிருப்பினும் அதனை உண்ணப் புகும் நம் வாய் மிகச் சிறியதாய் இருத்தலின் சாதாரண நீரை முகந்து குடிப்பதுபோல இந்த இனிய கடலின் நீரையும் முகந்துகொண்டு குடிக்க வேண்டும் என்றார். 'முகந்து கொண்டு' என்ற சொல்லிலும் நுணுக்கமுள்ளது. கடல் நீரை முகக்கச் செல்வோர் அவரவர் சக்திக்கேற்பச், சிறு கிண்ணம், செம்பு, குடம், அண்டா என்று சிறிய பெரிய பாத்திரங்களில் முகந்து வருவரன்றோ? அதேபோல இந்தப் பரங்கருணைத் தடங் கடலிடம் சென்றோரும், தத்தம் சித்தத்தின் எல்லைக்கு ஏற்ப அல்லது அளவுக்கு ஏற்ப முகந்து வரமுடியும். இந்த நிலையிலும் ஒரு குறை தோன்றக்கூடும். முகக்கும் பாத்திரம் வாய் மூடியதாக இருப்பினும், அடிப்பகுதி இல்லாமல் இருப்பினும் எவ்விதப் பயனையும் விளைக்காது. அதேபோல, பரங்கருணைத் தடங்கடலில் சென்று முகப்போர் கொண்டுசெல்லும் பாத்திரம் பெரியதாகவும், மேற்பகுதி விரிந்தும், அடிப்பகுதி நன்கு மூடப்பெற்றும் இருத்தல் வேண்டும். அதனைக் கூறவந்த அடிகளார், நெஞ்சு உருகி என்றும், அன்பு பெருகி என்றும் கூறுவதால் இதனைக் குறிப்பிட்டாராயிற்று.

நெஞ்சு உருகி அன்பு பெருகி உள்ளவர்கள் இதயம் மிகவும் விரிந்திருத்தலின் பரங்கருணைத் தடங் கடலில் முகந்து பருகுவர் என்பதைக் கூறினார்.

250. புத்தன் புரந்தர ஆதியர் அயன் மால் போற்றி செயும்
பித்தன் பெருந்துறை மேய பிரான் பிறப்பு அறுத்த
அத்தன் அணி தில்லை அம்பலவன் அருள் கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணம் கொட்டாமோ 16

புரந்தரன் -இந்திரன். அத்தன்-தலைவன்.

தேவர்கள், அயன், மால் என்பவர்களோடு புத்தனையும் வைத்து எண்ணியது அடிகளார் காலத்திலிருந்த சில நம்பிக்கைகளை உட்கொண்டதாகும். பௌத்த சமயத்தார்

இன்றும்கூட, புத்தருடைய பழைய அவதாரங்களில் திருமாலாக வந்த அவதாரமும், முருகனாக வந்த அவதாரமும் ஒவ்வோர் இடத்தைப் பெறுவதாகக் கருதுகின்றனர். அடிகளார் காலத்தில் இக்கருத்து வலுப்பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு கொள்ளாமல் சிவ பூசை செய்கின்ற திரிபுராதிகளைச் சிவபூசை செய்யாமல் தடுத்து, அவர்களது மனத்தை மாற்றத் திருமால் புத்த அவதாரம் எடுத்துச் சென்றார் என்பது சைவர்களின் புராணக் கதைகளில் ஒன்றாக இருப்பினும் இக்கதை இங்கு பொருந்துமாறில்லை.

251. உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரம் ஆம்
சவலைக் கடல் உளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழல் இணைகள் தந்தருளும்
செயலைப் பரவி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 17

உவலை-பொய். சவலைக்கடல்-திட்பமில்லாத கடல். கவலை-பிளவு பட்ட எண்ணம். கவலை கெடுத்து என்பது கவலைக் கெடுத்து என வந்தது விரித்தல்விகாரம்.

மாபெரும் கல்வியாளரும், கவிஞரும் ஆகிய திருவாதவூரர் அமைச்சராகவும் இருந்தார். இரண்டாம் வரகுணன் காலத்தில் பாண்டி நாடு மிகப் பெரிதாக விரிந்தில்லா விடினும் ஓரளவு விரிந்தே இருந்தது என்பதை வரலாறு அறிந்தார் ஏற்பர்.

எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய ஆதி சங்கர பகவத் பாதர் புத்த சமயத்திலுள்ள தருக்க அடிப்படையில் அச்சமயக் கொள்கைகளை மறுக்க விரும்பியதால், பௌத்த சமயத்தை மிக நுணுக்கமாகக் கற்றார் என்று கூறுவர். ஆதிசங்கரரை அடுத்து அதே நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியவர் அடிகளார் ஆவார். எனவே, அடிகளார் சங்கரருடைய அத்வைதம்,

புத்தருடைய தம்மபதம் ஆகியவற்றைப்பற்றிக் கூறும் நூல்களை விரும்பிக் கற்றிருக்க வேண்டும்.

சங்கரருடைய சங்கர பாஷ்யம், புத்த சமய நூல்கள் ஆகியவை அறிவுக்குப் பெருவிருந்தாய் அமைந்துள்ளன என்பதை இன்றும் யாரும் மறுக்கமுடியாது. இவற்றையெல்லாம் அடிகளார் நன்கு கற்றிருந்தார் என்று நினைப்பதில் தவறில்லை. ஆனால், இந்தப் பெருங்கல்வி அவருக்கு மன அமைதியையும், முன்னேறும் வழியையும் கொடுக்கவில்லை என்பதை இப்பாடலின் முதலிரண்டு அடிகள் குறிக்கின்றன. அவை தமக்கு ஈடுபாட்டைத் தரவில்லை ஆதலால் 'உவலை (பொய்)ச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரம்' என்றார்.

உவலைச் சமய நூல்களைக் கற்பதனால் உடல், மன இளைப்புகளைத் தரும் கடலுள் மூழ்கிக் கிடந்த தமக்கு முன்னேறும் வழிகாட்டினான் என்கிறார்.

252. வான் கெட்டு மாருதம் மாய்ந்து அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டல் இன்றிச் சலிப்பு அறியாத் தன்மையனுக்கு
ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வு கெட்டு என்
உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 18

வான்கெட்டு-எல்லாப் பூதங்களும் நிலவ இடங்கொடுத்து நிற்கும் ஆகாயமும் ஒடுங்கி. தான்-சிவம். சலிப்பு-அசைதல். நான்-தற்போதம்.

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் மகாப்பிரளயத்தைக் குறிக்கின்றன. அதுபோது எந்த ஒன்றும் மிஞ்சுதலின்றி, இறைவன் ஒருவனே எஞ்சியுள்ளான். ஆதலின், அதனைக் குறிக்க 'தான் கெ(ட்)டல் இன்றி' என்று கூறினார்.

அடுத்த இரண்டு அடிகள் ஒரு மிகப் பெரிய தத்துவத்தை விளக்குவன ஆகும். ஒரு மனிதனுக்குப் பருப் பொருளாக அமைந்தது பொறிகளோடு கூடிய உடம்பாகும்.

அந்த உடம்பினுள் நுண்மையாக அமைந்தவை நான்கு அந்தக்கரணங்களாகும். அவற்றுள் உணர்வு தோன்றுகின்ற இடம் சித்தம். இதனையும் தாண்டி நிற்பது அகங்காரமாகிய 'நான்'.

எந்த நிலையிலும், அதாவது ஆழ்ந்த மயக்கத்திலும் கூட, இந்த 'நான்' கெடுவதில்லை. சாதாரண உலகியலில் கூடக் 'கட்டைபோல உறங்கினேன்' என்று சொல்வதுண்டு. கட்டைபோல உறங்கும்போது அவனுடைய 'நான்' உறங்காமல் இருப்பதானாலேயே ஏனைய பகுதிகள் உறங்கியதைக் குறிக்க முடிகிறது.

ஆக, இந்த 'நான்' என்ற அகங்காரத்தின்மேல் உணர்வும், அது தோன்றுகின்ற இடமாகிய சித்தமும், இவை அனைத்தையும் தாங்கிநிற்கும் உடலும் அமைந்துள்ளன.

இறை அனுபவம் பூரணமாகக் கிட்டும்பொழுது இவை அழிகின்றன. அழிகின்றன என்று கூறினால் இல்லாமல் போய்விடுகின்றன என்பது பொருளன்று. இறையனுபவத்தில் மூழ்கித் திளைக்கும் அடிகளார் போன்றவர்களுக்குக்கூடப் பொறிகளோடு கூடிய உடம்பு, மனம், சித்தம் (உள்ளம்), அதில் தோன்றும் உணர்வு, இறுதியாக நான் என்ற அனைத்தும் உண்டு. ஆனால் இந்தப் பெருமக்கட்கு உடல் முதல் 'நான்' வரையுள்ள அனைத்தும் செயலிழந்துவிடுகின்றன. அதனையே அடிகளார் 'ஊன் கெட்டு, உயிர் கெட்டு, உணர்வு கெட்டு, என் உள்ளமும் போய், நான் கெட்டவா பாடி' என்று பாடுகின்றார். இங்குக் காணப்பெறும் 'உயிர் கெட்டு' என்ற தொடரில் வரும் உயிர் ஆன்மாவைக் குறிக்கவில்லை. உயிர்ப்பு என்று சொல்லப்படும் மூச்சுக்காற்றையே குறிக்கின்றது.

'சலிப்பறியாத் தன்மையன்' என்ற தொடர் சிந்தனையைத் தூண்டுவதாகும். 'சலிப்பு' என்ற சொல்லுக்குப்

பல்வேறு பொருள்கள் இருப்பினும் அசைதல் என்ற பொருளே இங்குப் பொருத்தமுடையதாகும். பிரபஞ்சம் முழுவதையும் படைத்து, அவற்றில் ஊடுருவியும் வெளிப் பட்டும் இருப்பவன் இறைவன் என்பது முன்னரே பலமுறை பேசப்பெற்றது. மகாப்பிரளய காலத்தில் மண்ணில் தொடங்கி வானம் ஈறாகவுள்ள எல்லாப் பொருள்களும் அழிக்கப்படுகின்றன.

பிரபஞ்சம் மீட்டும் வெளிப்பட்டு நிற்கையில் அணு வடிவாக இருக்கின்ற இதனுள் ஒவ்வொன்றும் ஓயாது சலித்துக் கொண்டே (அசைந்துகொண்டே) இருக்கின்றன. அணுவினுள் ஓயாது சலித்துக்கொண்டிருக்கிற எலக்ட்ரான்கள், சலிப்பை நிறுத்தினால், அந்த அணு அழியும். பிரபஞ்சம் முழுவதும் அணுக்களால் ஆனதே என்பது இன்று அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தத்துவமாகும். அவை அனைத்தும் அழிந்த நிலையே மகாப் பிரளயம் அல்லது சர்வ சங்காரம் என்று சொல்லப்படும். அந்த நிலையில் மூலப்பொருளாகிய இறைவன் ஒருவனே உள்ளான். அவனும் அசைவில்லா ஒன்றாக உள்ளான். இப்பொழுது முக்கூட்டுப் பரிமாணமுடைய பிரபஞ்சமும், நான்காவது பரிமாணமாகிய காலத் தத்துவமும் அசைவற்று நின்றுவிட்டன. தானும் அசைவில்லாமல் இருக்கும் பரம்பொருள், ஒரு சிறிது அசையத் தொடங்கினால் அந்த அசைவு சக்தி என்று சொல்லப் பெற்று, பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணமாகிவிடும். சர்வ சங்கார காலத்தில் சக்தி, சிவத்துள் அடங்கி, சிவம் எவ்வித அசைவும், செயலும் தொழிற்பாடும் இல்லாமல் இருக்கின்ற நிலையையே 'சலிப்பு அறியாத் தன்மை' என்கிறார்.

பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களும் சலித்துக் கொண்டேயிருக்கின்றன. அவை சலித்தலை நிறுத்தினால் அழிந்துவிடும் என்று முன்னர்க் கூறியுள்ளோம். சர்வ சங்கார காலத்தில் பரம்பொருள் சலித்தலை நிறுத்தி

விடுகின்றானே! அப்படியானால் சலித்தலை நிறுத்தியதால் அவனும் அழிந்துவிடுவானோ என்ற ஐயத்தைப் போக்குவதற்காக, சலிப்பறியாத் தன்மையன் என்பதற்கு முன்னர், 'தான் கெட்டல் இன்றி' என்ற சொற்களைப் பயன்படுத்துகிறார்.

253. விண்ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து
மண்ணோர் மருந்து அயன் மால் உடைய வைப்பு அடியோம்
கண் ஆர வந்துநின்றான் கருணைக் கழல் பாடித்
தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டாமோ 19

வித்து-விதை. வைப்பு-செல்வம்.

இப்பாடலில் இறைவனை விதையுள் தோன்றும் மரமாக உருவகிக்கின்றார். இதிலும் ஒரு சிறப்புண்டு ஏனைய விதைகள் தம்மை அழித்துக்கொண்டே மரத்தைத் தோற்றுவிக்கும். ஆனால் இறைவன், விதையாக இருந்து மரமாகும்பொழுது தன் நிலையிலிருந்து மாறுபடுவதில்லை.

ஒரு மருந்து மரம் வேர்முதல் கொழுந்துவரையுள்ள அனைத்து உறுப்புக்களும் நோயுடையாருக்குப் பல வகையில் உதவுவதுபோல, இறைவனாகிய மரமும் பயன்படுகிறது என்பதைப் பின்வருமாறு கூறுகிறார். நாகலோகத்தார்க்கு விதை என்றும், விண்ணோர்க்கு முழு முதல் என்றும் கூறிய அடிகளார், மிக நுணுக்கமான ஒரு கருத்தை இடையில் வைக்கின்றார்.

ஸ்தூல உடலுடன் (பருஉடலுடன்) வாழ்கின்றவர் களுக்கு மட்டுமே மருந்து தேவைப்படும். எனவே, உலகத் தார்க்கு மருந்து என்றார். ஏனைய இரண்டு உலகங்களிலும் வாழ்பவர்கள் சூக்கும உடலுடன் வாழ்கின்றவர் ஆதலின் மருந்து என்ற குறிப்பு அங்கே தரவில்லை.

முயன்று தேடிவைத்த செல்வத்தையே வைப்புநிதி என்கிறோம். இறைவன், மாலுக்கும் அயனுக்கும்

வைப்புநிதியாக உள்ளான். காரணம் இவர்கள் மேலே கூறிய மூன்று உலகத்தார்க்கும் மேம்பட்டவர்கள் ஆதலாலும் இறைவன் ஆணையைப் பெற்று, படைத்தல் காத்தல் ஆகிய தொழில்களைச் செய்கின்றவர்கள் ஆதலாலும், அரிதின் முயன்று தவம் செய்து இப்பதவியைப் பெற்றவர்கள் ஆதலாலும் அயன் மால் ஆகிய இவர்களுடைய வைப்பு என்றார்.

254. குலம் பாடிக் கொக்கு இறகும் பாடிக் கோல் வளையாள்
நலம் பாடி நஞ்சு உண்டவா பாடி நாள்தோறும்
அலம்பு ஆர் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பு ஆடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 20

குலம்-சிறப்பு. கொக்கு இறகு-கொக்குவடிவமான அசுரனைக் கொன்று இறைவன் சூடிய இறகு. அலம்பு ஆர்புனல்-அசைகின்ற நிறைந்த நீர்.

இப்பாடலில் குலம் என்று குறிக்கப்பெற்றது வாழையடி வாழையாக வரும் அடியார் கூட்டத்தை ஆகும். அத்தகையோருடைய பக்தி மிகுதியும் உறைப்புடைய தாகலின் அவர்களுடைய கூட்டத்தைப் பாடி. என்றார்.

இறைவன் தலையில் அணிந்திருப்பது கொக்கிறகு. கோல்வளையாள் என்பது அழகிய வேலைப்பாடமைந்த வளையினை அணிந்த இறைவியைக் குறிப்பதாகும்.

மிக உயர்ந்ததாகிய மானிடப் பிறப்பெடுத்து அதிலும் சலனப்படாத இறை பக்தியில் மூழ்கியவர்கள் திருக் கூட்டத்தைக் 'குலம் பாடி' என்று குறித்துவிட்டு, அஃறிணையாகவும் தனக்கென்று ஒரு தனித்தன்மை இல்லாததாகவும் உள்ள 'கொக்கிற'கை அடுத்துக் கூறியது நோக்கற்குரியது. மிகச் சாதாரண கொக்கிறகு இறைவன் தலைமேல் ஏறிய காரணத்தால் அடியார்களோடு ஒப்ப வைத்து எண்ணும் சிறப்புடையதாயிற்று என்றவாறு.

ॐ ॐ ॐ

12. திருச்சாழல்

[சிவனுடைய காருணியம்]

சாழல் என்பதும் மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று என்பதைமட்டும் அறிய முடிகிறது. சிலப்பதிகார உரையுள் அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டி விளக்கும் பல்வரிக் கூத்துக்களுள் சாழல் என்ற பெயரும் இடம்பெறுகிறது.

திருச்சாழல், திருத்தோள்நோக்கம், என்ற இந்த இரண்டும் மகளிர் சிலர் எதிர்எதிராக நின்றுகொண்டு, கைகளை நீட்டி, குறிப்பிட்ட பாடலைப் பாடிக்கொண்டு, எதிரே உள்ளவர் கைகளைத் தட்டுவதோ அன்றி அவர்கள் தோள்களைத் தட்டுவதோ அன்றி இருவர் கையையும் மேலே தூக்கிக் கும்பிடுவதுபோலக் கையைத் தட்டிப் பிணைத்துக்கொள்வதோ இவற்றுள் அடங்கும்.

"எண்தோள் வீசி நின்று ஆடும் பிரான்" (திருமுறை: 4-9-2) என்று வரும் தேவாரம் சிந்திக்கத்தக்கது. தோள் வீசி நின்று ஆடும் என்று பாடலில் வருகிறதேனும் தோள்வீச்சு என்ற பொருளிலேயே கைகளை நீட்டல், மடக்கல், வளைத்தல், சுருட்டல், அரைவட்ட வடிவமாகக் கைகளை வீசுதல் முதலிய பத்து நிலைகள் பேசப்பெறுகின்றன.

எனவே, அடிகளார் கூறும் சாழல், தோணோக்கம் முதலியவை கைவீச்சுக்களையே குறிப்பன என்பது தெளிவு, சாழலில் எதிரேயுள்ள ஒருத்தி ஒரு கையைத் தூக்கி ஆட்டிக்கொண்டு தன்னுடைய கேள்விக்கு விடைகூற முடியுமா? என்று கேட்பதுபோல, எதிரே உள்ளவள் கையைத் தட்டி, 'காணேடீ' முதலிய சொற்களுடன்

வினாவை முடிக்கும் நிலையை மனத்துள் கொண்டு வரவேண்டும். எதிரே உள்ளவள் மிக எளிதாக அந்த வினாவிற்கு விடைகூறும்முகத்தான் விடை கூறிவிட்டதால் தன் கைகளை உயர்த்தி 'சாழல்' என்ற சொல்லுடன் வெற்றி தனக்கே என்பதைப் பிறர் காண நிரூபிக்கின்றாள். இருவருடைய கைகளும் தூக்கப்பட்டிருப்பதால் காணேடீ, சாழல் என்ற இரண்டிற்கும் உள்ளங்கைகளை ஒன்றுடன் ஒன்று படுமாறு தட்டி ஓசை எழுப்பி விளையாடினர் என்று நினைப்பதில் தவறில்லை.

சாழல் முதலிய விளையாட்டுக்கள் தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, மதுரை மாவட்டங்களின் கிராமப் பகுதிகளில் விளையாடப்படுவதைத் தாம் அறிந்திருந்ததாக முனைவர். எம். சண்முகம்பிள்ளை அவர்கள், தம்மிடம் கூறினார் என்று, டாக்டர் யோகம் (Dr. Yocum) தாம் எழுதிய 'ஆடவல்லானுக்கு உரிய பக்திப் பாடல்கள் ('Hymns to the Dancing Siva')' என்ற நூலில் குறித்துள்ளார்.

எந்த ஒன்றிற்கும் இரண்டு வகை நோக்கங்களைக் கற்பிக்கலாம். சிவபெருமானைப்பற்றிக்கூட ஓரளவு எள்ளி நகையாடும் முகமாக, அவன் கோலம் இருந்தவாறு என்னே! அவன் செயல் செய்தவாறு என்னே! என்ற வினாக்களை எழுப்பி, தங்கள் வினாவிற்கு எதிரே உள்ளவள் விடைகூற முடியாது என்ற எக்களிப்புடன், காணேடீ, என்னேடீ, இயம்பேடீ முதலிய சொற்களினால் தங்கள் எள்ளலை வெளிப்படுத்துகின்றனர்.

எதிரே உள்ளவள் 'புறத்தே காணப்படும் சிலவற்றை வைத்துக்கொண்டு, இவன் எப்படித் தலைவனானவான்' என்று வினவுகிறீர்களே, உங்கள் அறியாமை இருந்தவாறு என்னே! உலகம் முழுவதையும் படைத்துக் காத்து அழிக்கின்ற ஒருவன்—இயல்பாகவே தலைவனாகவுள்ள ஒருவன்—தோலை அணிந்தால் என்ன? பட்டாடை அணிந்தால் என்ன? அரண்மனையில் வாழ்ந்தாலென்ன?

சுடுகாட்டில் வாழ்ந்தாலென்ன? இவற்றைக் கொண்டு அவனை மதிப்பிடுதல் பேதமையின்பாற்படும் என்ற விடைகளைச் சாழல் என்ற சொல்லுடன் கூறிமுடிக்கிறாள்.

காணோடூ, சாழலோ என்ற இரண்டு சொற்களும், இரு சீராய் நின்று எதிரெதிராக உள்ள இரண்டு பெண்கள் ஒருவர் கையை ஒருவர் தட்டி ஓசை எழுப்புவதைக் குறிக்கின்றன.

இந்த இருபது பாடல்களையும் ஓரிடம் தவிர எத்தனை முறை படித்தாலும் 'சிவனுடைய காருணியம்' எவ்விடத்தும் பேசப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. 'தானந்தம் இல்லான்' என்று தொடங்கும் 264 ஆம் பாடலில் இத்தொகுப்பு முறைக்கு மாறாக, தனிப்பட்ட முறையில் அவன் தமக்குக் காட்டிய கருணையை வியந்து பேசுகிறார்.

பத்தொன்பது பாடல்களின் கருத்தையும் விட்டுவிட்டு இந்த ஒரு பாடலை மனத்துட் கொண்டு 'சிவனுடைய காருணியம்' என்று உட் தலைப்புத் தந்தனர்போலும்.

255. பூசுவதும் வெள் நீறு பூண்பதுவும் பொங்கு அரவம்
பேசுவதும் திருவாயால் மறை போலும் காண் ஏடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு என்னை
ஈசன் அவன் எவ் உயிர்க்கும் இயல்பு ஆனான் சாழலோ **1**

பொங்கு அரவம்–சீறுகின்ற பாம்பு. மறை–இரகசியம்.

இப்பாடலின் முற்பகுதி வினாப்போலவும் பிற்பகுதி அந்த வினாவிற்குரிய விடைபோலவும் அமைந்திருத்தலைக் காணலாம்.

சிவபெருமானைத் தலைவனாக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவன்மாட்டுள்ள சிலவற்றை அர்த்தமற்ற பொருள்கள் என்று கூறி இவற்றை வைத்திருப்பவன் எப்படித் தலைவனாக முடியும் என்று கேட்பதை, தோழி ஏற்றுக்

கொண்டு கேட்பதுபோலப் பாடலின் முற்பகுதி நிற்கிறது. இப்பகுதியில் எந்த ஒரு வினாவும் நேரடியாகக் கேட்கப்படவில்லை. இன்னும் கூறப்போனால், மேலோட்டமாகப் பார்ப்பதற்கு எள்ளி நகையாடுவது போலவும் இது அமைந்துள்ளது.

தோழி: தலைவி! சாம்பலைப் பூசிக்கொண்டு சினமுடைய பாம்புகளை உடம்பில் அணிந்துகொண்டு பைத்தியம் போலிருக்கின்ற ஒருவன், வாய் திறந்து பேசினால், ஒருவாறு அவனைப் புரிந்துகொள்ள முடியும் என்று நினைத்தேன். ஆனால், அவன் திருவாயால் பேசுவது வெறும் ஒலிக் குறிப்புக்களாக உள்ளனவே தவிர ஒன்றும் புரியாத புதிராக உள்ளது.

['மறை' என்ற சொல்லுக்குப் பொருள் புரியாத சொற்கள் என்பது ஒரு பொருள். வேதம் என்பது மற்றொரு பொருள்.]

தலைவி: தோழி! அவன் பூசியுள்ளதையும், பூண்டுள்ளதையும், அவன் பேசுகின்றவற்றையும் வைத்துக் கொண்டு அவனை எப்படி எடைபோடப் போகிறாய்?

[அவன் ஈசன் பிரபஞ்சத்திலுள்ள எல்லா உயிர்கட்கும் தானே முயன்று தலைமைப் பதவியை அவன் மேற்கொள்ளவில்லை. இயல்பாகவே அவன் உயிர்கட்குத் தலைவனாக (ஈசனாக) உள்ளான்.]

உலகிடை ஒரு குழுவிற்கு அல்லது கூட்டத்திற்கு அல்லது நாட்டிற்கு ஒருவர் தலைவர் என்றால். அத் தலைமைப் பதவி இருவகையில் அவருக்குக் கிட்டலாம். ஒன்று, அவராக முனைந்து அனைவரையும் ஆட்படுத்தி, தலைமைப் பதவியை வென்று பெறுவது. இரண்டாவது

அனைவரும் கூடித் தங்களுக்குத் தலைமை ஏற்கக்கூடிய தகுதி அவர்பால் உண்டு என்ற முடிவுக்கு வந்து தலைமைப் பதவியை அவருக்குத் தருவது.

இந்த இரண்டுவகையிலும் சேராத ஒரு தலைவனும் உண்டு. பிரபஞ்சத்திலுள்ள உயிர்கள் அனைத்திற்கும் மூலகாரணமாயிருந்து, அவ்வுயிர்கள் நன்கு வாழத் தனு, கரண, புவன, போகங்களைப் படைத்து, பிறகு பிரளயத்தை ஏற்படுத்தி அந்த உயிர்கள் ஓய்வு கொள்ளுமாறு செய்கின்றவன் இயல்பாகவே அவ்வுயிர்களுக்குத் தலைவனாகிறான். 'எவ்வுயிர்க்கும் இயல்பாகவே தலைவனாக இருக்கின்ற அவன், எதைப் பூசினால் என்ன? எதைப் பூண்டால் என்ன? என்ன பேசினால்தான் என்ன? அவனே தலைவன்' என்றவாறு.

256. என் அப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான் ஈசன்
துன்னம் பெய் கோவணமாக் கொள்ளும் அது என் ஏடி
மன்னு கலை துன்னு பொருள் மறை நான்கே வான் சரடா
தன்னையே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ 2

துன்னம் பெய்–தைக்கப்பெற்ற; துன்னுபொருள்–பொருளோடு தொடர்புடைய; வான்சரடு–தூய்மையான அரை நாண். மன்னு கலை–என்றும் அழியாது நிலைபெற்ற ஞானக்கலை.

இப்பாடலில் முன்னையபாடல் போல் முதலிரண்டு அடிகள் வினாவை உட்கொண்டுள்ளன.

தோழி: உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் அவனால் படைக்கப்பட்ட காரணத்தால் 'என் அப்பன்' என்று உறவு கொண்டாடுகின்றன. அந்த உயிர்கள் வீடுபேறடைய அவனே பற்றுக்கோடாய் இருத்தலின் 'எம்பிரான்' என்கின்றன. அவ்வுயிர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஒப்பினாலும்

ஒப்பாவிட்டாலும் அவனே ஈசனாவான். அப்படிப்பட்ட அவன், அரைஞாண் கயிற்றில் ஒரு கோவணத்தை அணிந்திருப்பது எவ்வளவு பொருத்தமற்றது! அனைத்து உயிர்க்கும் தலைவனாகவும் ஈசனாகவும் இருக்கும் ஒருவன் தன் பதவிக்கு ஏற்பப் பொருத்தமான உடையை அணியவேண்டாவா?

தலைவி: வேதம் சொல்லும் பொருளையும், நிலை பேறுடைய கலைஞானங்ளையும் கோவணம் ஆகவும், நான்கு வேதங்ளை அரைஞாணாகவும் கொண்டுள்ளான்.

மறை நான்கும் 'வான் சரடு' ஆனதற்கு ஒரு காரண முண்டு. வேதம் என்பது அதில் சொல்லப்பட்ட பொருளைவிட ஓசையால் சிறந்து நிற்பதாகும். 'ஓதிய ஞானமும், ஞானப் பொருளும் ஒலி சிறந்த வேதியர் வேதமும்' (திருமுறை:4-92-17) என்று நாவரசர் பெருமான் கூறுவதால் ஒலிச்சிறப்பே வேதத்திற்கு முக்கியம் என்பது பெறப்பட்டது. ஒலி என்பது நீண்டு செல்லும் இயல் புடையதாகலின், வேதம் வான் சரடு என உருவகிக்கப் பெற்றது.

கலைஞானமும் வேதத்தில் அடங்கியுள்ள பொருளும் பல்வேறு கருத்துக்களை விரித்துக் கூறுவதாலும் அவை ஒன்றுடன் ஒன்று இணைந்து நிற்பதாலும் கோவணமாக உருவகிக்கப்பெற்றன.

சொல்லும் (ஓசையும்) பொருளுமாக விரிந்து வடிவுகொண்டு நிற்பது இப்பிரபஞ்சமாதலின் அதுவே அவனுக்கு உடையாயிற்று என்க. பிரபஞ்சம் முழுவதையும் உடையாகத் தரித்த ஒருவன் இயல்பாகத் தலைவனாக இருப்பது அவனுக்கு ஏற்றதே என்க.

257. கோயில் சுடுகாடு கொல் புலித் தோல் நல் ஆடை
தாயும் இலி தந்தை இலி தான் தனியன் காண் ஏடீ
தாயும் இலி தந்தை இலி தான் தனியன் ஆயிடினும்
காயில் உலகு அனைத்தும் கல் பொடி காண் சாழலோ 3

சுடுகாடு–சர்வசங்கார காலத்து எல்லாம் ஒடுங்கிய இடம் காயில்–கோபித்தால்.

இப்பாடலில் முன்னிரண்டு அடிகள் தலைவனாக இருக்கக்கூடிய தகுதி எதுவுமில்லை என்று ஏசுவதாயிற்று.

தோழி: *தலைவனாக இருக்கின்ற ஒருவனுக்குக் குறைந்த பட்சம் அவன் தங்குவதற்கு ஒரு அரண்மனை யாவது இருத்தல் வேண்டும். நீ, தலைவன் என்று சொல்கின்றவனுக்கு சுடுகாடுதான் சொந்த வீடு. அரசர்க்குரிய ஆடையென்று ஒரு வகை ஆடையை இந்நாட்டவர் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆள் பாதி, ஆடை பாதி என்பது இந் நாட்டின் முதுமொழி. ஆனால், நீ சொல்லும் தலைவனுக்குக் கேவலம் வேடுவர்கள் அணியும் புலித்தோலே நல்லாடை ஆயிற்று. அன்றியும் இந்நாட்டு வழக்கப்படி, அரசப்பதவி என்பது, பரம்பரை பரம்பரையாக வரவேண்டிய ஒன்று. நீ சொல்லும் தலைவனுக்குத், தாயும் இல்லை, தந்தையும் இல்லையென்றால் பரம்பரை எங்கிருந்து வந்தது?*

தலைவி: *நீ சொல்வது உண்மைதான். எம் தலைவனுக்குத் தாயும் இல்லை, தந்தையும் இல்லை. இவர்கள் இருவர்மட்டும் இல்லை என்பதில்லை. உறவு என்று சொல்லிக்கொள்ள ஒருவரும் இல்லை. அவன் தனியன் என்பதும் உண்மைதான். ஆனாலும், என்ன? ஒருவன் தலைவனானது அவன் அரண்மனையைக் கொண்டோ, ஆடை*

ஆபரணங்களைக் கொண்டோ, தாய் தந்தையரைக் கொண்டோ அல்ல. அனைவரையும் வெல்லும் ஆற்றல் யாருக்கு உண்டோ, அவனே தலைவனாவான் என்பதை நீ அறியாயோ? எம் தலைவன் தனியன் என்பது உண்மைதான். ஆனால், அவன் ஒருவன் காய்ந்தால் (சினந்தால்) இப்பிரபஞ்சம் முழுவதும் பொடிசூரணம் ஆகிவிடும் என்பதை நீ அறிதல் வேண்டும்.

258. அயனை அனங்கனை அந்தகனை சந்திரனை
வயனங்கள் மாயா வடுச் செய்தான் காண் ஏடீ
நயனங்கள் மூன்று உடைய நாயகனே தண்டித்தால்
சயம் அன்றோ வானவர்க்குத் தாழ் குழலாய் சாழலோ 4

அயன்–பிரமன். அநங்கன்–மன்மதன். அந்தகன்–யமன். நயனம்–கண்.

இப்பாடலின் இரண்டாவது அடி 'வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ' என்பதாகும். இத்தொடர் எளிதாகப் பொருள்கொள்ளும் வகையில் அமையவில்லை.

தோழி: நீ சொல்லும் தலைவன், தன்னிலும் கீழ்ப்பட்டுள்ள நான்முகனின் தலையைக் கிள்ளியும், மன்மதனை எரித்துச் சாம்பலாக்கியும், இயமனைக் காலால் உதைத்தும், சந்திரனைத் தரையில் போட்டுத் தேய்த்துக் களங்கத்தை உண்டாக்கியும் துன்புறுத்தினான். அவர்கள் உடம்பில் நிலையான வடு (மாயா வடு) இருக்குமாறு செய்துவிட்டான். அந்த வடு நிலைத்துநிற்பதால் உன்னுடைய தலைவனுக்கு வயனங்கள் (பழிச்சொற்கள்) நிலைத்துவிட்டன என்பதை நீ அறியவேண்டும்.

தலைவி: நீ அறியாமல் பேசுகிறாய். தலைவன் நயனங்கள் மூன்றுடையவன். அவனது மூன்றாவது கண்

எதனையும் ஊடுருவிக் காணும் ஞானக் கண்ணாகும். பெருந்தவறு நேர்ந்துழி அது எரிக்கவும் செய்யும். அயன், ஐந்து தலையுடை மையின் செருக்குக் கொண்டான்' அனங்கன், தேவர்கள் சொல்லைக் கேட்டு இறைவனின் மோனத்தைக் கலைத்தான் அந்தகன் (இயமன்), யார் இவர் என்று பாராமல் மார்க்கண்டேயன் யாரிடம் அடைக்கலம் புகுந்துள்ளான் என்பதைப் பற்றிச் சிந்தியாமல், அகந்தை காரணமாகத் தன் அதிகார எல்லையைக் கடந்தான். சந்திரன் அவியுணவிற்கு ஆசைப்பட்டு இறைவனை மதிக்காத தக்கன் வேள்வியில் பங்குகொண்டான். இவர்கள் நால்வரில் ஒருவனுக்குச் செருக்கு, மற்றவனுக்குச் சொந்தப் புத்தியில்லாமல் பிறர் சொல்லைக் கேட்கும் அறிவீனம், இன்னொரு வனுக்குக் கடமை என்ற பெயரில் எல்லை மீறிய அகந்தை, நான்காமவனுக்கு உணவின்மேற் கொண்ட பேராசை ஆகியவை இருந்தன. எங்கள் தலைவன் இவர்களைத் தண்டித்தானே தவிரக் கொல்லவில்லை என்பதை நீ அறிதல் வேண்டும். இவர்கள் அனைவருக்கும் தந்தையாக இருக்கும் தலைவன், இவர்களைத் தண்டித்து, குற்றங்களிலிருந்து நீங்குமாறு செய்தது அவர்கள் பெற்ற வரமென்றே கருத வேண்டும். மக்களைத் தண்டித்தல் தந்தையின் கடமையாதலால் அதனால் அவருக்கு வசையில்லை.

259. தக்கனையும் எச்சனையும் தலை அறுத்து தேவர் கணம்
தொக்கென வந்தவர் தம்மைத் தொலைத்ததுதான் என் ஏடி
தொக்கென வந்தவர் தம்மைத் தொலைத்தருளி அருள்
கொடுத்து அங்கு
எச்சனுக்கு மிகைத் தலை மற்று அருளினான் காண் சாழலோ

5

எச்சன்–யாகஆச்சாரியன். மிகைத்தலை–இழிந்த ஆட்டுத் தலை. எச்சன்–தக்கன்.

இப்பாடலின் இரண்டாவது அடியிலுள்ள 'தொக்கு என' என்ற தொடர் ஓரளவு குழப்பத்தை உண்டாக்குகிறது. 'தொக்கு' என்ற சொல்லுக்குத் துவையல் என்ற ஒரு பொருளும் உண்டு.

தோழி: தக்கன் வேள்வியில் ஈசனால் அனுப்பப்பட்ட வீரபத்திரர் மூன்று காரியங்களைச் செய்தார். அவையாவன: தக்கனையும், எச்சனையும் தலையறுத்தார்; வந்த தேவர் கூட்டத்தை துவையல் என்று சொல்லும்படியாகத் (தொக்கு என) துவைத்தார். எஞ்சிய மானிட முனிவர் களைத் தலைதெறிக்க ஓடுமாறு செய்தார். இது பழியாகுமன்றே!

தலைவி: வந்த தேவர் கூட்டத்தைத் தொக்கு என அரைத் தாலும், தக்கனைப் பொறுத்தமட்டில் ஆட்டுத் தலையைப் பொருத்தினான். தேவர்கள் அமரர் களாதலின் அவர்களைத் துவையல்போல் துவைத்தானே தவிரக் கொல்லவில்லை.

வினாவிலும் விடையிலும் 'வந்தவர் தம்மை' என்ற சொல் மடக்குக் காரணமாக இருமுறை பயன்படுத்தப் பெற்றாலும், இடத்திற்கேற்ப முதலில் வரும் 'வந்தவர் தம்மை' என்பதற்கு முனிவர்களை என்று பொருள் காணப் பெற்றது. இரண்டாவது வந்தவர் தம்மை என்பது அமரர்களுக்கு உரியதாக்கப்பட்டது.

260. அலரவனும் மாலவனும் அறியாமே அழல் உரு ஆய்
நிலம் முதல் கீழ் அண்டம் உற நின்றது தான் என் ஏடி
நிலம் முதல் கீழ் அண்டம் உற நின்றிலனேல் இருவரும் தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிராரா காண் சாழலோ 6

கீழண்டம்–கீழே பாதளம்வரையிலும் உள்ள அண்டங்கள். சலமுகம்-சினம்காரணமாக. ஆங்காரம்–செருக்கு. இருவர்–அயனும் திருமாலும்.

தோழி: *மாலும் அயனும் தம்முள் யார் பெரியவர் என்று போரிட, அவர்கள் எதிரே, அவர்கள் இன்னது என்று அறியமுடியாதபடி, அண்டத்தின் கீழும், அண்டத்தின் மேலும் ஒருசேரத் தீத்தூணாய் (அக்கினி ஸ்தம்பம்) நின்றது சரியோ?*

தலைவி: *இங்ஙனம் அக்கினி ஸ்தம்பமாய் நில்லாவிடின் அயனும் மாலும், பெருங்கோபம் காரணமாக, தம்மிடத்துத் தோன்றிய அகங்காரத்தை ஒழித்திரார்.*

261. மலை மகளை ஒரு பாகம் வைத்தலுமே மற்று ஒருத்தி
சலமுகத்தால் அவன் சடையில் பாயும் அது என் ஏடீ
சலமுகத்தால் அவன் சடையில் பாய்ந்திலனேல் தரணி எலாம்
பிலமுகத்தே புகப் பாய்ந்து, பெரும் கேடு ஆம் சாழலோ 7

மற்றொருத்தி–கங்கை. பிலம்-பாதாளம்

தோழி: *மலைமகளை, அவன் தன் ஒரு பகுதியாக வைத்துக் கொண்டிருப்பதை அறிந்தும், கங்கை என்பவள் வஞ்சனையால் அவனுடைய சடாபாரத்தில் வந்து தங்கியது நியாயமோ?*

[பூமிக்கு வர வேண்டும் என்று பகீரதன் தவம் செய்ய, சினங்கொண்ட கங்கை, உலகத்தை அழிக்கவேண்டும் என்ற வஞ்சனையான எண்ணத்தை மறைத்துக் கொண்டு கீழ்நோக்கிப் பாய்ந்தாள். அவள் நினைவு ஈடேறாமல் இருக்கவே சிவபெருமான் அவளைச் சடையில் தாங்கினான்.]

தலைவி: மிக்க கோபத்தோடு தேவ உலகிலிருந்து வந்த கங்கை, அவனுடைய சடையுள் பாயாமல் நிலவுலகில் நேரே பாய்ந்திருந்தால், அவள் வேகம் தாங்கமாட்டாமல் இந்நிலவுலகம் பாதாளத்திற்குச் செல்லும் பாதையில் உருண்டு ஓடியிருக்கும். அவன் அவளைச் சடையில் தாங்கியது இவ்வுலகத்தைக் காக்கவே தவிர, வேறு கருத்திலன்று.

262. கோலாலம் ஆகி குரை கடல்வாய் அன்று எழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதிர்தான் என் ஏடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன் மால் உள்ளிட்ட
மேல் ஆய தேவர் எல்லாம் வீடுவர் காண் சாழலோ 8

கோலாலம்–கோலாகலம். குரை கடல்–ஒலிக்கின்ற கடல். ஆலாலம்–விஷம். சதிர்-திறமை. வீடுவர்–அழிவர்.

தோழி: மிக்க ஆர்ப்பாட்டத்துடன் தேவர்கள், அசுரர்கள் ஆகியோர் பாற்கடலைக் கடைய, அதில் தோன்றிய ஆலகாலத்தை அன்று உண்டான். அமிழ்து வரப்போவதை அறிந்தும் அதனை உண்ணாது ஆலத்தை (நஞ்சை) உண்டது பித்தர் செயல் அல்லவோ?

தலைவி: ஆலாலம் உண்டது அவன் திறலை வெளிப் படுத்துவதற்காக அன்று. அவ்வாறு உண்டிலனேல் மால், அயன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் அன்றே இறந்திருப்பர். அமரர் என்ற சொல்லும் தோன்றியிராது.

இந்த அருங்கருத்தை அடிகளுக்கு அறுநூறு ஆண்டுகள் முற்பட்ட இளங்கோவடிகள் பின்வருமாறு சொல்லி வியக்கிறார்:

விண்ணோர் அமுதுண்டும் சாவ, ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்
(சிலப்பதி:12–முன்றிலின் சிறப்பு–21)

263. தென் பால் உகந்து ஆடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண் பால் உகந்தான் பெரும் பித்தன் காண், ஏடீ
பெண் பால் உகந்திலனேல் பேதாய் இரு நிலத்தோர்
விண்பால் யோகு எய்தி வீடுவர் காண் சாழலோ 9

உகந்தான்–விரும்பினான். இருநிலத்தோர்–மக்கள். யோகு எய்தி-யோகமார்க்கத்தில் சென்று. வீடுவர்–அழிவர்.

தோழி: *தென் திசை நோக்கி ஆடும் ஒருவன் ஒரு பக்கத்தில் பெண்ணை விரும்பி வைத்திருப்பது பொருத்தமோ? அவளை விரும்பி வைத்திருப்பது பெண்மாட்டுக் கொண்ட பெரும்பித்து அன்றோ?.*

தலைவி: *அவன் பெண்ணை ஏற்றுக்கொண்டிராவிடின் உலகத்து உயிர்களெல்லாம் துறவு மேற் கொண்டு யோகத்தில் புகுவராதலின், உலகம் வளராது.*

ஆடிக்கொண்டேயிருக்கும் ஒருவன் பெண்ணை நயந்தான் என்று சொல்வது சற்றுப் பொருந்தாக் கூற்றே யாகும். ஆடாமல் இருக்கும்போது அவன் சக்தி வெளிப் படாது ஆதலின் அவனை யோகி என்பர். அவனுள் இருக்கும் சக்தி வெளிப்பட, அதனைப் பயன்படுத்திப் பணிபுரியும்போது அவனைப் போகி என்பர்.

சக்தி இல்வழி வளர்ச்சி இல்லை; ஆதலின் இதனைக் குறிப்பால் உணர்த்தச் 'சிற்றம்பலவன் பெண்பால் உகந்தான்' என்று அடிகளார் கூறுகிறார்.

264. தான் அந்தம் இல்லான் தனை அடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்தான் காண் ஏடீ
ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்த திருவடிகள்
வான் உந்து தேவர்கட்கு ஓர் வான் பொருள் காண்
சாழலோ 10

அந்தம்–முடிவு. உந்து–உயர்ந்த.

திருச்சாழல் முழுதும் வினா விடையாக அமைந் திருக்க வேண்டும் என்று கருத்தில், இதற்கு உரைகண்ட உரைகாரர்கள், எவ்வித வினாவும் இல்லாத 264 ஆம், 270 ஆம் பாடல்களுக்கும் அவற்றை வினாவாகக் கொண்டே உரை வகுத்துள்ளனர்.

இப்பாடல்கள் அகத்துறையைச் சேர்ந்தவை என்று கொண்டதால் 'ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்தான்' என்பதற்குக்கூடத் தலைவி பெற்ற இன்பம் எனப் பொருள் கூறினர். இப்பாடல்களை அகத்துறையில் சார்த்திப் பொருள் கூறுதல் சிறப்புடையதாகத் தெரியவில்லை.

இறையனுபவத்தால் ஏற்பட்ட ஆனந்தத்தைப் பலப்பல பாடல்களில் கூறியுள்ளார் அடிகளார். இப்பாடலும் அவ்வாறே.

இப்பகுதியின் முதற் பாடல் முதல், ஒன்பதாம் பாடல் முடிய இறைவனின் சிறப்பும் மாபெருங் கருணையும் அவன் எல்லா உயிர்கட்கும் தலைவனாம் தன்மையும் வினாவிற்கு விடையாகக் கூறப்பெற்றுள்ளன.

இவ்வாறு பாடிக்கொண்டுவந்த அடிகளாருக்கு அத் துணைப் பெரிய தலைவன், தம்மையும் ஒரு பொருளாக்கி, இறையனுபவ ஆனந்தம் பெறுமாறு செய்தது நினைவுக்கு வருகிறது. அந்நினைவு தோன்றியவுடன் எழுந்த இப்பாட லில் வினாவோ விடையோ எதுவுமில்லை; நிகழ்ந்தது கூறப்பெற்றுள்ளது. அதனால் வியப்பே மேலிடுகிறது. அந்த

வியப்பைத் தோழிக்குச் சொல்வது போன்று அமைந்துள்ளது பாடல்.

'தான் அந்தம் இல்லான்' என்பது தனக்கென்று ஒரு தொடக்கமும் முடிவும் இல்லாதவன் என்ற பொருளையுடையது. இதன் மூலம் அவன் பெருமை கூறியவாறாயிற்று. இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களும் ஒரு நாள் தோன்றி, சில காலம் இருந்து, ஒரு நாள் முடிவை அடைகின்றன. இதுதான் நியதி என்பதை அறிந்த மனத்திற்கு இதன் மறுதலையாகத் தோற்றமும் முடிவும் இல்லாத ஒருவன் உள்ளான் என்பது வியப்பையும் மலைப்பையும் தருகிறது. அந்த வியப்புப் தோன்றியவுடன் அவனெங்கே, நானெங்கே என்ற அச்சம் தோன்றிவிடுகிறது. இவ்வாறு அஞ்சுகின்ற மனத்திற்கு ஒரு அமைதி தருகிறார் அடிகளார்.

'அந்தமில்லாத அவன், நாயேனாகிய என்னை அழைத்துத் தலையளி செய்து ஆனந்த வெள்ளத்து அழுந்துமாறு செய்தான்' இங்குக் காணேடீ என்பது மிகுந்த அதிசயத்தை நீ பார்த்தாயல்லவா என்ற பொருளைத் தந்து நிற்கிறது.

நாயேன் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளுகின்ற ஒருவருக்கு இத்துணைப் பெரிய நன்மையைச் செய்தான் ஒருவன் என்று கேட்டவுடன், செய்தவனது பெருமையைக் குறைத்து மதிப்பிடும் ஒரு சூழ்நிலை தோன்றிவிடும். அதனைத் தடுக்கப் பின்னிரண்டு அடிகள் உதவுகின்றன.

'என்னை ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்த திருவடிகள் சாதாரணமானவை என்று எண்ணிவிடாதே, 'வலவன் ஏவா வான ஊர்தியில் அமர்ந்த ஆகாயத்தைத் சுற்றித் திரியும் தேவர்களுக்கும் அத்திருவடிகள் காணக் கிட்டாத பொருளாகும்' என்பதை உணர்வாயாக' என்றவாறு.

பாடலின் இரண்டாம் அடியும் மூன்றாம் அடியும் மடக்காக வந்தாலும் இவற்றுள் ஒரு சிறு வேறுபாட்டைச் செய்து ஒரு மாபெருங் கருத்தைப் பெறவைக்கிறார்..

'ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்தான்' என்பது இரண்டாவது அடி; மூன்றாவது அடி இதனினும் சற்று மாறுபட்டு 'ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்த திருவடிகள்' என்று வருவதைக் காணலாம்.

அந்தம் இல்லாதவன், நாயனைய தமக்குத் தலையளி செய்து, ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்தான் என்று தலைவி கூறியதைக் கேட்டவுடன் தோழியின் மனத்தில் ஒரு வியப்புப் பிறந்தது. அவன் எப்படி இருப்பான், எத்தகைய பண்புடையவன், தலைவிக்கு எவ்வாறு இந்த ஆனந்தத்தைத் தந்தான், என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டிருக்கும் தோழிக்கு மூன்றாம் அடியில் தலைவி விடை கூறுகிறாள். 'தோழி! நீ அவனைப் பற்றிக் கற்பனை செய்யத் தேவையில்லை. அவனை நான்கூட முழுவதுமாகக் கண்டதில்லை. அப்படியானால் எனக்கு இதனை யார் செய்தார் என்று நினைக்கிறாயா? அதுதான் வேடிக்கை. தலைவனே செய்யாத ஒரு காரியத்தை அவன் திருவடிகளே செய்துவிட்டன'.

உயிர்களை ஆட்கொள்ளும் திருவடிப்பெருமை இதுவேயாம் என்றவாறு.

'தோழி! இன்னுமொரு வியப்பு. வான ஊர்த்தியில் ஏறி விண்ணில் பறக்கும் தேவர்கள்கூடக் கண்டறியாத அத்திருவடி மண்ணிடை வந்து தங்கி என்னை ஆனந்த வெள்ளத்து அழுத்திற்று என்றால், அதன் கருணை இருந்தவாறு என்னே!'

265. நங்காய் ஈது என்ன தவம் நரம்போடு எலும்பு அணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காண் ஏடீ
கங்காளம் ஆமா கேள் கால அந்தரத்து இருவர்
தம் காலம் செய்யத் தரித்தனன் காண் சாழலோ 11

கங்காளம்-எலும்புக்கூடு. தோள்மேலே காதலித்தான்–தண்டமாகத் தோள்மேலே சாத்தியவன். இருவர்–பிரம விஷ்ணு ஆகிய இருவர்.

முதல் ஒன்பது பாடல்களைப்போல் இதுவும் வினா விடையாக அமைந்துள்ளது.

தோழி: *பிரபஞ்ச காரணனாகிய ஒருவன்— அனைவர்க்கும் அனைத்திற்கும் தலைவன் என்று சொல்லப் பெறும் ஒருவன், கண்டோர் அஞ்சவும், வெறுக்கவும், எள்ளவும் கூடிய ஒரு அலங்காரத்தைச் செய்துகொள்ளலாமா?*

நீ சொல்லும் தலைவன் என்பவன் உமையோடு இருப்பினும், ஏகனாய்த் துறவுக்கோலத்து இருப்பினும் அவன் அணிந்துள்ளவை இரண்டு நிலைக்கும் பொருந்தாமையை நீ அறிய வேண்டும். இது என்ன தவக்கோலம்? எலும்புகளைச் சேர்த்து நரம்பாற் கட்டி அதனை மார்பில் மாலையாக அணிந்ததுபோக, இரண்டு எலும்புக்கூடுகளைத் தோள்மேலும் தாங்கிக் கொண்டிருக்க வேண்டுமா?

தலைவி: *தோழி! சற்று சிந்தித்துப் பார்! நீ எலும்புக்கூடு என்று சொல்வது எதனை என்று தெரியுமா? அவை நான்முகன் திருமால் ஆகியோரின் எலும்புக்கூடுகளேயாம். அவர்கள் தெய்வங்களே ஆயினும், அவர்கட்கும் முடிவு உண்டு என்பதைக் காட்டவே, அவர்கள் கூடுகளை அணிந்துள்ளான் என்பதை அறிவாயாக.*

266. கான் ஆர் புலித் தோல் உடை தலை ஊண் காடு பதி
ஆனால் அவனுக்கு இங்கு ஆட்படுவார் ஆர் ஏடீ
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வான் நாடர் கோவும் வழி அடியார் சாழலோ 12

கான் ஆர் புலி–காட்டில் வசிக்கின்ற புலி. ஊண்–உண்ணுங் கலம். பதி–உறைவிடம். வானாடர் கோ–இந்திரன்.

தோழி: தலைவி! காட்டில் வாழும் புலியின் தோலே உடை; பிச்சையேற்று உண்ணும் உண்கலம் மண்டை ஓடு; குடியிருக்கும் இடமோ சுடுகாடு. இப்படிப்பட்ட ஒருவனை யார் தலைவனாக ஏற்றுக்கொள்வர்?'

[ஒருவன் தலைவன் என்றால், அவனைத் தலைவனாக ஏற்றுக்கொண்டு தொண்டர் அல்லது அடியவர் பலர் இருத்தல் வேண்டும். ஒருவனைத் தலைவனாக ஏற்றுக்கொள்ளுதல் என்பது இரு வகையான் நடைபெறும். உள்ளன்பு காரணமாக ஒருவனைத் தலைவன் என்று ஏற்றுக்கொள்ளலாம். அன்றி, அவன் மாட்டுக் கொண்ட அச்சம் காரணமாகத் தலைவன் என்று ஏற்றுக்கொள்ளலாம். பண்படாத சாதாரண மக்கள் அச்சம் காரணமாகவே இறை நம்பிக்கை கொண்டுள்ளனர். பண்பால் உயர்ந்த பெரியோர் எதற்கும் அஞ்சுவதில்லை. ஆதலால், மாசு மறுவற்ற அன்பு காரணமாகவே இறைவனைத் தலைவன் என்று ஏற்றுக் கொள்கின்றனர். இது எவ்வாறாயினும், இருசாராரும் தலைவன் என்று ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால், அஞ்சி, அவனை ஏற்றுக் கொண்டவர்கள், தலைவனுக்குரிய சில

சிறப்புகள் அவனிடம் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

தலைவனுக்குரிய சிறப்புகள் இல்லாதபோது அவனைத் தலைவனாக ஏற்பது எவ்வாறு என்பதே வினா.]

தலைவி: தோழி! உன்னுடைய ஐயம் தேவையற்றது. ஏனென்றால், தெய்வங்களுள் உயர்ந்தவர்கள் என்று கருதப்பெறும் நாரணனும் நான்முகனும் தேவர்கள் தலைவனாகிய இந்திரனும் இத் தலைவனுக்கு வழிவழியாக வரும் அடியார்கள் (வழியடியார்) என்றால், மற்றவர்களைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை.

267. மலை அரையன் பொன் பாவை வாள் நுதலாள் பெண்
திருவை
உலகு அறிய தீ வேட்டான் என்னும் அது என் ஏடீ
உலகு அறிய தீ வேளாது ஒழிந்தனனேல் உலகு
அனைத்தும்
கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்கிடும் காண்
சாழலோ 13

வேட்டான்–மணந்தான். கலை நவின்ற பொருள்கள்–கலைகளை விரித்த நூல்கள்.

மிகப் பழைய நாகரிகம் உடைய தமிழரின் கடவுட் கொள்கையில் உள்ள தனிச்சிறப்பு இங்கே பேசப்பெறுகிறது. சமணம், பௌத்தம் ஆகியவை நீங்க உலகிடைக் காணப்பெறும் ஏனைய சமயங்கள் அனைத்தும் கடவுள்பற்றிப் பேசுகின்றன. ஆனாலும், அச்சமயக் கடவுளர் யாரும் ஆண், பெண், வடிவாகப் பேசப்பெறுவதில்லை.

ஏகம் சத் என்று கூறும் வேதத்தில் இந்திரன் தெய்வமாகக் கருதப்படுகிறானே தவிர அங்கேயும் பெண்மைக்குத் தனியிடம் இல்லை.

ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மிகப் பழைய சங்க இலக்கியம் தொடங்கி இன்றுவரையுள்ள இலக்கியங்கள் அனைத்தும் சிவன் என்று சொல்லும்போது உமையையும், நாரணன் என்று சொல்லும்போது திருமகளையும் சேர்த்தே பேசுகின்றன.

இவ்வாறு கூறும்பொழுதேகூட உமையொரு பாகன், திருவுறை மார்பன் என்று சக்தியோடு சேர்த்தே சிவன், நாரணன் என்ற இருவருடைய பெயரும் வழங்கப் பெறுதலைக் காணலாம்.

தோழி: தலைவி! நீ சொல்லும் தலைவன் பிரபஞ்ச காரணன் என்றால், அவனால் படைக்கப்பட்ட மக்கள் செய்வதைப் போன்றே தலைவனாகிய அவனும் செய்வது எவ்வாறு பொருந்தும்? மலையரசன் பாவையாகிய உமாதேவியை, உலகில் வாழ்கின்ற முனிவர்களும் காணும்படி, அக்கினி சாட்சியாக மணந்தான் என்பது எவ்வாறு பொருந்தும்?

தலைவி: தோழி! ஏனையோரைப் போல ஒரு பெண்ணை மணந்து இல்லறம் நடத்துவதற்காக அவன் இதனைச் செய்துகொள்ளவில்லை. உலகில் தோன்றிய கலைஞானங்கள் அனைத்தும் எல்லாப் பொருள்களையும் இரட்டையாகவே கண்டன. ஒன்றுக்கொன்று மாறுபட்ட இயல்புடைய இரண்டு பொருள்கள் சேரும் போதுதான் ஒரு புதிய பொருள் தோன்றுகிறது. பொருள் ஒன்றாகவே இருந்துவிட்டால் அதனுள் இருக்கும் சக்தி வெளிப்பட்டு

இயங்குவதில்லை. சக்தி வெளிப்பட்டு இயங்கும்போது பொருள் (சிவம்) தெரிவதில்லை. பொருளிலிருந்து சக்தி யைப் பிரிக்க முடியாது என்றாலும், இயக்கம் நடைபெறவேண்டுமானால் சக்தி மேம்பட்டுப் பணிபுரியவேண்டும். கலைஞானம் கண்ட உண்மை இதுவேயாகும். அதனைக் கண்டோர், அவை இரண்டும் ஒன்று என்பதை அறியாமல் இரண்டு என்றே கருதுகின்றனர். கலைஞானம் கூறும் இரட்டைகள் ஒன்றுசேர்ந்தே தீரவேண்டும் என்பதை அறிவிப்பதற்காகவே மலைமகளை மணமுடித்தான்.

268. தேன் புக்க தண் பணை சூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான் புக்கு நட்டம் பயிலும் அது என் ஏடீ
தான் புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணி எல்லாம்
ஊன் புக்க வேல் காளிக்கு ஊட்டு ஆம் காண்
சாழலோ 14

பணை–வயல். நட்டம்–நடனம். ஊட்டாம்–உண்ணப்படும் உணவாம்.

தில்லைக்கூத்தன் காளியோடு நடனப்போர் செய்து அவளை வென்றான் என்பது கதை. அக்கதையை அடிப்படையாகக் கொண்டது இப்பாடல்.

தோழி: தலைவி! தில்லைச் சிற்றம்பலவன் காளியை எதிர்த்து நட்டமாடியது அவனுடைய தலைமைக்குப் பொருத்தமற்ற தல்லவா?.

தலைவி: தோழி! காளிதேவி தாராகாசுரனைக் கொன்ற பின்னர் அவன் உதிரத்தைக் குடித்து வெறி கொண்டு உலகை அழிக்கத் தொடங்கினாள்! அவளுடைய வெறியை அடக்க நடனப்போர் செய்து வென்றான். அவன் அவ்வாறு செய்யா

விடின் உயிர்கள் அனைத்தும் காளிக்கு இரை யாகியிருக்கமல்லவா?

அணுவுக்குள் இருக்கும் சக்தி வெளிப்பட்டு ஓர் எல்லைக்குள் இருக்கும்போது பேருதவி புரிகின்றது. அதே சக்தி எல்லை மீறுகின்றபோது அணுகுண்டாக மாறி அழிவைச் செய்கின்றது. இதே கருத்தைத்தான் காளி வெறிகொண்ட கதை புலப்படுத்துகின்றது. சிவத்திலிருந்து வெளிப்படும் சக்தி எல்லை மீறுமேயானால் சிவம் அதனை அடக்கி ஆளுகிறது.

269. கட கரியும் பரி மாவும் தேரும் உகந்து ஏறாதே
இடபம் உகந்து ஏறிய ஆறு எனக்கு அறிய இயம்பு ஏடீ
தட மதில்கள் அவை மூன்றும் தழல் எரித்த அந்நாளில்
இடபம் அது ஆய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ
15

கடகரி–மதம் ஒழுகுகின்ற யானை. பரிமா–குதிரை.

தோழி: தலைவி! தலைவனாக இருக்கின்ற ஒருவன் விரும்பி ஏறும் வாகனம் தேர் அல்லது குதிரை அல்லது யானையாக இருத்தல் வேண்டும். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு இடபத்தை வாகனமாகக் கொண்டது' ஏன்?

தலைவி: தோழி! இவை அனைத்தும் அவனுக்கு உண்டு. ஆனால், திரிபுரத்தை அழிக்கப் புறப்பட்ட போது, திருமால், தான் இடபமாக இருந்து சிவபெருமானைத் தாங்கிச் செல்ல வேண்டு மென்று விரும்பினார். எந்த வாகனமும், எந்தப் படைக்கலமும் இல்லாமல் திரிபுரத்தை அழிக்க முடியுமென்றாலும் திருமாலின் மகிழ்ச்சிக்கு இடம்கொடுக்கும் வகையில் அப்பொழுது இடபவாகனத்தில் ஊர்ந்தார்.

270. நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்று ஆலின் கீழ் இருந்து அங்கு அறம் உரைத்தான்
காண் ஏடீ
அன்று ஆலின் கீழ் இருந்து அங்கு அறம் உரைத்தான்
ஆயிடினும்
கொன்றான் காண் புரம் மூன்றும் கூட்டோடே சாழலோ 16

நால்வர்–சனகர், சனாதனர், சனற்குமாரர், சனந்தனர். ஆல்–கல்லால விருட்சம். அறம் உரைத்தான்–ஞானோபதேசஞ் செய்தவன். கூட்டோடு–அடியோடு.

இப்பாடலில் வினா இல்லை; ஆயினும் ஒரு நிகழ்ச்சியைக் கூறுகின்ற முறையிலேயே ஓர் ஐயத்தைக் குறிப்பாகப் பாடல் வெளிப்படுத்துகின்றது

கல்ஆல மரத்தின் அடியிலிருந்து சனகாதி முனிவர் நால்வர்க்கும் அறத்தைப் போதித்தான் என்பது முன்னிரண்டு அடிகளின் பொருளாகும். பகை-நட்பு, துன்பம்-இன்பம், செல்வம்-நல்குரவு ஆகியவற்றை ஒன்றெனக் கருதும் உயர் தகுதி படைத்தவர் சனகாதி முனிவர் நால்வருமாவர்.

பகை, நட்பு என்ற இரண்டையும் கடந்து நிற்பவர் கட்கு அறமுரைக்கின்ற ஒருவன் தானும் அவற்றைக் கடந்தவனாகத்தானே இருத்தல் வேண்டும்? அப்படி, அனைத்தையும் கடந்துநிற்கும் ஒருவன் நமக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களைப் போக்கி அருள்வானா என்ற ஐயம் தோன்றுவது இயல்பேயாகும்.

அவனோ இன்ப துன்பங்களைக் கடந்தவன்; இவை இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அறியாதவன். அப்படியிருக்க நம்மாட்டுக் கருணை கொண்டு அருள் செய்வானோ என்ற குறிப்பான வினாவிற்கு அடுத்த இரண்டடிகள் விடை கூறுகின்றன.

ஆலின் கீழிருந்து அறமுரைத்தது உண்மைதான். இரட்டைகள் என்று சொல்லப்படுபவற்றைச் சீடர்களும் வென்றவர்கள்; குருவும் வென்றவர்தான். என்றாலும், ஆன்மாவை முன்னேறாமல் தடுக்கும் ஆணவத்தை ஒடுக்கக்கூடியவன் இவன் ஒருவனே; ஆதலால் அதற்குரிய ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறார்.

திரிபுராதிகள் ஆணவத்திற்கு ஓர் அடையாளம் 'முப்புரமாவது மும்மல காரியம்' (திருமந்திரம்:343) என்பது திருமூலர் வாக்கு. எனவே, 'புரமூன்றுங் கூட்டோடு' அழித்தான் என்றால், விருப்பு வெறுப்பற்ற துறவின் எல்லையில் நிற்கும் அவன், அழித்து அருள்செய்ய வேண்டிய இடத்தில், அழித்தும் அருள் செய்கிறான். இது மறக்கருணையின்பாற்படும் என்க.

271. அம்பலத்தே கூத்து ஆடி அமுது செயப் பலி திரியும்
நம்பனையும் தேவன் என்று நண்ணும் அது என் ஏடீ
நம்பனையும் ஆமா கேள் நான்மறைகள் தாம் அறியா
எம்பெருமான் ஈசா என்று ஏத்தின காண் சாழலோ 17

நம்பன்–நம்பப்படத்தக்கவன். தேவன்–கடவுள். பலி–பிச்சை. ஆமா கேள்-ஆகுமாறு கேட்பாயாக

தோழி: ஒரு சாதாரண தலைவனுக்குகூடத் தங்குவதற்கு ஒரு பெரிய இடமும், உண்பதற்கு வேண்டிய சகல வசதிகளும் இருக்கும். ஆனால், தலைவி! நீ சொல்லும் தலைவன் ஒரு மேற்கூரைகூட இல்லாத திறந்த வெளியில் (அம்பலத்தில்) கூத்தாடுகிறான். கூத்தாடும் இவனுக்கு உண்ணத் தான் உணவு உண்டா? பிச்சை எடுத்தல்லவா உண்கிறான்? மேற்கூரையில்லாத வீடு, பிச்சை உணவு—இவனும் ஒரு தலைவனோ!

தலைவி: தோழி! நீ சொல்வது சரிதான். ஆனால், ஒரு வேடிக்கை தெரியுமா? எல்லோரும் போற்றும் அபௌர்ஷேயம் என்று சொல்லப்பெறும் வேதம் எவ்வளவோ முயன்றும், திறந்த வெளியில் நட்டமாடி., ஊர் ஊர்தோறும் பலிக்கு உழலும் இவனை ஏனோ கண்டதே இல்லை. தொன்று தொட்டு இந்த நான்கு வேதங்களும் அவனைக் காணாததுமட்டு மன்று. 'எம் பெருமான் ஈசா' என்று கூக்குரலிட்டு அழைத்தும் அவனை நெருங்கியபாடில்லை. வேதங்களே இப்படியென்றால், ஏனையோரைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை.

வேதங்களும் ஏனையோரும் 'எம்பெருமான் ஈசா' என்று ஓலமிட்டு அலையும் நிலையில் உள்ளன என்றால், அந்தத் தலைவன் வெட்ட வெளியில் நட்டமாடினால் என்ன? பிச்சை யெடுத்தால் என்ன? அவனே யாவர்க்கும், யாவற்றிற்கும் தலைவன் என்பது தெரியவில்லையா?

இதே கருத்தைச் சேக்கிழார் பெருமான் மிக அழகாக 'மன்றுளே மால் அயன் தேட, ஐயர் தாம் வெளியே ஆடுகின்றார்' என்று கூறியுள்ளமை நினைப்பதற்குரியதாகும்.

272. சலம் உடைய சலந்தரன் தன் உடல் தடிந்த நல் ஆழி
நலம் உடைய நாரணற்கு அன்று அருளிய ஆறு என் ஏடீ
நலம் உடைய நாரணன் தன் நயனம் இடந்து அரன்
அடிக்கீழ்
அலர் ஆக இட ஆழி அருளினன் காண் சாழலோ 18

சலம்–வஞ்சகம். தடிந்த–கொன்ற. ஆழி–சக்கராயுதம். நயனம் இடந்து–கண்ணைத் தோண்டி..

தோழி: தலைவி! சலந்தாசுரனை பிளந்த சக்கரப் படையைத் திருமாலுக்கு ஏன் தரவேண்டும்?

தலைவி: தோழி! கண்ணில் சிறந்த உறுப்பில்லை என்பது தெரிந்திருந்தும் திருமால், தன் கண்ணையே பறித்து அருச்சனை செய்தான் ஆதலின், அவனுக்குக் சக்கரப்படையை ஈந்தது தலைவனது வள்ளன்மையைக் குறிக்கும்.

நாரணன் நாள்தோறும் ஆயிரம் தாமரை கொண்டு இறைவனை அருச்சித்துவந்தான். ஒருநாள் ஒரு மலர் குறைய, அதனை ஈடுசெய்யவேண்டித் தன் கண்ணும் தாமரை என்ற காரணத்தால் கண்ணைப் பறித்து அருச்சித்தான். அது கண்டு மகிழ்ந்த இறைவன் சக்கரப் படையை அவனுக்கு ஈந்தான் என்பது புராண வரலாறு.

273. அம்பரம் ஆம் புள்ளித் தோல் ஆலாலம் ஆர் அமுதம்
எம்பெருமான் உண்ட சதிர் எனக்கு அறிய இயம்பு ஏடீ
எம்பெருமான் ஏது உடுத்து அங்கு ஏது அமுது
செய்திடினும்
தம் பெருமை தான் அறியாத் தன்மையன் காண்
சாழலோ 19

அம்பரம்–ஆடை. புள்ளித்தோல்–புள்ளிகளையுடைய புலித்தோல்.

தோழி: தலைவி! புள்ளிகளை உடைய புலித்தோலோ ஆடை; ஆலகால நஞ்சோ உணவு. இவ்வாறிருப்பது திறமையா? சாமர்த்தியமா? சிக்கனமா? (சதிர் என்ற சொல்லுக்கு இந்த மூன்று பொருளும் உண்டு) எது கருதி என்பதைச் சொல்வாயாக.

தலைவி: தோழி! அவன் எதை உண்டால் என்ன? எதை அணிந்தால் என்ன? இப்பிரபஞ்சத்தில் வேறு

யாருக்கும் எவருக்கும் இல்லாத தனிச்சிறப் பொன்று இவனுக்குண்டு. அச்சிறப்பு இவன் ஒருவனுக்கே உண்டு. அதுதான் தன் பெருமை தான் அறியாது இருத்தல் என்பதை அறிவாயாக.

'தன் பெருமை தான் அறியாத் தன்மை' என்ற சிறிய தொடர் மிக ஆழமான பொருளை உடையது. பெருமை என்று சொல்லும்போது அது பண்புப்பெயர். அப்பண்புக் குரிய பண்பி ஒருவன் இருத்தல் வேண்டும். பொதுவாகப் பண்புகள் தனியே இயங்குவதில்லை. ஒரு பண்பியை ஒட்டியே பண்புகள் நிலைபெறும்.

பெருமை என்ற ஒரு பண்பு, பெருமை உடையவ னாகிய ஒருவனை இணைந்து நிற்பதாகும். உலகத்திலுள்ள எல்லா உயிர்கட்கும் சில பண்புகள் இணைந்தே நிற்கும். பண்பே இல்லாத ஒருவன் இருப்பது இயலாத காரியம். வேறுள்ள பண்புகளையெல்லாம் ஒருவன் துறந்துவிட்டா லும்கூட ஆணவம் என்ற பண்பு இறுதிவரை அவனைச் சுற்றியே நிற்கும். இது உயிர்களின் பொது இலக்கணம்.

இறைவன் குணம், குறி கடந்தவன் ஆதலால், அவனிடம் எந்த ஒரு பண்போ குணமோ இணைவ தில்லை. பெருமைக்குரியவன் என்று நாம் சொல்லும்போது, நமக்குத் தெரிந்த, நாம் விரும்பும், மிக உயர்ந்தது என நாம் கருதும் பெருமை என்ற பண்பை நாம்தாம் அவனுக்கு ஏற்றுகின்றோமே தவிர, அவனுக்கும் அதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

தனக்கு என்று பெருமை, சிறுமை முதலிய எதுவும் இல்லாதவன் ஆதலால், அந்தப் பெருமையை அவன் அறியுமாறில்லை. இதுவே அவனுடைய இறைப்பண்பு ஆகும்.

'தன் பெருமை தானறியாத் தன்மையன்' என்று அடிகளார் கூறினாரேனும், அதன் உண்மைப் பொருள் இதுவேயாகும்.

இவ்வாறில்லாமல் தன் பெருமையின் எல்லையை அறியாதவன் என்று பொருள் கூறுவேமேயானால் அவன் பெருமைக்கு ஓர் எல்லை வகுத்த தவற்றைச் செய்கிறோம். அதுவுமன்றி அறியாதவன் என்ற சொல்லால் அறியாமையை அவனுக்கு உரிமையாக்குகின்றோம். இவ்விரண்டும் இங்குப் பொருந்தாமை அறிதல் வேண்டும்.

274. அரும் தவருக்கு ஆலின்கீழ் அறம் முதலா நான்கினையும்
இருந்து அவருக்கு அருளும் அது எனக்கு அறிய
இயம்பு ஏடி
அரும் தவருக்கு அறம் முதல் நான்கு அன்று அருளிச்
செய்திலனேல்
திருந்த அவருக்கு உலகு இயற்கை தெரியா காண்
சாழலோ 20

அருந்தவர்–சனகாதி நால்வர். அறம் முதலா நான்கு–அறம் பொருள் இன்பம் வீடு என்பன.

மேல் 270 ஆவது பாடலில் வேதத்தின் உட்பொருளாம் அறத்தை உரைத்தான் என்று கூறினார். இப்பாடலில் ஆலின் கீழிருந்தது அவன் உரைத்தது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும்பற்றி என்கிறார்.

தோழி: தலைவி! அருந்தவமுடையோர்க்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் பற்றிக் கூறவேண்டிய தேவை என்ன?.

தலைவி: தோழி! அவர்களைப் பொறுத்தவரை பொருளும் இன்பமும் தேவையில்லாமல் - இருந்திருக்கலாம். அறவழி நின்று வீடு அடைதல் ஒன்றே வழியாகும் என்று அவர்கள்

நினைத்திருக்கலாம். அப்படி நினைத்தவர் களுக்குப் பொருளும் இன்பமும்கூட வீடுபேற்றை அடைய உதவுவனவாகும் என்பதை வனத்திடை வாழும் முனிவர்களும் அறிந்துகொள்வதற்காக. அறம் முதல் நான்கினையும் விரித்துரைத்தான். அவ்வாறு அவன் உரைத்திராவிடின், வனத்திடை வாழும் அம் முனிவர்கள் துறவறமும், தனி வாழ்க்கையுமே வீடுபேற்றை அடைய ஒரே வழி என்ற தவறான முடிவிற்கு வந்திருக்கலாம் அல்லவா?

பௌத்தம், சமணம் என்ற சமயக் கொள்கைகளும் அவற்றோடு சேர்ந்த புறத்துறவு என்ற கொள்கையும் தமிழ்நாட்டில் தோன்றாமல், வடக்கே இருந்து வந்தவை களாகும். என்ன காரணத்தாலோ தமிழ்நாட்டில் அவை ஓரளவு வலுப் பெறலாயின். ஆதி சங்கரர் துறவியாக இருந்தமையால் அவரைப் பின்பற்றிய அத்வைதிகளும் துறவைப் பெரிதாக மதித்தனர். இந்த நிலையில் தமிழகத்தில் புறத்துறவு வீடுபேற்றுக்குரிய ஒரே வழி என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக வேரூன்றியது. அடிகளார் வாழ்ந்த எட்டாம் நூற்றாண்டில் பௌத்தமும், சமணமும் வலுவிழந்தாலும் சங்கரரின் அத்வைதம் வலுப்பெற்று நின்றது. அந்தக் கால கட்டத்தில் தோன்றிய அடிகளார், 'அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான்' (திருவாச:270) என்று பாடிய பின்னர் அன்று பரவியிருந்த புறத்துறவை மட்டும் இது குறித்துவிடுமோ என்று எண்ணினார்போலும்.

புறத்துறவு ஒன்றுமட்டுமே வீடுபேற்றுக்குரிய வழியாகும் என்று கருதியவர்கள் புருடார்த்தங்கள் எனப்படும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கிற்கும் மதிப்புத் தரவில்லை. காரணம், இந்த நான்கினிடையே பொருளும், இன்பமும் இடம்பெற்றிருந்தமையே ஆகும். பொருளையும்

இன்பத்தையும் ஒதுக்கினாலொழியத் தங்கள் துறவு முழுத்தன்மை அடையாது என்று அவர்கள் கருதியதாலும் புருடார்த்தங்களில் பொருளும் இன்பமும் இடம் பெற்றிருந்தமையாலும் இவற்றை ஒதுக்கினர். அன்றியும் இல்லறத்திலிருந்தே வீடுபேற்றை அடையமுடியும் என்ற தமிழர் கொள்கைக்கு அவர்கள் போக்கு மாறுபட்ட தாயிருந்தது. இதனை மறுக்கவந்த அடிகளார், அறமுதலா நான்கினையும் அருந்தவர்க்கு உரைத்தான் என்று கூறினார். அத்தோடு அமையாமல் இந்த நான்கினையும் அவர்கள் அறியாவிட்டால் உலக இயற்கையை அறியாமல் போய்விடுவார்கள் என்பதையும் கூறினார்.

உலக இயற்கையாவது தனித்து நிற்கும் எதையும் ஆதரிப்பதில்லை. தோற்றம், வளர்ச்சி இரண்டிற்கும் ஆண், பெண் என்ற இரட்டைகள் தேவைப்பட்டன. ஆண், பெண் என்ற இருவரும் ஒன்றுசேரும்போது வாழ்வின் குறிக் கோளாகிய வீட்டை அடைய, அறவாழ்க்கையை மேற்கொள்ள வேண்டி வந்தது.

நாட்டில் ஒருவனும் ஒருத்தியுமாகச் சேர்ந்து வாழ்க்கை நடத்துகையில் பொருளும் இன்பமும் தேவைப்பட்டன. இவை இரண்டும் அற வாழ்க்கை வாழவும், வீடுபேற்றை அடையவும் இடையூறாக உள்ளன என்று, முன்னர்க் கூறப் பெற்ற, புறத்துறவுடையோர் கருதினர். இல்லறத்தில், வாழ்பவர்களும் பொருளையும் இன்பத்தையும் பெற்று வாழும்போதே அறவாழ்க்கை வாழ்ந்து வீடுபேற்றை அடையமுடியும் என்பதை ஆலின்கீழிருந்து இறைவனே உரைத்தான் என்று அடிகளார் கூறுகிறார். இதனை அருந்தவர்க்கு உரைத்ததன் நோக்கம் பொருளையும் இன்பத்தையும் அடிப்படையாகக் கொண்ட இல் வாழ்க்கையும் வீடுபேற்றை அடைய வழியாக அமையும் என்பதை வலியுறுத்தவேயாம்.

ॐ ॐ ॐ

13. திருப்பூவல்லி

[மாயாவிசய நீங்குதல்]

அடிகளாரின் ஈடு இணையற்ற திருவாசகம் என்ற அமுதக் கடலில் பல பாடல்கள் சிறுமியரை நோக்கியே பாடப்பெற்றுள்ளனவாகும். இதுபற்றி முன்னரே சற்று விளக்கமாகக் கூறப்பெற்றுள்ளது.

பூப் பறித்தல், பூக் கிள்ளுதல், பூக் கொய்தல் என்ற பல சொற்கள் பழக்கத்தில் இருப்பினும், ஒவ்வொன்றும் ஒரு தனிப்பொருளைப் பெற்றுள்ளது.

ரோஜா முதலிய செடிகளில் பூக்கும் பூவை எடுப்பதைப் பூப் பறித்தல் என்று கூறுவர். தரையில் படர்ந்திருக்கும் கொடிகளில் உள்ள பூவை எடுப்பதனைப் பூக் கிள்ளுதல் என்று கூறுவர். மரம், பந்தல் ஆகியவற்றில் உயர்ந்து படர்ந்திருக்கும் கொடிகளில் உள்ள பூவை எடுப்பதைப் பூக் கொய்தல் என்று கூறுவர்.

அடிகளார் பாடும் 'பூவல்லி கொய்யாமோ' என்ற தொடர், கொடியில் (வல்லியில்) உள்ள பூவைக் கொய்தலையே குறிப்பதாகும்.

சிறுமியர் எதிர்எதிராக நின்றுகொண்டு, உடம்பை எக்கி, மேலேயுள்ள கற்பனைப் பூவைப் பறிப்பதுபோன்ற பாவனை—விளையாட்டில் ஈடுபடுவதையே இங்கு அடிகளார் பாடுகின்றார்.

275. இணை ஆர் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணை ஆன சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
அணை ஆர் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர் பாடி பூவல்லி கொய்யாமோ 1

இணை–இரண்டு. புணையாளன்–பிறவிக்கடலை நீந்தப் புணையாக இருப்பவன்.

பூவல்லி கொய்யாமோ என்ற பகுதியில் வரும் இந்த முதற்பாடல், பழைய நிகழ்ச்சிகள் அடிகளார் உள்ளத்தில் நினைவலைகளாக மீட்டும் தோற்றியதை நினைவூறுத்து கிறது.

இணையான திருவடியை அடிகளாரின் தலைமேல் சூட்டியது திருப்பெருந்துறையிலாகும். திருவடி சூட்டப் பெறுவதற்கு முன்னர், அமைச்சராக இருந்த திருவாதவூரர் திடீரென்று அனைத்தையும் துறந்து மணிவாசகராக எழுகின்றார். திருவாதவூரராகவும் அமைச்சராகவும் இருந்த பொழுது எத்தனை பெரிய சுற்றம்! 'துணையான சுற்றங் கள்' என்று அடிகளார் கூறுவது திருவாதவூரருக்குரிய சுற்றம், அமைச்சருக்கு உரிய சுற்றம் ஆகிய இரண்டையும் குறிப்ப தாகும். அதனாலேயே சுற்றம் என்ற பன்மைக்கு மேல் 'கள்' விருதியும் சேர்த்துச் 'சுற்றங்கள்' என்று பேசுகிறார்.

இந்த இரு திறத்தாரும். அடிகளாரைத் தாங்களே தாங்கிக்கொண்டிருப்பது போலவும், தங்களையே துணை என்று அமைச்சர் கருதிக்கொண்டுள்ளார் என்பது போலவும் . ஊரார் அறிய, பேசிக்கொண்டிருந்தனர். அதனை அமைச்சரான திருவாதவூரர் நம்பவில்லை, அதனைக் குறிக்கவே எள்ளல் குறிப்புத் தோன்றத் துணையான சுற்றங்கள் என்று பேசுகிறார்.

'அத்தனையும் துறக்தொழிந்தேன்' என்பது அடுத்து நிற்கும் தொடர். 'அத்தனை' என்பது தொகுதியை மட்டும்

குறிப்பிடாமல், பிறப்பால் வந்த சுற்றம், பதவியால் வந்த சுற்றம் என்ற இரு திறத்தாரையும் குறிக்கின்றது.

'துறந்தொழிந்தேன்' என்பது அடுத்துள்ள சொல்லாகும். ஒருசொல் நீர்மைத்தாக இது இருப்பினும், உண்மையில் துறத்தல், ஒழிதல் என்ற இரண்டு சொற்களைக் கொண்டதாகும் இது. துறத்தல் என்பது மனத்தால் துறத்தலையும் 'ஒழிதல்' என்பது உடலால் துறத்தலையும் குறிப்பனவாகும். அடிகளார், திருவடிப்பேறு கிடைத்த விநாடியே கடலனைய சுற்றத்தை உடம்பினால் மட்டுமல்லாமல் மனத்தாலும் துறந்துவிட்டார்.

இதனைக் கூறிய பின்னர், பூவல்லி கொய்யவேண்டும் என்று பாடுகிறார். கொய்தலாகிய செயல் உடலைப் பொறுத்ததாகும். மெய்யினால் இப்பணி செய்யப்பெறும் போது மொழியும், மனமும் என்ன செய்கின்றன? மொழி 'புணையாளன்' சீர் பாடுகிறது. எங்கோ அம்பலத்தில் ஆடுகின்றவனின் திருவுருவை மனம் தன்னிடத்தே பதித்துக்கொள்கின்றது.

மனம், மொழி, மெய் என்ற மூன்றும் இப்பணியைச் செய்ய எப்படி முடிந்தது? இதுவரை இந்த உடல் அமைச்சர் உடை அணிந்து அதற்குரிய பணியைச் செய்து வந்தது. அமைச்சரின் வாய், மக்கள் குறை கேட்டு அதனைப் போக்க ஆணையிடும் பணியைச் செய்துவந்தது. மனமோ நூற்றுக்கணக்கான சுற்றங்கள்பற்றி நினைத்து மகிழ்ந்து வந்தது.

திருவடி தலையில் பட்டவுடன், முதலில் சுற்றம்பற்றிய மனத்திலுள்ள எண்ணம் ஒழிந்தது. அதில் அவன் திருவருள் நிறைந்தது, வாய் அவன் புகழ் பாடிற்று. மெய் பூக்கொய்தல் முதலிய பணிகளில் ஈடுபடலாயிற்று.

திருவடி சம்பந்தம் பெற்றால் அந்த விநாடியே பசு கரணங்கள் பதி கரணங்களாகி விடுகின்றன என்ற

நுண்ணிய கருத்தை 'வைத்தலுமே' என்ற சொல்லிலுள்ள ஏகாரத்தால் பெறவைத்தார்.

276. எந்தை எம் தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்து என்னை ஆண்டுகொண்ட பாண்டிப் பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேன் இருந்த
பொந்தைப் பர்வி நாம் பூவல்லி கொய்யாமோ 2

பந்தம் அறுத்து–பாசங்களை நீக்கி. பொந்தைப் பரவி–பொந்தாகிய கோயிலை வணங்கி.

என்னுடைய தந்தை, என்னுடைய தாய், என்னுடைய சுற்றம் இவற்றோடு நண்பர் முதலிய கூட்டம் ஆகிய அனைவரிடமும் நான் கொண்டிருந்த தொடர்பாகிய பந்தத்தை ஒவ்வொன்றாக நீக்காமல், ஒருசேர அறுத்தெறிந்து என்னை ஆட்கொண்டவன் பாண்டிப்பிரான்.

அந்தப் பாண்டிப்பிரான் திருஇடைமருதூரில் தேன் நிறைந்த பொந்தாகிய கோயிலில் அமைந்துள்ளான் என்றவாறு.

இந்த இரண்டு பாடல்களும், உலகிடை வாழும் மனிதனுக்குச் 'சுற்றம்' என்னும் தொடக்கு எவ்வளவு வலுவாக அமைந்துள்ளது என்பதைக் குறிக்கின்றன. சாதாரண, மனிதர்களைப் பொறுத்தமட்டில் பிறப்பால் வரும் சுற்றம், அதனோடு தொடர்புடைய நட்பு எனும் சுற்றம் என்பவற்றோடு—பதவி உயர உயர அதற்குரிய சுற்றமும் நட்பும் விரிந்துகொண்டே செல்லும்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை பறிபோகும் பதவியைப் போன்றதன்று அடிகளார் மேற்கொண்ட பதவி; திருப்பெருந்துறை நிகழ்ச்சி நடைபெற்றிராவிட்டால் இறுதி வரை அடிகளார் அமைச்சராகவே இருந்திருப்பார். ஆகவேதான், பதவிபற்றி வரும் சுற்றத்தை ஏனைய சுற்றத்தோடு இணைத்து 'சுற்றம் மற்றும்' என்று பாடுகிறார்.

இந்தச் சுற்றங்களிலிருந்து ஒருவன் தன்னைப் பிரித்துக் கொள்வது மிகமிகக் கடினமான காரியமாகும்; ஏறத்தாழ இயலாதென்றே கூறிவிடலாம். ஆனால், மிகக் கடின்மான இக்காரியத்தை, பெருந்துறையான் ஒரே விநாடியில் செய்தான் ஆதலின், அந்த நன்றிப்பெருக்கால் இவ்விரு பாடல்களிலும் அதனைக் குறிக்கின்றார்.

'புணையாளன் சீர்பாடி' என்று முதல் பாடலில் வருவதைக் கவனித்தல் வேண்டும். கடலிலோ ஆற்றிலோ நீண்டதூரம் நீந்தவேண்டியவர்கள் புணை ஒன்றைப் பற்றிக் கொண்டு நீந்துதல் இயல்பாகும். இத்தனை சுற்றத்தாரையும் ஒரே விநாடியில் விட்டு நீங்கினால் மனத்தில் ஒரு வெற்றிடம் ஏற்படும். அந்த வெற்றிடம் மனிதனைப் பயித்தியமாக ஆக்கிவிடும். அவ்வாறு நிகழாமல் அடிகளாரைத் தடுத்தது தில்லைக் கூத்தன் திருவடியாகும். மனத்தின் காலியான இடத்தைத் திருவடி நிறைத்துக்கொண்டமையின் எவ்விதத் தீங்கும் நிகழவில்லை.

தாய் தந்தை முதல் சுற்றம் வரையுள்ள இவர்கள் மாட்டு ஏற்பட்டுள்ள பந்த பாசம் என்ற பெருங்கடலை, ஒரு புணையின்றிக் கடத்தல் இயலாதாதலின் தில்லைக்கூத்தன் திருவடி புணையாயிற்று என்கிறார்.

277. நாயின் கடைப்பட்ட நம்மையும் ஓர் பொருட்படுத்து
தாயின் பெரிதும் தயா உடைய தம் பெருமான்
மாயப் பிறப்பு அறுத்து ஆண்டான் என் வல் வினையின்
வாயில் பொடி அட்டி பூவல்லி கொய்யாமோ 3

வல்வினையின் வாயில் பொடி அட்டி–வலிய வினையின் வாயில் மண்ணைப்போட்டு. பொருள்படுத்து–பொருளாக எண்ணி.

நாயைவிடக் கடைப்பட்டவராகிய தம்மை ஒரு பொருளாக ஆக்கி, தொடர்ந்து வருகின்றதும் நிலையில்லாததுமாகிய தம்முடைய பிறப்பை ஒரேயடியாக

அறுத்தான். அறுத்ததோடு நில்லாமல் ஆட்கொள்ளவும் செய்தான். இவ்வாறு செய்வதற்குத் தம்மிடம் என்ன இருந்தது என்று நினைக்கின்றார் அடிகளார். அதற்குரிய தகுதி தம்பால் ஒன்றுமில்லை என்ற நினைவு வந்தவுடன் இதனைச் செய்தவன் தாயைக் காட்டிலும் சிறந்த தயாவுடையவன் என்ற முடிவிற்கு வருகிறார்.

அடுத்து வரும் பகுதி பல முறை சிந்தித்து மகிழவேண்டிய பகுதியாகும். திருவாதவூரர் என்ற மனிதர், இப்பிறப்பிற்கு முன்னர் எத்தனை பிறப்புகள் எடுத்தார் என்பது யாருக்கும் தெரியாது. பெரிய அரசப்பணி பூண்ட அவர், அறிந்தும் அறியாமலும் பல நன்மை, தீமைகளைச் செய்திருத்தல் கூடும். இவற்றின் பயனாகவுள்ள பல பிறப்புகள் அடுத்தும் வருதல்கூடும். திருவாதவூரர் என்ற மனிதர் எவ்வளவு பெரிய அமைச்சராக இருந்திருப்பினும், இந்தச் சங்கிலித் தொடரை ஒன்றும் செய்திருக்க முடியாது. காரணம் வினை என்ற சங்கிலித் தொடரின் உள்ளே அகப்பட்டவர் ஆவார் அவர்.

எதிர்பாராத விதமாக, ஆலவாய்ச் சொக்கன் ஓரிரு விநாடியில் இந்தச் சங்கிலித் தொடரை அறுத்து அதனுள் அகப்பட்டுக்கொண்டிருந்த அவரை ஆட்கொள்ளவும் செய்தான்.

இதுவரை அடிகளாரைச் சுற்றி நின்ற வினைகள், அடுத்தடுத்து அவருக்கு 'என்ன செய்யப்போகிறோம், பார்' என்று நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டிருந்தன.

சொக்கன் பிறவியை அறுத்து ஆட்கொண்டவுடன் சப்புக்கொட்டிக்கொண்டிருந்த அந்த வினைகளின் வாயில் மண் விழுந்தது.

தம்மைச் சுற்றியிருக்கும் வினையின் வாயில் மண்ணையள்ளிப் போட்டோம் என்று சொல்லும் தைரியம் யாருக்கும் வரமுடியாது. ஆனால், தாமே

அதனைச் செய்ததாக அடிகளார் இதோ பேசுகிறார். 'என் வல்வினையின் வாயில் பொடி அட்டி; பூவல்லி கொய்யாமோ' என்பதே அவருடை வாக்கு. 'அட்டி' என்ற வினையெச்சம் 'கொய்யாமோ' என்ற வினைகொண்டு முடிந்தது. இதற்கு நாம் என்பது தோன்றா எழுவாயாகும்.

278. பண்பட்ட தில்லைப் பதிக்கு அரசைப் பரவாதே
எண் பட்ட தக்கன் அருக்கன் எச்சன் இந்து அனல்
விண் பட்ட பூதப் படை வீரபத்திரரால்
புண் பட்டவா பாடி பூவல்லி கொய்யாமோ 4

பண்பட்ட–இசை உண்டான. எண்பட்ட–எண்ணத்தக்க. அருக்கன்–சூரியன். எச்சன்–யாகபுருஷன். இந்து–சந்திரன்.

தக்கன் வேள்விக் கதையை உட்கொண்டதாகும் இப்பாடல்.

279. தேன் ஆடு கொன்றை சடைக்கு அணிந்த சிவபெருமான்
ஊன் நாடி நாடி வந்து உட்புகுந்தான் உலகர் முன்னே
நான் ஆடி ஆடி நின்று ஓலம் இட நடம் பயிலும்
வான் நாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ 5

தேன்–வண்டு. ஊன்–உடல். ஓலம் இட–உடன் அழைத்துச் செல்லாமையால் ஓலம் என்று கூவ.

இப்பாடலில் சிக்கலாகவுள்ள பகுதி 'ஊன் நாடி நாடி வந்து உள்புகுந்தான்' என்பதாகும். நாடி நாடி வந்து என்பதற்கு, திருப்பெருந்துறை, மதுரை, உத்தரகோச மங்கை, கழுக்குன்று ஆகிய இடங்களில் அடிகளாரை நாடி வந்தான் என்று பொருள் கண்டனர் பலர். திருப்பெருந் துறையில் குருநாதர் வடிவுடனும், ஆலவாயில் குதிரைச் சேவகன் வடிவிலும் கூலியாள் வடிவிலும், கழுக்குன்றில் கணக்கிலாப் பல கோலங்களுடனும் வந்து காட்சி தந்தான். திரு உத்தரகோச மங்கையில் எவ்வாறு காட்சியளித்தான் என்பது தெரியவில்லை.

திருப்பெருந்துறையில் அவன் உட்புகுந்ததை அடிகளாரே பல இடங்களில் குறித்துள்ளார். குதிரைச் சேவகனாக வந்தவனும், கூலியாளாக வந்தவனும் அடிகளார் உள்ளத்தில் உட்புகுந்திருக்க வேண்டும். இவற்றையெல்லாம் மனத்துட்கொண்டு பார்த்தால், நாடி நாடி என்ற தொடர் மிகச் சிறந்த ஓர் உட்கருத்தைக் கொண்டு விளங்குவதைக் காணலாம். வைணவப் பெரியோர்கள் 'உடைமைக்கு ஒரு முழுக்கு' உடையானுக்கு பத்து முழுக்கு என்று கூறுவது நாடி நாடி என்பதற்குரிய சிறந்த விளக்கமாக அமைந்துள்ளது.

ஒருவன் அணிந்துள்ள மோதிரம் கிணற்றுக்குள் விழுந்துவிட்டால் அவன் உடைமையாகிய அது ஒரே முறை தண்ணீருக்குள் மூழ்கி அடியில் சென்று தங்கி விடுகிறது. இதுவே உடைமைக்கு ஒரு முழுக்கு என்பதாகும். ஆனால், மோதிரத்தின் சொந்தக்காரன் நீருள் விழுந்து மோதிரம் கிடைக்கும் வரை நீருக்குள் மூழ்கி மூழ்கி எழுகின்றான் ஆதலின், உடையானுக்கு பத்து முழுக்கு என்பது இதன் பொருளாகும்

அதாவது, வழியோடு சென்ற வாதவூரரை, குருநாதர் வலிய வந்து ஆட்கொண்டார் என்பதை அடிகளாரே, 'வேண்டி என்னைப் பணிகொண்டாய்' என்று கூறுவது மேலே கூறிய கருத்துக்கு அரண் செய்வதாகவே அமைந்துள்ளது. திருப்பெருந்துறையில் திருவாதவூரரை ஆட்கொண்டு, தமது உடைமையாகவே ஆக்கிக் கொண்டார் குருநாதர். இப்பொழுது அடிகளார் உடைமையாகவும், குருநாதர் உடையானாகவும் ஆகிவிட்ட காரணத்தால் உடைமை எங்கே திரிந்தாலும் அதைத் தேடிச் சென்று அருள் செய்ய வேண்டிய கடப்பாடு, உடையானாகிய குருநாதருக்கு வந்து விடுகிறது. இந்த அரிய

கருத்தைத்தான் 'நாடி நாடி' என்ற தொடரில் அடிகளார் பேசுகிறார்.

280. எரி மூன்று தேவர்க்கு இரங்கி அருள் செய்தருளிச்
சிரம் மூன்று அறத் தன் திருப் புருவம் நெரித்தருளி
உரு மூன்றும் ஆகி உணர்வு அரிது ஆம் ஒருவனுமே
புரம் மூன்று எரித்தவா பூவல்லி கொய்யாமோ 6

இப்பாடலில் வரும் முதலடி 'எரிமூன்று தேவர்க்கு இரங்கி அருள் செய்து அருளி' என்பதாகும். எரிமூன்று என்றதனால் வேதியர்கள் வளர்க்கும் காலை, நண்பகல், மாலை என்ற மூன்று நேரங்களுக்குரிய ஆகவனீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம் ஆகிய முத்தீ என்றவாறு. இவ்வாறு பொருள் கொள்வதற்கு 'தேவர்க்கு எரி மூன்று அளித்தருளி' என்று கொண்டு கூட்டுச் செய்ய வேண்டும். இனி இவ்வாறு பொருள் கொள்வதில் ஒரு சிறு குழப்பம் நேரிடுகிறது. இந்த முத்தீயையும் தேவர்கள் விரும்புகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்கள் விரும்புவதெல்லாம் யாகத்தில் வளர்க்கப்படும் அக்னி குண்டங்களையே ஆகும். தேவர்கள் அதனை விரும்புவதற்கு ஒரு காரணம் உண்டு. ஆடு மாடு முதலியவற்றைப் பலியிட்டு அவற்றின் இறைச்சியை நெய்யோடு சேர்த்து ஓமத் தீயில் இடுவர். 'அவிஷ்' என்ற சொல்லப்படும் இதனை தேவர்கள் விரும்பி உண்ணுகின்றார்கள் என்பது புராணங்களில் பேசப்படுவ தாகும். இவ்வாறு யாகங்கள் செய்து தேவர்களுக்கு அவி உணவைத் தருகின்றவர்கள், தேவர்களால் மிகவும் நேசிக்கப்படுகிறார்கள் என்ற கருத்தை 'தேவநாம் ப்ரிய' என்று வேதத்தில் வரும் தொடர் குறிப்பதாகும். யாகத்தில் வளர்க்கும் ஓமத் தீயையும், முத்தீ என்ற சொல்லால் ஒரு காலத்தில் குறிப்பிட்டனர் போலும். புறநானூற்றில் வரும்

'முத்தீ விளக்கில் துஞ்சும்' (புறம்: 2) என்ற தொடரும் இப்பொருளைத் தருதல் சிந்திக்கந் பாலதாகும்.

தக்கன் யாகத்தில் எரியில் இடும் அவி உணவை விரும்பி வந்த தேவர்கள், வீரபத்திரரால் தண்டிக்கப் பட்டபோது, சிவனை வேண்டித் தம் துன்பம் தீர்ந்தனர் என்ற பழைய கதை பற்றியதாகும், முதலடி.. 'சிரம் மூன்று அறத் தன் திருப்புருவம் நெரித்தருளி' என்ற தொடர் ஓரளவு குழப்பம் விளைவிப்பதாகும். தக்கன் வேள்வியில் தக்கன், எச்சன் ஆகிய இருவர் தலைகளும் அறுப்பட்டனவே தவிர மூன்றாவது தலைபற்றி விளக்கம் எதுவும் இல்லை. எனவே, தன் திருப்புருவத்தை நெரித்தருளி, சிரமூன்றும் அறுத்தான் என்பது எந்தக் கதையைச் சுட்டி நிற்கிறது என்பதை உறுதியாகக் கூற வழியில்லை.

உரு மூன்றுமாகி என்ற தொடர் மிக நுண்மையான ஒரு கருத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்று நிலைகளிலும் இவனே உள்ளான் என்கிறார் அடிகளார்.

எந்த ஒரு பொருளும் இந்த மூன்று நிலைகளில் ஏதாவது ஒன்றில்தான் இருக்க முடியும். அதேபோல், அடுத்த நிலைக்குப் போகவேண்டுமானால் தன் பழைய நிலையை விட்டுத்தான் அடுத்த நிலைக்குச் செல்லமுடியும். தண்ணீர் பனிக்கட்டியாகும்பொழுது அங்குத் தண்ணீர் இல்லை. பனிக்கட்டிதான் இருக்கிறது. ஆனால் இறைவனைப் பொறுத்தமட்டில் உருவமாக உள்ள அதே நேரத்தில் அருவமாகவும், அருவுருவமாகவும் இருக்கும் பேராற்றல் அவன்பால் உண்டு. தன் இயல்பை ஒருசிறிதும் மாற்றிக்கொள்ளாமல் உருவநிலை, அருவநிலை, அருவுருவ நிலை என்ற மூன்றிலும் ஒரே நேரத்தில் உள்ளான் என்கிறார் அடிகளார்.

இப்படி மூன்று நிலைகளிலும் இருக்கின்ற ஒருவனை நம்மால் பார்க்கவோ, அறியவோ முடியாது என்பது ஒரு புறம் இருக்க, ஓரளவு உணர்தல்கூட கடினம் என்கிறார் அடிகளார். இக்கருத்தையே 'உரு மூன்றுமாகி உணர்வரிதாம் ஒருவனுமே' என்ற தொடர் குறிப்பிடுகிறது.

இப்பாடலின் மூன்றாவது அடியோடு நம்மாழ்வாரின் 'உளன் எனின் உளன் அவன்' (நாலா: 2090) என்ற பாடல் ஒப்ப வைத்துச் சிந்திக்கத் தக்கதாகும்.

281. வணங்கத் தலை வைத்து வாய் கழல் வாய் வாழ்த்த வைத்து
இணங்கத் தன் சீர் அடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கோடு அணி தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணம் கூரப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ 7

உலகிடைப் பிறந்த மனிதர் யாவர்க்கும் மனம், மொழி, மெய், என்ற மூன்றும் உண்டு. இந்த மூன்றும் ஒன்றாக இணைந்து தொழிற்படும்போது பெரும்பயனை விளைவிக்கின்றன. ஆனால் இவை மூன்றும் ஒரே பணியில் ஈடுபடுதல் ஏறத்தாழ இயலாத காரியம். அப்படியானால் மனிதன் தன் முயற்சியால் இதனைச் செய்தல் இயலாத காரியம் என்பதை அறிந்து, இறையருளைத் துணைக்கு அழைத்துக் கொண்டால் இது நடைபெறும் என்க. இதே கருத்தைத் தான் நாவரசர் பெருமானும் 'வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை' (திருமுறை: 5-90-7) என்று கூறுகிறார்.

அடிகளார் காலத்தில் சமுதாயம் வளர்ந்துவிட்டது. அதற்கேற்ப நாகரிகமும் வளர்ந்துவிட்டது. புற வளர்ச்சி காரணமாக அகவளர்ச்சி குன்றிவிட்டது. இறையுணர்வு மிக்கவர்களைக் காணுதலே கடினமான காலம் ஆகும் அது. இன்னும் கூறவேண்டுமானால், திருவாசகம் பாடும் ஒருவரைக்கூடப் பித்தர் என்று கூறும் மக்கள் நிறைந்த

சமுதாயம் அது. அந்தச் சமுதாயத்தில் ஒத்த கருத்துடை யவர்களைத் தேடுகிறார் அடிகளார். அத்தகையவர்களைத் தேடிப் பிடித்த பிறகுதான் அவ்வாறு தேடிப்பிடித்தது தம் அறிவாற்றலால் அன்று; அதுவும் இறையருளே என்று உணர்ந்த நிலையில், 'இணங்கத் தன் சீர் அடியார் கூட்டமும் வைத்து' என்கிறார்.

வணங்குவதும் வாழ்த்துவதும் இறைவனை என்று கூறாமல், தமக்கே உரிய முறையில் திருவடிகளை முன்னிலைப்படுத்தி 'வளர்கழல், வணங்கத் தலைவைத்து (அதனை) வாழ்த்த வாய் வைத்து' என்று சொல்லுகின்றார்.

282. நெறி செய்தருளி தன் சீர் அடியார் பொன் அடிக்கே
குறி செய்துகொண்டு என்னை ஆண்ட பிரான் குணம்
பரவி
முறி செய்து நம்மை முழுது உடற்றும் பழ வினையைக்
கிறி செய்தவா பாடிப் பூவல்லி கொய்யாமோ 8

குறிசெய்து–இலக்காக்கி.

'உண்மை அடியார்களின் பொன் அடிக்கே சென்று பொருந்தவேண்டும் என்ற குறிக்கோளை நான் ஏற்றவுடன், அதற்குரிய வழி என்ன என்று காட்டினான் (நெறி செய்து அருளி) என்னை ஆண்டபிரான். என்னைச் சுற்றிநின்று துன்பம்தரும் பழவினைகளைப் பொய்யாக்குகிறேன் என்று கூறி ஆவணம் எழுதிய அந்தப் பெருமானின் குணம் பாடிப் பூவல்லி கொய்யாமோ' என்கிறார்.

283. பல் நாள் பரவிப் பணி செய்ய பாத மலர்
என் ஆகம் துன்னவைத்த பெரியோன் எழில் சுடர் ஆய்
கல் நார் உரித்து என்னை ஆண்டுகொண்டான் கழல்
இணைகள்
பொன் ஆனவா பாடி பூவல்லி கொய்யாமோ 9

ஆகம்–உடல். துன்னவைத்த–சேரவைத்த.

இறைத் தொண்டு, மக்கள் தொண்டு ஆகியவற்றுள் எதனை ஒருவர் மேற்கொண்டாலும் அதனை விடாமல் தொடர்ந்து செய்தல் கடினமாகும். இது மனித மனத்தின் இயல்பு. இவ்வாறு நிகழாமல் இருக்கவேண்டுமானால் இப் பணிக்கு இறையருள் துணைநிற்க வேண்டும். இக் கருத்தையே 'பன்னாள் பணி செய்ய' அவன் திருவடிகளை என் நெஞ்சத்தில் நிலை நிறுத்தினான் என்கிறார்.

284. பேர் ஆசை ஆம் இந்தப் பிண்டம் அறப் பெருந்துறையான்
சீர் ஆர் திருவடி என் தலைமேல் வைத்த பிரான்
கார் ஆர் கடல் நஞ்சை உண்டு உகந்த காபாலி
போர் ஆர் புரம் பாடிப் பூவல்லி கொய்யாமோ 10

பிண்டம்–உடல். கார் ஆர்–கருமைநிறம் பொருந்திய.

திருப்பெருந்துறையான் வாதவூரரின் தலைமேல் திருவடி பதித்தவுடன் எத்தனையோ நிகழ்ச்சிகள் ஒரே விநாடியில் அடுத்தடுத்து நிகழலாயின.

உதாரணமாக, எல்லையற்ற ஆனந்தம் உண்டாயிற்று. திருவாதவூரர் மறைந்து மணிவாசகர் தோன்றக் காரண மாயிற்று. இந்த பூத உடம்பில்கூட அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏறின. இவற்றை யல்லாமல் மற்றொன்றும் நிகழ்ந்தது என்கிறார் அடிகளார்.

மனிதன் இவ்வுடலோடு வாழ்கின்றவரையில் அவன் மனத்துள் நிறைந்திருப்பது ஆசையாகும். மனிதனுக்கு இயல்பாக இருக்கவேண்டிய அளவோடு இந்த ஆசை இருந்திருக்குமாயின் மிக நல்ல காரியங்களை அவன் செய்திருத்தல் கூடும். ஆனால், ஆசை என்ற விதை மனத்தில் பதிந்தவுடன் ஒரே விநாடியில் அது பெருமரமாகி ஆலமரம்போல் தன் கிளைகளை

முற்றிலுமாக விரித்து எந்த மனிதனுடைய மனத்தில் இந்த ஆசை தோன்றிற்றோ அந்த மனிதனை முழுவதுமாகத் தன்வசமாக்கிவிடுகிறது. அதன் பிறகு அவன் என்று சொல்லிக்கொள்ள அங்கு எதுவுமில்லை; எஞ்சியிருப்பது அனைத்தும் பேராசையின் பல்வேறு வடிவங்களேயாகும்.

மனிதனுள் தோன்றி அவனையே முழுவதுமாக மறைத்துக்கொண்டிருக்கும் இந்தப் பேராசை போக வேண்டுமேயானால் இறைவனின் திருவருள் இருந்தாலன்றி அது ஒருபோதும் நடைபெறாது. அதனையே அடிகளார் 'பேர் ஆசையாம் இந்தப் பிண்டம் அற, சீர் ஆர் திருவடி என் தலைமேல் வைத்த பிரான்' யார் என்று வினவினால் 'பெருந்துறையான்' என்க என்று கூறுகிறார்.

அடுத்து நிற்பது 'போர் ஆர் புரம் பாடி.' என்பதாகும். இறைவன் போர்தொடுக்கக் காரணமாயிருந்த திரிபுரத்தைப் பாடி என்று பொருள்கொண்டால், அது பொருந்து மாறில்லை என்று கருதி, 'பேரார் புரம்' என்று பாடங் கொண்டனர் சிலர். இவ்விரண்டுமே பொருந்துமாறுள்ளன. எவ்வாறெனின், 'போரார் புரம் பாடி' என்பதற்கு இறைவன் போரினை மேற்கொள்ள, திரிபுரம் அழிந்தமை பற்றிப் பாடி என்று பொருள்கொள்ளலாம். போர் என்பத னைப் பேர் என்று மாற்றி, பெருமை பொருந்திய சிவபுரம் என்றும் பொருள் கொள்ளலாம்.

285. பாலும் அமுதமும் தேனுடன் ஆம் பரா பரம் ஆய்
கோலம் குளிர்ந்து உள்ளம் கொண்ட பிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நல் நெறி ஆம். அந் நெறியே
போலும் புகழ் பாடிப் பூவல்லி கொய்யாமோ **11**

குரைகழல்கள்–ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடி.

'கோலம் குளிர்ந்து உள்ளம் கொண்ட பிரான்' என்ற தொடரை உள்ளம் குளிர்ந்த கோலம் கொண்டபிரான்

என மாற்றுக. உள்ளம் கோலம் இரண்டையும் கூறினமையின் மானிட வடிவில் இருந்த குருநாதரையே இது குறிப்பதாகும். எனவே, குருநாதர் இவரை ஆட்கொள்ள வேண்டுமென்ற குளிர்ந்த உள்ளத்தோடு அழகிய கோலத்தைக் கொண்டிருந்தார் என்க.

இங்குக் கூறப்பட்ட குருநாதரின் கோலத்தைக் கண்ட மாத்திரத்தில், அது பாலும், தேனும், அமுதமும் கலந்தது போன்ற இனிமையும் பெருமையும் தருவதாய் இருந்தது.

ஞாலத்தில் உள்ளவர்கள் 'பிரான் குரை கழல்கள் பரவுவார்; அந்நெறியே நன்னெறியாம்; (அவன்) புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ' என்கிறார்.

286. வானவன் மால் அயன் மற்றும் உள்ள தேவர்கட்கும்
கோன் அவன் ஆய் நின்று கூடல் இலாக் குணக்
குறியோன்
ஆன நெடும் கடல் ஆலாலம் அமுது செய்ய
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ 12

'வானவன் மால் அயன் மற்றுமுள்ள தேவர்கட்கும் கோன் அவனாய் நின்ற'வன். அவன் தனித்து நிற்பவன்; குணங்குறி இல்லாதவன். (கூடல் இலாது).

பிற உயிர்களைக் காப்பான்வேண்டி, கடலில் தோன்றிய ஆலகாலத்தை எடுத்து விழுங்க, அதுவே அவனுக்குப் 'போனகம்' (விரும்பியுண்ணும் உணவு) ஆயிற்று என்க.

287. அன்று ஆல நீழல் கீழ் அரு மறைகள் தான் அருளி
நன்று ஆக வானவர் மா முனிவர் நாள்தோறும்
நின்று ஆர ஏத்தும் நிறை கழலோன் புனை கொன்றைப்
பொன் தாது பாடி நாம் பூவல்லி கொய்யாமோ 13

ஆர–நிரம்ப. தாது–மகரந்தம்.

அன்று ஆலின்கீழ் இருந்து அருமறைகள் (அறிய வேண்டிய ரகசியம்) அருளியவன்—வானவர், மாமுனிவர் நின்று நாள்தோறும் நன்றாக, ஆர ஏத்தும் நிறைகழலோன்.

நிறைகழல் என்ற வினைத்தொகையில் கழல் என்பது கழலை அணியும் திருவடிகளை உணர்த்தி நின்றது. அருள் நிறை கழல் என்பதை முக்காலத்துக்கும் விரிக்க.

288. படம் ஆக என் உள்ளே தன் இணைப் போது அவை
அளித்து இங்கு
இடம் ஆகக் கொண்டிருந்த ஏகம்பம் மேய பிரான்
தடம் ஆர் மதில் தில்லை அம்பலமே தான் இடமா
நடம் ஆடுமா பாடி பூவல்லி கொய்யாமோ 14

படம்–சித்திரம். இணைப் போது–இரண்டு திருவடி மலர்கள்.

'தம் திருவடிக் கமலம் இரண்டின் முன் பகுதிகள் (பாதங்கள்) என்னுள்ளே படமாக பதியுமாறு திருவடி தீட்சை செய்து, என் உள்ளத்தையே தன் இருப்பிடமாகச் செய்து கொண்டவன் ஏகம்பம் மேவிய பெருமானாம்' என்க.

திருவடி தீட்சை செய்யும்போது, திருவடிகளின் முன்பகுதியிலுள்ள கட்டை விரல்கள் இரண்டையும், தீட்சை பெறுபவரின் உச்சந்தலையில், சகஸ்ர தளம் உள்ள இடத்தில் பதிக்க வேண்டும் என்று கூறுவர்.

289. அங்கி அருக்கன் இராவணன் அந்தகன் கூற்றன்
செம் கண் அரி அயன் இந்திரனும் சந்திரனும்
பங்கம் இல் தக்கனும் எச்சனும் தம் பரிசு அழிய
பொங்கிய சீர் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ 15

அந்தகன்–இயமன் அல்லது அந்தகாசுரன். கூற்றன்–அவன் தூதன்.

சிவபெருமானால் உரம் குலைந்தவர்கள் பட்டியல் இப்பாடலில் தரப்பெற்றுள்ளது. அந்தகாசுரன், இராவணன் இருவரும் தவிரப் பாடலில் குறிப்பிடப்படும் ஏனையோர் அனைவரும் தக்கன் வேள்வித் தகர்தின்றவர் ஆவார்கள்.

'பங்கம் இல் தக்கன்' என்றது வெட்கம் இல்லாத தக்கன் என்ற பொருளைத் தரும்.

290. திண் போர் விடையான் சிவபுரத்தார் போர் ஏறு
மண்பால் மதுரையில் பிட்டு அமுது செய்தருளி
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண் பாடல் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ 16

போர் ஏறு–போரிற் சிங்கம்போன்றவன். தண்டாலே பணிகொண்ட–கைத்தடியால் அடிக்கப்பெற்ற.

போர் செய்கின்ற ரிஷப் வாகனத்தை உடையவனும் சிவபுரத்துப் போர் ஏறு போன்றவனும், மதுரையில் பிட்டமுது செய்தவனும் ஆகிய ஒருவனை (தன்னை), பாண்டியன் பணிகொண்டதால் அவனுக்கு ஏற்பட்ட புண்ணைப் பாடுவோமாக.

இப்பகுதிக்கான மற்றொரு பொருளைப் பின்னுரையில் காணலாம்.

291. முன் ஆய மால் அயனும் வானவரும் தானவரும்
பொன் ஆர் திருவடி தாம் அறியார் போற்றுவதே
என் ஆகம் உள் புகுந்து ஆண்டுகொண்டான் இலங்கு
அணியாம்
பல் நாகம் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ 17

முன் ஆய–எல்லாத் தேவர்களிலும் முதன்மை ஆய. தானவர்–அசுரர். இலங்கு அணியாம் பல் நாகம்–விளங்குகின்ற ஆபரணங்களாகிய பல பாம்புகளை.

'மால் அயனும், வானவரும், தானவரும் பொன்னார் திருவடியைக் கண்டு அறியராயினும் போற்றுவதைக் கடமையாகக் கொண்டனர்.'

'என் உள்ளத்தின் உள்ளே புகுந்து என்னை ஆட்கொண்டவன் அணிந்துள்ள நாகங்களைப் போற்றிப் பாடுவோமாக.'

தேவர் முதலியோர் திருவடிகளை அறியாதிருந்தும் போற்றினர் என்பதால், தம் உள்ளே புகுந்து தம்மை ஆட்கொண்ட திருவடிகளைப் போற்றாமல் இருப்பது முறையற்றது என்று சொல்லும் வகையில் அமைந்துள்ளது பாடலின் பிற்பகுதி.

292. சீர் ஆர் திருவடித் தண்ட சிலம்பு சிலம்பு ஒலிக்கே
ஆராத ஆசை அது ஆய் அடியேன் அகம் மகிழ
தேர் ஆர்ந்த வீதிப் பெருந்துறையான் திரு நடம் செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ 18

இதுவரை திருவாசகத்தில் இடம்பெறாத ஒரு புதிய கருத்து இப்பாடலில் இடம்பெறுகிறது. குதிரையின்மேல் வந்த வாதவூரர் முதலில் கண்டது மானிட வடிவில் இருந்த குருநாதரின் திருவுருவையேயாம். அந்தத் திருவுருவம் பூமியில் கால்பதித்து இருந்தும்கூட, அடிகளார் அந்த வடிவை, சிவனெனத் தேறியதாக, 'சிவனென யானும் தேறினன் காண்க' என்று தாமே சொல்லியுள்ளார். இந்த நிலையில் அந்தக் குருநாதரின் திருவடி, அடிகளாரின் சகஸ்ரதளத்தில் சம்பந்தப்படுகிறது. உடனடியாக மணிவாசகர் பிறக்கிறார். அதே விநாடியில் எதிரே இருந்த குருநாதர் மறைந்து, உமையொருபாகன் காட்சியளிக்கிறான். இதுவரை

அடிகளாரின் இறையருள் அனுபவத்தில் தோன்றிய பல்வேறு படிகளாகும் இவை.

இதனை அடுத்து ஒரு காட்சி கிடைத்ததுபோலும். அக்காட்சி கிடைக்க ஒரு காரணமும் இருந்தது. குருநாதராக இருந்தவர் வாய் திறந்து பேசிய சொற்களாகும் அவை. 'கோலம் ஆர்தரு பொதுவினில் வருக' (திருவாச:2-128) என்பவை அச்சொற்கள். இவை காதில் விழுந்தவுடன் பொதுவினில் நடஞ்செய்கின்ற பெருமானுடைய வடிவு, அடிகளாரின் உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும்.

எதிரே உள்ள மானுட வடிவில் இருந்த குருநாதரின் ஆணையில் பிறந்த இந்தச் சொற்கள், தில்லைக்கூத்தன் வடிவை அடிகளார் உள்ளத்தில் தோற்றுவித்தது உண்மைதான். தமக்கு ஆணையிட்ட குருநாதரை மணிவாசகர் இப்பொழுது மறுபடியும் பார்க்கிறார். குருநாதர் மறைந்துவிட்டார்; உமையொருபாகன் மறைந்து விட்டான்; என்ன அதிசயம்! இவர்கள் காட்சியளித்த அதே இடத்தில் தில்லைக் கூத்தன் நடமிடுகின்றான்.

மானிட குருநாதரும், உமையொருபாகனும், தில்லைக் கூத்தனும் ஒருவனே என்ற நினைவு வந்தபோது, இப்பாடலின் மூன்று, நான்காவது அடிகள் வெளிவரு கின்றன. திருப்பெருந்துறையான் திருநடம் செய்வதைக் காண்பது பேரானந்தம் என்கிறார் அடிகளார்.

'சிறப்புப் பொருந்திய தில்லைக் கூத்தனின் சிலம்பி னின்று தோன்றும் (சிலம்பும்) ஒலியைக் கேட்பதற்கே, என் அகம் ஆராத ஆசையதாய் ஏங்கிற்று. அதைக் கேட்டு மகிழ வாய்ப்புத் தந்து திருப்பெருந்துறை வீதிகளில் திருநடம் செய்தான். அதனைப் பாடிப் பூவல்லி கொய்யாமோ' என்றபடி..

293. அத்தி உரித்து அது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவு கொண்டு இவ்வுலகில் பிள்ளையும் ஆய்
முத்தி முழு முதல் உத்தரகோசமங்கை வள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ 19

அத்தி–யானை.

யானையை உரித்து, அதன் தோலைப் போர்த்துக் கொண்டமையின் 'பித்த வடிவு' என்றார். யானையை உரிக்கின்ற அளவிற்கு வீரம் பொருந்திய இளைஞன் என்று நினையற்க; அதே நேரத்தில் இவன் குழந்தையாகவும் ஆகக்கூடியவன்.

உத்தரகோசமங்கையிலுள்ள இவன் பிறவா நெறியாகிய முத்திக்கு முழுமுதல் தலைவனாகவும் உள்ளான் என்பதைப் பாடுவோமாக.

நான்காவது அடியில் 'புத்தி புகுந்தவா' என்பது ஒரு புதிய சிந்தனையாகும். உள்ளம் புகுந்தவன் என்றும், மனம் புகுந்தவன் என்றும் இதுவரை பலமுறை பாடியுள்ளார். மனம், சித்தம், புத்தி, அகங்காரம் ஆகிய அந்தக் கரணத்தின் மூன்றாவதாகவுள்ள புத்தி, இதுவரை பேசப் பெறவில்லை. மனத்திலும் சித்தத்திலும் ஒரு பொருள் சென்று தங்கமுடியும். அதன் எதிராக, இந்த மனமும் சித்தமும், தாங்கள் சென்று, ஒரு பொருளைப் பற்றிக் கொண்டு அதன்மாட்டு நிற்பதில்லை. தலைவிமாட்டு அல்லது தலைவன்மாட்டு மனம் சென்றது என்று இலக்கியம் கூறினும், அது உபசார வழக்கேயாம்.

மனம், சித்தம் என்ற இரண்டின் செயல் இவ்வாறாகும். இதன் எதிராக, புத்தி தானே சென்று ஒரு பொருளிடத்துத் தங்கும் இயல்புடையது. மனம், சித்தம் என்பவைபோல எந்த ஒன்றையும் அப்படியே ஏற்றுக்கொள்ளும் இயல்பு புத்திக்கில்லை. அதன் மறுதலையாக, எந்த ஒரு பொருளை

யும் சென்று ஆராயும் இயல்புடையது புத்தி. ஆதலால், அந்தப் புத்தியினிடம் எந்த ஒன்றும் புகுந்து தங்கமுடியாது. இது புத்தியின் இலக்கணம்.

ஆனால், இந்த இலக்கணத்தை மீறக்கூடியவன் ஒருவனுண்டு. அவன் ஒருவனே புத்தியினுள் புகமுடியும். அதனையே அடிகளார் 'புத்தி புகுந்தவா' என்று பாடுகிறார்.

தன் நிலையை விட்டு நீங்கி, பொருளினிடம் சென்று அதுபற்றி ஆராயும் இயல்புடையது புத்தி. பொருள்களை ஆராயும் புத்தியின் உள்ளேயே ஒருவன் புகுந்துவிட்டான் என்றால், அந்த மனிதனுடைய நான்கு அந்தக்கரணங்களில் மூன்று அவன் வசமில்லாமல் நழுவிவிட்டது என்பது பொருளாகும்.

எஞ்சியிருப்பது அகங்காரம் என்ற ஒன்றேயாம். சாதாரணமாக இறுதிவரையில் தன் தனித்தன்மையை இழக்காத இந்த அகங்காரம், இதுவரை தன் ஆணைக்கு உட்பட்டுப் பணி செய்த மனம், சித்தம், புத்தியாகிய மூன்றும் இப்பொழுது வேறு ஒருவருடைய ஆதிக்கத்தின்கீழ்ச் சென்றுவிட்டமையின் சிறகிழந்த பறவையாகச் செயலற்றுக் கிடக்க நேரிடுகிறது.

அடியார்கள் என்பவர்கள் மணிவாசகரைப் போல, கண்ணப்பரைப் போல அதீத நிலைக்குச் சென்றவுடன் இந்த அந்தக்கரணங்கள் நான்கும், தமக்கென்று தனிச் செயல்கள் எதுவுமில்லாமல் இறையனுபவத்துள்ளே மூழ்கி விடுகின்றன. இந்த அதீத நிலையை அடைவதற்குத் தொடக்கம், மனமும் சித்தமும்போல, புத்தியும் அவ்வழிப் படுதலாகும்.

இந்த இறையனுபவ வளர்ச்சியின் நுணுக்கத்தைப் 'புத்தி புகுந்தவா' என்ற இரண்டு சொற்களால் அடிகளார் விளக்கினார்.

294. மா ஆர ஏறி மதுரை நகர் புகுந்தருளி
தே ஆர்ந்த கோலம் திகழ பெருந்துறையான்
கோ ஆகி வந்து எம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூ ஆர் கழல் பரவிப் பூவல்லி கொய்யாமோ 20

மா–குதிரை. தேவார்ந்த கோலம்–தெய்வத்தன்மை நிறைந்த திருவுருவம்.

(இந்தப் பாடல் மகா சமாசப் பதிப்பிலும், மர்ரே அண்டு கம்பெனி வெளியிட்ட பதிப்பிலும் பிற்சேர்க்கை யிலே சேர்க்கப்பெற்றுள்ளது)

குதிரையின்மேல் ஏறி, மதுரை நகர் புகுந்து, தனது தெய்விகக் கோலத்தைக் காட்டி, என்னை ஆட்கொண்ட வனாகிய பெருந்துறையான் புகழைப் பாடிப் பூவல்லி கொய்வோமாக என்றபடி.

ॐ ॐ ॐ

14. திருவுந்தியார்

ஞான வெற்றி

உந்தி என்ற சொல் அடியார்க்குநல்லார் காட்டும் மேற்கோள் குத்திரத்திலும், பிங்கல நிகண்டிலும் காணப்படும் ஒரு சொல்லாகும். இது மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று என முன்னோர் போந்த உரையாசிரியர் பலரும் கூறியுள்ளனர்.

அடிகளாரின் பாடல்கள் 'உந்தி பற' என்றே முடிகின்றன. சிறுமியர் கீழே குத்துக்காலிட்டு அமர்ந்தும், திடீரென்று பறவைபோல் கைகளை விரித்துக்கொண்டு எழுந்து, ஓடிச்சென்று, மறுபடியும் கைகளை மடக்கிக்கொண்டு அமர்ந்தும் விளையாடுகின்ற இதனை உந்தி விளையாட்டு என்று கூறினர்போலும்.

திருவாசகத்தில் இடம்பெற்ற காரணத்தால் வழககம்போல இத்தலைப்புக்கு முன்னோர் ஒரு 'திரு'வைச் சேர்த்து, பின்னர் ஓர் 'ஆர்' விகுதியும் சேர்த்துத் திருவுந்தியார் என்று கூறிவிட்டனர். பற என்ற சொல் சேராவிட்டால் உந்தி என்ற சொல்மட்டும் இவ்விளை யாட்டைக் குறிப்பதாக அமையாது.

அடிகளார் கூறியுள்ள பல விளையாட்டுக்கள் இன்று இத்தன்மையன என்று விவரமாக அறிந்துகொள்ள முடியா மல் பெயரளவில் நின்றுவிட்டன. அதேபோலத் திருவுந்தி யாரும், திருச்சாழல் போன்றவையும் அமைந்துவிட்டன.

இத்தத் திருவுந்தியாரில் சிறுமியர் குந்தி, எழுந்து குதித்து, மறுபடியும் குந்துகின்ற நிலைக்கு ஏற்பப் பாடல்கள்

அமைக்கப்பெற்றுள்ளன. 'வளைந்தது வில்லு' (திருவாச: 295) என்பதில் குந்தியவர்கள் எழுவதும், 'விளைந்தது பூசல்' என்பதில் எழுந்தவர் கைகளை விரித்து இரண்டு தப்படிகள் ஒரே குதியாகக் குதிப்பதும் நிகழ்கின்றன. இரண்டாவது அடியாகிய 'உளைந்தன முப்புரம் உந்தீபற' என்பதின்போது, சிறகுகளை அசைக்குமாப்போல் கைகளை அசைத்தபடி குந்துதல் இடம்பெறும். அடுத்துவரும் மூன்றாவது அடியாகிய 'ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற' என்பதன் போது பறவைகளின் செயல்கள் போன்ற சில செயல்கள் அபிநயிக்கப்படும். திரும்பவும் அடுத்த பாட்டின் முதலடியில் இரண்டு சீர்களிலும் குந்தியவர்கள் எழுவது இடம்பெறுமாறு கற்பனையில் காட்சிகளை வகுக்க முடிகிறது.

295. வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீ பற
ஒருங்கு உடன் வெந்தவாறு உந்தீ பற 1

வில்லு–மேரு; உகரம் சாரியை.

இந்தப் பாடலும், இதனை அடுத்து வருகின்ற மூன்று பாடல்களும் சிவபெருமான் திரிபுரத்தை அழித்த கதையைக் கூறுவனவாகும். பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய வாயுபுராணத்தில் இடம் பெற்றுள்ள இக்கதை வளர்ந்து வளர்ந்து, பல புதிய சேர்க்கைகளோடு எட்டாம் நூற்றாண்டில் ஒரு வடிவைப் பெற்றுள்ளது.

'வில் வளைந்தது; போருக்குரிய ஆரவாரம் தொடங்கிற்று. தொடங்கிய ஒரு விநாடிக்குள் முப்புரவாசிகள் தொலைந்துபோயினர். அதில் உள்ளவர்கள்மட்டும் அல்லாது வலுவான கோட்டைகளும் ஒருங்கே எரிந்தன' என்றவாறு.

ஆனாலும், பல்வேறு விதமாக வடிவெடுத்துள்ள இந்தக் கதையில் போர் நிகழ்ந்ததாக எந்தக் கதையும் சொல்லவில்லை. பூசல் என்ற சொல்லுக்குப் போர் என்ற பொருள் உண்டேனும், இங்குப் போர் என்ற ஒன்று நிகழாமையின் ஆரவாரம் என்ற பொருளே கொள்ளப் பெற்றது.

'உளைந்தன முப்புரம்' என்றும், 'ஒருங்குடன் வெந்தவாறு' என்றும் தனித்தனியே பேசப்படுதலின் இருவகையாகப் பொருள் கொள்ளப்பெற்றது. உளைதல் என்பது உயிர் உடையவர்கட்கே நிகழ்தலின் முப்புரத்தில் உள்ளவர்கள் என்று பொருள் கொள்ளப்பெற்றது.

296. ஈர் அம்பு கண்டிலம், ஏகம்பர் தம் கையில்
ஓர் அம்பே முப்புரம் உந்தீ பற
ஒன்றும் பெரு மிகை உந்தீ பற 2

போருக்குச் செல்பவர்கள் சாதாரணமாகப் படைக் கலங்களை ஒற்றையாக எடுத்துச் செல்வதில்லை. ஆனால், சிவபெருமான் ஒரே ஓர் அம்பை எடுத்துச் சென்றார் என்று முதலிரண்டு அடிகள் பேசுகின்றன. 'ஏகம்பநாதனின் கையில் இரண்டு அம்பை நாங்கள் காணவில்லை; ஓர் அம்பே முப்புரத்தை அழித்தது' என்று கூறியபின்னர், மூன்றாவது அடியில் இக்கருத்து மாற்றிப் பேசப்படுகின்றது.

அதாவது 'ஓர் அம்பே முப்புரத்தை அழித்தது என்று கூறுவதுகூடச் சரியன்று. அந்த ஒற்றை அம்புகூடத் தேவைப்படாத, தேவைக்கு மேற்பட்ட மிகையாக இருந்தது' என்றவாறு.

'ஒன்றும் பெருமிகை' என்று கூறியதால், கையில் இருந்த அந்த ஒற்றை அம்பைக்கூடப் பயன்படுத்தவில்லை என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார்.

297. தச்சு விடுத்தலும் தாம் அடியிட்டலும்
அச்சு முறிந்தது என்று உந்தீ பற
அழிந்தன முப்புரம் உந்தீ பற 3

இப்பாடலில் தச்சு விடுத்தலும் தாம் அடியிட்டலும் என்ற அடிக்கு வாயு புராணக் கதையின் அடிப்படையில் விஸ்வகர்மா செய்து தந்த பொன்னாலாகிய தேர் என்று பொருள் கொள்வது பொருத்தமுடையதாகத் தெரிகிறது. அதன்படி விஸ்வகர்மா முயன்று தச்சுப்பணி செய்து பொன்னாலாகிய தேரைத் தந்தான். 'தன்னால் செய்யப்பட்ட தேர் மிகவும் வலுவானது, சிவபெருமானே ஏறுவதற்குத் தகுதி வாய்ந்தது, திரிபுரத்தை அழிக்கப் பயன்படப்போகிறது' என்றெல்லாம் நினைந்து, அவன் தருக்குக் கொண்டிருத்தல் வேண்டும். அதனை உணர்ந்த பெருமான் அந்தப் பொற்றேரின் மேல், தம் ஒரு திருவடியை எடுத்து வைத்தவுடன் தேரின் அச்சு முறிந்தது; விஸ்வகர்மாவின் அகந்தையும் அழிந்தது. இவ்வாறு நேரே பொருள் கொள்வதே சிறந்ததாகும். போருக்குப் புறப்படுவதற்கு முன்னரே தேரின் அச்சு முறிந்துவிட்டது என்றால், சிவபெருமான் போருக்குப் புறப்பட முடியாமல் தடை நேர்ந்திருக்கும் என்று நினைப்பவர்களை நோக்கி, இந்தத் தேரையோ, கையில் உள்ள அம்பையோ நம்பிக்கொண்டு அவன் புறப்படவில்லை, இந்தத் தேரையும் அந்த அம்பையும் பயன்படுத்தாமலே தான் நினைத்ததைச் செய்தான் என்ற கருத்தை 'அழிந்தன முப்புரம்— உந்தீ பற' என்று பாடுகிறார்.

298. உய்ய வல்லார் ஒரு மூவரைக் காவல் கொண்டு
எய்ய வல்லானுக்கே உந்தீ பற
இள முலை பங்கன் என்று உந்தீ பற 4

ஒருமூவர்–தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்பாரும் உளர்.

எந்தப் பேரழிவிலும் பிழைத்துக்கொள்ள வேண்டிய தகுதியுடைய மூவர் (சுதன்மன், சுசீலன், சுபுத்தி) திரிபுர சம்ஹார காலத்தில் அதனுள் இருந்தனர். திரிபுரம் மூன்றையும் வேரோடு அழித்த சிவபெருமான் அதனுள் இருந்த இந்த மூவருக்கும் எவ்வித ஊறும் நேராமல் பாதுகாவல் செய்துவிட்டு, திரிபுரத்தை அழித்தான் என்கிறார்.

அனைத்தும் அழியும்போது பிழைக்க வேண்டியவை அந்த அழிவினுள் இருந்தாலும் அவற்றைமட்டும் காப்பாற்றிவிட்டு, ஏனையவற்றை அழிக்கும் பேராற்றல் உடையவன் சிவபெருமான் என்று அவனைப் பாடிக் கொண்டு, பறந்து விளையாடுங்கள்.

'எய்யவல்லானுக்கு' என்ற தொடரைக் கண்டவுடன் அம்பை எய்யவல்லானுக்கு என்ற பொருள் மனத்திடைத் தோன்றும். இங்கு அம்பு எதுவும் பயன்படுத்தப்படவில்லை; ஆதலால், அப்பொருள் பொருந்தாது. எனவே, அம்புக்குப் பதிலாகப் 'பேரழிவை' என்ற சொல்லைப் பயன்படுத்தி விட்டால் பொருள் நேரிதாக இருக்கும்.

'பேரழிவை எய்ய (செலுத்த) வல்லானுக்கே உந்தீ பற' என்று கொள்ளுதல் பொருந்தும்.

முன்னைய பாடலில் (திருவாச: 297) 'அழித்தனன் முப்புரம்' என்று சொல்லவேண்டிய இடத்தில் 'அழிந்தன முப்புரம்' என்று கூறியுள்ளார். சிவனுடைய தேரோ, அம்போ பயன்படுத்தப்படவில்லை என்பதும், வேறு எந்த உபகரணங்களைக் கொண்டும் இது செய்யப்படவில்லை என்பதும் 'அழிந்தன' என்ற சொல்லால் பெறப்பட்டது. அழிதற்குக் காரணமாகிய சில அடிப்படைகள்

இயல்பாகவே திரிபுரத்தில் அமைந்து இருந்தன. அடங்கியிருந்த அந்த அடிப்படைகள் இப்பொழுது வெளிப்பட்ட காரணத்தால் திரிபுரங்கள் தாமே அழிந்தன. இக்கருத்தை வலியுறுத்தவே 'அழிந்தன' என்ற தன்வினை வாய்பாட்டுச் சொல்லைப் பயன்படுத்துகிறார் அடிகளார்.

அப்படியானால் 'திரிபுராந்தகன்' என்ற பெயர் சிவபெருமானுக்கு எப்படிப் பொருந்தும்? முழுப்பொருளாக உள்ள இறைவன் எந்த ஒன்றையும் செய்தான் என்பது உபசார வழக்கு. திரிபுரத்தின் அடியில் தங்கியிருந்த அழிவுக்குரிய அடிப்படைகள் இப்பொழுது மேலே வருமாறு இச்சாமாத்திரத்தில் செய்ததுதான் இறைவன் செயலாகும்.

இந்த நான்கு பாடல்களிலும் இறைவன் எந்த ஒன்றையும் செய்தான் என்று அடிகளார் கூறவேயில்லை.

வில்லை வளைத்தான் என்றோ, பூசலை விளைவித்தான் என்றோ, முப்புரத்தை எரித்தான் என்றோ சொல்லவில்லை.

அவன் கையில் ஓர் அம்பு இருந்தது என்றுதான் கூறப்பட்டதே தவிர அந்த அம்பை அவன் பயன்படுத்தினான் என்று சொல்லவில்லை.

அடுத்து, விஸ்வகர்மா செய்த தேரை உடைக்க வேண்டும் என்று அவன் எதுவும் செய்யவில்லை. அடியை எடுத்து வைத்தான்; அச்சு முறிந்தது.

அடி வைத்ததும் அச்சு முறிந்தது என்பதை உடன் நிகழ்ச்சிப் பொருளாகக் கொள்ளவேண்டுமே தவிர, காரண காரியப் பொருளாகக் கொள்வது தவறு.

எய்ய வல்லான் என்ற சொற்றொடர்கூட. அவன் ஆற்றலைக் குறித்ததேதவிர, அவன் எதனையும் எய்ததாகக் கூறவில்லை.

299. சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீ பற
உருத்திர நாதனுக்கு உந்தீ பற 5

சாடிய–வீரபத்திரர்தாக்கிய. சரிந்திட–அழிய. உருத்திரநாதன்–உருத்திரர்களுக்கெல்லாம் தலைவன்.

தக்கன் செய்த யாகத்தைச் சென்று சாடி, வீரபத்திரன் தண்டிக்கத் தொடங்கியவுடன் தேவர்கள் ஓடினர். இது உருத்திரநாதன் பெற்ற வெற்றியேயாகும்.

300. ஆ ஆ திருமால் அவிப் பாகம் கொண்டு அன்று,
சாவாது இருந்தான் என்று உந்தீ பற
சதுர்முகன் தாதை என்று உந்தீ பற 6

சதுர்முகன்–பிரமன்.

சதுர்முகன் தாதை ஆகிய திருமால் தக்கன் வேள்வியில் அவிர்பாகத்தைப் பெற்றான் எனினும் வீரபத்திரரிடம் தண்டனை பெற்று மயங்கிக் கிடந்தான்.

301. வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான் என்று உந்தீ பற
கலங்கிற்று வேள்வி என்று உந்தீ பற 7

அக்கினி தேவனானவன் முழுவதுமாக வாயிலிட்டுக் கொள்ள அவிர்பாகத்தை திரட்டிய கையை வீரபத்திரன் துணித்தான் என்க.

302. பார்ப்பதியைப் பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பது என்னே ஏடி உந்தீ பற
பணை முலை பாகனுக்கு உந்தீ பற 8

'பர்வதராஜன் மகளாகிய உமாதேவியை இறைவி என்றும் பாராமல் தக்கன் வசைபாடினான். எனவே, நம்மால் வணங்கப்படும் தாட்சாயணியின் தந்தையாயிற்றே என்று அவன்பால் கண்ணோடாமல் வசைபாடுவாயாக' என்றவாறு.

303. புரந்தரனார் ஒரு பூம் குயில் ஆகி
மரம்தனில் ஏறினார் உந்தீ பற
வானவார் கோன் என்றே உந்தீ பற 9

வீரபத்திரனுக்கு அஞ்சிய இந்திரன் குயில் உருவம் கொண்டு மரத்தின்மேல் ஏறி ஒளிந்துகொண்டான்.

304. வெம் சின வேள்வி வியாத்திரனார் தலை
துஞ்சினவா பாடி உந்தீ பற
தொடர்ந்த பிறப்பு அற உந்தீ பற 10

வியாத்திரன் என்பது செல்லவேண்டிய வழியை விட்டு வேறு வழியில் செல்வோன் என்பதாகும். இப்பெயர் தக்கனுக்கு உரியது. அவன் சிவபெருமான்மேல் கொண்ட சினத்தோடு யாகம் புரிய, அதன் பலனாக அவன் தலை போயிற்று என்பதாகும்.

தக்கன் வேள்வியில் வீரபத்திரன் செய்த இவ்வீரச் செயல்களைப் பாடப்பாட நம்மைத் தொடர்ந்து வரும் பிறப்புச் சங்கிலி அறுபடும் என்க.

305. ஆட்டின் தலையை விதிக்குத் தலை ஆகக்
கூட்டியவா பாடி உந்தீ பற
கொங்கை குலுங்க நின்று உந்தீ பற 11

நான்முகனுக்கு விதி என்ற பெயர் உண்டாதலின் அவருடைய மகனாகிய தக்கன் சிறுவிதி எனப்பெற்றான். அந்தத் தக்கனுக்கு ஆட்டின் தலையை வைத்ததுபற்றிப் பாடுவதன் மூலம் சிவபெருமான் புகழைப் பாடுவீர்களாக.

306. உண்ணப் புகுந்த பகன் ஒளித்து ஓடாமே
கண்ணைப் பறித்தவாறு உந்தீ பற
கருக் கெட நாம் எல்லாம் உந்தீ பற 12

பகன்–சூரியன்.

அவிர்பாகத்தை உண்ணத் தொடங்கிய பன்னிரு சூரியருள் ஒருவனாகிய பகன் கண்களைப் பறித்தமை பற்றிப் பாடுவோமாக. இவ்வாறு பாடுவதால் நாம் இனிப் பிறவோம் (கருக்கெட) என்க.

307. நா மகள் நாசி சிரம் பிரமன் பட
சோமன் முகம் நெரித்து உந்தீ பற
தொல்லை வினை கெட உந்தீ பற 13

நான்முகனுடைய ஐந்து தலைகளுள் ஒரு தலை அறுக்கப்பட்டதையும், நாமகள் நாசி அறுக்கப்பட்டதையும், சந்திரன் முகம் தேய்க்கப்பட்டதையும் பாட, நம்முடைய பழவினைகள் போகும்.

308. நான்மறையோனும் மகத்து இயமான் பட
போம் வழி தேடும் ஆறு உந்தீ பற
புரந்தரன் வேள்வியில் உந்தீ பற 14

மகத்து இயமான்–யாகத்தில் எஜமானனாயிருந்த தக்கன்.

நான்முகனும் யாக புருஷனாகிய தக்கனும் பட்டதைக் கண்டு புரந்தரனாகிய இந்திரன், 'மிக உயர்ந்தவர்களாகிய நான்முகனும் தக்கனுமே இந்தக் கதியை அடைந்தார்கள் என்றால் நான் எங்கே போய் எப்படித் தப்பிப்பது' என்று வருந்தினான் என்க.

309. சூரியனார் தொண்டை வாயினில் பற்களை
வாரி நெரித்த ஆறு உந்தீ பற
மயங்கிற்று வேள்வி என்று உந்தீ பற 15

மயங்கிற்று–கலங்கியது. சூரியனார்–பூஷா என்னும் சூரியன்.

பன்னிரு ஆதித்தருள் ஒருவனாகிய பூடன் என்பவனுடைய பற்களைத் தொண்டையோடு வைத்து நெரித்ததைப் பாடுக.

310. தக்கனார் அன்றே தலை இழந்தார் தக்கன்
மக்களைச் சூழ நின்று உந்தீ பற
மடிந்தது வேள்வி என்று உந்தீ பற 16

மடிந்தது–அழிந்தது.

தக்கன் வேள்வி முடிவதற்கு முன்னரே தலை இழந்தான். என்றாலும், அவன் மக்கள் சூழநின்றார்கள் ஆதலின் அவர்களை முன்னிலைப்படுத்தி இந்த யாகம் முடிந்திருக்கலாம் என்றால், இல்லை என்கிறார் அடிகளார். மக்கள் சூழ நின்றாலும்கூட யாகம் முற்றுப் பெறவில்லை. ஏனென்றால், தக்கனுடைய அறுபட்ட தலை, யாகத் தீயில் விழுந்தமையின் யாகம் தடைப்பட்டு விட்டது (மடிந்தது) என்க

295 முதல் 298 வரையுள்ள நான்கு பாடல்களிலும் திரிபுர தகனத்தைக் கூறிய அடிகளார், அடுத்து வந்துள்ள

பன்னிரண்டு பாடல்களிலும் (299-310) தக்கன் வேள்வி பற்றிய செய்திகளைப் பாடுகிறார்.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளிலும் சிவபிரான் பங்குகொள் கிறார். திரிபுர நிகழ்ச்சியில் நேரிடையாகப் பங்கேற்றாலும் எவ்விதச் செயலையும் புரியாமல் புரங்களை அழித்தார். அதிலும்கூட மூவர் காப்பாற்றப்படுகின்றனர். எந்தப் பேரழிவின் நடுவேயும் அடுத்துத் தோன்றும் புதிய வளர்ச்சியின் அங்குரம் (முளை) இடம் பெற்றிருக்கும் என்பதை இச்செய்தி அறிவிக்கிறது.

தக்கன் வேள்வி அழிப்பில் சிவபெருமான் நேரே பங்கு கொள்ளவில்லை. வீரபத்திரரைத்தான் அனுப்புகிறார். வேள்வியில் பங்குகொண்ட அனைவரும் தண்டிக்கப்படு கிறார்களே தவிர, யாரும் அழிக்கப்படவில்லை.

ஓரளவு சிந்தித்தால் திரிபுரத்தின் அழிவிற்கும், தக்கன் வேள்விச் சிதைவிற்கும் ஒரு வேறுபாடு இருப்பதுபோலத் தோன்றுகிறது.

திரிபுராதிகள் வர பலத்தால் அனைத்தையும் பெற்றதுடன் நீண்டகாலம் சிவபூஜை செய்து நன்னெறியில் இயங்கினர். நாளாவட்டத்தில் அதிகார வெறி அவர்கள் தலைக்கு ஏறவே, அழிய நேர்ந்தது. இவர்கள் மூலப்பொருளாகிய சிவபெருமானை மறந்தார்களே தவிர, அவனை நிந்திக்க வில்லை. அவனைவிடத் தாங்கள் மேம்பட்டவர்கள் என்று கருதவுமில்லை. எனவே, எளிதாக மரணத்தைப் பெற்று, அடுத்த நிலைக்குச் சென்றுவிட்டனர்.

இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும் தக்கன் வேள்விக் கதை. தக்கன், யாகத்தைச் செய்த ஆச்சாரியன், அவிசை உண்பதற்காக வந்திருந்த தேவர்கள் முதலியோர்,

இந்த உலகிடை வாழ்ந்த முனிபுங்கவர்கள் ஆகிய அனைவரும் தண்டிக்கப்பட்டனர். ஏன்?

தன் பெண்ணைச் சிவனுக்கே மணமுடித்தாலும் தான், மருமகனைவிட மேம்பட்டவன் என்ற அகங்காரம் தக்கனுடைய தலையில் புகுந்தது. ஆகவே, சிவபெருமானை ஏசினான் அவன்.

அகங்காரத்தின் விளைவால் ஏற்பட்ட இந்த ஏசலை மறுத்துக் கூறாமையால் தேவர் முனிபுங்கவர்கள் முதலியோர் உடன் குற்றவாளிகள் ஆயினர்.

ஆணவத்திலிருந்து விடுபடாமையால் தக்கனும், அவனுடைய யாகத்தில் கிடைக்கும் அவி உணவிற்கு ஆசைப்பட்டு யாகத்திற்கு வந்த தேவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே ஆவர்.

சுயமாகச் சிந்தித்து எது மெய், எது பொய் என்று அறியவேண்டிய அறிவு, தலையினிடத்து உள்ள மூளையின் பாற்பட்டதாகும். அந்த மூளை மீளமுடியாதபடி தவறான வழியில் நீண்ட தூரம் சென்றுவிட்டமையின் அந்தத் தலை அறுபட்டது.

தனக்கென்று ஒரு சிந்தனை இல்லாமல் பிறர் செல்லும் வழியில் செல்லும் ஆட்டுக்கடாவின் தலை தக்கனுக்கு வழங்கப்பட்டது.

இவ்விரண்டினிடையே உள்ள வேறுபாட்டை உணர்த்தவே அடிகளார் இவ்விரண்டு நிகழ்ச்சிகளையும் அடுத்தடுத்துப் பாடுகிறார்.

திருவாசகம் போன்ற ஞானநூல்கள் பின்னர் வாப் போகின்ற சமுதாயத்திற்குப் பலகாலம் நின்று வழிகாட்ட வேண்டியமையின் பாடல்களின் எண்ணிக்கையில்கூட

அடிகளார் போன்ற அருளாளர்கள் ஒரு நுணுக்கத்தை வைத்துக் காட்டுகிறார்கள்.

அறியாமையின் அழிவுபற்றிக் கூறுவன நான்கு பாடல்கள்; ஆணவத்தின் அழிவுபற்றிக் கூறுவன பன்னிரண்டு பாடல்கள்..

311. பாலகனார்க்கு அன்று பாற் கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீ பற
குமரன் தன் தாதைக்கே உந்தீ பற 17

பாலகன்–உபமன்யு. கோலம்–அழகு.

புலிக்கால் முனிவனுடைய மகனாகிய உபமன்யு முனிவனுக்குப் பாற்கடலையே வரவழைத்துத் தந்தவன் யார் தெரியுமா? குமரப்பெருமானுடைய தாதையாவான் அவன். அவன் புகழைப் பாடி ஆடுக. 'பிள்ளையைப் பெற்றவர்க்கே பிள்ளையின் அருமை தெரியும்' என்ற இற்றை நாள் 'பழமொழி' அடிகளார் வாக்கிலும் வெளிப்படுகிறது. குமரன் தாதை ஆதலின் மற்றொரு குமரனுக்குப் பாற்கடலை வருவித்தான் என்க.

312. நல்ல மலரின்மேல் நான்முகனார் தலை
ஒல்லை அரிந்தது என்று உந்தீ பற
உகிரால் அரிந்தது என்று உந்தீ பற 18

உகிர்–நகம்.

மலரின்மேல் இருந்தவனாகிய நான்முகனுடைய தலையைச் சிவபெருமானால் அனுப்பப் பெற்ற பைரவர் தம் நகத்தால் கிள்ளி எடுத்தார் என்க.

313. தேரை நிறுத்தி மலை எடுத்தான் சிரம்
ஈர் ஐந்தும் இற்ற ஆறு உந்தீ பற
இருபதும் இற்றது என்று உந்தீ பற 19

மலையெடுத்தான்–கயிலையைப் பெயர்த்தெடுத்த இராவணன்.

இராவணன் தேர் கயிலையைக் கடந்து செல்லாது நிற்க, கீழே இறங்கிய இராவணன் அக்கயிலை மலையையே பெயர்க்க முற்பட்டான். இறைவன் தன் கட்டை விரலை ஊன்றி அவனுடைய இருபது தோள்களையும் நெரித்தான் என்க. இறுதல் என்பது நைந்து போதல் எனும் பொருளைத் தருவது ஆகும்.

314. ஏகாசம் இட்ட இருடிகள் போகாமல்
ஆகாசம் காவல் என்று உந்தீ பற
அதற்கு அப்பாலும் காவல் என்று உந்தீ பற 20

ஏகாசம்–உத்தரீயம். இருடிகள்–விண்செலல் மரபினராகிய வாலகில்லியர்கன்.

கதிரோடு திரிதரும் அமரரும் முனிவரும் ஏகாசமிட்ட இருடிகள் எனப்பட்டனர். உலகத்து உயிர்களைக் கதிரவன் வெப்பம் தாக்கிவிடாமல் காவல் செய்பவர் இவர்கள் என்க. இவ்வளவு பேருபகாரம் செய்கின்ற இவர்களுக்கும், சூரியமண்டலம் தாண்டி உள்ள பிறருக்கும் காவலாக உள்ளவன் சிவபெருமான் என்க.

ॐ ॐ ॐ

15. திருத்தோணோக்கம்

[பிரபஞ்ச சுத்தி]

தோணோக்கத்திற்கு முன்னர் அமைந்துள்ள திருச் சாழல் மகளிர் வட்டமாக நின்று தோளை வீசி விளையாடும் விளையாட்டு என்று விளக்கப்பெற்றது. தோள் வீச்சு என்று கூறியவுடன் ஏதோ இருந்த இடத்தில் இருந்து கொண்டு தோள்களைமட்டும் அசைப்பது என்று பொருள் கொள்ளத் தேவையில்லை.

தோள்+நோக்கம் என்று தலைப்பிருந்தாலும் தோள்வீச்சு என்பதே பொருளாகும். கையை வீசும் பொழுது கண்பார்வையும் அதன்வழிச் செல்லவேண்டும் என்பது நாட்டிய நூலாரின் துணிபு ஆதலின் தோள்வீச்சு என்பது நாளாவட்டத்தில் தோள் நோக்கம் என்று மாறி இருக்க வேண்டும்.

தோள்வீச்சு என்று பெயரிருப்பினும் அது உண்மையில் கைகளை வீசி ஆடும் ஆட்டமே ஆகும். நாட்டிய சாத்திரத்தில் கைகளை வீசிப் பத்துவகைச் செயற்பாடுகள் நிகழ்த்தலாம் என்று சொல்லப்பெற்றுள்ளது. அதுவும் கைவீச்சு என்று சொல்லப்படாமல் தோள்வீச்சு என்றே சொல்லப்படுகிறது. எண்டோள் வீசி நின்று ஆடும் பிரான் (திருமுறை: 4-9-2) என்று நாவரசர் பெருமான் இறைவனைக் குறிப்பிடுகின்றார். இங்கும் தோள்வீசுதல் என்பது கைகளை வீசுதலையே குறிக்கும்.

315. பூத்து ஆரும் பொய்கைப் புனல் இதுவே எனக் கருதி
பேய்த்தேர் முகக்க உறும் பேதை குணம் ஆகாமே
தீர்த்தாய் திகழ் தில்லை அம்பலத்தே திரு நடம் செய்
கூத்தா உன் சேவடி கூடும் வண்ணம் தோள் நோக்கம் 1

பூத்து ஆரும்–பூத்து நிறைந்த. முகக்குறும்–மொள்ளும்.

பேய்த்தேர் என்பது கானல்நீர் ஆகும். பல சமயங்களில் இப் பேய்த்தேர், தூரத்தில் இருந்து பார்ப்பவர்களுக்கு மலர்கள் நிறைந்த ஒரு குளத்தின் காட்சியைக்கூடத் தரும். அப்படிப்பட்ட பேய்த் தேரிடம் சென்று தண்ணீர் முகக்க வேண்டும் என்று நினைப்பது அறியாமையாகும்.

'இந்த அறியாமையிலிருந்து என்னை நீக்கினாய், தில்லைக் கூத்தனே! உன் திருவடியை வந்து அடைய வேண்டு'மென்று தோள் நோக்கம் ஆடுவோமாக!

பேய்த்தேரைப் பார்ப்பவர்கள் அதனை உண்மையென்றே நம்புகின்றனர். பேய்த்தேர் பற்றி அறிந்திருந்தாலும்கூட அதைப் பார்க்கும்பொழுது, இது மெய்யானது என்ற எண்ணம் பலருடைய மனத்தில் தோன்றும். தண்ணீர் இருப்பதாக நினைந்து மிக நீண்டதூரம் சென்ற பின்னரே உண்மையில் அது தண்ணீர் இல்லை என்பது தெரியவருகிறது. இல்லை என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, இவ்வளவு முயற்சியும் கால தாமதமும் ஏற்படுகின்றன. இவ்வழகிய உவமையை அடிகளார் கூற ஒரு காரணம் உண்டு. பொறி, புல இன்பங்களில் ஈடுபடுபவர்கள் அது நிலையில்லாதது, பொய்யானது, மன நிறைவை அளிக்காதது என்பதை அறிந்துகொள்வதற்கு நீண்ட காலமாகிறது. அந்த நிலைக்குப் பின்னர் மனத் தெளிவு ஏற்பட்டும்கூடக் காலமும், வயதும், ஆகிவிட்ட காரணத்தால் புதிய வழியில் செல்லும் வாய்ப்போ, துணிவோ ஏற்படுவதில்லை.

கானல்நீர் பற்றிப் படித்தும், கேட்டும், அறிந்தும் இருந்தால்கூட அதனைக் காண்கின்ற ஒருவருடைய அறிவை மயக்கித் தன்பால் இழுக்கின்றது கானல்நீர். அதேபோல, பொறி புலன் இன்பங்கள் நிலையில்லாதவை, பொய்யானவை என்று எவ்வளவு அறிந்திருந்தாலும் அதனை விட்டு மீள்வது இயலாத காரியம்.

இறைவன் திருவருள் ஒருவருக்கு இருந்தாலொழிய இந்த மாயையிலிருந்து நீங்குமாறு இல்லை. அமைச்சர் வாழ்க்கை, அதற்கேற்ற சுகபோகங்கள் என்பவற்றில் மூழ்கி யிருந்த அடிகளாரைத் தில்லைக்கூத்தன் குருநாதர் வடிவில் வந்து ஒரே விநாடியில் திசை திருப்பியதைத்தான் 'பேதைகுணம் ஆகாமே தீர்த்தாய்' என்று பாடுகிறார்.

'அம்பலக்கூத்தா! உன் சேவடி கூடும் வண்ணம்' என்று இறைவனை எதிரே நிறுத்தி அவனோடு நேரிடையாக உரையாடுவதைப்போல் அமைந்திருத்தலின் இதை முன்னிலைப் பராவல் என்றனர்.

316. என்றும் பிறந்து இறந்து ஆழாமே ஆண்டு கொண்டான்
கன்றால் விளவு எறிந்தான் பிரமன் காண்பு அரிய
குன்றாத சீர்த் தில்லை அம்பலவன் குணம் பரவி
துன்று ஆர் குழலினீர் தோள் நோக்கம் ஆடாமோ 2

துன்றார் குழலினீர்–நெருங்கி அமைந்த கூந்தலை உடையவர்களே. கன்றால் விளவெறிந்தான்–கண்ணன். குன்றாத சீர்–என்றும் குறையாத புகழ்.

விளையாட்டில் தலைமை ஏற்பவள், தன் தோழியரைப் பார்த்து இப்படிப்பட்ட பெருமை யுடைய பெருமான் புகழ்பாடி, தோணோக்கம் ஆடுவோம் மாக என்று அமைந்திருத்தலின், சென்ற பாட்டைப் போல் அல்லாது இந்தப் பாடல் படர்க்கைப் பராவலாக அமைந்துள்ளது.

'தோழி! பிறப்பு இறப்புச் சுழற்சியில் சிக்கிக்கொண்ட நாம் அந்தச் சுழலிலேயே மாறி மாறிப் பிறந்து, இறந்து சுழன்றுகொண்டே இருப்போம். அதிலிருந்து நம்மைக் காத்த ஆண்டவன் யார் தெரியுமா? கன்றால் விளவெறிந்த கண்ணனும், நான்முகனும் அடிமுடி தேடிச் சென்று காண முடியாமல் திரும்பிவிடுமாறு ஓங்கிய, தில்லைக் கூத்தனேயாம். அவனுடைய புகழைப் பாடித் தோணோக்கம் ஆடுவோமாக!'

இப்பெருமக்கள் தம் அருட்பாடல்களில் பயன்படுத்தும் சில சொற்கள் மிக்க கவனத்துடன் பொருள் செய்ய வேண்டியவை ஆகும். இப்பாடலில் வரும் 'குணம் பரவி' என்ற தொடர், நாம் அறிந்த பொருளைத் தருவதன்று. குணம் குறி கடந்திருப்பதே இறை இலக்கணம்; ஆதலின் 'குணம் பரவி' என்றால், அஃது எவ்வாறு பொருந்தும்? இவ்விடத்தில் அதனைப் புகழ் அல்லது கருணை என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

317. பொருள் பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்க
செருப்பு உற்ற சீர் அடி வாய்க் கலசம் ஊன் அமுதம்
விருப்பு உற்று வேடனார் சேடு எறிய மெய் குளிர்ந்து அங்கு
அருள் பெற்று நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ 3

பொருள்–சிவபூசைக்குரிய சாதனங்கள். செருப்பு–கண்ணப்பரின் காற்செருப்பு. வாய்க்கலசம்–அவருடைய திருவாயாகிய கலசம். வேடனார்–கண்ணப்பர்.

இப்பாடலில் திண்ணனாருடைய வழிபாட்டு முறையையும் அதனை ஏற்றுக்கொண்டு உளம் குளிர்ந்த இறைவன் தமக்கு வலப்பக்கமாக இருக்கச் செய்ததையும் விரிவாகப் பாடுகிறார் அடிகளார்.

பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகள் என்பது ஆகம விதிக்கு உட்பட்டுத் தூய்மையான பாத்திரங்கள், அபிஷேகப் பொருட்கள், நிவேதனப் பொருட்கள், மலர்கள் ஆகியவற்றை வைத்துக்கொண்டு செய்யப்படுகின்ற பூசனையே ஆகும்.

இந்த ஆகம பூசையில் ஏற்றுக்கொள்ளப்படாமல் விலக்கப்பட்டனவும், அருசிதம் என்று சொல்லப்பட்டனவும், ஆகிய பொருள்களையே கொண்டு திண்ணனார் பூசனைச் செய்தார்.

அவர் செய்த பூசனைகளைக் கூறவந்த அடிகளார் பின்வருமாறு கூறுகிறார்: இறைவன் திருமேனியில் செருப்புற்ற சீர் அடி, வாயைக் கலசமாகக் கொண்டு நிரப்பிய அபிடேக தீர்த்தம், மான், பன்றி இவற்றின் இறைச்சியாலான நிவேதனம் ஆகியவை திண்ணனார் பூசனையாம். இவற்றுடன் அவர் நிற்கவில்லை. வாயில் கொணர்ந்த நீரைச் சிவலிங்கத் திருமேனிமேல் கொப்பளித்து உமிழ்ந்தார். இந்தச் செயலைச் 'சேடு' (புதுப்புனல்) எறிய (ஊற்ற) என்று பாடுகிறார் அடிகளார். என்ன வியப்பு! இதே புதுப்புனலைத் தூய்மையான பாத்திரத்தில் கொணர்ந்து அபிடேகம் செய்தால், அது பொருள்பற்றிச் செய்கின்ற பூசனையாகும். அப்படிச் செய்கின்ற அபிடேகத்தில் இறைவன் மகிழ்ந்ததாகத் தெரியவில்லை. காளத்திநாதனை ஆகமமுறையில் வழிபட்ட சிவகோசரியார் பொன்முகலி ஆற்றிலிருந்து புதுப்புனலைத் தினமும் கொண்டுவந்து காளத்திநாதனுக்கு அபிடேகம் செய்தாரே, அந்த அபிடேகத்தில் காளத்திநாதன் மகிழ்ந்த தாகத் தெரியவில்லை. ஆனால், திண்ணனார் வாயிலிருந்து ஊற்றிய எச்சில்நீர், கங்கை நீரினும் சிறப்புடையது என்றல்லவோ சிவகோசரியின் கனவில் இறைவன் கூறினான்!

அந்த நுணுக்கத்தைத்தான் அடிகளார் 'சேடு எறிய மெய் குளிர்ந்து' என்று பாடுகிறார். காளத்திநாதன் என்பது தோன்றா எழுவாய். 'மெய்' குளிர்ந்து அங்கு அருள் பெற்று நின்றவர்' என்ற தொடருக்குக் காளத்திநாதர் மெய்குளிர்ந்தமையால், அங்கு அதே இடத்தில் அவன் அருளைப் பெற்று நின்றவராகிய திண்ணனாரின் அன்பைப் பாடி ஆடுவோம் என்கிறார்.

சேடு+அறிய எனப் பாடங்கொண்டு 'பெருமை விளங்க' எனப் பொருள் கூறுவாரும் உளர்.

பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகளில் எந்தவொன்றும் திண்ணனார் பூசனையில் இடம் பெறவில்லை. அப்படி யிருக்க, ஆகம விருத்தம் (முரண்பட்டது) என்று சொல்லக் கூடியவற்றையே கொண்டு பூசனை செய்த திண்ணனார், இரண்டு பேறுகளைப் பெற்றார். ஒன்று இறைவனை மெய்குளிரச் செய்தது; இரண்டு அவன் அருளை உடனடியாகப் பெற்றது.

இந்த இரண்டுமே பொருள்பற்றிச் செய்கின்ற பூசனையில் கிடைக்கவில்லை என்றால், திண்ணன் செய்த பூசனையின் தனிச் சிறப்பு என்ன? அப்பூசையின் தனிச்சிறப்பை 'விருப்புற்று' என்ற ஒரே சொல்லில் அடிகளார் குறிக்கின்றார். அன்பு கொண்டு என்ற பொருளைத் தரும் 'விருப்புற்று' என்ற சொல், இங்கு 'அன்பே வடிவாய் ஆகி' என்ற பொருளைத் தந்து நிற்கிறது.

பொருள்பற்றிச் செய்யப்படுகின்ற பூசனையில் அன்பு இருக்கலாம். ஆனால், பயன்படுத்தப்பெற்ற பொருட்கள், செய்யப்பெற்ற கிரியைகள், சொல்லப்படும் மந்திரங்கள் என்பவற்றிலேயே பெருமளவு கவனம் செலுத்தப்படுவதால் அன்புக்கு என்று பெரிய இடம் ஒன்றும் அங்கிருப்பதற்கில்லை.

ஆனால், திண்ணனாருடைய பூசனையில் இவை ஒன்றும் இடம் பெறவில்லை. இவற்றையெல்லாம் யாரோ செய்தார்கள் என்பதை நாணன்மூலம் கேள்விபட்ட திண்ணனார் எவ்வித விருப்பு வெறுப்புமின்றி அவற்றைத் தாம் செய்ய வேண்டும் என்று நினைத்துச் செய்கின்றார். இவற்றைக் கிரியைகள் என்று அவர் நினைக்கவேயில்லை. எனவே, அவருடைய பூசனையில் அன்பு ஒன்றைத்தவிர வேறெதுவுமில்லை. உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை அன்பே வடிவாக மாறிவிட்ட திண்ணனாருடைய கால், அதிலுள்ள செருப்பு, அவருடைய வாய், அதில் கொண்டு வந்த நீர் ஆகிய அனைத்தும் அன்பே ஆதலால், அன்பே வடிவான இறைவன் அதனை ஏற்றுக் கொண்டதில் புதுமை ஒன்றும் இல்லை.

அடிகளாரின் இந்த ஒரு திருப்பாட்டே சேக்கிழார் பெருமான் கண்ணப்பர் வரலாற்றை விரிவாகப் பாட உதவிற்று. இந்தப் பாடல் முழுவதையும் ஒரே வாக்கியத்துள் கொண்டுவர நினைத்த சேக்கிழார் பெருமான்,

> .....யாக்கைத்
> பிதன் பரிசும் வினை இரண்டும் சாரும் மலம் மூன்றும் அற
> அன்பு பிழம்பாய் திரிவார்
>
> (கண்ணப்: 154)

என்று கண்ணப்பரை விவரிக்கின்றார்.

318. கல் போலும் நெஞ்சம் கசிந்து உருகக் கருணையினால்
நிற்பானைப் போல என் நெஞ்சின் உள்ளே புகுந்தருளி
நல் பால் படுத்து என்னை நாடு அறியத் தான் இங்ஙன்
சொல் பாலது ஆனவா தோள் நோக்கம் ஆடாமோ 4

கல் போலும் நெஞ்சம் – கல்லைப்போல் வலிய நெஞ்சம். நிற்பானைப்போல – என்கண்ணெதிர் நிற்பவனைப் போல. நற்பாற்படுத்து – நன்னெறியில்செலுத்தி ; நல்லூழோடுகூட்டி என்றுமாம். சொற்பாலது ஆனவா – புகழ்ந்துபேசும் தன்மையில் ஆன விதத்தை.

ஒரு பொருள் கல் போன்ற வலிமை உடையதாக இருப்பின், அது உருகுவதற்கு வேறு துணைகள் இருத்தல் வேண்டும். அடிகளாருடைய கல் போன்றதாகிய நெஞ்சம் உள்ளே உருக்கமும், புறத்தே கசிவும் பெற்று மாறுதல் அடையும்படிச் செய்தார் ஒருவர். அப்படிச் செய்தவர் இந்த உருக்கமும், கசிவும் மாறி, பழைய நிலைக்குச் சென்றுவிடாதபடி அதன் அண்மையிலேயே நின்று பார்த்துக்கொள்பவர்போல் புறத்தே குருநாதர் வடிவில் இருந்த அவர் தம் உள்ளே புகுந்தார் என்கிறார் அடிகளார்.

'அப்படி அவர் புகுவதற்குக் காரணம் என்னிடம் எதுவுமில்லை. என்பால் இயல்பாய் அமைந்திருத்தது கல்போன்ற மனம்தான். அதனை உருக்கமும், கசிவும் கொள்ளுமாறு செய்ததனால் அவருக்கு ஒன்றும் லாபமில்லை. என்றாலும், தம் கருணை காரணமாகவே என் நெஞ்சை உருக்கியவர், அந்த உருக்கத்தைக் காவல் செய்கிறவர்போல என் உள்ளே புகுந்து நின்றுவிட்டார்.'

'உள்ளத்தை உருக்கியதோடல்லாமல் அந்த உருக்கம் வேறெங்கும் பாய்ந்துவிடாமல் அவர் புகழ் பாடும் நன்னெறி யில் செல்லுமாறு செய்தார். இவ்வளவு பெரிய காரியத்தை அவர் ஒன்றும் மறைவாகச் செய்யவில்லை; நாடறியவே செய்தார். இதனால் ஓர் அற்புதமான பயன் விளைந்தது. அது என்ன தெரியுமா? என்னிலிருந்து தோன்றும் சொற்கள் ஒரு புதிய ஆக்கம் பெற்றன. அதுவரை நான் பேசிக்கொண்டிருந்த சொற்கள், நான் கண்டு, கேட்டுப் பழகும் பொருட்களைக் குறித்தனவாகவே இருந்தன.'

'நெஞ்சை உருக்கியதால், அந்நெஞ்சு நன்னெறியில் சென்றதால், நான் சொல்லும் சொற்கள் புதிய பொருளைத் தாங்கி வந்தன. அதுவரை, சொல்லுக்குள் அடங்காது நின்ற அவர் இப்பொழுது என் சொல்லுக்குள் நின்றார்'

என்கிறார் அடிகளார். 'இது அவன் திருவுரு; இவன் அவன்' (திருவாச: 374) என்று 'நான் சொல்லும் சொற்பாலது ஆயினான்' என்பதையே அடிகளார் 'இங்ஙன் சொற்பாலது ஆயினான்' என்று பாடுகிறார்.

319. நிலம் நீர் நெருப்பு உயிர் நீள் விசும்பு நிலா பகலோன்
புலன் ஆய மைந்தனோடு எண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகு ஏழ் என திசை பத்து என தான் ஒருவனுமே
பல ஆகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ 5

புலனாய் மைந்தன்–அறிவு உடையவனாகிய இயமானன் அல்லது ஆன்மா. திசைபத்து–நேர்த்திசையும் கோணற்றிசையுமாகிய எட்டோடு மண்ணும் விண்ணுமாகிய இரண்டும் கூட்டத் திசை பத்து.

இந்தப் பாடலின் முதலிரண்டு அடிகளை மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது அட்டமூர்த்தமாக உள்ளான் என்று பொருள் செய்ய இடம் தந்துவிடும். அனைத்தும் இறை வடிவம் என்று சொல்கின்ற முறையில் அட்ட மூர்த்தங்களிலும் அவன் உள்ளான் என்று சொல் வதைத்தான் அடிகளார் ஏற்றுக்கொள்கிறாரே தவிர, அட்ட மூர்த்தங்கள் அவனே என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நுண்ணிய வேறுபாட்டைத் தெரிவிக்கவே 'புணர்ந்து நின்றான்' என்கிறார். புணர்தல் என்றாலே இரண்டு பொருட்கள் நிற்றல் வேண்டும். அவனே அட்ட மூர்த்தமாக உள்ளான் என்று பொருள் கூறிவிட்டால் புணர்ந்து என்ற சொல் பொருளின்றி வற்றும்.

எனவே, அட்ட மூர்த்தம் என்று கூறப்படும் எட்டுப் பொருள்களிலும் அவன் புணர்ந்து நிற்பதோடு ஏழுலகம், பத்துத் திசை ஆகிய அனைத்திலுமே கலந்துநிற்கின்றான் என்ற கருத்தை இங்கே பேசுகிறார்.

320. புத்தன் முதல் ஆய புல் அறிவின் சில் சமயம்
தம் தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டு நிற்கச்
சித்தம் சிவம் ஆக்கி செய்தனவே தவம் ஆக்கும்
அத்தன் கருணையினால் தோள் நோக்கம் ஆடாமோ 6

தட்டுளுப்புப்பட்டு–தடுமாற்றமடைந்து. சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்–தற்போதங்கெட்டுச் சிவபோதம் அடைந்த ஆன்மாக்கள் செய்த செயல்கள் எல்லாவற்றையும் தவமாக்கலின் இங்ஙனம் கூறினார்.

'புத்த சமயம் முதலான குறைந்த அறிவினரால் செய்யப்பட்ட சில சமயங்களில் உள்ளவர்கள் அந்தந்தச் சமயங்களில் முன்னேறத் தொடங்கி, செல்லுமிடம் அறியாது நிலை தடுமாறி நின்றார்களாக, நாம், நம் அத்தன் கருணையைப் பாடுவோமாக' என்றபடி.

புறச்சமயத்தார் தட்டுளுப்புப் பட்டு நிற்கையில் தம்முடைய தலைவன் என்ன செய்தான் என்ற வினாவை எழுப்பிக்கொண்டு, அதற்கு விடை கூறுகிறார் அடிகளார். சைவ சமயத்தினர் வழிபடும் இறைவனாகிய சிவபெருமான் ஒரு மாபெரும் காரியத்தைச் செய்தான்.

மனிதர்கள் அனைவருக்கும் பெருங்குறைபாடு ஒன்றுண்டு. அவர்கள் வாழ்க்கையில் கொள்ளும் குறிக்கோளும் நன்கு வெளிப்படுவதில்லை; அந்தக் குறிக்கோளை அடையச் செய்யும் முயற்சியும் நன்கு அமைவதில்லை. பல சமயங்களில் ஒன்றைச் செய்யவேண்டும் என்று நினைத்து, ஏதோ ஒன்றைச் செய்துவிடுகின்றார்கள். அது தவறு என்று புரிந்ததும், 'ஓ! இதை நானா செய்தேன்?' என்று வருந்துகிறார்கள். எனவே, அவர்கள் குறிக்கோளுக்கும் செயலுக்கும் பெரு வேற்றுமை நிலைபெற்றுவிடுகிறது.

என்ன செய்தும், மனிதர்களிடம் தவிர்க்க முடியாத இந்தக் குறைபாடு ஒன்று உண்டு. சித்தத்தைத் தன் போக்கில் விட்டுவிட்டு, அது செய்யும் ஒவ்வொரு

காரியத்தையும் திருத்தி அமைத்தல், தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கும் முயற்சி ஆகும்.

இத்தனை பிரச்சினைகளுக்கும் ஒரே விடையைக் காண முடிவு செய்த இறைவன், அடிகளார் போன்ற அருளாளர்களைப் பிடித்து, முதலில் அவர்கள் சித்தத்தைச் சிவமாக்கிவிட்டான். அந்த ஒரு காரியத்தால் என்ன விளைந்தது தெரியுமா? அதுவரை அவர்களுக்கிருந்த பசுகரணங்கள் அனைத்தும் ஒரே விநாடியில் பதிகரணங்களாக மாறிவிட்டன. தம்பால் உள்ள கரணங்கள் அனைத்தையும் பதிகரணங்களாக மாற்றிக்கொண்டவர்கள் எதைச் செய்தாலும் அது தவச் செயல் என்றே கருதப்படும்.

தந்தையின் காலை வெட்டிய சண்டேசர், யானையின் துதிக்கையை வெட்டிய எறிபத்தர் ஆகியோர் செய்த செயல்கள் தவச் செயல்களாகவே மாறிவிட்டன.

'சித்தம் சிவமாக்கி' என்ற தொடரும் 'சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட' (திருவாச:650) என்ற தொடரும் எந்த அளவிற்கு இந்த நாட்டுச் சைவசித்தாந்தக் கொள்கையோடு பொருந்தும் என்பது தெரியவில்லை.

321. தீது இல்லை மாணி சிவ கருமம் சிதைத்தானை
சாதியும் வேதியன் தாதைதனைத் தாள் இரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோள் நோக்கம் 7

மாணி–பிரமசாரியாகிய விசாரசருமன். சிவகருமம்–சிவபூசை. சிதைத்தான்–கெடுத்தவனாகிய எச்சதத்தன். சேதிப்ப–வெட்ட. சோறு–சாரமான பகுதி.

'குற்றமற்றவனாகிய விசாரசருமன், சிவபூசைக்கு இடையூறு செய்த தன்னுடைய தந்தையின் கால்களை வெட்டிய பாதகச் செயலே சண்டீசப் பதத்தை அவர் பெறுமாறு செய்தது; அதனைப் பாடுவோமாக' என்கிறார்.

மிகப் பழங்காலந்தொட்டே இந்நாட்டவர் அறிவு கொண்டு துணிய வேண்டிய ஓர் உண்மையை நன்கு அறிந்திருந்தனர். ஒருவர் செய்கின்ற செயலைமட்டும் வைத்துக்கொண்டு, அது நல்லது என்றோ தீயது என்றோ முடிவுக்கு வருதல் அவ்வளவு சரியானதன்று. பெரிய கத்தியை வைத்துக்கொண்டு வயிற்றைக் கிழிக்கும் மருத்துவத்தைச் செயலளவில் பார்த்தால், கொடுமையானது என்றுதான் சொல்ல வேண்டும். இவ்வாறு நம் முன்னோர் கருத வில்லை. செயலின் பின்னே உள்ள செய்பவர்களின் மனநிலையை வைத்தே, நல்லது, கெட்டது என்ற முடிவுக்கு வரவேண்டும் என்று கருதினர். மருத்துவர் கத்தியால் கிழித்தாலும் வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தானே செய்கிறார்? அதனாலேயே அச்செயலை நற்செயல் என்று போற்றுகிறோம். அதே போலச் சிவபூசைக்கு ஊறு இழைத்து, அபிடேகப் பாலைக் காலால் இடறியவன் பெருங்குற்றம் செய்துவிட்டான். இப்பொழுது அவனைத் தண்டிக்காமல் விட்டால் அவன் நரகிடைச் செல்ல வேண்டும். அது நிகழாமலிருக்கவே பாலை இடறிய காலை விசாரசருமன் வெட்டினான்.

தந்தையின் காலை வெட்டுவது செயலளவில் பாதகம் என்றே சொல்லப்படும். ஆனால், வெட்டியவன் நோக்கம் இந்தத் சிறுதண்டனை தந்தைக்கு அளித்து, நரகிடை வீழும். பெரும் தண்டனையிலிருந்து அவரைக் காப்பாற்றுவதே. ஆதலின், இந்தப் பாதகச் செயல் விசாரசருமனுக்குப் பெரும் பதவி அளித்தது என்கிறார்.

பசியைப் போக்கச் சோறு உதவுவது போல, விசார சருமன் பிறவியைப் போக்க அவன் பாதகச் செயலே உதவிற்று என்கிறார். அதனையே 'பாதகமே சோறு பற்றினவா' என்கிறார். தந்தையின் காலை வெட்டியது செயலளவில் மேலோட்டமாகப் பார்ப்பதற்குப் பாவச் செயலாகப்பட்டாலும், தந்தை நரகிடை வீழாமல்

மிகப் பழங்காலந்தொட்டே இந்நாட்டவர் அறிவு கொண்டு துணிய வேண்டிய ஓர் உண்மையை நன்கு அறிந்திருந்தனர். ஒருவர் செய்கின்ற செயலைமட்டும் வைத்துக்கொண்டு, அது நல்லது என்றோ தீயது என்றோ முடிவுக்கு வருதல் அவ்வளவு சரியானதன்று. பெரிய கத்தியை வைத்துக்கொண்டு வயிற்றைக் கிழிக்கும் மருத்துவத்தைச் செயலளவில் பார்த்தால், கொடுமையானது என்றுதான் சொல்ல வேண்டும். இவ்வாறு நம் முன்னோர் கருத வில்லை. செயலின் பின்னே உள்ள செய்பவர்களின் மனநிலையை வைத்தே, நல்லது, கெட்டது என்ற முடிவுக்கு வரவேண்டும் என்று கருதினர். மருத்துவர் கத்தியால் கிழித்தாலும் வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தானே செய்கிறார்? அதனாலேயே அச்செயலை நற்செயல் என்று போற்றுகிறோம். அதே போலச் சிவபூசைக்கு ஊறு இழைத்து, அபிடேகப் பாலைக் காலால் இடறியவன் பெருங்குற்றம் செய்துவிட்டான். இப்பொழுது அவனைத் தண்டிக்காமல் விட்டால் அவன் நரகிடைச் செல்ல வேண்டும். அது நிகழாமலிருக்கவே பாலை இடறிய காலை விசாரசருமன் வெட்டினான்.

தந்தையின் காலை வெட்டுவது செயலளவில் பாதகம் என்றே சொல்லப்படும். ஆனால், வெட்டியவன் நோக்கம் இந்தத் சிறுதண்டனை தந்தைக்கு அளித்து, நரகிடை வீழும். பெரும் தண்டனையிலிருந்து அவரைக் காப்பாற்றுவதே. ஆதலின், இந்தப் பாதகச் செயல் விசாரசருமனுக்குப் பெரும் பதவி அளித்தது என்கிறார்.

பசியைப் போக்கச் சோறு உதவுவது போல, விசார சருமன் பிறவியைப் போக்க அவன் பாதகச் செயலே உதவிற்று என்கிறார். அதனையே 'பாதகமே சோறு பற்றினவா' என்கிறார். தந்தையின் காலை வெட்டியது செயலளவில் மேலோட்டமாகப் பார்ப்பதற்குப் பாவச் செயலாகப்பட்டாலும், தந்தை நரகிடை வீழாமல்

காப்பாற்றுவதற்கே செய்யப்பட்டமையால் அது பாதகச் செயலன்று.

322. மானம் அழிந்தோம் மதி மறந்தோம் மங்கை நல்லீர்
வானம் தொழும் தென்னன் வார் கழலே நினைந்து
அடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள் பெறின் நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகி நின்று ஆடாமோ தோள் நோக்கம் 8

மானம்–அபிமானம். மதிமறந்தோம்–தற்போதம் கழலப் பெற்றோம்.

'தோழிப் பெண்களே! தென்னனாகிய பாண்டிப் பிரானின் திருவடிகளைத் தொழத் தொடங்கி, தில்லைக் கூத்தன் அருளைப் பெறக்கூடுமேயானால் தன்மானத்தை இழந்தோம், சுயமாகச் சிந்திக்கும் அறிவை இழந்தோம் என்று பிறர் பேசும் நிலை ஏற்படும். அது ஏன் தெரியுமா? அவனைப் போலவே நாமும் ஆனந்தக் கூத்தாடத் தொடங்கிவிடுவோம். அப்படி நாம் ஆனந்தக் கூத்தாடத் தொடங்கினால் சாதாரண மனநிலையில் இருக்கும் பொழுது மகிழ்ச்சிப் பெருக்கில் நாம் ஆடும் ஆட்டத் திற்கும், இறையருள் பெற்று ஆனந்த மேலீட்டில் ஆனந்தக் கூத்தாடுவதற்கும் என்ன வேறுபாடு என்பது உடனே புரிந்துவிடும்.

'நம்மைக் காண்பவர்கள், நாம் மானத்தை இழந்து விட்டோம், சுயமாகச் சிந்திக்கும் அறிவை இழந்து விட்டோம் என்று சொல்வார்களேயானால், அது நாம் ஆனந்தக் கூத்தனின் அருளை ஒரு சிறிது பெற்றுவிட்டோம் என்பதற்கு அடையாளமாகும்' என்றவாறு.

323. எண் உடை மூவர் இராக்கதர்கள் எரி பிழைத்து
கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதன் பின்
எண் இலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால் பலர் மாண்டனர் காண் தோள் நோக்கம்
9

மூவர் இராக்கதர்கள்–தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்பார்.

இறைவனை எண்ணிக்கொண்டிருத்தலையே தம் கடமையாகக் கொண்ட திரிபுரத்திலிருந்த அசுரர்கள் மூவரும் அது எரிந்த காலத்தில் அதனோடு அழியாது உயிர் பிழைத்து இறைவனுக்கு வாயில் காவலராக இருந்து வருகின்றனர்.

இவர்கள் காலம் தொடங்கி, கணக்கில்லாத இந்திரர்கள், பிரமர்கள், மால்கள் ஆகியோர் மாண்டனர்.

இறையருளைப் பெறாதவர்கள் மறுபடியும், மறுபடியும் பிறத்தலையும், அதனைப் பெற்றவர்கள் சாவா மூவாப் பெருவாழ்வு வாழ்தலையும் இப்பாடல் குறிக்கின்றது.

324. பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர் பூக் குறைய
தம் கண் இடந்து அரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம் பிரான் சக்கரம் மாற்கு அருளிய ஆறு
எங்கும் பரவி நாம் தோள் நோக்கம் ஆடாமோ 10

இடந்து–தோண்டி.

திருமாலுக்குச் சக்கரம் அருளியதைக் கூறுகிறது இப்பாடல்.

325. காமன் உடல் உயிர் காலன் பல் காய் கதிரோன்
நா மகள் நாசி சிரம் பிரமன் கரம் எரியை
சோமன் கலை தலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோள் நோக்கம் ஆடாமோ 11

எரி–அக்கினித் தேவன். எச்சன்–யாகத்தை நடத்திய ஆச்சாரியன். தூய்மைகள் செய்தவா–அவரவர்கள் செய்த சிவாபராதத்தைப் போக்கிப் புண்ணிய மேவச்செய்தது.

தக்கன் யாகம் பற்றிய பாடல் இது

326. பிரமன் அரி என்ற இருவரும் தம் பேதைமையால்
பரமம் யாம் பரமம் என்றவர்கள் பதைப்பு ஒடுங்க
அரனார் அழல் உரு ஆய் அங்கே அளவு இறந்து
பரம் ஆகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ 12

பேதைமை–அறியாமை ; பரமம். பரம்–மேலானது. அளவிறந்து–எல்லை கடந்து.

திருவண்ணாமலையில் மாலும் அயனும் அடிமுடி தேடிய கதையை இந்தப் பாடல் பேசுகின்றது.

327. ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலம் எல்லாம்
பாழுக்கு இறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழி முதல் சிந்தாத நல் மணி வந்து என் பிறவித்
தாழைப் பறித்தவா தோள் நோக்கம் ஆடாமோ 13

ஏழை–அறிவிலி. சிந்தாத–அழியாத. பிறவித்தாழ்–பிறவியின் தாட்பாள்.

"நல்லறிவு இல்லாதவர்கள் கூட்டத்தில் ஒருவனாக இருந்த நான் பரம்பரனைப் பணியாமல் வாழ்நாள் முழுவதையும் பயனில்லாத பாழான வாழ்க்கைக்கு பலியாக்கி விட்டேன். அப்படியிருந்தும், என் அறிவற்ற செயலைப் பொருட்படுத்தாமல், என்றும் அழியாமல் ஊழிக்கு முதல்வனாய் நிற்கும் நல்மணி போன்ற எங்கள் பெருமான் மிக்க வலிமையுடைய பூட்டுப் போன்றிருந்த என் பிறவியைத் தகர்த்து எறிந்துவிட்டான்" என்க.

328. உரை மாண்ட உள் ஒளி உத்தமன் வந்து உளம் புகலும்
கரை மாண்ட காமப் பெரும் கடலைக் கடத்தலுமே
இரை மாண்ட இந்திரியப் பறவை இரிந்து ஓட
துரை மாண்டவா பாடி தோள் நோக்கம் ஆடாமோ 14

உரைமாண்ட–இப்படியன் இவ்வண்ணத்தன் என்று சொல்ல முடியாமையால் வாக்கின் எல்லையைக் கடந்த. கரைமாண்ட–

எல்லையற்ற. இரைமாண்ட–புலனுகர்ச்சியாகிய உணவு அற்றுப்போக. இரிந்து–கேட்டு.

'சொல்லுக்குள் அடங்காததாய், சொல்லுக்கு அப்பாற் பட்டதாய்' ஒளி வடிவாய் நிற்கும் உத்தமன் என் உள்ளத் தில் வந்து புகுந்தான். அதனால் விளைந்த செயல்கள் வருமாறு. 'கரை என்பதே இல்லாமல் பரந்து கிடக்கும் ஆசை என்னும் பெருங்கடலைக் கடக்க முடிந்தது. மனம் என்ற இரையைத் தேடி அது கிடைப்பதால் என்னுள் நிறைந்திருந்த இந்திரியம் என்னும் பறவைகள் இப்பொழுது என்னை விட்டு ஓடிவிட்டன. காரணம், இதுவரை அந்த இந்திரியங்களுக்கு உணவாக இருந்த என்னுடைய மனம் அவன் உள் புகுந்தவுடன் அவனை நாடிச் சென்றுவிட்டது. மனம் தனக்குரிய தொழிலை விட்டுவிட்டு அவனுடன் சென்றுவிட்டமையின், அதுவரை என்னிடமிருந்த வேகம் அழிந்தது' என்க.

'துரை' என்ற சொல்லுக்கு 'வேகம்' என்ற பொருளும் உண்டு. மனம் இருக்கின்ற வரையில்தான் எதிலும் எல்லா வற்றிலும் வேகத்தோடு, தன்முனைப்புத் தொழிற்படும். அந்தத் தன்முனைப்பு அவன் உட்புகுந்ததனால் அழிந்தது; அதன் பயனாக வேகமும் ஒழிந்தது 'துரை மாண்ட' என்ற இரண்டு சொற்களால் தன்முனைப்பு, வேகம் என்ற இரண்டும் அழிந்ததாக அடிகளார் இங்குக் குறிக்கின்றார். 'வேகம் கெடுத்தாண்ட' என்றும் (திருவாசக:1-6) 'நான்கெட்டவா பாடி' (252) என்றும் இரண்டிடங்களில் கூறியதை இங்கு ஒரே இடத்தில் கூறிவிடுகிறார்.

ॐ ॐ ॐ

16. திருப்பொன்னூசல்

[அருட்சுத்தி]

இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய பழந் தமிழர் வாழ்வுமுறையில் ஊசல் இடம் பெற்றிருந்ததைப் பழைய சங்கப் பாடல்களில்—கலித்தொகையிலும் பின்னர்ச் சிலப்பதிகாரத்தின் ஊசல்வரியிலும் காண்கிறோம். கலியில் காணப்படும் ஊசல், மரக் கிளையில் நீண்ட கயிறுகள் இரண்டை மேலிருந்து கீழே தொங்குமாறு கட்டி அவற்றிடையே ஒரு பலகையைச் செருகி, அதில் அமர்ந்து ஆடப்பட்டதாக அறிகிறோம். மரக்கிளையிலிருந்து தொங்குகிற ஊஞ்சல் ஆதலின், இதில் அமர்ந்து ஆடுபவர்கள் தங்கள் கால்களை தரையில் ஊன்றி ஊஞ்சலை ஆட்டிக் கொள்வது ஓரளவு கடினமாகும். 'ஐய சிறிது என்னை ஊக்கி' (கு.கலி: 1-15) என வரும் பகுதி இந்த ஊஞ்சலில் உள்ளவர்களைக் கீழே நிற்கும் ஒருவர் ஆட்டவேண்டும் என்பதைத் தெரிவிக்கிறது.

இதனெதிராக, வீட்டினுள் உத்தரத்திலிருந்து கட்டித் தொங்கவிடப்பட்ட கயிற்றில் இணைக்கப்பட்ட ஊஞ்சலில் இருந்து ஆடும்பொழுது, ஆடுபவர்களே தங்கள் கால்களைத் தரையில் உதைத்து எம்பி ஆடமுடியும்.

அடிகளார் பாடிய பொன்னூசல் ஆறடித் தரவுக் கொச்சகமாக அமைந்துள்ளது. இந்த அமைப்பு முறையில் ஒவ்வொரு அடியிலும் நான்கு சீர்கள் அமைந்துள்ளன. உதாரணமாக, சீரார் பவளங்கால் முத்தங்கயிறாக என்ற தடிப்பு எழுத்துகளில் பின் வரும் எழுத்துக்கள் மட்டுமே அச்சிடவேண்டும்: ரா, ளங்கா, தங், றாக அடியில் குறிப்பிட்ட எழுத்துக்களில் அழுத்தம் தந்து பாட்டைப்

படித்தால் காலை எந்தெந்த இடங்களில் ஊன்றி உந்த வேண்டும் என்பது நன்கு தெரியும். ஒருமுறை உந்தி ஆடத் தொடங்கியவுடன், குறிப்பிட்ட நேரத்தில் அடுத்த உந்துதல் வந்தாலொழிய, ஊஞ்சலின் ஆட்டம் தறிகெட்டுவிடும். மேலே கூறிய முறையில் அழுத்தம் வரும் இடங்களில், காலை உந்தி ஆடினால் ஊஞ்சலின் ஆட்டம் ஒரே சீராக அமையும். இந்த நுணுக்கத்தை நன்கு அறிந்து அதற்கேற்ற தாள கதியோடு ஒரு சந்தம் அமைத்துப் பாடியுள்ள அடிகளாரின் நுண்மாண் நுழைபுலம் அறிந்து போற்றற்குரியதாகும்.

பொற்சுண்ணத்திற்கு அடுத்தபடி, ஒரு குறிப்பிட்ட தாள கதியில் அமைந்துள்ள பகுதி பொன்னூசல் ஆகும்.

இறையனுபவத்தை அப்படியே பிழிந்து தரும் ஏனைய திருவாசகப் பாடல்களிலிருந்து பொற்சுண்ணம், சாழல், உந்தியார், பொன்னூசல் போன்றவைகள் சற்று மாறுபட்டவை ஆகும். இவைபற்றி மேலும் சிந்திப்பது நலம்.

இந்த ஒன்பது பாடல்களிலும் திருஉத்தர கோசமங்கை பேசப்படுதலின் திருப்பொன்னூசல் இவ்வூரிலேயே பாடப்பெற்றது என்று நினைப்பதில் தவறில்லை.

அருட்சுத்தி என்ற தொடர் அருளினது தூய்மை எனப் பொருள்பட்டு, பொருள் விளக்கமுறாமல் நிற்கின்றது. சுத்தி உடைய அருள் என்றால், சுத்தி இல்லாத அருளும் உண்டோ என்ற பல வினாக்களுக்கு இடம் தந்து குழப்பத்தை உண்டாக்குவதலின், இந்த உட் தலைப்பு பொருந்தாமை அறிக.

329. சீர் ஆர் பவளம் கால் முத்தம் கயிறு ஆக
ஏர் ஆரும் பொன் பலகை ஏறி இனிது அமர்ந்து
நாராயணன் அறியா நாள் மலர்த் தாள் நாய் அடியேற்கு
ஊர் ஆகத் தந்தருளும் உத்தரகோசமங்கை

ஆரா அமுதின் அருள் தாள் இணை பாடி
போர் ஆர்வேல் கண் மடவீர் பொன் ஊசல் ஆடாமோ 1

ஊராக–(அடியேன் நிலைத்து வாழும்) இடமாக. ஏர்–அழகு. மடவீர்–எதிர்த்தாரைப் பொது வெற்றிகாணும் வேல்போன்ற கண் களையுடைய பெண்களே!

'பவளத் தூண்களை நட்டு, முத்து மாலைகளையே கயிறாகச் செய்து, இடையே பொற்பலகையை இணைத்து, அதில் ஏறி உத்தரகோசமங்கைத் தலைவனின் புகழ்பாடி ஆடுவோமாக!

நாயடியேனாகிய எனக்கு எளிதாகக் கிடைத்து விட்டமையால் அத்திருவடிகளின் பெருமையைக் குறைத்து நினைத்துவிட வேண்டா, நாராயணன் அறியா நாள் மலர்ப் பாதங்கள் அவை' என்றவாறு.

330. மூன்று அங்கு இயங்கு நயனத்தன் மூவாத
வான் தங்கு தேவர்களும் காணா மலர் அடிகள்
தேன் தங்கி தித்தித்து அமுது ஊறித் தான் தெளிந்து
அங்கு
ஊன் தங்கிநின்று உருக்கும் உத்தரகோசமங்கைக்
கோன் தங்கு இடைமருது பாடிக் குல மஞ்ஞை
போன்று அங்கு அன நடையீர் பொன் ஊசல் ஆடாமோ
2

குலமஞ்ஞை போன்று–சிறந்த சாயலால் மயிலைப்போன்று. அனநடையீர்–நடையால் அன்னத்தை ஒத்த பெண்களே!

விளங்குகின்ற மூன்று (சூரிய, சந்திர, அக்கினி) கண்களை உடையவன்.

தீ எப்போதும் மேல் நோக்கிச் செல்லும் இயல்புடையதாகலின், மேல் நோக்கி நீண்டுள்ள நெற்றிக் கண்ணை அக்கினி என்று கூறினர்போலும்.

அடுத்து, தேவர்களுக்கு அடிகளார் கொடுக்கும் அடைமொழிகள் எள்ளற் குறிப்பை உடையன. 'வான் தங்கு தேவர்கள்' 'மூவாத தேவர்கள்' என்ற இரண்டு அடைகளும் தேவர்களுக்குக் கொடுக்கப்பட்டதற்கு ஒரு காரணம் உண்டு. வானில் தங்கிய காரணத்தால் தாங்கள் ஏதோ உயர்ந்தவர்கள் என்று கருதிக்கொண்டு, பாதாளம் ஏழினுங் கீழ் நீண்டுள்ள திருவடிகளைக் காண மறந்தனர். அடுத்துள்ளது, மூவாத தேவர்கள் என்பது. குறுகிய காலமே வாழக்கூடியவர்கள், எமக்குரிய வாழ்நாள் முழுவதும் திருவடிகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டும், அது இயலவில்லை என்று கூறித் தப்பித்துக்கொள்ளலாம். இந்தத் தேவர்களுக்கு அதுவும் முடியாது. காரணம் மூப்பில்லாத தேவர்கள். அத்தகைய தேவர்கள் பண்டும், இன்றும், என்றும் காணமுடியாத திருவடிகள் என்க.

எல்லாப் பாடல்களிலும் திருஉத்தரகோசமங்கை குறிப்பிடப்படினும், இப்பாடலில் உத்தரகோசமங்கை நாயகன் தங்குமிடம் இடைமருது என்கிறார்.

உத்தரகோசமங்கைக் கோன் நெஞ்சத்துள் நுழைந்தான். நுழைந்ததோடுமட்டும் அன்றி, ஊனை உருக்கும் செயலையும் செய்தான் என்று கூறவந்த அடிகளார், 'ஊன்தங்கி நின்றுருக்கும். கோன்' என்கிறார்.

உள்ளம் உருகுதலாகிய செயல், தன் முயற்சியால் அன்றி அவனருளால் நடைபெற்றது என்பதைக் கூறவந்த அடிகளார் நின்று உருக்கும் எனப் பிறவினை வாய் பாட்டால் குறிக்கிறார். இனி, இந்த உருக்கத்தால் அடிகளார் நேரிடையாகப் பெற்ற பயன் ஏதேனும் உண்டா? உருக்கம் நிகழ்ந்த பின்னர், அந்த உள்ளம் உத்தரகோசமங்கைக் கோன் வந்து தங்குவதற்குரிய இடமாக ஆயிற்று என்பது உண்மைதான். இவற்றிடையே, அடிகளார் தம்மாட்டு நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றையும் குறிப்பிடுகின்றார். தேன் தங்கி, தித்தித்து, அமுது ஊறி,

தெளிந்து, ஊன் தங்கி நின்று, உருக்கினான் என்கிறார். நெஞ்சம் உருகும்போது தேனின் சுவையும், அமுதின் சுவையும் ஒன்று கலந்ததுபோன்ற ஒரு சுவையை அநுபவிக்க முடியுமா? அது இறையருள் இல்லாத உருக்கமாக இருந்தால், இச்சுவை கிடைக்காது. ஆனால், உத்தரகோசமங்கையான் வந்து, உள்புகுந்து, அங்கேயே நின்று, நெஞ்சை உருக்கினான். ஆதலால், அந்த உருக்கத்தில் தேன், அமுது ஆகியவற்றின் சுவை பிறந்தது என்கிறார்.

அம்மலரடிகள், தேன் தங்கும் மலரடிகள்; தித்திக்கும் மலரடிகள்; அமுது ஊறும் மலரடிகள்; தான் புகுந்த இடத்தை (அடியார் உள்ளத்தை)த் தெளிவிக்கும் திருவடிகள்; அடியார்களுடைய உள்ளம் இருக்கும் உடலிலும் உள்புகுந்து உருக்கும் திருவடிகள் என்க.

331. முன் ஈறும் ஆதியும் இல்லான் முனிவர் குழாம்
பல் நூறு கோடி இமையோர்கள் தாம் நிற்ப
தன் நீறு எனக்கு அருளி தன் கருணை வெள்ளத்து
மன் ஊற மன்னும் மணி உத்தரகோசமங்கை
மின் ஏறும் மாட வியல் மாளிகை பாடி
பொன் ஏறு பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ 3

நீறு–அருள். மன் ஊற–நிலைபெற.

'முன் ஈறும் ஆதியும் இல்லான்' என்ற தொடருக்கு இரு வகையாகப் பொருள் கொள்ளலாம். ஆதியும் ஈறும், ஈற்றுக்கு முன்னுள்ளதாகிய நடுவும் இல்லாதவன் என்பது ஒன்று. இரண்டாவது, ஆதியும் ஈறும் இல்லாத இவனுக்கு, முன்னேயுள்ளது (முன்) என்று எதுவும் இல்லாதவன் என்பது.

'முனிவர்களும் கோடிக் கணக்கான தேவர்களும் அவனருள் கிட்டுமா என்று காத்துக்கொண்டு நிற்க, தனக்கு உரித்தான திருநீற்றை (தன்+நீறு) எனக்கு

அளித்தான். அதுவுமன்றித் தன் கருணை வெள்ளத்தில் மிகுதியும் ஊறும்படியாகச் செய்தான்' என்றபடி.

332. நஞ்சு அமர் கண்டத்தன் அண்டத்தவர் நாதன்
மஞ்சு தோய் மாட மணி உத்தரகோசமங்கை
அம் சொலாள் தன்னோடும் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்று அமுதம் ஊறிக் கருணை செய்து,
துஞ்சல் பிறப்பு அறுப்பான் தூய புகழ் பாடி
புஞ்சம் ஆர் வெள் வளையீர் பொன் ஊசல் ஆடாமோ 4

துஞ்சல்–இறத்தல். புஞ்சம்–திரட்சி. வெள்வளை– சங்கினால் செய்த வளையல்.

அடியார்களுடைய புறத்தே இருந்து காட்சி நல்குவதோடு, அவர்கள் நெஞ்சுள்ளேயும் சென்று தங்குகிறான். உள்ளத்துள் அமுது நிறைவது போன்ற சுவை தோன்றினமையின், அவன் நெஞ்சுள்ளே நின்றான் என்பது உணரப்படுகிறது. அவன் நிறைந்தபொழுது ஏற்படுகின்ற ஆனந்தம் ஒரு புறம். இது உத்தரகோசமங்கையான் அஞ் சொலாள் தன்னோடு உள்ளே புகுந்தபோது உடனடியாகக் கிடைத்த இன்பம். அன்றியும் உள்ளே புகுந்ததனால் கிடைத்த மற்றொரு பெரு நன்மை, பிறப்பும் இறப்பும் அற்ற நிலை எய்தியதாகும்.

333. ஆணோ அலியோ அரிவையோ என்று இருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர் குழாம்
நாணாமே உய்ய ஆட்கொண்டருளி நஞ்சு தனை
ஊண் ஆக உண்டருளும் உத்தரகோசமங்கைக்
கோண் ஆர் பிறைச் சென்னிக் கூத்தன் குணம் பரவி
பூண் ஆர் வன முலையீர் பொன் ஊசல் ஆடாமோ 5

இருவர்–பிரம விஷ்ணுக்கள். கோணார் பிறை–வளைந்த பிறை.

அயன், மால் என்ற இருவரும் அடிமுடி தேடப் புறப்பட்டபொழுது எதிரே நிற்கும் உருவம் ஆணோ, பெண்ணோ அலியோ என்றுகூட அறிந்துகொள்ள முடியாதபடி ஓங்கி நின்றவன் கடவுள். இந்த இடத்தில் கடவுள் என்ற சொல்லை அடிகளார் பயன்படுத்தியது மிகச் சிறந்த கருத்தை அறிவிப்பதாகும். எதிரே நின்ற உருவம் அயன், மால் ஆகிய இருவருக்கும் கட்புலன் ஆகும்படி ஒரு வடிவு பெற்று நின்றமையால் கடவுள் என்ற சொல்லின் பிற்பகுதியாகிய 'உள்' என்பது பொருத்தம் ஆகிறது. அதாவது அந்த வடிவம் எது என்று அவர்கள் அறியாவிட்டாலும் கண்ணால் காணக்கூடிய வடிவில் நின்றதால், அவர்கள் கண்ணின் உள்ளும் கருத்தின் உள்ளும் புகுந்து நின்றதாதலின், கட+உள் என்ற சொல்லின் பிற்பகுதிக்கு விளக்கமாயிற்று. இனி, அவ்விருவரின் சிந்தனை, அறிவு, கற்பனை ஆகிய அனைத்தையும் கடந்து நின்றதால் கடவுள் என்ற சொல்லின் 'கட' என்னும் முற்பகுதிக்கும் பொருளாயிற்று.

தங்கள் முயற்சியாலேயே அமுதத்தைப் பெற்றுவிட லாம் என்று கருதிக்கொண்டு பாற்கடலைக் கடைய முற் பட்ட தேவர்கள் ஆலகாலம் (விடம்) தோன்றியவுட்ன் அஞ்சி நடுங்கினர். முன்னர்ச் சிவபெருமானை உதவுமாறு வேண்டாத தேவர்கள் இப்பொழுது சிறிதும் வெட்கமடை யாமல் அவனிடம் சென்று வேண்ட, அவர்கள் உய்யுமாறு, ஆலத்தைத் தான் உண்டு அவர்களைக் காத்தான் என்க.

334. மாது ஆடு பாகத்தன் உத்தரகோசமங்கைத்
தாது ஆடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டு என் தொல் பிறவித்
தீது ஓடாவண்ணம் திகழ பிறப்பு அறுப்பான்
காது ஆடு குண்டலங்கள் பாடி கசிந்து அன்பால்
போது ஆடு பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ 6

'உமையொரு பாகனாக நின்ற பெருமான், குருநாதர் வடிவில் வந்து அனைத்தையும் கடந்து நின்ற அடியார் நடுவில் என்னையும் இருத்தினான். அவருடன் இருப்பதற்கு இடையூறாக நின்ற என் குற்றங்களைத் தன் அருட்பார்வையால் போக்கினான். அப்படி ஆட்கொண்ட நிலையில், தொடர்ந்து வருகின்ற என் பிறவித் தொடரில் இருந்த சஞ்சித, பிராரத்வ வினைகளையும், இப்பிறவியில் நான் செய்யும் செயல்களுக்குப் பயனாக வரும் ஆகாமிய வினையையும் போக்கினான். அதன் பயனாக என்னுடைய பிறப்பையும் அறுத்தான்.

சஞ்சித வினையை வைப்புத்தொகை போல் வைத்துவிட்டு, அதில் ஒரு பகுதியை நடைமுறைக் கணக்குப்போல இந்தப் பிறவியில் அனுபவிப்பதற்காகக் கொண்டு வருவதைப் பிராரத்துவம் என்பர். இந்தப் பிராரத்துவ வினையை அனுபவித்துக்கொண்டே வாழ்க்கை நடைபெறுகிறது. இந்த வாழ்க்கையில் அன்றாடம் நாம் செய்யும் செயல்களுக்கு ஏற்ப ஆகாமிய வினை பரிணமிக்கின்றது. இந்த ஆகாமிய வினை, ஒரு பிறப்பில் அன்றாடம் விரிவடையக்கூடிய ஒன்றாகும். ஏனென்றால் இப்பிறப்பில் வாழ்கின்ற ஒவ்வொரு நாளும் சில பல செயல்களைச் செய்ய வேண்டியிருத்தலின், அதன் பயனாக விளையும் ஆகாமிய வினை நாள்தோறும் வளர்ந்து கொண்டுதான் இருக்கும். இது வளர வளர அடுத்த பிறவிக்கு இது வித்தாகிவிடும். ஆகாமிய வினையைக் களைந்தாலொழியப் பிறப்பு அறுபட வாய்ப்பு இன்மையால் 'தொல் பிறவித் தீது ஓடா வண்ணம் (செய்து) திகழப் பிறப்பு அறுப்பான்' என்கிறார்.

335. உன்னற்கு அரிய திரு உத்தரகோசமங்கை
மன்னிப் பொலிந்து இருந்த மா மறையோன் தன் புகழே

பன்னிப் பணிந்து இறைஞ்ச பாவங்கள் பற்று அறுப்பான்
அன்னத்தின் மேல் ஏறி ஆடும் அணி மயில் போல்
என் அத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில் பாடி
பொன் ஒத்த பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ 7

'அந்தணக் கோலத்தில் வந்து பெருந்துறையில் ஆட்கொண்டவன் உத்தரகோசமங்கையான். ஆதலால், அழகிய பெண்களே! இரண்டு பக்கங்களிலும் அன்னத்தின் வடிவம் செய்து அலங்கரிக்கப்பெற்ற ஊசலில் இள மயில் போல் அமர்ந்து, அவன் புகழைப் பாடிக்கொண்டு ஆடுவீர்களாக' என்றபடி.

336. கோல வரைக் குடுமி வந்து குவலயத்துச்
சால அமுது உண்டு தாழ் கடலின் மீது எழுந்து
ஞாலம் மிகப் பரி மேற்கொண்டு நமை ஆண்டான்
சீலம் திகழும் திரு உத்தரகோசமங்கை
மாலுக்கு அரியானை வாய் ஆர நாம் பாடிப்
பூலித்து அகம் குழைந்து பொன் ஊசல் ஆடாமோ 8

கோலவரைக் குடுமி வந்து–அழகிய கைலையுச்சியினின்றும் குருமேனிதாங்கிவந்து. அமுதுண்டு–உணவை உண்டு. தாழ்கடலின் மீதெழுந்து–தாழ்ந்த கடலலையைப்போல மேலெழுந்து தாவி. ஞால மிக–உலகம் உயர. பரிமேற்கொண்டு–குதிரைமீது ஏறி. பூலித்து–பூரித்து; ரகர லகரப்போலி.

வாலாயமாகப் பொருள் கூறுவதோடு அல்லாமல், பின்வருமாறும் பொருள் கூறலாம்:

'கோலவரைக் குடுமி' என்றதால் மலைச்சிகரம் போன்ற எட்டாத நிலையும் பெருமிதமும் உள்ள ஒரு பொருள் பேசப்பெறுகிறது. அது தன் பெருமிதத்தை விட்டு விட்டு அனைவரும் கண்காணுமாறு மிகச் சாதாரணமான குதிரைச் சேவகனாக வந்து பாண்டியனிடம் பரிசுப் பொருளையும் பெற்றுக்கொண்டது. அந்தக் குடுமி இதை

மட்டுமா செய்தது? பிட்டு வாணிச்சியின் பிட்டமுதை உண்டதும் அந்த வரைக்குடுமியின் எளிவந்த தன்மைக்கு மற்றும் ஓர் எடுத்துக்காட்டாகும். வந்திக்குக் கூலியாளாய் வந்தது மக்கள் செய்யும் பணியில் மிகமிகத் தாழ்ந்த நிலையில் உள்ளதாகும்.

வரைக் குடுமி மேற்கொண்ட இந்த இரு பணிகளும் அடிகளார் கண்காண நடந்தவையாகும். இனி, அடிகளார் தாம் காணாவிட்டாலும் செவிவழியாகக் கேட்ட செய்தி ஒன்றுண்டு. மீன் வலையை வீசுபவனாக, அக்குடுமி வந்த நிகழ்ச்சியாகும் அது.

இதனை வரிசைப்படுத்திக் கூறிக்கொண்டு வந்த அடிகளாருக்குக் கோலவரைக் குடுமி தன் நிலையில் இருந்து இறங்கி இப்பணிகளை ஏன் மேற்கொண்டது என்ற வினாத் தோன்றியதுபோலும். அந்த வினாத் தோன்றிய பொழுது அதற்கு விடையும் கிடைத்துவிட்டது. நம்மை ஆட்கொள்ளத்தான் இத்தனையும் செய்தது என்பதே அந்த விடை.. இந்த விடையைச் சொல்லும்பொழுது பரிமேற்கொண்டு எனை ஆண்டான் என்றல்லவோ சொல்லியிருக்க வேண்டும்? அதுதானே நடந்தது? அப்படியிருக்க எனை என்ற தன்மை ஒருமைக்குப் பதிலாக நமை என்று தன்மைப் பன்மையை ஏன் பயன்படுத்தினார் என்று சிந்தித்தால், ஓர் உண்மை விளங்கும்.

இதுவரை பலப்பல பாடல்களில், நான் என்றும் எனை என்றும் ஒருமையில் தொடங்கி, நம் என்றும் எமை என்றும் பன்மையில் முடித்திருப்பதைக் கண்டோம். அவ்விடங்களில் வரும் பன்மை, பன்மையன்று, ஒருமைதான் என்று முன்னர் விளக்கியுள்ளோம்.

ஆனால், இந்தப் பாடலில் வரும் 'நமை ஆண்டான்' என்பது உண்மையிலேயே பன்மைப் பொருளில்

பயன்படுத்தப் பெற்றதாகும். ஒரு விநாடி சிந்தித்தால் இதன் அடிப்படை விளங்கிவிடும்.

கோலவரைக் குடுமி கூலியாளாய் வந்து அடிகளாருக்குமட்டுமா காட்சி தந்தது? அதற்கு முன்னரே பிட்டு வாணிச்சிக்கு அக்காட்சி கிடைத்தது. அவள் வீட்டை அடைவதற்குமுன்னர்க் 'கூலி கொள்வார் உண்டோ' என்று ஓலமிட்டுக் கொண்டு ஆலவாய் வீதிகளில் நடந்துவந்ததே, அந்தக் காட்சியை எத்தனை பேர் கண்டிருப்பார்கள்! வந்தியின் பிட்டமுதைத் தின்றுவிட்டு வையைக் கரையடைக்கச் சென்றவிடத்தில் சக கூலியாட்கள், வேலை வாங்கும் மேற்பார்வையாளர்கள், பார்க்க வந்த அமைச்சர்கள், இறுதியாக வேலை நடைபெறுவதைப் பார்க்க வந்த பாண்டி மன்னன் ஆகிய இத்தனை பேருக்கும் ஒரு நாள் காலையிலிருந்து மாலை வரை கோலவரைக் குடுமி காட்சி தந்துகொண்டிருந்தது அல்லவா? இந்த ஊனக் கண்களால் வரைக் குடுமியைக் கண்டவர் அனைவரும் அவன் அருளைப் பெற்றவர்கள் ஆகிவிட்டனர்.

இத்தனை நூற்றுக் கணக்கானவர்களுக்கு ஒரே நாளில் தரிசனம் தந்து அவர்களை ஆட்கொண்டான் ஆதலின் 'நமை ஆண்டான்' என்று பாடுகிறார் அடிகளார்.

337. தெங்கு உலவு சோலைத் திரு உத்தரகோசமங்கை
தங்கு உலவு சோதித் தனி உருவம் வந்தருளி
எங்கள் பிறப்பு அறுத்திட்டு எம் தரமும் ஆட்கொள்வான்
பங்கு உலவும் கோதையும் தானும் பணி கொண்ட
கொங்கு உலவு கொன்றைச் சடையான் குணம் பரவிப்
பொங்கு உலவு பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ 9

தெங்கு–தென்னை. எந்தரமும்–எத்தகைய நிலையிலும்; எங்கள் நிலையிலும் எனினுமாம். பங்கு–பாதி. கோதை–கோதை போன்றவராகிய உமாதேவியார். கொங்கு–தேன்.

'திருஉத்தரகோசமங்கையில் தங்கியுள்ள சோதி வடிவான அப்பொருள், நடமாடுகின்ற ஈடு இணையற்ற மானிட குருநாதர் வடிவம் எடுத்துக்கொண்டது. அதே வடிவுடன் எங்கள்மாட்டு வந்தருளி எல்லாத் தரத்தில் உள்ளவர்களையும் ஆட்கொள்ள முனைந்தது. எங்கள் பிறப்பை அறுத்து எங்களைப் பணி கொண்ட கொன்றைச் சடையானைப் பாடுவீர்களாக.

இப்பாடலில் வரும் 'எந்தரமும் ஆட்கொண்டு' என்ற தொடர், மிகத் தாழ்ந்த நிலையிலிருந்து மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்கள்வரை அனைவரையும் ஆட்கொண்டான் என்ற பொருளைத் தருவதாகும். சென்ற பாடலில் 'நமை ஆண்டான்' என்பதற்குக் கூறிய பொருள் இதில் வலுப்பெறுவதைக் காண்க.

'எங்கள் பிறப்பு அறுத்திட்டு எந்தரமும் ஆட்கொள்வான்' என்றும், 'நமை ஆண்டான்' என்றும் (திருவாச—331) அடிகளார் பல இடங்களில் கூறுவது. அவருடைய கனிந்த உள்ளத்தில் தோன்றிய கருத்துக்களாகும். 'நாயினும் கடையேன்' என்று பல இடங்களில் தம்மைச் சொல்லிக்கொள்கின்றார். ஆதலின் தம்மைப் போன்ற கடையவனுக்கே குருநாதர் அருள்கிட்டியது என்றால் உலகத்தில் உள்ள எல்லா உயிர்கட்கும் அது கிட்டியிருக்கும் என்று நினைத்ததிலும் தவறில்லை. அவ்வாறு பாடியதிலும் தவறில்லை.

ॐ ॐ ॐ

17. அன்னைப் பத்து

[ஆத்தும பூரணம்]

மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது அன்னைப் பத்தில் வருகின்ற பத்துப் பாடல்களும் தலைவியின் மனநிலையை நன்கு அறிந்தவளாகிய தோழி, செவிலித் தாய்க்கு அதனை எடுத்துக்கூறுவதுபோல் அமைந்துள்ளது. ஆனால், அகத்திணையின் தொடர்புடையதுபோலப் பாடப் பெறும் இப்பாடல்கள் முழுவதையும் தொல்காப்பியத்தில் சொல்லப்பெற்ற அகத்திணையோடு பொருத்தி, பொருள் காணமுற்படுவது பொருத்தமுடையதா என்பது சிந்திக்கற்பாலது.

இவ்வாறு பலரும் பொருள் காண்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. திருக்கோவையார் அடிகளாரால் இயற்றப்பெற்றதாகும் என்ற கருத்து, இன்று பலரும் ஏற்றுக்கொண்ட ஒன்றாகும். அகத்திணை இலக்கணத்திற்கு உட்பட்டு பலபாடல்களைத் தேவாரம் பாடிய மூவரும், நம்மாழ்வார் போன்ற ஆழ்வார்களும் அடிகளாருக்கு முற்பட்ட காலத்திலேயே பாடியுள்ளார்கள்.

அகத்திணை இலக்கணத்திற்கு முற்றிலும் கட்டுப்பட்ட திருக்கோவையாரைப் பாடியவர் அடிகளார் என்று கொண்டதால், திருவாசகத்தில் வரும் அன்னைப்பத்திற்கும் குயில்பத்து முதலியவற்றிற்கும் இந்த அடிப்படையிலேயே பலரும் பொருள் கூறியுள்ளனர். அதைத் தவறு என்று கூறுவதற்கில்லை. என்றாலும் புதிய கண்ணோக்கத்துடன் பார்க்க முனைவதிலும் தவறில்லை என்று கருதியதால்தான் இந்த அன்னைப்பத்து உள்பட குயில்பத்து, கோத்தும்பி

முதலியவற்றிற்கும் புதிய முறையில் பொருள் கூறியுள்ளோம்.

'அன்னே!' என்று வரும் ஒரு சொல்லை வைத்துக் கொண்டு, தோழி, செவிலிக்கு அறத்தொடு நின்றது என்று கூறுவது பொருத்தமாக இல்லை.

சங்கப்பாடல்களில் வரும் அன்னை, அன்னாய் என்ற சொற்களுக்கும், இப்பகுதியில் வரும் அன்னை, அன்னே என்ற சொற்களுக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை.

இறையுணர்வில் ஈடுபட்டு, முற்றிலும் அதனுள் அமிழ்ந்துவிடாமலும், முற்றிலும் அதனை விட்டு வெளியே வந்து 'தான்' என்ற தன்முனைப்புடன் தொழிற்படுகின்ற நிலைமை இல்லாமலும், இரண்டினுடைய எல்லையிலும் நின்று பேசும் ஒருத்தியின் கூற்றாகும் இப்பாடல்கள். அவள் யாரோ ஒருவரை முன்நிறுத்தியோ, குறிப்பிட்டோ, அழைத்தோ இவற்றைச் சொல்லியதாகத் தெரியவில்லை. தன்னுடைய உள்ளத்தில் ஏற்பட்ட உணர்ச்சி வேறுபாட்டால் அநுபவ நிலையிலிருந்து வெளிப்பட்ட அவள், அதன் விளிம்பில் நின்று பின்னோக்கிப் பார்க்கும்பொழுது, அவள் வாயிலிருந்து வெளிப்பட்ட சொற்களாகும் இவை. இச்சொற்கள் தன்னை வேறுபடுத்திக்கொண்டு நின்று நெஞ்சொடு கிளந்தவை ஆகும். இதில் வரும் 'அன்னே' என்ற சொல் ஆற்றாமைபற்றி வரும் 'அம்மா' என்ற சொல்லின் மற்றொரு வடிவமாகும்.

இங்கு அடிகளார் இறையனுபவம் பெற்ற ஒரு தலைவியாகத் தம்மை உருவகித்துப் பாடுகிறார் என்க.

இவ்வாறு பொருள் கொள்ளும்போது பாடல்கள் தோறும் வரும் 'என்னும்' என்ற சொல்லைப் பாடலின்

இசை நிறைக்க வந்த சொல்லாகவும், நின்றுவற்றும் சொல்லாகவும் கொள்ளவேண்டும்.

338. வேத மொழியர் வெள் நீற்றர் செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர் இந் நாதனார் அன்னே என்னும் 1

நாதப்பறையினர்–நாத தத்துவத்தில் விளங்கும் ஓங்காரத்தைப் பறையாகக் கொண்டவர்.

சிவபெருமான் எப்பொழுதும் இருக்கு வேதத்தைச் சொல்லிக்கொண்டேயிருக்கிறான் என்பது தேவாரம் முதல் பிரபந்தம் வரையிலுள்ள பல அருளாளர்கள் பாடலில் காணப்பெறும் ஒன்றாகும்.

'இருக்கு இலங்கு திருமொழிவாய்+எண் தோள் ஈசற்கு' (நாலா:1505) என்பது திருமங்கை ஆழ்வார் வாக்கு.

வேத மொழியர் என்று அடிகளார் கூறியது பழைய மரபுபற்றிக் கூறப்பட்டதாகும். 'வெண்ணீற்றர் செம்மேனியர்' என்பது முரண் அழகு கொண்டது.

அடுத்துள்ள 'நாதப் பறையினர்' என்ற தொடர், ஆழ்ந்த கருத்துடையதாகும். இங்கு நாதம் என்ற சொல் ஓசை, ஒலி என்ற சாதாரணப் பொருளைத் தாராமல், ஆதி நாதத்தையே குறிப்பதாகும். அதாவது எல்லா ஒலிகளுக்கும் மூலமாக இருக்கின்ற ஒன்றைத் தனது வாத்தியமாக, அதாவது பறையாகக் கொண்டவன் என்பதால் நாத தத்துவத்தைக் கடந்து நிற்பவன் என்பதும் நான்முகன் திருமால் ஆகியோர்க்குத் தலைவன் என்பதும் பொருளாயிற்று. ஆதிநாதத்திற்கு அப்பாற்பட்டவன் இவன் ஒருவனே என்க.

நாதப் பறையினர் என்று கூறியவுடன், அதனுடைய உண்மையான பொருளை அறிய முற்படாமல், சாதாரண ஒலியை உண்டாக்கும் பறை என்ற கருவியைக் கையில் பெற்றவன் என்று பொருள் செய்துகொள்ளவும் இடமுண்டு அல்லவா? அந்தப் பொருளையே மனத்தில் கொண்டு சாதாரணப் பறையை உடையவன் என்று பொருள் கொண்டாலும் சரி. எது எப்படியானாலும் உண்மையில் அவனே நான்முகன், திருமால் ஆகிய இருவருக்கும் தலைவனாக உள்ளான் என்பதை அறிக.

நாதம் என்பதற்கு வாக்கு என்றும் பொருள் கொள்ளலாம். 'அந்த வாக்குத் தேவதையாக நிற்கும் கலைமகளுக்கும், அவள் தலைவனாக இருக்கும் நான்முகனுக்கும், அவனை ஈன்ற திருமாலுக்கும் இந்த வெண்ணீற்றுச் செம்மேனியன் நாதனாக உள்ளான் என்பதை நெஞ்சே நீ அறிவாயாக'.

தலைவி, முன்னர்க் கூறியதுபோல, இறையனுபவத்தில் ஒட்டி இருந்த நிலை நீங்கி, வெளிப்பட்டு, விளிம்பில் நின்று பின்னோக்கிப் பார்ப்பதின் விளைவு இச்சொற்கள். 'அம்மம்மா! எனக்கு இந்தப் பேரானந்த அனுபவத்தைத் தந்தவன் இதோ என் மனக்கண் முன் நிற்கின்றான். அவன் வாய் வேதத்தைப் பாடுகிறது. அவன் செம்மேனியில் வெண்ணீறு அணிந்துள்ளான். அவன் கையிலுள்ள பறையிலிருந்து வெளிப்படும் நாதம், என்னைமட்டுமா ஈர்க்கின்றது? அம்மம்மா! நான்முகன், திருமால் ஆகிய இருவரும் இந்த நாதத்தில் கட்டுண்டல்லவா உள்ளனர்?' என்று பொருள் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பொருள் கொண்டால் நற்றாய், செவிலித் தாய், தோழி ஆகிய பாத்திரங்களை இங்கே கொண்டு வந்து இடர்ப்படத் தேவை இல்லை. அன்னே என்பது

தலைவி தனக்குத் தானே பேசிக்கொள்வதன் முத்தாய்ப் பாகும்.

339. கண் அஞ்சனத்தர் கருணைக் கடலினர்
உள் நின்று உருக்குவர் அன்னே என்னும்
உள் நின்று உருக்கி உலப்பு இலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும் 2

அஞ்சனம்–மை. உலப்பிலா–அழியாத.

உணர்ச்சிப் பெருக்கால் பக்தையின் பேச்சில் உரை தடுமாற்றம் ஏற்படுவதை இப்பாடலில் நன்கு அறிய முடிகிறது. அஞ்சனம் தீட்டப்பெற்ற என் கண்ணினுள்ளார் என்ற பொருளைத் தரும் சொற்கள், உரை குழறியது காரணமாகக் 'கண் அஞ்சனத்தார்' என்று நின்றன. அதே போன்று அடுத்த சொல்லும் கருணையில் கடல் போன்றவர் என்ற பொருளைத் தருவதற்குப் பதிலாக, 'கருணைக் கடலினர்' என்று நின்றது.

அவனைப்பற்றிப் பேசும்பொழுது, உணர்ச்சி காரணமாக உரை தடுமாறிற்றே தவிர, தன்னைப்பற்றிப் பேசும்பொழுது உரைதடுமாறவில்லை. எனவே, உள்நின்று உருக்குவர் என்ற தொடர் முறையாக அமைந்துவிட்டது.

இப்பொழுது தன்னை ஆட்கொண்ட தலைவன் யார், அவன் எங்கே இருக்கிறான், அவன் என்ன செய்கிறான் என்ற மூன்று வினாக்களுக்கு விடை கிடைத்துவிட்டது. கருணைக்கடல் போன்றவன் அவன் என்பது முதல் வினாவிற்கு விடை; மை தீட்டப் பெற்ற கண்ணின் உள்ளான் என்பது இரண்டாவது வினாவிற்கு விடை; உள்நின்று உருக்குகிறான் என்பது மூன்றாவது வினாவிற்கு விடையாகும்.

இந்த மூன்று விடைகளிலும் கூறப்பெற்ற தலைவன், பருவுடலோடு எதிரே நிற்பவனாகவும் தெரியவில்லை. 'அம்மம்மா! அவன் என் உள்ளே நின்று உருக்குகிறான் என்பதை எப்படி அறிந்துகொண்டேன் தெரியுமா? முதலா வதாகக் கண்ணீர் பெருகத் தொடங்கியது. இது பலருங் காண, புறத்தே நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். பிறர் அறியா வண்ணம் உள்ளேயும் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. பிறந்த திலிருந்து எத்தனையோ மகிழ்ச்சி, இன்பம் ஆகியவற்றை அநுபவித்தது உண்டு. ஆனால், சிறிது நேரத்தில் அவை மாறி கவலை, துன்பம் என முடிந்துவிட்டன. இப்பொழுது இந்தக் கண்ணீர் வெளிப்படுவதற்குக் காரணமாய் இருந்தது எது தெரியுமா? உள்ளத்தின் ஆழத்தில் தோன்றிய ஆனந்தமாகும். ஆனந்தம் என்று கூறியவுடன் அதிகப்படியான மகிழ்ச்சி என்று பொருள் செய்துவிடாதே. இது மகிழ்ச்சியோ, இன்பமோ அன்று. அவையெல்லாம் நிலையில்லாதவை. ஆனால், இது மகிழ்ச்சி, இன்பம் ஆகியவற்றினின்று வேறுபட்டதும் நிலையானதுமாகிய ஆனந்தம் ஆகும்.

இப் பாடலில் வரும் அன்னை என்பது விளியாக நின்றது—முன்னர் அவ்வாறில்லை.

எவ்வளவு ஆழ்ந்த காதலாயினும் அது உலகியற் காதலாக இருக்கும்பட்சத்தில், தலைவன் தந்த இன்பத்தை ஆனந்தம் என்றோ, உலப்பில்லா ஆனந்தம் என்றோ கூறுதல் இயலாத காரியம். எனவே, தொல்காப்பியத்தையோ, வேறு இலக்கண நூலையோ வைத்துக்கொண்டு அந்த அடிப்படையில் பொருள் காண்பது பொருத்தமற்ற தாகிவிடும்.

340. நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்து இருப்பரால் அன்னே என்னும்
சித்தத்து இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும் 3

'அம்மம்ம! என் உள்ளே புகுந்து என்னை ஆட்கொண்டவர் நித்த மணாளர் என்று அறிந்தேன். உலகியல் தலைவர்களைப் போலல்லாமல் என்றும் மாறாத, ஒருபடித்தான அழகைப் பெற்றவர். அந்த அழகை மானிட அழகோடு ஒப்பிடுவதோ, அல்லது விவரிப்பதோ இயலாத காரியம். வேறு வழியே இல்லாத காரணத்தால் நிரம்ப அழகியர் என்று கூறி நிறுத்திவிடுகிறேன். 'நிரம்ப' என்ற சொல் ஒப்பு நோக்குச் சொல்லாகும். உன் கற்பனை எவ்வளவு விரிந்து சென்றாலும், அந்த அளவுக்கு விரிந்து செல்வதைத்தான் நிரம்ப என்ற சொல்லால் குறிக்கிறோம். நித்த மணாளராகவும், நிரம்ப அழகியராகவும் உள்ள இவரைப் புறக்கண்களால் காணவேண்டும் என்று துடிக்கிறாயா? அது நம்மால் முடியாத காரியம். காரணம் அவர் என் சித்தத்துள்ளே இருக்கிறார். அவரை உனக்குக் காட்ட முடியாவிட்டாலும் அவரது பெயரையாவது அறிந்துகொள்ள விரும்புகிறாயா? இதோ சில பெயர்களைச் சொல்கிறேன் கேள். தென்னன், பெருந்துறையான், அத்தர், பெருந் துறையில் உறைகின்ற அத்தர், ஆனந்தமே வடிவானவர் என்பவை அவர் பெயர்களுள் சிலவாகும்' என்க.

341. ஆடு அரப் பூண் உடைத் தோல் பொடிப் பூசிற்று ஓர்
வேடம் இருந்த ஆறு அன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டு கண்டு என் உள்ளம்
வாடும் இது என்னே அன்னே என்னும் 4

ஆடு அர பூண்–ஆடுகின்ற பாம்பாகிய ஆபரணம். உடை தோல்–உடுத்த உடை புலித்தோல்.

நித்த மணாளராக உள்ள அத்தலைவனின் மற்றொரு வேடம் இது. தலைவியின் உள்ளத்துள்ளே அவனை வைத்துக் காண்கின்ற காட்சி மேலும் மேலும் விரிகின்றது.

'நித்த மணாளன் என்றும், எல்லையற்ற அழகுடையவன் என்றும் பேசப்பெற்ற ஒருவனுக்கு இப்படியும் ஒரு வேடம் உண்டு என்பதை என் உள்ளத்தளவில் காண்கிறேன். ஆடு அரவத்தைப் பூணாக அணிந்தவன், திருநீற்றை உடல் முழுதும் பூசியுள்ளவன், தோலை உடையாக உடுத்தியவன் என்ற முறையில் அவனை என்னுள் கண்டேன். ஆகா! என்னுள்ளம் ஆடத் தொடங்கிவிட்டது. நிரம்பிய அழகைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்திருந்த என்னுள் இப்படி ஒரு கோலம் காட்சியளித்தவுடன் என் உள்ளம் ஆடத் தொடங்கியது நியாயமா? இது என்ன முறை?—என்ற வினாவை என்னுள் எழுப்புகின்றேன். நிரம்ப அழகிய கோலம்தான் அவனது உண்மையான வடிவம். இப்பொழுது காண்கின்றது அவன் அணிந்துள்ள வேடமே ஆகும். இந்த வேடத்தினுள்ளே நிரம்ப அழகியான் உள்ளான் என்பதை நான் உணர்கின்றேன். ஆனால், இந்த நிலையில் அவனைக் காணுந்தோறும் காணுந்தோறும் இந்த வேடம் அவனது இயல்பான வடிவன்று என்பதை அறிந்திருந்தும்கூட என் உள்ளம் வாடுவது ஏன்?' என்கிறாள் தலைவி.

342. நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டி நல் நாடரால் அன்னே என்னும்
பாண்டி நல் நாடர் பரந்து எழு சிந்தையை
ஆண்டு அன்பு செய்வரால் அன்னே என்னும் 5

'ஆனால், நம்முடைய சிந்தையை ஆண்டவர், நீண்ட கரத்தராக இருப்பதால், விரிந்து பரந்து செல்லும் சிந்தையை ஒரே எட்டில் பிடித்துத் தன் திருவடிகளில் அடக்கி, அந்தச் சிந்தையோடு சேர்ந்து நம்மையும் ஆண்டு கொள்கிறார். ஏன் அவர் இவ்வாறு செய்ய வேண்டும்? அவருடைய அருள் காரணமாகவே இது நடைபெற்றது' என்கிறார்.

இறைவனைப்பற்றிக் கூறும்பொழுது அருள் என்று தானே கூறவேண்டும், அன்பு என்று அடிகளார் கூறியுள்ளாரே என்றால், அருளுக்கு வித்தாய் இருப்பது அன்பு. ஆதலின், அருள் என்பதற்குப் பரியாயமாக அன்பு என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார். வள்ளுவரும் 'அருள் என்னும் அன்பு ஈன் குழவி' (குறள்: 757) என்றுதானே கூறிப் போனார்.

343. உன்னற்கு அரிய சீர் உத்தரமங்கையர்
மன்னுவது என் நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவது என் நெஞ்சில் மால் அயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும் 6

உன்னற்கு அரிய சீர்–நினைத்தற்கு அரிய புகழ். மன்னுவது–நிலைபெறுவது.

'சிந்தனைக்கு எட்டாத சிறப்பினை உடைய உத்தர கோசமங்கைப் பெருமான், என் நெஞ்சில் புகுந்து நிலை பேறாக உள்ளார்.

'நிலைபேறாக உள்ள அப்பெருமான், மால், அயன் என்ற இருவராலும் காணமுடியாதவராயினும் என் நெஞ்சினுள் வந்து தங்கியிருப்பது என்ன அதிசயம்' என்றபடி.

நெஞ்சில் மன்னி இருப்பவரை மால், அயன் காண்கிலார் என்ற கூறுவதில் ஒரு நயம் அமைந்துள்ளதைக் காணலாம். காண்கிலார் என்பது, கண்ணால் என்ற சொல்லை அவாவிநிற்றலின் அவர்கள் தேடியது புறக்கண் ணால் என்க. அவர்கள்கூடப் புறக்கண்ணால் அடி முடி தேட முயன்ற முயற்சியைக் கைவிட்டு அகக்கண்களைத் திறந்து அப்பார்வையை உள்ளத்துள் செலுத்தியிருப்பாரா யின் ஒருவேளை அவர்கள் கண்டிருக்கக்கூடும் என்ற கருத்தும் இதனுள் அமைந்திருத்தலைக் காணலாம்.

344. வெள்ளைக் கலிங்கத்தர் வெண் திருமுண்டத்தர்
பள்ளிக் குப்பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக் குப்பாயத்தர் பாய் பரி மேற் கொண்டு என்
உள்ளம் கவர்வரால் அன்னே என்னும் 7

கலிங்கம்–உடை, முண்டம்–நெற்றி, குப்பாயம்–மேல்சட்டை பள்ளி–உறங்குமிடம், பள்ளிக் குப்பாயத்தர்–படுக்கை விரிப்பாகக் கொண்டு அதன்மேல் உறங்குபவர்

'பரிமேல் அமர்ந்து வந்த சேவகனாய், வெண்மையான உடையை சல்லடமாக (குறுகிய கால்சட்டை) அணிந்து, நெற்றியில் திருநீறு விளங்கக் குப்பாயம் என்று சொல்லப் படுகின்ற கழுத்து முதல் கால் வரை நீண்ட அங்கியை அணிந்து, என் உள்ளத்தை இக்கோலத்தில் கவர்ந்தார்' என்க.

345. தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆள் எம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆள் எம்மை ஆளும் அடிகளார் தம் கையில்
தாளம் இருந்த ஆறு அன்னே என்னும் 8

தாளி அறுகு–விரிந்து படரும் அறுகு. தாளம்–கைத்தாளம்.

'என்னையும் ஒரு பொருளாக மதித்து, ஆட்கொள்ள வந்தவர் விரிந்து படரும் அறுகம்புல்லையும், சந்தனத்தை யும் மார்பில் அணிந்திருந்தார். என்னை ஆட்கொள்ள வரும் தலைவர் (அடிகளார்) கையில் ஒரு தாளத்தையும் கொண்டிருந்தார்'.

ஒரு மாபெரும் தலைவனுக்குரிய எந்த அடையாளமும் இல்லாமல் மிகச் சாதாரணமான அருகம் புல்லையும் சந்தனத்தையும் பூண்டவன் என்று கூறியவுடன் எம்மை ஆளவந்தவன் மிகச் சாதாரணமானவன் என்று நினைந்துவிடாதே. அவர் கையிலுள்ள தாளத்தை; பிச்சையெடுப்பவர்கள் வீட்டிலுள்ளவர்களை ஓசைமூலம் அழைப்பதற்குரிய தாளக்கருவி என்று எண்ணிவிடாதே. இவர் கையிலுள்ள தாளம் காலதத்துவத்தை அளவிட்டு அறுக்கும் செயற்கரும் செயலைச் செய்கின்ற கருவி என்பதை நினைப்பாயாக. கால தத்துவத்தை அறுதியிடும் பேராற்றல் அவருடைய ஒரு கையில் தாள வடிவில் இருக்கிறது என்பதை அறிந்தால் அவர் எத்தகையவர் என்பதை ஓரளவு அறிந்துகொள்ளலாமல்லவா?

346. தையல் ஓர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்து அவர் போதலும் என் உள்ளம்
நையும் இது என்னே அன்னே என்னும் 9

தையல் – உமாதேவி ; பெண்பாதியராயிருந்தும் தவவேடத்தர் என்பது வியப்பு. தாபத வேடம்– துறவுக்கோலம். ஐயம் – பிச்சை.

'ஒரு பெண்ணை இடப்பாகத்தில் வைத்துக்கொண்டு, அதே நேரத்தில் துறவுக்கோலத்தையும் மேற்கொண்டு, நம் வீட்டு வாசலில் பிச்சை கேட்டு வந்து நின்றார். அவ்வாறு

நின்றவர் போனபின்னர் என் மனம் ஏன் அவரை நினைந்து நைகின்றது என்று தெரியவில்லை'.

தையலை ஒரு பங்கில் ஏற்பது இல்லறம் எனப்படும். தாபத வேடம் துறவறம் என்று சொல்லப்பெறும். இவையிரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு எதிரெதிர்த் திசையில் செல்பவை என்று உலகில் உள்ள பலரும் இன்றுவரை கருதியும், கூறியும் வந்துள்ளனர்.

தமிழர், தமிழர் கண்ட சமயம் என்ற இரண்டிலும் ஒரு தனிச்சிறப்பைக் காணலாம். அறம், பண்பாடு என்பவற் றிற்குக்கூட உலகில் வேறு யாரும் சொல்லாத தனித்துவம் வாய்ந்த பொருளைக் கூறினர் இத் தமிழர்.

உலகில் உள்ள எச்சமயத்தவரும் இறைவனை ஆண், பெண் வடிவுடன் அர்த்தநாரியாக, அம்மையப்பனாகக் கண்டதுமில்லை; கூறியதுமில்லை இறைவன் ஆணாகவே உள்ளான் என்று கூறினர். இதன்படி பார்த்தால் முரண்பாடு என்று சொல்லப்பட்ட இரண்டினிடையே இறைவனைக் காணும் சிறப்பு இத்தமிழர்களிடையே என்று முதலோ இருந்து வருகிறது என்பதை அறிய முடிகிறது.

இந்த முரண்பாட்டைத்தான் அடிகளார் 'தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்' என்று கூறுகிறார்.

347. கொன்றை மதியமும் கூவிளம் மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம் உன்மத்தமே
இன்று எனக்கு ஆன ஆறு அன்னே என்னும் 10

கூவிளம்–வில்வம், மத்தம்–ஊமத்தம் பூ , உன்மத்தம்– பயித்தியம், துன்றிய–நெருங்கிய.

ஒன்றுக்கொன்று வேறுபட்ட இயல்பினையுடைய கொன்றை மலரையும், வில்வத் தழையையும். ஊமத்தம் பூவையும், இளம்பிறைச் சந்திரனையும் நெருக்கமாகத் தலையில் அணிந்துள்ளவர்.

'ஓர் அதிசயம்! அவர் வருவதற்குமுன் நான் நன்றாகத் தான் இருந்தேன். ஊமத்தம் பூ அவர் தலையில்தான் இருந்தது. அம்மம்ம! அவர் வந்துபோனபின் அந்த ஊமத்தம் பூவால் ஏற்படும் உன்மத்தம் என்னைப் பற்றிக் கொண்டது' என்றவாறு.

ॐ ॐ ॐ

18. குயிற் பத்து

[ஆத்தும விரக்கம்]

குயிற்பத்தும், திருக்கோத்தும்பியைப் போல உள்ள பகுதியேயாகும். கோத்தும்பியில் இரண்டு பாடல்கள் தலைவி தன் துயரைத் தலைவனுக்கு எடுத்துச் சொல்லுமாறு தும்பியை விளித்துக் கூறுவதுபோல அமைந்துள்ளன. இதனை மட்டும் வைத்துக் கொண்டு வண்டைத் தூதனுப்பியதாகப் பொருள் கூறுவது பொருத்தமா என்பது சிந்திக்கற்பாலது. பலதுறைகளில் முன்னர் யாரும் செல்லாத வழிகளில் அடிகளார் சென்றுள்ளார். சிறுமியரின் எண்ண ஓட்டங்களை மனத்துட்கொண்டு அவர்கள் பயன்படுத்தும் இசையையே அடிப்படையாகக் கொண்டு அம்மானை முதலிய பாடல்கள் இயற்றப்பெற்றன அல்லவா? அதேபோலத்தான் குயிற்பத்தும் இயற்றப்பெற்றது.

ஏனைய பறவைகள் குறிப்பிட்ட நேரங்களில், குறிப்பிட்ட காரியத்திற்காகவே கூவும் இயல்புடையன. இந்தக் கூவுதலே அவை தம்முள் பேசிக்கொள்ளும் மொழி யாகும் என்று இற்றைநாள் விஞ்ஞானம் கூறுகிறது. ஆனால், குயில் இவ்வாறில்லை. அது இருக்குமிடம் தெரியாமல் எங்கோ மரக்கிளைகளில் அமைதியாக இருந்து கொண்டு, அடிக்கடி கூவிக்கொண்டே இருக்கும். உணவுக்காக மட்டும் குயில் கூவுவதில்லை. வசந்த காலத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காரணமாகத் தனியே இருந்துகொண்டு குயில்கள் கூவுகின்றன. வேறு எந்தப் பயனையும் கருதி அவ்கூவுதல்

வெளிவரவில்லையாதலால், இப்பொழுது அடிகளார் குயிலுக்கு அறிவுரை கூறு முறையில், சில கருத்துக்களைப் பேசுகிறார். நிலையில்லாத மகிழ்ச்சியில் கூவிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், இறைவனுடைய கருணையை அறிந்துகொண்டு அவனை வருக என்று கூவுவாயாக என்கிறார்.

'வரக்கூவாய்' என்பதிலும் ஓர் அழகு அமைந்துள்ளது. எத்துணை முயன்றாலும், எந்தக் குயிலும், எந்த ஆன்மாவும் அவன் இருக்குமிடத்தைத் தாம் சென்று அடைய முடியாது. எனவே, தங்களை நாடி அவன்தான் வரவேண்டும். ஆதலால் 'வரக் கூவாய்' என்று பாடுகிறார் அடிகளார்.

குயில், மிகப் பெரிய மரத்தில் எங்கோ ஒரு கிளையில் அமர்ந்திருப்பதால், மிகச் சிறிய வடிவுடைய அதனைக் கண்ணால் காண்பது கடினம். ஆனால், அதன் கூவுதலை அனைவரும் கேட்க முடியும். அதேபோல, எண்சாண் உடம்பினுள் இந்த ஆன்மா எங்கே இருக்கிறதென்று கண்டு கொள்வது கடினம். இந்த ஆன்மாவும் பொறி, புலன்களில் சிக்குண்டு பொழுதை அவமே போக்காமல் அவனைத் தன்பால் வருமாறு வேண்டிக்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் குயிற்பத்தில் அமைந்துள்ளது.

348. கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின் பாதாளம் ஏழினுக்கு அப்பால்
சோதி மணி முடி சொல்லின் சொல் இறந்து நின்ற
தொன்மை
ஆதி குணம் ஒன்றும் இல்லான் அந்தம் இலான்
வரக்கூவாய் 1

தொன்மை ஆதி—பழைமையும் முதலும்.

மரக்கிளையில் உயரத்தில் அமர்ந்திருக்கும் குயிலைப் பார்த்து, 'ஏ குயிலே! எங்கள் பெருமானின் பாதம், கீழுள்ள ஏழு உலகங்களையும் தாண்டிச் செல்லும். அவனுடைய திருமுடியோ, சொல்லுக்கும் கற்பனைக்கும் அடங்காமல் மேலே செல்லுகிறது. இவ்வாறு வடிவத்தைக் கூறியவுடன் ஏனைய வடிவங்களுக்குரிய குணங்குறிகள் உள்ளவன் என்று நினைத்துவிடாதே. அவன் ஆதியும், அந்தமும் இல்லாதவன். எந்தக் குணமும் இல்லாதவன் (நிர்க்குணன்). இப்பொழுது ஓரளவுக்கு அவனைப்பற்றிச் சிந்திக்கச் சில அடையாளங்கள் கிடைத்துள்ளன அல்லவா? இவற்றை வைத்துக் கொண்டு நீ அவனை வருமாறு கூவுவாயாக' என்று பாடுகிறார்.

'சொல் இறந்து நின்ற தொன்மை' என்ற தொடர் சிந்திக்கத்தக்கது. சொல்லிறந்து என்றவுடன், சொல்லுக்கு அடங்காததாய் என்று வாலாயமாகப் பொருள் கூறி வருகிறோம். இங்கே 'சொல்' என்பது, அது தோன்றுகின்ற இடமாகிய எண்ணத்தைக் குறிப்பது. எண்ணம் என்பது எத்தகைய எல்லைக்கும், வரம்புக்கும் கட்டுப்படாமல் மேலும் விரிவடையக் கூடியது. எவ்விதக் கட்டுப் பாட்டுக்கும் அடங்காத, மேலும் மேலும் விரிந்து செல்லும் எண்ணத்திற்கும் அப்பாற்பட்டவன் என்றதால் அவனுடைய தன்மையைச் சுட்டினாராயிற்று.

349. ஏர் தரும் ஏழ் உலகு ஏத்த எவ் உருவும் தன் உரு ஆய்
ஆர்கலி சூழ் தென் இலங்கை அழகு அமர்
வண்டோதரிக்குப்
பேர் அருள் இனபம் அளித்த பெருந்துறை மேய பிரானை
சீரிய வாயால் குயிலே தென் பாண்டி நாடனைக் கூவாய் 2

ஏர்தரும்–அழகு பொருந்திய; ஆர்கலி–கடல்;

இறைவனுடைய அருளுந்தன்மை பற்றிக் கூறவந்த அடிகளார், அதனைக் கூறுவதற்கு முன்னர் அவன் ஏழுல கும் நின்று ஏத்தும் தன்மையன் என்கிறார். இதற்கடுத்த படியாக, அவனது அருளிச்செயல்களில் மற்றொரு புதுமையையும் எடுத்துக்கூறுகிறார். உலகில் சர, அசரமாகிய இரண்டினிடையே உள்ள, உருவுடைய பொருள் எதனை எடுத்துக்கொண்டாலும், அந்த உருவிலும் அவன் கலந்து நிற்கின்றான் என்ற கருத்தை 'எவ்வுருவுந் தன்னுருவாய்' என்று கூறுகிறார்.

அதாவது, துன்பத்தைச் செய்யும் புலியும், அத்துன்பத்தை ஏற்றுக்கொள்ளும் மானும் ஒன்றுக் கொன்று முற்றிலும் மாறுபட்டவை என்றுதான் இதுவரை நினைத்திருந்தோம். இந்த இடத்தில் நம் மனத்தில் ஏற்படும் குழப்பத்தைப் போக்க அடிகளார், புலி உருவிலும் அவன்தான், புல்வாய் உருவிலும் அவன்தான் உள்ளான் என்பதைக் குறிக்க 'எவ்வுருவும் தன்னுருவாய்' என்றார்.

அடிகளார் கூறிய இந்த அருமைப்பாட்டை அறிந்து கொண்ட மகாகவி பாரதி 'தின்ன வரும் புலி தன்னையும் அன்பொடு சிந்தையில் போற்றிடுவோம். அன்னை பராசக்தி அவ்வுருவாயினள் அவளைக் கும்பிடுவாய்' என்று பாடியுள்ளமை அறியவேண்டிய ஒன்றாகும்.

மண்டோதரி இராவணன் மனைவி ஆவாள். பிறருக்குத் தன் கணவன் செய்யும் கொடுமையை நினைத்து வருந்தினவள் ஆவள். இறுதியாகச் சீதை பிரச்சினை வந்த காலத்திலும் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தவிர்க்க முடியாத இத்தகைய துன்பத்திற்கு ஆளாகியவர்

கள் இதனைப் போக்கிக்கொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுவே இறைவனிடம் அடைக்கலம் புகுதலாகும்.

அந்த அடைக்கலம், வலிமையும் முழுத்தன்மையும் பெறப் பெற, பழைய துன்பமும், துயரமும் மறைந்து, மனத்தில் அமைதி தோன்றுகிறது. இந்த வளர்ச்சியில் பெருமகிழ்ச்சியே தோன்றுகிறது.

350. நீல உருவின் குயிலே நீள் மணி மாடம் நிலாவும்
கோல அழகின் திகழும் கொடி மங்கை உள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய திரு உத்தரகோசமங்கை
ஞாலம் விளங்க இருந்த நாயகனை வரக்கூவாய் 3

கோல அழகு–மிக்க அழகு; கொடி மங்கை–பூங்கொடி போன்ற பெண். சீலம்–எளியனாயிருக்குந்தன்மை.

'நீல உருவினை உடைய குயிலே! பூங்கொடி போன்ற உமையவள் உறையும் திருஉத்தரகோசமங்கையில் உள்ள வனை வருமாறு கூவுவாயாக' என்றவாறு.

குயிலை, 'நீல நிறமுடைய குயிலே!' என்று அழைத்ததன் நோக்கம் ஒன்று உண்டு. அந்தக் குயில், யாரை அழைக்க வேண்டும் என்று கூறவந்த அடிகளார், 'உத்தரகோச மங்கையில் உறையும் பெருமானை அழைப்பாயாக' என்று மட்டும் சொல்லவில்லை. மிக விரிவாகக் 'கோல அழகில் திகழும் கொடி மங்கை உள்ளுறை கோயில்' என்று ஏன் சொல்ல வேண்டும்? உத்தரகோசமங்கையானை என்று மட்டும் கூறியிருந்தால், 'எனக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு? நான் ஏன் அவனை வாவென்று கூவ வேண்டும்?' என்று சொல்லி, கூவ மறுத்துவிடலாம் அல்லவா? ஆகவேதான், ஒரு புதிய

வழியைக் கையாள்கிறார் அடிகளார். கூவப்படவேண்டிய தலைவனை, நாயகன் என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டு, யாருக்கு நாயகன் என்பதை ஒரு முழு அடியில் விளக்குகிறார். 'கோல அழகில் திகழும் கொடி மங்கை' என்று கூறியவுடன் அந்தக் குயில், கொடிமங்கைபற்றி நினைக்கும் அல்லவா? நினைக்கத் தொடங்கினால் முதலில் வடிவுதானே நினைவுக்கு வரும்? அந்த அழகிய வடிவு என்ன நிறத்தோடு உள்ளது? அன்னையின் நிறம் நீலமல்லவா? நீல நிறமுடைய அம்மையை, குயிலின் நினைவுக்கு கொண்டு வருகிறார் அடிகளார். குயிலும் நீலநிறமுடையது; கொடி மங்கையும் நீலநிறமுடையவள். எனவே கொடிமங்கைக்குத் தன்னோடு உள்ள நிற ஒற்றுமை கருதி, அவளைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கும் அந்த நேரம் பார்த்து, 'குயிலே! இதுவரை நீ எந்த நீல நிறமுடைய மங்கையைப்பற்றி நினைந்து கொண்டிருந்தாயோ, அவள் நாயகனை வரும்படி கூவுவாயாக' என்ற நுண்மையான கருத்தையும் உள்ளடக்கியது இப்பாடல்.

351. தேன் பழச் சோலை பயிலும் சிறு குயிலே இது கேள் நீ
வான் பழித்து இம் மண் புகுந்து மனிதரை ஆட் கொண்ட வள்ளல்
ஊன் பழித்து உள்ளம் புகுந்து என் உணர்வு அது ஆய ஒருத்தன்
மான் பழித்து ஆண்ட மென் நோக்கி மணாளனை நீ வரக் கூவாய் 4

பயிலும்–இடைவிடாது தங்கும். வான் பழித்து–போக பூமியாகிய வானைப் பழித்து. மண் புகுந்து–ஞான பூமியாகிய மண்ணுலகத்தில் எழுந்தருளி. ஊன் பழித்து–உடம்பை விட்டுவிட்டு

குயிலின் நிறத்தோடு ஒத்த இறைவியின் கணவன் என்று முதற்பாட்டில் கூறியவர், இப்பாடலில் அந்த நாயகனின் பெருமையைக் கூறுகிறார். 'குயிலே! அவன் கோல மங்கை நாயகன்மட்டும் அல்லன், தான் இருக்க வேண்டிய சிவலோகத்தை விட்டுவிட்டு, இம்மண்ணிடை வந்து, மிகச் சாதாரணப் பிறவியாகிய மனிதனை ஆட்கொண்ட வள்ளல் ஆவான். இது ஏன் நிகழ்ந்தது? இதற்குரிய தகுதியை மனிதச்சாதி பெறவில்லை யானாலும் அவன் வந்து ஆட்கொண்டான் என்றால் அது அவனுடைய வள்ளல் தன்மைக்கும் எளிவந்த தன்மைக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

'குயிலே! ஆட்கொண்டான் என்று சொன்னேனே, அதன் பொருள் தெரியுமா? உயிர் இனத்தில் மிக உயர்ந்தவர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் மனிதர்க்குக்கூட ஆட்கொள்வது என்றால் என்ன என்று தெரியாது. உனக்கு எங்கு தெரியப்போகிறது? இதோ விளக்கமாகச் சொல்கிறேன், கேள். வான் பழித்து இம்மண் புகுந்த அவன் என்ன செய்தான் தெரியுமா? என் ஊன் பழித்து உள் புகுந்தான். அதில் என்ன புதுமை என் கிறாயா? என் ஊன் உடம்பு ஒரு மாறுதலும் அடையாமல் அப்படியே இருக்க, எப்படி அவன் உள்ளே புகுந்தான்? ஆம். அதுதான் அவன் தனிச்சிறப்பு. உள்ளே புகுகின்ற வரையில் திருவாதவூரனாகிய 'நான்' என்ற ஒன்று, உள்புகுந்தவனாகிய 'அவன்' என்ற ஒன்று ஆக இருவர் இருந்தோம். நானும் அப்படித்தான் நினைத்திருந்தேன். ஆனால், அவன் உள்ளே புகுந்தவுடன், ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடைபெற்றது. புகுகின்றவரையில் நான் என்றும் அவன் என்றும் இருவராகி இருந்த நிலை மாறி, நான் என்பதை விழுங்கி, உணர்வு வடிவமாக அவன் ஒருவனே நின்றுவிட்டான்.'

தன்முனைப்போ அல்லது தற்போதமோ என்று சொல்லப்படுவது, நான் என்ற உணர்வுதானே? என் உணர்வு முழுவதும் அவனாக ஆகிவிட்ட பிறகு நான் என்ற ஒன்றிற்கு இடமே இல்லை. இந்த அருங்கருத்தைத்தான் "உள்ளம் புகுந்து என் உணர்வு அது ஆய ஒருத்தன்" என்கிறார் அடிகளார்.

இப்பாடலிலும் உமையைக் குயிலுக்கு நினைப்பூட்டுவது போல 'மான்பழித் தாண்ட மென்னோக்கி' என்கிறார்.

352. சுந்தரத்து இன்பக் குயிலே சூழ் சுடர் ஞாயிறு போல
அந்தரத்தே நின்று இழிந்து இங்கு அடியவர் ஆசை அறுப்பான்
மூந்தும் நடுவும் முடிவும் ஆகியதூ மூவர் அறியாச்
சிந்துரச் சேவடியானைச் சேவகனை வரக் கூவாய் 5

மூவர்–பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் சுந்தரம்–அழகு. சூழ்சுடர் ஞாயிறு–கிரணங்கள் சூழ்ந்த சூரியன். அந்தரம்–ஆகாயம். சிந்துரம்–பொடி.

உலகியலில் ஒரு மரபு உண்டு. ஒருவரிடம் ஒரு வேலையை வாங்கவேண்டுமென்றால் அவர் மனங்குளிரும் படி இரண்டொரு வார்த்தைகளால் அவரைப் புகழ்ந்து விட்டு, பிறகு நம் வேலையைக் கொடுத்தால் அவர் விருப்பத்தோடு நிறைவேற்றுவார்.

இந்த உலகியல் முறைதான் அடிகளாரை 'சுந்தரத்து இன்பக் குயிலே' என்று விளிக்குமாறு செய்கிறது. குயிலின் குரல் கேட்போருக்கு இன்பம் தருவதாயினும், அதனுடைய உடலமைப்பு அழகியது என்று சொல்வதற்கில்லை. என்றாலும் சுந்தரத்துக் குயிலே என்கிறார் அடிகளார்.

இறைவனுக்குரிய தனிச்சிறப்பை இரண்டாம் அடியில் விவரிக்கின்றார். 'சூழ் சுடர் ஞாயிறு போல' என்ற உவமை நம்முடைய கருத்தைத் தூண்டுவதாகும். சூழ் சுடர் ஞாயிறு என்றால், சுடரால் சூழப்பெற்ற ஞாயிறு என்பது பொருளாகும். கதிரவன் தோன்றுவதற்கு முன்னர், அவனைச் சுற்றியுள்ள சுடர், உலக இருளை ஓரளவு போக்கிவிடுகிறது. காரணம், வளைந்து உள்ள இடங்களில் சூழ் சுடர் செல்ல முடியாது. சூரியன் உதயமான பிறகுதான் வளைந்துள்ள இடங்கள், சந்துகள், பொந்துகள் போன்ற இடங்களில் இருளைப் போக்க முடியும்.

அதேபோல, அந்தரத்தே நிற்கின்ற நிலையில் அவனுடைய அடியார்கள் அவன்மாட்டு அன்புசெய்து ஓரளவு முன்னேறுகிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், இந்த உடம்புக்கென்று சில தனி இயல்புகள் உண்டல்லவா? பொறி புலன்கள் என்பவை இருக்கின்ற வரையில், மனம் அவற்றோடு சேர்ந்து தொழிற்பட, அங்கே ஆசை தோன்றுகிறது. இறைவன் அந்தரத்தே திகழ்கின்ற வரையில் அடியவர்களின் பொறிபுலன் ஆசை அழிவதில்லை.

அறுபடாத இந்த ஆசைகளோடு போராடிக்கொண்டு அவதியுறும் அடியவரின் துன்பத்தைப் போக்க, அந்தக் கருணை வள்ளல் என்ன செய்தான் தெரியுமா? அந்தரத்தே நின்ற அவன் அடியவர் இருக்கும் இடத்திற்கு இறங்கிவந்து (இழிந்து) அவர்களின் ஆசையை அறுக்கின்றான்.

தோற்றம், இருப்பு, மறைவு என்ற மூன்றுமே இங்கு முந்து, நடுவு, முடிவு என்று அடிகளாரால் பேசப்பெறு கின்றன. தோற்றம், இருப்பு முதலிய வினைகள் நடைபெற

வேண்டுமானால் அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு வினைமுதல் அல்லது கர்த்தா வேண்டும். அந்தக் கர்த்தாக்கள் முறையே பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவர் ஆவர். (உருத்திரன் என்பவன் சிவனினும் வேறுபட்ட மும்மூர்த்திகளுள் ஒருவனாவான்).

அடியவர் ஆசையை அறுப்பதற்காக அந்தரத்தே நின்று இழிகின்றவன் தன் திருவடிகளோடுதானே இறங்கியிருக்க வேண்டும்? அவை சாதாரணத் திருவடிகளா? சிந்துர நிறமுடைய சேவடிகள் ஆயிற்றே! எந்தக் கூட்டத்திலும், சிவப்பு நிறம் பளிச்சென்று தோன்றுமே, அப்படியிருக்க அந்தச் சிந்துரச் சேவடிகளை இந்த மூவரும் காணமுடியாமல் தவித்தது வினோதமல்லவா என்றவாறு.

353. இன்பம் தருவன் குயிலே ஏழ் உலகும் முழுது ஆளி
அன்பன் அமுது அளித்து ஊறும் ஆனந்தன் வான்
வந்த தேவன்
நன் பொன் மணிச் சுவடு ஒத்த நல் பரிமேல் வருவானைக்
கொம்பின் மிழற்றும் குயிலே கோகழி நாதனைக் கூவாய்
6

ஆளி-ஆள்வோன், ஆளத்தருபவன்; சுவடு-அங்கவடி; தழும்பு. கோகழிநாதன்–திருவாவடுதுறைப் பெருமான்.

'குயிலே! இவ்வுலகிடை எவற்றை நீ இன்பம் என்று கருதுகிறாயோ அவை அனைத்தையும் தருவான்; அம்மட்டோடில்லை. ஏழுலகம் முழுவதையும் நீ ஆளத் தருவான். இவை இரண்டுமே சிறப்புடையன ஆயினும்; நிலையற்றவை என்று கருதுகிறாயா? கவலையை விடு. உனக்கு அன்பனாக அவன் ஆகிவிட்ட பிறகு நிலைபேறு அளிக்கும் அமுதையும் அளிப்பான். அந்த அமுதும்

சாவாத வாழ்வை மட்டும்தானே தரும் என்று கவலையுறுகிறாயா? ஆனந்த வடிவினனாகிய அவன், கலப்படம் இல்லாத, அழிவில்லாத, மேலும் மேலும் ஊற்றெடுக்கின்ற ஆனந்தத்தையும் தருவான்' என்கிறார்.

அதாவது, 'குயிலே! அவன் அன்பனாகிவிட்டால் இன்பம், ஏழுலகு, அமுது ஆகியவற்றைத் தருவதோடு ஊறுகின்ற ஆனந்தத்தையும் தருவான்' என்கின்றபடி.

'நல்ல பொன்னால் செய்யப்பட்டு, மணிகள் அழுத்திய அங்கவடி போன்ற பொன்னிறத்தை உடைய குதிரையின் மேல் வருபவன், கோகழிக்குத் தலைவன் ஆகிய பெருமானே ஆவான்'. அவன் வருமாறு கூவுவாயாக.

(ஏழுலகும் முழுது) ஆளி என்பதற்கு ஆள்பவன் என்று பொருள் கூறுவதைக் காட்டிலும் ஏழுலகையும் நீ ஆள்பவன் என்ற சிறப்பைத் தருபவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

354. உன்னை உகப்பன் குயிலே உன் துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்த நல் மேனிப் புகழின் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப் புயங்கன் வரக் கூவாய் 7

உகப்பன்–விரும்புவன். பரிமிசை வந்த வள்ளல்–குதிரை மேல் வந்த அருள்வள்ளல். புயங்கன்–பாம்பை அணிந்தவன்.

'குயிலே! மனிதர்க்கும் தேவர்க்கும்மட்டும் உரியவன் அவன் என்று கருதாதே. அவன் உன்னையும் உகப்பன். எங்கோ இருந்துகொண்டு உன்மாட்டு அன்பு செய்வான்

என்று கருதாதே. நீ இருக்கும் இடத்திற்கே வந்து உனக்கு இனிய தோழியும் ஆவான்'.

பொன்னை ஒத்த அழகன்; புகழினை உடையவன் தென்னவன், சேரலன், சோழன் என்றது தமிழ் மன்னர்க மூவரையும் குறித்ததாயிற்று.

மனித மனம் எந்த ஒரு வேலையைச் செய்யவேண்டு மாயினும் அதனால் கிடைக்கும் உடனடிப் பயனிலேயே ஆர்வம் கொண்டிருப்பதுபோலக் குயிலும் இருக்கும் என்ற கருத்தில் 'உன்னை உகப்பன்' என்றும் 'உன்துணைத் தோழியும் ஆவன்' என்றும் கூறினாராயிற்று.

355. வா இங்கே நீ குயில் பிள்ளாய் மாலொடு நான்முகன் தேடி
ஓவி அவர் உன்னி நிற்ப ஒண் தழல் விண் பிளந்து ஓங்கி
மேவி அன்று அண்டம் கடந்து விரி சுடர் ஆய்
நின்ற மெய்யன்
தாவி வரும் பரிப் பாகன் தாழ் சடையோன் வரக் கூவாய்
8

'ஏ குயிலே! நீ இங்கு வருவாயாக. மால், நான்முகன் ஆகிய இருவரும் தேட முயன்றபோது அண்டங்கள் கடந்து அழலுருவாய் நின்ற அவனே இப்பொழுது குதிரைச் சேவகனாக (நம் பொருட்டு) வந்தான்'.

ஓவி, உன்னி நிற்ப என்பது தங்கள் முயற்சி வெற்றியடையாமையால் மேற்கொண்டு என்ன செய்வது என்று சிந்தித்து (உன்னி) ஓவியம் போல (ஓவி) நிற்ப என்பதாகும்.

356. கார் உடைப் பொன் திகழ் மேனிக் கடிபொழில் வாழும்
குயிலே
சீர் உடைச் செம் கமலத்தில் திகழ் உரு ஆகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்து எனை ஆண்ட
ஆர் உடை அம் பொனின் மேனி அமுதினை நீ வரக்
கூவாய் 9

கார்–கருமை. பொன்திகழ் மேனி–ஒளிவிளங்குகின்ற உடல். ஆர்–ஆத்திமாலை.

'சிறப்புப் பொருந்திய தாமரைபோன்ற திருவடி களையுடைய பெருமான் மண்ணிடை வரும்போது கனவிலும் தேவர்கள் காண்பரிய திருவடிகளைக் காட்டினான். பாதங்களைக் காட்டியதன் நோக்கம் என் பாசங்களை வேரொடு அறுக்கவேயாம்' என்க.

357. கொந்து அணவும் பொழில் சோலைக் கூம் குயிலே
இது கேள் நீ
அந்தணன் ஆகி வந்து இங்கே அழகிய சேவடி காட்டி
எம் தமர் ஆம் இவன் என்று இங்கு என்னையும்
ஆட்கொண்டருளும்
செம் தழல் போல் திருமேனித் தேவர் பிரான்
வரக் கூவாய் 10

கொந்து–பூங்கொத்து; அணவும்–நெருங்கிய; தமர்–சுற்றத்தார்.

ஆட்கொள்ளுதல் பல வகைப்படும். அடிமை என்று ஒருவரை ஆட்கொள்ளுதல் ஒருவகை; உறவினராக ஆட்கொள்ளுதல் மற்றொரு வகை. இதுவரை அடிகளார் கூறிவந்த வகை முதலாவது வகையைச் சேர்ந்ததாகும் பெருந்துறையில் குருநாதர் வடிவாக வந்த நாயகன் தன்

திருவடிகளைக் காட்டி அடிமையாக ஆண்டுகொண்டான் என்றே கூறி வந்துள்ளார். தொழும்பர் என்ற சொல்லின் பொருளும் இதுவேயாம்.

முதன்முறையாக 'எந்த மராம் இவன் என்று இங்கு என்னையும் ஆட்கொண்டருளும்' என்று கூறுகிறார். ஆகவே, தம்மை அடிமையாகமட்டுமல்லாமல் உரிமைகள் பல பெற்றுள்ள உறவினனாகவும் ஏற்றுக்கொண்டான் என்று பேசுகிறார்.

ॐ ॐ ॐ

19. திருத்தசாங்கம்

[அடிமை கொண்ட முறைமை]

தச அங்கம் என்ற இரண்டு வடசொற்கள் சேர்ந்து தசாங்கம் என்ற சொல் உருவாயிற்று. அதாவது, பத்து உறுப்புக்கள் என்ற பொருளைத் தரும். பத்து உறுப்புகள் என்று கூறியவுடன் தனி மனிதனுக்குரிய உறுப்புக்களைக் குறிக்காமல் அரசனுக்குரிய பத்து அங்கங்களைக் குறிப்பதா யிற்று. ஓர் அரசனுக்குரிய தனிப்பட்ட உறுப்புக்கள் என்று பழைய தமிழ் இலக்கியங்களில் எதுவும் பேசப்பெற்றதாய்த் தெரியவில்லை. வாள், குடை, கொடி முதலியன அரசனுக் குரிய உறுப்புக்களாகச் சங்கப் பாடல்களில் பேசப்பெற்றுள் ளன எனினும், பத்து என்ற எண்ணிக்கையோ தசாங்கத்தில் கூறப்பெற்ற மலை, ஆறு, ஊர்தி என்பவையோ அப்பழைய இலக்கியங்களில் எங்கும் இடம் பெறவில்லை.

கௌடில்யனுடைய அர்த்தசாத்திரத்தில் இவ்வுறுப்பு கள் சில பேசப்பெற்றுள்ளனவேனும், யாறு, மலை முதலியன அந்நூலிலும் அரசனுக்குரிய உறுப்புக்களாகப் பேசப்பெற வில்லை.

இந்நிலையில் அடிகளாருக்கு முன்பு எந்தத் தமிழ் நூலிலும் காணப்பெறாத தசாங்கம் எப்படித் திருவாசகத்தில் இடம் பெற்றது என்பது மேலும் ஆராய்ச்சிக்குரியதாகும்.

சங்க காலத்திலும் பக்தி இலக்கிய காலத்திலும் அதிகம் பயன்படுத்தப்படாத வெண்பா அடிகளாரின் திருவாசகத்தில் இடம்பெற்றது ஒரு புதுமையேயாகும். அடிகளாருக்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவராகிய காரைக்கால் அம்மையார் நூறு வெண்பாக்களுக்கு மேலும் பாடியுள்ளார் என்றாலும், அவருக்குப் பின்னால் ஏனோ வெண்பாக்கள் அதிகம் இடம் பெறவில்லை. பக்தி போன்ற உணர்ச்சியை வெளியிட வெண்பா அதிகம் இடம் தராது என்பது உண்மைதான். அதனாலேயே இறைவனுடைய பத்து உறுப்புக்களைப் பட்டியலிட்டுக் காட்டும் இப்பகுதி மட்டும் வெண்பாவில் அமைந்துள்ளது.

தசாங்கம் இலக்கியங்களில் அதிகம் இடம் பெறாமைக்குத் தக்க காரணம் உண்டு. இப்பத்தில் யாறு, மலை என்பவை இடம் பெறுகின்றன. எந்த ஒரு மலையும் அல்லது ஆறும் பெரும்பாலும் குறிப்பிட்ட ஒரு நாட்டின் எல்லைக்குள் அடங்கிவிடும் என்று கூறிவிட முடியாது. எனவே, ஒரு மலையை அல்லது ஆற்றை ஒரு மன்னனுக்குரியது என்று சொல்வது பொருத்தமாயிராது. அப்படியே கூறினாலும் அது உபசார வழக்காகவே முடியும்.

உதாரணமாகக் காவிரி ஆற்றை, சோழர்க்குரியது என்றும், சோழர் காவிரி என்றும் சங்க இலக்கியம் பேசினாலும், அது தோன்றிய இடமும் ஓடிவரும் தூரத்தில் ஐந்தில் ஒரு பாகமும் சோழ நாட்டைச் சேர்ந்ததன்று என்பதும் அறியப்பட வேண்டும்.

தமிழ் இலக்கியத்தில் வேறு எங்கும் காணப்பெறாத தசாங்கத்தைக் கீர்த்தித் திருவகவலிலும் இங்கும் அடிகளார்

பேசியுள்ளார் என்றால், இதனை எங்கிருந்து பெற்றார் என்பது ஆராயப்பெற வேண்டும்.

அடிகளார் தம்மை ஆட்கொண்ட ஆலவாய்ச் சொக்கனை ஓர் அரசனாக நினைத்து அவனுக்குரிய பத்து உறுப்புக்களையும் கிள்ளையைச் சொல்லுமாறு பணிக்கின்றார். கிளி எந்த ஒன்றையும் தானே சிந்தித்துப் பேசும் இயல்புடையதன்று. நாம் சொல்லிக் கொடுத்ததைத் திரும்பச் சொல்லும் இயல்புடையது ஆதலின், அடிகளார் அவனுடைய நாடு போன்றவற்றைப்பற்றித் தம் கருத்துக்களை விரிவாகக் கூறி அதனைத் திருப்பிச் சொல்லுமாறு கிளியைப் பணிக்கின்றார்.

பொதுவாக, கிளி முதலியவற்றிடம் பேசுதல் பெண்களுக்கே உரியதாகலின் அடிகளார் தம்மைப் பெண்ணாகப் பாவித்துக்கொண்டு இவற்றைப் பாடியுள்ளார் என்று கொள்வதும் தவறில்லை.

358. ஏர் ஆர் இளம் கிளியே எங்கள் பெருந் துறைக் கோன்
சீர் ஆர் திரு நாமம் தேர்ந்து உரையாய் ஆரூரான்
செம் பெருமான் வெள் மலரான் பாற் கடலான்
செப்புவ போல்
எம் பெருமான் தேவர் பிரான் என்று 1

ஏர்-அழகு; வெள்மலரான்- தூய மலரில் அமர்ந்திருக்கும் பிரமன். பாற்கடலான் – திருமால்.

இப்பாடலில் வரும் 'எங்கள் பெருந்துறைக் கோன்' என்ற தொடர் சற்றுப் புதுமையானது. பெருந்துறை என்பது அரசர்க்குரிய நாடோ நகரமோ அன்று. திருவாதவூரர், மணிவாசகராக மாறுவதற்கு உதவிபுரிந்த இடம் பெருந்துறை ஆதலால், அவ்வூர்மாட்டு அடிகளாருக்கு

எல்லையில்லாத அன்பு இருந்தது உண்மைதான். அந்த அடிப்படையில்தான் 'எங்கள் பெருந்துறைக் கோன்' என்றார்.

'ஆரூரில் வாழ்பவனும் சிவந்த நிறத்தை உடையவனு மாகிய எங்கள் பெருந்துறைக் கோனை, நான்முகனும் மாலும் என்ன பெயரிட்டு அழைக்கலாம் என்று மிகவும் ஆராய்ந்து, இறுதியாகத் 'தேவர்பிரான்' என்றே கூறினர். அதுவே அவன் திருப்பெயர் என்று கூறுவாயாக'.

359. ஏதம் இலா இன் சொல் மரகதமே ஏழ் பொழிற்கும்
நாதன் நமை ஆளுடையான் நாடு உரையாய் காதலவர்க்கு
அன்பு ஆண்டு மீளா அருள் புரிவான் நாடு என்றும்
தென் பாண்டி நாடே தெளி 2

மரகதம்–பச்சை. அன்பு ஆண்டு–அன்பினால் ஆட்கொண்டு. மீளா அருள்–மீண்டுவராமைக்கு ஏதுவாகிய அருளை. தெளி–அறி. ஏதம்–குற்றம்; பொழில்– உலகம்.

'குற்றம் இல்லாத சொற்களைப் பேசும் பச்சை நிறக் கிளியே! ஏழு உலகங்களையும் படைத்து அவற்றிற்குத் தலைவனாக உள்ளவனின் நாடு எது தெரியுமா? தன்னை வந்து அடைந்தவர்களை மீண்டும் பிறவாமல் காத்து அருள் செய்பவனுடைய நாட்டைத் தென் பாண்டி நாடு என்றே தெளிவாயாக'.

வடபாண்டி நாடு என்ற ஒன்று இன்மையின் 'தென்பாண்டி' என்பது அழகிய பாண்டி நாடு என்ற பொருளையே தரும்.

360. தாது ஆடு பூஞ்சோலைத் தத்தாய் நமை ஆளும்
மாது ஆடும் பாகத்தன் வாழ் பதி என் கோதாட்டிப்
பத்தர் எல்லாம் பார்மேல் சிவபுரம் போல் கொண்டாடும்
உத்தரகோசமங்கை ஊர் 3

தத்தாய் – கிளியே. தாது–மகரந்தம்; மாதாடும் பாகத்தன்–மாது தங்கியுள்ள இடப்பாகத்தை உடையவன். கோதாட்டி – பாராட்டி.

நில உலகில் வாழும் பக்தர்கள், தம் ஊனக் கண்ணாலும் தாங்கள் காணக் கூடிய சிவபுரம் என்று சொல்வது திருஉத்தரகோசமங்கை என்னும் ஊரேயாம்.

361. செய்ய வாய்ப் பைம் சிறகின் செல்வீ நம் சிந்தை சேர்
ஐயன் பெருந்துறையான் ஆறு உரையாய் தையலாய்
வான் வந்த சிந்தை மலம் கழுவ வந்து இழியும்
ஆனந்தம் காண் உடையான் ஆறு 4

நம் சிந்தையில் குடிகொண்டவனாகிய பெருந்துறைக் கோனின் ஆறு எது தெரியுமா? நம் மனத்திலுள்ள குற்றங்களை (மலம்) கழுவுவதற்குரியதும் வானத்திலிருந்து வந்ததும் ஆகிய பாண்டிப்பிரானுடைய ஆனந்தமே ஆறாகும்.

362. கிஞ்சுக வாய் அஞ்சுகமே கேடுஇல் பெருந்துறைக் கோன்
மஞ்சு மருவு மலை பகராய் நெஞ்சத்து
இருள் அகல வாள் வீசி இன்பு அமரும் முத்தி
அருளும் மலை என்பது காண் ஆய்ந்து 5

கிஞ்சுகவாய்–முள் முருங்கை மலர் போன்ற சிவந்த வாய். அம் சுகம்–அழகிய கிளி. வாள் – ஞானவாள்.

கிளியே, நம் தலைவனின் மலை எது தெரியுமா? அஞ்ஞானம் நீங்க ஒளியை வீசி இன்பத்தோடு கூடிய முத்தியை அருளும் மலை என்று அறிக.

363. இப் பாடே வந்து இயம்பு கூடு புகல் என் கிளியே
ஒப்பு ஆடாச் சீர் உடையான் ஊர்வது என்னே எப்போதும்
தேன் புரையும் சிந்தையர் ஆய் தெய்வப் பண் ஏத்து
இசைப்ப
வான் புரவி ஊரும் மகிழ்ந்து 6

இப்பாடு–இவ்விடம்; இந்தப் பக்கம். கூடு புகல் – கூட்டிற் புகாதே. ஒப்பு ஆடா– ஒப்பில்லாதவன்.

'கிளியே, கூட்டுக்குள் சென்றுவிடாமல் இங்கே வருவாயாக. நம் தலைவனின் ஊர்தி எது தெரியுமா? தெய்வப் பெண்கள் சுற்றி நின்று ஏத்த, வான் புரவியில் செல்வான் அவன்'.

வான் புரவி என்பதற்கு, ஆகாயத்தையே ஊர்தியாகக் கொண்டவன் என்றும் பொருள் கூறலாம். அடுத்து, புரவியை வானத்தில் செலுத்துவான் என்றும் கூறலாம்.

364. கோல் தேன் மொழிக் கிள்ளாய் கோது இல்
பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படை பகராய் ஏற்றார்
அழுக்கு அடையா நெஞ்சு உருக, மும் மலங்கள் பாயும்
கழுக்கடை காண் கைக் கொள் படை 7

கோல் தேன்–கொம்புத்தேன். மாற்றார்– பகைவர். ஏற்றார்–உம்மால் ஆட்கொள்ளப்பெற்றவர். அழுக்கு–மலம். கழுக்கடை–சூலம் (ஒரு வகை படைக்கலம்)

'கொம்புத் தேன் போன்ற இனிய சொற்களைப் பேசும் கிளியே! நம் தலைவனின் படைக்கலம் எது என்று தெரியுமா? அவனைத் தலைவனாக ஏற்றுக் கொண்டவர் களின் நெஞ்சு உருகும்படியாக உள்ளே புகுந்து அவர்கள் மும்மலங்களையும் ஒருசேர ஒழிக்கும் கழுக்கடையே (திரிசூலமே) அவன் படைக்கலமாகும்' என்க.

365. இன் பால் மொழிக் கிள்ளாய் எங்கள் பெருந்துறைக் கோன்
முன்பால் முழங்கும் முரசு இயம்பாய் அன்பால்
பிறவிப் பகை கலங்கப் பேரின்பத்து ஓங்கும்
பரு மிக்க நாதப் பறை 8

முன்பால்–முன்புறம். பருமிக்க–பெரிய.

'இனிய மொழி பேசும் கிளியே! எங்கள் பெருந்துறைக் கோன் தங்கியுள்ள இடத்தின் முன்பகுதியில் முழங்கும் பறை என்னவென்று தெரியுமா? பிறவியாகிய பகை கலங்கும்படி மிகப் பெரிய ஒலியோடு சப்திக்கின்ற நாத தத்துவம் என்னும் பறையாகும் அது' என்க. இங்கு நாதம் என்பது ஆதிநாதம், அதாவது எல்லா ஒலிகளுக்கும் மூலகாரணமாய் இருக்கின்ற ஆதி ஒலியாகும்.

366. ஆய மொழிக் கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தார் என் தீய வினை
நாளும் அணுகாவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளி அறுகு ஆம் உவந்த தார் 9

அள்ளூறும்–மிகுதியாக ஊறுகின்ற. தாளி–வில்வம்

'ஆராய்ந்த மொழியைப் பேசும் கிளியே! நம் தலைவன் அணிந்துள்ள மாலை என்னவென்று தெரியுமா? தீயவினைகள் என்னை என்றும் வந்து அணுகாவண்ணம்

காக்கின்ற அப்பெருமான் அணிந்துள்ள தார்(மாலை) வில்வமும், அறுகம்புல்லும் கூடிய மாலையாகும்'.

367. சோலைப் பசும் கிளியே தூ நீர்ப் பெருந்துறைக் கோன்
கோலம் பொலியும் கொடி கூறாய் சாலவும்
ஏதிலார் துண் என்ன மேல் விளங்கி ஏர் காட்டும்
கோது இலா ஏறு ஆம் கொடி 10

ஏதிலார்–பகைவர். ஏர்–அழகு. துண்–நடுக்கம்; ஏறு–இடபம்;

'சோலையில் வாழுங்கிளியே! நம் தலைவனின் கொடி என்ன தெரியுமா? அழகு பொருந்திய இடபக் கொடியே அவன் ஏற்றுக் கொண்ட கொடியாகும்'.

ॐ ॐ ॐ

20. திருப்பள்ளியெழுச்சி

[திரோதானசுத்தி]

அரசர்களைத் துயில் எழுப்புவதுபற்றிப் பழைய இலக்கியங்களில் காணலாம். உறக்கத்திலிருப்பவர்கள் துயிலெழும்போது நல்ல சொற்கள் காதில் விழுமே யானால், மனம், பொறி, புலன் ஆகியவை நற்பணி செய்ய இச்சொற்கள் தூண்டுகோலாக அமையும்.

உறங்குவதற்குச் சில விநாடிகள் முன்னர், மனத்தில் என்ன எண்ணம் நிலவியதோ, அதுவே விழித்தவுடன் முதல் எண்ணமாக வரும் என மனவியலார் கூறுகின்றனர். பழங்கால மன்னர்கள் பெரும்பாலும் கேளிக்கைகளில் பெரும் பொழுதைப் போக்கினர் ஆதலின், அந்நிலை யிலேயே உறங்கச் சென்றவர்கள் விடியற்காலையில் சிறந்த எண்ணங்களோடு எழுதல் இயலாத காரியம். அதனாலேயே நம் முன்னோர் 'சூதர்' என்ற பெயருடைய தனிக்குழுவை ஏற்பாடு செய்து, அரசனைத் துயில் எழுப்ப அவர்களைப் பயன்படுத்தினர். அரசருடைய நற்செயல்கள், அவர்கள் வெற்றி ஆகியவற்றைப்பற்றி அந்த விடியற்காலை நேரத்தில் சூதர்கள் பாடினர். அதனைக் கேட்டுக் கொண்டே எழுகின்ற மன்னர்தம் மனத்தில் நல்ல எண்ணம் தோன்றும். ஆதலால், இதனைப் பழமையான தொல்காப்பியம் 'சூதர் ஏத்திய துயிலெடை நிலை' (தொல்—பொருள் 88) என்று குறிப்பிடுகிறது.

இறைவனை, ஏனையோர் போன்று நிர்க்குணப் பிரம்மமாகக் கொள்ளாமல், தம்முடைய அன்புக்கும் பக்திக்கும் உரிய, நெருங்கிய தொட்ர்புடைய தலைவனாகக்

கருதினர் இத்தமிழர். ஆதலின் முதன்முதலில் ..... தொண்டிரடிப்பொடி ஆழ்வார் அரங்கனுக்குப் பள்ளியெழுச்சிப் பாடினார் (நாலா. திவ்: 917—926) எட்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் வாழ்ந்த அடிகளார், தம் வாழ்க்கையைத் திசை திருப்பிய பெருந்துறை நாயகனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுகின்றார்.

கடவுளுக்குரிய திருப்பள்ளியெழுச்சி ஆதலால், சூதர்களுக்குப் பதிலாக, அடியார்கள் நின்று, இறைவன் பெருமையைப் பாடித் துயிலெழ வேண்டும் என்று அவனை, வேண்டிக்கொள்வதாக அமைந்துள்ளன இப்பாடல்கள்.

திரோதானம் என்ற சொல் மறைத்தல் என்ற தொழிலுக்குரிய மற்றொரு பெயராகும். அதனோடு சுத்தி என்ற சொல் சேர்க்கப் பெற்றதால், இவை இரண்டும் சேர்ந்து எவ்விதப் பொருளையும் தராமல் உள்ளன. சாத்திர அடிப்படையில் காணப்பெறும் சில கலைச் சொற்களைத் திருவாசகத்தில் புகுத்தவேண்டும் என்று நினைந்து யாரோ புகுத்திய சொற்களாகும் இவை.

368. போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூம் கழற்கு இணை துணை மலர் கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கொன்டு நின் திருவடி தொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
ஏற்று உயர் கொடி உடையாய் எமை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 1

வாழ் முதல்–வாழுகைக்கு அடிப்படை. ஏற்றி–தூவி. எழில்–அழகு. ஏறு–இடபம். எனை உடையாய்–அநாதியாகவே என்னை ஆளாக உடையவனே. பள்ளி–படுக்கை.

எந்த ஒரு செயலும் நடைபெற, ஒரு முதற்பொருள் அல்லது மூலதனம் வேண்டும். இந்த மூலதனம் பருப்பொருளாக அமைந்துள்ளது. ஆனால், இதனினும் வேறுபட்ட ஒரு மூலதனம் உண்டு. அது கண்ணுக்குத் தெரியாது; பொறி புலன்களுக்கு அகப்படாது. ஆனாலும், அது இல்லையானால் உயிர்களின் வாழ்வு ஒரு விநாடிகூட நீடிக்காது. எனவே, உயிர்கள் வாழ, வாழ்வு நடத்த—ஈடு இணையற்ற துணையாய், மூலதனமாய் இருக்கும் இறைவனை 'வாழ்முதல்' (மூலதனம்) என்கிறார் அடிகளார். இவ்வாறு கூறுவதால் வாழ்வு நன்கு வளர்வதற்குத் தேவையான நீர், சோறு, அனுபவிக்கப்படும் இன்பப் பொருள்கள் ஆகிய அனைத்தும், அந்த மூலதனமே என்பது பெற்றாம். வாழ்முதல் ஆகிய பொருள் என்று அடிகளார் குறிப்பிட்டதை நம்மாழ்வார் 'உண்ணும் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்' (நாலாயிர-2700) என்று கூறுவதைக் காணலாம்.

ஒவ்வொரு விநாடியும் இந்த வாழ்வு நடைபெற உதவும் மூலதனத்தை எவ்வாறு புகழ்ந்துரைப்பது? போற்றி என்ற சொல்லைவிடச் சிறந்த சொல் இந்த மொழியில் இல்லை ஆதலால் 'என் வாழ்முத லாகிய பொருளே போற்றி' என்கிறார் அடிகளார்.

இறைவனுடைய படைப்பில் இணையான அழகும் பயனும் உடைய வேறு பொருள்களைக் காண்பது கடினம். பல்வேறு நிறமுடைய, பல்வேறு மணமுடைய மலர்கள் அனைத்தும் அழகுப் பெட்டகமாகும். தூய்மையான ஆழ்ந்த பக்தி என்பது மலர்களில் காணப்படும் அழகைப் போல பொதுத் தன்மையுடையது. நிறம், வடிவம், மணம் ஆகியவை பல்வேறு இன மலர்களுக்குள் மாறுபட்டிருப் பதைப் போல அடியார்கள் பக்தி செலுத்தும் முறையும் வேறுபட்டிருக்கும். நாம, ரூபம் அற்ற அந்தப் பரம்பொருளை ஒருவர் தலைவனாகவும், ஒருவர் தந்தை யாகவும், ஒருவர் தாயாகவும், ஒருவர் எஜமானனாகவும்

கருதிப் பக்தி செலுத்துகின்றனர். இது மலர்களின் வடிவும் நிறமும் மாறுபடுவது போலாகும். மலர்களின் நிறமும் வடிவமும் மாறுபட்டாலும் மலர்களிடையே சிறப்புக் குறையாதவாறுபோல, வெவ்வேறு வகையில் இறைவனிடம் பக்தி செலுத்தும் இவர்களிடையே ஏற்றத் தாழ்வு இல்லை.

இணை துணை மலர்கொண்டு திருவடியை ஏத்தித் தொழுவதற்காக வந்துள்ளோம் என்று தன்மைப் பன்மை யாகக் கூறியுள்ளதால், பல அடியார்களை உளப்படுத்திப் பேசுகிறார் அடிகளார். அவ்வாறு பேசுவதாலோ என்னவோ, மனித மனத்தின் இயல்பு முதல் இரண்டு அடி களில் வெளிப்படுகிறது. திருவடிகள் மலர் போன்றவை. அந்தத் திருவடிகளில் பக்தியோடு மலர்களை இடுவதுதான் நிறைவான வழிபாடாகும். மலர்களை இட்டுவிட்டு வேறொன்றை எதிர்பார்த்து நிற்பது மனித மனத்தின் இயல்பாகும். அதைக்கூட அடிகளார் இங்கே பேசுகிறார். பூங்கழற்கு இணைதுணை மலர் கொண்டேத்தி அதற்குப் பயனாக அவனுடைய எழில்நகை மலரை எதிர்பார்க்கின் றார்கள், இந்த அடியார்கள். திருவடியைத் தொழுவதற்கு முன்னர் எழில்நகை மலர்கொண்டு என்று கூறியதால் மனித மனத்தின் குறைபாட்டைச் சுட்டினார் ஆயிற்று.

'சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ் திருப் பெருந்துறை' என்று கூறியதிலும் ஒரு நயம் அமைந்துள்ளது. சேறு விரும்பத்தகாத பொருள் ஆயினும், அழகிய வடிவுடைய கமலம், அந்தச் சேற்றில் மலர்வதுபோல, இவ்வுடம்பு கீழானதாயினும் உடம்பு இருத்தலினால்தானே இறைவனிடத்துப் பக்தி செலுத்துவதும், மலர் கொண்டு அவன் திருவடிகளை அருச்சிக்கவும் முடிகின்றது! ஒரே சேற்றில் முளைத்த ஒரே தாமரை பல்வேறு இதழ்களைப் பெற்றிருப்பதுபோல, ஒரேவித மனித உடம்பைப் பெற்றிருக்கின்ற இந்த அடியார்கள் பல்வேறு நிலையில் பக்தி செலுத்துகின்றனர்.

அடுத்துள்ள பகுதி 'ஏற்றுயர் கொடியுடையாய் எமை யுடையாய்' என்பதாம். எமை உடையாய் என்பதால், அவன் தலைவன் அல்லது உடையவன் என்பதும், அடியவர் உடைமை அல்லது அடிமை என்பதும் பெறப் பட்டது. இவ்வாறு அடிமைப்படுவதிலும் ஒரு சிறப்பு உண்டு. எல்லோருக்கும் இச்சிறப்பு வாய்ப்பதில்லை. தகுதியில்லாதார்மாட்டு அடிமைப்படுவோர் பலர் இருக்க, 'இத் தலைவன் அப்படிப்பட்டவன் அல்லன்' என்பதைக் குறிப்பால் உணர்த்த 'ஏற்றுயர் கொடியுடையாய்' என்கிறார் அடிகளார். ஏறு என்பது அறத்தின் ஒரு வடிவாகும். அறத்தையே தன் கொடியாக உடைய ஒரு தலைவனிடம் அடிமையாவது இப்பிறப்பில் கிடைத்தற்கரிய ஒரு பயனல்லவா?

இந்தக் கருத்தை மனத்தில் வாங்கிக்கொண்ட, நம் காலத்து வாழ்ந்த மகாகவி பாரதி, அடுத்தடுத்துள்ள இரண்டு அடிகளில் இக்கருத்தைக் கூறுவது சிந்திக்கத் தக்கதாகும்.

'பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்
பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்'
(357–தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு)

என்பது அவனுடைய பாடலாகும்.

369. அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள் போய்
அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ நயனக்
கடி மலர் மலர மற்று அண்ணல் அம் கண் ஆம்
திரள் நிரை அறுபதம் முரல்வன இவை ஓர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே
அலை கடலே பள்ளி எழுந்தருளாயே 2

அருணன்–சூரியனின் தேரோட்டி; இந்திரன் திசை–கிழக்குத்திசை; கடிமலர்–மணமுள்ள மலர். அறுபதம்–ஆறுகால்களையுடைய வண்டு.

மிகப் பெரிய மன்னர்களைச் சூதர்கள் பாடித் துயில் எழுப்புவதைப் போலவே, இத் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களும் அமைந்துள்ளன என்பதை முன்னர்க் கண்டோம். மன்னருக்குப் பாடும் பள்ளியெழுச்சிக்கும், இறைவனுக்குப் பாடும் திருப்பள்ளியெழுச்சிக்கும் சில சில ஒற்றுமைகள் இருப்பினும், ஒரு பெரிய வேற்றுமை உண்டு என்பதை அறிந்துகொள்ள வேண்டும். மன்னனைப் பாடும் புகழுரைகள் ஓரளவே உண்மையுடையனவாக இருக்கும். பெரும்பாலும் உயர்வு நவிற்சி, கற்பனை, புனைந்துரை என்பவைகளால் நிறைந்திருக்கும் வெற்றுரைகளாகும் அவை. எவ்வளவு பெரியவர்களாயினும் இம்மன்னர்கள் மனிதர்கள்தாமே! எனவேதான் அவர்களுக்குரிய பள்ளி எழுச்சிப் பாடல்களில் மனிதர்க்குரிய உயர்வுநவிற்சி, கற்பனை ஆகியவை இடம் பெறுகின்றன.

ஆனால், இறைவனைப்பற்றிப் பாடப்பெறும் திருப் பள்ளியெழுச்சியில் உயர்வுநவிற்சி, கற்பனை, புனைந்துரை என்பவற்றிற்கு இடமேயில்லை. ஏனெனில், எதனைக் கூறினும் அதற்கு உரியவனாகவும் மேம்பட்டவனாகவும் அவன் உள்ளான். எனவே, இறைவனைக் கடல் என்றும், மலை என்றும் கூறும்பொழுது, அச்சொற்கள் வெறும் உருவகமாக மட்டும் அமையாமல், ஆழமான பொருளுடைய, இறைவனுடைய பெருமையை நன்கு விளக்கக்கூடிய சொற்களாக அமைந்துவிடுகின்றன.

கதிரவன் தோன்றுவதற்கு முன்னர்த் தோன்றும் அருணன், கீழ்த்திசையில் தோன்றினானாக, இருட்கணம் அகன்றது. நம்முடைய பொறி, புலன் சேட்டை, அறுவகைக் குற்றம், அஞ்ஞானம் ஆகிய இருட்கணம் இறையருள் என்ற

அருணன் நம்மை நோக்கினால், மறைந்துவிடுகின்றன என்ற குறிப்புப் பொருளும் இம்முதலடியில் அமைந்துள்ளது.

அருணனை அடுத்து வரும் கதிரவன் மெல்ல மெல்ல மேலேறி வர, தாமரைகள் மலர்கின்றன.

எங்கோ இருக்கின்ற சூரியன் தன் கதிர்களை வீச, அதன் பயனாகத் தாமரைகள் மலர்கின்றன. அம்மலரிடத்து வந்த அரச வண்டுகள் (அண்ணல் அறுபதம்) ரீங்காரம் இடுகின்றன. இம்மலர்களை ஒத்த இறைவனின் திருக்கண்கள் மெல்லத் திறக்க அதிலிருந்து வெளிப்படும் கருணையாகிய தேனை உண்கின்ற அடியார்கள் வண்டுகள் ரீங்காரமிடுவதைப்போல பள்ளியெழுச்சி பாடுகின்றனர். இத்தகைய வளம் நிறைந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள பெருமானே! ஆனந்த மலையே! அலைகடலே! பள்ளி எழுந்தருளாயே என்கிறார்.

மலை என்று வாளா கூறாமல், ஆனந்த மலை என்றும், அருள் நிதி தரவரும் மலை என்றும் அடிகளார் கூறுவது நின்று சிந்திக்கவேண்டிய இடமாகும். பெரியவர்களுடைய பண்பிற்கும், இறைவனுக்கும் மலையை உவமையாகக் கூறுவது பழைய இலக்கியங்களில் அதிகம் காணப்பெறும் ஒன்றாகும்.

ஆனால், அடிகளார் பயன்படுத்திய உருவகம் வாலாயமாகச் செய்யப்படுகின்ற உவமை, உருவகங்களிலிருந்து மாறுபட்டது என்பதை நம் மனத்திடை தோற்றுவிப்பதற்காகவே மலைக்கு அடையாக 'அருள் நிதி தரவரும்' என்ற தொடரையும், ஆனந்தம் என்ற சொல்லையும் பயன்படுத்துகிறார்.

மலை என்பது நுனி சிறுத்தும், அடி பெருத்தும் இருப்ப தோடல்லாமல் பூமிக்கு மேலே காணப்பெறும் பகுதியை விடப் பல மடங்கு அதிகப்படியான் பகுதி கண்ணுக்குத் தெரியாமல் பூமிக்குள் மறைந்திருக்கும்

என்பதை அறிதல் நலம். ஆனந்த வடிவினனாகிய இறைவனும், ஓர் ஒளி வடிவாக நம்முள் புகுந்து, கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைந்து நம்மில் முழுவதும் நிறைந்துவிடுகிறான்.

ஆனந்த மலை ஆதலின், மலைக்குக் கூறப்பட்ட அத்தனை இயல்புகளும் ஆனந்தத்திற்கும் உண்டு. அதாவது, நம்மால் உணரப்படுகின்ற ஆனந்தம், மலை முகட்டைப் போன்று அளவால் சிறியதாகச் காணப்படுகிறது. மலையின் பெரும்பகுதி பூமிக்குள் மறைந்திருப்பதுபோல் இந்த ஆனந்தத்தின் பெரும் பகுதி நம்முடைய மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற நான்கிலும் நிரம்பியுள்ளது. அதற்குமேலும் ஆழமாக விரிந்து நின்று நம்மையே ஆட்கொள்ளும் அளவில் உள்ளது அந்த ஆனந்தம் என்பதை அறிய வேண்டும்.

இறைவன் தருகின்ற இந்த ஆனந்தத்தில் மூழ்கியவர் கள், வேறு எதனையும் விரும்புவதில்லை. சங்கநிதி, பதுமநிதி போன்ற செல்வங்கள் அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல. ஆனால், இவையல்லாத ஒரு நிதியை அவர்களும் வேண்டி நிற்கின்றனர். அதுவே, அருள் நிதி ஆகும். எனவே ஆனந்தத்தில் மூழ்கியிருப்பவர்களும் வேண்டி நிற்பது அவனது அருளே ஆதலால் 'அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே' என்றார்.

இந்த அருள், கேட்டுப் பெறுகின்ற ஒன்றன்று. இந்த அருள், நம்முடைய தரமும், தகுதியும், உள்ளன்பும் வளர வளர ஆனந்தம் நம்மில் நிரம்புகின்றது. (அந்த ஆனந்தத்தை எவ்வளவுக்கெவ்வளவு) 'நான்' என்ற அகங்காரத்தை மறந்து, அனுபவிக்கின்றோமோ, அந்த அளவுக்கு இறையருள் நமக்குத் தரப்பெறுகின்றது. நம் தகுதி நோக்கி அவனே வந்து அருளைத் தருகின்றானாதலின் 'அருள்நிதி தர வரும்' என்றார்.

மலையை அடுத்து, கடலைக் கூறியுள்ளார். அளவற்ற ஆழமும், எல்லையற்ற பரப்பும் கொண்டுள்ள கடல் தன் ஆழத்தில் முத்து, பவளம் முதலிய விலைமதிப்பற்ற பொருள்களை அடக்கியுள்ளது. மூச்சைப் பிடித்து, பயிற்சி செய்து கடலுள் அழுந்துபவர்கள் முத்து, மணி, பவளம் ஆகியவற்றை எடுத்து வருவர். அதுபோல அமைதி, ஆனந்தம், வீடுபேறு என்பவை இறைவனாகிய கடலின் ஆழத்தில் உள்ளன. ஏகாக்கிர சித்தத்துடன் தம்முள் மூழ்கி உள்ளே செல்வோர்க்கு ஆனந்தம், அமைதி முதலியவற்றைத் தரச் சித்தமாக உள்ளானாதலின் அவனைக் 'கடலே' என்றார்.

370. கூவின பூம் குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நல் செறி கழல் தாள் இணை காட்டாய்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
யாவரும் அறிவு அரியாய் எமக்கு எளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 3

குருகுகள்–பறவைகள். தாரகை–நட்சத்திரம். ஓவின–ஒழிந்தன; நீங்கின.

எங்கோ மரத்தில் மறைந்துகொண்டு, தன்னை வெளிப்படுத்திக்கொள்ளாமல், அக்கூ, அக்கூ என்று கூவுகின்ற குயிலும், நாம் காணுமாறு பூமியில் நின்றுகொண்டு 'கொக்கரக்கோ' என்று கூவும் கோழியும், நிறைந்துள்ள இடத்தில் பறவைகளும், சப்தமிட்டுப் பறக்கின்றன. 'ஓ' என்ற ஒலி எழுப்பும் கோழியும், 'ஊ' என்று ஒலி எழுப்பும் குயிலும் மேலும் கீழுமாக நிற்க, இடைப்பட்ட உயரத்தில் பறவைகள் பல்வேறு ஒலிகளை எழுப்புவதால் 'ம்' என்ற சப்தம் அங்கே தோன்றுகிறது. இந்த மூன்று ஒலிகளையும்

எழுப்பும் கர்த்தாக்கள் அஃறிணையான பறவைகள் ஆகும். இவற்றின் இடையே மக்களால் ஒலிக்கப்படும் சங்கநாதம் 'ஓம்' என்ற ஒலியை எழுப்புகின்றது. சங்கநாதத்தை எழுப்புகின்றவர்கள் மக்களே ஆயினும், இந்த ஒலிப் பிரபஞ்சத்தில் அந்தச் சாதாரண மக்களுக்கு இடம்பெறத் தகுதியில்லை என்று அடிகளார் நினைத்தார் போலும். ஆதலால்தான் 'சங்கு இயம்பினார்' என்று கூறாமல், 'இயம்பின சங்கம்' என்று கூறுகிறார்.

மேலே கூறிய ஒலிகள் தோன்றுகின்ற காலத்தில், தாரகைகள் ஒளி மழுங்கிவிடுகின்றன.

சென்ற இரண்டு பாடல்களில் திருமுகத்தில் மலர்கின்ற நகையைப்பற்றிப் பேசிய அடிகளார், இப்பாடலில் அவருக்கே உரித்தான முறையில், 'தாளிணை காட்டாய்' என்று பாடுவது சற்றுப் புதுமையானது. பள்ளியினின்று எழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறவர்கள், திருவடியைக் காட்டுவாயாக என்று பாடுவது சற்றுப் புதுமையானது. இறைவடிவத்தைப் பொறுத்தமட்டில், இறைவனது திருவடிகளிலேயே அடிகளார் அதிகம் ஈடுபட்டாராதலின் இங்கும் 'தாளிணை காட்டாய்' என்று பாடுகிறார்.

371. இன் இசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டு இன் அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 4

இருக்கு–ருக்வேத மந்திரம். துன்னிய–நெருங்கிய. பிணைமலர்–பிணைக்கப்பட்ட மலராகிய மாலை. துவள்கை–சிவானந்தமேலீட்டால் துவளுதல். அஞ்சலி–கைகுவித்த வணக்கம்.

திருப்பெருந்துறை நாயகன் உறைகின்ற திருக்கோயிலை ஓர் அரண்மனை போல உருவகிக்கிறார் அடிகளார். அரசன் உறங்கும் இடத்திற்குக் கீழே திருஓலக்க மண்டபத்தின் ஒருபால் பிறிதொரு மண்டபம் உள்ளது. அதில் கூட்டம் நிரம்ப வழிகின்றது. அக்கூட்டத்தினுள் யார் யார் உள்ளனர், அவர்கள் என்ன செய்கின்றனர் என்பதைத் தம் தலைவனாகிய இறைவனுக்கு உணர்த்தும் கடமையை மேற்கொள்கின்றார் அடிகளார்.

மிகப் பழமையான யாழ் வாசிப்போர் ஒருபுறம்; அடுத்துத் தோன்றிய புதுமையான வீணை வாசிப்போர் ஒரு புறம். இவை இரண்டும் வெவ்வேறான நரம்புக் கருவிகள். ஒரு ஸ்வரத்திற்கு ஒரு நரம்பு என்ற முறையில் ஏழு நரம்புகளை உடையது யாழ். அன்றியும் மூன்று ஸ்தாயைகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் ஏழு வீதம் இருபத்தொரு நரம்புகளைப் பெற்றது பேரியாழ் எனப்படும். இதிலுள்ள ஒவ்வோர் நரம்பையும் விரல்களால் சொடுக்கி, அதற்குரிய ஸ்வரத்தை வெளிப்படுத்த வேண்டும். இதனெதிராக வீணையில் மெட்டுகள் இருக்கின்ற காரணத்தால் ஒரே நேரத்தில் எல்லா ஸ்வரங்களையும் வாசிக்கமுடியும். அதோடில்லாமல் இந்த ஒரே கம்பியில் மூன்று ஸ்தாயைகளிலும் வாசிக்க முடியும். இவையிரண்டும் யாழில் முடியாது. யாழ் விட்டிசைக்கும் கருவியாதலால், இன்னிசை வீணைக்கு அடுத்த படியாக யாழிசை பற்றி பேசுகிறார் அடிகளார். இந்த இசைவாணர்களை அடுத்து வேதம் ஓதுபவர்களும், தோத்திரப் பாடல்களை ஓதுபவர்களும் கூடியுள்ளனர்.

அடுத்து, மலர் மாலையைத் தொடுத்து, கைகளில் ஏந்திக் கொண்டு திருவடிகளில் சாத்துவதற்குத் தயாராக உள்ளனர் ஒரு சாரார். அடுத்துள்ள கூட்டத்தில் மூன்று

நிலைகளில் உள்ளவர்கள் பேசப்படுகிறார்கள். அவர்கள் தொழுபவர்கள், அழுபவர்கள், துவள்கிறவர்கள் ஆகிய மூவகையோர். துவள்கையர் என்ற சொல்லுக்கு, அருள் கிட்டாமையினால், மனம், உடல் துவண்டு போகின்றவர்கள் என்று பலரும் பொருள் கூறியுள்ளனர்.

இதற்கு மாறாக, இந்த மூன்று நிலைகளும் ஒருவரே அடுத்தடுத்து அடையும் நிலை என்றும் கொள்ளலாம். அருணோதயத்தில் இறைவழிபாட்டில் ஈடுபட்டவர்கள் பார்த்தவர்கள் முதலில் அனைவரையும்போல, உடலால் தொழுதனர். இவர்களுடைய தொழுகை, உள்ளத்தில் தோன்றிய ஆழமான இறையன்பு காரணமாக நடை பெற்றதாகும். எனவே, தொழுகையின் முடிவு அழுகையாக அமைந்தது. இறையன்பு மிகுதிப்பட மிகுதிப்பட, இறையனுபவம் வலுப்பெறுகிறது. வலுப்பெற்ற இறையனுபவத்தின் புற வெளிப்பாடுதான் அழுகை. தீவிர பக்தர்கள் இந்த இரண்டு நிலைகளையும் கடந்து மூன்றாவது நிலையை அடைகின்றனர். அதுவே துவள்கின்ற நிலையாகும். அழுகை வெளிப்படும் பொழுது, அவருடைய பொறி, புலன்கள், அந்தக்கரணங்கள் ஆகிய அனைத்தும் செயலிழந்து விடுகின்றன. சிறிய அளவில் தொடங்கிய அழுகை, வளர்ச்சி அடையும்பொழுது இவர்கள் தற்போதம் இழந்தவர்களாய் உடல் துவண்டு விடுகின்றனர். இறையனுபவத்தின் முதிர்ந்த மூன்றாவது நிலையாகும் இது. அதனைக் கூறவந்த அடிகளார், இறையனுபவத்தில் தோய்கின்றவர்களுடைய மூன்று நிலைகளையும், நிரல் நிரையாக தொழுகையர், அழுகையர், துவள்கையர் என்ற சொற்களால் குறிக்கின்றார். 'தன் நாமம் கெட்ட' நிலையாகும் இது.

இறுதி அடியில் 'என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்' என்று அடிகளார் பாடும்பொழுது, 'என்னையும்' என்ற சொல்லில் உள்ள உம்மையின் மூலமே மாபெரும் பொருட்சிறப்பைத் தந்துவிடுகிறார்.

முதலிரண்டு அடிகளில் கூறப்பெற்ற பல்வேறு வகையான அடியார்கள் காத்து நிற்கின்றனர் என்று கூறிவிட்டு, 'என்னையும்' என்ற சொல்லைப் பயன்படுத்தும் பொழுது அந்த 'உம்மை' இழிவுச் சிறப்பின் எல்லையைத் தொட்டுவிடுகின்றது.

372. பூதங்கள்தோறும் நின்றாய் எனின் அல்லால்
போக்கு இலன் வரவு இலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டு அறியோம் உனைக் கண்டு அறிவாரை
சீதம் கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன் வந்து
ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டு அருள்புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 5

போக்கு வரவு–இறப்பும் பிறப்பும். புலவோர்–அறிஞர். ஏதம்–குற்றம்.

இப்பாடலின் இடையே வரும், 'கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை' என்ற தொடர் நுணுக்கமும், சிக்கலும் வாய்ந்தது. கண்டறிவார் யாருமில்லை என்று கொண்டு, 'பெருமானே! உன்னைக் கண்டேன்' என்று சொல்லிக் கொள்பவர்கள் எவரையும் நாங்கள் கேட்டது கூட இல்லை என்று இதுவரை பலரும் பொருள் கூறியுள்ளனர்.

இவ்வாறு கூறுவதில் தவறு ஒன்றும் இல்லையென்றாலும் அடிகளாரின் ஆழ்ந்த கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் மேலோட்டமாகப் பொருள் செய்த குறை நேர்ந்துவிடும். இதனைச் சற்று விரிவாகக் காணலாம்.

ஐம்பெரும் பூதங்களிலும் நீ நிலைபெற்றுள்ளாய் என்று சொல்வதற்கு 'நின்றாய்' என்ற சொல்லைப் பயன் படுத்துகிறார். இந்த ஐம்பெரும் பூதங்களும் ஒரே வடிவில் எப்பொழுதும் நிலைபெற்றிருப்பதில்லை. மண்ணை நீர் விழுங்குவதும், நீரை நெருப்பு விழுங்குவதும், நெருப்பை

வளி விழுங்குவதும், இறுதியாக இவை அனைத்தும் தம் உரு மாறி அணுவடிவாய் ஆகாயத்தில் தங்கிவிடும் ஒரு நிலையும் உண்டு. அவ்வாறு மாறுகின்ற இந்த ஐம்பெரும் பூதங்களும் அஷ்டமூர்த்த வடிவங்களில் உள்ளன. ஆதலால், இவையே அவன் வடிவம் என்று கொள்ளுதல் சரியன்று என்பதை மாபெரும் விஞ்ஞானியாகிய அடிகளார் அறிவார் ஆதலால், 'நின்றாய்' என்ற சொல்லைப் பயன் படுத்துகிறார். இந்த ஐம்பெரும் பூதங்களும் எவ்வளவுதான் தம் நிலை மாறினாலும், அந்த மாறுபட்ட நிலையிலும், அவற்றின் உள்ளுருவாய், தான் மாறாமல் இறைவன் உள்ளான். ஆதலின், 'பூதங்கள் தோறும் நின்றாய்' என்றார். அப்பூதங்கள் தம் உருமாறி, அணுவடிவாக நிற்கின்ற காலத்தில், பழைய நிலைக்குள்ள இயல்புகள் அந்த அணுத் தன்மையில் இருப்பதில்லை. ஆனால், அவற்றின் உள்ளுறையாய் நிற்கும் அவன் மாறாத இயல்பினன் ஆதலால், அவனுக்குப் பிறப்புமில்லை இறப்புமில்லை என்கிறார். 'போக்கிலன், வரவிலன்' . என்பதன் பொருள் இதுவேயாகும்.

பூதங்களின் தோற்றம், நிலைபேறு, மறுவடிவு ஆகியவற்றை யாரும் நேரிடையாகக் கண்டதில்லை. இவற்றின் இயல்புகளையே யாரும் காணமுடியாதென்றால், இவற்றின் உள்ளுறையாய் நிற்கும் ஒருவனை யார் காண முடியும்? ஒருவரும் கண்டதில்லை.

ஆனால், தம் மெய்ஞ்ஞான வளர்ச்சியாலும், பசு கரணங்கள் பதிகரணங்களாக மாறியதாலும், சாதாரண மனிதர்கள் காணமுடியாத சிலவற்றை இந்த ஞானிகள் காணமுடியும்.

வீட்டினுள் இருப்பவன் நான்கு சுவர்களைத்தான் காணமுடியும். ஆனால், விமானத்திலிருப்பவன் சுற்று வட்டாரத்தையும் காணமுடியும். அதுபோல மாறுகின்ற இந்தப் பூதங்களைமட்டும் கண்டுகொள்ளாமல் இவற்றின்

உள்ளுறையாய் இவற்றின் உள்ளே நிலை பெற்றிருக்கும் ஒருவனை மெய்ஞ்ஞானிகள் ஓரளவு கண்டார்கள். முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளான இவன் போக்கும் வரவும் இல்லாது இருப்பதை அநுமானத்தால் அறிந்தார்கள். எனவே, அவனை வழுத்தும் பாடல்களில் அவன்பாலுள்ளதாகக் கருதப்படுகின்ற இந்த இயல்புகளைப் பெய்து பாடினர்.

இதுவரை சிக்கல் ஒன்றும் தோன்றவில்லை. இவ்வாறு பாடி, ஆடுபவர்கள்கூடக் கண்டறியாதவன் அவன் என்று கூறுவது சரியா? அடிகளாரே 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' (திருவாச: 3-58) என்றும், 'புவனியில் சேவடி தீண்டினன் அவனைச் சிவன் என யானும் தேறினன்' (திருவாச:3-61,62) என்று பாடியுள்ளாரே. அப்படியிருக்க, கண்டவர்களே இல்லை என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த அடிகளாருக்கு முன்னர், எத்தனையோ அடியார்கள் இறைக்காட்சி பெற்றுள்ளனரே! அப்படியிருக்க, கண்டவர்கள் இல்லை என்று பொருள் கூறுவது பொருந்துமா என்று சிந்தித்தல் நலம்.

இப்பொழுது மறுபடியும் அத்தொடர்களை நோக்குவோம்: 'கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை' என்பதில் கேட்டறியோம் என்ற தொடர் சிந்திக்கத் தக்கது. எதைக் கேட்டறியோம்? 'கண்ணால் அவனைக் கண்டதில்லை. இது ஒரு புறம் இருக்க, கண்ணால் கண்டவர்கள் உண்டு என்று பிறர் சொல்லி, காதால் கேட்டதுகூட இல்லை' என்ற பொருளைத் தருவதாகும் இத்தொடர்.

அடுத்துள்ளது 'கண்டு அறிவாரை' என்ற இரண்டு சொற்கள் அமைந்த ஒரு தொடராகும். 'கேட்டறியோம்' என்பதை ஒருசொல் நீர்மையதாகக் கொண்டு, கேட்டதில்லை என்று பொருள் செய்வதுபோல, கண்டறிவாரை என்பதையும் ஒரு சொல் நீர்மையதாகக்

கொண்டு 'கண்டவர்களைக் கண்டதில்லை' என்று பொருள் செய்துவிட்டோம்.

'கண்டு அறிவாரை' என்ற இரண்டு சொற்களையும் தனித்தனியே பிரித்துப் பொருள் காணவேண்டும். ஒரு பொருளைக் காண்பது என்பது ஒன்று; அதுபற்றி அறிவது என்பது மற்றொன்று, காண்டல் என்பது புற உடலோடு தொடர்புடைய கண்ணாகிய பொறியின் செயலாகும். அறிதல் என்பது இப்பொறிபுலன்களின் எல்லைக் குட்பட்டதன்று. கட்பொறியால் ஒன்றைக் காணாவிடினும், அறிவின் துணைகொண்டு அப்பொருள்பற்றிய ஆய்வில் ஈடுபட்டு, அதன் இயல்புகளை அறிந்துகொள்ள முடியும். ஆனால், நம்முடைய பொறி, புல எல்லைக்குட்பட்ட இந்தப் பிரபஞ்சத்திலுள்ள பொருள்களைப்பற்றித்தான் நம்முடைய சாதாரண அறிவு அறிந்துகொள்ள முடியும். இதனை அபர ஞானம் என்று நம் முன்னோர் கூறினர். இதனை ஓரளவு அறிதல் இயலும். ஆனால், இதிற்கூட ஒரு பொருளைப்பற்றி முழுவதும் அறிந்தோம் என்று சொல்வது இயலாத காரியம். அறிவின் துணைகொண்டு அறியப்படும் எல்லா முடிவுகளுக்கும் இது பொதுவான தாகும். அபர ஞானத்தால் பெறும் ஒரு முடிவுகூட முழுத் தன்மை பெற்றவை அல்ல. எனவே, ஒரு பொருளை நாம் முற்றிலும் அறிவோம் என்று சொல்வது அறியாமை உடையதாகும்.

குணம் குறி கடந்த பரம்பொருள், நாம ரூபம் கடந்ததாயினும் தன் அளப்பில் கருணை காரணமாகப் பல்வேறு வடிவம் எடுத்து, பல்வேறு சமயங்களில் பல்வேறு இடங்களில் தோற்றம் அளிக்கிறது என்பது உண்மைதான். இத்தகைய தோற்றங்கள் பல உண்டு என்றாலும், ஒருவர் காணும் ஒரு தோற்றத்தை அவர் பக்கத்தில் நிற்கும் மற்றொருவரும் கண்டார் என்று கூறுவது சரியன்று.

கொண்டு 'கண்டவர்களைக் கண்டதில்லை' என்று பொருள் செய்துவிட்டோம்.

'கண்டு அறிவாரை' என்ற இரண்டு சொற்களையும் தனித்தனியே பிரித்துப் பொருள் காணவேண்டும். ஒரு பொருளைக் காண்பது என்பது ஒன்று; அதுபற்றி அறிவது என்பது மற்றொன்று, காண்டல் என்பது புற உடலோடு தொடர்புடைய கண்ணாகிய பொறியின் செயலாகும். அறிதல் என்பது இப்பொறிபுலன்களின் எல்லைக் குட்பட்டதன்று. கட்பொறியால் ஒன்றைக் காணாவிடினும், அறிவின் துணைகொண்டு அப்பொருள்பற்றிய ஆய்வில் ஈடுபட்டு, அதன் இயல்புகளை அறிந்துகொள்ள முடியும். ஆனால், நம்முடைய பொறி, புல எல்லைக்குட்பட்ட இந்தப் பிரபஞ்சத்திலுள்ள பொருள்களைப்பற்றித்தான் நம்முடைய சாதாரண அறிவு அறிந்துகொள்ள முடியும். இதனை அபர ஞானம் என்று நம் முன்னோர் கூறினர். இதனை ஓரளவு அறிதல் இயலும். ஆனால், இதிற்கூட ஒரு பொருளைப்பற்றி முழுவதும் அறிந்தோம் என்று சொல்வது இயலாத காரியம். அறிவின் துணைகொண்டு அறியப்படும் எல்லா முடிவுகளுக்கும் இது பொதுவான தாகும். அபர ஞானத்தால் பெறும் ஒரு முடிவுகூட முழுத் தன்மை பெற்றவை அல்ல. எனவே, ஒரு பொருளை நாம் முற்றிலும் அறிவோம் என்று சொல்வது அறியாமை உடையதாகும்.

குணம் குறி கடந்த பரம்பொருள், நாம ரூபம் கடந்ததாயினும் தன் அளப்பில் கருணை காரணமாகப் பல்வேறு வடிவம் எடுத்து, பல்வேறு சமயங்களில் பல்வேறு இடங்களில் தோற்றம் அளிக்கிறது என்பது உண்மைதான். இத்தகைய தோற்றங்கள் பல உண்டு என்றாலும், ஒருவர் காணும் ஒரு தோற்றத்தை அவர் பக்கத்தில் நிற்கும் மற்றொருவரும் கண்டார் என்று கூறுவது சரியன்று.

காழிப் பிள்ளையார் தம் சின்னஞ் சிறிய சுட்டுவிரலை ஆகாயத்தில் காட்டி, அங்குக் காட்சி தரும் அம்மையப்பரை 'இப்பெருமான்தான் எனக்குப் பால் அளித்தான்' என்று கூறுகிறார். அந்தச் சுட்டுவிரலால் காட்டப்பெற்ற உமையொருபாகன், அவருக்குக் காட்சி தந்தானே தவிர, அவர் தந்தையாகிய சிவபாத இருதயருக்குக் காட்சி தரவில்லை.

காழிப்பிள்ளையார் போன்று ஒரோவழி இறைக் காட்சியைப் பெற்றவர்கள் ஒரு சிலர் உலகமுழுவதிலும் அன்றும், இன்றும், என்றும் உண்டு.

இப் பெருமக்கள், தம் உயர்வு காரணமாக இப்புற உடம்பிற்குரிய கண் ஆகிய பொறியாலேயே இறைத் தரிசனம் செய்கின்றனர். அடிகளார் குறிப்பிடுவது இவர்களையும் சேர்த்துத்தான். அடிகளாரும் இறைத் தரிசனம் பெற்ற இவர்களோடு சேர்ந்தவர்தான்.

அப்படியிருக்க, கேட்டறியோம் என்று சொல்வது எவ்வாறு பொருந்தும்? அடுத்து வரும் கண்டறிவாரை என்ற தொடரை மறுபடியும் சிந்திப்பது நலம். மேலே கூறிய இறையடியார்கள் அனைவரும் இறைவனைத் தம் கண்களால் கண்டது உண்மைதான். ஆனால், இவர்கள் யாரும் அவனை முழுவதும் அறிந்தார்கள் இல்லை. காரணம், அவனே 'தன் பெருமை தான் அறியாத் தன்மையன்' ஆவான். இதை விளங்கிக்கொண்டால், பூதங்கள் தோறும் நிற்கின்ற அவனைக் கண்டவர்களைக் கண்டதும் உண்டு, கேட்டதும் உண்டு. ஆனால், அவனை அறிந்தவர்களைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை என்பதே இதன் உண்மையான பொருளாகும்.

அறிவால் அறியப்படுவது ஒரு வகை. அதாவது காரண காரிய அடிப்படையில், அனுமானம் முதலிய பிரமாணங்களை ஏற்றுக்கொண்டு தொழிற்படும் அறிவால், அறியப்படுவது அது. இதனைக் கடந்து நிற்பது சிந்தனை.

இந்தச் சிந்தனையின் வளர்ச்சிக்குக் காரண காரியம், அனுமானம் முதலியவை தேவையில்லை. 'நான் யார்?' என்ற வினாவைச் சிந்தித்துக்கொண்டேயிருந்து உண்மை நிலையை ஓரளவு அறிந்தவர்கள் இன்றும் உண்டு. நான் யார் என்ற வினாவை முன் வைத்துச் சிந்திக்கலாமே தவிர, 'அவன் யார்' என்ற வினாவை முன்வைத்துச் சிந்திக்கத் தொடங்கினால், எவ்வித விடையும் வருவதில்லை. அதனாலேயே அடிகளார் எண்ணத்திற்கு அரியவன்; அறிவுக்கு அரியவன் என்று கூறாமல், 'சிந்தனைக்கும் அரியாய்' என்றார். இந்த உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மையாக நின்று, 'எண்ணம், அறிவு என்பவற்றைக் காட்டி நிற்பதோடு, உயர்வுசிறப்பு உம்மையாகவும் தொழிற்பட்டு, சிந்தனையைவிடச் சிறந்தது வேறில்லை என்பதை அறிவுறுத்திநிற்கின்றது.

373. பப்பு அற வீட்டு இருந்து உணரும் நின் அடியார்
பந்தனை வந்து அறுத்தார் அவர் பலரும்
மைப்பு உறு கண்ணியர் மானிடத்து இயல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா
செப்பு உறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
இப் பிறப்பு அறுத்து எமை ஆண்டு அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 6

பப்பற–பரபரப்பு இல்லாமல். மைப்பு உறு கண்ணியர்–கருமையுற்ற கண்ணினையுடையார். அணங்கு–உமா தேவியார்.

திருக்கோயிலில் வழிபட வருகிறவர்கள் பல திறத்தினர் ஆவர். எல்லாவற்றையும் கடந்த மகா ஞானியர் களும் இறுதியாகத் தாம் எடுத்துள்ள பிறப்பைப் போக்கிக் கொள்ள, அவன் அருளை நாடித் திருக்கோயிலுக்கு வருகின்றனர். இவர்களுக்கு நேர்மாறாக, இயல்பான மனித வாழ்க்கைக்குரிய காமம் முதலிய அறுவகைக் குற்றங்

களையும் உடைய சாதாரண மனிதர்களும் தங்கள் குறைகளைப் போக்க வேண்டித் திருக்கோயிலுக்கு வழிபட வருகின்றனர். இங்ஙனம் வருகின்றவர்கள் ஆண் பெண் இரு பாலரும் ஆவர்.

இவ்விரு சாராரும், அதாவது மகா ஞானிகள் முதல் சாதாரணமான ஆண், பெண் ஆகியோரும், தாம் எடுத்த மானுடப் பிறப்பிற்கேற்ப வழிபாட்டு முறைகளைக் கையாளுகின்றனர்.

பரு உடலோடு கூடிய மானிடராகப் பிறந்தவர்கள் இறைத் திருப்பணியில் ஈடுபடுவது அவசியமாகும். அதாவது, திருக்கோயில் அலகிடுதல், மெழுகிடுதல், தூய்மை செய்தல் என்பவற்றோடு, பல்வகை மலர்களைப் பறித்து மாலைகளாகக் கட்டி, படைத்தவனின் திருவடியில் சாத்துதல் என்பவை மானிட வழிபாட்டு முறைகளாகும்.

இக்கருத்தையே பின்வருமாறு விளக்குகிறார். மனத்தினுள் பரபரப்பு அறத் தேவையற்ற எண்ணங்களை விட்டுவிட்டு அமைதியாக ஓர் இடத்தில் இருந்து இறைநினைவில் ஆழவேண்டும். அதன் பயனாக அவன் திருவருளை அனுபவிக்கும் (உணரும்) அவன் அடியார்கள் இப்பிறப்பில் இயல்பாக உண்டாகக்கூடிய பந்தபாசங்களை, திருவருளை உணர்ந்த காரணத்தால் அறுக்க முடிந்தது. அப்படி அறுத்த பலரும் மானிடராக இருக்கின்ற காரணத்தால், திருக்கோயில் பணி, மாலை கட்டும் பணி ஆகியவற்றில் ஈடுபட்டு, கையில் மாலைகளோடு வந்து நிற்கின்றார்கள்.

'அணங்கின் மணவாளா' என்று விளிப்பது ஒரு கருத்தை உட்கொண்டதாகும். 'ஐயனே! நீ எங்கள்மாட்டு இரங்கவில்லையாயினும் எங்கள் தாய் எங்களைக் கைவிட்டுவிட மாட்டாள். அம்மட்டோடு நில்லாமல்

எங்களுக்கு அருள் செய்யும்படி. தங்களையும் தூண்டுவாள்' என்ற கருத்துப் பட 'அணங்கின் மணவாளா' என்றார்.

பாடலின் கடைசி அடி 'இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டு அருள் புரியும் எம்பெருமான்' என்பதாகும். இதில் அறுத்தல், அருள்புரிதல் என்ற இரண்டு செயல்கள் குறிப்பிடப்படுகின்றன. இதில் எது முந்தையது? பிறப்பை அறுத்துவிட்டு, அருள் புரிந்தானா? அருள் புரிந்துவிட்டு பிறப்பை அறுத்தானா? இவை இரண்டும் ஒரேகாலத்தில் நிகழ்ந்தவையாகும். பிறப்பை அறுப்பதற்கு அவன் கத்தி முதலியவற்றைக் கொண்டுவரவில்லை. பிறப்பை அறுப்பதற்கு அவன் எந்த முயற்சியும் செய்யவில்லை. அவன் அருள் புரிந்தான்; பிறப்புத் தானாக அறுபட்டது.

மானிடர் அல்லாத தேவர், இயக்கர் முதலிய யாவர்க்கும் இந்த வாய்ப்பு இல்லை. சூக்கும உடலுடன் திரிபவர்கள் ஆதலின், இறைவனால் படைக்கப்பட்ட அழகிய மலர்களைப் பறித்து எடுத்து அழகிய மாலையாகக் கட்டி வழிபடும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லை. பரு உடல் இருப்பினும், விலங்குகளுக்கும் இந்த வாய்ப்பு இல்லை. இந்த மானிட வழிபாட்டுமுறை ஈடு இணையற்றது என்பதால், அம்பிகையேகூடக் காஞ்சியம்பதியில் மானிட வடிவுடன் வந்து, ஏகம்பனை மனிதர்களைப் போலவே பூசனை புரிந்தாள் என்று வரலாறு கூறுகிறது. அதேபோல், இந்திரன் முதலிய தேவர்கள் பலரும் குறிப்பிட்ட தலங்களில் இறைவனைப் பிரதிஷ்டை செய்து மானிட வடிவுடன் வழிபட்டார்கள் என்ற கதைகளும் உண்டு. ஆக, பருஉடலுடன் செய்யப்படும் மானிடர் வழிபாட்டு முறையின் சிறப்பிற்கு இவை எடுத்துக் காட்டுகளாகின்றன.

374. அது பழச் சுவை என அமுது என அறிதற்கு
அரிது என எளிது என அமரரும் அறியார்

இது அவன் திருஉரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்தருளும்
மது வளர் பொழில் திரு உத்தரகோச
மங்கை உள்ளாய் திருப்பெருந்துறை மன்னா
எது எமைப் பணி கொளும் ஆறு அது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 7

இப்பாடலின் முதல் ஒன்றரை அடிகளில் இறைவன் எத்தகையவன் என்பதை அமரரும் அறியார் என்று கூறுகிறார் அடிகளார். 'அமரரும்' என்பதில் உள்ள உம்மை ஏனைய எவரும் என்ற பொருளையும் உளப்படுத்தி நிற்கின்றது.

பழம், அமுது ஆகியவற்றின் சுவை என்பது நுண்மையான ஒன்றாகும். ஆதலின், அறிந்துகொள்வதும் அனுபவிப்பதும் மிக நுண்மையான ஒரு செயலாகும்.

அவி உணவு உண்டு நுண்ணிய சூக்கும சரீரத்தோடு வாழும் அமரர்கள் மனிதர்களிலும் மேம்பட்டவர்கள் என்று சொல்லப்படுகின்றனர். ஆனால், அந்த அமரர்கள்கூட இறையனுபவம், பழச்சுவை போன்றதா அமுதின் சுவை போன்றதா என்று கூற முடியாதவர்களாக உள்ளனர். கூற முடியாது என்றாலும், அந்த அனுபவம் எளிதாகக் கிடைக்குமா அல்லது அரிதாகக் கிடைக்குமா என்றால், அதனையும் வேறுபடுத்திக் கூற இயலாத அறியாமையுடன் உள்ளனர்.

சுவையை உணர்ந்து அனுபவிப்பது நாவாகிய பொறியின் செயலாகும். ஆதலால், அதனை விட்டுவிட்டு இறைவன் திருவுரு எத்தகையது, அவன் எங்கே உள்ளான் என்ற வினாக்களை எழுப்பினால்கூட, கட்பொறியினாலோ அல்லது அனுமானத்தாலோ அவனை அடையாளம் கண்டுகொண்டு, இது அவன் திருவுரு என்று கூற முடியாதவர்களாக உள்ளனர். திருவுருவை

முழுவதுமாகக் கண்டு, இது அவன் திருவுரு என்று கூறமுடியாவிட்டாலும் ஒருசில இயல்புகள்மட்டும் வைத்துக் கொண்டு 'இதோ இவன்தான்' என்றும் 'அதோ அவன்தான்' என்றும்கூடக் கூற முடியாதவர்களாக உள்ளனர், அத்தேவர்கள்.

ஆனால், இறைவனைப் பொறுத்தமட்டில் உலகில் உள்ள எல்லாப் பருப்பொருள்களிலும் கலந்துறையும் இயல்பினன் ஆதலின், தனிப்பட ஒன்றை எடுத்து 'இது அவன் திருவுரு' என்று கூறமுடியாது. அவ்வாறு கூறினால் இத்திருவுரு அல்லாத மற்றைய உருவுகள் அவன் வடிவமல்ல என்ற முடிவுக்கு வர நேரிடும்.

அதேபோல, குறிப்பிட்ட அங்க அடையாளங்கள், இயல்புகள் போன்றவற்றை வைத்துக்கொண்டு, 'இவன்' என்று கூறினால், அவன் அல்லன் என்ற நிலை தோன்றிவிடும். இதனை மறுப்பதற்காக, நுண்மையான வடிவு பெற்று மேல் உலகத்தில் சஞ்சரிக்கின்ற தேவர்கள் கூட, இவனை நன்கு அறியமுடியவில்லை என்கிறார்.

அப்படிப்பட்ட ஒருவன் தன் கருணை காரணமாகவே இங்குத் திருப்பெருந்துறையில் எழுந்தருளி எங்களை ஆண்டு கொண்டான் என்றபடி.

பாடலின் இறுதி 'எது எமைப் பணிகொளும் ஆறு அது கேட்போம்' என்பதாகும். ஆண்டான் அடிமைத் திறத்தில் மிக உயர்ந்த நிலையைச் சுட்டுவதாகும் இது. தலைவனுடைய குறிப்பு அறிந்து தொழிற்படுதல் ஒரு நிலை. தலைவனுடைய மனநிலை இதுதான் என்று தனக்குத் தானே முடிவு செய்துகொண்டு தொழிற்படுவது இரண்டாவது நிலை. எவ்விதமான முடிவையும் தானே எடுக்காமல், தலைவனுடைய ஆணை வருகின்றவரை காத்து நிற்பது மூன்றாவது நிலையாகும். இந்த மூன்று நிலைகளும் சிறந்தவைதான் என்பதில் ஐயமில்லை. எவ்வளவு ஜாக்கிரதையாகப் பணி புரிந்தாலும் முதல் இரு

நிலைகளில் தவறு ஏற்பட வாய்ப்பு உண்டு. ஆனால், மூன்றாவது நிலையில் எக்காரணம் கொண்டும் தவறு நிகழ வாய்ப்பே இல்லை. அவனுடைய உத்தரவு வருகின்றவரையில் எவ்விதப் பணியும் செய்யாது காத்து நிற்பவர்களும், அவன் பணியையே செய்கிறார்கள் என்பது இந்நாட்டவரும் பிறநாட்டவரும் கண்ட உண்மையாகும். இந்த கருத்தை மேனாட்டின் தலைசிறந்த காப்பியக் கவிஞனாகிய ஜான் மில்டன் ஓர் அடியில் மிக அற்புதமாக விளக்குகிறான். 'அவன் சந்நிதியில் நிற்பவர்களும் அவன் பணியையே செய்கிறார்கள்' என்ற கருத்தில் 'They also serve who stand and wait' (Milton's Sonnet) என்று பாடியுள்ளான். அடிகளாருக்கும் வேற்று நாட்டில் வாழ்ந்த மில்டனுக்கும் இந்த அருங்கருத்து ஒரே மாதிரியாகத் தோன்றியது வியப்புக்குரியதாகும்.

375. முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்
பந்து அணை விரலியும் நீயும் நின் அடியார்
பழம் குடில்தொறும் எழுந்தருளிய பரனே
செம் தழல் புரை திருமேனியும் காட்டி
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே **8**

பந்தணை விரலி–பந்துகள் வந்து சாருகின்ற விரலினை உடைய உமாதேவி. பழங்குடில்–பழங்குடிசையாகிய உடம்பு.

இப்பாடலின் முதல் அடி 'முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்' என்பது ஆகும். முக்கூட்டுப் பரிமாணமுடைய இந்தப் பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்னர் வெறும் காலத் தத்துவம் ஒன்றுமட்டுமே இருந்தது என்பதை அடிகளார் 'ஞாலமே விசும்பே இவை வந்து போம் காலமே உனை என்றுகொல் காண்பதே' (திருவாச:47) என்று பாடுகின்றார். எனவே, பிரபஞ்சத்

தோற்றம் இல்லாமல் வெறும் காலமாக இருக்கும்போது அக்காலத் தத்துவத்திற்குத் தோற்றம், இருப்பு, மறைவு என்ற நிலைகள் இல்லை. எனவே, அடிகளார் 'முதல் நடு இறுதியும் ஆனாய்' என்று குறிப்பிடுவது, இப்பிரபஞ்சத்தையும் அதனை ஊடுருவி இருக்கும் இறைவனையுமே ஆகும். இப்பிரபஞ்சம் ஒன்றிற்குத்தான் தோற்றம், நிறைவு, மறைவு என்ற மூன்று நிலைகளும் உண்டு. இந்த மூன்றையும் கூறி, 'ஆனாய்' என்று குறிப்பது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இறுதியும் ஆனாய் என்பதில் உள்ள உம்மை 'முற்றும்மை' என்ற கொள்ளத் தேவையில்லை. இறுதியும் ஆனவன் என்றால் இறுதிக்கு அப்பாற்பட்ட ஒன்று இருப்பின்; அதுவும் ஆனவன் என்ற பொருளையும் தந்து நிற்கும். 'இறுதியும்' என்ற சொல்லால், தோற்றுவிக்கப்பட்ட பிரபஞ்சத்திற்குத்தான் இறுதி உண்டே தவிர, தோற்று வித்தவனுக்கு இறுதி இல்லை என்பது பெற்றாம்.

இறுதி இல்லை என்று கூறவே, தோற்றம் இல்லை என்பது தானே பெறப்படும். தோற்றம், இறுதி என்ற இரண்டும் இல்லாவிடினும், இடையே உள்ள இருப்பு நிலை மட்டும் அப்பொருளுக்கு என்றும் உண்டு.

முதல் நடு இறுதி என்று கூறுவதற்கு முன்னர், முந்திய என்ற சொல்லை அடிகளார் பெய்துள்ளார். அனைத்திற்கும் இறுதி ஏற்பட்ட பிறகும், அதாவது அனைத்தையும் அழித்தபிறகும், தான் ஒருவனே எஞ்சியுள்ளான். ஆதலால், இவ்வனைத்தும் மீட்டும் தோன்றுவதற்கு முன்னரும் அவன் உள்ளான் என்பது பெறப்படுகிற தன்றோ? இதனையே 'முந்திய' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

அடுத்து நிற்பது 'மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்' என்ற தொடராகும். பிரபஞ்சத்தைத் தோற்று வித்து, காத்து, அழிக்க வேண்டும் எனின், அதற்குரிய கர்த்

தாக்கள் மூவர் வேண்டும். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் தங்கள் கடமைகளைச் செய்கிறார்களே அன்றி, தங்களை அக்கடமைகளைச் செய்ய ஏவிய ஏவுதல் கர்த்தா யார் என்பதை அறிந்தார்கள் இல்லை என்கிறார்.

இப்பாடலில் வரும் மூவரும் என்ற சொல்லிற்கு, பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்று பொருள் கொள்ள விரும்பாத சைவப் பெருமக்கள், மூவர் என்று வரும் பிற இடங்களில் இந்திரன், மால், அயன் என்று அடிகளாரே கூறுவதை எடுத்துக்காட்டுகின்றனர்.

வேதத்தில் உருத்திரனுக்குக் கொடுக்கப்பட்ட இடம் மிக மட்டமானதாகும். பிற்காலத்தார் இந்த உருத்திரனையும் மூலப் பொருளான சிவபெருமானையும் ஒருவரே என்று கருதி இடர்ப்படலாயினர். வேதத்தில் வரும் உருத்திரன் அழித்தல் தொழிலைச் செய்பவன். ஆயினும், எந்த யாகத்திலும் அவிஷ் பெறும் தகுதி உடையவனல்லன். அன்றியும் யாக பூமியில் சிதறும் பொருள்களையும், பலியிடப்படாமல் காயப்படுத்தப்பட்ட விலங்குளையும் தனக்கென்று ஏற்றுக்கொள்ளும் தகுதிதான் ரிக் வேதத்தில் காணப்படும் உருத்திரனுக்கு உண்டு. ஆகவே, சிவனுக்கும் இவனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இந்திரன் முதலானவருக்குக் கொடுக்கப்படும். அவி உணவில் உருத்திரனுக்குப் பங்கில்லை. 'பசூநாம்பதி' (விலங்குகளுக்குத் தலைவன்) என்ற பட்டத்தை இருக்கு வேதம் உருத்திரனுக்குத் தருகின்றது என்றாலும், இந்திரன் முதலிய தெய்வங்களோடு உருத்திரனை வைத்து எண்ணவில்லை. இருக்கு வேதத்தில் ஒரு பகுதியும், கிருஷ்ண யஜுர் வேதத்தில் ஒருபகுதியாகிய ஸ்ரீருத்திரமும் அவன் அழித்தல் தொழிலைச் செய்பவன் என்பதைப் பேசுகின்றன.

வேதகாலத்திற்கு மிகவும் பிற்பட்ட காலத்தில், அதாவது புராண காலத்தில், மும்மூர்த்திகள் என்ற கருத்து வலுப்பெற்றுவிட்டது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகிய அனைவரும் மும்மூர்த்திக் கொள்கையை ஏற்றுக் கொண்டே பாடுகின்றனர்.

இப்பாடலில் அடிகளார் மும்மூர்த்திகள் யார் என்று பெயரிட்டுக் கூறவில்லை ஆயினும், பிற இடங்களில் அவர் கூறியதை வைத்துக்கொண்டு பொருள் கொண்டால், அழித்தல் தொழிலுக்கு உருத்திரன் அதிகாரி என்று கருத நேரிடும். எந்த இடத்திலும் இந்திரன் இப்பிரபஞ்சத்தை அழித்ததாகக் கதை ஒன்றும் இல்லை. எனவே மூவர் என்ற சொல்லுக்கு இந்திரன், நான்முகன், நாரணன் என்று பொருள் கொள்வது சரியன்று.

முதல் தெய்வங்கள் என்று சொல்லப்படும் உருத்திரன் முதலிய மூவருமே தம் தலைவனைத் தெரிந்து கொள்ளவில்லை என்றால் வேறு 'யாவர் மற்று அறிவார்' என்று அடிகளார் சொல்வது பொருத்தமேயாகும்.

அடுத்துள்ள 'பழங்குடில்தொறும் எழுந்தருளிய பரனே' என்பது, இந் நாட்டவரின் சமயத்தின் தனிச் சிறப்பை எடுத்து விளக்கும் பகுதியாகும். இந்நாட்டுப் பழைய சமயங்களாகிய சைவ வைணவம் தவிர, இங்கும் வெளிநாடுகளிலும் தோன்றிய எந்தச் சமயமும், மக்கள் பொருட்டு இறைவன் கீழே இறங்கி வந்தான் என்ற கருத்தைச் சொல்லவில்லை. ஏசு சமயம்கூட இந்த உலகை உய்விப்பதற்காகப் பிதா தன் ஒரே மகனை அனுப்பினான் என்றுமட்டுமே கூறுகிறது.

எல்லா உயிர்களும் மெய்ஞ்ஞானம் பெற்று அவனிடம் செல்ல வேண்டுமானால் அது ஏறத்தாழ இயலாத காரியம். அவருள் ஒரு சிலர்மட்டுமே மாபெருந் தவங்கள் செய்து, எல்லையற்ற இறையன்பு பூண்டு அவனை அடையலாம்.

இதற்கு மறுதலையாக இந்நாட்டவர் கண்ட பரம கருணையுடையவனாகிய இறைவன், தன்னால் படைக்கப் பெற்ற உயிர்கள் உய்கதி அடைய வேண்டுமென்று அவை இருக்குமிடம் தேடிச் செல்கிறான். அப்படிச் செல்பவன் கருணையின் வடிவமாகிய தாயையும் உடன் அழைத்தே செல்கிறான்.

எல்லாப் பற்றுக்களையும் நீக்கி, ஏகாக்கிர சிந்தையோடு—எந்நேரமும் திருவடி நினைவோடு வாழும்—அடியார்கள் வாழும் இடம் பழங்குடிலாகத்தான் இருக்கும். காரணம் குடில்பற்றிய நினைவோ அதனைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்க வேண்டுமென்ற நினைவோ இந்த அடியார்கள் மனத்தில் தோன்றியதில்லை. எனவே அதனைப் 'பழங்குடில்' என்றார்.

இதைவிடச் சிறப்பு என்னவென்றால் பிரபஞ்சத்தைப் படைத்து, அதில் தனு, கரண, புவன, போகங்களாகிய நான்கையும் படைத்து, அவை அனைத்தையும் தன்னால் படைக்கப்பெற்ற உயிர்களுக்குத் தந்துவிட்டுத் தான்மட்டும் சுடுகாட்டில் உறைபவன் அல்லவா அவன்? அப்படிப் பட்டவன் பந்தணை விரலியோடு தன் அடியார்கள் வாழும் பழங்குடிலில் சென்று தங்கிவிடுதல் புதுமை அன்று.

இவ்வாறன்றிப் பழங்குடில் என்பதற்கு அடியார்களின் 'இதய கமலம்' என்றும் பொருள் கொள்ளலாம். இந்த அடியார்கள், தான்—தனது என்ற அகங்கார—மமகாரம் அற்றவர்கள் ஆதலால், அவர்கள் பெற்ற உடலைப் பேணிக் காக்கும் வழக்கத்தை மேற்கொள்வதில்லை. எனவே, பழங்குடில் என்று அவ்வுடல்களைச் சொல்வதில் தவறு ஒன்றும் இல்லை.

அன்றி, மற்றொரு பொருளும் இதற்குக் கூறலாம். இவ்வடியார்கள் அனைவரும் வழிவழியாக எல்லையற்ற

எஜமான விசுவாசத்துடன் இத்தலைவனைத் தம் இதயத்தில் நிறுவி வழிபாடு செய்தவர்கள் ஆவர். இவ்வழிபாடு தலைமுறை தலைமுறையாக நடைபெறுதலின் அதில் ஓர் அடியாரின் உடம்பைப் 'பழங்குடில்' என்று கூறுவதும் பொருத்தமுடையதாகும்.

முதல் நடு இறுதி என்ற மூன்று நிலைகளை உடைய பிரபஞ்சம் கண்ணாலும் மனத்தாலும் காண்பதற்கும் கற்பனை செய்வதற்கும் உரிய ஒன்றாகும். ஆனால், இந்த மூன்றிற்கும் முற்பட்டு முந்தியதாய் நிற்கும் அல்லது அநாதியாய் நிற்கும் காலத் தத்துவத்தை மூவரும் அறிகிலர் என்ற இக்கருத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இம்மூவரும் முதல் தெய்வங்கள் எனினும், காலத்தத்து வத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். காலத்திற்குக் கட்டுப்பட்ட இவர்கள் காலாதீத மூர்த்தியாகிய இறைவனைக் காண்பது என்பது தருக்க ரீதியாக இயலாத காரியமாகும். அவர்களே காணமுடியாது என்றால், உலகிடைப் பிறந்து வாழும் ஏனையோர் காண்பது எங்ஙனம்?

அடியார்களுக்கு அதுவும் எளிதானது என்பதைக் குறிக்கத்தான் 'பழங்குடில்தொறும் எழுந்தருளிய பரன்' என்றார்.

ஒரே மூர்த்தியாயினும் ஒவ்வோர் அடியாரின் இயல்பிற்கு ஏற்ப அவர்கள் வேண்டும் உருவம் கொண்டு, அவர்கள் இதய கமலங்களுள் செல்கிறான்.

அதாவது, ஒரே பரன் பல்வேறு அடியார்களின் பல்வேறு பழங்குடில்களில் எழுந்தருளும்போது ஒரே வடிவு டன் சென்றான் இல்லை. பந்தணை விரலி உடன் இருப்பது உண்மையாயினும் அவன் அடியார்கள் விருப்பத்திற்கேற்ற வடிவு கொண்டு, அவர்களின் இதய கமலங்களில் புகுகின்றான்.

இந்த அருங்கருத்தைப் பழைய திருமுருகாற்றுப்படை

'வேண்டினர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்த ஆறே'
(திருமுருகாற்று :248–9)

என்று கூறிச்செல்கிறது.

இப்படிப் பல்வேறு வேடங்களில் புகுகின்ற இவன், அடிகளாரின் பழங்குடிலில் எந்த வேடத்தில் புகுந்து எந்த வேடத்தைக் காட்டினான் என்பதை அடிகளார் இதோ பேசுகிறார்.

முதலாவதாக, திருப்பெருந்துறையில் குருந்த மர நீழலே தான் உறைகின்ற இடம் என்று காட்டினான். அடுத்தபடியாக, தூரத்தில் இருந்து பார்த்த அடிகளாருக்குச் 'செந்தழல் புரை திருமேனி' காட்டினான். இன்னும் சற்று அருகில் சென்றவுடன், அந்தண குருநாதர் வேடத்தையும் காட்டினான். ஆக, அடிகளாரை ஆட்கொள்வதற்கு முன்னர், அவரைப் பொறுத்தமட்டில் அவருடைய பழங்குடிலில் என்ன என்ன நிகழ்ந்தது என்பதை மிக அழகாகக் காட்டி விட்டார்.

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் அவனைச் சென்று காண முயன்று காண முடியவில்லை. அப்படிப்பட்டவன் அடிகளாருக்குத் தானே வந்து காட்சி தந்ததால் அவரால் காண முடிந்தது.

376. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப் பொருளே உன தொழுப்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே
வண் திருப்பெருந்துறையாய் வழி அடியோம்
கண் அகத்தே நின்று களிதரு தேனே
கடல் அமுதே கரும்பே விரும்பு அடியார்
எண் அகத்தாய் உலகுக்கு உயிர் ஆனாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 9

நண்ணவும்–அணுகவும். கண்ணகத்தேநின்று களிதருதல்–கண்ணுட்பாவையாய் மகிழ்ச்சி விளைவித்தல். எண்–எண்ணம்.

'வான் பழித்து . இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்' (திருவாச: 351) என்பது போன்று முன்னரும் இறைவனுடைய எளிவந்த தன்மையை அடிகளார் பாடியுள்ளார். இங்கும் அதனைக் கூறவந்த அடிகளார், மற்றொரு புதுமையைப் புகுத்துகின்றார். விழுப்பொருளாகிய அவன், தான் இருந்த இடத்திலிருந்தே உயிர்வர்க்கங்களை, குறிப்பாக மனிதர்களை வாழச் செய்திருக்கலாம். அவன் இம் மண்ணுலகில் வந்துதான் அதனைச் செய்ய வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. பின்னர் ஏன் வந்தான்? மண்ணுலகில் அற்ப உயிர்களாகிய நம்மை நாடி அவன் வந்ததால் அவனுடைய பெருமையைக் குறைத்து மதிப்பிட முற்படலாமா? அவ்வாறு செய்யின் கிடைக்கும் பொருளின் தரத்தை அறியமுடியாத பைத்தியக்காரர்களாகிவிடுவோம்.

அதனாலேயே அந்த விழுப்பொருளுக்கு ஓர் இலக்கணம் கூறவந்த அடிகளார், 'விண்ணகத் தேவர்கள் கூட அவனைக் கண்டார்கள் இல்லை; அவன் இருக்கும் இடத்தை நாடிச் சென்றார்கள் இல்லை. காரணம் அவர்களால் அவனைக் காண முடியாது என்பது ஒன்று, அவனை நாடிச் செல்வதுகூட முடியாது என்பது மற்றொன்று' என்கிறார்.

தேவர்களுக்குக் கொடுக்கப்படாத ஒரு சிறப்பை மண்ணுலகத்தில் உள்ள அடியார்களுக்கு அடிகளார் வழங்குகிறார். தேவர்கள் விண்ணகத் தேவர்களே தவிர, இறைவனுக்கு நெருக்கமானவர்கள் அல்ல. ஆனால் அடியார்களோ எனின் இறைவனுக்கு மிக நெருங்கியவர்கள். தேவர்களினும் பல படிகள் மேம்பட்ட இவர்களை

'உன தொழும்பு அடியோங்கள்' என்ற சொற்களால் குறிப்பதன் மூலம் இவர்கள் இறைவனுக்கு அணுக்கர்கள் என்பதைக் குறிப்பித்தார் ஆயிற்று.

தொழும்பு என்ற சொல் அடியார் கூட்டத்தைக் குறிப்பதோடு இறைவனுக்குச் செய்யும் திருப்பணியையும் குறிக்கும். எனவே, 'தொழும்பு அடியோங்கள்' என்ற தொடர் மிகச் சிறப்பானதும், நுண்மையானதுமான ஒரு பொருளை உள்ளடக்கி நிற்கின்றது. எத்தனையோ காரணங்களுக்காக ஒருவரிடம் மற்றொருவர் அடிமையாகலாம். அடிமையாகின்ற மரபு, தமிழகத்தில் மட்டு மல்லாமல் மிகப் பழைய கிரேக்க, ரோமானிய, எகிப்திய நாகரிகங்களில்கூட உண்டு. ஆனால், இந்த அடிமைகள் அனைவரும் பொன்னுக்கோ, பொருளுக்கோ, உணவுக்கோ , வேறு ஏதோ அற்பப் பயன் கருதியோதான் அடிமையாயினர்.

ஆனால், 'தொழும்பு அடியோங்கள்' என்று அடிகளார் குறிப்பிடுவது ஒரு புது வகை அடிமைகளை யாகும். மேலே கூறப்பெற்ற பல நாகரிகங்களிலும் காணப்பெறும் அடிமைகள், உடலால் அடிமைகளே அன்றி, எண்ணத்தால் மனத்தால் சிந்தனையால் அடிமைகள் அல்லர். இதற்கு மாறாக, அடிகளார் குறிப்பிடும் அடிமைகள் எண்ணத்தால், மனத்தால், சிந்தனையால் இறைவனுக்கு ஆட்பட்டவர்களே தவிர அவர்கள் உடம்பு சுதந்திரமுடையதாகும். அப்படியானால், இவர்கள் அடிமைகள் ஆனது எவ்வாறு? தொழும்பு (இறைப்பணி) செய்தார்களாதலின் இறைவனுக்கு அடிமையாயினர்.

தேவர்கள் நண்ணவும் மாட்டாத அந்த விழுப்பொருள் மண்ணகத்தே (திருப்பெருந்துறையில்) அடியோங்கள் காணும் வடிவுடன் வந்தது. வந்து என்ன செய்தது

தெரியுமா? தொழுப்படியோமாகிய எம்மை வாழச் செய்தது.

இந்த இடத்தில் ஒரு சிறு ஐயம் தோன்றத்தான் செய்கிறது. இந்தத் தொழும்படியார்கள் யுகாந்த காலமாக, பரம்பரையாக வாழ்ந்து கொண்டுதானே இருக்கிறார்கள்? அப்படியிருக்க, அடிகளார் காலத்தில் திருப்பெருந்துறையில் வந்து அடியாரை வாழச் செய்தான் என்றால், இதற்கு முன்னர் இருந்த அடியாரை வாழச் செய்தவன் யார்? அடிகளார் காலத்திற்குப் பிற்பட்டு தோன்றப்போகின்ற தொழும்படியார்களை வாழச் செய்யப் போகின்றவன் யார்?

எந்த நிலையிலும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் உயிர்கள் வாழ்வது அவனருளால்தான். அப்படியிருக்க மண்ணிடை வந்து தொழுப்படியோங்களை வாழச் செய்தவன் என்று கூறுவதன் அடிப்படை என்ன?

முதலில் கூறப்பெற்ற உயிர்கள் வாழ்வது, வெந்ததைத் தின்று, வேளை வந்தபொழுது சாகும் விலங்கு வாழ்க்கை யாகும். அவர்கள் வாழ்கின்றார்கள் என்று கூறுவது உபசார வழக்கே ஆகும்.

இதன் மறுதலையாக, தொழுப்படியோங்கள் தாங்க ளாக வாழவில்லை, அவர்களை விழுப்பொருள் வாழச் செய்கின்றான். அதாவது, அவர்கள் தொழும்படியார்கள் ஆதலின், அவர்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் அவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுவிட்டமையால், அவர்கள் வாழ்கின்ற ஒவ்வொரு விநாடியும் எஜமானனுடைய இச்சைப்படியே நடைபெறுகிறது என்க. வாழச்செய்தான் என்ற தொடரின் நுண்மையான பொருள் இதுவேயாகும்.

அடிகளார் காலத்திற்கு முன்னும், எத்தனையோ முறை விழுப்பொருள் மண்ணிடை வந்துள்ளான். ஒவ் வொரு காலத்திலும் திருப்பணி செய்கின்ற அடியார்களை வாழச்செய்துள்ளான். இனி வரப்போகின்ற காலத்திலும் வாழச் செய்யப் போகின்றான் என்பது குறிப்பெச்சம்.

'செய்தானே' என்று இறந்த காலத்தால் கூறினா ரேனும் செய்கின்றவனே, செய்யப்போகின்றவனே என்று முக்காலத்திற்கும் அது பொருந்தி வரும்.

இக்கருத்துச் சரியானதுதான் என்பதை அடுத்துள்ள 'வழியடியோம், கண்ணகத்தே நின்று களிதரு தேனே' என்ற தொடர் நிறுவுகின்றது. அதாவது, வழியடியோங்கள் என்றதனால் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவந்த, வாழ்ந்துவருகின்ற, வாழப்போகும் அடியார்கள் அனைவரது கண்ணிலும் தேன் போன்று இனிமை பயக்கும் காட்சியை நல்குகிறான் என்றபடி.

விண்ணகத் தேவர்கள் நண்ண முடியாத விழுப்பொருளாகிய அவன் மண்ணகத்தே வந்தான் என்றால், அவன் இப்பொழுது எங்கே உள்ளான்? மண்ணகத்தில் எங்கே எப்பொழுது வந்தான்? இப்பொழுது அங்கே உள்ளானா என்ற வினாக்கள் தோன்றுமன்றோ, அவ்வினாக்களையெல்லாம் எதிர்பார்த்து 'விரும்படியார் எண்ணகத்தான்' என்கிறார்.

இந்தத் தொடரில், அடியார்கள் நடுநாயகமாக இருக்கிறார்கள். அவர்களது முயற்சியின் நோக்கம் அவனை அடைய வேண்டும் என்பதே ஆகும். மண்ணில், விண்ணில் அவன் எங்கு இருக்கிறான் என்பதை அறிந்துகொள்ள முடியாத இவ்வடியார்கள், அவன் இருக்குமிடம்பற்றிக் கவலைப்படாமல் எப்படியாவது அவனை அடைய வேண்டும் என்று விரும்பினார்கள். விரும்படியார் என்ற வினைத்தொகை முக்காலத்தையும் குறித்து நிற்கின்றது.

எனவே, இவர்கள் விரும்பத் தொடங்கினால் எங்கோ இருந்த அவன், விண்ணையும், மண்ணையும் கடந்து நின்ற அந்த விழுப்பொருளாகிய அவன், என்ன அதிசயம்! இந்த அடியார்களின் எண்ணத்துள் அகப்பட்டுக்கொள்கிறான் அதனையே 'விரும்பு அடியார் எண்ணகத்தாய்' என்றார்.

377. புவனியில் போய்ப் பிறவாமையின் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கி
திருப்பெருந்துறை உறைவாய் திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும் அலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்து எமை ஆட் கொள்ள வல்லாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே 10

புவனி–பூமி. அவமே–வீணாக.

கதிரவனுடைய ஒளிக்கதிர்கள் அவனிடமிருந்து புறப்பட்டு, பல கோடி மைல்கள் தாண்டிப் பூமியை வந்து அடைகின்றன. பூமியில் பட்டவுடன் அதில் உள்ள பொருட்களை ஒளி பெறச் செய்து விளக்குகின்றன. அதுவரை அப்பொருளிடம் காணப்படாத சூட்டையும் அப்பொருட்களிடத்து ஏற்றுகின்றன. ஆனால், இந்த ஒளிக்கற்றை பூமியிலோ, வேறு கிரகங்களிலோ படுவதற்கு முன்னர்ப் பல, ஆயிரம் காத தூரம் கடந்து வந்ததே! அந்த இடைவெளியை ஒளிமயமாக ஆக்கிற்றா? இல்லை. அந்த இடைவெளியைச் சூடேற்றியதா? இல்லை. ஒளியேற்றுதலும் சூடேற்றுதலும் கதிரவன் கதிர்களுக்கு இயல்பேயாயினும், பூமியில் வந்து அவை படும்வரை இந்தப் பணியைச் செய்வதில்லை.

சூரியக் குடும்பத்தில் இப் பூமியை அல்லாமல் செவ்வாய், புதன், குரு ஆகிய பல கோள்கள் இருக்கின்றனவே.

இவைகளும் அந்த ஒளிக்கற்றைகள் வரும் வழியில்தானே இருக்கின்றன. அக்கோள்களுள் சில கடுங்குளிருடன் எப்பொழுதும் இருக்கின்றன. அதே ஒளிக் கற்றைகள் செவ்வாய், புதன் ஆகிய கோள்களில் படும் பொழுது அளவுக்கதிகமான தாங்க முடியாத சூட்டை உண்டாக்குகின்றன. பூமி ஒன்றில்தான் ஒளி, உஷ்ணம் என்பவை ஓர் அளவுக்கு உட்பட்டு உயிர்கள் வாழ உதவி புரிகின்றன.

இதனை மனத்துட் கொண்டு அடிகளார் பாடலின் முற்பகுதியைப் பார்ப்போமாக.

இந்தப் பூமி 'சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' என்கிறார். அதாவது, இந்தப் பூவுலகம்தான் சிவன் வந்து உயிர்களை ஆட்கொள்கின்ற இடமாக அமைந்துள்ளது என்கிறார். இவ்வாறு கூறவே, இந்தப் பூமியல்லாத தேவலோகம், சத்யலோகம் முதலிய இடங்கள் சிவனுடைய எல்லைக் குட்பட்டு இருப்பினும், அவனுடைய அருள் அந்த உலகங்களில் வெளிப்பட்டு அவர்களை ஆட்கொள்வ தில்லை என்பது பெறப்பட்டுள்ளது. ஆதலால், வைகுந்தத்திற்குரிய நாரணனும், சத்திய லோகத்திற்குரிய நான்முகனும் கவலைப்படத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் 'எதுபற்றிக் கவலைப்படுகிறார்கள்' என்பதைப் பற்றி அடிகளார் விளக்கமாகப் பேசுகிறார்.

சிவனால் உய்யக் கொள்ளப்பட வேண்டுமானால், இந்தப் புவனியில் போய் பிறப்பதைத் தவிர வேறு வழி யில்லை. எனவே, மண்ணுலகில் சென்று பிறப்பு ஒன்றை எடுக்காமல், இங்கே இருந்துகொண்டு, நம் வாழ்நாளை வீணாளாகப் போக்குகின்றோமே என்று கவலையுறு கின்றனர்.

திருமாலும் நான்முகனும் பூமியில் வந்து பிறக்க வேண்டும் என்று ஆசைப்படுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஒரு காலத்தில் அவர்கள் எதிரே நின்ற தீத்தூணின் அடி முடி காண முற்பட்டுத் தோற்றார்கள் அல்லவா? அப்படிப்பட்டவர்கள் இந்தப் பூமியைப் பொறுத்தமட்டில் ஓர் அதிசயத்தைக் கண்டனர். தாங்கள் யாரைத் தேடிச் சென்றார்களோ அவன் இதோ புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறான். இது என்ன அதிசயம்! அவனியிலிருந்து புறப்பட்ட ஒன்று அவனுக்கு முன்னர் வெகு வேகமாக வந்துகொண்டிருக்கிறதே! அது யாது? சற்று நின்று நிதானித்தவுடன் ஒன்று விளங்கிவிட்டது. தாங்கள் தேட முயன்ற தலைவன்தான் இந்தப் பூமிக்கு வந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு முன்னர்க் கட்டியம் கூறுவதுபோல வருகின்ற அது யாது? கூர்ந்து நோக்கினவுடன் தெரிந்துவிட்டது. ஆம்! உயிர்களை உய்யக் கொள்ளவேண்டும் என்ற அந்தப் பெருமானின் அளப்பருங் கருணைதான் அவனுக்கு முன்னர் வந்து கொண்டிருக் கிறது. 'மெய்க்கருணையும் நீயும் அவனியிற் புகுந்து எமை ஆட் கொள்ள வல்லாய்' என்று அடிகளார் கூறுவது இதனையே ஆகும்.

ॐ ॐ ॐ

21. கோயில் மூத்த திருப்பதிகம்

[அநாதியாகிய சற்காரியம்]

திருப்பள்ளியெழுச்சியை அடுத்துள்ள இருபது பாடல் களும் முறையே கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம் என்ற தலைப்பின்கீழ் தொகுக்கப்பெற்றுள் ளன. இந்தத் தலைப்புகளை யார் தந்தார்கள் என்று தெரிய வில்லை. இதற்கு முன்னர் உள்ள பகுதிகளைப் பொறுத்த மட்டில் பாடல்களில் உள்ள தலைப்பே அப்பகுதிக் களுக்குத் தலைப்பாகத் தரப்பெற்றுள்ளது. ஆனால், இந்த இருபது பாடல்களிலும் அவ்வாறில்லை.

முதல் பத்துப் பாடல்களும் அந்தாதித் தொடையாக வந்து, பத்தாம் பாட்டின் இறுதிச்சொல் முதல்பாட்டின் முதற் சொல்லாக அமைந்திருத்தலைக் காணலாம். இந்தப் பத்துப் பாடல்களிலும் பொன்னம்பலமும், தில்லைக் கூத்தனும் பேசப்பெறுவதால் 'கோயில் பதிகம்' என்ற தலைப்புப் பொருத்தமானதே ஆகும். காரைக்காலம் மையாரின் இரண்டு பதிகங்களுக்கும் உள்ள மூத்த திருப்பதிகம் என்ற பெயரில் ஈடுபட்டு, இதற்கும் அப்படி ஒரு தலைப்புத் தரவேண்டும் என்று நினைத்து, கோயில் மூத்த திருப்பதிகம் என்ற பெயரை யாரோ தந்திருக்க வேண்டும். அந்நாட்களில் பதிகம் என்ற சொல் தாளத்தோடு பாடப்பெறும் பத்துப் பாடல்களுக்குரிய பெயராக இருந்தது.

தாளத்தோடு பாடப்பெறும் பதிக அமைப்பில் நாவரசர், சம்பந்தர் ஆகியோர் தோன்றுவதற்கு முன்னூறு ஆண்டுகள் முன்னரே முதன்முதலில் காரைக்காலம்மையாரால்

இரண்டு பதிகங்கள் பாடப்பெற்றிருந்தன. திருமுறைகள் தொகுக்கப்பெற்ற காலத்தில் அம்மையாரின் இரண்டு பதிகங்கள், இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி ஆகியவை மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. அம்மையாரின் பாடல்கள் தெரியவந்த காலத்தில் மூவர் முதலிகளின் திருப்பதிகங்கள், ஏற்கனவே முதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப் பெற்றுவிட்டன. எனவே, தாளத்தோடு பாடப்பெறும் அம்மையாரின் திருவாலங்காட்டுப் பதிகம் இரண்டையும் மூத்த திருப்பதிகம் என்று பெயரிட்டு வழங்கினர். மூத்த திருப்பதிகம் என்ற பெயர் வந்த வரலாறு இதுதான். இந்த அடிப்படை அறியாத சிலர் திருவாசகத்தில் வரும் பத்துப் பாடல்களுக்கு கோயில் மூத்த திருப்பதிகம் என்று பெயரிட்டது அறியாமையால் விளைந்ததாகும்.

ஆலங்காட்டில் ஆடுபவனைப் பாடும் அம்மையாரின் இருபது பாடல்களுக்கு மூத்த திருப்பதிகம் என்று பெயர் வந்ததால், தில்லையில் ஆடும் பெருமானைப் பாடும் திருவாசகப் பாடல்களுக்கும் இப்பெயர் பொருந்தும் என்று நினைத்து வைத்திருக்கலாம். இதிலும் ஒரு சிறு குறை உள்ளது. அம்மையாரின் பாடல் இருபது. அதற்கேற்ப இருபது பாடல்கள் இங்கும் இருக்க வேண்டும் என்று நினைத்தவர்கள், கோயில் மூத்த திருப்பதிகம் பத்து, கோயில் திருப்பதிகம் பத்து என இருபது பாடல்களைத் தொகுத்துவிட்டனர். ஆனால், கோயில் திருப்பதிகம் என்ற பெயரில் உள்ள பத்துப் பாடல்களும் திருப்பெருந்துறைப் பெருமானைப் பற்றியனவாகும்.

அன்றியும், பதிகம் என்றால், தாளத்தோடு பாடப்பெறும் பாடல்களாக இருத்தல் வேண்டும். திருவாசகத்தில் உள்ள இப்பகுதிப் பாடல்கள் இருபதும் தாளத்தோடு பாடப்பெறும் வகையில் அமையவில்லை.

எப்படிப் பார்த்தாலும் இத்தலைப்புகள் ஒரு சிறிதும் பொருந்தாதவை என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும்.

இத்தலைப்புகள் பொருத்தமின்றேனும், வேறு தலைப்புத் தந்து படிப்பவர்களைக் குழப்ப மனமின்மையான் எல்லாப் பதிப்புக்களிலும் காணப்பெறும் இத்தலைப்புக்களையே இங்கும் தந்துள்ளோம்.

'அநாதியாகிய சற்காரியம்' என்ற உள் தலைப்பு கொடுக்கப் பெற்றுள்ளது. இது முற்றும் பொருத்தமான தன்று.

378. உடையாள் உன் தன் நடுவு இருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதனால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்து எம்
முடியா முதலே என் கருத்து
முடியும்வண்ணம் முன் நின்றே 1

திருப்பெருந்துறை நிகழ்ச்சியில் நடைபெற்ற முக்கியமான இரண்டு செய்திகள் இங்கு நினைவுகூரப்பெற்றுள்ளன. குருநாதர் வடிவில் இருந்த திருப்பெருந்துறை நாயகர், தம் திருவடிகளில் வந்து வணங்கிய திருவாதவூரரை எதிரே உள்ள அடியார் கூட்டத்தின் நடுவில் இருக்குமாறு செய்தார். அப்படி அமர்வதற்குமுன், குருநாதரின் எதிரே கூட்டமாக அமர்ந்திருந்த அடியார்களை அடிகளார் தூரத்திலிருந்தே கண்டிருக்க வேண்டும். அடியார்கள் கூட்டமாக அமர்ந்திருப்பது, ஆலவாயிலிலும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் பல இடங்களில் அன்றாடம் காணும் காட்சியாகும். இப்படிக் கூடியுள்ள அடியார் கூட்டத்தை அமைச்சராகிய வாதவூரர் பாராமல்

இருந்திருக்க முடியாது. எனவே, அடிகளாரைப் பொறுத்த மட்டில் அடியார் கூட்டம் அடிக்கடி காணும் அன்றாட நிகழ்ச்சி ஆகும். அந்த நிலையில் திருப்பெருந்துறையில் காணப்பெற்ற அடியார் கூட்டம் தூரத்திலிருந்தே கண்டு கொண்டு வந்த அடிகளாருக்கு எவ்விதப் புதுமையையும் காட்டவில்லை.

ஆனால், என்ன அதிசயம்! அவர்களிடையே சென்று அமருமாறு குருநாதர் ஆணையிட்டார். அந்த அடியார் கூட்டத்திடையே மணிவாசகர் என்ற புதுப்பிறவி எடுத்த திருவாதவூரர் அமர்ந்தார்; அமர்ந்த அந்த விநாடியே அடிகளார் ஒரு புதிய அநுபவத்தைப் பெற்றார். அவருடைய பொறி, புலன்களை எல்லாம் அடக்கி, மனத்தைத் தொழிற்படாமல் செய்து, சிந்தையில் தம் திருவடி வந்து தங்குமாறு செய்தது யார்? குருநாதர்தான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இத்தகைய ஓர் அநுபவத்தை அடிகளார் இதுவரை பெற்றதில்லை. அவரைச் சுற்றிலும் அமர்ந்துள்ள அடியார் களின் சித்தத்திலிருந்து புறப்பட்ட நுண்மையான அதிர்வுகள் ஒரே விநாடியில் இதனைப் பெற உதவின. அடியார் நடுவுள் இருக்கும் ஆனந்தம் ஈடு இணையற்றது, வீடு பேற்றிற்குச் சமமானது என்பதை உணர்ந்துகொண்ட அடிகளார் தாம் இனி அவர்களுடனேயே தங்கப் போவதாகவும் அந்த அதிர்வுகள் என்றும் வழிகாட்டும் என்றும் கருதிக்கொண்டிருந்த அந்த விநாடியில் எல்லோரும் மறைந்துவிட்டனர். தம்மை மறந்து ஆனந்தத்தில் ஈடுபட்டிருந்த அடிகளார் கண்களைத் திறந்தவுடன் பெரிய அதிர்ச்சிக்கு உள்ளாயினார். மறைந்த அடியார் கூட்டத்தோடு தம் மனத்திடைத் தோன்றிய அமைதியும் மறைந்துவிட்டதை அறிந்த அடிகளார் பலவாறு புலம்புகிறார்.

அந்தத் துயரத்தினிடையேயும், குருநாதர் கூறிய ஓர் ஆணை நினைவுக்கு வருகிறது. அந்த ஆணை "கோலமார் தருப்பொதுவினில் வருக" (திருவா. 2: 128) என்பதாகும்.

திருப்பெருந்துறை நிகழ்ச்சி நடைபெற்ற பல நாட்கள் சென்ற பின்னர் ஒவ்வொரு தலமாக வணங்கிக்கொண்டு இப்பொழுது தில்லைக்கு வந்துவிட்டார்.

தில்லையுள் நுழைந்து கூத்தனைத் தரிசித்தவுடன் பழைய நினைவுகள் அலையலையாக மனத்திடை எழுகின்றன. அவ் உணர்ச்சித் தொகுப்பின் பயனாக வெளிப்படுவது இப்பாடலாகும்.

அடியார் கூட்டத்திடை இருந்ததும், குருநாதர் 'பொது வினில் வருக' எனப் பணித்ததும் ஒரே சமயத்தில் நிகழ்ந்த வேறுபட்ட இரண்டு செயல்களாகும். நிகழ்ந்தவற்றை அசைபோடும் மனம், பழைய நிகழ்ச்சி ஒன்றைச் சிந்திக்கும்பொழுது அதனோடு தொடர்புடைய ஏனையவற்றையும் நினைத்தல் இயல்பாகும். இதனை மனவியலார், தொடர்புடைய எண்ணங்கள் மனத்தில் ஓடுதல் (association of ideas) எனக் கூறுவர்.

இந்த அடிப்படையில், பொதுவினில் வந்தவுடன் அடியார் கூட்டம் நினைவுக்கு வருகிறது. அக்கூட்டத் தினிடையே தாம் இருக்கும் வாய்ப்புப் பெற்றதும் நினைவுக்கு வருகிறது. அவர்களிடையே அப்படி இருக்கும் பொழுது பெற்ற அனுபவமும் நினைவுக்கு வருகிறது. எனவே, அடியார் கூட்டத்தினிடையே இருக்கும்படியான வாய்ப்பை மீண்டும் தமக்கருள வேண்டும் எனக் கூத்தனை வேண்டுகிறார்.

'உடையாள் உன்தன் நடுவு இருக்கும், உடையாள் நடுவுள் நீயிருத்தி' என்ற அடி மிக நுண்மையான ஒரு கருத்தை வெளிப்படுத்துவதாகும். அவள் நடுவுள் நீ இருக்கின்றாய், உனது நடுவில் அவள் இருக்கின்றாள்

என்றால் என்ன பொருள்? இதனை அகம், புறம் எனக் கொண்டு வியாப்பியம், வியாபகம் என்றெல்லாம் பொருள் கூறியுள்ளனர்.

உண்மையில் இதன் பொருளை விளங்கிக்கொள்ள வேண்டுமானால், ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங் களையும் (பூப் பக்கம், தலைப் பக்கம்) மனத்துள் கொண்டு வரவேண்டும். நாம், புரிந்துகொள்வதற்கு பூப் பக்கம், தலைப் பக்கம் என்று குறிப்பிடுகின்றோமே தவிர, உண்மையில் இவை இரண்டும் சேர்ந்ததே நாணயமாகும். இவை இரண்டு பக்கங்களையும் தவிர்த்து நாணயம் என்று தனியே இல்லை. நாணயத்திலிருந்து எவ்வாறு ஒரு பக்கத்தைப் பிரித்து எடுக்க முடியாதோ, அதே போன்று சிவத்திலிருந்து சக்தியையும்,. சக்தியிலிருந்து சிவத்தையும் பிரிக்க முடியாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். உடையாளும் உடையானும் சிவசக்தி சொரூபமாக உள்ளனர்.

இறைவன், இறைவி இலக்கணத்தை இவ்வளவு அழகாக எடுத்துக்கூறிய அடிகளார், அந்தச் சிவசக்தி தம்முள்ளே இருக்கின்றது என்பதை எடுத்துக் கூறியுள்ளார். 'இருப்பதானால்' என்ற சொல் சற்று வியப்பானதாகும். 'இருப்பது உண்மையானால்' என்பது இதன் பொருளாகும். இருப்பது உண்மையானால் என்று, யாரை நோக்கி இந்த வினாவை எழுப்புகின்றார்? தமக்கு அருள் செய்த குருநாதரைப் பார்த்தே, 'ஐயனே! இறைவன் இறைவி வடிவாக உள்ள நீ என்னுள் இருக்கிறாய் என்பதை அடிக்கடி உணர்கின்றேன். என் சித்தத்துள் நீ புகுந்ததை அடிக்கடி நினைவு கூர்கின்றேன். இருந்தாலும், என்னுள் புகுந்து நீ தங்கியிருப்பது உண்மையானால் அதற்குள் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்க வேண்டும். இதுவரை அவை நடைபெறவில்லையே! அதனால், நீ என்னுள் இருப்பதையும் ஐயப்படுகின்றேன்' என்ற கருத்தில் 'நீங்கள் இருவரும் என்னுள் புகுந்திருப்பது உண்மையென்றால்,

அந்தத் திருப்பெருந்துறையில் நடைபெற்றதைப்போல அடியார் நடுவுள் நானிருக்கும் அருளைப் புரியவேண்டும்' என்று வேண்டுகிறார். 'அருளைப் புரியாய்' என்று கூறி நிறுத்தாமல் 'பொன்னம்பலத்தெம் முடியா முதலே' என்று கூறுவதால் பெருந்துறையில் 'கோலமார் திருப் பொதுவினில் வருக' என்று ஆணையிட்டதை நன்றாக நினைவில் கொண்டே இப்பாடலை அருளிச்செய்கின்றார்.

அதாவது, பெருந்துறையில் அடியார் நடுவுள் இருக்கும்போதுதானே பொதுவினில் வருக என்று ஆணையிட்டாய்? இதோ இப்பொழுது உன் ஆணைப்படி வந்துவிட்டேன். அதனோடு தொடர்புடைய நடுவுள் இருக்கும் அருளை நீ புரியவேண்டும் என்ற கருத்தைக் கூறுபவர்போலப் புரியாய் என்ற சொல்லுக்குப்பின் பொன்னம்பலம் என்ற சொல்லை வைக்கின்றார்.

379. முன் நின்று ஆண்டாய் எனை முன்னம்
யானும் அதுவே முயல்வு உற்றுப்
பின் நின்று ஏவல் செய்கின்றேன்
பிற்பட்டு ஒழிந்தேன் பெம்மானே
என் என்று அருள் இவர நின்று
போந்திடு என்னாவிடின் அடியார்
உன் நின்று இவன் ஆர் என்னாரோ
பொன்னம்பலக் கூத்து உகந்தானே 2

முன் நின்று ஆண்டாய்–உருவாக எழுந்தருளி ஆட்கொண்டாய். அதுவே முயலுற்று–அதனையே திரும்பவும் பெற முயன்று. இவர நின்று–மேற்படத் தான் அதனுள் அடங்கியிருந்து.

சென்ற பாடலில் கூறப்பெற்ற கருத்தே இங்கும் தொடர்கின்றது. திருப்பெருந்துறையில்கூடக் குருநாதராய் இருந்தவர் அடியார் கூட்டத்திடையே சென்று அமர்க என்று வாய்திறந்து ஆணையிடவில்லை. அவருடைய குறிப்பு, சைகை என்பவற்றால்மட்டுமே அடியார் கூட்டத்தினிடையே அமருமாறு பணித்தார். இடையே

வந்த இவர் யார் என்று அந்த அடியார்கள் அப்பொழுதே கூடக் கேட்டிருப்பார்கள். ஆனால், அவ்வாறு கேட்காமைக்குக் காரணம் குருநாதர் எதிரே அமர்ந்திருந்ததுதான். குருநாதர் அமர்ந்திருக்கும்போது புதிதாக வந்த ஒருவர் தம்மிடையே வந்தார் என்றால், வாய்விட்டுக் கூறாவிடினும் குருநாதர் அதை அனுமதிக்கிறார் என்று நினைந்து வாளா இருந்துவிட்டனர். ஆனால், இப்பொழுது நிலைமை வேறு. இப்பொழுது குருநாதர் நேரடியாக இல்லை.

சென்ற பாடலில் அடிகளார் வேண்டிக்கொண்டபடி அவர் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் பொன்னம்பலத்தான் புரிந்தாலும், ஒரு புதிய சிக்கல் தோன்றும் என்று அடிகளார் கருதுகிறார்.

பொன்னம்பலத்து முழுமுதல், அடியார் நடுவுள் சென்று இருக்கும் அருளைப் புரிந்ததாக வைத்துக் கொண்டால், என்ன நிகழ்ந்திருக்கும்? அடிகளார், அடியார் நடுவுள் புக முயன்றிருப்பார். முன்பின் அறிமுகம் இல்லாத இவரைத் தம்முள் ஒருவராக அவர்கள் எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும்? எனவே, நுழையப்போகும் இவரை நிறுத்தி 'இவன் யார்' என்று கேட்கமாட்டார்களா?

இந்த ஐயம் அடிகளார் மனத்தில் வலுவாகத் தோன்றி யவுடன் இந்தச் சிக்கலுக்கு ஒரு வழி காணமுற்படுகிறார். பாடலில் வரும் 'பெம்மானே' என்பது முதல் 'போந்திடு' என்பதுவரை உள்ள பகுதியை 'பெம்மானே! அருள் இவர நின்று என் போந்திடுக! என்னாவிடில்' என்ற முறையில் கொண்டு கூட்டுச் செய்து பொருள் காண்பது நலம். இதன் பொருள், 'பெம்மானே! உன் அருள் என்பால் இவர (பொருந்த) நின்று (அடியார் கூட்டத்துள் நுழையாமல் ஏன் நின்று விட்டாய் என்று கேட்டுவிட்டு), 'போந்திடு என்னாவிடில்' (உடனே உள்ளே நுழைவாயாக என்று கூறாவிட்டால்' என்றவாறாம். ஐயனே இவர்கள் நடுவே இருக்குமாறு முன்னர் அனுமதித்த நீ இப்பொழுதும்

எனக்கு அருள் செய்யும் முறையில் அடியார்கள் அனைவரும் அறிந்து கொள்ளுமாறு 'போந்திடு உள்ளேவரப் புறப்படுவாயாக- என்று அருளுவாயாகில் இப்புதியவன் யார் என்ற வினாவை இவர்கள் எழுப்பமாட்டார்கள்'.

380. உகந்தானே அன்பு உடை அடிமைக்கு
உருகா உள்ளத்து உணர்வு இலியேன்
சகம் தான் அறிய முறையிட்டால்
தக்க ஆறு அன்று என்னாரோ
மகம் தான் செய்து வழி வந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்கு உன்
முகம் தான் தாராவிடின் முடிவேன்
பொன்னம்பலத்து எம் முழு முதலே 3

சகம்–உலகம். தக்கஆறு–தக்க நெறி. மகம்–யாகம். முகம்தாராவிடின்–கருணை செய்யாவிடின்.

'உன்பால் அன்புடைய அடிமையாகிய என்னை உகந்து ஏற்றுக் கொண்டவனே! நீ ஏற்றுக்கொண்ட பின்னரும் உருகா உள்ளத்தை உடையவனாக இருக்கிறேன். உன்னைப்பற்றிய உணர்வு ஒரு சிறிதும் இல்லாதவனாக இருக்கிறேன். இப்படி இருந்தும் உன்பால் அன்புகொண்டு அடிமை செய்ய வேண்டும் என்று முயலத் தொடங்கியவுடன் என்னை உகந்து ஏற்றுக் கொண்டவன் அல்லவா நீ ! இப்பொழுது நீயும் நின் அடியார் கூட்டமும் என்னை இங்கே விட்டுப் போய்விட்டது நியாயமாகுமா என்று உலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் அறியும்படியாக முறையிடுகின்றேன். இந்த முறையீட்டைக் கேட்பவர்கள் யாரும் இம்முறையீடு நியாயமானதன்று என்று சொல்லமாட்டார்களா?' அவர்கள் முறையன்று என்று சொல்வதற்குக் காரணம் என்ன? இந்த அடிமையை நீ உகந்து ஏற்றுக்கொண்ட பின்னரும், என் உள்ளம் உருகவில்லை; உணர்வு நிரம்பவில்லை- ஆதலால்தான் நீ விட்டுச் சென்றாய் என்பதை நன்கு

அறிந்த உலகத்தார் என் முறையீடு நியாயமானதன்று என்று சொல்வதற்கு இடமிருக்காது' என்கிறார்.

மூன்றாவது அடியின் பொருள் விளங்குமாறில்லை.

381. முழு முதலே ஐம் புலனுக்கும்
மூவர்க்கும் என் தனக்கும்
வழி முதலே நின் பழ அடியார்
திரள் வான் குழுமிக்
கெழு முதலே அருள் தந்து இருக்க
இரங்கும் கொல்லோ என்று
அழும் அதுவே அன்றி மற்று என்
செய்கேன் பொன்னம்பலத்து அரைசே 4

முழுமுதலே–முதற்காரணனே. வழி முதல் – நிமித்த காரணன். கெழுமுதல்–நிறைவாகப் பொருந்துகின்ற முதல்வனே.

'அரி, அயன், உருத்திரன் என்று மூவர்க்கும் முதல்வனாய் நின்றவனே! ஐம்பூதங்கள் தொடங்கி எல்லாவற்றிற்கும் முதற்காரணமாய் உள்ளவனே! எனக்கும் வழிவழியான என் முன்னோர்க்கும் மூலப்பொருளாய் உள்ளவனே!'

'இன்றுவரை நின்னால் ஆட்கொள்ளப்பெற்ற பழவடியார்கள் அனைவருக்கும் உன்னுடைய அருளை நிறைவாக (கெழுமுதல்) நீ தந்திருக்க, அதனை அனுபவித்துக் கொண்டு வானிடைக் குழுமிள்ளயுள்ளனர்'.

'அவர்கள் அவ்வாறு இருக்கையில், நின் அருளைப் பெற்று அவர்களோடு கூடமுடியாத நான், இந்த உலகிடை அமர்ந்துகொண்டு என்றாவது ஒரு நாள் எனக்கும் நீ இரங்குவாயோ என்று அழுவது தவிர வேறு என்ன செய்யமுடியும்' என்றபடி.

382. அரைசே பொன்னம்பலத்து ஆடும்
அமுதே என்று உன் அருள் நோக்கி
இரை தேர் கொக்கு ஒத்து இரவு பகல்

ஏசற்று இருந்தே வேசற்றேன்
கரை சேர் அடியார் களி சிறப்பக்
காட்சி கொடுத்து உன் அடியேன்பால்
பிரை சேர் பாலின் நெய் போலப்
பேசாது இருந்தால் ஏசாரோ 5

ஏசற்று–வருந்தி. வேசற்றேன்–வாடினேன். கரை–முத்தி. பிரைசேர் பாலில் நெய் என்றது வெளிப்பட்டும் வெளிப்படாதிருக்கும் நிலையை.

இரைதேர் கொக்கு, ஒரு காலைத் தூக்கிக்கொண்டு, ஆடாது அசையாது, தனக்கு உணவாக மீன் எப்போது தன்பால் வரும் என்று நிற்கும் நிலையைக் குறித்தவாறு!. மீன் தன் திசையில் வருவதை நோக்கிக் கொக்கு காத்திருப்பது போல் இறைவன் திருவருள் தம்மாட்டு எப்போது வரும் என்று காத்துக்கொண்டிருக்கும் நிலையைப் பேசுகிறார் அடிகளார். பல சமயங்களில் காலை நேரத்தில் நிற்கத் தொடங்கிய கொக்கு, மாலைவரை ஒரு மீன்கூடத் தன்பால் வாராமையின் உடலும் மனமும் நொந்து வாடுவதுபோல உன் திருவருள் என்பால் வாராமையின் உள்ளம் நொந்து (ஏசற்று) உடல் தளர்ந்தேன்(வேசற்றேன்) என்கிறார்.

'ஐயனே! பிறவிக்கடலை நீந்தி உன் திருவடியாகிய கரையை அடைந்த அடியார்க்கு வெளிப்பட்டுக் காட்சி தந்தாய். அதன் பயனாக அவர்கள் உள்ளம் களி சிறந்தது. ஆனால், அடியேனாகிய என்னைப் பொறுத்தவரையில் நீ வெளிப்பட்டபாடில்லை. அந்த அடியார்களைப் பொறுத்த மட்டில் வெளிப்பட்டுக் காட்சி தந்த நீ, என்னைப் பொறுத்தவரை பிரைசேர் பாலின் நெய்போல வெளிப் படாமல் உள்ளாய்.

எல்லா உயிர்களினுள்ளும் அந்தர்யாமியாய், பாலின் நெய்போல நீ மறைந்து உறைகின்றாய். உன்னை வெளியே கொணர்வதற்கு உன் திருவருளாகிய பிரைமோர் தேவைப் படுகின்றது. என்னைப் பொறுத்தவரையில் திருப்பெருந்

துறையில் எனக்குக் குருவருள் என்ற பிரைமோர் இடப்பட்டு விட்டது. ஆனாலும் வெண்ணெய், தோன்றியும் தோன்றாமலும் இருக்கும் இளந்தயிர் போல நீ இப்போது வெளிப்பட்டும் வெளிப்படாமலும் இருக்கின்றாய். அதாவது சில சமயங்களில் நீ வெளிப்பட்டு அருள்செய்வதை என்னால் உணரமுடிகின்றது. பிரையிடப்பட்ட பாலில் சில இடங்களில் வெண்ணெய் வெளிப்பட்டது போன்றதாகும் இது. அதே பாலில் சில பகுதிகளில் வெண்ணெய் வெளிப் படாது நிற்பதுபோலச் சில நேரங்களில் நீ வெளிப்பட்டு அருள்செய்யாமல் இருக்கின்றாய் என்றவாறு.

383. ஏசா நிற்பர் என்னை உனக்கு
அடியான் என்று பிறர் எல்லாம்
பேசா நிற்பர் யான் தானும்
பேணா நிற்பேன் நின் அருளே
தேசா நேசர் சூழ்ந்து இருக்கும்
திருவோலக்கம் சேவிக்க
ஈசா பொன்னம்பலத்து ஆடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே 6

பேணாநிற்பேன்–விரும்புவேன். தேசா–ஒளியுடையவனே. நேசர்–அன்பர்.

'பெருமானே! நான் நின் திருவருள் ஒன்றையே நம்பி அதைப் போற்றி நிற்கின்றேன். அதனை அறிந்தோ, அறியாமலோ உலகத்தார் எல்லாம் நான் உன் அடியவன் என்று பேசுகிறார்கள். இந்த நிலையில் நின் திருவருள் கைகூடாமல் நான் அல்லலுறத் தொடங்கினால் உலகத்தார் நம் இருவரையுமே ஏசுவார்கள். இவ்வளவு சிறந்த அடியானாக ஒருவன் இருந்தும், அவன் துயர்துடைக்க நீ முன்வரவில்லை என்று உன்னை ஏசுவார்கள். இவன் துயரைக்கூடத் துடைக்காத ஒருவனுடைய திருவருள் வேண்டுமென்று இவன் ஏன் காத்து நிற்கின்றான் என்று என்னை ஏசுவார்கள்.

'இந்த ஏச்சுக்கள் வாராமல் இருக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. பொன்னம்பலத்தில் ஒளிவடிவாய் இருப்பவனே! அடியார்கள் சூழ்ந்திருப்ப, நடுவே கொலு வீற்றிருக்கும் உன்னிடம் என்னை வருமாறு பணிக்கும் வழி ஒன்றுதான் அது. இனியாவது என்பால் இரக்கம் கொண்டு அதனை நீ செய்யவேண்டும்' என்றவாறு.

384. இரங்கும் நமக்கு அம்பலக் கூத்தன்
என்று என்று ஏமாந்திருப்பேனை
அரும் கற்பனை கற்பித்து ஆண்டாய்
ஆள்வார் இலி மாடு ஆவேனோ
நெருங்கும் அடியார்களும் நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வர எங்கள்
வாழ்வே வா என்று அருளாயே 7

என்றென்றும்–பலகாலும் எண்ணி. அருங் கற்பனை–இல்லாத கற்பனை. ஆள்வார் இலி மாடு–உடையவன் அற்ற ஊர் மாடு. நிலாவி–விளங்கி.

'எங்கள் வாழ்வுக்கு முதலாகிய பெருமானே முன்னர்த் திருப்பெருந்துறையில் சாதாரண மனிதர்களுக்குரிய, மனத்தில் தோன்றும் சராசரிக் கற்பனைகளோடு உன்னை நெருங்கினேன். ஒரே விநாடியில் என் மனத்தில் இருந்த ப்ழைய கற்பனைகள் போக, இறையனுபவம் ஆகிய அரிய புதிய கற்பனைகள் (புதிய சிந்தனைகள்) மனத்தில் தோன்றுமாறு செய்து, என்னை ஆட்கொண்டாய்'.

'என்பால் தோன்றிய அருங்கற்பனைகளைச் செம்மை யான வழியினில் செலுத்த அப்பொழுது நீ என்னுடன் இருந்தாய். அந்தப் புதிய கற்பனைகள் தோன்றியவுடன், எல்லையற்ற பெருமிதம் கொண்டேன் நான். ஆனால், திடீரென்று நீ மறைந்துவிட்டாய். கற்பனைகள் என்பால் நின்றுவிட்டன; அவற்றை வழிநடத்தும் நீ இங்கில்லை.

மூக்கணாங்கயிறைப் பிடித்து ஓட்டுபவர் இல்லாத மாடு போல் ஆகிவிட்டேன்'.

'இதன் பயனாக அன்று அருள் செய்த நீ மறைந்து விட்டாலும், அம்பலக்கூத்தன் இன்றில்லாவிடினும் நாளை முன்போல் இரங்கி நமக்கருள்செய்வான் என்று அன்றாடம் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து நிற்கின்றேன்'.

'ஐயனே! அடியார்களும், நீயும் நெருங்கி இருக்கும் முன்றிலில், நானும் வரலாம் என்று ஆணையிடுவாய் என்று எதிர்பார்த்து நிற்கின்றேன்' என்றவாறு. இது பழைய திருப்பெருந்துறை நிகழ்ச்சியையே நினைவுகூர்ந்து பாடியதாகும்.

ஆள்வார் இலி மாடு என்பதனைக் 'கொண்டிக் காளை' என்று இக்காலத்தார் கூறுவர். அதாவது, மூக்கணாங் கயிற்றைப் பிடித்து வழிநடத்தும் தலைவனின்மையால் தன் விருப்பம்போல் சுற்றித்திரியும் காளையையே குறிப்பிடுகின்றார். இப்பொருளை விட்டுவிட்டு 'மாடு' என்பதற்கு 'செல்வம்' என்று பொருள்கொண்டால் இந்த உவமை சிறப்பை இழந்து நிற்பதைக் காணலாம்.

385. அருளாது ஒழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர் இங்கு
பொருளா என்னைப் புகுந்து ஆண்ட
பொன்னே பொன்னம்பலக் கூத்தா
மருள் ஆர் மனத்தோடு உனைப் பிரிந்து
வருந்துவேனை வா என்று உன்
தெருள் ஆர் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனால் சிரியாரோ 8

மருள்–வாசனையால் விளைந்த மயக்கம். தெருள் ஆர் கூட்டம்–தெளிவுடைய அன்பர்கள் கூட்டம்.

இதற்கு முன்னர்ச் சில பாடல்களில் அடியார் கூட்டத் திடையே திருவோலக்கம் கொண்டிருக்கும் பெருமான் எதிரே தானும் செல்லவேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்டார். அது உடனே கைகூட வேண்டும் என்று எதிர்பார்த்தார். அது கைகூடுவதற்குத் தாம் எடுக்க வேண்டிய முயற்சி எதுவுமில்லை என்பதை உணர்ந்தார். அவ்விருப்பம் நிறைவேறவேண்டுமானால் அதற்கு ஒரே வழி, அவன் அருள் கிட்டுதலேயாகும்.

எவ்வளவு வேண்டியும், அவன் அருள் கிட்டவில்லை ஆதலால் அடிகளார் மனம் நொந்து தொய்வடைகின்றது

அடியார் கூட்டத்திடை இருந்தபொழுது, அடிகளாரின் மனம் தெளிவோடு இருந்தது. அந்தத் தெளிவில் இன்பமும், உறுதியும் கலந்திருந்தன. இப்பொழுது அக்கூட்டம் இல்லை ஆதலால், தம்முடைய மனத்தை மருளார் மனம் என்கிறார் அடிகளார். தெளிவடையாமல் குழம்பியுள்ள மனத்தை, மருண்ட மனம் என்று கூறுதல் மரபு.

அப்படி மருண்ட மனமுடைய ஒருவனை எவ்வாறு தெளிவிப்பது? தெளிந்த மனமுடைய கூட்டத்தை இவனுக்குக் காட்டிவிட்டால் இவனுடைய மருளார் மனம் தெருளார் மனமாக மாறிவிடும்.

தெருளார் கூட்டத்தில் சேராமல், மருளார் மனத்தோடேயே சாக நேரிட்டால், ஏனையோர் சாவிற்கும் இவருடைய சாவிற்கும் வேறுபாடு இல்லையாய் முடியும்.

திருப்பெருந்துறையில், ஆட்கொள்ளப்பெற்ற ஒருவர், அடியார் கூட்டத்திடை இருக்கும் வாய்ப்பைப் பெற்ற ஒருவர், எல்லாவற்றையும் இழந்து, மருளார் மனத்தோடு செத்தால், காண்பவர் சிரிக்கமாட்டார்களா? மிக உயர்ந்த நிலையில் இருந்த ஒருவர் இப்படிச் சாதாரண மனிதர் அடையும் நிலையை அடைந்துவிட்டாரே என்று நினைத்தவுடன் இதனைக் காண்பார், இரங்குவதற்குப்

பதிலாகச் சிரிப்பார்கள் அது ஏன்? இவர் ஆட்கொள்ளப் பெற்றது உண்மையாயிருப்பின் இத்தகைய சாவு வந்திருக்காது. எனவே இவர் ஆட்கொள்ளப் பெற்றது பொய் என்று கூறிச் சிரிப்பார்கள்.

386. சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டு உன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வேறு இருந்து உன் திருநாமம்
தரிப்பார் பொன்னம்பலத்து ஆடும்
தலைவா என்பார் அவர் முன்னே
நரிப்பு ஆய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே 9

தேனிப்பார்–தியானிப்பார்கள். வெவ்வேறு இருந்து உன் திருநாமம் தரிப்பார்–திருவைந்தெழுத்தை ஓதுவார்கள். நரிப்பாய்–துன்புற்று இருத்தல். இது பிராந்திய வழக்குச் சொல்.

இப்பாடலின் முதல் மூன்று அடிகளில் சொல்லப் பெற்ற சொற்களுக்கு நேரிடையாச் சொற்பொருள் கண்டு கூறுதல் பொருத்தமுடையது அன்று. இறையனுபவ முதிர்ச்சியில் விளையும் ஆனந்த வெளிப்பாடு அல்லது இறைப்பிரேமைபற்றிக் (divine ecstasy) கூறும் சொற்களாகும் இவை. (இதன் விரிவை திருவாசகம் சில சிந்தனைகள் பகுதி (1) பக்கம் 207, 208 ல் காணலாம்.

சாதாரணமாக, ஒருவரோ பலரோ சிரிக்கின்றார்கள் களிக்கின்றார்கள் என்று கூறினால், அதற்குரிய காரணம் ஏதோ ஒன்றிருத்தல் வேண்டும். உள்ளத்துள் மகிழ்ச்சியை உண்டாக்கும் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றால், அங்கே சிரிப்புத் தோன்றும். அந்த நிகழ்ச்சி இன்னும் ஆழமாகச் சென்று ஆழ்மனத்தைத் தொட்டால் களிப்புத் தோன்றும். சிரிப்பு, களிப்பு இரண்டையும் தாண்டி உள்ளத்தின் ஆழமான பகுதியில் ஒரு தாக்கம் ஏற்படும்பொழுது,

'தேனித்தல்' ஏற்படுகின்றது. 'தேனித்தல்' என்பது தியானம் என்ற சொல்லின் பரியாயச் சொல் ஆகும். சிரிப்பு, களிப்பு என்பன தோன்றி, நின்று மறையும் இயல்புடையன. இதனெதிராக தேனித்தல் அல்லது தியானித்தல் என்பது நீண்டநேரம் நிலை பெற்றிருக்கும் இயல்புடையது. எனவே, இங்குக் கூறப்பெற்ற சிரிப்பார், களிப்பார், தேனிப்பார் என்ற மூன்று சொற்களும் இந்த மூன்று நிலைகளில் இருப்பவர்களைக் குறிக்கின்ற சொற்களாகும்.

இவர்கள் அனைவரும் மூன்று நிலைகளில் இருப்பினும், மூன்று நிலைகளுக்கும் அடித்தளமாய் இருப்பது இறையனுபவ ஆனந்த மேலீடேயாகும். அந்தத் தாக்கம், ஓரளவு ஏற்பட்டவுடன் சிரிப்பும், கொஞ்சம் அதிகம் ஏற்பட்டபொழுது களிப்பும், இன்னும் மிகுதியாக ஏற்பட்டபொழுது தேனிப்பும் ஏற்படுகின்றன.

ஒரே காரணத்தால் இந்நிலை அடைந்தவர்களாதலின் இவர்கள் தம்முள் கூடித் தம்முடைய ஆனந்த அனுபவத்தைப் பகிர்ந்துகொள்கின்றனர். ஆனந்தத்தின் காரணம் அவன் திருவருளே யாதலால் 'திருவார்த்தை (திருவருள் பற்றிய வார்த்தைகள்) விரிப்பார்' என்றார் அடிகளார்.

இனி, விரிப்பார் என்று சொல்லியதற்குப் பிறகு 'கேட்பார்' என்று கூறியதால், தம்மினும் மேம்பட்ட அனுபவத்தைப் பெற்ற ஒருவர் (சமாதிநிலை சென்றுவரும் ஒருவர்) அதனை விரித்துச் சொல்லும்பொழுது, அதனை அடுத்த மூன்று நிலையில் உள்ளவர்களும் அமைதியாக இருந்து கேட்கின்ற இயல்பையே குறிக்கின்றார். தேனிப்பார் தம் அனுபவத்தைப் பேசும்பொழுது சிரிப்பாரும், களிப்பாரும் அதனை அமைதியாகக் கேட்கின்றனர்.

இனி, இம்மூவகை மக்களும் தம்மையன்றி ஏனைய இருவகையினரும் பெற்ற அனுபவத்தைக் கேட்டு, அவர்களை மெச்சுகின்றார்கள். இதற்கடுத்த நிலை பேச்சடங்கி

நிற்கும் சமாதி நிலையாகும். பிறர் அனுபவத்தைக் கேட்டு அதை மெச்சிய மூன்று நிலையில் உள்ளவர்களும் இப்பொழுது நான்காவது நிலையாகிய சமாதி நிலையை அடையத் தனியிடத்தை நாடிச் செல்கின்றனர். தனியே இருந்து இறைவனுடைய திருப்பெயரைத் தமக்குள்ளேயே சொல்லி மகிழ்கின்றனர்.

அப்படியானால், சிரித்தல் முதலிய செயல்களில் ஈடுபட்டுப் பின்னர்த் தம்முள் ஒன்றுகூடித் திருவார்த்தை விரித்தவர்கள் எதனை விரித்தார்கள். திருவார்த்தை என்ற சொல்லில் அவரவர் பெற்ற அனுபவத்தோடு இறைவனுடைய நாமமும் அடங்காதா? அப்படி அடங்குமென்றால் 'திருவார்த்தை விரிப்பார்' என்று கூறியதன் பின்னர் உன் நாமம் தரிப்பார் என்று கூறியதன் நோக்கம் என்ன?

சற்று ஆழ்ந்து சிந்தித்தால், மிக மிக நுண்மையான ஒரு கருத்தை அடிகளார் இங்கே கூறுகிறார் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

இறைவனுக்கு ஆயிரம் திருநாமங்கள் உண்டு. 'நின்னிற் சிறந்தவை நின் நாமங்கள்' என்று ஒரு பழம் பாடல் பேசுகின்றது. இந்த நாமங்கள் அனைத்துமே மந்திரங்கள் என்ற பொதுத்தலைப்பில் அடங்கும். ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு தனி ஒலி அதிர்வு (vibration) உண்டு. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து மந்திரம் ஆகும்பொழுது இந்த மந்திரத்தின் ஒலி அதிர்வு அதனுள் இருக்கும் தனித்தனி எழுத்துக்களின் ஒலி அதிர்வுச் சேர்க்கையாக மட்டும் இல்லாமல் புதியதொரு ஒலி அதிர்வைப் பெறுகின்றது. இந்த புதிய ஒலி அதிர்வுதான் மந்திரத்தின் சக்திக்கு ஆதாரம் ஆகும்.

ஆயிரம் திருப்பெயர்களும், தனித்தனி மந்திரங்களாக ஆகும்பொழுது, ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அதிர்வெண் இருக்கும். பலர் ஒன்றுகூடி ஒரு மந்திரத்தை ஒன்றாக உச்சரிக்கும்பொழுது தோன்றுகின்ற அதிர்வெண்

அக்கூட்டத்திலுள்ள அனைவருக்கும் ஒரேமாதிரியான பயனைத் தரும் என்று சொல்வதற்கில்லை.

ஒவ்வொருவருடைய மனநிலையிலும் சில குறிப்பிட்ட ஒலி அதிர்வுகள் (vibration) ஓரளவு தாக்கம், பெருந்தாக்கம் என்பவற்றை ஏற்படுத்தலாம். எந்த மந்திரம் ஒருவருக்குப் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகின்றதோ, அதுவே அவருக்குரிய மந்திரமாகும். இதனை நன்கறிந்தவர்கள் கூட்டமாகத் திரண்டு நின்று ஒரு சில மந்திரங்களைச் சொல்லியவுடன் பிரிந்து சென்று தனியே இருந்து கொண்டு தம்முடைய மன அதிர்வுகளுக்கு ஏற்ப, பொருத்தமான அதிர்வு எண்களை உடைய மந்திரத்தைத் தேர்ந்தெடுத்து அதை ஜெபிப்பார்கள். அதனைத்தான் அடிகளார் 'வெவ்வேறு இருந்து உன் திருநாமம் தரிப்பார்' என்கிறார்.

முதல் இரண்டு அடிகளில் சொல்லப்பெற்றவை தியானம், ஜெபம் என்பவற்றின் வளர்ச்சி முறையில் படிப்படியாகச் சென்று ஒரு உச்சகட்டத்தை அடைவதைக் குறிக்கின்றன. இந்த நிலை அடைந்த பிறகு அதே நிலையில் எவ்வளவு காலம் இருந்தாலும் அதிலிருந்து கீழே இறங்கித்தான் ஆகவேண்டும். பருஉடலுன் வாழும் மனித மனத்திற்குரிய இயல்பாகும் இது.

இவ்வடியார் கூட்டத்தினர், பொன்னம்பலத்து ஆடும் பெருமானின் உருவத்தில் ஈடுபடுகின்றனர். அந்த உருவத்தில் லயித்து, அதன் பின்னர் அந்த உருவத்தின் மூலமாகிய ஒலிவடித்தில் ஈடுபடுகின்றனர். அந்த ஒலி, மந்திர சொரூபம் ஆதலால் பின்னர் அந்த மந்திரத்தில் லயித்துவிட்டனர். இதுவே தியானத்தின் வளர்ச்சியில் சோபான முறையாகும்.

இனி, மேல்நிலையில் லயித்தவர்கள் சாதாரண நிலைக்குத் திரும்பும்பொழுது தோன்றும் காட்சி பொன்னம்பலத்தாடும் புனிதனின் காட்சி ஆகும். அது

ஏன்? பொன்னம்பலத்தாடும் புனிதனின் காட்சியில்தானே இவர்கள் தொடங்கினார்கள்? அதில் தொடங்கப்பட்ட பயணம், வெவ்வேறாக இருந்து இறைவன் திருநாமங்களை ஜெபித்த பிறகு புறப்பட்ட இடத்திற்கே மீள்கின்றது. புறப்பட்ட பொழுது கடைசிக் காட்சியாக இருந்தது, பொன்னம்பலத்தாடும் புனிதனின் வடிவமாகும். இப்பொழுது மீண்டுவருகையில் அதுவே முதற்காட்சியாக வருகிறது. ஆதலால்தான் திரு நாமம் தரிப்பார் என்று கூறிய அடிகளார், 'பொன்னம் பலத்தாடும் தலைவா' என்பார் என்று கூறி முடிக்கின்றார்.

இக்காட்சி, அடிகளார் மனத்திரையில் விரிவாக ஓடிய காட்சியாகும் சிரிப்பார், களிப்பார் முதலியவர்களை மனத் திரையில் காண்கின்ற அதே நேரத்தில் அவர்களிடையே தாமும் ஒருவராக இராமல் காண்பானாகமட்டும் இருப்பதை உணர்ந்த அடிகளார், தம் நிலைக்குப் பெரிதும் வருந்துகிறார். இவ்வற்புதக் காட்சியைக் காண்பது வேறு; அற்புதக் காட்சியில் தாம் ஒருவராகப் பங்கேற்பது வேறு. பங்கேற்க முடியாமல் காண்பானாகமட்டும் இருப்பதால் 'நரிப்பாய் நாயேன் இருப்பேனோ' என்று வருந்துகிறார்.

காண்பான் நிலையில் இருந்து, காணப்பெறும் கூட்டத்தில் தாமும் ஒருவராக மாறவேண்டுமானால் அது தம் முயற்சியில் அடையக்கூடிய ஒன்று அன்று என்பதை உணர்ந்த அடிகளார், அந்த நிலையைத் தமக்கு இனியாவது அருள வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள் கிறார். அந்த வேண்டுகோள்தான் 'நம்பி! இனித்தான் நல்காயே' என்ற சொற்களாக வெளிப்படுகின்றன.

387. நல்காது ஒழியான் நமக்கு என்று உன்
நாமம் பிதற்றி நயன நீர்
மல்கா வாழ்த்தா வாய் குழறா
வணங்கா மனத்தால் நினைந்து உருகிப்

பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம்பலம் என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கு இரங்கி
அருளாய் என்னை உடையானே 10

நல்காது–அருளைக்கொடாது. ஒல்கா–தளர்ந்து.

சென்ற மூன்று, நான்கு பாடல்களில் அடியார் கூட்டத்திலே தன்னைப் புகுவிக்க வேண்டும் என்று பாடிய அடிகளார், அது நடவாமற் போகவே, மிகுந்த கழிவிரக்கத்தேடு தம் நிலைமையை மூன்று அடிகளில் பேசுகிறார். இந்த நிலையில் ஒரு உயிர் துன்புற்று வாடுமேயானால் எத்தகையவர்களும் அதன்மாட்டு இரக்கம் கொள்ளாமல் இருக்க முடியாது. உலகியலில் ஈடுபட்டுத் தம்மையே பெரிதென மதிக்கும் மனிதர்கள்கூட, இந்த நிலை கண்டு இரங்குவார்கள் எனின், அப்படி வருந்துகின்ற உயிர்களைக் கண்டு கருணைக் கடலான இறைவன் இரங்காமல் இருக்கமாட்டான். இந்த உறுதிப்பாடு மனத்தில் வரவே, அது பாடலாக வெளிப்படுகின்றது.

இறைவனுடைய நாமத்தை இரவு, பகல் எந்நேரமும் எந்த மனநிலையிலும் விடாமல் கூறிக்கொண்டிருப்பதால் 'பிதற்றி' என்றார். இதனையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'வழுக்கி வீழினும் உன் திருப்பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறுமாற்றம்' (திருமுறை: 7-54-1) என்று பாடுகின்றார். மணிவாசகர் பிதற்றுகின்ற நிலையிலும் சுந்தரர் வழுக்கி விழும்போது சொல்லுகின்ற நிலையிலும் பேசப்பெறுபவை மனம் மொழி மெய் என்ற மூன்றிலும் நிறைந்து, அந்தக்கரணங்களிலும் நிறைந்து ஆழ்ந்துள்ள பக்தியிலிருந்து வெளிப்படும் சொற்களாகும். இது வெறும் பயிற்சியால் வருவது ஒன்றன்று. இவ்வாறு பிதற்றுவதற்கு மனத்தில் ஏதோவொரு நம்பிக்கை இருத்தல் வேண்டும். அதனையே 'நல்காதொழியான் நமக்கு' என்ற சொற்களின் மூலம் அடிகளார் வெளிப்படுத்துகிறார்.

பிதற்றுதல் என்று கூறியவுடன் உதட்டளவில் பேசப்படும் சொற்கள் என்று சாதாரணமாகப் பொருள் செய்துவிடுவோம். ஆனால், அடிகளாரின் இந்தப் பிதற்றலின் பின்னர் ஓர் ஆழமான உணர்ச்சிப் போராட்டம் உள்ளது என்பதைத் தெரிவிக்க 'நயன நீர் மல்கா' என்று குறிப்பிடுகின்றார். உள்ளத்து உணர்ச்சியின் பயனாக வெளிப்படுவது நயன நீர். வாழ்த்தலும், வாய்குழறலும் உணர்ச்சிப் பெருக்கின் விளைவே ஆகும்.

இனி, இந்த உணர்ச்சிப் பெருக்கின் விளைவுகள் ஏதோ ஒரு நேரம் வந்து பின்னர் மறைந்துவிடுபவை அல்ல என்பதைக் குறிக்கப் 'பல்கால் உன்னைப் பரவிப் பாவித்து' என்கிறார்.

'உயிர்க்கிரங்கி அருளாய்' என்பதில் அடிகளாரின் மனவேதனை நன்கு வெளிப்படுகின்றது. 'எனக்கு இரங்கி அருளாய்' என்றுதான் கூறியிருக்கவேண்டும். அவ்வாறு கூறினால் தன்முனைப்புத் தலைகாட்டிவிடும் என்று அஞ்சினார் போலும்!. அன்றியும் 'எனக்கு இரங்காய்' என்று கூறுவதைவிட, 'உயிர்க்கு இரங்கி அருளாய்' என்று படர்க் கையில் கூறுவது அந்த எளிமையைப் பல மடங்கு அதிகப் படுத்திக் காட்டுகின்றது.

முன்னர் நான்கு பாடல்களில் அடியார் கூட்டத்துள் இருக்கும் அருளைப் புரிய வேண்டும் என்று பன்னிப் பன்னிக் கேட்டார் அடிகளார். அது கிடைக்காமல் போகவே கழிவிரக்கம் காரணமாகத் தம் எளிமையையும், செயற்பாட்டையும் வரிசைப்படுத்திப் பேசுகிறார். இன்னது வேண்டும் என்று கேட்காமல், இப்படி வருந்தும் உயிருக்கு நீ இரக்கம் காட்டியே தீரவேண்டும் என்று மன்றாடுவது போல இப்பத்தாவது பாடலை முடிக்கின்றார்.

ॐ ॐ ॐ

22. கோயில் திருப்பதிகம்

[அநுபோக இலக்கணம்]

கோயில் மூத்த திருப்பதிகத்தில் எல்லாப் பாடல்களிலும் கோயிலைப்பற்றிக் குறிப்பு வருவதால் கோயில் மூத்த திருப்பதிகம் என்ற பெயர் ஓரளவு பொருத்தமாக அமைந்து விட்டது. ஆனால், இப்பதிகத்திற்குக் கோயில் திருப்பதிகம் என்று பெயர் தருதல் எந்த விதத்திலும் பொருந்துமாறு இல்லை. ஒரு சிலர் இந்தத் தலைப்பை ஆதரிப்பதற்காகவே கோயில் என்ற சொல் திருப்பெருந்துறையையே குறிக்கும் என்றும் கூறியுள்ளனர்.

பின்வரும் பத்துப் பாடல்களிலும் திருப்பெருந்துறையே பேசப்பெறுகின்றது. திருப்பெருந்துறைக்கும் தில்லைக்கும் ஏதோ ஒரு வகைத் தொடர்பு அடிகளார் வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இருந்துள்ளது என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம்.

திருப்பெருந்துறையைப்பற்றிப் பாடப்பெற்ற இந்தப் பத்துப் பாடல்களும் ஏறத்தாழச் சென்ற பதிக முறையையே பின்பற்றி அமைந்துள்ளன. இங்கும், 'மாறி நின்று' என்று தொடங்கும் முதல்பாடல் தத்துவ ரீதியாகவே இறையிலக் கணத்தைப் பேசத் தொடங்குகிறது.

சென்ற பதிகத்தைப்போலவே இப்பதிகத்திலும் முதல் பாடலில் தொடங்கிய ஆராய்ச்சி அத்தோடு நின்றுவிட, உணர்ச்சிப் பெருக்கை வெளியிடும் பாடல்கள் அடுத்து வெளிவருகின்றன.

இப்பத்து பாடல்களும் அனுபவத்தில் ஏற்பட்ட சுவையை—கரும்பு, தேன், கட்டி என்றெல்லாம் சொல்லிச் செல்லுதலின் அனுபவச் சிந்தனை என்றோ அனுபவ வெளிப்பாடு என்றோ உள்தலைப்பு தந்திருப்பின், ஒருவாறு பொருந்தலாம். ஆனால் 'அனுபோக இலக்கணம்' என்பது வழக்கம்போல் பொருந்தாமல் நிற்கின்றது.

388. மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன் ஐந்தின் வழி அடைத்து அமுதே
ஊறி நின்று என் உள் எழு பரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஈறு இலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே 1

மாறிநின்று–ஒன்றுபோனவழி ஒன்று போகாமல் மாறுபட்டு நின்று. ஐந்தின்வழி–புலன்கள் ஐந்தின் வழியாகிய பொறி. உள்ளவா காண–சொரூபநிலையை யான் அறிய. தேறல்–தேன்.

உள்ளத்துள்ளே பரஞ்சோதி தோன்ற வேண்டுமாயின் அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்ற முக்கியமான செய்தியை அடிகளார் இங்கே பேசுகின்றார்.

ஓர் அறைக்குள் ஏற்றிவைக்கப்பட்ட தீபம் அணையாது நிற்கவேண்டுமாயின், அந்த அறையுள் அமைந்துள்ள அனைத்து ஜன்னல்களும் மூடப்பட வேண்டும். இன்றேல் ஜன்னல் வழியாக வரும் ஊதைக் காற்று நடுவில் உள்ள தீபத்தை அணைத்துவிடும்.

மனிதனும் அப்படித்தான். அவனுக்குள் ஐந்து பொறிகளும் அவற்றின்வழி இயங்கும் ஐந்து புலன்களும் ஐந்து பெருவழிகளை அமைத்துக்கொண்டு அவனுடைய நெஞ்சினுள் ஒன்று மாறி ஒன்று புகுந்து அட்டகாசம் செய்

கின்றன. இந்த வழிகளை அடைத்தாலொழிய உள்ளே இருக்கும் சோதி மறைந்துவிடும். வஞ்சப் புலனின் வழியை அடைத்ததால் அவருடைய உள்ளத்தில் பரஞ்சோதி எழலாயிற்று. இதனை எழு பரஞ்சோதி என்று வினைத் தொகை வாய்பாட்டில் கூறினமையில், பொறி வழிகள் அடைபட்டுவிட்ட காரணத்தால் எந்நேரமும் அடிகளா ரின் உள்ளத்தில் பரஞ்சோதி சுடர்விடலாயிற்று. எந்த நேரமும் பரஞ்சோதி இருத்தலின் 'ஊறிநின்று எழுபரஞ் சோதி' என்றார்.

சோதி உள்ளே இருப்பினும் அதைப் புரிந்து கொள்ளுதல் அவ்வளவு எளிதான காரியம் அன்று. எனவே, அடிகளார் 'பிரபஞ்சோதியே! அடியேன் காண வெளிப் போந்து அருள்வாயாக' என்று வேண்டிக் கொள்கிறார்.

இந்த இரண்டு அடிகளிலும் பொறிவாயில் ஐந்து அவித்தவர்கள் உள்ளத்து எழுபரஞ்சோதியானது அவர்கள் காணுமாறு வெளிப்பட்டு அருள்புரியும் என்ற தத்துவத்தை மிகச் சுருக்கமாகவும், அழகாகவும் அடிகளார் தெரிவித்து விட்டார்.

பொறி புலன்களைக் கடந்து, அந்தக்கரணங்களையும் கடந்து, வாக்கு, மனம் ஆகியவற்றையும் கடந்து ஒளிவடி வாக நிற்கும் ஒரு பொருளை 'அமுதே! தேறலின் தெளிவே!' என்று சொல்வது புதுமையானதன்றோ! குழந்தையைக் கொஞ்சுபவர்கள் அன்பு மேலீட்டால் கையில் உள்ள குழந்தையை 'கற்கண்டே! சர்க்கரைக் கட்டியே!' என்று கொஞ்சுவதைக் கண்டிருக்கிறோம். அதேதான் இங்கும்.

இப்பதிகத்தை அடிகளார் எங்கிருந்து பாடினார் என்பதை நாம் அறியோம். ஆனால் ' அமுதே! ஊறிநின்று என்னுள் எழுபரஞ்சோதி' என்ற சொற்கள் வெளிப்

பட்டவுடன் திருப்பெருந்துறை நினைவுக்கு வருகிறது. அடிகளார் உள்ளத்தினுள்ளே பெருஞ்சோதியாக இறைவன் தோன்றியதும், வஞ்சப் புலன்கள் ஐந்தும் ஒரே விநாடியில் அடைபட்டதும், பரஞ்சோதி வெளிப்பட்டதும் நினைவுக்கு வந்தவுடன் 'திருப்பெருந்துறைஉறை சிவனே' என்ற சொற்கள் வெளிவருகின்றன.

389. அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்து உருக
என் பரம் அல்லா இன் அருள் தந்தாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு
முன்பும் ஆய் பின்பும் முழுதும் ஆய் பரந்த
முத்தனே முடிவு இலா முதலே
தென் பெருந்துறையாய் சிவபெருமானே
சீர் உடைச் சிவபுரத்து அரைசே 2

என் பரம்–என் பொறுப்பு. கைம்மாறு–பிரதியுபகாரம்

திருப்பெருந்துறை அனுபவத்தை முன்பு பல பாடல்களில் பேசியுள்ளாரேனும் இப்பாடலின் முதல் இரண்டு அடிகளில் உள்ள பதினான்கு சீர்களில் முதல் பதினோரு சீர்களில் மிக மிக விளக்கமாகவும் நுணுக்கமாகவும் கூறியுள்ளார்.

யாக்கை என்று சொல்லப்படும் இப் பருஉடம்பு புறச்சூழ்நிலை காரணமாகக் கசிவதும், உருகுவதும் உண்டு. இந்தப் புறச்சூழ்நிலை யாக்கையின் உள்ளே உள்ள ஆவியைப் பற்றுவதோ, தாக்குவதோ இல்லை. ஆவி கசியவோ, உருகவோ வேண்டுமானால் உடம்பினுள் இருந்தும் தனித்து நிற்கும் அந்தக்கரணங்களில் உள்ள மனமும், சித்தமும் அன்பினால் நிறைய வேண்டும்.

சாதாரண உலகப் பொருள்கள், உறவுகள் போன்றவைகளிடமும் அன்பு தோன்றுகிறது. ஆனால், இந்த அன்பு

ஆவியை உருக்கும் அன்பிலிருந்து பெரிதும் வேறுபட்டதாகும். பெயரளவில் இரண்டிற்கும் அன்பு என்ற பெயரே இருப்பினும் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை அறிவது நலம்.

உலகப் பொருள்களிடம் தோன்றுகின்ற அன்பு ஆழமற்றது, மாறும் இயல்புடையது, நிலையானதன்று. இதற்கு மாறாக ஆவியை உருக்கும் அன்பு நிலையானது; ஆழமுடையது; என்றும் மாறாதது. மனம், சித்தம், புத்தி அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் நான்கினையும் நிரப்பி, அவற்றை அடுத்து ஆவியையையும் பற்றி அந்த ஆவியை உருக்கும் இயல்புடையதாகும் இந்தப் பேரன்பு. கண்ணப்பர், மணிவாசகர், மூவர் முதலிகள், ஆழ்வார்கள் ஆகிய அனைவரிடமும் ஆவியை உருக்கும் இந்தப் பேரன்பே குடிகொண்டிருந்தது.

அறுபத்து மூன்று நாயன்மார்களும் இந்தத் தொகுப்பின் உள்ளேயே வருவர். இந்தப் பேரன்பு அவர்களுள் புகுந்தவுடன் அவர்களுடைய அந்தக் கரணங்கள் செயலிழக்கின்றன. எளிதில் போக்க முடியாத அகங்காரங்கூட இவர்களைப் பொறுத்தமட்டில் செயலிழந்துவிடுகிறது.

அவர்கள் ஆவியைப் பற்றிநிற்கும் உருக்கம் காரணமாக, வெளிப்படும் ஆனந்தத்தில் இந்த அடியார்கள் எந்நேரமும் லயித்துள்ளார்கள். ஆதலின், இவர்கள் செய்யும் செயல்களை நம்முடைய அறிவு கொண்டு ஆராய்வதோ, அளப்பதோ இயலாத காரியம் மட்டுமன்று; தகாத செயலுமாகும்.

அன்பு என்ற பொதுப்பெயரில் இரண்டு மாறுபட்ட அன்புகள் இருப்பதை முன்னர்க் கண்டோம். இவை ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாதவை. அதேபோல மனிதர்கள் என்ற பொதுப்பெயரில் இந்த அடியார்களும்

உள்ளார்கள்; நாமும் உள்ளோம். என்றாலும், இரு சாராரிடையே கடல்போன்ற வேற்றுமை உண்டு. இந்த அடிப்படையை நன்கு புரிந்துகொண்டால்தான் இப்பாடலில் பதினோரு சீர்களில் தமக்கு நேர்ந்த ரசவாதத்தை அடிகளார் கூறுவதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆம்! இது ஒரு ரசவாதம்தான். பெருங்கல்வி கற்று, பெரும் பதவி வகித்துக்கொண்டு சுற்றித் திரிந்த திருவாதவூரர் ஒரே வினாடியில் எல்லாவற்றையும் துறந்து, 'நாடவர் பழித்துரை பூண் அதுவாகக்' கொண்டு (திருவாச:4-69) தம்மை மறந்து உலவும் மணிவாசகராக மாறினார். அமைச்சராக இருக்கும் ஒருவர் அம்மானை, கோத்தும்பி, தெள்ளேணம், பூவல்லி, ஊசல் முதலிய சிறுமியர் விளையாடல்களைப் பார்த்திருக்கக் கூடுமேனும் அவைபற்றிப் பாட வாய்ப்போ ஒழிவோ இருந்திராது. திருவாதவூரர் என்பவர் இவ்வாறு பாடினார் என்றால், திருவாதவூரராக இருந்து இதனைப் பாடவில்லை. இரும்பு பொன்னாகும்போது இரும்பின் இயல்பு முற்றிலும் மாறி, பொன்னாக ஆவதுபோல், திருவாதவூரர் என்ற அமைச்சர் முற்றிலும் மாறி, மணிவாசகர் என்ற அடியாராக மாறிவிட்டார்.

அந்த மாற்றம் நிகழ்ந்த முறையைத்தான் இப்பாடலின் முற்பகுதி குறிக்கின்றது.

ஆவியோடு ஆக்கையும் சேர்ந்து முதலில் கசிந்தது. அடுத்து உருகிற்று; உருக்கத்தை அடுத்து ஒரு புதிய பொருள் தோன்றிற்று அப்பொருளின் பெயர் ஆனந்தம் என்பதாகும். கசிவது வெளியே தெரியாது நடைபெறுவதாகும். உருக்கத்தை வெளிப்படுத்தக் கண்ணீர் பெருகுதல், உடல் கம்பித்தல் முதலிய மெய்ப்பாடுகள் உதவுகின்றன. அடுத்துத் தோன்றும் ஆனந்தம் சுர்ந்து நோக்குபவர்களுக்கு மட்டுமே ஓரளவு தெரியக்கூடிய

ஒன்றாகும். நாம் வாழ்வில் காணும் மகிழ்ச்சி, இன்பம், சந்தோஷம் ஆகியவற்றிலிருந்து இந்த ஆனந்தம் முற்றிலும் மாறுபட்டதாகும். மகிழ்ச்சி முதலியவைபோல புறமனத்தில் தோன்றுவதன்று ஆனந்தம். அந்தக்கரணம் நான்கையும் கீழ்ப்படுத்தித் தோன்றுவது என்று முன்னரே குறிப்பிட்டோம். இந்த ஆனந்தம் நீடிக்கின்றவரையில் கசிவதும், உருகுவதும் தொடர்ந்துகொண்டேயிருக்கும். அதனாலேயே அடிகளார் 'ஆனந்தமாய்க் கசிந்துருக' என்று கூறினார்.

அடிகளாருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த ரசவாதத்தினால் வெளிப்பட்டதுதான் ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகும் நிலை. இந்த ரசவாதத்தில் ஈடுபட்டு, அதைப்பற்றி நினைக்கும் நாம், ஒன்றை மறந்துவிடக்கூடாது. இது நிகழக் காரணமாய் இருந்தது எது என்பதை 'அன்பினால்' என்ற ஒரே சொல்லில் அடிகளார் கூறிவிட்டார். பாடலின் முதலடியைப் படிக்கும் நமக்கு ஒரு தவறான முடிவு தோன்றக் கூடும். பேரன்பை வளர்த்துக் கொண்டதன் மூலம் இவற்றை அடிகளார் பெற்றார் என்ற நினைவு தோன்றக்கூடும் அல்லவா? அது தவறு என்ற கருத்தைத் தெரிவிக்கவே, 'என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்' என்று பேசுகிறார். அதாவது, தம் தகுதிக்குப் பொருந்தாத இந்தப் பேரருளை தமக்குத் தந்தார் என்று கூறுவதன் மூலம், இந்தப் பேரன்பு தோன்றுவதும் அதன் பயனாக மேலே கூறிய ரசவாதம் நடைபெறுவதும் அனைத்துமே அவன் அருளே தவிர வேறில்லை என்பதை விளக்கமாகக் கூறுகிறார்.

இந்த மாபெரும் உபகாரத்தைச் செய்த குருநாதருக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும்? எதைச் செய்தாலும் அந்த இன்னருளைக் குறைத்து மதிப்பிட்டதாகவே ஆகிவிடும். ஆகவே, அமைச்சராக இருந்து தராதரம் பார்ப்பதில் அனுபவம் பெற்ற அடிகளார், அவன்

அருளுக்கு எந்த ஒன்றையும் கைம்மாறாகச் செய்ய முடியாது என்பதை அறுதியிட்டுக் கூறும்முறையில் ''யான் இதற்கு இலனொர் கைம்மாறு' என்று கூறி முடித்து விடுகிறார்.

390. அரைசனே அன்பர்க்கு அடியனேன் உடைய
அப்பனே ஆவியோடு ஆக்கை
புரை புரை கனியப் புகுந்துநின்று உருக்கிப்
பொய் இருள் கடிந்த மெய்ச்சுடரே
திரை பொரா மன்னும் அமுதத் தெண் கடலே
திருப்பெருந்துறை உறை சிவனே
உரை உணர்வு இறந்துநின்று உணர்வது ஓர் உணர்வே
யான் உன்னை உரைக்கும் ஆறு உணர்த்தே 3

புரை புரை கனிய–மயிர்க்கால்கள்தோறும் நெகிழ. திரை பொரா மன்னும்–அலை மோதாமல் நிலைபெற்ற.

இப்பாடலின் நான்காம் அடி ஆழ்ந்து சிந்தப்பதற்குரியது. உலக உயிர்களுள் உயர்ந்து நிற்கும் மனிதனுக்குரிய தனிச் சிறப்புக்களுள் அவனது பேசும் ஆற்றலும் ஒன்றாகும். உரை என்று சொல்லப்படும் இது எண்ணத்தோடு தொடர்புடையது. எண்ணம் என்பது உரை அல்லது சொல் வடிவில் வெளிவருவது. அகத்தே நிகழும் எண்ணமும், புறத்தே வெளிப்படும் சொல்லும் மனிதனுடைய மூளையில் நடைபெறுவனவாகும்.

உணர்வு என்பது இதிலிருந்து மாறுபட்டதாகும்.அது இரு வகைப்படும். ஒன்று மனத்தில் தோன்றுவது; மற்றது உள்ளத்தில் தோன்றுவது. மனத்தில் தோன்றும் பாலுணர்வு பசியுணர்வு போன்றவற்றை ஓரளவு சொற்களால் கூறமுடியும் (இதனை உரை உணர்வு என்று கூறலாம்). உள்ளத்தில் தோன்றும் பக்தி போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றல் சொற்களுக்கு முழுவதுமாக

இல்லை. (இதனை உரை இறந்த உணர்வு எனலாம்). இந்த உணர்வை வெளிப்படுத்தச் சொற்கள் பயன்படா. எனினும், முகத்தில் தோன்றும் மலர்ச்சி, கண்களில் தோன்றும் கண்ணீர், நாக்குழறுதல் முதலிய மெய்ப்பாடுகள் மூலம் இதனை ஓரளவு அறிய முடியும். இதனை நம் முன்னோர் நன்கு விளங்கிக் கொண்டனர்.

இறைவன் வாக்கு, மனம், லயம் கடந்தவன் என்பதை அடிகளாரே 'உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி' (திருவாச: 4-124) என்று முன்னரும் கூறியுள்ளார். அப்படியானால் இந்தப் பாடலின் நான்காவது அடியிலும் அதே கருத்தைக் கூறியுள்ளாரா என்றால், இல்லை என்பதே விடையாகும்.

அந்தக் கருத்துக்குமேல், மிக நுண்மையான மற்றோர் கருத்தையும் இந்த நான்காவது அடியில் பெய்துள்ளார். 'உரை, உணர்வு இறந்து நின்று உணர்வது ஓர் உணர்வே' என்பதே அந்த அடியாகும்.

இவ்வடியில் உணர்வு என்ற சொல் மும்முறை பயன்படுத்தப்பெற்றுள்ளது. முதலாவது வரும் 'உணர்வு, உரை உணர்வு' இறந்தவன் இறைவன் என்ற பொருளைத் தருவதாகும். இந்த உறை உணர்வு மனத்தில் தோன்றுவதாகும் என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அப்படியானால் அடுத்து வரும் இரண்டு உணர்வுகளும் இதே பொருள் உடைய சொற்கள்தாமோ என்றால், இல்லை என்பதே விடையாகும். முதலில் உள்ள உரை உணர்வு மனத்தில் தோன்றுவதால் நம்முடைய ஆட்சிக்குட்பட்டவை. சொற்களின் மூலம் எண்ணுவதும் உணர்வில் ஆட்படுவதும் நம்முடைய செயலாகும். இவை இரண்டும் நடைபெறும்போது நம்மை நாம் மறப்பதில்லை. மனம் சித்தம் என்ற இரண்டும் உணர்வில் லயித்துவிட்டால்கூட, புத்தியும் அகங்காரமும் தனியே நின்று, உணர்வில் அமிழ்ந்துள்ள மனம், சித்தம் என்ற

இரண்டையும் தம் ஆளுகைக்கு உட்படுத்தி, 'நான் பேசுகிறேன்; நான் உணர்கின்றேன்' என்ற எண்ணம் அடித்தளத்தில் இருக்குமாறு செய்யும். எந்த நிலையிலும் இந்த உரை உணர்வில் அந்த 'நானி'லிருந்து விடுபடுவது கடினம்.

அடிகளார் போன்ற இறையனுபவ ஞானிகள் மட்டுமே 'நானோ'டு தொடர்புடைய இந்த உரை, உணர்வைக் கடந்து நிற்கமுடியும்.

அப்படிக் கடந்துநிற்கும் நிலையில் ஏற்படுகின்ற அனுபவத்திற்கும் 'உணர்வு' என்ற பெயரைத்தான் தரவேண்டியிருக்கின்றது. இறையன்பு, பொருளன்பு என்ற இரண்டிற்கும் 'அன்பு' என்ற ஒரே சொல்லைப் பயன்படுத்தியதுபோல, 'நானோ'டு தொடர்புடைய உணர்வு, 'நானை'க் கடந்து நிற்கும் உணர்வு என்ற இரண்டிற்கும் 'உணர்வு' என்ற ஒரே பெயரைத்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. என்றாலும், இந்த வேறுபாட்டை வலியுறுத்த வேண்டி, இரண்டு சொற்களை இரண்டு 'உணர்வு'களுக்கு நடுவே வைக்கின்றார். 'உரைஉணர்வு' இறந்து என்றதால் 'நானோ'டு தொடர்புடைய உணர்வு இறந்ததைக் குறிக்கின்றார். அடுத்து, 'நின்று' என்ற சொல்லைப் பயன்படுத்தியதால். 'உரை உணர்வு' இறந்த இடத்தில் இப்புதிய உணர்வு தோன்றி நிற்கின்றது என்பதைக் குறித்தவாறாயிற்று. எனவே, இந்த உரையிருந்த உணர்வில் பொறி புலன்கள் அந்தக்கரணங்கள் ஆகியவற்றின் தொடர்பு ஒரு சிறிதும் இல்லை.

நானோடு தொடர்பற்ற உணர்வு, இறைவயனுபவ மெய்ஞ்ஞானிகளுக்கு மட்டுமே தோன்றக்கூடிய ஒன்றாகும். அப்படியானால் இந்தப் சிறப்பு உணர்வினால் என்ன பயன் என்ற வினா தோன்றுமன்றோ? அதற்கென ஒரு

தனிப்பயன் உண்டு என்பதை 'உணர்வதோர் உணர்வே' என்ற சொற்கள்மூலம் விளக்குகிறார்.

இதைப் புரிந்துகொள்ள அடிகளார் கூறும் மூன்று 'உணர்வு'களையும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். முதலாவது உணர்வு (உரை உணர்வு) பொறி, புலன்கள், நான் என்பவற்றோடு தொடர்புடையது. அவர் கூறும் இரண்டாவது உணர்வு (உரையிறந்த உணர்வு) 'நான்' முதலிய எதனோடும் சம்பந்தப்படாமல் நிற்கும் ஓர் உணர்வாகும். இந்த உணர்வு அடிகளார் போன்ற அருளாளர்களிடம் மட்டுமே தோன்றுவதாகும். இந்த உணர்வு எங்கே தோன்றுகிறது என்ற வினாவை எழுப்பினால் விடைகூறுவது இயலாத காரியம். இந்த இரண்டாவது உணர்விற்கு உள்ள தனியான இலக்கணம், 'நான்' முதலிய எதனோடும் இது சம்பந்தப்படாதது என்பதுதான்.

இந்த உணர்வு ஒன்றினால்மட்டுமே இறைவனை அனுபவிக்க முடியும். அறிதல், தெளிதல், கேட்டல், சிந்தித்தல் ஆகிய ஒன்றும் இந்த இரண்டாவது உணர்விற்கில்லை. இறைப் பொருள் தவிர்ந்த எந்த ஒன்றையும் அது அனுபவிக்கவோ உணரவோ செய்யாது. இறைப்பொருள் ஒன்றைத்தான் இந்த இரண்டாவது உணர்வு அறியும்; அந்த ஒன்றைத்தான் அது அனுபவிக்கும்.

அனுபவிக்கத் தொடங்கும்பொழுது இந்த இரண்டாவது உணர்வு தனியே நிற்க, இறைப்பொருள் எதிரே நிற்கின்றது. இது இறைப்பொருளில் ஈடுபட, ஈடுபட, அது இறையனுபவமாகப் பழுத்துவிட்ட நிலையில் (முழு அனுபவ நிலை) இரண்டாவது உணர்வு இறையனுபவம் ஒன்றில் அமிழ்ந்து தன் தனித்தன்மையை இழந்துவிடுகிறது.

உப்புப் பொம்மை தண்ணீருக்குள் அமிழ்ந்தது போல இந்த இரண்டாவது உணர்வு இறையனுபவத்தில் மூழ்க மூழ்க இரண்டும் ஒன்றாகிவிடுதலின் 'நின்று உணர்வதோர் உணர்வே' என்கிறார் அடிகளார். இதுவே மூன்றாவது நிலை.

இப்பாடலின் இறுதிப்பகுதி 'யான் உன்னை உரைக்கு மாறு உணர்த்தே' என்பதாகும். மூன்றாவதாக உள்ள உணர்வு வடிவாகிய இறைப்பொருளை அடிகளாரிடத்துப் புதிதாகத் தோன்றிய 'நான்' கலப்பற்ற இரண்டாவது உணர்வு அனுபவிக்கின்றது இந்த அனுபவத்தை எப்படிச் சொற்களால் சொல்ல முடியும்?

பொறி, புலன்கள் 'நான்' என்பவற்றோடு கலந்து சித்தத்தில் தோன்றும் சாதாரண உணர்வைக்கூட, சொற்களால் சொல்லமுடியாது என்றால், எல்லாவற்றை யும் கடந்து நிற்கும் இந்த உணர்வின் அனுபவத்தை எப்படிச் சொற்களால் சொல்ல முடியும்? சொற்களால் சொல்ல வேண்டுமானால் அந்த 'நான்' தோன்றியேதீரும் 'நான்'ஐ இகழ்ந்து அனுபவித்த ஒன்றை, 'நான்' அறியாத ஒன்றை இந்த 'நான்' எப்படி உரைக்க முடியும்?

என்றாலும் இந்த அருள் அனுபவத்திலிருந்து மீண்டவுடன் அது சொல் கடந்தது என்பதை நன்கு அறிந்திருந்துங்கூட, அடிகளாருக்கு ஒரு ஆசை பிறக்கின்றது. எனவே மூன்றாவது உணர்வாகச் சொல்லப்பட்ட அந்த இறைப்பொருளைப் பார்த்து, 'உரைகடந்து நிற்கும் உன்னை உரையினால் சொல்ல வேண்டுமென்று விழைகின்றேன்; அதற்கு நீதான் அருள் புரிய வேண்டும். உரைகடந்த அனுபவமாகிய நீ, உரைக்குள் அகப்படும் அனுபவமாகச் சுருங்கி, நான் உரைக்குமாறு நீ உதவவேண்டும்' என்கிறார் அடிகளார்.

391. உணர்ந்த மா முனிவர் உம்பரோடு ஒழிந்தார்
உணர்வுக்கும் தெரிவு அரும் பொருளே
இணங்கு இலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப் பிறப்பு அறுக்கும் எம் மருந்தே
திணிந்தது ஓர் இருளில் தெளிந்த தூ ஒளியே
திருப்பெருந்துறை உறை சிவனே
குணங்கள் தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்கு இனி என்ன குறையே 4

உம்பரோடு–தேவர்களோடு. குணங்கள்–சாத்து விகம் இராசதம் தாமதம் என்பன.

இந்தப்பாடலின் முதலடியில் 'உணர்ந்த மாமுனிவர், உம்பர், ஏனையோர்,' என்ற மூன்றுவகைப்பட்டவரை அடிகளார் இங்கே குறித்துள்ளதற்கு ஒரு காரணம் உண்டு. முனிவர்கள் இவ்வுலகிடை வாழ்பவர்கள், உம்பர்கள் வேறு உலகங்களில் வாழ்பவர்கள். 'ஒழிந்தோர்' என்பது தேவர் உலகத்தல்லாது வேறு உலகங்களில் வாழ்பவர்கள் என்ற பொருளைத் தரும். இத்தொகுதியில் முனிவர்கள் மட்டுமே இவ்வுலகிடை வாழ்பவர்களாதலின் உலகியல் பற்றிய அறிதல் உணர்தல் ஆகிய இரண்டும் அவர்களுக்கு மட்டுமே உரியன ஆயின. வெறும் கல்வியறிவு உடையவராயிருப்பின் அவர்களை 'அறிந்த' மாமுனிவர் என்று அடிகளார் கூறியிருப்பார். அவ்வாறில்லாமல் 'உணர்ந்த' மாமுனிவர் என்றதால் கற்று, அதன் பயனை உணர்ந்து வாழ்கின்ற முனிவர் என்பது பொருளாயிற்று. இந்த முனிவர்களுக்குரிய உணர்வு, சென்ற பாடலில் குறிக்கப்பட்ட மூன்று உணர்வுகளில் முதல் உணர்வையே குறித்துநின்றது. பொறி, புலன்கள் நான் ஆகியவற்றோடு தொடர்புடைய எல்லா உணர்வுகளையும், உணர்ந்து ஓரளவு அதனோடு வாழ்ந்து, பிறகு அவற்றைத் தேவையில்லை என்று ஒதுக்கிய முனிவர்கள் ஆவர்

இவர்கள். வெறும் கல்விமட்டும் இருப்பின் இவர்கள் உணர்ச்சிகளை அடக்கி, முனிவர்களாகி இருக்க முடியாது மனிதர்களுக்குரிய பல்வேறு உணர்ச்சிகளையும் கொண்டு வாழ்ந்து, இவ்வுணர்ச்சிகள் தம்மை முன்னேறவிடமாட்டா என்பதை உணர்ந்து, அறிவு, உணர்வு ஆகியவற்றிலிருந்து ஒதுங்கி நிற்கும் முனிவர்களையே 'உணர்ந்த மாமுனிவர்' என்ற இறந்த காலப் பெயரெச்சத்தால் அடிகளார் குறிப்பிட்டார்.

இங்கு கூறப்பெற்ற மூவகையினரும் ஓர் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் ஆதலின் அவர்களின் உணர்வுக்காவது கட்டுப்படுவானா என்ற வினாவை எழுப்பிக்கொண்டு 'உணர்விற்கும் தெரிவு அரும் பொருளே' என்றார்.

இணங்கிலி என்ற சொல் சற்றுப் புதுமையான பிரயோகம் ஆகும். இப்படிப்பட்ட பல புதுப்பிரயோகங் களைத் திருவாசகத்தில் காணலாம். எல்லாப் பொருளிலும் ஊடுருவியும் கடந்தும் நிற்பவன் என்றாலும் அந்தப் பொருளைத் தனதாகப் பாவித்து அதனோடு இணக்கம் கொண்டு ஒன்றாய் இருப்பவன் அல்லன் என்ற கருத்தையும் இணங்கிலி என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். பொருள்கள் அனைத்தும் தோற்றம், இருப்பு, மறைவு என்று மூன்று நிலைகளை உடையன. அப்பொருள்களோடு கூடிக் கலந்து நிற்கும் அவன் அவை தோன்றும் காலத்தில் அவற்றோடு தோன்றுவதில்லை அவை மறையும் காலத்தில் அவற்றோடு மறைவதில்லை. எனவே எந்தப் பொருளோடும் முழுவதுமாக இணங்கியிருப்பவன் அல்லன் என்ற கருத்தையே 'இணங்கிலி' என்ற சொல்லால் பெற வைக்கிறார்.

பொதுவாக ஒளியும் இருளும் முரண்பட்டவை என்பதை நாம் அறிவோம். ஒளி உள்ள இடத்தில் இருளும்

இருள் உள்ள இடத்தில் ஒளியும் இருப்பதில்லை. அப்படியிருந்தும் இந்த முரண்பாட்டினிடையே முழுமுதலைக் கண்ட பெருமை சைவம், வைணவம் என்ற இரண்டிற்குமே உரியதாகும். திணிந்த இருளில் ஒளி இருப்பவனே என்று அடிகளார் பாடுவது முரண்பாட்டில் முழுமுதலைக் காணும் ஒரு வழியேயாகும்.

உலகில் உள்ள எல்லாப் பொருட்களுக்கும் முக்குணங்கள் உண்டு. ஒருவர் இன்பத்தை அனுபவிக்கிறார் என்றால் அது சத்துவ, ராஜஸ, தாமஸம் ஆகிய முக்குணங்களிலும் ஏதாவது ஒன்றைப் பற்றியே நிற்கும். பிறருக்கு எவ்விதத் துன்பமும் நேராமல், தன் செயலால், எண்ணத்தால், பேச்சால் இன்பம் அடைகிறவர்கள்கூட சத்துவ குணத்தின் அடிப்படையில் அந்த இன்பத்தை அடைகிறார்கள் என்று சொல்வதில் தவறில்லை. ஆனால் சத்துவ அடிப்படையில் தோன்றும் இன்பம்கூட எப்போதும் நிலையானது என்று கூறுவதற்கில்லை. காரணம், உயிர்களைப் பொறுத்தவரை இம்முக் குணங்களும், வண்டிச் சக்கரம்போல் மாறி மாறி வரத்தான் செய்யும். இறையனுபவ இன்பம் இப்படி மாறி மாறி வரும் இயல்பு உடையதன்று; மேலும் நிலையானது என்பதை அறிவிக்கவே 'குணங்கள் தாம் இலா இன்பமே' என்கிறார் அடிகளார்.

392. குறைவு இலா நிறைவே கோது இலா அமுதே
ஈறு இலாக் கொழும் சுடர்க் குன்றே
மறையும் ஆய் மறையின் பொருளும் ஆய் வந்து என்
மனத் திடை மன்னிய மன்னே
சிறை பெறா நீர் போல் சிந்தை வாய்ப் பாயும்
திருப்பெருந்துறை உறை சிவனே
இறைவனே நீ என் உடல் இடம் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கேனே 5

குறைவிலாநிறைவே–என்றும் எங்கும் பரிபூரணமாயிருப்பவனே. கோது இலா அமுதே–நஞ்சொடுபிறத்தலும் உண்டார்க்கு உண்மை ஞானம் விளங்காமையுமாகிய குற்றமற்ற அமுதமே. மறை– வேதம். மன்னிய–நிலைபெற்ற. மன்–அரசன். சிறை–கரை.

இப்பாடலில் வரும் 'மறையுமாய் மறையின் பொருளுமாய்' என்ற தொடர், வேதத்தில் வரும் சொல்லையும் அது குறிக்கும் பொருளையும் குறிப்பதாகும். பொதுவாக மறை என்பது ஓசையால் சிறப்புப் பெறுவதாகும். வேதத்தை அத்யயனம் செய்பவர்கள் பலர் கூடி, சொற்களைப் பிரித்துக்கொண்டு ஒரு கூட்டத்தார் ஒரு தொகுதிச் சொல்லைக் கூறி முடிக்கும்போது, அந்த ஓசை அடங்குவதற்கு முன்னர், அடுத்த கூட்டத்தார் மேலே சொல்லத் தொடங்குவர். எனவே அது, அலைமேலே எழுவதும் கீழே விழுவதும் மாறி மாறி நடப்பதுபோல், ஓர் ஒலி முத்தாய்ப்பையும் அடுத்து இறங்கி ஏறிவரும் அடுத்த முத்தாய்ப்பையும், பெற்றுவருவதாகும். இதனை நன்கு உணர்ந்த நாவரசப்பெருமான் 'ஓதிய ஞானமும் ஞானப்பொருளும்' (திருமுறை: 4:92-17) என்று தொடங்கும் பாடலில் 'ஒலி சிறந்த வேதம்' என்று கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது. மறை என்பது அடிகளார் கூறினாரேனும் அது ஒலிசிறந்த சொல்லையே குறிப்பதாகும்.

அடுத்து நிற்பது 'மறையின் பொருளுமாய்' என்பதாகும். மறை என்பது சொல்லைக்குறிப்பது என்று கண்டோமாதலின், மறையின் பொருள் என்பது அச் சொல் குறிக்கும் பொருளைக் குறிப்பதாகும். மனத்திடை பரம்பொருள் வந்து நிலை பெறும்பொழுது சொல்லாகவும் சொல்குறித்த பொருளாகவும் வந்து தங்குகிறது என்பதைக் குறித்தவாறாயிற்று.

'சொல்லும் பொருளுமாய் நிற்கும்' உமாகாந்தனை வணங்குகிறேன் என்ற கடவுள் வாழ்த்துப் பாடலுடன்,

ரகுவம்சத்தைக் காளிதாசன் தொடங்குவதும் இக்கருத்தை வலியுறுத்துவதாகும்.

393. இரந்து இரந்து உருக என் மனத்துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரம் தனில் பொலியும் கமலச் சேவடியாய்
திருப்பெருந்துறை உறை சிவனே
நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீ கால்
ஆய் அவை அல்லை ஆய் ஆங்கே
கரந்தது ஓர் உருவே களித்தனன் உன்னைக்
கண் உறக் கண்டுகொண்டு இன்றே 6

நிரந்த–எங்கும்பரவிய. கரந்தது–மறைந்தது.

இப்பாடலின் முதலடியில் உளங்கனிந்து உருகுகின்ற உள்ளத்தில் சோதி வடிவாய் எழுந்தருளுகின்றான் என்று கூறவந்த அடிகளார் 'இரந்து இரந்து' என்று இருமுறை ஏன் கூறவேண்டும்? நம்முடைய மனத்தில் தோன்றும் உருக்கம், நமது செயலால் நமது முயற்சியால் நமது செயற்பாட்டால் தோன்றுகிற ஒன்றாகும் என்ற தவறான எண்ணம் பலருடைய மனத்தில் நிலைபெற்றுள்ளது. பிறருடைய துயரம் கண்டபொழுது உருகுகின்ற உள்ளம் உடையவர் என்று சிலரை நாமே குறிக்கின்றோம். உள்ளத்திற்கு உள்ள பல்வேறு இயல்புகளில் உருகுகின்ற இயல்பும் ஒன்றாதலின், அதனைப் புகழ்ந்து பெரிதுபடுத்தி நாம் பேசுகிறோம்.

அடிகளாரின் 'இரந்து இரந்து உருகி' என்ற தொடர் நாம் கொண்டுள்ள தவறான முடிவை மறுத்து உரைக்கின்றது. உண்மையான உருக்கம் உள்ளத்தில் ஏற்படவேண்டுமானால் அதை அந்த உள்ளத்தைப் படைத்தவனிடம் பலகாலம் வேண்டி வேண்டிப் பெற வேண்டும். இவ்வாறு பெறுகின்ற உருக்கம், அவன் தந்தது

ஆதலின், அந்த உருக்கத்தைப் பெற்றவன் செருக்குக் கொள்ள எவ்வித வாய்ப்பும் இல்லை.

உருக உருக சோதி எழுகின்றது என்கிறார் அடிகளார். உருக என்பதும் எழுகின்ற என்பதும் காரணகாரிய எச்சங் களாய் நின்று உருகுதல் ஆகிய காரணம் மிகுதிப்பட மிகுதிப்பட சோதி எழுகின்ற காரியமும் மிகுதிப் படுகின்றது

394. இன்று எனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்
நீ அலால் பிறிது மற்று இன்மை
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்று ஆம்
திருப்பெருந்துறை உறை சிவனே
ஒன்றும் நீ அல்லை அன்றி ஒன்று இல்லை
யார் உன்னை அறியகிற்பாரே 7

கடிந்து–நீங்கி. உள்ளத்து எழுகின்ற. நினைப்புஅற நினைந்தேன்– நினைப்பும் மறப்பும் அற்ற அதீத நிலைமையில் இருந்தமையால் இங்ஙனம் கூறினார்.

திருப்பெருந்துறையில் குருவடிவில் அமர்ந்திருந்த பெருமகனார் வழியோடு சென்றவரைத் தம்பால் இழுத்து அவர் கேளாதிருக்கவும் தம் அருளைச் சொரிந்தார் ஆதலின் 'இன்று எனக்கு அருளி' என்றார்.

இறையருளைக் கோடிக்கணக்கான உயிர்கள் வேண்டி நிற்கின்றனர். பொன்னையும், பொருளையும், போகத்தை யும் அருளவேண்டும் என்று வேண்டி நிற்பவர் பலர். இவை ஒன்றும் வேண்டா; அன்பு, அறன், அருள் என்ற மூன்றுமே வேண்டும் என்று வேண்டி நிற்போர் மிகமிகச் சிலரே ஆவர். இந்த மூன்றிலும் அருளே வேண்டும் என்று

வேண்டுவோர் அந்த மிகச் சிலருள்ளும் ஒருவர் இருவரே ஆவர்.

அருளை வேண்டிநிற்போருக்கு அவன் அருள் எவ்வாறு கிடைக்கின்றது? அருள் கிடைத்துவிட்டது என்பதை எவ்வாறு அறிவது? அதனைக் கண்டுகொள்ள மிக எளிதான வழி ஒன்றைச் சொல்கிறார் அடிகளார். எந்த விநாடி அவன் அருளினானோ அதே விநாடி ஆழ்மனத்தில் உள்ள அஞ்ஞான இருள்தானே விலகி விடுகிறது. இருள் விலகின இடம் சும்மா இருப்பது இல்லையே? உலக இருள் மறையும்பொழுது கதிரவன் தோன்றுவதுபோல அஞ்ஞான இருள் மறையும்பொழுது உள்ளத்தே எழுகின்ற ஞாயிறே போன்று இறைவன் காட்சியளிக்கின்றான்.

எழுகின்ற ஞாயிறு என்று கூறியவுடன் அந்த ஞாயிற்றுக்குரிய தோற்றம், இருத்தல், மறைதல் ஆகிய முச்செயல்களும் இறைவனுக்கும் ஏற்றப்படும் தவற்றைத் தவிர்ப்பார்போன்று எழுகின்ற ஞாயிறே போன்று 'நின்ற' நின் தன்மை என்ற சொற்களால் அத்தவறு வாராமல் பரிகரிக்கின்றார். உள்ளத்துள் இந்த ஞாயிறு தோன்றி விட்டால் பிறகு அது மறைவதேஇல்லை.

அந்த ஞாயிற்றை நாம் எவ்வாறு போற்றுவது? உலகியலில் ஒன்றை நினைந்தேன் என்றால் முன்னர் மறந்து இப்பொழுது நினைந்தேன் என்ற பொருள் வரும். அதாவது உள்ளத்து எழுந்து அங்கேயே நிலைகொண்டுள்ள ஞாயிற்றை ஒரோவழி மறந்து ஒரோவழி நினைக்கும் தவறு நேர்ந்துவிடலாம் அல்லவா? அதனைப் போக்குவதற் காகவே 'நினைப்பு அற நினைந்தேன்' என்கிறார். நினைதல் என்ற நிகழ்காலத் தொழிற்பெயர், நினைப்பாக மாறும் பொழுது, அது இறந்தகாலமாகிவிடுகிறது. மறந்துவிட்ட அந்த நினைப்பு மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவர

நேரிடுகிறது. தோன்றலும் மறைதலும் ஆகிய இரண்டும் ஒழிந்து நினைவு மாறாமல், மறையாமல், மறுபடியும் புதிதாகத் தோன்றாமல் இருக்கும் நிலையை 'நினைப்பு அற நினைந்தேன்' என்றார்.

நினைப்பற நினைக்கப்படும் அந்தப்பொருள் எது? அது 'நீ' தான், நீ என்று அறிந்த பிறகு உன்னையன்றி வேறெதுவும் இல்லை ஆதலால் பிறிதொரு பொருளென்றோ, மற்றொரு பொருளென்றோ சுட்டி நினைப்பதற்கு வேறு எதுவும் இல்லை. பொருள்கள் நாம, ரூபங்களில் வேறுபட்டிருப்பினும், அந்த வேறுபாட்டினிடையே ஒருமைப்பாடாக இருப்பவன் நீயே என்பதை அறிவிக்க, 'நீ அலால் பிறிது மற்று இன்மை' என்றார்.

இவ்வாறு பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருளும் நீயே என்று சிந்திக்கும்பொழுது ஒரு சிறு பிரச்சனை தோன்றத்தான் செய்கிறது. நிலையியற்பொருள்—இயங்கியற் பொருள், உயர்திணை—அஃறிணை, ஓரறிவு உயிர் — ஆறறிவு உயிர் என்ற இத்தணை வேறுபாடுகளிடையேயும் அவனைத்தவிர வேறு எதுவும் இல்லை என்று கூறினால், நம்முடைய சிற்றறிவு அதனை ஏற்கத் தயங்குகிறது.

இந்தக் குறைபாட்டைப் போக்க மாபெரும் விஞ்ஞானியாகிய அடிகளார், ஒரு சிறந்த விஞ்ஞானப் புதுமையைப் பேசுகிறார்.

இத்தனை வேறுபாடுகளுடைய பொருள்களும் அணு வடிவின் பெருக்கமே ஆகும். எனவே எதிர்வழிச்சென்று இப்பொருளைகளைத் பிரித்துக்கொண்டே சென்றால் எஞ்சுவது அணுவேயாகும்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதிவரை அணுதான் மூலப்பொருள், உடைக்கமுடியாது என்றும் பொருளின் இறுதியான வடிவு அணுவே என்றும் விஞ்ஞானம் கூறிவந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்விஞ்ஞான முடிவு தகர்க்கப்பட்டு அணுவுக்குள் ஒரு தனி உலகமே இருக்கின்றது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இன்று வரையில் இதன் முடிவான பொருள் இது என்று விஞ்ஞானத்தால் கூறமுடியவில்லை. சென்ற பத்தாண்டுகளில் இறுதியாக எஞ்சி நிற்கும் பொருளுக்கு நெகடிவ் பார்ட்டிக்கிள் (Negative Particle) என்று கூற முன்வந்தனர்.

அருளாளராகிய அடிகளார் 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்' என்று கூறுவது அணுவின் இறுதி வடிவமாக இருக்கும் இந்த நெகடிவ் பார்ட்டிக்கிள்தானே என்று நினைப்பதில் தவறில்லை.

நான்காவது அடியில் வரும் 'ஒன்றும் நீ அல்லை; அன்றி ஒன்றில்லை" என்ற தொடர் "நீயலால் பிறிது மற்றின்மை" என்று முன்னர் கூறியதன் விளக்கமாகும்.

395. பார் பதம் அண்டம் அனைத்தும் ஆய் முளைத்துப்
படர்ந்தது ஓர் படர் ஒளிப் பரப்பே
நீர் உறு தீயே நினைவதேல் அரிய
நின் மலா நின் அருள் வெள்ளச்
சீர் உறு சிந்தை எழுந்தது ஓர் தேனே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஆர் உறவு எனக்கு இங்கு யார் அயல் உள்ளார்
ஆனந்தம் ஆக்கும் என் சோதி 8

பார்–பூமி. பதம்–பிரமன் முதலியோர் பதவிகள். நீருறு தீ–சுடுநீரில் கலந்துள்ள வெப்பம். ஆனந்தமாக்கும் சோதீ–ஒளிக்குத் தெர ப் இயற்கையாயிருக்க இவ்வொளி ஆனந்தத்தை விளைவிக்கின்றது என்பதாம்.

இப்பாடலின் நான்காவது அடி ஒரு வளர்ச்சியடைந்த மன நிலையைக் குறிப்பதாகும். எத்துணை சாத்திரம் பேசினாலும் தேகப்பிரக்ஞை என்று சொல்லப்படும் உடல்நினைவை மறப்பது இயலாத காரியம். உடல்நினைவு இருக்கின்றவரையில் அதனால் தோன்றும் உறவுகள் இருந்தே தீரும். தேகப்பிரக்ஞை அற்ற மகான்கள்மட்டுமே யார் எனக்கு உறவு என்று பேசமுடியும். உடலுடன் வாழ்பவர்கள் ஆயினும் இந்த உடம்பை இடைப்பிறவரலாக நினைப்பவர்கள் ஆதலின் உடம்புக்குரிய உறவைத் தங்கள் உறவாக ஏற்றுக்கொள்வதில்லை. ஆகவேதான் யார் எனக்கு உறவு என்று கேட்கிறார்கள்.

உறவு என்பது ஒருவரும் இல்லாதபொழுது அதன் மறுதலையாகிய அயலார் என்பதும் இல்லை அல்லவா?

இவர்களைப் பொறுத்தமட்டில் எல்லா உயிர்களையும் இறைவன் படைப்பு என்று கருதுகிறார்களே தவிர தங்கள் உறவு அல்லது அயல் என்று கருதுவதில்லை.

உடல் பற்றும், உடல் நினைவும் நீங்கிய, அடிகளார் போன்ற மகான்களே இறையனுபவம் ஆகிய ஆனந்தத்தை முழுமையாக அனுபவிக்க முடியும். அதனை அனுபவிக்கும் போதுகூட அது தம்முடைய முயற்சியால் வந்தது என்று இவர்கள் நினைப்பதில்லை. எனவேதான், ஆனந்தம் 'ஆக்கும்' என்கிறார். ஆக்கும் என்ற சொல்லைப் பயன்படுத்தியதால், இந்த ஆனந்தத்தைத் தந்தவர் இறைவனே என்ற கருத்தையும் பெறவைக்கிறார்.

அடுத்து உள்ளது 'என் சோதி' என்பதாகும். சோதி என்ற பெயர் இறைவனுக்கு தரப்பெற்றிருப்பது பொருத்த மானதே ஆகும். ஆனால் எல்லாவற்றையும் படைத்து அனைத்திலும் ஊடுருவியும் அவற்றிலிருந்து தனித்தும் உள்ள சோதிவடிவான இறைவன், யாவர்க்கும், யாவைக்கும் பொதுவானவன் அல்லனோ?

அப்படிப் பொதுவாக உள்ள இறைவனை 'என்சோதி' என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? சற்று நின்று நிதானித்தால் 'என் சோதி' என்று அடிகளார் கூறும் தத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

'நான்' என்பதை விட்டொழித்த அடிகளாருக்கு 'என்' என்பது எங்கிருந்து வந்தது? இங்கு அடிகளார் கூறும் 'என்' நம் போன்றவர்கள் கூறும் 'என்'னிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். அடிகளார் கூறும் 'என்', பொறி, புலன்கள், அந்தக்கரணம் என்பவற்றின் குறுகிய அடிப்படையில் தோன்றும் 'என்' அன்று. இவ்வாறு தோன்றும் என், மிகமிகக் குறுகியதாய் உடம்புக் கூட்டுக்குள் அகப்பட்டு நிற்கும் நம் போன்றவருடைய 'என்' ஆகும்.

அடிகளாரின் 'என்சோதி' என்பது பரமாத்மாவிலிருந்து ஜீவாத்மாவைப் பிரித்துக் காட்டும் 'என்'னாகும். சோதி என்பது அவன். அந்தச் சோதியோடு பெரும் தொடர்புடையதாய், வேறு எவ்விதத் தொடர்பும் இல்லாததாய் விளங்கும் ஜீவாத்மாவையே 'என்' என்ற சொல்லால் அடிகளார் இங்கு விவரிக்கின்றார். அந்தச் சோதி வடிங்கும் அருள் அனுபவத்தைப் பெற்று, அதனுள்ளேயே அமிழ்ந்துவிடும் ஜீவாத்மாவைத்தான் 'என்' என்ற சொல்லால் குறிப்பிட்டார்.

396. சோதியாய்த் தோன்றும் உருவமே அரு ஆம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மா கடலே
தீது இலா நன்மைத் திருவருள் குன்றே
திருப்பெருந்துறை உறை சிவனே
யாது நீ போவது ஓர் வகை எனக்கு அருளாய்
வந்து நின் இணை அடி தந்தே 9

பந்தம்–மலக் கட்டு. தீது இலா நன்மை–என்றும் ஒரு படித்தாகத் தீதே இல்லாத நன்மை.

சொல்லாலும், கருத்தாலும் சுட்டப்படமுடியாத ஒரு பொருளை அரிதின் முயன்று சுட்ட முற்படுகின்றார் அடிகளார். உருவம், வடிவம் என்ற இரண்டு சொற்களையும் வேறுபடுத்தி, எல்லை அமைத்துக் காண்டல் வேண்டும். உருவு என்பது இன்னதென்று கண்டுகொள்ள முடியாத, குறிப்பிட்டுச் சொல்லமுடியாத ஒரு பருவடிவைக் குறிப்பதாகும். எவ்வகை உறுப்பும் வேறுபடுத்திக் கண்டு கொள்ள முடியாதபடி இருக்கும் ஒன்றையே, உருவம் என்று சொல்லுகிறோம்.

சோதியாய்த் தோன்றும் உருவமே என்றால், சோதி என்பதை இன்னதென்று குறிப்பிட்டு அதற்கொரு வடிவைக் கற்பித்துக் காணுதல் இயலாத காரியம். ஆதலால், உருவம் என்ற சொல்லை அதனோடு சேர்த்துச் 'சோதியாய்த் தோன்றும் உருவமே' என்றார்.

'அருவாம் ஒருவனே' என்பது அடுத்து நிற்கும் தொடராகும். அருவம் என்பது உருவோ, வடிவோ இல்லாத ஒன்றையே குறிப்பதாகும். அப்படிப்பட்ட ஒன்றை ஒருவனே என்று சொல்லுவது எவ்வாறு பொருந்தும்? அருவாகவும், சோதியாகவும், உருவாகவும், வடிவாகவும் இருக்கும் ஒன்றை நன்கறிந்துகொண்டவர் அடிகளார். அது பெண்ணன்று, ஆணன்று, அலியுமன்று என்பதையும் நன்கறிந்தவர் அடிகளார். அப்படியிருக்க ஒருவனே என்று ஆண்பாலுக்குரிய 'அன்' விகுதி கொடுத்துப் பேசுவது எவ்வாறு இயலும்? இவற்றிற்கெல்லாம் விடை காண வேண்டுமாயின் திருப்பெருந்துறை நிகழ்ச்சியை மறுபடியும் நம் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும்.

குருவடிவில் அமர்ந்திருந்தவர் ஆண்வடிவுடைய ஒருவர் ஆவார். அந்த ஆண் வடிவம் திருவடி தீட்சை செய்து, திருவாதவூரரை மணிவாசகராக மாற்றியதென்னவோ உண்மைதான். அம்மாற்றம் பெற்ற அடிகளார், எதிரே உள்ள குருவடிவில் உமையொரு பாகனையே கண்டார். என்றாலும் என்ன? அடிகளாரால் சிவன் எனத் தேறப்பெற்றவன் புவனியில் சேவடி தீண்டும்படியாக இருந்த குரு அல்லவா? எனவே, அடிகளாரைப் பொறுத்தமட்டில் குருவைப் பார்த்தவுடன் ஏற்பட்ட முதல் எண்ணப் பதிவு (first impression) ஆண் வடிவம் அல்லவா? ஆகவேதான், ஒருவன் என்ற சொல் அடிகளார் மனத்தை விட்டு நீங்கவே இல்லை. 'அருவாம் ஒருவனே' என்று கூறுவது மாறுபாடுடைய இரண்டு சொற்களின் கூட்டாகும் என்பதை அறியாதவர் அல்லர் அடிகளார். அப்படியிருந்தும் இந்த இரண்டு சொற்களையும் ஒன்றுசேர்த்துப் பேசுவதில்தான் அவரது அனுபவ விளக்கம் நன்கு தெரிகிறது. 'சோதியாய்த் தோன்றும் உருவமே' என்பதும் இதுபோன்ற முரண்பட்ட சொற்களின் இணைப்புத்தான்.

ஆதியே, நடுவே, அந்தமே என்று கூறவந்தவர், 'சொல்லுதற்கரிய' என்ற சொற்களை ஏன் முதலில் பயன்படுத்த வேண்டும். ஆதி, நடு, அந்தம் என்பவை காலம், இடம் (space, time) என்பவற்றால் வரையறுக்கப் பட்ட எல்லையுடையன. இந்த எல்லை எவ்வளவு பெரிதாக இருப்பினும் எல்லை எல்லைதான். ஆனால் விரிந்துகொண்டே செல்லும் இயல்புடைய பிரபஞ்சத் திற்குக்கூட இடவகையால் எல்லைவகுப்பது கடினம். காரணம், விநாடிக்கு விநாடி இப்பிரபஞ்சம் விரிந்து கொண்டேயிருக்கிறது. பிரபஞ்சத்தின் விளிம்பில் ஒரு பகுதியைத் தொட்டு இதுதான் ஆதி என்று சொல்லி முடிப்பதற்குள் அந்த எல்லை விரிந்து ஆதி என்று

சுட்டப்பட்ட ஒன்று நடுவாக மாறிவிடுகின்றது. காலத் தத்துவமும் இதுபோலத்தான். எனவே, பருப்பொருளாகிய பிரபஞ்சத்திற்கும், கருத்துப் பொருளாகிய காலத்திற்கும் ஆதி, நடு, அந்தம் என்ற எதுவு மில்லை. அதனாலேயே விஞ்ஞானம் அறிந்த அடிகளார் 'சொல்லுதற்கரிய' என்ற விளக்கத்தைத் தருகிறார்.

இந்த ஒன்றரை அடிகளில் ஈடு இணையற்ற முறையில் மூலப்பொருளுக்கு இலக்கணம் வகுத்த அடிகளார், திடீரென்று அந்தப் பொருளின் எளிவந்த தன்மைக்கு (சௌலப்பியம்), இலக்கணம் வகுக்கும் முறையில் (நம்) 'பந்தம் அறுக்கும் ஆனந்தமாகடலே' என்கிறார்.

அந்த மூலப்பொருளுக்கு உருவும், வடிவும் என்ற எதுவும் இல்லையென்றாலும், நம்முடைய விருப்பத்திற் கேற்ப ஒரு வடிவைக் கற்பிக்கலாம் அல்லவா? அந்த முறையில்தான் 'திருவருட்குன்றே' என்கிறார் அடிகளார். திருவருள் மலை என்று முன்னர்ப் பேசிய அடிகளார், இப்பொழுது 'குன்று' என்று கூறவேண்டிய காரணம் என்ன? மலை என்று கூறினால், அளக்கலாகாப் பருமை உடையதாதலால் அதில் நம் போன்றவர்கள் ஏறிப் பயனடைதல் இயலாதென்று கருதி, அம்முயற்சியையே விட்டுவிடுவோம்.

நம் இயல்பை அறிந்த அடிகளார், நம்முடைய அச்சத்தைப் போக்குவான் வேண்டி, மலை என்ற சொல்லுக்குப் பதிலாக மலையிலும் சிறியதாகிய குன்று என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

திருவருளைக் குன்று என்று உருவகித்தது சரி. 'தீதிலா நன்மை' என்ற அடைமொழிகள் எதற்கு? நன்மை என்ற சொல் காதில் விழுந்தவுடன் அதன் மறுதலையாய தீமை என்ற சொல் மனத்திலே தோன்றத்தான் செய்யும். சுகம்—

துக்கம்; சூடு—குளிர்ச்சி; நன்மை—தீமை; ஒளி—இருள்; போன்ற இரட்டைகளிலிருந்து ஒன்றைப் பிரித்தல் கடினம்.

உலகமும், உலகில் உள்ள பொருட்களும் இந்த இரட்டை வடிவுடன்தான் உள்ளன.

இறைவனின் திருவருள் இந்த இரட்டை வடிவம் இல்லாத ஒன்று. அவன் எப்படி ஏகனோ அது போல அவன் திருவருளும் ஏகம்தான். இதனை அறிவுறுத்தற் காகவே 'தீதிலா நன்மைத் திருவருட் குன்றே' என்றார்.

நான்காவது அடி திருப்பெருந்துறை நாடகத்தின் முடிவுபற்றியதாகும். இந்த முடிவை எவ்வளவு முயன்றும் அடிகளாரால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. வழியோடு போன தம்மை இழுத்துப் பிடித்து அருள்புரிந்து ஆனந்தக்கடலில் அமிழ்த்திய குருவானவர், திடீரென்று ஏன் மறையவேண்டும்? தம்மிடத்தில் என்ன தவற்றைக் கண்டார்? எவ்வளவு சிந்தித்தும் விடை தெரியாத காரணத்தால் 'என்னை இவ்வாறு விட்டுச் செல்வது உனக்கே நியாயமா?' என்ற கருத்தில் பின் வருமாறு பேசுகிறார்!. ஐயா! பார் முதல் அண்டமாய் விரிந்து நிற்கும் நீ மானுட வடிவுடன் திருப்பெருந்துறையில் எழுந்தருளி, நின் இணை அடியை எனக்குத் தந்து, என்னை ஆட்கொண்டபின் (என்னை உடனழைத்து செல்லாமல்) நீ மட்டும் போவது நியாயமோ? சொல்வாயா'க என்று கூறுகிறார்.

'(நான்)' போவது ஓர் வகை யாது? நீ எனக்கு அருளாய்' என்ற முறையில் கொண்டுகூட்டுச் செய்வது மற்றொரு பொருளைத் தரும். 'ஐயனே! நீ மறையும்பொழுது உன்னோடு வராமலும் இந்த உலக வாழ்க்கையில் முன்போலக் கலந்து வாழமுடியாமலும் இரண்டுங் கெட்ட நிலையில் உள்ளேன். எந்த வகையில்

போகவேண்டும் என்பதை முடிவுசெய்யும் ஆற்றல் என்பால் இல்லை. நீயும் உன் அடியார்களும் இருக்கும் இடத்திற்கு என்னை அழைத்துக்கொள்ள விரும்பா விட்டாலும், இரண்டும் கெட்ட நிலையிலுள்ள என்பால் இரங்கி "இந்த வழியே செல்" என்று சொல்லி உதவக்கூடாதா?" என்றவாறு.

397. தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை
சங்கரா ஆர் கொலோ சதுரர்
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடல் இடம் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே 10

உன்தன்னை – முற்றறிவும், முற்றுத்தொழிலும், இயல்பாகவே பாசநீக்கமும் பெற்ற தேவரீரை. கொண்டது என்றது – இறைவன் தான் ஒத்த நிலையில் இறங்கிவரினும், ஆன்மகுணம் போகாமையின். என் தன்மை – ஆன்மவியல்பு முழுதும் வாய்ந்த இழிந்த என்னை. சதுரர் – சமர்த்தர். அந்தம் – இறுதி.

இப்பாடலில் ஒரு வாணிகம்பற்றிப் பேசுகிறார், அடிகளார். வாணிகத்தின் அடிப்படை என்ன? ஒத்த மதிப்புடைய இரண்டு பொருள்களை இருவர் மாற்றிக் கொள்வதே வாணிகம் அல்லது வியாபாரம் எனப்படும். ஒரு பொருளுக்கு விலை நூறு ரூபாய் என்றால் நூறு ரூபாய்க்குள்ள மதிப்பு அந்தப் பொருளுக்கு இருத்தல் வேண்டும். ஒரோவழி நூறுரூபாய் நோட்டை வாங்கிப் போட்டுப் பொருளை விற்றுவிட்டவர் ஏமாந்துபோவதும் உண்டு. காரணம் அந்த நூறு ரூபாய் நோட்டுப் போலி நோட்டாகும்.

இத்தகைய ஒரு வாணிகம் இப்பாடலில் பேசப் பெறுகிறது. அடிகளாரின் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பெற்றுக்கொண்டு இறைவன், திருவருள் என்ற பெயரில் தன்னையே அவருக்குத் தந்துவிட்டான். இந்தப் பண்டமாற்று அல்லது பொருள்மாற்று நடைபெற்ற பிறகு, அடிகளார் இறைவனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிறார். 'ஐயனே! என்னை முழுவதுமாகப் பெற்றுக் கொண்டு, உன்னை முழுவதுமாகத் தந்தாயே, இந்த வியாபாரத்தில் யார் கெட்டிக்காரர் என்பது உனக்குத் தெரியுமா? பெருவாணிகனாகிய உனக்கு இந்தச் சிறு வியாபாரத்தின் பயனைப்பற்றிச் சிந்திக்க நேரமிருக்காது. இப்பொழுது நான் சொல்லுகிறேன், நீ என்னுள் புகுந்ததால் அந்தம் ஒன்றில்லா (முடிவில்லாத) ஆனந்தத்தை யான் அடைந்தேன் பாவம்! என்னைப் பெற்றுக் கொண்டதால் உனக்கு என்ன பயன் விளைந்தது' என்று கூறுவதன்மூலம் அடிகளார் ஒரு மாபெரும் தத்துவத்தை விளக்குகிறார். அதனைப் புரிந்துகொள்ள ஒரு உதாரணம் தேவை.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலமுடைய ஒருவன் ஒரு ஏழை வைத்திருக்கும் கால் ஏக்கர் நிலத்தை அந்த ஏழை விரும்பும் அளவுக்குப் பொருள் கொடுத்துப் பெற்றுக் கொண்டான். ஆயிரம் ஏக்கர்காரனுக்கு இந்தக் கால் ஏக்கரால் எவ்வித லாபமும் இல்லை. ஆனால், அதனை விற்ற ஏழைக்குப் பெற்ற பொருளால் அவன் விரும்பிய வாழ்வு கிடைத்தது.

பிரபஞ்சத்தில் உள்ள கோடிக்கணக்கான உயிர்களைப் படைத்து அவற்றை வாழுமாறு திருவருள் செய்பவன் இறைவன். உடல், பொருள், ஆவி என்ற கால் ஏக்கர் நிலத்தை விற்ற ஏழைதான் அடிகளார். அந்தமொன்றில்லா ஆனந்தத்தை அவர் பெற்றது உண்மைதான்.

பாடலின் தொடக்கத்தில் தந்தது உன்தன்னை என்கிறாரே அப்படித் தன்னையே தந்தவன் இவருள் எங்கே புகுந்தான்? மணிவாசகர் என்ற மனிதருக்கு ஆணிவேராய் நிற்பது அவருடைய சித்தம் அல்லவா? அந்தச் சிந்தையில் அவன் குடிபுகுந்துவிட்டான் என்பதைச் 'சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்' என்ற தொடரில் குறிப்பிடுகிறார்.

'கரணங்களெல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றான்' (223) என்றும், 'கனவேயும் தேவர்கள் காண்பரிய கனை கழலோன்' (224) என்றும், 'பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்; போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே' (164) என்றும் இறைவனின் இறப்ப உயர்ந்த இலக்கணத்தைப் பலபடியாகப் பாடியுள்ளார். இப்பொழுது 'ஈசா (என்) உடலிடங் கொண்டாய்' என்று பாடுவது அவனது இறப்ப எளிவந்த தன்மையைக் கூறுவதாகும்.

ॐ ॐ ॐ

பின்னுரை

இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை போன்ற சிறு பிரபந்தங்கள் காரைக்கால் அம்மையார் காலத்திலிருந்தே (மூன்றாம் நூற்றாண்டு) இருந்துவந்தன. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த சேரமான் பெருமான் நாயனார் திருக்கயிலாய ஞானஉலா என்ற பெயரில் தமிழ் இலக்கியத்தில் அதுவரை காணப்படாத 'உலா' என்ற புதுவகைப் பிரபந்தத்தைத் தோற்றுவித்தார். அடிகளார் காலத்திற்கு ஐந்து நூற்றாண்டுகள் முன்னரும் அவருக்கு நான்கு நூற்றாண்டுகள் பின்னரும் உள்ள இக்காலம் தமிழ்ப் பக்தி இலக்கியத்தின் பொற்காலமாகும்.

சிலப்பதிகாரம் கானல் வரியில் இடம்பெறும் இசைப்பாடல்கள் உருவும், வடிவும் மாறினாலும் இசைப்பாடல் தன்மையை இழக்காமல் மூவர் முதலிகளின் தேவாரப் பாடல்களிலும், நம்மாழ்வார் உள்ளிட்ட ஆழ்வார்களின் திருப்பாடல்களிலும் இடம்பெற்றன. இந்த இசைப்பாடல்கள் நாளாவட்டத்தில் மெள்ள மெள்ள இசைப்பகுதியை விட்டுவிட்டு விருத்தப் பாக்களாக நின்றுவிட்டன. தோலாமொழித்தேவரின் சூளாமணி, கம்பனின் இராம காதை, திருத்தக்கதேவரின் சிந்தாமணி, சேக்கிழாரின் பெரியபுராணம் ஆகியவை விருத்தப் பாடல்கள் ஓகோ என்று வளர்ந்தமைக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோள்நோக்கம் என்ற தலைப்புகளில் பாடல்கள் உள்ளன. பின்னர் வரும் கோயில் திருப்பதிகம் போலப் பிற்காலத்தார் தம் விருப்பம்போல் கொடுத்த தலைப்புகள் அல்ல இவை.

இத்தலைப்புகளின்கீழ் வரும் அத்தனைப் பாடல்களிலும் இத்தலைப்புத் தொடர்கள் இடம் பெற்றுள்ளன.

ஈடு இணையற்றதாகிய திருவாசகத்தில் இத்தலைப்புகள் இடம் பெற்றிருந்தும் பின்னர் வந்தவர்களில் ஒருவர்கூட அடிகளாரைப் பின்பற்றி இத்தலைப்புகளை ஏன் பயன் படுத்தவில்லை? இது போன்ற வினாக்களுக்கு விடை காண்பது கடினம்தான்.

சுண்ணம் பற்றிய குறிப்பு குணமாலை, சுரமஞ்சரி இலம்பகங்களில் இடம்பெறினும் அடிகளாரின் பாடல்முறை அங்கு ஏற்கப்படவில்லை. இடிப்பதற்கு உரிய தாளகதியோடு கூடிய பண்முறையில் அமைந்துள்ளது திருப்பொற்சுண்ணம் என்று அப்பகுதியின் முன்னுரையில் குறிப்பிட்டிருந்தோம். மாபெரும் கவிஞராகிய திருத்தக்கதேவர் இந்தத் தாளகதியோடு கூடிய பாடலமைப்பை ஏனோ மேற்கொள்ளவில்லை.

திருப்பொற்சுண்ணம்

திருப்பொற்சுண்ணம் என்ற தலைப்பில் இருபது பாடல்கள் உள்ளன. இதிலேயும் ஒரு வளர்ச்சி முறையைக் காணமுடிகிறது. அடிகளார் இடிக்கும் பொற்சுண்ணம், ஏனையோர் இடிக்கும் சுண்ணம் போன்றதன்று. ஏனையோர் உற்பத்திசெய்யும் பொற்சுண்ணம் அனைவரும் பயன்படுத்தக்கூடியதாகும். நீராடப் போகின்றவர் யார் வேண்டுமானாலும் ஒரு வீட்டில் தயாரிக்கப்பட்ட சுண்ணத்தை எடுத்துப் பயன்படுத்தலாம். மேட்டுக்குடி மக்கள் அனைவர் வீட்டிலும் இச்சுண்ணம் பல நாட்களுக்கு உபயோகப்படும்படியாகச் சேமித்து வைக்கப் பெற்றிருக்கும். இந்தச் சுண்ணத்தை இடிப்பதற்கு வீட்டை அலங்காரம் செய்தல், முளைப்பாரி வைத்தல், கவரி வீசுதல் முதலிய பிற நிகழ்ச்சிகள் எதுவும் நிகழ்வதில்லை. அன்றியும்

நம்மைப் போன்ற மனிதர்கள் பயன்படுத்துவதற்காகவே இச்சுண்ணம் இடிக்கப்பெற்றது.

ஆனால், அடிகளார் தயாரிக்கும் பொற்சுண்ணம் மனிதர்கள் பயன்படுத்துவதற்கு உரியதன்று. மூலப் பரம் பொருளாகிய இறைவனுடைய அபிடேகத்திற்கென்று செய்யப்பெற்ற பொற்சுண்ணமாகும். நாம, ரூபம் கடந்த பரம்பொருள் தில்லையிலும், திருப்பெருந்துறையிலும் திருவையாற்றிலும், திருவேகம்பத்திலும் வடிவுகொண்டு திருக்கோயிலில் அமர்ந்திருத்தலின் அந்த வடிவங்களை முன்னிலைப்படுத்தி அவர்கள் அபிடேகத்திற்குரிய சுண்ணத்தை இடிப்பதாக அடிகளார் பாடிச்செல்கிறார்.

இச்சுண்ணம் இறைவனுக்கு இடிக்கப்படுவது ஆதலின், அது இடிக்கப்படும் இடம் மெழுகி, தூய்மைப்படுத்தப்பட்டு அலங்கரிக்கப்படுவதாக முதல்மூன்று பாடல்களில் கூறுகி றார். பொற்குடம் வைத்தல், கோலமிடுதல், முளைப்பாரிக் கிண்ணங்களை வரிசையாக வைத்தல், திருவிளக்கேற்றுதல், தூபமிடுதல் ஆகிய அலங்காரங்கள் செய்யப்பெறுகின்றன.

சுண்ணமிடிப்போர் தம்முள்பாடும் சாதாரணப் பாடல் களுக்குப் பதிலாக இறைவன் புகழைப் பாடவேண்டும் என்கிறார் அடிகளார். இதனை அடுத்து, திருநீற்றோடு பல அணிகலன்களையும் அணிந்துள்ள பெண்கள் உலக்கை பற்றி இடிக்கும்போது அவர்கள் உறுப்புகளும் அவற்றில் அணிந்துள்ள அணிகளும் ஒரு தாளகதியோடு ஆடுதலின், ஆட ஆட என்று அழகிய தொடர்மூலம் நம் கண்ணெதிரே அக்காட்சி நடைபெறுவதைப் போலப் பாடிச் செல்கிறார்.

எட்டுப்பாடல்களை இம்முறையில் பாடிச்செல்லும் அடிகளாருக்குத் திடீரென்று ஓர் ஐயம் பிறக்கிறது. சுண்ணமிடித்தல் என்று சொல்லியவுடன் சாதாரண மனிதர்களுக்கு இடிக்கப்படும் சுண்ணம், அதற்குரிய கருவியாகிய உரல், உலக்கை, அவற்றுக்குச் செய்யப்பட்ட

அலங்காரம் என்பவைபற்றியே இதுவரை பாடிவிட்ட அடிகளார் உள்ளத்தில் ஒரு வினாத் தோன்றிவிட்டது.

யாருக்கு இந்தச் சுண்ணத்தை இடிக்கிறோம்? பிரபஞ்சம் முழுவதும் தன் உடலின் பகுதியாகக் கொண்டு அதன் மேலும் கீழும் வளர்ந்திருக்கின்ற ஒருவனுக்கல்லவா இச்சுண்ணம்! 'பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்; போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே' என்ற முறையில் மேலும் கீழும் நிறைந்துநிற்கும் அப்பொருளுக்கு உரியது இச்சுண்ணம். பேதை ஒருபால் உண்டு; அவன் திருமேனியும் ஒன்றல்லவே! இப்படிப்பட்ட ஒருவனுக்கு சுண்ணம் இடிப்பதென்றால் நாம் அன்றாடம் பயன் படுத்தும் உரலும் உலக்கையும் எம்மாத்திரம் என்ற நினைவு அடிகளார் உள்ளத்தில் விரிவாகத் தோன்றியவுடன் ஒரு கணம் சிந்திக்கின்றார். இவன் வடிவுக்கு ஏற்பப் பொடி இடிக்க வேண்டுமானால் இப்பிரபஞ்சம் முழுவதும் உரலாக இருக்கவேண்டும். வையகம் முற்றும் என்றதால் பிரபஞ்சம் முழுதும் என்ற பொருள் கொள்ளப்பெற்றது. அந்த உரலுக்கேற்ற உலக்கையாக மாமேரு மலை இருக்க வேண்டும்.

இந்தச் சாதாரண உரலும் உலக்கையும் போதாது என்ற எண்ணம் அடிகளார் மனத்தில் தோன்ற, வந்திருந்த அடியவர்களும் உதவினர் என்பதை 200ஆம் பாடல் குறிப்பிடுகின்றது. பல உலக்கைகளைக் கைக்கொண்டு பல உரல்களில் சுண்ணமிடிக்கும் பெரியவர்கள் இது போதாதென்று கருதத்தொடங்கினர். அதே கருத்து அடிகளார் மனத்தையும் பற்றிக்கொள்ள, மேலும் ஒரு படி செல்கிறார் அடிகளார். உலக்கை பல ஓச்சும் பெரியவர்கள் இது போதாதென்று கருதினார்களே தவிர, மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்று அவர்கள் சிந்தனை தொடரவில்லை. ஆனால், அடிகளார் சிந்தனைமட்டும் மேலும் விரிந்ததால், 'போதாது' என்ற எண்ணத்திற்கு

விடை காண்பார்போல 'வையகம் எல்லாம் உரலதாக' என்று பாடுகின்றார்.

சுண்ணம் இடிப்பவர்கள், உலக்கை உரலில் விழும் தாளகதிக்கு ஏற்பச் சந்தம் அமைத்துப் பாடுவார்கள் என்பது முன்னர்க் கூறப்பெற்றது. ஆனால் அந்தப் பாடல் எந்தப் பொருள்பற்றிப் பாடப்பட வேண்டும் என்ற வினாவிற்கு விடைகூறுகிறார், 205ஆம் பாடலில். எந்தப் பொருள் பற்றி என்றால் 'இரண்டு வகைகளில் என்று' அதற்கு விடை கூறலாம்.

முதலாவது வகை அவனுடைய பெருமைகளைப் பற்றிப் பாடுவதாகும். இம்முறையில் பல பாடல்கள் பாடப்பெற்று விட்டன. இரண்டாவது வகை அவனுடைய எளிவந்த தன்மையையும் தங்களை அவன் ஆட்கொண்ட வண்ணமும் பற்றிப் பாடுவதாகும்.

சுண்ணமிடிக்கின்றவர்கள் எதுபற்றிப் பாடலாம் என்ற வினாவை எழுப்பினார்கள்போலும்! அவர்கட்கு விடை கூறுவார்போலப் 'பாடுமின் நம்தம்மை ஆண்டவாறும் பணிகொண்ட வண்ணமும். பாடிப் பாடித் தேடுமின் எம்பெருமானை' என்று கூறிமுடிக்கின்றார்.

தம்மை ஆண்டதுபற்றிப் பாடுங்கள் என்று கூறுவது சரி. ஆனால், சுண்ணமிடிக்கின்றவர்களைப் பார்த்துப் 'பாடிப் பாடித் தேடுமின்' என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? நம்தம்மை ஆண்டவாறும் என்பதுகூட எவ்வாறு பொருந்தும்? அடிகளார் ஒருவரைத்தானே திருப்பெருந்துறை நாயகன் ஆண்டுகொண்டான். அப்படியிருக்க, 'நம்தம்மை' என்று தன்மைப்பன்மையாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

யாவரினும் கடைப்பட்டவராக அடிகளார் தம்மைக் கூறிக்கொள்பவராதலின், தம்மை ஆட்கொண்ட அதே நேரத்தில் தராதரம் பாராமல் மக்கள் அனைவரையும்

ஆட்கொண்டான் என்ற முடிவில் அடிகளார் இருந்தார் போலும். 'எந்தரமும் ஆட்கொண்டு' என்று அவரே பலமுறை கூறியுள்ளார். அதனாலேயே 'நம்தம்மை ஆண்ட வாறும் பணிகொண்ட வண்ணமும்' என்று பாடுகிறார்.

அடுத்து, தம்மை ஆட்கொண்டவர் திடீரென்று மறைந்துவிட்ட காரணத்தால் அடிகளார் அவரைத் தேடி அலைந்தார் என்பதை அறிவோம். இப்பாடல் பாடப் படுகின்ற நேரம்வரை அவர் தேடியலைந்த குருநாதர் அகப்படவில்லை. எனவே உலக்கை பற்றிப் பொடி இடிக்கும் அனைவரையும் உளப்படுத்தி, ஆண்டவாறு பாடுதும் என்று கூறியவர், ஒருபடி மேலே சென்று 'பாடிப் பாடித் தேடுமின் எம்பெருமானை' என்றார்.

சென்ற பாடலில் (திருவாச: 205) தேடுமின் என்று கட்டளையிட்ட அடிகளாரிடம் யாரைத் தேடிச் செல்வது, அவனுக்குரிய அங்க அடையாளங்கள் யாவை என்ற வினாக்களைத் தேடிச்செல்பவர் கேட்பரல்லவா? அதற்கு விடை கூறுவதுபோல இப்பாடலில் (திருவாச 206) 'மை அமர் கண்டனை வான நாடர் மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை, ஐயனை, ஐயர் பிரானை, நம்மை அகப்படுத்து ஆட்கொண்டு அருமை காட்டுபவனை'த் தேடுமின் என்கிறார்.

தேடிச் செல்பவர்கள் ஒரே நிலையில் உள்ளவர்கள் என்று கூறுவதற்கில்லை. அடிகளாரைப் போன்று ஊனக் கண்ணால் அவனைக் காணும் பேறு பெற்றவர்களும் தேடுபவர்கள் கூட்டத்தில் இருக்கலாம். அவன் தம்மை ஆட்கொண்டான் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ள முடியாமல் அவன் உண்டோ இல்லையோ என்ற ஐயத்துடன் தேடுபவர்களும் அக்கூட்டத்தில் இருக்கலாம்.

மேலே சொன்ன அடையாளங்களை வைத்துக் கொண்டு தேடிச்செல்பவர்களில் மேம்பட்ட நிலையில்

உள்ளவர்கள், எல்லா இடங்களிலும் எல்லாப் பொருளிலும் அவன் ஊடுருவி நிற்பதைக் கண்டுகொண்டார்கள் ஆதலின் 'மெய்யர் தம் மெய்யை' என்றார்.

அடுத்து, கீழ் நிலையில் உள்ளவர்கள் இந்த அடையாளங்களைமட்டும் வைத்துக்கொண்டு தேடிச் சென்றவர்கள் ஆவர். அவர்களைப் பொறுத்தமட்டில் தேடப்பட்டவனின் உண்மை இயல்பை அதாவது எல்லாப் பொருளிலும் ஊடுருவி நிற்கும் நிலையை அறியாதவர்கள் ஆதலின் பொருள்களைத் தனித்தனியே கண்டனர். எனவே, இறுதியாக அப்படியொரு பொருளில்லை என்ற முடிவிற்கே வந்துவிட்டனர். உண்மையை அறியாதவர்கள் ஆதலின் அவர்களைப் பொய்யர் என்றார். அப்படி ஒரு பொருளே இல்லை என்ற முடிவிற்கு அவர்கள் வந்துவிட்டார்கள் ஆதலின் 'பொய்யர் தம் பொய்யினை' என்றார்.

மையமர் கண்டனை (திருவாச: 206) என்ற பாடலில் நீலகண்டம் முதலிய பல்வேறு அடையாளங்கள் கூறி, இத்தகையவனைத் தேடுமின் என்றார். இந்த அடையாளங்களை வைத்துக்கொண்டு தேடவேண்டுமாயின் அறிவு, உணர்வு என்ற இரண்டும் தொழிற்படவேண்டும். இவற்றைப் பயன்படுத்த முடியாதவர்களை நோக்கி நாச்சுவை ஒன்றையே அடித்தளமாக வைத்து இறைவன் எத்தகையவன் என்பதை இதோ பாடுகிறார்.

கரும்பின் தெளிவு, பாகு, நாடற்கரிய நலம், நந்தாத் தேன், பழச்சுவை என்ற இவற்றையெல்லாம் அனைவரும் அனுபவித்திருப்பர் என்பதால் இவற்றை வரிசைப்படுத்தி இதுபோன்ற சுவையாகவுள்ளவன் அவன் என்று கூறிவருகிறார். அப்படியானால் இங்குக் கூறப்பெற்ற நாச் சுவை போன்றவனா அவன் என்று ஐயுறுவார்க்கு

விடைகூறுவார்போலச் 'சித்தம் புகுந்து தித்திக்க வல்ல கோன்' என்று மேலுமோர் அடையாளம் கூறினார்.

அடுத்து வரும், அடி சற்று நுணுக்கமானதாகும் அத்தகையவனைத் தேடும்பொழுதும், கண்டபோதும் 'நாத்தழும்பேற வாழ்த்திப் பாடுங்கள்' என்கிறார். பாடுங்கள் என்றால் யாரை— என்ற வினாத் தோன்று மன்றோ? அதற்குரிய விளக்கம் இந்த அடியின் முற்பகுதியில் உள்ளது. 'பிறப்பறுத்து ஆண்டுகொண்ட கூத்தன்' ஆகும் என்பது அப்பகுதி. பிறப்பறுத்தல் ஒருசெயல்; ஆண்டுகொள்ளல் மற்றோர் செயலாகும். இதில் எது முந்தையது? அறுத்து என்பது இறந்தகால வினையெச்சமாகும். அப்படியானால் முதலில் பிறப்பை அறுத்துப் பின்னர் ஆண்டுகொண்டான் என்றல்லவா பொருள் தருகிறது? ஆண்டுகொள்ளல்தானே முதலில் நடைபெற்றது. அவனால் ஆட்கொள்ளப்பெற்ற பின்னரும் இவருடைய பூதவுடல் இருந்துகொண்டுதானே இருக்கிறது? அப்படியிருக்க, பிறப்பறுத்து என்பது எவ்வாறு பொருந்தும்? இங்கு, பிறப்பு என்பது இனி வரப்போகும் பிறப்பையாகும்.. வரப்போகும் பிறப்பை அறுப்பதற்கு அறிகுறியாகவே ஆண்டுகொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்படியானால் அறுக்கும் என்று எதிர்காலத்தில் அல்லவா சொல்லியிருக்க வேண்டும்? அதுதான் உண்மை; அது உறுதியாக நடைபெறப்போகின்றது ஆதலின் அந்த உறுதி காரணமாக எதிர்காலத்தில் நிகழப்போகும் நிகழ்ச்சியை அறுத்து என்ற இறந்த கால வாய்பாட்டால் கூறினார்.

திருப்பொற்சுண்ணத்தில் பெரும்பாலும் இறைவனுடைய வடிவு முதலியவற்றைப் பேசியுள்ளார். ஆனால், திருப்பெருந்துறை நிகழ்ச்சியில் தம்மை ஆட்கொண்டவை திருவடிகள் ஆதலின் இதுவரை வந்துள்ள பாடல்களில் பலப்பல இடங்களில் திருவடியைச் சுட்டிப் பாடுவது

அடிகளாரின் வழக்கமாக இருந்துவருகிறது. இம்முறையை மாற்றி, இறைவனுடைய வடிவைப் பல்வேறு விதங்களில் திருப்பொற்சுண்ணத்தில் பாடினார் என்றாலும், அவரையும் மீறி 203ஆம் பாடலில் 'திருவடி பாடிப் பாடி' என்றும் 208ஆம் பாடலில் 'சடைமுடியான் கழற்கே' என்றும் பாடியவர், 210ஆம் பாடலில் 'தேவர் கனாவிலும் கண்டறியாச் செம்மலர்ப் பாதங்கள் காட்டி' என்றும் பாடுகிறார். தேவர்கள் கனவிலும் காணாத திருவடியைத் தம்மாட்டுக் கொண்ட கழிபெருங் கருணை காரணமாக அவனே வந்து காட்டினான் என்பது இவ்வடிகளின் சிறப்பாகும்.

211ஆம் பாடலிலும் வடிவழகே கூறுகிறார். அடுத்து 212ஆம் பாடலில் வடிவழகன் செய்த வீரச்செயல்கள் விரித்துப் பேசப்பெறுகின்றன. சரிபாதிப் பாடல்வரை ஈடிணையற்ற அவனுடைய வீரத்தைச் சொல்லிக்கொண்டு வந்தவர், அத்தகைய பெருவீரன் ஏழை அடியார்கள் மாட்டுக் கொண்ட பெருங்கருணையால் இறங்கிவந்து அருள் செய்ததை 'ஏழை அடியோமை ஆண்டுகொண்ட நயந்தனைப் பாடி' என்கிறார்.

திருக்கோத்தும்பி

திருவாசகத்திலுள்ள பல தலைப்புகள் தமிழ் இலக்கிய உலகில் வேறு நூல்களில் அதிகம் காணப்பெறாத புதுமையுடையன என்று முன்னரே குறித்துள்ளோம். அவற்றுள் ஒன்று திருக்கோத்தும்பி என்ற தலைப்பில் வரும் இருபது பாடல்களாகும். இப்பாடல்கள் பலவற்றை அகத்துறைப் பாடல்களாகக் கொண்டு தலைவியும், தோழியும், இயற்பட மொழிதல், இயற்பழித்து மொழிதல், தூதனுப்புதல் என்ற முறையில் பலரும் பொருள் கொண்டுள்ளனர்.

பக்தி நூல்களுள் திருவாசகம் தனித்தன்மை வாய்ந்தது. அதிலுள்ள பாடல்களும் தனித்தன்மை வாய்ந்தவை. ஆயிரக்கணக்கான பக்திப் பாடல்களைப் பெற்றுள்ள தமிழ் இலக்கியத்தில் திருவாசகம் போன்ற ஒரு நூல் எதுவும் இல்லை.

இறையனுபவத்தில் ஈடுபட்டு இறைவனைப் பாடிய பாடல்கள் பல்லாயிரம் உண்டேனும், அந்த அனுபவம் எத்தகையது, எவ்வாறிருந்தது என்று கூறும் பாடல்கள் திருவாசகம் ஒன்றில்தான் உண்டு. தாம் பெற்ற அனுபவத்தைப் புற நிலையில் நின்று மறுபடியும் காணும் வாய்ப்பை அடிகளாருக்கு இறைவன் அருளினான். அதன் பயனாகவே திருவாசகம் தோன்றிற்று என்று முன்னரும் கூறியுள்ளோம்.

இதனோடு ஒப்புமை சொல்லக்கூடிய நூல் வேறு எதுவும் இல்லாதபோது பழைய மரபுபற்றியே இப்பாடல் களுக்குப் பொருள் கூறவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. உதாரணமாக, திருக்கோத்தும்பியை எடுத்துக் கொள்ளலாம். இருபது பாடல்களைக் (215—234) கொண்ட இப்பகுதியில் இராஜ வண்டு எனக் கூறப்பெறும் கோத்தும்பியை விளித்து அடிகளார் பல செய்திகளைக் கூறுகின்றார்.

இந்த இருபது பாடல்களில் வண்டைத் தூதாக அனுப்பும் செய்தி 227, 233 ஆகிய இரு பாடல்களில் மட்டுமே இடம் பெறுகிறது. பழைய மரபைப் பின்பற்றி எல்லாவற்றையும் தூது என்று சொல்வது பொருந்து மாறில்லை. அப்படியானால் வண்டையும் குயிலையும் விளித்துப் பாடவேண்டிய இன்றியமையாமை என்ன என்ற வினாவை மனத்தில் வைத்துக்கொண்டு திருக்கோத்தும்பியின் இருபது பாடல்களையும் பார்க்கும்போது சில சிந்தனைகள் தோன்றுகின்றன.

'பல்விருகமாய்ப் பறவையாய்..... எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்' என்று பாடிய பெருமானார், அதனுள் வைத்திருக்கும் ஓர் அரிய கருத்தை நம்மில் பலரும் காணத் தவறிவிட்டோம். உயிர்வர்க்கம் முழுவதும் ஒன்றே. அதாவது புல் முதல் ஆறறிவு படைத்த மனிதன்வரை ஒரே உயிர் எடுக்கும் பல்வேறு உடல்கள் என்கிறார் அடிகளார். அப்படியானால் அறிவு வளர்ச்சி முறையில், பொறி புலன் வளர்ச்சி முறையில் ஒன்றுக்கொன்று வேறுபாடிருக்க முடியுமே தவிர, எல்லா உடம்பினுள்ளும் உறையும் உயிர் என்று எடுத்துக் கொண்டால் அவை அனைத்தும் சமமென்பது இங்கு நினைவு கொள்ள வேண்டிய தத்துவம். அன்றியும் 'உரை சேரும்' என்று தொடங்கும் தேவாரப் பாடலில் ஆளுடைய பிள்ளையார் 'நிரை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்கு உயிராய் அங்கங்கே நின்றான்' (திருமுறை: 1-132-4) என்று சொல்வதையும் காண்டல் வேண்டும்.

இவர்களையன்றிப் பிற்காலத்தில் வாழ்ந்த தாயுமானவப் பெருந்தகையும் பரிபூரண ஆனந்தப் பதிகத்தில் 'பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தமே' என்றும் 'பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி' (தாயு.கருணாகர:6) என்றும் பாடியுள்ளார் ஆதலின், இப்பெருமக்கள் உயிர்களிடையே வேறுபாடு பாராட்டுவ தில்லை என்பது நன்கு அறியப்படும்.

இந்த நினைவோடு கோத்தும்பியையும், குயில்பத்தையும் பார்ப்போமானால், இவை இரண்டிலும் அடிகளாரால் கூறப்பெற்ற செய்திகள், மனித குலம் முழுவதற்கும் தேவையான செய்திகள் என்பது நன்கு புலப்படும்.

தும்பிக்கும், குயிலுக்கும் ஒரு பொதுத்தன்மை உண்டு. அரச வண்டாகிய தும்பி இரண்டு அல்லது இரண்டரைக் கட்டை சுருதியில் ஏழு சுரங்களையும் அனாயாசமாக

எட்டிப் பிடிக்கும் முறையில் ரீங்காரமிடுதலைப் பலரும் கேட்டிருக்கலாம். மிக உயரத்தில் ரீங்காரமிடும் தும்பியைக் கண்ணால் காண்பது கடினம். அதேபோல மிக அற்புதமாக இசைபாடும் குயிலையும் கண்ணால் காண்பது கடினம். காரணம், உயர்ந்த மரக்கிளையில் கரிய நிறத்தோடு அமர்ந்துகொண்டிருக்கும் அதனைக் காண்பது கடினம்.

இவ்விரண்டையும் காணாவிட்டாலும் அவற்றின் இசை அடிகளார் மனத்தைத் தொடுகின்றது. ஷட்ஜத்தில் தொடங்கி நிஷாதம் வரை அனாயாசமாக ஆரோகண கதியில் பாடும் வண்டு, தான் கருதிய பொருளைக் காண முடியவில்லையே என்று வருந்தி அலறுவதுபோல் அடிகளார் மனத்தில் பட்டிருக்க வேண்டும்.

காதலனுக்கு, காண்பதெல்லாம் அவள் நினைவை உண்டாக்குவதுபோல அடிகளார் மனத்தை இது தொடுகிறது. அவரும் குருநாதரைத் தேடும் பணியில் 'தெருவுதோறு அலறிலை பிண நெஞ்சே' (திருவாச: 35) என்று வருந்துகிறார் அல்லவா? அலறிக்கொண்டே அவனைத் தேடிச்செல்ல வேண்டும் என்பது அடிகளாரின் விருப்பம். ஆனால், தாம் அலறவில்லை. தம்மையொத்த மற்றோர் உயிர் இதோ மேலே அலறிக்கொண்டு செல்கிறது. எனவே தும்பியின் ரீங்காரத்தைக் கேட்ட அடிகளார், இப்படி ரீங்காரமிடும் நீ, நம் தலைவனை நோக்கி ரீங்காரமிடுவாயாக என்ற கருத்தில் 'சென்று ஊதாய் கோத்தும்பீ' என்ற சொற்களை இறுதியாக வைத்து இருபது பாடல்கள் பாடுகிறார்.

திருக்கோத்தும்பியின் முதல்பாடல் இறைவன் திருவடிப் பெருமை பேசுகிறது. அப்பாடல் 'சே அடிக்கே சென்றூதாய்' என்று முடிகிறது. சே அடி என்பது செம்மையான என்ற பொருளோடுமட்டு மல்லாமல் சிவந்த என்ற பொருளையும் தரும். இறைவனுடைய சிவந்த திருவடியை நோக்கி ஊதுவாயாக என்று கூறியதில் ஒரு

நுணுக்கம் அமைந்துள்ளது. அந்தத் திருவடி எத்தகையது என்பதைப் பாடலின் முதல் மூன்று அடிகள் பேசுகின்றன. இந்திரன் முதல் நாரணன் வரை உள்ள அனைவரும் அபௌர்ஷேயம் என்று சொல்லப்படுகின்ற வேதங்களும் அறியாச் சேவடி என்றார். இவர்கள் அனைவருமே அறிந்திராத சேவடியைத் தான் எவ்வாறு கண்டுபிடிக்க முடியும் என்று வண்டு ஐயுற்றுக் கேட்குமாயின், அதற்கு மனத் தென்பு தருகின்ற முறையில் சே அடி என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

பூக்களின் மணம் நிறம் என்பவற்றைத் தூரத்திலிருந்து கண்டுகொண்டே, வண்டு அதன்பால் செல்லும் இயல்புடையது. ஆதலின், சே அடி என்றார். அத்திருவடி சிவந்த நிறமுடையது ஆதலின் மிக எளிதாகக் அடையாளம் கண்டுகொள்ளலாம் என்ற கருத்து, குறிப்பாக வைக்கப்பெற்றுள்ளது. அத்தோடன்றி அத்திருவடிக்குத் தேஜசும் உண்டாதலின் இன்னும் எளிதாகக் காணலாம் என்ற கருத்தில் 'தேயுற்ற செல்வர்க்கே ஊதாய்' (224) என்றும் கூறினார்.

சேவடிக்குச் சென்றூதாய் என்று கூறிய அடிகளார், அடுத்து வண்டின் இயல்பை நினைக்கின்றார். சிவந்த நிறம் மட்டும் வண்டைத் திருப்திப்படுத்தாது. ஆதலின், மகிழ்ந்து விரும்பும் மலரையும் தேனையும் இணைத்து 216ஆம் பாடலில் 'தேனார் கமலமே சென்றூதாய்' என்றார்.

அடியார்களுக்கும் வண்டுக்கும் ஒரு பொதுத்தன்மை உண்டு. சிந்தையில் எவ்வளவு அன்பு நிறைந்திருந்தாலும் தங்கள் அன்பு நிறைவுடையதன்று என்றே அடியார்கள் நினைந்து வருந்துவர். இந்த அடிப்படையில்தான் 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை' (திருவாச:218) என்று பேசுகிறார் அடிகளார். இதேபோல எவ்வளவு தேன் குடித்தாலும் வண்டுகளுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. எனவே, தேன் ஆர் கமலம் என்றிங்குப் பாடிய அடிகளார்,

229ஆம் பாடலில் 'தேன் உந்து சேவடி' என்றும், 231ஆம் பாடலில் 'செய்யார் மலரடிக்கே' என்றும் பாடுவதைக் காணலாம்.

தேன் உந்து சேவடி என்றும், தேனார் கமலம் என்றும், மலரடி என்றும் கூறி, வண்டு விருப்பத்தோடு சென்று சேர்வதற்குரிய இடம் அத்திருவடியே என்று வண்டுக்கு வழிகாட்டிய அடிகளார், அத்திருவடிக்கண் செல்வதால் கிடைக்கக்கூடிய உடனடிப் பயன், நீண்டகாலப் பயன் என்ற இரண்டையும் சில பாடல்களில் அமைத்துக் காட்டுகிறார்.

இதுவரை ஒரு சிறுப்குதித் தேனைச் சேகரிப்பதற்குப் பலப்பல பூக்களில் சென்று சேகரிக்க வேண்டியுள்ளது. அவ்வாறில்லாமல் ஒரே மலரில் அவ்வளவு தேனும் கிடைக்கக்கூடுமாயின் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று வண்டு நினைக்கலாம் அல்லவா? அதற்காகவே 'தினைத்தனை' என்று தொடங்கும் பாடலில் 'நினைத் தொறும் காண்தொறும் பேசுந்தொறும்' எப்போதும் ஆனந்தத் தேன்சொரியும் (217) என்று பாடுகிறார். அத்தோடு நில்லாமல் வண்டு உண்ணும் தேனுக்கும் திருவடியில் கிடைக்கும் தேனுக்கும் ஒரு மாபெரும் வேறுபாடு உண்டு என்றும் கூறுகிறார். வண்டு உண்ணும் தேன் நாவிற்கு ருசியாய் அமைவதோடு, அதன் பசியையும் போக்கிற்று. ஆனால், நாவிற்பட்ட ருசி அந்த நாவைக் கடக்கும்போதே முடிந்துவிட்டது. இத்தகைய தேனை உண்டதில் ஏற்பட்ட இன்பம் நாவளவில் நின்று, சில விநாடிகளில் மறைந்தும்விட்டது. ஆனால் திருவடித் தேன், எப்போதும் உடம்பிலுள்ள என்பை யெல்லாம் உள்ளே குளிர்வித்து, மென்மைத் தன்மையடையும் இன்பத்தைத் தரவல்லது. எனவே, 'வண்டே! அதனை உண்பாயாக' என்கிறார்.

கோத்தும்பியின் முதல் பாடலில் தேவர்களும், மாலும் அயனும் காணமுடியாத திருவடியை உடையவன் என்று அவன் பெருமையை அவ்வளவு உயர்த்திக் கூறிய பிறகு, வண்டுக்கும்— ஏன், மனிதர்களுக்கும்கூட ஒரு சோர்வும் தொய்வும் ஏற்பட்டுவிடும். எங்கோ இருக்கும் இந்தப் பொருளிடத்து எவ்வளவு தேன் இருந்தாலும், அதனைப் பெறவேண்டும் என்ற ஆசை எவ்வளவு இருந்தாலும், அதனிடம் செல்வது எவ்வாறு? செல்வதில் வரக்கூடிய துன்பத்தை நினைத்தவுடன் சோர்வு மிகுதிப்பட்டு விடுகிறது. அந்த நிலையில் அவனுடைய எளிவந்த கருணையை ஆறு பாடல்களில் மிக விரிவாகப் பேசுகிறார் அடிகளார்.

இருபது பாடல்கள் கொண்ட இத்தொகுப்பில் ஆறு பாடல்களில் அதாவது 218, 223, 224, 225, 227, 230 ஆகிய பாடல்களில் அவன் கருணையைக் குறிப்பிடுவதன் நோக்கமென்ன? மனம் தளரத் தேவையில்லை. அவனை நோக்கிப் புறப்பட்டால், அதுவே போதும். அவன் கருணை உன்னை நோக்கிப் பாய்ந்துவரும் என்ற கருத்தைப் பெறவைக்கவே ஆறு இடங்களில் கருணையைப் பற்றிப் பேசினார். உள்ளப்படாத திருவுருவை உள்ளத் தொடங்கிய உடனேயே (திருவாச:230) அவன் கருணை வந்து பாய்ந்தது என்கிறார்.

ஐந்தறிவு உடையதாகிய வண்டிற்குக் கலக்கமும் அதிகமில்லை; சித்தமோ சித்த விகாரமோ இல்லை. ஆகவே, வண்டைப் பார்த்துப் பேசத் தொடங்கிய அடிகளார், மக்களை நினைந்து பேசுகிறார். 'வைத்த நிதி பெண்டிர் மக்கள்' என்பவரிடையே வாழ்வதால் தோன்றும் கலக்கம் ஒரு புறம்; அறிவு, தெளிவைத் தருமென்று நினைத்துக் கற்ற, கல்வி தந்த கலக்கம் ஒருபுறம்; ஒருவருக்கொருவர் மாறுபட்ட இயல்புடைய மக்கள் வாழும் இவ்வுலகில் ஒவ்வொருவரும் தாங்கள்

நினைப்பதும் செய்வதுமே சரி, பிறர் செய்வது அனைத்தும் தவறு என்று தம்முள் முரணுகின்றனர் ஒருபுறம்; ஆதலால் பித்த உலகாயிற்று. 'இத்தனை கலக்கம், குழப்பம் ஆகியவற்றிடையே வாழ்ந்த என்னை, மரணம்—பிறப்பு என்ற இரண்டினால் ஏற்படும் அச்சம் மூழ்கடிக்கத் தொடங்கியது. ஆனால் அந்தக் கலக்கமோ, அச்சமோ என்னை ஒன்றும் செய்யாதபடி என் மயக்கத்தைப் போக்கிய வித்தகத் தேவன் அவனாவான். அப்படிப் பட்டவனை அடைந்து ஊதுவாயாக' என்று கூறும்போது வண்டிற்கு மனத் தென்பு பிறக்கிறது. ஒரு தனிமனிதருக்கே இத்துணை நலங்களைப் புரிந்த ஒருவன் என்மாட்டு இரக்கம் கொள்ளாமல் இருப்பானா என்ற தென்பு ஏற்பட்டவுடன் வண்டு அவனை அடைந்து ஊதுமல்லவா?

ஆறு பாடல்களில் அவன் கருணையின் அளவையும் பெருமையையும் கூறினார் என்றாலும், வண்டின் மனத்தில் அக்கருணையின் அளவு நன்கு தெளியப்படவில்லை போலும். அதை உணர்ந்த அடிகளார் ஓர் உதாரணத்தின் மூலம் வண்டின் உள்ளத்தில் தெளிவு பிறக்குமாறு செய்கின்றார். 'வண்டே! அவன் திருவடிகளைச் சென்று ஊதுமாறு நான் ஏன் பலமுறை கூறினேன் என்று உனக்குத் தெரியுமா? அதற்குரிய விளக்கத்தை இதோ சொல்கிறேன் கேள். நாயேனாகிய என்னைத் தன் திருவடிகளைப் பாடுமாறு பணித்தான் அவன். (திருவாச: 226) அப்படிப் பாடத் தொடங்கியவுடன் என்ன பரிசு கிடைத்தது தெரியுமா, எனக்கு? நாயைச் சிவிகையில் ஏற்றியதுபோல என்னை அடியார் கூட்டத்திடையே ஏற்றினான் (திருவாச:222). இதுமட்டுமல்ல, வண்டே! படைத்தல், காத்தல் முதலிய தொழில்களைச் செய்யும் நான்முகனும் மாலும் அவனுடைய அடிமுடி காணமுடியாமல் ஏமாந்து நிற்கும்பொழுது நாய்க்குத் தவிசு இட்டதுபோல் என்னைத் தன் அடியாரிடையே இருக்குமாறு (திருவாச:234) பணித்தான். அவனைப் பாடியதால் பெற்ற பயன்

இதுவாகும். அதனால்தான் அவன் திருவடிகளில் சென்று ஓதுவாயாக என்று உன்னை வேண்டிக்கொண்டேன்' என்கிறார்.

பதினெட்டுப் பாடல்களில் வண்டை வேண்டிக் கொண்ட பிறகு அந்த வண்டுக்கு ஒருவாறு மனத் தென்பு ஏற்பட்டு, அவன் திருவடிகளை நோக்கிப் புறப்பட்டது போலும், அந்த நிலையில் அடிகளார்மாட்டு எல்லை யில்லாத நன்றிப் பெருக்கம் அவ்வண்டிற்கு ஏற்பட்டிருக்குமல்லவா? எனவே, அந்த வண்டை நோக்கி 'வண்டே நீ அவன் திருவடிகளைச் சேரும்போது உன்னை ஆற்றுப்படுத்தியவனாகிய எனக்கும் ஒரு சிறு உபகாரம் செய்வாயாக. அது என்ன தெரியுமா? என் உள்ளத்தில் தோன்றும் துயரங்களில் ஒன்றைக்கூட அவன் போக்க வில்லை (திருவாச: 233) என்பதைத் தயைகூர்ந்து கூறுவாயாக' என்று கூறுகிறார்.

மேலும் உண்மையான அகத்துறையில் ஓர் அற்புதமான பாட்டைப் பாடுகின்றார்.

'தலைவனிடத்தில் எனக்கோ அன்பில்லை. ஆனால், இந்த ரகசியத்தை அவனும் நானும்மட்டுமே அறிவோம். அப்படியிருந்தும் அத்தலைமகன் என்னை வந்து ஆட்கொண்டதை உலகம் முழுதும் அறியும். அவன் வந்து ஆட்கொள்ள என்பால் தகுதியொன்றும் இல்லை. அவன் கருணை காரணமாகவே என்னை ஆட்கொண்டான். அதனை நினைவூட்டி, மறுபடியும் அவன் என்னை வந்து கூடவேண்டும் என்று அவனிடம் குளிர்ந்து ஊதாய்' (திருவாச: 227) என்று கூறுகிறார்.

ஊதுவாயாக என்று சொல்லத் தொடங்கியவர் 'குளிர்ந்து ஊதாய்' என்று சொல்வதன் நோக்கமென்ன? குளிர்ந்து என்று வரும் சொல், உன்னுடைய மனம் குளிர்ந்து ஊதுவாயாக என்ற பொருளைத் தந்து

நிற்கின்றது. வண்டின் மனம் குளிர்ந்ததால் பெறும் பயன் யாது? மனம் குளிர்ந்த நிலையில் ஒன்றைச் சொல்லத் தொடங்கினால்மட்டுமே கேட்பவரின் மனநிலையை ஆராய்ந்து, தெளிந்து இனிய சொற்களாகத் தேர்ந்தெடுத்து, கேட்பவர் மனம் ஏற்கும் வகையில் சொல்லமுடியும். அதனால்தான் 'குளிர்ந்து ஊதாய்' என்றார்.

திருத்தெள்ளேணம்

தெள்ளேணம் என்ற தலைப்பில் இருபது பாடல்கள் அமைந்துள்ளன. முன்னர்க் கூறப்பெற்றதுபோல் தமிழிலக்கியத்தில் வேறெங்கும் காணப்பெறாத சொல்லாகும் தெள்ளேணம் என்பது. இவ்வளவு சிறந்த பாடல்களை இத்தலைப்பின்கீழ் அடிகளார் பாடிய பிறகாவது பின்வந்தவர்கள் இதனைப் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், என்ன காரணத்தாலோ இது செய்யப் பெறவில்லை

நற்சாழல், தோள்வீச்சு என்பவை அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டும் பல்வரிக் கூத்துக்களுள் இடம் பெறுகின்றன என்பது உண்மைதான். அடிகளார் பழமையான தோள்நோக்கத்தையும் (தோள் வீச்சையும்) பயன்படுத்திக் கொண்டதோடு, தெள்ளேணம் போன்ற புதிய விளையாட்டுக்களையும் அறிமுகப்படுத்துகிறார்.

இப்பகுதியின் முதல்பாடல் தமிழர் கண்ட மாபெரும் தத்துவத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. அடிமுடி தேடிய கதையில் அடிகளார் அதிகம் ஈடுபட்டுள்ளார் என்பது வெளிப்படை. ஒவ்வொரு பதிகத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இக்கதையைப் பயன்படுத்தி உள்ளார்.

சிந்தித்துப்பார்த்தால் இதற்கு ஒரு காரணத்தைக் கண்டுபிடிக்கலாம் என்று தோன்றுகிறது. மூவருள் ஒருவர் என்று போற்றப்படும் ஒருவர், எந்தத் திருவடியைத் தேடிச்சென்று காணமுடியவில்லை. காணவும் முடியாது என்ற முடிவுற்கு வந்தாரோ அந்தத் திருவடி, அடிகளாரைப் பொறுத்தவரை எவ்வித முயற்சியுமின்றிக் கிடைத்துவிட்டது. கிடைத்ததோடு அல்லாமல் ஒரே விநாடியில் திருவாதவூரராக இருந்த ஒருவரை மணிவாசகராக மாற்றிவிட்டது. எனவே, அடிகளாரைப் பொறுத்தவரை, இறைவன்மேல் கொண்ட ஈடுபாட்டைக் காட்டிலும், அவனைவிடச் சிறந்தவை என்று கூறப்படும் அவன் திருநாமங்களைக் காட்டிலும், அவன் திருவடியே அதிகம் போற்றப்படும் பொருளாக அமைந்துவிட்டது. அதனாலேயே நூற்றுக்கணக்கான இடங்களில் திருவடிப் பெருமையைப் பேசுகிறார் அடிகளார். அந்தத் திருவடியை நினைக்கும்போதெல்லாம்— அது தமக்கு எளிதாகத் கிடைத்ததை நினைக்கும்போதெல்லாம்— அதனைக் காணமுடியாது திண்டாடிய மாலின் நினைவு வருவது இயல்புதானே!

இந்த நினைவுடன்தான் முதற்பாடல் தோன்றுகிறது. பாடலின் முதலடியில் அமைந்துள்ள சொற்களின் அமைப்புமுறை சிந்திக்க வைக்கிறது. திருமால் வராக அவதாரம் எடுத்துக் கீழே கீழே தோண்டிக்கொண்டு சென்றதன் நோக்கமென்ன? திருவடிகளைக் கண்டுவிட வேண்டும் என்றுதானே சென்றார்? அப்படியானால் 'பன்றியாய்ச் சென்று காணாத் திருவடியை' என்றுதானே பாடியிருக்க வேண்டும். சென்று 'உணராத்' திருவடியை என்று பாடியதன் நோக்கமென்ன?

இறைவன் திருவடி, காட்சிப் பொருளன்று. அதை வலியுறுத்தவே 'ஒருநாமம், ஒருருவம் ஒன்றுமிலார்க்கு'

என்று பாடுகிறார். நாம ரூபம் கடந்த அந்தத் திருவடி, தேவை ஏற்படும்போது வடிவத்தை எடுத்துக்கொள்ளும்; அடிகளாருக்கு அப்படித்தான் செய்தது. திருவடி, காட்சிக்கு அப்பாற்பட்டது என்றால், எவ்வாறு அதனை அறிவது? பொறி, புலன்களுக்கும், அறிவுக்கும், கற்பனைக்கும் அப்பாற்பட்டு நிற்குமொன்றைக் காணவோ அறியவோ கற்பனை செய்துகொள்ளவோ இயலாது. ஒரே ஒரு வழியினால்தான் அதனைத் தெரிந்துகொள்ள முடியும். அந்த ஒரு வழி உணர்வு வழியாகும்.

உணர்வினால் உணர்வதற்கு எங்கும் செல்லவேண்டிய தேவையில்லை; இருந்த இடத்தில் இருந்தே உணரலாம். இந்த நுணுக்கத்தை, தம் அகங்காரம் காரணமாக அறிந்துகொள்ளாத மால் தேவையில்லாத இரண்டு செயல்களைச் செய்தார். ஒன்று, வராக அவதாரம் எடுத்தது; இரண்டு, பூமியைத் தோண்டிக்கொண்டு தேடிச்சென்றது. இவை இரண்டு செயல்களையும் செய்யாமல், இருந்த இடத்தில் இருந்துகொண்டே அவன் திருவடிகளைத் தம்முடைய உள்ளத்து உணர்ச்சியுள் கொண்டுவர நினைத்திருந்தால் வெற்றியும் பெற்றிருக்கலாம்.

சித்தத்துள் தோன்றும் உணர்வின்மூலம் உணரவேண்டிய ஒன்றை வேறொரு வடிவெடுத்துப் புறத்தே தேடிச் சென்றமையின் உணரமுடியாது போயிற்று என்பதையே 'சென்று உணராத் திருவடி' என்றார்.

மிகப் பழைய சங்க காலத்தில்கூட இறைவன் நாமரூபம் கடந்தவன் என்ற கருத்துத் தமிழர்களிடையே பரவியிருந்தது. அப்படியிருந்தும்கூட அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப அப்பொருளுக்குப் பல பெயர்களைத் தந்தனர். இதனையே,

வேண்டினார் வேண்டியாங்கு எய்தினார் வழிபட ஆண்டாண்டு
உறைதலும் அறிந்தவாறே

(திருவாச: 248–49)

எனத் திருமுருகாற்றுப்படை பாடிச்செல்கிறது. அவர்கள் தந்த எல்லாப் பெயர்களும் ஒரே பொருளைக் குறிப்பனவாகவே அமைந்துவிட்டன. அதனையே 'ஒரு நாமம் ஒரூருவம் ஒன்றுமிலாற்கு ஆயிரம் திருநாமம் பாடி' என்று சொல்லுகிறார்

பாட்டின் தொடக்கத்தில் திருமால் கதை நினைவிற்குவந்து அவருடைய மனத்தில் பெரியதோர் இடத்தை அது பிடித்துவிட்டது. திருமால் ஒருபுறம் இருக்க, கல்வி, அறிவு என்பவற்றிற்குத் தலைவன் எனப்படும் நான்முகனும் இதே தவற்றைத்தான் செய்தான்? எனவேதான் இருபது பாடல்கள் அடங்கிய இத் தொகுப்பில் பத்துப்பாடல்களில் நான்முகன், திருமால் கதை பேசப்படுகிறது.

எல்லையற்ற செல்வத்தாலும் (திருமால்) எல்லையற்ற கல்வி அறிவாலும் (நான்முகன்) அல்லாமல் சூக்கும சரீரம் படைத்து காலம், இடம் என்பவற்றைக் கடந்துநிற்கும் தேவர்களாலும் அறியப்படாதவன் என்பதைக் 'கனவேயும் தேவர்கள் காண்பரிய கனை கழலோன்' என்கிறார்.

இவர்களுக்கெல்லாம் காண்டற்கும், உணர்தற்கும் அரிய அத்திருவடி, தம்மைப் பொறுத்தமட்டில் மானிட வடிவில் வந்து காட்சி தந்து, ஆட்கொண்டு, தம் பிறவியை வேரறுத்தது என்பதை நினைக்கும்போது, அடிகளாரின் உள்ளம் பாகாய் உருகுகிறது. ஆதலால்தான், இருபது பாடல்களிலும் அந்த உருக்கத்தை, அந்த நன்றியை விரிவாகப் பேசுகிறார்.

சிறந்த நூல்கள் பயிலப்படும்பொழுது அவை நம் அறிவைத் தாக்குகின்றன. அதுவரை இல்லாத

வளர்ச்சியையும், ஆழத்தையும், விரிவையும் நம் அறிவு பெறுகிறது. இந்த மாற்றங்கள் பிறருக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆனால், அறிவு வளர்ச்சிபெற்றவர் பழைய பொருள்களைக் காணும்பொழுது, அப்பார்வையில் ஒரு மாற்றம் ஏற்பட்டு அதன் பயனாகப் பழைய பொருள்கள் புதிய வடிவுடன் காட்சி நல்குகின்றன. அவருள் நிகழ்ந்த இம்மாற்றம் அவருக்குமட்டுந்தான் தெரியுமே தவிரப் புறத்தார்க்குத் தெரியாது.

திருப்பெருந்துறை நிகழ்ச்சியைக் கண்டவர் பலர். அந்நிகழ்ச்சிக்குப் பிறகு அவருடைய பதவி, உடை அலங்காரம் ஆகியவை துறக்கப்பட்டன; அவருள் நிகழ்ந்த மாற்றத்தைப் பிறர் அறிய முடியவில்லை. இறையுணர்வு பெற்று இறை அனுபவத்தில் மூழ்குபவர்களின் நிலையும் இதுதான். எந்த நூலை எப்பொழுது படித்தார் என்பதைப் புறத்தார் அறிந்துகொள்வதைப் போல அடிகளாருக்கு எப்பொழுது எந்த இடத்தில் எந்தச் சூழ்நிலையில் இந்த அனுபவம் கிடைத்தது என்பதைமட்டும் புறத்தார் அறிவர். இதன் பயனாக அடிகளார் பெற்ற மாற்றத்தை அவரைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். அடிகளார் போன்ற அருளாளர்களின் உள் நிகழ்ந்த மாற்றம் என்ன என்பதை அவர்களாகக் கூறினாலொழிய நம் போன்றவர்கள் அறிய வேறு வழியில்லை. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக மணிவாசகரைப்போல் இறையனுபவத்தில் மூழ்கித் திளைத்த மகான்கள் பலருண்டு. ஆனால், அவர்கள் யாரும் தம்முள் நிகழ்ந்த மாற்றத்தை அடிகளாரைப் போல் நம் போன்றவர்களும் அறியும்படி விரிவாக வெளியிடவில்லை.

உலகத்தில் ஒரு பெரியவரின், ஆன்மிகத்தில் உயர்ந்த மகானின், அருள் நமக்குக் கிட்டினால் பல வளர்ச்சிகள் நம்முள் ஏற்படும். அடங்கி, மடங்கியிருந்த நம் அறிவு விரிந்து வெளிப்படும். நம்முடைய பொறி புலன்கள்,

அதுவரை அடைந்திராத வளர்ச்சியை அடைந்து, நுண்மைத் தன்மையை அடையும். இதுவே உலகியல்பாகும்.

இதன் மறுதலையாக அடிகளார் இறை அனுபவத்தைப் பெற்றவுடன் தம்முள் நிகழ்ந்த மாற்றத்தை இதோ பேசுகிறார். என்ன புதுமை! எந்த ஒன்றும் வளர்ந்ததாகவோ விரிவடைந்ததாகவோ அவர் கூறவில்லை. அதற்குப் பதிலாகத் தம்முள் இருந்த எத்தனையோ பொருள்கள் மாண்டுவிட்டன என்றல்லவா பேசுகின்றார்.

.....எனைக் கலந்தாண்டலுமே
அயல் மாண்டு அருவினைச் சுற்றமுமொண்டு
அவனியின்மேல்
மயல் மாண்டு மற்றுள்ள வாசகம் மாண்டு என்னுடைய
செயல் மாண்டவா பாடி

(திருவாச: 245)

என்ற பாடலில் வரும் கருத்துக்கள் சிந்திக்கத் தக்கன. இறையருள் உள்ளே புகுந்து அங்கே இருப்பவற்றை மாண்டுபோகச் செய்யுமா? பாடலில் பல முறை வரும் 'மாண்டு' என்ற சொல், 'செயலிழந்து' என்ற ஒரே பொருளையே தருகின்றது.

அயல் மாண்டு என்ற தொடருக்குப் பின்வருமாறு ஒரு பொருளைக் காணமுடியும். எதிரே உள்ள ஒரு பொருள் உள்ளே புகுந்தும்கூட அங்கேயும் அது தனியாக நிற்றல் கூடும். அதனைப் புகுமாறு ஏற்றுக்கொண்டபொருளும் தனியே நிற்றலும் கூடும். ஒரு கல்லை நீருக்குள் போட்டால் கல் நீருக்குள்தான் இருக்குமே தவிர, கல் நீரில் கரைந்து தன்னை இழப்பதில்லை. இதற்கு மறுதலையாக, அப்பினுள் பெய்த உப்பு, அப்பினுள் கரைந்து தன் தனித்தன்மையை இழப்பதை நாம் அறிவோம். இப்பொழுது குருநாதர் இவரைப் புகுந்து ஆண்டார். அடுத்த வினாடி குருநாதர் உள் புகுந்து திருவாதவூரர் என்ற மனிதரின் சித்தம்,

உள்புகுந்த குருநாதருள் முற்றிலுமாகக் கரைந்து மறைந்துவிட்டது. ஆட்கொள்வதற்குமுன் திருவாதவூரர் என்னும் மனிதரின் அயலே ஆவும் செயல் நடை பெற்றவுடன் அந்தத் திருவாதவூரர் என்ற மனிதர், அவர் அயலே இருந்த குருநாதர் என்று இரண்டாக நிலை மாறி இப்பொழுது குருநாதருள் வாதவூரர் ஐக்கியமாகிவிடுகிறார். இதனையே 'அயல்மாண்டு' என்று சொல்கிறார். அதாவது தம்மினும் வேறாக அயலாக குருநாதர் இருந்த நிலை மாறிவிட்டது என்கிறார்.

அடுத்து 'அருவினைச் சுற்றமும் மாண்டு' என்கிறார். திருவாதவூரர் என்ற தனிமனிதர் பெரும் பதவியில் இருக்கின்றபோது, சுற்றத்தார் என்று சொல்லிக்கொள்ளும் கூட்டம் நிறைந்திருந்தது. மணிவாசகராக மாறியபோது சுற்றமென்று சொல்லிக்கொள்ள யாருமில்லை. 'அவனியின்மேல் மயல்மாண்டு' என்பதும் உலகத்தின் மேற்கொண்ட ஈடுபாடு செயலிழந்தது என்பதாம். 'மற்றுள்ள வாசகம்' என்பது இறைவனை அல்லாத பிறவற்றைக் குறித்துப் பேசும் பேச்சு என்பதாம். 'என்னுடைய செயல்' என்பது உடலால் செய்யப்படும் செயல்கள் என்பதாம்.

ஒவ்வொன்றாகக் கூறி, 'மாண்டு' என்று குறித்தாரேனும் இவை ஒவ்வொன்றும் தனித்தனியே மாளவில்லை. திருப்பெருந்துறையில் குருநாதரின் திருவடி பட்டவுடன் வாதவூரரிலிருந்த 'நான்' என்னும் தற்போதம் அழிந்தது. அது அழியவே ஏனைய அனைத்தும் மாண்டன. இவ்வாறு விரித்துக் கூறியதன் நோக்கம் நம் போன்றவர்கள் அதனை அறிந்துகொள்ள வேண்டும் என்ற காரணத்தாலேயாம்.

'மாலே, பிரமனே' எனத் துவங்கும் பாடலில் (248) மால், பிரமன், தேவர்கள் என்பவர்களோடு, அஃறிணைப் பொருளாகிய நூல்களையும் உடன் சேர்த்து

'நுழைவரியான்' என்று பாடுகிறார். அதாவது, நூலறிவு கொண்டு அவனை அறியமுடியாது என்றபடி. நூலறிவு என்று கூறியமையின் இந்த அறிவு மால், பிரமன் தேவர்கள் ஆகியோருடைய அறிவுடன் ஒன்றாக வைத்துப் பேசப்படுகிறது.

நூலறிவால் அறியப்படாதவன் என்று சொல்வது சரி. ஆனால், நுழைவரியான் என்றல்லவா அடிகளார் பேசுகிறார். நுழைதல் என்ற சொல்லுக்குப் பொருளென்ன? ஒரு கட்டிடத்தில் எல்லாப் பக்கங்களும் மூடியிருக்க, வாயிற்புறம் மட்டும் நுழையவும், வெளிவரவும் ஒரு வழியாக அமைந்துள்ளது. வீட்டின் கதவு மூடியிருந்தால் யாரும் அதனுள் நுழைய முடியாது என்பது உறுதி. ஒரு வீட்டிற்குள் நாம் நுழைய வேண்டும் என்றால், அந்த வீட்டுக்காரர் வாயிலைத் திறந்து வைத்திருந்தால் ஒழிய நாம் உள்ளே போக முடியாது என்பது தேற்றம்.

அதேபோலப் பரம்பொருளும்கூடத் தன்னை அணுகுகின்றவர்கள் உள்ளே நுழைவதற்கு, அருள் என்ற வாயிலைத் திறந்துவைத்திருக்க வேண்டும். அந்த வாயில் திறந்திருந்தால் ஒழிய, அதனுள் நுழைவது என்பது இயலாத காரியம். நுழைவது ஒரு புறம் இருக்கட்டும். அந்த வாயில் திறக்க வேண்டும் என்றும், அவன் திருவடிகளைத் தொழ வேண்டும் என்றும், வேண்டிக்கொள்வோர் எவ்வாறு வேண்டிக்கொள்வது, யாரை வேண்டிக் கொள்வது, என்ற வினாக்கள் தோன்றுமன்றே! இதற்கு விடையைப் பிறிதோர் இடத்தில் 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' (திருவாச: 1-18) என்று கூறியுள்ளார்.

மால் முதல் நூல்கள் வரை நுழைவதற்கு அரியான் அவன் என்றால் வேறு வழி என்ன? உண்டு என்கிறார் அடிகளார். மாலும் பிரமனும் அவனுள் நுழைய முடியாவிட்டாலும், அவன் நம்முள் நுழையலாம்

அல்லவா? நாம் ஒன்றனுள் நுழையும்போது, நாம் நுழைகிறோம் என்ற தற்போதம் மேலோங்கியிருப்பதால், நுழைந்து விட்டோம் என்ற எண்ணம் உறுதிப்பட்டவுடன் ஒரு மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆனால், இது முடியாதபொழுது, அவன் நம்முள் நுழைகிறான் என்றால் அதை எப்படிக் கண்டுகொள்வது? ஒளி, ஒலி, மணம் என்பவை முறையே கண், காது, மூக்கு என்ற பொறிகளின்வழி உள்ளே நுழைகின்றன. அவை நுழைவதை, நுழைகின்ற அதே நேரத்திலேயே நாம் அறிந்துகொள்ள முடியும். ஆனால், அணுவுக்கணுவாய் இருக்கும் அவன் மிக நுண்ணியனாயிற்றே! பொறி புலன்கள் மூலம் அவன் நுழையமாட்டானே; மனத்தால் நினைக்கவோ, சித்தத்தால் சிந்திக்கவோ, புத்தியால் அளவிடப்படவோ, அகங்காரத்தால் அறியப்படவோ முடியாதவனாயிற்றே! அப்படிப்பட்ட நுண்ணியன் தானாகவே விரும்பி வந்து நம்முள் நுழைந்தான் என்பதை எப்படி உணர்ந்து கொள்வது? அதற்கு விடை கூறுகிறார் அடிகளார் 'நுண்ணியனாய் வந்து அடியேன்பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தால்' அறியலாம் என்கிறார். பரிந்துருக்கும் பாவகம் நம்முடைய முயற்சியால் நடை பெறுவது ஒன்றன்று. எனவே, உள்ளம் உருகிற்று என்றால், அது தானாக உருகவில்லை; யாரோ ஒருவன் உருக்கினான் என்பது தெளியப்படும். அப்படி உருக்கினவன் நம்மாட்டுக் கொண்ட அளவற்ற கருணையால்தான் உருக்கினான் என்பதைப் பரிந்துருக்கும் பாவகம் என்கிறார் அடிகளார். பாவகம் என்பது நினைவு என்ற பொருளைத் தரும்.

இந்த நினைவு வந்தவுடன் கண்ணில் நீர் மல்குகின்றது. மாலும், நாலும் நுழைவரிய அந்த நுண்பொருள், தானே வந்து உள் புகுந்து, பரிவோடு நம்முள்ளத்தை உருக்கிற்று என்ற நினைவு தோன்றிய உடன், நம் சிறுமையும்,

அப்பொருளின் கருணையும் ஒரு சேர நினைவுக்கு வருகின்றன. நம்மையும் ஒரு பொருளாக்கி நம்முள் பு.குந்ததோடு நில்லாமல், உள்ளத்தையும் உருக்கிவிட்டதே என்ற நினைவு வந்தவுடன் கண்ணீர் ஆறாகப் பெருகுகின்றது. இந்தப் பாடலிலும் இதுவரை வந்த பாடல்களைப் போலவே வியப்பு மேலீட்டால் தெள்ளேணம் கொட்டாமோ என்று பாடுகிறார்.

மால், நான்முகன் என்பவரைப்பற்றியே பத்துப் பாடல்கள் பாடிய அடிகளார், இப்பொழுது இன்னும் சற்று விரிவாக, அவர்களால் அறியப்படாதவன் என்று மட்டும் நிறுத்தாமல், அவனுடைய இயல்பை மற்றொரு கோணத்தில் நின்று பேசுகிறார். 'விண்ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து' (253) என்று தொடங்குவதால் நாம் வாழும் இப்பூமிக்கு மேலும் கீழும் உள்ள பகுதிகளை எடுத்துக் கூறும் முறையில் ஓர் அழகைச் சித்தரிக்கின்றார்.

ஒரு பொருள் ஓங்கி வளர்ந்திருக்கிறதென்றாலும் அதன் தோற்றம் ஒரு விதையில்தானே அடங்கியிருக்க வேண்டும்? எனவே, பாதாளத்தார் வித்து என்பதால் இப்பிரபஞ்சத்தின் அடிப்பகுதியை வித்து என்றும், விண்ணோர் முழுமுதல் என்பதால் பிரபஞ்சத்தின் நுனிப்பகுதியையும் நம் கற்பனையில் கொண்டு வருகிறார்.

இவ்வாறு வித்தாகவும், மரத்தின் நுனியாகவும் இருக்கின்ற அந்தப் பரம்பொருளின் இயல்பையும் அது பிறவிக்கு மருந்து என்பதையும் பாதாளத்தாரும், விண்ணோரும் அறிந்துகொள்ளவில்லை. நல்ல வேளையாக, இடையில் நின்ற மண்ணுலகத்தில் உள்ளவர்கள் இந்த முழுமுதற்பொருள்தான் நம் பிறவிக்கு மருந்து என்று உணர்ந்துள்ளார்கள் ஆதலின் 'மண்ணோர் மருந்து' என்கிறார்.

மண்ணோர்க்கு மருந்தாகவும், விண்ணோர்க்கு முழுமுதலாகவும், (வைப்பு நிதி) பாதாளத்தார்க்கு வித்தாகவும் இருக்கின்றான்.

நூலறிவும் நுழையமுடியாத நுண்ணியனாகிய அவன், வித்தாகவும், முழுமுதலாகவும் சேமநிதியாக உள்ளவனுமாகிய அவன், இப்பொழுது கண்ணார வந்து நின்றான். என்ன புதுமை! அறிவும் நுழையமுடியாத நுண்ணியனாகிய, அவன் ஊனக் கண்களாலும், காணும் படி இதோ எதிரே வந்து நிற்கின்றான். தாமரைக் கண்ணனும், நான்முகனும், உறக்கமும், இமைப்பும் இல்லாத கண்களை உடைய தேவர்களும் ஏன் இவனைக் காண முடியவில்லை? மானிடராகிய அடிகளார் கண்ணாரக் கண்டு களிக்கும்படியாக எதிரே வந்து நின்ற ஒருவனை மேலே கூறிய அனைவரும் காண முடியவில்லை என்றால், இதை எப்படி நம்புவது? அவர்கள் எதிரே, அவன் நுண்ணியனாகிவிட்டான். நுண்ணியனாக இருப்பினும் முயன்று, கூர்ந்து கண்டிருக்கலாமே! ஏன் அவர்கள் காண முடியவில்லை? அவர்கள் கண்ணை மறைத்தது, அவர்கள் ஆணவம். அதனால் கருணைக் கடலாக உள்ள அவன்கூட, அவர்களிடம் கருணை காட்டவில்லை.

அத்தகைய ஒருவன் கண்ணார வந்து நின்றான். விண்ணோர் முழுமுதலாகவும், பாதாளத்தார் வித்தாகவும் உள்ள அவன் வந்து நின்றால் எப்படி அவனைக் கண்டு கொள்வது? மனிதர்களாகிய நம்முடைய பார்வைக்கு ஓர் எல்லை உண்டாயிற்றே, அந்த எல்லையை யெல்லாம் கடந்து நிற்கின்ற ஒருவனை, அடிகளார் எப்படிக் கண்டுகொண்டார்? அவரின் பார்வையின் எல்லையளவு விரிந்து நின்றது அவன் திருவடிகளே ஆதலின், வந்து நின்றான் கருணைக் 'கழல்பாடி' என்றார். அந்தக் கழலும், இவருக்கு மட்டும் எவ்வாறு காட்சி தந்தது? 'தம்மாட்டுக்

கொண்ட கருணையால்' என்று கூறவந்த அடிகளார், இறைவனின் கருணையை அவன் திருவடிகளின் மேல் ஏற்றி, கருணையுடையான் கழல் என்று பாடாமல், கருணைக் கழல் என்றே பாடிவிட்டார்.

திருச்சாழல்

திருச்சாழல், திருவுந்தியார், திருத்தசாங்கம் ஆகிய மூன்றும் அடிகளாரால் பாடப்பெற்றவை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், ஏனைய திருவாசகப் பாடல்களோடு இவற்றையும் வைத்துக்கொண்டு பார்க்கும்போது, திருவாசகத்தின் அடிப்படைக்கும் போக்கிற்கும் மாறுபட்ட முறையில் இம்மூன்றும் அமைந்துள்ளன என்று எண்ணத் தோன்றுகிறது.

முன்னருள்ள அகவல்களில் உணர்ச்சிப் பெருக்கிற்கு அதிக இடமில்லை. செய்திகளை விரைவாக அடுக்கிக்கூறும் ஆற்றல் அகவலுக்கு உண்டு; அதனை அறிந்த அடிகளார் மிகுதியான செய்திகளை அகவல்களில் தந்துள்ளார்.

'மெய்தான் அரும்பி' என்று தொடங்கும் திருச்சதகத்தின் முதல் பாடலிலிருந்து திருத்தெள்ளேணம் முடியவுள்ள 250 பாடல்களும் அடிகளாரின் இறையனுபவத்தையும், அதனால் அவர் பெற்ற ஆனந்தத்தையும் மாறிமாறிக் கூறிவருகின்றன.

மாபெரும் தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிய திருவெம்பாவைப் பாடல்கள்கூட இறையனுபவத்திற்கு முதலிடம் தந்து, தத்துவத்திற்கு இரண்டாம் இடமே அளித்துள்ளது.

அடிகளார் காலத்தில் புத்த சமயம் ஏறத்தாழத் தமிழகத்தை விட்டுப் போய்விட்டதென்றாலும் அதன் அடிச்சுவடுகளும் ஆதிசங்கரரின் ஏகான்மக் கொள்கையும்

தமிழகத்தில் ஆங்காங்கே ஓரளவு காணப்பெற்றன. ஆனால், போற்றித் திருஅகவலில் 'மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம் சுழித்து அடித்து' (திருவாச: 4-54,55) என்று சொல்லிய ஓர் இடத்தைத் தவிர வேறு குறிப்பொன்றும் திருவாசகத்தில் இல்லை. ஆனால், அருகிக் காணப்பட்ட பௌத்தர்களும் நாத்திக வாதத்தினரும் சிவபெருமானையும் உமையொருபாகனையும் எள்ளி நகையாடி ஆங்காங்கே பேசியிருப்பர்போலும். அதனாலேயே திருச்சாழல்போன்ற பகுதிகள் இங்கு இடம்பெறலாயின.

திருச்சாழல், திருவுந்தியார் என்ற பகுதிகள் அறிவுக்கு விருந்தாக அமைந்துள்ளன. இறைவனுடைய வேடம், உமையோடிருத்தல் முதலியவற்றிற்கு விளக்கம் தர முயல்கின்றது திருச்சாழல். ஆனாலும், இறைவன் கொண்ட வேடத்திற்கும், செயல்களுக்கும் தத்துவ ரீதியாக அந்த விளக்கம் அமையவில்லை. 'ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான்' என்ற முறையில்தான் முற்பகுதி விளக்கம் அமைந்துள்ளது.

இறைவனை ஆண் பெண் வடிவாகக் காணுதலும் சக்தியும் சிவமும் சேர்ந்திருக்கும் அர்த்தநாரி வடிவாகச் சிந்தித்தலும் இந்நாட்டில் தோன்றிய சைவத்தின் தனிச் சிறப்பாகும். பிரபஞ்சம் முழுவதிலும் நிறைந்துள்ள எல்லாப் பொருள்களும் நேர் ஆற்றல் (positive force) எதிர் ஆற்றல் (negative force) என்ற முறையில்தான் அமைந்துள்ளன என்ற பேருண்மையை என்றோ கண்டுகொண்ட நம் முன்னோர், இவை அனைத்திற்கும் மூலகாரணமாகவுள்ள இறைவனும் சிவம், சக்தி என்ற இரண்டின் கூட்டமாகவே அமைந்துள்ளான் என்று கண்டனர்.

இக்கருத்தை யெல்லாம் திருச்சாழலில் வினா விடை வடிவில் அடிகளார் பாடியுள்ளார். ஆனாலும் தம்

அனுபவத்தை நினைந்து நினைந்து உருகியுருகிப் பாடும் பாடல்களின் இடையே, இந்தத் தத்துவ ஆராய்ச்சியும் வினா விடையும் எவ்வாறு, ஏன் இடம்பெற்றன என்பது விளங்கவில்லை. இதேபோலத் திருவுந்தியாரிலும் திரிபுரக் கதையும் தக்கன் கதையும் விரிவாக இடம்பெற்றுள்ளன. அப்பாடல்களிலும் இறையனுபவப் பகுதி எதுவும் இல்லை. சிவபெருமானுடைய பெருமையைக் கூறுவதற்கு இப்பகுதிகளை இடமாகக் கொண்டாரே தவிர, ஏனைய பாடல்களில் காணப்பெறும் உருக்கம், அனுபவம், ஆனந்தமேலீடு என்பவை திருச்சாழல், திருவுந்தியார் போன்ற பகுதிகளில் ஒரு சிறிதும் இடம்பெறவில்லை.

திருவுந்தியாரின் மூன்றாவது பாடல் மயன் செய்த பொற்றேரில் ஏறித் திரிபுர சம்ஹாரம் செய்யப் புறப்பட்டார் என்றும் இவர் திருவடியை வைத்தவுடன் தேரின் அச்சு முறிந்தது என்றும் பேசுகிறது. இக்கதை பிற்காலத்தில் வேறு வடிவம் தாங்கி 15ஆம் நூற்றாண்டில், அருணகிரியார் காலத்தில் விநாயகரே அச்சை முறித்தார் என்ற புதியவடிவில் வெளிவரலாயிற்று.

திருச்சாழல் வினா விடைப் பகுதி என்பது உண்மைதான் என்றாலும், இதனை அகத்துறையின்பாற் படுத்தி இயற்பட மொழிதல், இயற்பழித்து மொழிதல் என்றெல்லாம் பொருள்கொள்வது பொருத்தமாகத் தெரியவில்லை. 'காணேடீ' என்ற ஒரு விளி வருவதால், தலைவி, தோழி என்ற இருவரிடையே இந்த உரையாடல் நடைபெறுவதாகக் கொண்டுள்ளனர். இவ்வாறு கொள்வதில் தவறில்லை என்ற அடிப்படையில், சிந்தனைப் பகுதி வரையப்பெற்றுள்ளது. அப்படியிருந்தாலும் தலைவி, தோழி, இயற்பட மொழிதல், இயற்பழித்து மொழிதல் என்பவை பொருத்தமுடையனவா என்ற வினா மனத்துள் இருந்துகொண்டே இருக்கிறது.

நான்முகன் முதலானவர்களுக்குக் கிட்டாத திருவடி தம் கண்ணெதிரே தோன்றி, தமக்கு அருள் செய்ததைத் தெள்ளேணத்தில் பத்து இடங்களில் நினைந்துநினைந்து உருகுகின்ற ஒருவர், வினா விடை என்ற பெயரில் திருச்சாழலை எவ்வாறு பாடமுடிந்தது? அப்படியே பாடியிருப்பினும் தெள்ளேணத்தை அடுத்து அது இடம்பெற்றது எவ்வாறு என்ற வினாவை எழுப்பிக் கொண்டு, இவை இரண்டு பகுதிகளையும் மறுமுறை பார்த்தால் சில எண்ணங்கள் எழுகின்றன.

திருவடிப் பெருமையைப் பத்துப்பாடல்களுக்கும் மேலாகப் பாடிய அடிகளார், தெள்ளேணத்தின் கடைசிப் பாடலில் திடீரென்று உருவ வழிபாட்டில் இறங்கி விடுகிறார். கொக்கிறகு, கோல்வளையாள் நலம், தில்லைக் கூத்து ஆகியவை இப்பாடலில் இடம்பெறுகின்றன. இவற்றிடையே நஞ்சுண்ட வரலாறும் இடம்பெறுகிறது.

தெள்ளேணத்தின் இறுதிப் பாடலில் கோல்வளையாளும், நஞ்சுண்ட செய்தியும் வந்ததன் விளைவாக அவனுடைய வடிவையே மேலும் சிந்திக்கத் தொடங்கிச் சாழலின் முற்பகுதிப் பாடல்கள் தோன்றியிருக்கலாம். இவ்வாறு தரப்பெறும் விளக்கம் தெள்ளேணத்தின் பின் திருச்சாழல் வைக்கப்பெற்றிருக்கின்ற அடிப்படையைக் கொண்டு தந்ததாகும். இவ்வாறு கூறுவதால் இந்த வைப்புமுறை ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று பொருளல்ல.

அவனுடைய எளிய கோலம், சுடுகாட்டில் உறைதல் ஆகியவற்றைப் பாடிக்கொண்டுவரும்பொழுதே, அவனுடைய பேராற்றல் நினைவுக்கு வருகிறது. அதனையே 'காயில் உலகனைத்தும் கற்பொடிகாண்' (திருவாச: 257) என்று பாடுகிறார்.

'தேன்புக்க தண்பணை சூழ்' (திருவாச: 268) என்று தொடங்கும் பாடல் இன்று விஞ்ஞானம் கூறும் புதுமையை

அன்றே அடிகளார் தம் மெய்ஞ்ஞானத்தால் கண்டு கூறினார் என்பதற்கு அடையாளமாகும். அவன் நட்டம் பயில்கிறான் என்றால், பிரபஞ்சம், அதிலுள்ள சரம், அசரம் ஆகிய அனைத்துப் பொருள்களும் ஆடிக்கொண்டே யிருக்கின்றன என்பது பெறப்பட்டது. ஏனென்றால், அனைத்திலும் கலந்து ஊடுருவி உள்ளான் அவன் என்பது இந்த மெய்ஞ்ஞானிகள் கண்ட உண்மையாகும். எனவே, அவன் ஆடுகிறான் என்றால் அவையும் ஆடுகின்றன என்பதுதானே பொருள்? அடுத்து அவன் ஆட்டத்தை நிறுத்தினான் என்றால் பிரபஞ்சமும் அதிலுள்ள பொருள்களும் ஆட்டத்தை நிறுத்திவிட்டன என்றுதானே கொள்ள வேண்டும்? இவை ஆட்டத்தை நிறுத்தினால் நிலைபேற்றை இழந்து அழிந்துவிடும் என்பது தேற்றம். எனவேதான் 'நட்டம் பயின்றிலனேல் ஊன்புக்கு வேல் காளிக்கு ஊட்டாம்' என்று பாடியுள்ளார்.

273ஆம் பாடல் இறைவனுக்கு ஒரு ஒப்பற்ற இலக்கணம் வகுக்கின்றது. 'தம்பெருமை தானறியாத் தன்மையன்' என்பதே அவ்விலக்கணமாகும். ஒருவர்க்கு வரும் பெருமை சிறுமை என்பன அவருடைய செயல் முதலியவற்றை ஆய்ந்து ஏனையோர் தரும் மதிப்பீடே ஆகும். இக்கருத்தை ஒருவர்தம் 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தம் கருமமே கட்டளைக்கல்' (திருக்குறள்: 505) என்ற குறட்பா வலியுறுத்துகிறது.

எனவே, இறைவனுடைய பெருமையை யார் கூறுவது? அவனுடைய செயல்கள் அறிந்தவர் அல்லவோ அப்பெருமையை ஆய்ந்து சொல்ல முடியும்? அவனுடைய செயல்களை ஒருசிறிதாவது அறிந்தவர் யாரேனும் உண்டா? இறைவன் செயலை ஒரு சிறிதும் அறிய முடியாதவைகளாகிய உயிர்கள் அவன் பெருமையை அறிதலே முடியாது என்றால், பேசுவது எங்ஙனம்? இப்பொழுது ஒரு நியாயமான வினாத் தோன்றும்,

திருவாசகம்போன்ற ஆயிரக்கணக்கான பாடல்கள் அவன் பெருமையைப் பாடுகின்றனவே, அது எவ்வாறு முடிந்தது? அவன் செயலை அறிந்து பாடப்பட்டவையா இப்பாடல்கள் என்றால், இல்லை என்றே விடை கூறவேண்டும்.

இப்பாடல்களைப் பாடிய பெருமக்கள் அவன் செயல்கள் என்று தம்முடைய இறையனுபவத்தில் தோன்றிய சிலவற்றை அடிப்படையாகக் கொண்டே இப்பாடல்களைப் பாடினர்.

எனவே, இறைவன் செயலை இச்சிற்றுயிர்கள் அறியமாட்டா என்பது தேற்றம். இறைவனைப் பொறுத்தமட்டில் தான் செய்யும் செயல்களை அவனாவது அறிவானா என்றால், இல்லையென்றே கூறவேண்டும். அவனுடைய செயல்கள் இச்சா மாத்திரத்தில் நிகழ்பவை ஆதலின் அவை நிகழ்வதை அவன் அறிய முற்படுவதில்லை. இந்த நிலையில், தன் செயலைக்கொண்டு தன்னுடைய பெருமை எத்தகையது என்பதை அவன் கணிக்க முற்படுவதில்லை. இந்த நுணுக்கமான தத்துவத்தைத்தான் 'தம் பெருமை தானறியாத் தன்மையன் காண் சாழலோ' என்று பாடுகிறார்.

270 ஆம் பாடல் வினா விடை முறையில் அமையாத பாடலாகும். இப்பாடலின் முதலிரண்டு அடிகளில் அறம் என்ற தமிழ்ச்சொல் அதன் முழுவீச்சுடன் பயன்படுத்தப் பெற்றுள்ளது. ஆனால், சொற்களின் அமைப்பு முறையை நன்கு கவனித்தால் ஒழிய, இதனை விளங்கிக்கொள்ள முடியாது. ஆலின் கீழிருந்து நால்வர்க்கு வேதத்தை உரைத்தான் என்றோ, வேதத்தின் அறத்தை உரைத்தான் என்றோ சொல்லவில்லை. நான்மறையின் 'உட்பொருளை' என்ற சொல்லைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழில் வரும் அறம், உயிர்கள்மாட்டு அன்பு கருணை என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்று விதிக்கின்றது. ஆனால், வேதம் உயிர்க்கொலை புரியும் வேள்வியைப் பற்றியும் பேசுகிறது. அப்படியிருக்க வேதத்தை உபதேசித்தால், அது இத்தமிழர் கண்ட அறத்திலும் மாறுபட்டே இருக்கும். இப்பிரச்சினையை மனத்துட் கொண்டார்போலும் அடிகளார். ஆதலால், 'நான்மறையின் உட்பொருளை' என்றார்.

யக்ஞம் என்ற சொல்லை உயிர்க்கொலையோடு கூடிய வேள்வி என்ற பொருளிலேயே பலரும் பயன்படுத்தி வந்தனர்; வருகின்றனர். ஆனால், யக்ஞம் என்ற சொல்லின் உட்பொருள் தியாகம் என்பதாகும். அதனால்தான் அடிகளார் நான்மறையின் உட்பொருள் தமிழர் கண்ட அறத்தோடு மாறுபட்டது அன்று என்ற ஒரு பெரிய கருத்தை அறிவிப்பதற்காகவே உட்பொருளை அறமாக உரைத்தான் என்று கூறியுள்ளார்.

இனி, அறம் என்பது அன்பு, அருள், கொல்லாமை, உயிரிரக்கம் ஆகியவை என்று பொருள் கொண்டால் இவற்றை முனிவர்களுக்குக் கற்றுத்தந்தவன் தான் எவ்வாறு நடந்துகொண்டான் என்பதை 270ஆம் பாடலில் பின்னிரண்டு அடிகளில் கூறுகிறார்.

ஆலின் கீழிருந்த நால்வரும் மனிதர்கள். எத்துணைப் பெரிய முனிவர்களாயினும்—இறைவனை நேரே காணும் தகுதியுடையவர்கள் ஆயினும், அவர்கள் மனிதர்கள் என்பதை மறுத்தலாகாது. எனவே, அவர்களுக்குரிய அறத்தை அவர்களுக்குப் போதித்தான். சமுதாய வாழ்விற் கூட அரசர்களுக்குரிய அறம் வேறு; மக்களுக்குரிய அறம் வேறு. கொலை என்பது சமூக அறத்தில் தடைசெய்யப் பட்டது ஆயினும், குற்றவாளிகளைத் தண்டிக்கும் கடமை யுடைய அரசர்க்கு இது பொருந்தாது. அதேபோல

யாவரையும் படைத்துக் காத்து அருளும் பரம்பொருளே கூடத் தான் படைத்தவர்களுள் சிலரைத் தண்டனையாக இடையே அழிக்க வேண்டி வருகிறது. ஆதலால், மக்களுக்குத் தேவையான அறத்தை நால்வர்க்கு உரைத்தான் என்றாலும், அவன், திரிபுரத்தை எரித்து அழித்தான் என்ற கருத்தை அடிகளார் பெறவைக்கிறார்.

திருச்சாழலில் வரும் இறுதிப் பாடல் அறமுரைத்தலின் மற்றொரு பகுதியை எடுத்துக்காட்டுகிறது. நான்மறையின் உட்பொருள் என்ற தொடர் இங்குப் பயன்படுத்தப் பெறவில்லை; நால்வர் என்ற சுட்டுப்பெயரும் பயன்படுத்தப் பெறவில்லை. அதற்குப் பதிலாக 'அருந்தவர்' என்ற பொதுப்பெயரே இங்குப் பேசப்பெற்றுள்ளது. எனவே, 270ஆம் பாடலில் குறிக்கப்பெற்ற சனகாதி முனிவர் நால்வரே இங்கும் குறிக்கப்பெறுகின்றனர் என்று பொருள் கொள்ளத் தேவையில்லை. தவத்தை மேற்கொண்டு ஒழுகும் முனிவர் பெருமக்களுக்கு ஆலின் கீழிருந்த பெருமான் அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருடார்த்தங்கள் நான்குபற்றியும் கூறியது ஏன் என்பது வினா.

துறவு மேற்கொண்டு வனத்திடை வாழும் இவர்கள் மக்கள் கூட்டத்தை விட்டு ஒதுங்கிப் பல காலமாய்த் தனித்திருத்தலின், அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் மறந்து, வீடு என்ற ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டனர். இவ்வுலகிடை வாழ்கின்ற காலம்வரை கூட்டில் வாழும் இவர்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் சமுதாயத்தோடு ஒட்டி உறவாடவேண்டி வரும்; ஆதலால்தான் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் அவர்களுக்கு உரைத்தான். இந்த நான்கினையும் அறிந்தாலன்றி உலக இயற்கையை அவர்கள்

அறியமுடியாதுபோய்விடும்; ஆதலால், அவர்கட்கு இந்த நான்கினையும் அருளிச்செய்தான் என்க.

திருச்சாழலில் இறைவன்பற்றிய சில பொதுக் கருத்துக்களை முன்னும் பின்னும் கூறியுள்ளார். அவன் இருப்பிடம், உடை, நஞ்சை உண்ணல் ஆகியவற்றைப் பேசியபிறகு, அவன் உமையோடு இருக்கும் காரணத்தையும் விளக்கினார். இப்படியிருந்தும் ஆணவம் காரணமாகத் தக்கன் போன்றவர்கள் செய்த தவறுகளைத் தண்டித்துத் திருத்தினான். அடுத்து உயிர்கள்தோறும் உறைகின்ற காரணத்தால் பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களும் சலித்துக்கொண்டே இருக்கின்றன என்பதைக் கூறினார்.

இவற்றையெல்லாம் கூறிவந்த அடிகளார், தன்னை நாடிவந்த அருந்தவர்களை இரண்டு வகையாகப் பிரித்து அவரவர்களுக்கு ஏற்ற உபதேசத்தை அருளினான் என்கிறார். முதலில் சொல்லப்பட்ட நால்வரும் எக்காலத்தும் உலகிடை வாரார் ஆதலின் அவர்கட்கு வேதத்தின் உட்பொருளை உரைத்தான்.

இரண்டாவது கூட்டத்தார் அருந்தவரே ஆயிடினும், இன்னும் உலக பந்தம் உடையவர்களே, ஆதலின், உலகியற்கையை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்ற காரணத்தால் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருடார்த்தங்களையும் அவர்களுக்கு உபதேசித்தான் என்கிறார்.

தாம் பெற்ற அனுபவத்தைச் சொல்லும் 'தான் அந்தம் இல்லான்' (திருவாச: 264) என்று தொடங்கும் ஒரே ஒரு பாடலைத் தவிர திருச்சாழலின் எஞ்சியுள்ள பாடல்கள் அனைத்தும் திருவாசகத்தில் காணப்படும் பொதுத்தன்மை இல்லாமல் தனித்து நிற்பதைக் காணலாம்.

திருப்பூவல்லி

திருப்பூவல்லியில் வரும் இருபது பாடல்களும் திருப் பெருந்துறை நிகழ்ச்சி, மதுரை நிகழ்ச்சி என்ற இரண்டுக்கும் அதிக இடம்தந்து பாடப்பெற்றுள்ளன. பழைய நிகழ்ச்சி களைத் திரும்பச் சொல்லும்போது புதியபுதிய கோணங் களில் நின்று அவற்றைக் காண்கின்றார் அடிகளார்.

உதாரணமாகக் குருநாதர் திருவடிகளை அடிகளார் தலைமேல் பதித்ததை இதுவரை பல இடங்களில் கூறியுள்ளரேனும் பூவல்லியின் முதற் பாடல் புதிய கோணத்தில் அதனைச் சிந்திக்கின்றது.

'சுற்றிய சுற்றத் தொடர் அறுப்பான்' (திருவாச: 194) என்று முன்னர்ப் பாடிய அடிகளார், அதே செயலை வேறு கோணத்தில் நின்று கண்டு, 'இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே, துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்' (திருவாச: 275) என்று பாடுகிறார்.

திருவடியை வைத்தலாகிய செயலும், சுற்றம் துறத்தலாகிய செயலும் உடன் நிகழ்ச்சிகளாக ஒரே நேரத்தில் நடந்துவிட்டதாகக் கூறுகிறார். துறந்து ஒழித்தேன் என்று கூறாமல் 'துறந்து ஒழிந்தேன்' என்று கூறியதால் துணைச் சுற்றங்களை அதிக முயற்சி எடுத்துக்கொண்டு துறக்கவில்லை என்றும், அது மிக எளிதாகத் தம்மை விட்டுக் கழன்றுவிட்டது என்றும் விளங்கவைக்கிறார்.

இனி, துறந்தொழிந்தது யாரை என்ற வினாவிற்குச் சுற்றம் என்பதே விடையாக முதற்பாடலில் வருகிறது. சுற்றம் என்ற இச்சொல் பரந்துபட்ட பொருளை உடையது. இரத்தக் கலப்புடைய உறவினர், பதவியால் வந்த சுற்றம் (பரிவாரம்) ஆகிய இரண்டையும் 'சுற்றங்கள்' என்ற பன்மை வாய்பாட்டால் அடிகளார் குறிப்பிடுகின்றார். தந்தை, தாய், உடன்பிறந்தார், மனைவி, மக்கள்

என்பவைதான் இரத்தக் கலப்புடைய மிக நெருங்கிய உறவினராவர். இவரையல்லாத ஏனை உறவினர் யாவரும் சுற்றம் என்ற சொல்லால் குறிக்கப்பெற்றனர். இந்தச் சுற்றத்தைத் துறப்பது எளிது. ஆனால், முன்னர்க் கூறப்பெற்ற தாய், தந்தையர் முதலான இரத்தக் கலப்புடைய உறவினரைத் துறத்தல் அவ்வளவு எளிதன்று. இக்கருத்துக்களை யெல்லாம் மனத்துட் கொண்ட அடிகளார், 'துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்' என்று முதற் பாடலில் கூறிவிட்டு, இரத்தக் கலப்புடைய உறவினர் பட்டியலை இரண்டாவது பாடலில் தருகிறார்.

276ஆம் பாடலில் 'எந்தை எந்தாய்' என்பவர்களோடு சேர்த்து, சுற்றம் என்ற சொல்லைப் பயன்படுத்தியதால் இச்சொல்லால் குறிக்கப்பெறுபவர். ஏனைய இரத்த உறவுக்காரர்களையே என்பது பெற்றாம். 'பந்தம்' என்ற சொல்லால், இவர்களுக்கும் அடிகளாருக்கும் இடையே யுள்ள இரத்த பந்தம் குறிக்கப்பெற்றது. இனி 'மற்றும் எல்லாம்' என்று கூறியதால் தூரத்துச் சுற்றத்தார் பற்றிய பந்தம், உலகப் பொருள்கள்பற்றிய பந்தம் ஆகிய அனைத்தையும் குறிக்கின்றார்.

திருப்பூவல்லியின் முதற்பாடலில் துறந்தொழிந்தேன் என்று கூறியவர், இரண்டாம் பாடலில் இந்தப் 'பந்தங்களை அறுத்து என்னை ஆண்டுகொண்ட பாண்டிப் பிரான்' என்கிறார். அப்படியானால் துறந்தொழிந்தேன் என்று தன்வினையால் கூறுவதற்கும், அறுத்த பாண்டிப்பிரான் என்று பிறவினையால் கூறுவதற்கும் இடையே ஏதோ ஒரு வேறுபாட்டைக் கருதுகிறார் அடிகளார் என்று சிந்திக்கத் தோன்றுகிறது. அதாவது, இரத்த சம்பந்தமுடைய உறவினரைத் தவிர்ந்த ஏனைய சுற்றத்தை, அவராலேயே துறக்க முடிந்தது. எனவே, அதனை துணையான சுற்றமென்றார்.

ஆனால், இரத்த சம்பந்தமுடைய உறவை ஒருவர் தம் முயற்சியால் துறப்பது கடினம். முற்றும் துறந்த பட்டினத்துப் பிள்ளையும், ஆதிசங்கரரும்கூடத் தாய் உறவை இறுதிவரை துண்டித்துக்கொள்ளவில்லை என்பதை இங்குச் சிந்திக்கலாம். அதேபோல உடம்பு என்ற ஒன்று இருக்கின்றவரையில் அதன் தொடர்புடைய உலக பந்தத்தையும் எளிதாகப் போக்கிவிட முடியாது ஆதலாலும், அவன் அருளே துணையாகக் கொண்டு அறுக்க வேண்டும் ஆதலாலும் 'அறுத்து என்னை ஆண்டுகொண்ட பாண்டிப் பிரான்' என்றார்.

திருப்பெருந்துறை நாடகத்தில் மிகமிக இன்றியமை யாததும், தம்முடைய வாழ்வையே வழிதிருப்பியதும், தம் பிறப்பை அறுப்பதற்குக் காரணமாக அமைந்ததும், இந்த உலகத்தில் இருக்கும்போதேகூட இந்த உடம்பில் அமுத தாரைகளை எற்புத் துளைதொறும் ஏற்றியதும் ஆகிய அனைத்தும் நடைபெறுவதற்குக் காரணமாய் அமைந்தது ஒரேயொரு செயல்தான் என்பது அடிகளாரின் முடிவான கருத்தாகும்.

அந்த ஒரு செயல், குருநாதர் தம் திருவடியை அடிகளார் திருமுடிமேல் வைத்ததாகும். இதுபற்றி முன்னரும் பல இடங்களில் பாடியுள்ளாரேனும் இந்தப் பூவல்லிப் பகுதியில் நான்கு இடங்களில் கூறுகின்றார். அவை,

இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
(திருவாச: 275)

பாதமலர் என் ஆகம் துன்னவைத்த பெரியோன்
(திருவாச: 283)

சீரார் திருவடி என்தலைமேல் வைத்தபிரான்
(திருவாச: 284)

என்னுள்ளே தன் இணைப்போது அவைஅளித்து
(திருவாச: 288)

என்பனவாகும்.

இவற்றையல்லாமல் திருவடியை நினைந்து பாடியவை வார்கழல் (281), குரைகழல்கள் (285), நிறைகழலோன்(287), பொன்னார் திருவடி(291), சீரார்திருவடி(292), பூவார்கழல் (294) என்பனவாகும்.

திருப்பூவல்லியின் இருபது பாடல்களில் பத்து இடங்களில் திருவடியை நினைவிற்கொண்டு, பாடும்பொழுதே தாம் என்ன செய்ய வேண்டும் என்பதை 'வணங்கத் தலைவைத்து' (திருவாச: 281) என்ற பாடலில் பேசுகிறார்.

எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் வாய்ந்தது. ஆதலின் 'வணங்கத் தலைவைத்து' என்ற சொல்லிலேயே, உடல் முழுவதாலும் வணங்கவேண்டும் என்ற கருத்தைப் பெறவைத்தார். மனம், மொழி, மெய் என்பவற்றுள் தலையாலும், உடம்பாலும் வணங்கவேண்டும் என்று மெய்யைக் குறிப்பிட்டார். அடுத்துள்ளது மொழி பயனற்ற வார்த்தைகளைப் பேசித் திரியாமல், அவன் திருவடிப் புகழையே பேசவேண்டும் என்ற கருத்தை 'வாய், வார்கழல் வாழ்த்தவைத்து' என்றார். மூன்றாவதாக உள்ளது மனம். இது விந்தையான ஒரு பகுதியாகும். பல சமயங்களில் தன்னை உடையவரை இந்த மனம் ஏமாற்றும் இயல்புடையது. மனம் தம் அதிகார எல்லைக்குள் இருப்பதாகப் பலரும் நினைக்கின்றனர். உண்மை என்னவென்றால், மனத்தின் கோணங்கித்தனத்திற்கு இவர்கள் அடிமையாக உள்ளனர். உடலும், சொல்லும், எந்த வழியில் சென்றாலும், அதே வழியில் மனம் செல்லுமென்று சொல்ல முடியாது. பல சமயங்களில் தனியே இருப்பதே மனத்திற்குக் கேட்டை விளைவிக்கின்றது. எந்தக் கூட்டத்தில் அல்லது எந்த இனத்தில்

மனிதன் சேர்ந்திருக்கிறானோ, அந்தக் கூட்டத்திற்கு அல்லது இனத்திற்கு இயையவே மனம் தொழிற்படும். 'மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு இனத்து உளதாகும் அறிவு' (குறள்: 454) என்பது வள்ளுவன் வாய்மொழி. இந்த உண்மையை நன்கு அறிந்த புத்தன் 'சங்கம் சரணம் கச்சாமி' என்று உபதேசித்தான். இந்தச் சங்கம் என்ற சொல்லையே நம் முன்னோர் அடியார் கூட்டம் என்றும் தொண்டர் கூட்டம் என்றும் கூறினர். 'தொண்டரொடு கூட்டு கண்டாய்' என்று தாயுமான சுவாமிகளும், அபிராபி பட்டரும் கூறியவை இங்கு நினைவிற் கொள்ளத் தக்கன. இதே கருத்தை அடிகளார் 'இணங்கத் தன் அடியார் கூட்டமும் வைத்து' (திருசா: 281) என்று பாடியுள்ளார்.

அடியார் கூட்டம், என்றும் உள்ளதாகும். நம்மைப் பொறுத்தவரை, அக்கூட்டத்தைச் தேடிச்சென்று அவர்கள் எண்ண ஓட்டங்களோடு நம்முடைய எண்ண ஓட்டங் களும் ஒன்றாக இணங்கும்படி செய்யவேண்டும். இது நம்முடைய பொறுப்பாகும். அதுவும் இறைவன் திருவருள் இருந்தாலன்றி நடைபெறாது. ஆதலின் 'சீர் அடியார் கூட்டத்தில் தன் (மனம்) இணங்கவைத்து' என்கிறார் அடிகளார்.

தலை, வாய் முதலியவை எதற்காகப் படைக்கப் பெற்றுள்ளன என்பதைக் கூறினார் அடிகளார். இவற்றைச் செம்மையான முறையில் பயன்படுத்தாமல், யாரோ ஒருவன் கொடுக்கும் அவி உணவிற்கு ஆசைப்பட்டுச் சென்றவர்கள் மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் தவறிழைத்தார்கள் ஆதலின் அவர்களைப் பட்டியலிட்டு, அவர்கள் பெற்ற தண்டனையையும் (278ஆம், 289ஆம் பாடல்களில்) கூறியுள்ளார். இராவணன், அந்தகாசுரன் என்ற இருவரும், தக்கன் வேள்விக்குச் செல்லாவிடினும், இறைவனை இன்னான் என்று அறிந்திருந்தும்

அவனுக்குரிய வணக்கம் செய்யாமல் அகந்தை காரணமாக மாறுபட்டார்கள் ஆதலின், அவர்களும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற அடியார்கள் பலர் அடிகளார்க்கு முன்னும் உண்டு; பின்னும் உண்டு. ஆனால், அமைச்சர் கோலத்தில் வந்த ஒருவரை எவ்வித முன்னேற் பாடும் இன்றி இழுத்துப் பிடித்துப் பலரும் காணத் திருவடி தீட்சை செய்ததும் ஆட்கொண்டதும் அடிகளாருக்கு மட்டுமே நிகழ்ந்ததாகும். இதனையே அடிகளார் 'ஊன் (உடம்பு) நாடி நாடிவந்து உள்புகுந்தான் உலகர் முன்னே' (திருவாச: 279) என்கிறார். இக்கருத்தைக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் திருவாசகத்தில் பல இடங்களில் கூறியுள்ளாரேனும் இங்கும் 'தான் என்னை ஆட் கொண்டது எல்லாரும் தாமறிவார்' (திருவாச: 227) என்ற இடத்திலும் வெளிப்படையாகக் கூறியுள்ளார் என்பதை அறிதல்வேண்டும்.

'தான் என்னை ஆட்கொண்டது எல்லாரும் தாமறிவார்' என்று அடிகளார் கூறியிருப்பது சிந்திக்க வேண்டிய பகுதியாகும். தனிப்பட்ட ஒருவரை இறைவன் ஆட்கொண்டான் என்பதையோ அவருக்குத் திருவருள் பாலித்தான் என்பதையோ பிறர் யாரும் அறியமுடியாது என்பது இந்நாட்டு மரபு. திருவருளை நேரடியாகப் பெற்றவர்களும்கூட, அதனை வெளியே சொல்கின்ற மரபு இல்லை. இதனையே, காரைக்கால் அம்மையார் எண்ண ஓட்டமாகச் 'செவ்விய பேர் அருள் விளம்பும் திறம் அன்று என்று உரைசெய்யார்' (பெ.பு. காரை. புரா: 27) என்று சேக்கிழார் பெருமான் பாடியுள்ளார். அப்படியானால் 'தான் என்னை ஆட்கொண்டது எல்லாரும் தாமறிவார்' என்று அடிகளார் கூறியதன் அடிப்படை என்ன?

அமைச்சர் கோலத்தில் குதிரையின்மேல் ஒருவர் வருகிறார். பல சீடர்களோடு குருந்த மரத்தடியில் மானிட

வடிவில் ஒரு துறவி அமர்ந்துள்ளார். குதிரையிலிருந்து இறங்கிய அமைச்சர், அந்தத் துறவியிடம் சென்று நெடுஞ்சாண் கிடையாக அவரை வணங்குகிறார். அந்தக் குருநாதர் தம் திருவடியை அமைச்சரின் தலைமேல் வைக்கின்றார். சில விநாடிகளில் மானிட வடிவில் இருந்த குருநாதர், சீடர்களுடன் மறைந்துவிடுகிறார். இத்தனை நிகழ்ச்சிகளும் அடிகளாரைச் சுற்றியிருந்த அத்தனைபேரும் தத்தம் ஊனக்கண்களால் கண்ட காட்சிகளாகும்.

இதுவரை நடைபெற்ற புற நிகழ்ச்சிகளையும், மானிட வடிவிலிருந்த குருநாதரையும் அத்தனை பேரும் கண்டது உண்மைதான். திருவடி தீட்சையை அனைவரும் கண்டார்கள். ஆனால், அதன் பொருள் என்ன என்பதையும், அதன் பயன் என்ன என்பதையும் அடிகளாரைத் தவிர வேறு யாரும் அறியவில்லை. அறியவே முடியாதபோது உணர்விற்கு அங்கு வேலையே இல்லை.

குருநாதர் திருவடி தலையில் பட்டவுடன், ஒரு மனிதன் மகாத்மாவாக மாறிவிடுகிறான். மாறிய பிறகு, அவருடைய புறக்கண்களுக்கு அதுவரை தெரிந்த மானிட குருநாதர் உமையொருபாகனாகக் காட்சியளிக்கிறார். இவையொன்றும், சுற்றி நின்றவர்களுக்குத் தெரியாது.

திருவருள் மறைமுகமாக வந்து ஒருவருக்குமட்டும் அருள் செய்வதும் உண்டு. இதற்கு மானிட குருநாதர் தேவையில்லை. புனிதவதியாருக்கு மாம்பழத்தைத் தந்தவன் தன்னை இன்னான் என்று காட்டிக் கொள்ளவில்லை.

ஆனால், வேறு சில நிகழ்ச்சிகளில் அந்தத் திருவருள் மானிட வடிவு தாங்கிப் பிறர் காண வந்து, சில செயல்களைச் செய்வதும் உண்டு. பல சமயங்களில், யாருக்காக இந்த மானிட வடிவுடன் வருகிறானோ அவர்களேகூட இந்த மானிடனாக வந்தவன் யாரென்று

தெரிந்து கொள்வதில்லை. அவன் மறைந்தபிறகு, மறைந்துவிட்டான் என்ற காரணத்தால் சுற்றியிருந்தவர்கள், வந்தவன் இறைவன் என்று அறிகின்றனர்.

வந்தவன் மறைந்து, உமையொருபாகனாகக் காட்சி தரும் நிலையை, யாருக்காக வந்தானோ அவரைத் தவிர வேறு யாரும் காணமுடியாது.

திருவருட்டுறையில் கோயிலில் புகுந்த கிழ வேதியர் மறைந்ததை அனைவரும் கண்டனர். அசரீரியாக அவன் நம்பியாரூரருக்கு இட்ட கட்டளையைக்கூட அனைவரும் கேட்டனர். இவைகூட நம்பியாரூரர் உடனிருந்த புண்ணியத்தால் நிகழ்ந்தவையாகும்.

அசரீரி கேட்கும் அதே நேரத்தில், இடபாரூடனாய்க் காட்சி தரும் அவனை, நம்பியாரூரர் ஒருவர்மட்டுமே காண முடிந்தது.

'எனக்குப் பால் தந்த பெருமான் இவன் அன்றே' என்று பாடிக்கொண்டு, ஆட்காட்டி விரலைப் பிரம புரத்தின்மேல் சுட்டிக் காட்டினார் சிறிய பெருந்தகையார். உமையொருபாகன் காட்சி, அவருக்கு மட்டுந்தான் கிடைத்ததே தவிர, அவர் தந்தையான சிவபாத விருதயருக்குக் கிட்டவில்லை, கிட்டவும் முடியாது. சிவபாதவிருதயர் இறைக்காட்சி பெற்றிருப்பாரேயானால், திருவீழிமிழலை சென்று யாகம் செய்யப் பொன்வேண்டும் என்று மகனிடம் கேட்டிருக்க மாட்டார்.

அடிகளார் வரலாற்றிலும் இந்நிலையே உள்ளது. ஆனால், 'எல்லாரும் தாம் அறிவார்' என்று அடிகளார் கூறியது சரியா என்று சிந்தித்துப் பார்த்தால், உண்மையை விளங்கிக் கொள்ள முடியும். பற்பல இடங்களில் 'நாயினும் கடையேன்' என்றும் 'கள்வன், கடியன், கலதி' (திருவாச: 233) என்றும் தம்மைக் கூறிக்கொள்ளும் அடிகளார், அவ்வளவு தாழ்ந்தவனாகிய தமக்கு அருள் செய்தான்

ஆதலால் அதனை எல்லோருக்கும் செய்திருப்பான் என்று நினைக்கின்றார். அவ்வாறு அவர் நினைத்தார் என்பதற்கு 'எந்தரமும் ஆட்கொண்டு' என்ற தொடரைப் பல பாடல்களில் அவர் பயன்படுத்தியதே சான்றாகும். இப்பெருமக்கள் உலகம் முழுவதிலும் வாழும் மக்கள் தம்மைவிட மிக உயர்ந்தவர்கள் என்று கருதும் இயல்புடையவர்கள். அஸ்தினாபுரத்தில் தீயவர்கள் யாருமே இல்லை என்று தருமன் கூறியதும் இதற்குச் சான்றாகும்.

திருவடியைத் திருவாதவூரர் தலையில் வைத்தவர், உடனே மறைந்துவிட்டார் என்பதால், அவர் இறைவனாக இருக்குமோ என்று பலரும் நினைத்திருக்கலாம். ஆனால், அவர்களைப் பொறுத்தமட்டில், இந்தக் காட்சியைக் காணுமளவிற்குத் திருவருள் உதவியதே தவிர, அதற்குமேல் அவர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை.

மேலைப் பாடல்களுள் உறவினர், சுற்றத்தார், உலக பந்தம் ஆகியவற்றை அறுத்து அருள்செய்தான் என்று கூறிய அடிகளார், வேறு இடங்களில் என் பிறவியை வேரறுத்தான் என்றும் கூறியுள்ளார். ஆக, இனிப் பிறப்பில்லை என்பது உறுதி. ஆனால், எடுத்த இப்பிறப்பில் உறவு முதலியவற்றில் கொண்ட பந்தத்தை அறுத்தான் என்று பாடிவிட்டாலும், தேகபந்தம் (எடுத்துள்ள இந்த உடல்மேல் கொண்டுள்ள பற்று) நீங்குவது ஏறத்தாழ இயலாத காரியம். உடல் என்ற ஒன்றிருக்கும்வரை, தேகப் பிரக்ஞை என்ற ஒன்று இருக்கும்வரை, உடல்மேல் உள்ள பற்று நீங்குவது மிகமிகக் கடினமாகும். திருவருள் துணை என்ற ஒன்று இருந்தாலொழிய, எவ்வித முயற்சியாலும் இந்தப் பந்தத்தைப் போக்க முடியாது. திருப்பெருந்துறை நாயகன் அதையும் போக்கினான் என்பதைப் 'பேராசையாம் இந்தப் பிண்டம் அறப் பெருந்துறையான் சீரார் திருவடி என்தலைமேல் வைத்த பிரான்' (திருவாச: 284) என்று பாடுகிறார். இங்கு, 'பிண்டம் அற' என்பதற்குப்

பிறவி நீங்க என்று பொருள் கொள்வது அவ்வளவு சரியானதன்று. பிண்டம் என்பது உடல்மேல் கொண்டுள்ள பற்று என்ற பொருளையே தந்துநிற்கின்றது.

'பிட்டமுது செய்தருளி தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட புண்பாடல் பாடி' என 290 ஆம் பாடலில் வரும் பகுதி ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். இரண்டு திருவிளையாடல் புராணங்களும் திருவாதவூரடிகள் புராணமும் ஒரு செய்தியைச் சொல்வதில் மிகுந்த ஒற்றுமையுடன் விளங்குகின்றன. வந்தியம்மையின் பிட்டை வாங்கி உண்டருளினான். வெள்ள அடைப்புப் பணியை மேற்பார்வை செய்துகொண்டுவந்த பாண்டியன், கையில் பிரம்புடன் ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துக்கொண்டு வந்தான். வந்தியம்மையாரின் பங்கு அடைபடாமல் இருக்கக் கண்டு வந்தியின் கூலியாளைப் பிரம்பால் அடித்தான். இம்மூவர் கருத்துப்படி தண்டை வைத்திருந்தவன் பாண்டியன்; அப் பிரம்பால் அடித்தவனும் பாண்டியன்தான்; அடியைப் பெற்றவன்தான் வந்திக்குக் கூலியாளாய் வந்தவன். இக்கருத்தையே வள்ளல் பெருமானும், வண்பட்ட கூடலில் என்ற பாடலில் 'நின் பொன் பட்ட மேனியில் புண்பட்ட போதில்' என்று பாடியுள்ளார்.

இப்பகுதியில் வரும் 'தன்னை' என்பதற்குச் சொக்கனே எனப் பொருள் கொண்டு, இச்சொக்கன் தன்னைப் பாண்டியன் தண்டால் அடித்து ஏற்படுத்திய புண்ணைப் பாடி என்று விளக்கியுள்ளனர்.

பாடல் அமைந்துள்ள முறையில் வேறுவிதமாகவும் பொருள் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. இதற்கு, தண்டாலே பெற்ற புண் என்றும், பாண்டியன் தன்னைப் பணிகொண்ட புண் என்றும் கூறலாம். இவ்வாறு பொருள் கொள்வதற்குப் பாண்டியன், தன்னை என்று பிரித்து நோக்காமல் பாண்டியன்தன்னை என்று ஒருசொல் நீர்மைத்தாகக் கொண்டு பாண்டியனைப் பணிகொண்ட

ஆதலால் அதனை எல்லோருக்கும் செய்திருப்பான் என்று நினைக்கின்றார். அவ்வாறு அவர் நினைத்தார் என்பதற்கு 'எந்தரமும் ஆட்கொண்டு' என்ற தொடரைப் பல பாடல்களில் அவர் பயன்படுத்தியதே சான்றாகும். இப்பெருமக்கள் உலகம் முழுவதிலும் வாழும் மக்கள் தம்மைவிட மிக உயர்ந்தவர்கள் என்று கருதும் இயல்புடையவர்கள். அஸ்தினாபுரத்தில் தீயவர்கள் யாருமே இல்லை என்று தருமன் கூறியதும் இதற்குச் சான்றாகும்.

திருவடியைத் திருவாதவூரர் தலையில் வைத்தவர், உடனே மறைந்துவிட்டார் என்பதால், அவர் இறைவனாக இருக்குமோ என்று பலரும் நினைத்திருக்கலாம். ஆனால், அவர்களைப் பொறுத்தமட்டில், இந்தக் காட்சியைக் காணுமளவிற்குத் திருவருள் உதவியதே தவிர, அதற்குமேல் அவர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை.

மேலைப் பாடல்களுள் உறவினர், சுற்றத்தார், உலக பந்தம் ஆகியவற்றை அறுத்து அருள்செய்தான் என்று கூறிய அடிகளார், வேறு இடங்களில் என் பிறவியை வேரறுத்தான் என்றும் கூறியுள்ளார். ஆக, இனிப் பிறப்பில்லை என்பது உறுதி. ஆனால், எடுத்த இப்பிறப்பில் உறவு முதலியவற்றில் கொண்ட பந்தத்தை அறுத்தான் என்று பாடிவிட்டாலும், தேகபந்தம் (எடுத்துள்ள இந்த உடல்மேல் கொண்டுள்ள பற்று) நீங்குவது ஏறத்தாழ இயலாத காரியம். உடல் என்ற ஒன்றிருக்கும்வரை, தேகப் பிரக்ஞை என்ற ஒன்று இருக்கும்வரை, உடல்மேல் உள்ள பற்று நீங்குவது மிகமிகக் கடினமாகும். திருவருள் துணை என்ற ஒன்று இருந்தாலொழிய, எவ்வித முயற்சியாலும் இந்தப் பந்தத்தைப் போக்க முடியாது. திருப்பெருந்துறை நாயகன் அதையும் போக்கினான் என்பதைப் 'பேராசையாம் இந்தப் பிண்டம் அறப் பெருந்துறையான் சீரார் திருவடி என்தலைமேல் வைத்த பிரான்' (திருவாச: 284) என்று பாடுகிறார். இங்கு, 'பிண்டம் அற' என்பதற்குப்

பிறவி நீங்க என்று பொருள் கொள்வது அவ்வளவு சரியானதன்று. பிண்டம் என்பது உடல்மேல் கொண்டுள்ள பற்று என்ற பொருளையே தந்துநிற்கின்றது.

'பிட்டமுது செய்தருளி தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட புண்பாடல் பாடி' என 290 ஆம் பாடலில் வரும் பகுதி ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். இரண்டு திருவிளையாடல் புராணங்களும் திருவாதவூரடிகள் புராணமும் ஒரு செய்தியைச் சொல்வதில் மிகுந்த ஒற்றுமையுடன் விளங்குகின்றன. வந்தியம்மையின் பிட்டை வாங்கி உண்டருளினான். வெள்ள அடைப்புப் பணியை மேற்பார்வை செய்துகொண்டுவந்த பாண்டியன், கையில் பிரம்புடன் ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துக்கொண்டு வந்தான். வந்தியம்மையாரின் பங்கு அடைபடாமல் இருக்கக் கண்டு வந்தியின் கூலியாளைப் பிரம்பால் அடித்தான். இம்மூவர் சுருத்துப்படி தண்டை வைத்திருந்தவன் பாண்டியன்; அப் பிரம்பால் அடித்தவனும் பாண்டியன்தான்; அடியைப் பெற்றவன்தான் வந்திக்குக் கூலியாளாய் வந்தவன். இக்கருத்தையே வள்ளல் பெருமானும், வண்பட்ட கூடலில் என்ற பாடலில் 'நின் பொன் பட்ட மேனியில் புண்பட்ட போதில்' என்று பாடியுள்ளார்.

இப்பகுதியில் வரும் 'தன்னை' என்பதற்குச் சொக்கனே எனப் பொருள் கொண்டு, இச்சொக்கன் தன்னைப் பாண்டியன் தண்டால் அடித்து ஏற்படுத்திய புண்ணைப் பாடி என்று விளக்கியுள்ளனர்.

பாடல் அமைந்துள்ள முறையில் வேறுவிதமாகவும் பொருள் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. இதற்கு, தண்டாலே பெற்ற புண் என்றும், பாண்டியன் தன்னைப் பணிகொண்ட புண் என்றும் கூறலாம். இவ்வாறு பொருள் கொள்வதற்குப் பாண்டியன், தன்னை என்று பிரித்து நோக்காமல் பாண்டியன்தன்னை என்று ஒருசொல் நீர்மைத்தாகக் கொண்டு பாண்டியனைப் பணிகொண்ட

புண் என்று கொண்டுகூட்டுச் செய்வது நலம். இவ்வாறு கொள்ளும்போது புராணங்களில் கூறப்பட்ட செய்திகளுக்கு மாறாக எதுவும் கூறப்படவில்லை.

பாண்டியன் தன்னைப் பணிகொண்ட புண் என்பது எவ்வாறு பொருந்தும்? புண்ணைப் பெற்றவன் சொக்கன், அப்படியிருக்க, அந்தப் புண் பாண்டியனை எவ்வாறு திருத்திற்று அல்லது பணிகொண்டது என்ற வினா நியாயமானது.

வரலாற்றில் இடம் பெறாத அரிமர்த்தன பாண்டியன் என்ற பெயரைச் சொல்லித் திருவிளையாடல் புராணங்களும், திருவாதவூரடிகள் புராணமும் பேசுகின்றன. தளவாய்புரம் செப்பேடு முதலியவற்றால், அடிகளார் காலத்தில் வாழ்ந்தவன் இரண்டாம் வரகுண பாண்டியன் என்பது தெளிவாகிறது. அந்தச் செப்பேடு இவனை மாபெரும் சிவபக்தனாகப் பேசுகிறது. அன்றியும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் பட்டினத்துப் பிள்ளை, இந்த வரகுணனின் பக்திச் சிறப்பைப் பல படியாக எடுத்துக்கூறி, இறுதியில் 'பெரிய அன்பின் வரகுண தேவனும்' என்று பாடுவது நோக்கத்தக்கது. அடிகளாரேகூட 'நரகொடு சொர்க்க நானிலம் புகாமல் பரகதி பாண்டிற்கு அருளினை போற்றி' (திருவா:4—213, 14) என்று பாடுவதாலும் அடிகளார் காலத்து வாழ்ந்தவன் மாபெரும் சிவபக்தனாகிய வரகுண பாண்டியனே என்பது தேற்றம்.

இந்தப் பாண்டியன், ஏனைய பாண்டியர்கள்போல் அல்லாமல், வாழ்க்கையில் மாபெரும் சிவனடியானாய் மாறுவதற்கு ஏதோ ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்க வேண்டும். வந்தியின் கூலியாள் முதுகில் பட்ட புண், தன்னால் ஏற்பட்டது என்பதையும், அப்புண்ணைப் பெற்றவன் ஆலவாய்ச் சொக்கன்தான் என்பதையும் அவனை அடித்த பாதகச் செயலைச் செய்தது தான்தான் என்றும் உணர்ந்த

பின், வரகுணன் வாழ்க்கையே முற்றிலுமாக மாறியிருக்க வேண்டும். அதனாலேயே மானிடம் பாடாத பட்டினத்துப் பிள்ளையும், அடிகளாரும் அவனைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர். இவற்றையெல்லாம் மனத்துட்கொண்டு பார்த்தால் தண்டாலே பெற்ற புண், பாண்டியனைப் பணிகொண்ட புண்தான் என்று பொருள்கொள்வதில் தவறில்லை என்றே தோன்றுகிறது.

திருவுந்தியார்

பக்தியனுபவத்தில் ஈடுபட்டு, அந்த அனுபவத்தைக் கூறும் ஏனைய பாடல்கள்போல் அல்லாமல் திருவுந்தியார் தனித்து நிற்கின்றது. 'வளைந்தது வில்லு' என்ற திருவுந்தியாரின் முதல் பாடலும் இதன்பின் வருகின்ற பாடல்களும் சிவபெருமானது பேராற்றலைக் குறித்தே பெரும்பாலும் வருவனவாகும்.

போர் தொடங்குவது முதல் நிகழ்ச்சி; வில்லை வளைக்கின்ற செய்ல் அடுத்ததாகத்தான் நடைபெறும். இந்த முறையை மாற்றி அடிகளார் வில் வளைந்தது அதனால் பூசல் நிகழ்ந்தது என்ற கருத்துப்படப் பாடியுள்ளது கொஞ்சம் சிந்திக்கத்தக்கது ஆகும். முப்புரத்தில் உள்ளவர்கள் எத்தகைய தீயசெயலைச் செய்யினும் நேரிடையாகச் சிவபெருமான்மேல்போர் தொடுக்கவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்கள் மூவரும் சிவபக்தியிலும், சிவபூசையிலும் மிகுதியும் ஈடுபட்டிருந்தனர் என்று கதை பேசுகின்றது. அப்படியிருக்க, சிவபெருமான் அவர்களை அழிக்கப் புறப்பட்டார் என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? உண்மையைக் கூறப்போனால் இறைவன் புறப்பட்டது சிவபூசை செய்த அவர்களை அழிக்கவன்று. ஆணவம் காரணமாக அவர்கள் பிறருக்கு இழைத்த கொடுமைகளை அழிக்கவே புறப்பட்டார்.

295ஆம் பாடலின் முதலிரண்டு அடிகளையும், வாய் விட்டுப் படித்தால், இந்த மூன்று நிகழ்ச்சிகளும் ஒன்றுக் கொன்று தொடர்பில்லாதவை போன்று தோன்றும். 'பூசல் விளைந்தது அதன் விளைவாக வில் வளைந்தது' என்றால், ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகக் காணலாம். இதனை இப்படியே கூறவேண்டுமென அடிகளார் நினைத்திருந்தால் பாடலை மாற்றி 'விளைந்தது பூசல்; வளைந்தது வில்லு' என்று பாடியிருக்கலாம். அப்படிப் பாடியிருந்தால் கலித்தாழிசை இலக்கணம் கெட்டுவிடாது.

மாபெரும் கவிஞராகிய அடிகளார் , எதோ ஒரு காரணத்திற்காகவே 'வளைந்தது வில்' என்று முதலில் தொடங்குகிறார். மாமேரு மலையை வில்லாக எடுத்துச் சென்றார் என்பதுதான் புராணக்கதை. போர் தொடங்கு கின்ற வரையில் வில் நிமிர்ந்தே நிற்கும். போர் தொடங்கும் பொழுதுதான் அதனை வளைத்து நாணேற்றி வில்லுக்குரிய தொழிலைச் செய்ய அதனைத் தயார்படுத்துவர்.

வாயுபுராணத்தில் சொல்லப்பெற்ற கதை வருமாறு;. விஸ்வகர்மா என்னும் தேவதச்சன் பொன்னாலாகிய ஒரு இரதத்தைச் செய்து சிவனுக்குத் தந்தான். நான்முகன் சாரதியாக அமர்ந்தான். அதில் ஏறிய சிவபிரான் பாசுபதம் என்ற அம்பைச் செலுத்தித் திரிபுரங்கள் மூன்றையும் ஒரே நேரத்தில் அழித்தான் என்பதாகும்.

இந்தக் கதையைக்கூட அடிகளார் முழுவதுமாக எடுத்துக்கொள்ளவில்லை, சாதாரண தேவர்களைப்போலச் சிவபெருமானும் ஒரு இரதத்தில் ஏறி அம்பைச் செலுத்தித்தான் திரிபுரத்தை அழித்தான் என்று கூறுவது, சிவபெருமானின் இறையாண்மைக்கு ஏற்றதன்று. தான் செய்த தேரில்தான் சிவபெருமான் ஏறினான் என்பதால் விஸ்வகர்மன் தருக்குக் கொள்ளவும், தான் சாரதியாக அமர்ந்ததால்தான் திரிபுரம் எரிக்கப்பட்டது என்று பிரமன்

தருக்குக் கொள்ளவும், மூன்று கோட்டைகளையும் ஒருசேர அழிக்கச் சிவபெருமான் தன்னையே பயன்படுத் தினான் என்று பாசுபதம் தருக்குக் கொள்ளவும் இடந்தரு தலின் அடிகளார் இக்கதையை ஏற்றுக் கொள்ளவில்லை.

'ஒன்றும் பெருமிகை உந்தீபற்' (296) என்று பாடியதால் எந்த அம்பும் பயன்படுத்தப் பெறவில்லை என்பதைக் கூறினாராயிற்று.

அடுத்துத் 'தச்சு விடுத்தலும், தாமடி இட்டலும், அச்சு முறிந்தது என்று உந்தீபற' (297) என்று பாடியதால் தேவதச்சன் பொற்றேரையும் சிவபெருமான் பயன்படுத்த வில்லை என்று கூறுகிறார். இதனால் வாயு புராணக் கதையை முற்றிலுமாக ஒதுக்கிவிட்டார் என்பது பெற்றாம்.

ஆனாலும், வாயு புராணக் கதை தமிழ்நாட்டை விட்டுப் போகவில்லை என்பதை அறியமுடிகிறது. இக்கதை போகாததுமட்டு மன்றி புதியபுதிய வடிவுடன் பிற்காலத்தில் பேசப்பெற்றது. பொற்றேருக்குப் பதில் பூமி தேராயிற்று; சூரிய சந்திரர் சக்கரங்களாயினர்; மாமேரு வில்லாயிற்று; வாசுகி நாணாயிற்று; திருமால் அம்பாயினார். விநாயகரை வணங்காமல், சிவபெருமான் தேரில் ஏறியதால் விநாயகர் அச்சை முறித்தார் என்ற வகையில் கதை வளர்ந்தது. இதனையே அருணகிரியார் 'முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறை ரதம் அச்சது பொடிசெய்த அதீதீரா' (திருப்புகழ்:1) என்று பாடுமளவிற்கு வாயுபுராணக் கதை முழுமாற்றம் பெற்றுவிட்டது.

அடிகளார் கூற்றிலும், பிற்காலக் கதையிலும் ஒரு கருத்து மாறாமல் இடம்பெற்றுள்ளது. அதாவது சிவபெருமான் போர் என்ற ஒன்றைச் செய்யாமலும், அம்பு ஒன்றை எய்யாமலும் சிரித்தே திரிபுரத்தை எரித்தான் என்பதே அப்பொதுக் கருத்தாகும்.

திரிபுரக் கதையைப் பொறுத்தமட்டில், வில்லை வளைத்தாகவோ, அம்பு எய்ததாகவோ சிவன் போரிட்டதாகவோ ஒரு குறிப்பும் இல்லை.

அப்படியிருக்க, 'வளைந்தது வில்லு; விளைந்தது பூசல்' என்று அடிகளார் கூறுவதை மறுபடியும் சிந்தித்தால் இவற்றிற்கு எதிர்மறையாகப் பொருள் கொள்வது சரியோ என்று தோன்றுகிறது. அதாவது வில் வளைக்கப் படவில்லை; பூசல் ஒன்றும் நிகழ்த்தப்படவில்லை. அப்படி யிருந்தும் முப்புரம் உளைந்தன என்கிறார் அடிகளார். உளைதல் என்பது மனம், உடல் இரண்டிலும் பெருந் துன்பம் அடைதலைக் குறிக்கும்.

பூசல் ஒன்றும் ஏற்படாதபொழுது, வில் வளைக்கப் படாதபொழுது இதுவரை மனஉளைச்சல் எதுவுமின்றித் தம் அகங்காரம் காரணமாகப் பிறருக்குப் பெருந்துன்பம் செய்து வந்த திரிபுராதிகள், இப்பொழுது உளைந்தனர். அப்படி என்றால், அவர்களின் உளைச்சலுக்குக் காரணம் என்ன? அவர்களுடைய ஆணவமே அவர்களை அழிக்க ஏதுவாயிற்று. பிறருக்குத் துன்பம் செய்து, அதில் மகிழ்ந்தவர்கள் அல்லவா அவர்கள்? எத்துணையோ பேருக்கு இவர்கள் உண்டாக்கிய மன உளைச்சல் இப்பொழுது இவர்களைத் தாக்கிற்று. அதனையே, அடிகளார் 'உளைந்தன முப்புரம்' என்று பேசுகிறார்.

இதுவரை, அவர்கள் அடைந்த உளைச்சல் அவர்கள் செய்த வினையின் பயனாகவே அவர்களுக்கு ஏற்பட்டது. தாம் செய்த வினைக்கேற்பத் தண்டனை அனுபவித்தப் பிறகு அவர்கள் உய்கதி அடைய வேண்டும்.

பிறருக்குச் செய்த துன்பமும் இவர்கள் அடைந்த உளைச்சலும் சமமாகும்பொழுது உய்கதி பெறவேண்டிய நேரம் இவர்களுக்கு வந்தது. இந்தநிலையில்தான் முப்புரம் எரிக்கப்படுகிறது. பிறருக்குத் துன்பும் செய்த கருவிகளாகிய

இரும்பு, வெள்ளி, பொன்னால் செய்த கோட்டைகளும் அவற்றோடு தொடர்புடைய ஏனைய பொருட்களும் எரிந்து சாம்பலாயின. அவைமட்டுமா எரிந்தன? இத்துணைப் பொருள்களுடன் மூலமாக நின்றது அம்மூவரின் அகங்காரமாகும். திரிபுரத்தை அழித்த பெருமான் அவர்கள் அகங்காரத்தையும் சேர்த்தல்லவா அழித்தான்? அதனையே, 'ஒருங்குடன் வெந்தவாறு உந்தீ பற' என்று பாடுகிறார். ஒருங்குடன் என்ற சொல் அவர்கள் வைத்திருந்த துணைப் பொருள், அகங்காரம் ஆகிய அனைத்தையும் குறிப்பதற்குரிய சொல்லாகும்.

இந்தச் சிந்தனை தோன்றுவதற்குக் காரணம் திருமூலரின்,

அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரோ

(திருமந்: 343)

என்ற பாடலே ஆகும்.

மூலப் பரம்பொருளாக உள்ளவன் தன்னால் படைக்கப்பட்டுத் தன் அதிகாரத்தின்கீழ் இருந்த திரிபுராதிகளை அழிப்பதற்கு, தேர் ஒன்றைத் தயாரித்து அதன்மேல் ஏறிக்கொண்டு வில்லையும் கையிலேந்திச் சென்றான் என்பது அவனுடைய இறையாண்மைக்குப் பொருந்துமாறில்லை. தொன்றுதொட்டு வழங்கிவரும் இக்கதையில் உள்ள குறைபாட்டை அறிந்த திருமூலர், முப்புரம் செற்றனன் என்று சொல்பவர்கள் மூடர்கள் என்று கூறிப்போனார்.

இதே கருத்தை, அடிகளார் உடன்பாட்டுச் சொற்களைப் பயன்படுத்தி, மிக்க சமத்காரத்துடன் பூசலோ நிகழவில்லை; வில்லோ வளையவில்லை என்ற எதிர்மறைப்

பொருளைத் தருமாறு செய்கிறார். ஆனாலும் முப்புரங் களும் எரிந்தன. அதில் உள்ளவர்கள் உளைந்தனர் என்று கூறினார்.

திரிபுரக் கதை, தக்கன் கதை, இராவணன் கதை ஆகிய கதைகளை ஒரு வரிசைப்படுத்துவதன் மூலம், சிவபெருமானுடைய பேராற்றலைக் கூறிக்கொண்டு வருகிறார் அடிகளார். பிரபஞ்ச காரணன் என்பதையும், கருணையே வடிவானவன் என்பதையும் நாயிற் கடைப்பட்ட தம் போன்றவர்களுக்கும் 'தாயிற்சிறந்த தயாவான தத்துவன்' என்பதையும் இதுவரை பலப்பல பாடல்களில் கூறிக் கொண்டுவந்த அடிகளார், இப்பொழுது அப்பெருமானுடைய வீரச் செயல்களை வரிசைப்படுத்திக் கூறினார்.

அழிக்கும்பொழுதுகூட அவனுடைய கருணை தாராதரம் பார்க்கின்றது என்பதை 'உய்யவல்லார் ஒரு மூவரைக் காவல்கொண்டு' (திருவாச:298) என்பதால் விளக்கினார்.

தக்கன் வேள்வியில் பங்குகொண்டோர், அவ்வேள்வி யில் சிவன் ஒதுக்கப்பட்டான் என்று தெரிந்திருந்தும் தாங்கள் அழைக்கப்பட்டதால் தருக்குக் கொண்டனர். அதுவுமன்றித் தக்கன் ஆணவத்தோடு சிவனை இகழ்ந்த போது வாய்மூடி இருந்து, அதற்கு உடந்தை ஆயினர். ஆதலின், கருணைக்கு இடங்கொடாது தண்டித்தான் என்றார்.

முதல் பதினாறு பாடல்களிலும் (295-310) கொடுமை நிறைந்த வீரச்செயல்களைக் கூறியமையின் படிப்பவர் மனத்தில், சிவபெருமான் கடுமையானவன் என்ற எண்ணம் தோன்ற இடமுண்டல்லவா? அதனைப் போக்கவே 311 ஆம் பாடலில் உபமன்யு முனிவன் கதையைக் கூறினார்.

அடுத்த இரண்டு பாடல்களில் ஆணவத்தால் துன்புற்றவர் கதைகளே பேசப்பெறுகின்றன. அப்படியிருக்க உபமன்யு கதை இடையே வந்ததன் நோக்கமென்ன?, ஆணவம் முதலிய மலச்சேட்டைகள் இல்லாதது குழந்தை, ஆதலின், எந்த நேரத்திலும் குழந்தை விரும்பியதைத் தருகின்ற கருணை வள்ளல் அவன் என்பதை நினைவூட்டவே, ஆணவத்தால் அழிந்தோர் கதை நடுவே இக்கதையைக் கூறுகின்றார்.

ஆணவத்தால் தம்மையே பெரிதாக மதித்தனர் ஒரு கூட்டத்தார். ஆனால், கதிரவன் வெப்பத்தையும் தாங்குகின்ற பேராற்றலுடைய முனிபுங்கவர்கள் தம்முடைய ஆற்றலைப் பெரிதெனக் கருதி ஆணவம் கொள்ளாமல் உலகைக் காக்க வேண்டும் என்ற— உயிர்களைக் காக்க வேண்டுமென்ற கருணையால் உந்தப்பெற்றுக் கடமையைச் செய்கின்றனர். ஆதலின், அவர்களைக் காவல் செய்கின்றான் இறைவன் என்றார்.

தண்டனை தருகின்ற ஒருவன், ஆணவம் முதலிய குற்றமற்ற குழந்தைக்கும், தன்னலத்தைத் துறந்து பிறர்நலம் பேணும் முனிவர்களுக்கும் காவலாக உள்ளான் என்று கூறுவதால் இறைவனுடைய மறக்கருணை, அறக்கருணை என்ற இரண்டையும்பற்றிக் கூறினாராயிற்று.

திருத்தோணோக்கம்

முந்தைய பாடல்களில் நான்முகன், திருமால், இந்திரன் ஆகியோர் சிவபெருமானின் திருவடியைக் காணமுடியாமல் திகைத்து நிற்கின்றனர் என்ற கருத்துப் பலபடியாகப் பேசப்பெற்றது. இங்கேயும்கூட அதுபோன்ற கருத்துக்கள் 316, 319, 323, 324, 325, 326 ஆம் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. ஆனாலும், முன் போலவே இக்கருத்துக்களை விரிவாகக் கூறிவரும் அடிகளார்,

திருத்தோணோக்கத்தில் மூன்று புதிய சிந்தனைகளைப் பாடுகின்றார்.

கண்ணப்பர் வரலாற்றில் அடிகளார் அதிகம் ஈடுபட்டவர் என்பதை முன்னரும் குறித்துள்ளோம். படைத்தல் தொழிலைச் செய்வதோடு, கல்வி, அறிவு என்பவற்றிற்குத் தலைவனாகவும் உள்ள நான்முகனும் காணமுடியாத ஒருபொருளைக் கல்வி, அறிவு, குடிப்பிறப்பு என்ற எதுவுமில்லாத ஒருவர், ஆறே நாளில் கண்டார். கண்டதோடுமட்டுமன்றி நாம, ரூபம் கடந்த அப்பொருள் தனக்கொரு வடிவைக் கற்பித்துக் கொண்டு, திண்ணனார் கையைப் பற்றிக்கொண்டு 'நில்லு கண்ணப்ப' என்று சொல்லுமளவிற்கு ஆறே நாளில் (வளர்ச்சி அடைந்தார் என்ற வரலாற்றை இடையே கூறுவதன் மூலம்) நான்முகன் முதலானவர்களோடு கண்ணப்பரையும் வைத்து எண்ணுமாறு செய்கிறார் அடிகளார்.

அறிவாலும், செல்வத்தாலும் காணமுடியாத ஒன்று, அன்புக்குக் கட்டுப்பட்டு, அந்த அன்புடையார் கையையும் பற்றுகின்றது என்பதுவே கண்ணப்பர் வரலாற்றின் சிறப்பாகும்.

'பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகள்' (திருவாச:3.17) என்று கூறப்படும் இப்பூசனையில் பொருள்கள் முதலிடம் பெற்றன. திண்ணனார் பூசை அன்புபற்றிச் செய்யப் பெற்றது. ஆதலின், ஆகமத்தில் கூறப்பெற்ற பொருள்களுக்கு மாறாக, வேறு பொருள்கள் இடம்பெற்றன. இந்தப் பூசனை முழுவதும் அன்பால் நிறைந்திருந்தமையின் பயன் படுத்தப்பெற்ற பொருள்களாகிய வாய், உமிழ்நீர், இறைச்சி, காற்செருப்பு ஆகியவை இப்பூசனையின் இடம்பெற்றிருப் பினும், அவை தமக்குரிய இயல்பை இழந்து, அன்பின் பல்வேறு வெளிப்பாட்டு வடிவங்களாகவே அமைந்தன.

இற்றைநாளில் இப்பாடலைக் கற்போர் இறைச்சி முதலியவை கொண்டு, இவ்வாறு தாமும் பூசனை செய்யலாமோ என்று கருதினால், தாராளமாகச் செய்யலாம். ஆனால் மூன்று திட்டங்களுக்கு உட்பட்டு இது செய்யப்படவேண்டும். முதலாவது கண்ணப்பரைப் போலத் தற்போதம் இழந்து, தேகப்பிரஞ்சை அற்றவர்களாக, இவர்கள் ஆகவேண்டும். இரண்டாவது, திண்ணனார் தமக்குப் பசி என்றோ, தாகமென்றோ எதனையும் நினைத்தாகக்கூடத் தெரியவில்லை. இவர்களும் அப்படி ஆதல் வேண்டும். மூன்றாவது, திண்ணனார் தம்முடைய கண் என்றும் பாராமல் இரண்டாவது கண்ணையும் எடுத்துவிட்டால் அடுத்த விநாடி எப்படி வாழமுடியும் என்றும் சிந்திக்காமல், தான் என்ற ஒன்று செத்த நிலையில், தோண்டத் தொடங்கினார். அந்த நிலைக்கு வந்தவர்கள் எதை வேண்டுமானாலும் இறைவனுக்குப் படைக்கலாம் என்பதே விடையாகும்.

இறைச்சி பற்றிய பிரச்சினை இல்லாமல் பூசை முதலிய செய்வோர் வழிபாடு சிவகோசரியார் வழிபாடு போன்றதாகும்.

கண்ணப்பர் வரலாற்றை 317ஆம் பாடலில் விரிவாகப் பாடிய அடிகளார் 321ஆம் பாடலில் சண்டேசுர நாயனார் கதையைக் கூறியுள்ளார். இவை இரண்டும் இரண்டு துருவங்களில் உள்ளவை. திண்ணனாரைப் பொறுத்த மட்டில் வாய் எச்சில் அபிடேகப் பொருளாகிறது. விசாரசருமனை பொறுத்தமட்டில் அபிடேகத்திற்குரிய பால் உள்ள பாத்திரத்திலேயேகூடக் கால் படக்கூடாது என்ற கொள்கை நிலவுகிறது.

விசாரசருமன் ஆகமங்களைப் படித்து, அதில் சொல்லப்பட்ட முறையில் சிவபூசை செய்கிறான். ஆழ்ந்த பக்தியோடு, தன்னை மறந்து பூசை செய்தான். ஆயினும் சுற்றுவட்டாரமும், அதிலுள்ள பொருட்களும், அங்கு

நிற்கின்ற மனிதனும் அவனுடைய மனத்தின் புறப் பகுதியிலிருந்து நீங்கவில்லை. முழுவதுமாகத் தன்னை மறந்து பூசையில் அவன் ஈடுபட்டிருப்பின் யாரோ ஒருவர், பாற் குடத்தை இடறியது அவனுக்குத் தெரியப் போவதில்லை. கிரியைகள், சடங்குகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆகம பூசையில் ஈடுபட்டிருக்கும் ஒருவன், தன்னை மறக்க இயலாது. இன்ன கிரியைக்குப் பின் இன்ன கிரியை செய்யப்பெற வேண்டும் என்ற நினைவோடு செய்யப்பெறும் பூசை ஆதலின் முற்றிலும் தன்னை மறந்த நிலை அங்கே இருப்பதற்கில்லை.

ஆனால் திண்ணனாரைப் பொறுத்தமட்டில், அவர் எந்தச் செயலைச் செய்தாலும் அந்தச் செயலின் பின்னே 'அவர்' இல்லை. இறைவன் கண்ணில் குருதி வரும்பொழுது கலங்கிப்போன திண்ணனார், சுற்றிச் சுற்றி வருகின்றார் ஆனால், மரத்தின் பின்னே ஒளிந்து கொண்டிருக்கும் சிவகோசரியை அவர் காணவேயில்லை. தன்னை இழந்த நிலையிலேயே திண்ணனாருடைய செயல்கள் நடைபெற்றன என்பதற்குச் சிவகோசரியை அவர் காணாததே அடையாளமாகும்.

திண்ணனாருடையதும், விசாரசருமனதும் ஆன பூசைகள் இரண்டுமே இறைவனால் ஏற்றுக் கொள்ளப் பெற்றன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆயினும், விசாரசருமன் பூசையில், அவன் தன்னை இழக்கவே யில்லை. திண்ணனார் செய்த ஆறு நாள் வழிபாட்டில், திண்ணார் என்ற ஒருவர் இல்லவேயில்லை.

பூசை செய்யும் அந்த நேரத்தில், தன்னை மறந்து வழிபடும் அந்த நிலையை பயிற்சி மூலம் யார் வேண்டுமானாலும் பெறலாம். ஆனால், திண்ணனாரைப் போன்று, ஆறு நாளில் தான் என்ற ஒரு பொருளை அறவே துறந்துவிடுதல் வேறு யார்க்கும் இயல்வது

ஒன்றன்று. அதனாலேயே இந்த நுணுக்கத்தை அறிந்த அடிகளார், 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு' தம்பாலில்லை என்று வருந்துகிறார்.

கண்ணப்பரை ஒத்த அன்பு தம்மாட்டு இல்லை யாயினும் விசாரசருமன் பூசையையும் ஏற்றுக்கொண்ட இறைவன், தம்மையும் ஏற்றுக்கொள்வான் என்ற ஒரு துணிவு, அடிகளார்பால் இருந்தமையின் தோணோக்கத்தில் இரண்டு வரலாறுகளையும், அவ் வரலாற்று நுணுக்கங்களோடு எடுத்துக்கூறி, அவன் புகழைப் பாடுவோமாக என்கிறார்.

இப்பகுதியின் 'உரைமாண்ட' (திருவாச:328) என்று தொடங்கும் இறுதிப்பாடல் சற்று வித்தியாசமான ஒரு கருத்தைத் தெரிவிக்கின்றது. உரைமாண்ட என்று கூறியமையின் மனம், கற்பனை ஆகியவற்றையும் கடந்த ஒருவன் ஒளிவடிவாக வந்து உள்ளே புகுந்தான் என்றும், அவன் புகுந்தபிறகு தமக்குள் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தனவாகவும் இப்பாடலில் அடிகளார் கூறியுள்ளார்.

பொறி, புலன்களை அடக்கி, அவை தொழிற்பட உதவும் மனத்தையும் அடக்கி, எல்லாவகை ஆசைகளையும் ஒருவாறு போக்கிய பின்னரே இறைவன் உள்ளே வந்து தங்குவான் என்றுதான் இதுவரை நாம் நினைந்து வந்துள்ளோம். இக்கருத்தையே பலரும் கூறிவந்துள்ளனர். திருக்கழுமல மும்மணிக்கோவையில் (4) சிந்தைப் பாழ் அறை உனக்குப் பள்ளியறை ஆக்கினன் என்று பட்டினத்துப்பிள்ளை பாடியதும் இக்கருத்தை வலியுறுத்துவதாகும்.

அப்படியிருக்க இம்முறைவைப்பைத் தலைகீழாக மாற்றுகிறார் அடிகளார். உரைமாண்ட ஒளி உள்ளே புகுந்ததால், ஆசைக்கடல் வற்றியது, பொறி புலன்கள்

அடங்கின, மனம் அவன்பால் சென்றது என்றல்லவா கூறியுள்ளார்—

ஏனையோர் பூசையிலும் திண்ணனார் பூசை மாறுபட்டிருந்தது. அதேபோல ஏனையோர் அனுபவத்தினும் அடிகளாரின் அனுபவம் மாறுபட்டிருந்ததுபோலும், அதனாலேயே ஒளி உள் புகுதலுமே காமக்கடல் கடக்கப் பெற்றது என்றும், ஐம்புலப் பறவை இரிந்தோடியது என்றும், மனம் அவன்பால் சென்றது என்றும் கூறியுள்ளார்.

திருப்பொன்னூசல்

பொன்னூசல் என்று தலைப்பு இருத்தலாலும், பொன்னூசல் ஆடாமோ என்று அடிகளாரே கூறுவதாலும், இந்த ஊஞ்சல் வீட்டுக்குள் கட்டப்பட்டது என்பது தேற்றம். இதிலுள்ள ஒன்பது பாடல்களில் நான்கு பாடல்கள் (329, 330, 331, 333) நாரணன், நான்முகன், தேவர்கள் ஆகியோரால் காணப்பட முடியாத ஒருவன், தமக்கும் ஏனைய மக்களுக்கும் அருள் செய்த சிறப்பைக் கூறுகின்றன.

வானத்திலுள்ள ஒரு பொருள், வானத்தில் வாழ்கின்ற ஏனையோர்க்குக் காட்சி தராமல் இம்மண்ணிடை வந்து எத்தனை பணியை மேற்கொண்டது? குதிரைச் சேவகனாக வந்ததும், வந்தியம்மையின் பிட்டை வாங்கி உண்டதும், கடலில் இறங்கி வலை வீசியதும் அதே பொருள்தான்.

இவற்றையல்லாமல் தனித்து நின்ற தமக்கு அருள் பாலித்ததை நினைக்கும்தோறும், அடிகளாருக்கு ஆனந்தம் மேலிடுகிறது. எனவே, அந்த வரைக்குடுமியின் (சிவனின்) எளிவந்த தன்மையை ஊஞ்சலில் இருந்தபடியே பாடி ஆடுங்கள் என்கிறார்.

எளிவந்த தன்மை என்றால், அதற்கு எல்லையே இல்லை என்று நினைத்தவுடன் நெகிழ்ந்துபோகிறார் அடிகளார். நாரணனும், நான்முகனும் காணமுடியாத ஒருவன், அடியார் கூட்டத்தோடு, குருநாதர் வடிவு தாங்கிக் குருந்தமரத்து அடியில் திருப்பெருந்துறையில் இருந்தது சரி.

ஆனால், அந்த வரைக்குடுமி பாண்டியனுக்குக் குதிரை விற்கும் சேவகனாகக் குதிரைமேலேறி வரவேண்டுமா? வந்திக்குத் தேவைப்பட்டது ஒரு கூலியாள்தானே? தன்னுடைய பூத கணங்களில் யாரேனும் ஒருவரை அனுப்பியே இந்த இரண்டு செயல்களையும் எளிதாகச் செய்திருக்கலாமே! அனைவரையும் அடிமை கொள்ளும் எசமானனாகிய அவன், குதிரைச் சேவகனாகவும், மண்சுமக்கும் கூலியாளாகவும் வந்தான். அதிலொன்றும் ஐயமில்லை, ஏன்— என்ற வினாவை எழுப்பிக்கொண்ட அடிகளாருக்கு, விடை எளிதாகக் கிடைத்துவிடுகிறது. தன்னால் படைக்கப்பட்ட உயிர்களுக்கு இன்றியமையாத் தேவை ஏற்படும் போது, தாயிற் சிறந்த தயாவுடைய அத்தத்துவன் பிறரை அனுப்பிப் பணிகொள்ளாமல், தானே வந்து பணிசெய்தது அந்தத் தாய்த்தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

தாய்த்தன்மை மேற்கொண்டவுடன் செய்யும் பணியில் உயர்வு-தாழ்வு, கடினம்-எளிமை, தன் தரத்திற்குத் தக்கது-தகாதது என்ற வேறுபாடுகள் மறைந்துவிடுகின்றன. இவை அனைத்தும் மறைந்து, தாயன்புமட்டுமே தலைதூக்கி நிற்றலின் உதிர்ந்த பிட்டைக் கிழிந்த துணியில் வாங்கி உண்ணும் அளவிற்கு நிலைமை கீழே வந்தாலும் அத்தாய் அன்பு மகிழ்ச்சியடைகிறது.

அவன், குதிரைச் சேவகனாக வந்தபோது, பாண்டியனிடம் கையை நீட்டி, அவன் தந்த பரிசுப் பொருளைப் பெற்றுக்கொண்டது தாயன்பில் செய்த செயலேயாகும்.

அடிகளார் அறியும்படியாக நிகழ்ந்த நிகழ்ச்சி கூலியாள் வந்தியின் பிட்டை வாங்கி உண்டதாகும். அந்தக் கூறவந்தவர், 'கோல வரைக் குடுமி வந்து குவலயத்துச் சால அமுதுண்டு' (திருவாச: 336) என்று பாடுகின்றார். வந்தி கொடுத்தது பிட்டுத்தானே? அதிலும் உதிர்ந்துபோன பிட்டுத்தானே? அதனை உண்டான் என்று கூறவந்த அடிகளார், 'அமுது உண்டு' என்று கூறுவதன் நோக்க மென்ன? நஞ்சை உண்டு பழகியவனுக்குப் பிட்டு அமுதாவதில் வியப்பொன்றும் இல்லை. நஞ்சை உண்டபொழுது அதனை யாருக்கும் பங்கிடவில்லை; அவன் பங்கிட்டிருப்பினும் அதனை யாரும் வாங்கி உண்டிருக்க மாட்டார்கள். ஆனால், வந்தியின் பிட்டை இவன் ஊதி ஊதித் தின்பதைக் கண்டவர்கள், கையை நீட்டினார்கள். இந்த வள்ளலும் பங்கிட்டுக் கொடுத்தான். ஆகவேதான் 'அமுதுண்டு' என்று இங்கேயும், 'பிட்டமுது செய்தருளி' என்று பிறிதோர் இடத்திலேயும் (திருவாச: 290) அடிகளார் பாடுகின்றார்.

அன்னைப்பத்து

அகத்துறை என்று எண்ணக்கூடிய முறையில் தலைவியின் காமம்பற்றி வருகின்ற பல பாடல்கள் பிற்காலத்தில் தோன்றின. திருஞானசம்பந்தர், 'என்னுள்ளம் கவர் கள்வன்' (திருமுறை: 1—1—1) என்பதுபோன்ற முறையில் பல பாடல்கள் பாடியுள்ளார். நாவரசரும், 'வஞ்சித்து என் வளை கவர்ந்தான்' (திருமுறை: 4—12—10) என்பது போன்ற முறையில் சில பாடல்கள் பாடியுள்ளார். சுந்தரர், 'பறக்கும் எம் கிள்ளைகளாள், பாடும் எம் பூவைகாள்' (திருமுறை: 7—32—2)) என்பது போன்ற முறையில் சில பாடல்கள் பாடியுள்ளார். அதேபோன்று தான் அடிகளாரின் அன்னைப்பத்தும் அமைந்துள்ளது.

(மிக நீண்டகாலம் வாழ்ந்தவரும் காழிப்பிள்ளை யாரின் உடன் வாழ்ந்தவரும் ஆகிய நாவரசர் பெருமான்) ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலும், ஆளுடைய பிள்ளையார் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், சுந்தரர் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், அடிகளார் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் வாழ்ந்தவர் ஆவர்.

சங்க காலத்தில் பெருவழக்காக இருந்த அகத்துறைப் பாடல்கள் மானிடத் தலைவி, மானிடத் தலைவர் என்பவர்களை அடிப்படையாக வைத்தே தோன்றின. ஆனால், கி.பி. 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளில் பெருவழக்கில் தோன்றிய தேவாரப் பாடல்கள், நம்மாழ்வாரின் திருவாய் மொழி போன்றவை ஒரு புதிய வழியைப் பின்பற்றின. இந்தப் பெருமக்கள் இறைவனைத் தலைவனாக வைத்துத் தங்களையே பெண்களாகப் பாவித்துக்கொண்டு பல பாடல்களை இயற்றினர்.

பழைய சங்ககால வழக்கில் மடல் ஊர்தல் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரிய ஒன்றாகும். ஆனால், பக்தி இயக்க காலத்தில் தங்களையே பெண்ணாகப் பாவித்துக் கொண்டும் இறைவன்மேல் தீராக் காதல் கொண்டும் பாடப்பெற்ற ஆழ்வார்களின் சில பாடல்கள், பழைய இலக்கணத்திற்கு முற்றிலும் மாறுபட்டுப் பெண் மடலூர்தலைப்பற்றிப் பாடுகின்றன.

திருமங்கை ஆழ்வாரின் சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பவை தொல்காப்பிய இலக்கணத்திற்கு மாறுபட்டு வரும் தமிழிலக்கிய வளர்ச்சியின் புதிய போக்கை அறிவிப்பவை ஆகும். ஆழ்ந்து சிந்தித்தால் தொல்காப்பிய இலக்கணத்தின் சில பகுதிகள் பெருமாற்றங்களை அடைந்து, பக்தி இலக்கிய காலத்தில்

ஏறத்தாழப் பழைய வடிவு மறைந்து புதிய வடிவு பெறலாயின என்றே கூறவேண்டும்.

தொல்காப்பியம் கடவுட் காதல்பற்றி ஒன்றிரண்டு இடங்களில் மேலோட்டமாகப் பேசியது உண்மைதான். அந்தச் சிறிய விதை, பக்தி இலக்கிய காலத்தில் பெருமரமாகி வளர்ந்து புதிய வடிவு எடுத்தது. அதன் பயனாகவே ஆண்களாகிய நால்வர், நம்மாழ்வார், திருமங்கை மன்னர் போன்றோர், தங்களைப் பெண்களாகப் பாவித்துக்கொண்டு இறைவன்மேல் தாம் கொண்ட காதலை வெளிப்படுத்தும் முறையில் பாடல்களை இயற்றினர். சில பகுதியில் தூது அனுப்புதல், காமம் மிக்க கழிபடர் கிளவி என்பவையும் இடம்பெற்றன.

திருவாசகத்தின் அன்னைப் பத்திற்கு இந்த அடிப்படையில் பொருள்காண வேண்டுமே தவிர, தொல்காப்பியத்தில் வரும் சில சொற்களைக் கொண்டு இதற்குப் பொருள்காணுதல் பொருந்தாததாகும். அன்னை என்ற சொல் தொல்காப்பியம் முதல் ஐங்குறு நூறு வரை இடம்பெற்ற சொல்லாகும். பெரும்பாலான இடங்களில் இச்சொல் செவிலித் தாயையும், சில இடங்களில் நற்றாயையும் குறிக்கும்.

திருவாசகத்தின் அன்னைப் பத்தில் 'அன்னே என்னும்' என்று வருவதால் தொல்காப்பிய அடிப்படையில் பலரும் பொருள் கூறியுள்ளனர்.

கிறிஸ்து பிறப்பதற்கு எட்டு, ஒன்பது நூற்றாண்டுகள் முற்பட்ட தொல்காப்பிய இலக்கணத்தைக் கிறிஸ்துவிற்குப் பின் ஏழு எட்டு நூற்றாண்டுகள் கழித்து வரும் பத்திப் பாடல்களுக்குச் சாத்திப் பொருள் காண்பது அவ்வளவு சரியாகப் படவில்லை.

தொல்காப்பியர் காலத்தை அடுத்து வந்த சங்கப் பாடல்கள் காலத்திலேயே தொல்காப்பிய இலக்கணம் சில இடங்களில் மீறப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. அகத்துறையில் தோன்றும் பாடல்கள் 'கலியே, பரிபாட்டு ஆயிரு பாங்கினும்' (தொல். பொருள்:அக—56) என்றபடி கலிப்பாவாகவோ, பரிபாடலாகவோதான் வரவேண்டும் என்று கூறும் தொல்காப்பிய விதியை மீறித்தான் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய நூல்கள் தோன்றலாயின.

எனவே, அன்னைப்பத்தை அறிந்துகொள்ள, நாம் தொல்காப்பியத்தைத் துணைக்கு அழைக்கவேண்டிய தேவையில்லை.

இறையனுபவத்தில் மூழ்கி இருக்கின்றவரையில், அந்த இறைவனைப்பற்றித் தனியே வைத்துச் சிந்திக்கின்ற நிலை இல்லை. அவனுடைய வடிவு முதலியவற்றை எண்ணத் தொடங்கினால் எண்ணுபவர் வேறு, எண்ணப்படுபவன் வேறு என்ற இரண்டு நிலைகள் தோன்றிவிடும். அனுபவத்தில் மூழ்கியிருக்கும்போது இவ்வாறு இரண்டாக இருக்க வழியே இல்லை. அனுபவத்தில் மூழ்குகின்றவர், அனுபவம் என்ற இரண்டு நிலைகூட இல்லாமல், அனுபவம் என்ற ஒன்றுமட்டுமே இருக்கின்ற நிலையாகும் அப்படி மூழ்கியிருக்கின்றபோது மூழ்கியிருப்பவரின் தனித்தன்மை முற்றிலும் மறைந்துவிடுதலின் பாட்டு, பேச்சு என்ற எதற்கும் அங்கு இடமில்லை.

பாட்டு என்ற ஒன்று தோன்றினால், பாடுபவர் ஒருபுறமும், பாடப்பட்டவர் அல்லது பாடப்பட்ட பொருள் ஒருபுறமும் நின்று, பாடுபவர், பாட்டு, பாடப்படுபொருள் என்ற மூன்று நிலை தோன்றிவிடும்.

தேவாரம் முதலிய பாடல்களில் இந்த மூன்று நிலை தொடர்ந்து இருப்பதைக் காணமுடியும். ஆனால், திருவாசகத்தில் பாடப்படுபொருளும், பாடுபவரும் ஒன்றினுள் ஒன்று மறைய, பாடுபவர் பெறும் ஆனந்தம் ஒன்றே மிஞ்சுகிறது. பிறகு பாடுபவர், தம் அனுபவத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வெளிவந்து, அந்த அனுபவத்தை நினைந்து பார்க்கையில் அந்த அனுபவத்தின் வெளிப்பாடாக வருவதே திருவாசகம் ஆகிறது. இந்த வரன்முறை திருவாசகம் ஒன்றிற்கே பெரும்பாலும் உரியதாகும். தேவாரம், பிரபந்தம் முதலிய வற்றுள் ஒருசில பகுதிகள் இந்த முறையில் அமைந்திருக்கலாமேனும் பெரும்பான்மையான பகுதிகள் முன்னர்க் கூறப்பெற்ற மூன்று நிலைகளுடன் அமைந்தவையே ஆகும். இவற்றைப் பாடியவர்கள் எல்லையற்ற பக்தியில் ஆழங்கால் பட்டாலும் தம்மை மறவாத நிலையில் தம் ஈடுபாட்டைப் பாடல்களாக வெளிப்படுத்தினர். இந்த முறையில் திருவாசகம் என்பது தேவாரம், பிரபந்தம் ஆகியவற்றோடு இணையாமல் தனித்துவமுடையதாகிறது.

கைவிட்டுப் போன அனுபவம் மறுபடியும் தமக்கு வேண்டும் என்று விரும்புகிறார் அடிகளார். இப்பொழுது அனுபவத்திலிருந்து விடுபட்டு நிற்கும் நிலையாதலின், அனுபவத்தைத் தந்தவரை ஆற அமர நினைந்து பார்க்கிறார். முதலில் குருநாதர் வடிவாக இருந்தவர்தான் அனுபவத்தைத் தந்தார். பிறகு அந்த நிலை மாறி, அதே குருநாதர் இருந்த இடத்தில் உமையொருபாகர் தோன்றினார். இப்பொழுது அந்தக் காட்சியைக் கண்டு அதில் ஈடுபட்ட பிறகு, பல நாட்கள் ஆகிவிட்டன. ஓரிடத்தில் இருந்துகொண்டு தமக்கு இந்த அனுபவத்தைத் தந்த தலைவரைப்பற்றி மெள்ள மெள்ள நினைந்து பார்க்கிறார். பல்வேறு வடிவங்கள் வந்துவந்து போகின்றன.

மனத்திரையில் காட்சிதந்து மறையும் ஒரு சில அப்படங்களுக்கு வடிவு கொடுக்கும் பகுதியே அன்னைப்பத்தாகும்.

வேத மொழியராய், வெண்ணீற்றராய், செம்மேனியராய், நாதப்பறையினராய் இருந்தது முதல் படம்; அஞ்சனம் தீட்டிய கண்ணுக்குள் நின்று கருணைக் கடலாகக் காட்சி தந்தது இரண்டாவது படம்; நித்த மணாளராய், நிரம்ப அழகியராய், சித்தத்தில் இருந்தது மூன்றாவது படம்; பாம்பை அணிந்து, தோலை உடுத்தி, சுடலைச் சாம்பர் பூசியவராய்க் காட்சி தந்தது நான்காவது படம்; நீண்ட கரத்தராய், நெறிதரு குஞ்சியராய், பாண்டிநல் நாட்டினராய் இருந்தது ஐந்தாவது படம்; உத்தரகோச மங்கையினராய் நெஞ்சில் மன்னி இருப்பது ஆறாவது படம்; வெள்ளுடை அணிந்து, நெற்றியில் வெண்பொடி பூசி, படுப்பதற்குரிய போர்வையுடன் இருந்தது ஏழாவது படம்; தாளி இனத்தைச் சேர்ந்த அறுகம்புல்லைச் சூடியவராய், சந்தனச் சாந்து பூசியவராய் இருந்தது எட்டாவது படம்; உமையொருபாகராயும், தபசி வேடத்த ராயும், பிச்சை எடுப்பவராயும் இருந்தது ஒன்பதாவது படம்; கொன்றை, வில்வம், ஊமத்தம் என்பவற்றைச் சூடியவராயும், இளம்பிறையைச் சடாபாரத்தில் அணிந்தவராயும் இருப்பது பத்தாவது படம்.

திருப்பெருந்துறையில் தமக்கு அருள்செய்தவர் மதுரைச் சொக்கனே என்பதை உணர்ந்துகொண்ட பின்னர், அவனை நினைக்க நினைக்க இந்தப் பத்து வடிவங்களிலும் காட்சிதந்து மறைந்தவன் அவனொருவனே என்ற எண்ணம் வலுப்பெறுகிறது. இவை ஒவ்வொன்றாக மனத்திரையில் தோன்றி மறையும்போது, எத்தனை வேடங்களில் தோன்றி மறைந்தாலும், இப்பெருமான் தம் உள்ளத்தில் நிலையாகக் குடிகொண்டுள்ளான் என்பதை நினைந்து ஆறுதல் கொள்கின்றார்.

உண்ணின்று உருக்குவர் (339), சித்தத்திருப்பவர் (340) மன்னுவது என் நெஞ்சில் (343), உள்ளம் கவர்வர் (344) எம்மை ஆள்பவர் (345) என்ற முறையில் அன்னைப்பத்தின் ஐந்து இடங்களில் அவன் தம்மை விட்டு நீங்காமல் இருக்கின்றான் என்பதை அறிவுறுத்தினார். ஆனாலும், ஒரு நிலையில் காட்சி தந்தவன் வெளியேறி, மற்றொரு காட்சி கிடைப்பதற்கு இடையே உள்ள இடைவெளியில் அவருடைய உள்ளம் வருத்தத்தை அடைகிறது. அந்த வருத்தம் பெரிதாக வளர்கின்ற முறையை 'என்னுள்ளம் வாடும்' (341) என்றும், 'போதலும் என்னுள்ளம் நையும்'(346) என்றும் வரிசைப்படுத்திக் கூறினார். தொடக்க நிலை வாடுதல், துயரம் பெருவளர்ச்சியுற்ற நிலை நைதல் ஆகும்.

வாடுகின்ற உள்ளம் பழைய நிலைக்கு வரல்கூடும். ஆனால், நைந்துபோன உள்ளம் பழைய நிலைக்கு மீளுதல் ஏறத்தாழ இயலாத காரியம். இந்த நிலையில்தான் அன்னைப்பத்தின் நிறைவுப் பாடல் வெளிப்படுகின்றது. அதில் காட்சியளிப்பவன் வடிவம் விளக்கமாகப் பேசப்பெறுகிறது. இப்பொழுது அப்பாடற்பகுதியை மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வருவோம். கொன்றை, மதியமும், கூவிளம், மத்தமும் துன்றிய சென்னியனாய்க் காட்சி தருகிறான். இதில், மேல் ஒன்பது பாட்டுக்களில் கூறப்பெற்ற எந்த அடையாளமும் கூறப்பெறவில்லை. அடிகளாரின் உள்ளமோ நைந்த நிலையில் உள்ளது. இந்த நைந்த நிலையைச் சரிப்படுத்த உதவிபுரியும் எந்த வடிவத்தையும் மேற்கொள்ளாமல், ஊமத்தம் பூவை அணிந்த அவனது திருமுடி காட்சி தருகிறது. சொல்லப்போனால் கொன்றை, மதியம், கூவிளம், மத்தம் ஆகியவற்றை அணிந்த திருமுடியின் மேற்பகுதி மட்டுமே காட்சி தருகிறது. ஒருவேளை திருமுடி முதலில் தோன்றி கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியடைந்து உமையொரு பாகனாகக்கூடக் காட்சி தந்திருக்கலாம். ஆனால், அதுவரை காத்திருக்கும் உளநிலை அடிகளாரின் நைந்த

உள்ளத்திற்கு இல்லை. அதனால் என்ன நடைபெற்றது? திருமுடியின் மேலுள்ள ஊமத்தம் பூ காட்சி தந்தவுடன் முன்னரே நைந்துள்ள இவருடைய உள்ளம் உன்மத்தம் ஆகிவிடுகிறது.

ஆக, வாடிய உள்ளம், நைந்து, இறுதியில் உன்மத்தமாகவே ஆகிவிடுகிறது. உண்ணின்று உருக்குகிறார், சித்தத்து இருக்கிறார், உள்ளம் கவர்கிறார் முதலிய உள்ளத்தில் அமைதியளித்த எண்ண ஓட்டங்கள் மறைந்துவிட, நைந்த உள்ளமாக மாறி இறுதியில் அந்த உள்ளம் உன்மத்த நிலையை அடைகிறது.

உன்மத்த நிலை என்றால் என்ன? தான் யார் என்பதை அறியாத நிலையே உன்மத்த நிலையாகும். மேலே ஒன்பது பாடல்களில் உன்மத்த நிலை இல்லை. அடிகளார் தாம் யார் என்பதையும் குருநாதர் எந்தெந்த வடிவில் காட்சி தந்தார் என்பதையும் விவரமாகக் கூறுவதால் அங்கு உன்மத்த நிலை இல்லை ஆனால், ஒரு வளர்ச்சி நிலை இருக்கின்றது. அந்த வளர்ச்சி நிலையிலும் இரண்டு நிலைகளை அடிகளார் உணர்ந்தே பாடுகிறார். அவையாவன, உள்ளம் வாடும் நிலையும் நையும் நிலையுமாகும்.

உள்ளம் நையத் தொடங்கியவுடன் அந்த உள்ளத்தின் ஆணிவேராக இருந்த தற்போதம் அதனோடு ஐக்கியமாகி நையத் தொடங்கிவிடுகிறது. இப்பொழுது தம்மைத் தனியே நிறுத்தி, தாம் கண்ட காட்சிகளை வரிசைப்படுத்திக் கொண்டு வந்த அடிகளாரின் தற்போதம் நைந்துவிட்டது. அடிகளாரின் உள்ளத்தையும் தற்போதத்தையும் நைய வைத்தது, இறைவன் காட்டிய பல்வேறு வேடங்களாகும்.

இப்பொழுது உள்ளமும், தற்போதமும் இணைந்து நைந்து, தனித்து, கனிந்து பழுத்த நிலையில் உள்ளன. இந்த நிலையில்தான் மத்தம் சூடிய திருமுடி காட்சியளிக்கிறது.

இந்தக் காட்சியைக் காணத்தொடங்கிய நேரத்தில் அடிகளாரின் உள்ளமும் தற்போதமும் இணைந்து பழுத்த நிலையில் இருந்ததல்லவா? இப்பொழுது அந்த ஊமத்தம் பூ இணைந்து கனிந்த தற்போதத்தைத் தன்வயமாக்கிக் கொண்டது. எனவே, அடிகளாரின் தற்போதம் ஊமத்தம் பூவுக்குள் கரைந்துவிடுவதால் இவர் உன்மத்தராகிவிடுகிறார். உன்மத்தராகிவிடுதல் என்றால் காண்பான் (அடிகளார்), காட்சி, காணப்படுபொருள் (ஊமத்தம் பூவை அணிந்த திருமுடி) என்ற மூன்று நிலையும் அழிந்து, காணப்படுபொருளாகவே எஞ்சிநிற்றல் ஆகும். இங்குக் காண்பாருடைய தற்போதம் அழிந்துவிட்டதால் பிறர் அவரைப் பார்க்கும்போது பைத்தியம் என்று கூறுகின்றனர்.

இந்த நிலையைத்தான் நாவரசர் பெருமான், 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' (திருமுறை: 6-25-7) என்ற திருத்தாண்டகத்தில் 'தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என்று கூறியுள்ளார். நாவரசர் கூறிய 'தன் நாமம் கெட்டாள்' என்பதை 'என் உள்ளம் நையும்' என்ற தொடரால் அடிகளார் குறிப்பிட்டார். இவ்விரண்டுமே தற்போதம் கெடும் நிலையைக் கூறியவாறாயிற்று. நாவரசரின் தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே என்னும் பகுதி, தலைவி தன் தனித்தன்மையை இழந்துவிட்டான் என்பதையும் குறிக்கின்றது. அதனையே அடிகளார் உன்மத்தமே என்ற சொல்லால் குறிக்கின்றார்.

அடிகளாரின் வரலாற்றை வரன்முறையாக வரலாற்று அடிப்படையில் கூறும் நூல் எதுவுமில்லை. எனவே, அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்கள், நிகழ்வுகள் முதலியவற்றை அறிந்துகொள்ள வாய்ப்பில்லை அதுமட்டுமன்றித் திருவாசகத்தின் பல பகுதிகளை எங்கே, எப்பொழுது பாடினார் என்று அறுதியிட்டுச் சொல்லவும் வாய்ப்பில்லை.

ஆனால், எது எப்படியாயினும் அடிகளாரின் வளர்ச்சியையும், அவர் அருள்பெற்றதையும், அவர் இறுதியில் வாழ்க்கை நடத்திய முறையையும் அறிந்து கொள்ள அன்னைப் பத்து உதவுகிறது. முகம் பார்க்கும் ஒரு சிறிய கண்ணாடியில் மிகப் பெரிய மரத்தின் முழுப் பிம்பமும் தெரிவதுபோல, அடிகளாரின் முழு வாழ்க்கையையும் வளர்ச்சி முறையையும் அன்னைப் பத்து என்ற சிறிய கண்ணாடியில் தெரிந்துகொள்ள முடிகிறது.

குயிற் பத்து

தும்பியும், குயிலும் அஃறிணை உயிர்கள்தான். தும்பியை விளித்து, அவன் சேவடிக்குச் சென்று ஊதுவாயாக என்பதுபோல, கோத்தும்பியில் இடம்பெற்ற பதினெட்டுப் பாடல்களிலும் 'சென்றூதாய் கோத்தும்பீ' என்றே பாடியுள்ளார். ஆனால், குயிற்பத்தில் இந்த நிலையை மாற்றிப் பாடுகிறார். 'நீ அவன் திருவடியிடம் சென்று ஊதுவாயாக' என்று தும்பியை விளித்துக் கூறியவர், என்ன காரணத்தாலோ குயிற்பத்தில் அவனை வருமாறு கூவுவாயாக என்று பாடியுள்ளார்.

தும்பி ஊதும்போது, அதன் அடிப்படையில் தேனைத் தேடிச்செல்லும் இயல்பே அமைந்துள்ளது. தேன் தும்பியை நாடி என்றும் வந்தததில்லை. தும்பிதான் தேனை நாடிச் செல்லும் பழக்கத்தைப் பெற்றுவிட்டது. எனவே, 'திருவடியாகிய தேனை அடையவிரும்பிய தும்பியே அத்தேன் இருக்குமிடம் சென்று ஊதுவாயாக' என்று கூறினார்.

ஆனால், குயில் இரைதேடிக் கூவுவதில்லை. நிறைந்த மகிழ்ச்சியில் கூவுகின்றது; துணைதேடியும் கூவுகின்றது. இரண்டு நிலையிலும் குயில் எங்கேயும் செல்வதில்லை. இருந்த இடத்தில் இருந்துகொண்டே துணையை

நாடியழைக்கும் இயல்புடையது; ஆதலின், 'வரக் கூவாய்' என்று எட்டுப் பாடல்களில் பாடுகிறார். எஞ்சியுள்ள 349, 353 ஆகிய இரண்டு பாடல்களில்கூட 'நாடனைக் கூவாய்' 'நாதனைக் கூவாய்' என்றும் வருகின்ற தொடர்கள் 'வரக்கூவாய்' என்ற பொருளிலேயே அமைந்துள்ளன.

தனக்குத் துணையாகவும் ஒருவன் வருவான் என்றால் அவனுடைய அங்க அடையாளங்களைக் குயில் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? அவற்றைத் தெரிந்து கொண்டாலும் ஏதோ பக்கத்து மரக்கிளையில் அவன் உள்ளான் என்று குயில் நினைத்துவிடக்கூடாது என்ற கருத்தில் அவனுடைய அருமை பெருமைகளைப் பின்வரும் தொடர்களில் விரிவாகக் கூறுகின்றார்.

'நீ அழைக்கவேண்டிய துணைவனுடைய பாதம் இரண்டும் பாதாளத்தின் கீழ்ச் சென்று நிற்கின்றன. அவனுடைய திருமுடி, வாக்கு, மனம், கற்பனை ஆகியவற்றைக் கடந்து அப்பால் நிற்கின்றது. அதுமட்டுமன்றி 'முந்தும் நடுவும் முடியும் ஆகிய மூவர் அறியாச் சிந்துரச் சேவடியான்' (திருவாச: 352) அவன், மேலும் 'மாலொடு நான்முகன் தேடி, ஓவி அவர் உன்னி நிற்ப, ஒண்கழல் விண்பிளந்து ஓங்கி, மேவி அன்று அண்டங் கடந்து விரி சுடராய் நின்ற மெய்யன்' (திருவாச: 355) அவனாவான்'

துணையாக வரக்கூடியவனின் அடையாளங்களை அடிகளார் கூறியதைக் கேட்ட குயிலுக்கு மயக்கமே வந்துவிட்டது. அவனெங்கே? நாமெங்கே? இத்தகைய பெருமையுடைய ஒருவன் நமக்குத் துணையாக வருவான் என்று எண்ணுவது பேதைமை என்று எண்ணி, மனம் நொந்து ஓடிவந்து அமர்ந்திருக்கும் குயிலையே நோக்கி, அடிகளார் இதோ பேசுகிறார்: 'தேன் பழச் சோலை பயிலும் சிறுகுயிலே மனம் முறிந்துவிடாதே. இப்பொழுது நான் சொல்லப்போவதைக் கவனமாகக் கேள். இத்துணைப்

பெருமை உடையவன் ஆயினும் இந்தப் பெருமைகளை யெல்லாம் துறந்து, வானமே தனக்கு வேண்டாம் என்று உதறி இம்மண்ணிடைப் புகுந்தான். புகுந்ததோடு மட்டுமன்று. நாயிற் கடைப்பட்ட என்போன்ற மனிதர்களை ஆட்கொண்ட வள்ளலாவான் அவன். என்போன்ற மனிதரைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்டது இப்பொழுது நடைபெற்றது. இது ஒரு புறநடை என்று கருதிவிடாதே. வெகு காலத்திற்கு முன்னர் இராவணன் மனைவியாகிய மண்டோதரிக்கும் அருள் செய்தவன். முன்னர் மண்டோதரிக்கும், இப்பொழுது மனிதர்களுக்கும் அருள்செய்த வள்ளல் அவன் என்றால் உனக்கு மட்டும் செய்யாமலா போய்விடுவான்?

'மனிதரை ஆட்கொண்டான் என்று பொதுவாகக் கூறினேன் என்று நினையாதே; என் சொந்த அனுபவத்தை இதோ கூறுகிறேன்: 'பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்து எனை ஆண்டான்' (திருவாச: 356) 'எந்தமராம் இவன் என்றிங்கு என்னையும் ஆட்கொண்டான்' (திருவாச: 358) என்பதையும் நீ அறியவேண்டும். மனிதரை ஆட்கொண்டது; ஒருபுறம் இருக்கட்டும்; மனிதர்களுக்காகக் குதிரைச் சேவகனாகக்கூட வந்தான். இதனை ஏன் கூறுகிறேன் என்றால், அருள் செய்யவேண்டும் என்று அந்த வள்ளல் முடிவு செய்துவிட்டால், எந்த நிலைக்கும் கீழிறங்கி வருவான் என்பதை அறிவிக்கவே 'நற்பரிமேல் வருவான்' (திருவாச: 353), 'பரிமிசை வந்த வள்ளல்' (திருவாச: 354), 'தாவி வரும் பரிப்பாகன்' (திருவாச:355) என்று மூன்று முறை கூறியுள்ளேன்.

'குயிலே! இவ்வளவு நான் கூறியும் உன் மனத்திலுள்ள அச்சம் நீங்கவில்லை என்பதை நான் அறிகின்றேன். கூறிய உதாரணங்களெல்லாம், வான் பழித்து மண்ணில் இறங்கிய அவன் மனித வடிவு கொண்டு மனிதருக்குத்தானே அருள் செய்தான்? என்று கூறுகின்றன. 'நானோ பறவையினத்தைச்

சேர்ந்த அழகில்லா குயிலாவேன். எனக்கு அவன் அருள் எவ்வாறு கிட்டும்' என்பதுதான் உன் மனத்தில் நிறைந்துள்ள கவலை. இப்பொழுது நான் சொல்வதைக் கவனமாகக் கேள். இந்த வள்ளலுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. வாக்கு மனம் கடந்தவனாயினும், மனித வடிவில் குருவாக வந்தவனாயினும் ஒரு விநாடி நேரத்தில் 'எவ்வுருவும் தன்னுருவாய்' (திருவாச: 349) ஏற்கக்கூடியவன் என்பதை அறியாவாயாக. ஆகவேதான், அவன் 'உன்னை உகப்பன் குயிலே, உன் துணைத் தோழியும் ஆவன்' (திருவாச: 354). ஆதலால், நீ அவனை வரக்கூவாய் என்று கூறி முடிக்கின்றார்.

குயிலைக் குயிலென்றே பொருள் கொள்ளாமல் மனம் குயிலாக உருவகிக்கப்பட்டது என்றும் கொள்ளலாம். அப்படியானால் உறுதிப்பாட்டை இழந்து வருந்தும் மனத்திற்கு உறுதியைக் தந்து அதன் அச்சத்தைத் தவிர்க்கும் முறையில் மேலே உள்ள கருத்துக்களை அடிகளார் வரிசைப்படுத்திக் கூறினார் என்று கொள்வதும் ஒரு முறையாகும்.

நம் காலத்தில் வாழ்ந்த, மகாகவி பாரதி குயிற்பத்தின் இந்த நுணுக்கத்தை நன்கு அறிந்து அதையே குயிற் பாட்டாக விரித்துப் பாடியுள்ளாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

திருத்தசாங்கம்

குயிலை முன்னிலைப்படுத்தி இறைவன் பெருமைகளைப் பேசியதுபோலக் கிளியை முன்னிலைப் படுத்தி இறைவன் பெருமைகளை அடிகளார் பேசவிரும்பினார்போலும். தசாங்கம் என்ற பாடல்வகை பழைய இலக்கியங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பிரச்சினையைச் சந்திக்க விரும்பாத உரையாசிரியர் பலரும் தும்பியையும், குயிலையும் அகத்துறை

வயப்படுத்தித் தூது அனுப்புவதாகப் பொருள் கூறினர். தசாங்கம் இவ்வகையிலும் இடம்பெறாது. குயிற்பத்தில் இறைவனது பெருமை பொதுவாகவும் அவனுடைய அருளுடைமை சிறப்பாகவும் பேசப்பெற்றதுடன் தனி மனிதராகிய தமக்கு அவன் அருள் செய்ததை அப்பத்தின் கடைசி இரண்டு பாடல்களில் பேசினார்.

நாம, ரூபம் கடந்து, வாக்கிறந்த பூரணமாய் உள்ள பரம்பொருள் மானிட வடிவு தாங்கி, குருநாதர் வேடத்தை மேற்கொண்டு தமக்கு அருளியதை அடிகளார் மறக்கவே யில்லை. பாண்டிநாடே பழம்பதியாகக் கொண்ட அவனே ஆலவாய், திருஉத்தரகோசமங்கை, ஆகிய இடங்களில் சிவலிங்கத் திருமேனி கொண்டும், திருப்பெருந்துறையில் குருநாதர் வடிவு கொண்டும் எழுந்தருளினான் என்பதை அடிகளார் நன்கு உணர்ந்திருந்தார். அன்றியும், வந்திக்குக் கூலியாளாய் வந்தவனும், குதிரைச் சேவகனாக வந்தவனும் அவனே என்பதை பின்னர்க் கண்டுகொண்டார். கூலியாளாய் வந்த அவனே, பாண்டியன்தன்னைப் பணிகொள்ளும் ஆற்றல் பெற்றவன் என்பதையும் கண்டுகொண்டார்.

ஏகமாய் உள்ள பரம்பொருள், குருநாதர் வடிவு முதல் கூலியாள்வரை அநேக வடிவெடுத்தாலும்கூட அரச வடிவு கொண்டு அடிகளார் முன்னிலையில் வரவில்லை. இத்தனை வடிவுகளையும் தரிசித்த அடிகளார், பிரபஞ்சகாரணனாகிய அவனை அரசக் கோலத்தில் காண விழைகின்றார். அதன் பயனாக முகிழ்த்ததே திருத்தசாங்கம் ஆகும்.

இதிலும் ஒரு சிக்கல் தோன்றிற்று. ஓர் அரசன் என்றால், அவனுக்கு ஒரு நாடு இருந்துதீரல் வேண்டும். எவ்வளவு பெரிய அரசனாயினும், அவனுடைய நாடு எவ்வளவு பெரியதாக இருப்பினும் அது ஓர் எல்லைக்குட்பட்டதாகவே இருக்கும். மூவுலகையும் கட்டி யாள்பவன் என்ற பொருளில் திரிபுவனச் சக்கரவர்த்தி

என்று பெயர்வைத்துக் கொண்டாலும், அவனுடைய நாடும் சில சதுரக் கிலோமீட்டர்களுக்கு உட்பட்டதாகவே இருக்கும்.

இந்நிலையில், அந்த அரசனுக்கு என்று ஓர் ஆறு, ஒரு மலை என்பவற்றைக் குறிக்கவேண்டும். இங்கேதான் அடிகளாருக்குப் பெருஞ்சிக்கல் தோன்றுகிறது. அவர் கூறும் சிவபெருமானுக்குக் கைலை மலையும், கங்கை ஆறும் உடைமையாக உள்ளன. அவற்றையே அடிகளார் பாடியிருக்கலாம். ஆனால், நாட்டைக் குறிக்கவரும் அடிகளார் 'ஏதமிலா' என்று தொடங்கும் 359ஆவது பாடலில் 'ஏழ் பொழிற்கும் (ஏழு உலகங்களுக்கும்) நாதன்' என்று கூறினாரேனும் அவனுடைய நாடு என்பது 'தென் பாண்டி நாடே தெளி' என்று கூறிவிட்டார். இவ்வாறு கூறிய பிறகு கைலையையோ கங்கையையோ கூற இடமில்லை. தென்பாண்டி நாட்டின் தலைவன் என்று கூறிய பிறகு அவனுடைய ஊர்தி என்று இடப வாகனத்தைக் குறிக்க முடியாது. இந்த மூன்று சிக்கலையும் அறுப்பதற்கு, அடிகளார் ஒரு புது உத்தியைக் கையாள்கிறார்.

பாண்டி நாட்டிலுள்ள பொதிகை மலையைக் கூறினால் அதுவும் அவன் பெருமைக்குப் போதாதென்று எண்ணி, அவன்பால் நிறைந்திருக்கும் அருளையே அவனுக்குரிய மலை என்று கூறினார்.

ஆற்றைக் கூறவேண்டிய இடத்தில் வையை ஆகிய சிற்றாற்றைக் கூறுவது ஏற்றம் தருவதாக இல்லை. எனவே, அவனிடத்திருந்து புறப்பட்டு உயிர்களை நோக்கிப் பாயும் ஆனந்தமே அவனுடைய ஆறு என்று கூறினார்.

இனி, ஊர்தி கூறவேண்டிய இடத்துப் பாண்டி நாட்டுக்கு உடையவன் ஊர்தி இடபம் என்று கூறிவிட்டால், பிற இடங்களில் அவன் ஊர்தி வேறாகும்

போலும் என்ற ஐயம் தோன்றுமன்றோ! அதனைப் போக்கவே முன்னர்க் கீர்த்தித் திருஅகவலில் கூறிய வானிடை ஊர்ந்துசெல்லும் குதிரையையே இங்கும் 'வான்புரவி ஊரும்' (திருவாச: 363) என்று கூறினார்.

இறை அருளிலும், அனுபவத்திலும் மூழ்கித் திளைத்த அடிகளாருக்குத் தாம் பிறந்த நாட்டுப் பற்றை விட்டுக் கொடுக்க முடியவில்லை. 'பாண்டி நாடே பழம்பதி ஆகவும்' (திருவாச: 2-118) என்றும் 'தென்னாடு உடைய சிவனே' (திருவாச: 4-164) என்றும், 'தென்னன்' (திருவாச: 197) என்றும் பல இடங்களில் பாடிச்செல்கிற அவர், திருத்தசாங்கத்தில் அவனுடைய நாடு கூறவந்த இடத்திலும் 'தென்பாண்டி நாடே தெளி' (திருவாச: 359) என்று கூறிவிட்டார்.

நடுநிலையில் நின்று சிந்தித்தால் இதிலுள்ள குறை வெளிப்படத்தான் செய்கிறது. பெயர் (நாமம்) கூறும்போது பாற்கடலான் முதலியவர்கள் கூறுவதுபோல் அவன் பெயர் 'தேவர் பிரான்' (திருவாச:358) என்பதாகும் என்று கூறியது சாலப் பொருத்தமானதே. அத்தகையவனுக்கு ஆனந்தமும், அமைவது தெளிவாகிறது. எல்லாவற்றிற்கும், 'ஏழ்பொழிற்கும்' தலைவனாக உள்ளவன் தென்பாண்டி நாட்டிற்கு உரியவன் என்று கூறுவது முரணுடையதாகும்.

இவற்றை யெல்லாம் மனதுட்கொண்டு சிந்தித்துப் பார்த்தால் ஏனைய பாடல்களிலுள்ள பக்திச் சுவையோ, இறையனுபவச் சுவையோ ஒரு சிறிதும் இல்லாத இந்தத் தசாங்கத்தை, அடிகளார் ஏன் பாடினார் என்று விடை காண்பது கடினமாகவுள்ளது.

திருப்பள்ளியெழுச்சி

திருவாசகம் முழுவதிலும் பல இடங்களிலும் மிகுதியாகக் காணப்பெறுபவை இரண்டு கருத்துக்களாகும்.

முதலாவது இறைவனுடைய இயல்பு, பெருமை ஆகியவற்றைப் பேசுவதாகும். இத்துணைப் பெருமை யுடையவன் கேவலம் மனிதர்களாகிய எமக்காக இந்த மண்ணிடை வந்து ஆட்கொண்டான் என்று கூறுவது இரண்டாவதாகும். பலப்பல பாடல்களில் அங்கங்கே கூறியவற்றை யெல்லாம், தொகுத்துப் பத்துப் பாடல்களுக்குள் மேலே கூறிய இரண்டு கருத்துக்களும் விரிவாக இடம்பெற வேண்டும் என்று அடிகளார் கருதினார்போலும். அவருடைய கருத்துக்கு வடிவுகொடுக்க வாய்ப்பாக அமைந்தது திருப்பள்ளியெழுச்சி யாகும்.

திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் மரபுபற்றி எழுந்தன என்று கூறுவதிலும் தவறில்லை. ஆனால், திருப்பள்ளி யெழுச்சியின் பத்துப் பாடல்களையும் ஒரே நேரத்தில் படித்தால் சில சிந்தனைகள் தோன்றுகின்றன.

உறக்கம், விழிப்பு, வடிவு, நிறம், குணம் ஆகிய எதுவுமில்லாதவன் இறைவன் என்பதனை அடிகளார் நன்கு அறிந்திருந்தார். ஆனால், அதே இறைவன் மானிட வடிவு தாங்கி, அதிலும் ஒரு குருநாதரின் கோலங்கொண்டு திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருந்தான். அந்தக் குருநாதரின் முகமும், கைகளும், திருவடியும் அடிகளாருக்கு மிகவும் பரிச்சயமானவை. புன்சிரிப்போடு வரவேற்றதால் முகமும், அமுத தாரையை எற்புத் துளைதொறும் ஏற்ற, உடலைத் தடவிக் கொடுத்ததால் கமலம்போன்ற குருநாதரின் கைகளும், தம்மைத் திசை திருப்பிய கமலம் போன்ற அவர் திருவடிகளும் அடிகளாருக்கு மிகவும் பரிச்சயமானவை.

இந்தப் பள்ளியெழுச்சிப் பாடலைப் பாடுங்காலத்தில் அங்கே குருநாதர் இல்லை. எவ்வித நிகழ்ச்சியும் நடைபெற வில்லை. அப்படியிருக்க, திருப்பள்ளியெழுச்சி பாட வேண்டும் என்ற எண்ணம் அடிகளார் உள்ளத்தில் எப்படி உதயமாயிற்று?

மருத நிலம் சூழ்ந்த திருப்பெருந்துறையைச் சுற்றிப் பார்க்கிறார் அடிகளார். சுற்றியுள்ள நன்செய் நிலங்களில் சேற்றிதழ்க் கமலங்கள் மலர்ந்துள்ளன. எனவே, 'சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ் திருப்பெருந்துறை" (திருவாச: 368) என்று பாடுகின்றார். கமலங்களைப் பாடத் தொடங்கிய இவர், அதனுடைய வேர்ப்பாகம் அழுந்தி யிருக்கும் சேற்றுப் பகுதியை ஏன் பாடவேண்டும்? மிக ஆழ்ந்த கருத்தொன்று இதனுள் அடங்கியுள்ளது.

கண்டது தாமரையைத்தான். அது ஒரு சங்கிலித் தொடர்போன்ற எண்ணத்திற்கு அடித்தளமாக அமைந்து விட்டது. மலர்ந்த அத்தாமரை இறைவனுடைய முகம், கை, திருவடி என்பவற்றை நினைவூட்டியது. அத்திருவடி நினைவு வந்தவுடன் தம்முடைய பிறப்பை அறுத்து முன்னேற்றத்திற்கு வழிகாட்டிய செயல் நினைவுக்கு வருகின்றது. இப்பொழுது அவர் திருவடி தீட்சை பெற்று மனித வாழ்க்கையின் உச்சநிலையில் நின்றாலும், தம்முடைய வாழ்வின் தொடக்கம் ஏனையோர் போல ஆசாபாசம், குழப்பம், விருப்பு, வெறுப்பு ஆகிய சேற்றில்தான் ஆரம்பித்தது என்பதும் நினைவுக்கு வருகிறது. இத்தனைக்கும் வடிவு கொடுக்கும் வகையில் 'சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்' என்று மூன்றே சொற்களில் தம் வாழ்வு அனுபவம் முழுவதையும் உள்ளடக்கிப் பாடிவிடுகிறார்.

கமலம் போன்ற முகம், கை, திருவடி ஆகியவற்றைப் பெற்றுள்ள குருநாதரின் மூலாதாரமாம் பரம்பொருளை அத்தாமரையே நினைக்கத் தூண்டியது. பல பாடல்களில் அந்த மூலப்பொருளின் இயல்புகளை விரிவாகப் பாடுகிறார்.

எல்லா உயிர்கட்கும் அவனே மூலதனம் என்ற கருத்தில் 'வாழ்முதலாகிய பொருளே' (368) என்றார். இனி, 'யாவரும் அறிவரியாய்'(370) என்றும், 'சிந்தனைக்கும் அரியாய்' (372) என்றும், 'பூதங்கள்தோறும் நின்றாய் எனின்

அல்லால் போக்கு இலன் வரவு இலன் என நினைப் புலவோர் கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் கேட்டு அறியோம் உனைக் கண்டு அறிவாரை' (372) என்றும் 'அது பழச் சுவையென அமுது என அறிதற்கு அரிது என அமரரும் அறியார்' (374) என்றும், 'முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய், மூவரும் அறிகிலர்' (375) என்றும், 'விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளே' (376) என்றும் பாடிய முறையில் இறையனுபவத்தில் தோய்ந்த எந்த ஞானியரும் பாடாத அளவிற்கு இறை இலக்கணைத்தை அற்புதமாகப் பாடியுள்ளார்.

இத்தோடு நிறுத்தியிருப்பின் அடிகளாரும், ஏனைய் பெரியவர்களைப்போல இறைவன் பெருமையைப் பாடியுள்ளார் என்று சொல்லுமளவில் நின்றுவிடும். ஆனால், திருப்பெருந்துறையில் இறையனுபவத்தில் மூழ்கடிக்கப்பட்ட அடிகளார் இதனோடு விட்டுவிடுவாரா? ஒவ்வொரு முறையும் இறைவனுடைய இறப்ப உயர்ந்த சிறப்பைக் கூறும்பொழுதே, அவனுடைய எளிவந்த தன்மையையும் சேர்த்தே கூறுவது அடிகளாரின் தனிச்சிறப்பாகும். 'எமை (அடிமையாக) உடையாய்' (368) என்றும், 'அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே அலைகடலே'(369) என்றும், 'அரிவரியாய் எமக்கு எளியாய்' (370) என்றும், 'என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்' (371) என்றும், 'எங்கள் முன்வந்து ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டு அருள் புரியும் எம்பெருமான்' (372) என்றும், 'இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டருள் புரியும் எம்பெருமான்' (373) என்றும், 'எங்களை ஆண்டுகொண்டு இங்கு எழுந்தருளும்' (374) என்றும், 'அடியார் பழங் குடில்தொறும் எழுந்தருளிய பரனே அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்' (375) என்றும், 'விரும்பு அடியார் எண்ணகத்தாய்' (376) என்றும், 'அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்' (377) என்றும் பத்துப்

பாடல்களிலும் அவனுடைய எளிவந்த தன்மையை மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளதை மேலே தந்துள்ளோம்.

இதிலுள்ள தனிச்சிறப்பு என்னவென்றால், அவனது உயர்வை ஓரிடத்திலும், எளிவந்த தன்மையை மற்றோரிடத் திலும் கூறாமல், யாவரும் எளிதில் அறிந்துகொள்வதற்காக ஒரே பாடலின் முற்பகுதியில் உயர்வையும், பிற்பகுதியில் எளிவந்த தன்மையையும் கூறியுள்ளமையேயாம்.

ஒரு கூட்டத்தில் எத்தனை மக்களுண்டோ அத்தனை வேறுபட்ட மனப்பான்மைகளும் இருந்தே தீரும். இவர்கள் அனைவரும் இறைநேசர்களாக இருக்கலாம். என்றாலும், இறைவனை வணங்கும்போதுகூட இவர்களுடைய மனோ நிலைக்கு ஏற்ப இவர்கள் செயல்கள் மாறுபடும். உள்ளத்து உணர்ச்சி ஒன்றேயாயினும் உடலில் நிகழும் புறச்செயல்கள் மாறுபட்டவை. ஒரே மனநிலையுடைய இருவர் செயற்படும்போது வெவ்வேறு முறைகளில் செயற்படுவர். இந்தச் செயல்கள் அவர்கள் மனநிலையைக் காட்டுமேனும், ஒரே மனநிலையை உடைய இருவர் ஒரே மாதிரி தொழிற் படுவதில்லை; ஒரே மாதிரி தொழிற்படும் இருவர் ஒரே மனநிலையில் உள்ளார்கள் என்று சொல்வதற்கும் இல்லை.

ஒரே பாடலில் அடியார்கள் பலர் ஒன்றுகூடினாலும் அவர்கள் செயல்கள் வெவ்வேறானவை என்பதை 'இன்னிசை வீணையர்' (371) என்ற பாடலில் அடிகளார் நன்கு எடுத்துக் காட்டுகின்றார். வீணையும், யாழும் ஏறத்தாழ ஒரே மாதிரியான கருவிகள்தாம் என்றாலும், இருவேறு கூட்டத்தினர் இந்த இருவேறு கருவிகளையும் வைத்து நிற்பதைப் பேசுகின்றார். இருக்கு வேதத்தை அத்யயனம் செய்பவர்கள் அதில் தோன்றும் ஓசை ஒன்றிற்காகவே பாடுகிறார்கள். ஆனால், தோத்திரம் பாடுவோர், பொருள் செறிந்த பாடல்களை ஒரு கூட்டமாக நின்று பாடுகின்றார்கள். மலர் மாலையைக் கையில் வைத்துக்கொண்டு நிற்பவர் ஒருபுறம் நிற்கிறார்கள்.

இதுவரையில் கூறப்பட்டவர்கள் அனைவருமே நங்களின் வேறான ஒரு பொருளைக் கையிலேந்தி இறைவனின் திருமுன்னர் நிற்கின்றார்கள்.

இவர்களிலிருந்து வேறுபட்ட ஒரு சிலரும் அதே கூட்டத்தில் இறைவனின் திருமுன்னர் நிற்கின்றனர். அவர்கள் எதையும் கொண்டுவரவில்லை. வாய் நிறந்து ஒரு பாடலையும் பாடவில்லை. என்றாலும், அவர்களில் சிலர் தொழுகின்றனர்; சிலர் அழுகின்றனர்; சிலர் துவள்கின்றனர்; சிலர் சென்னியில் அஞ்சலி கூப்புகின்றனர். உணர்வு காரணமாக இவர்கள்பால் தொழுதல், அழுதல், துவள்தல், கைகூப்புதல் ஆகிய செயல்கள் நிகழ்கின்றனவே தவிர, ஏனையோர்போல இவர்கள் புறச்செயல்கள் அமையவில்லை.

இத்திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களில் 375ஆவது பாடல் இதுவரையில் நம் சிந்தனையில் இடம்பெறாத ஒரு கருத்தை வெளியிடுகிறது. அடிகளார் வரலாறு வெறும் கற்பனை அளவில், திருவிளையாடல் புராணங்களிலும் திருவாதவூரடிகள் புராணத்திலும் பேசப்பெற்றுள்ளது. ஆதலால், இவை தம்முள் மாறுபட்டு முரணி நிற்கின்றன. திருப்பெருந்துறையில் குருநாதர் வடிவாக அடியார் புடைசூழ இறைவன் இருந்தான் என்பது திருவாசகத்தில் பல இடங்களிலும் பேசப்பெற்ற ஒன்றாகும். ஆனால், அங்கே ஒரு கோயில் இருந்தது என்பதற்கு எவ்விதச் சான்றுமில்லை. குதிரை வாங்கத் தாம் கொண்டு சென்ற பணம் முழுவதையும் அடிகளார் கோயில் கட்டப் பயன்படுத்தினார் என்று புராணம் பேசுகிறது. இதுதவிர வேறு ஆதாரங்கள் இல்லை.

திருப்பெருந்துறைக் கோயிலை யார் கட்டியிருப்பினும் அது அடிகளாரின் நிகழ்ச்சியின் பின்னரே நிகழ்ந்திருக்க வேண்டும் என்று நினைக்கவும் இடமுண்டு. இதற்கு ஒரு காரணமுண்டு. தமிழகத்தில் தொன்றுதொட்டு இருந்துவரும்

கோயில்கள் எதிலும் சிவலிங்கப் பிரதிட்டை இல்லாத கோயிலே இல்லை. அப்படியிருக்க, திருப்பெருந்துறைக் கோயில்மட்டும் கருவறையில் இலிங்கம் இல்லாமல் வெறும் பீடம் மட்டும் இருந்துவருகிறது. அடிகளாருக்கு அருள் செய்த குருநாதர் சீடர்களோடு மறைந்துவிட்டார் என்பதை அறிகிறோம். அதனால் அந்த நிகழ்ச்சியை உட்கொண்டு இக்கோயில் அமைப்பில் இலிங்கம் இல்லாமல் பீடம் மட்டும் அமைந்திருப்பது பொருத்தமேயாகும்.

அப்படியானால், 'செம்தழல் புரை திருமேனியும் காட்டி, திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி' *(திருவாச:375)* என்று அடிகளார் பாடுவதன் நோக்க மென்ன? அடிகளாருக்கு அருள்செய்த குருநாதர், மானிட உருவில் இருந்தாரேனும் செந்தழல் போன்ற நிறம், உரு, வடிவு பெற்றிருந்தார் என்பதில் தவறில்லை. வெறும் செந்தழலாக இருந்திருப்பின் 'உறைதிரு மேனியும் காட்டி' என்று பாடியிருக்க மாட்டார். மானிட வடிவுடன் இருந்த குருநாதரின் உடலிலிருந்து ஒளி தோன்றி, அது மேல் நோக்கியதாக இருந்திருத்தல் வேண்டும். அதனாலேயே 'செந்தழல் புரை திரு மேனி' என்றார். இங்கு வந்துள்ள 'மேனி' என்ற சொல் நினைவிற் கொள்ளவேண்டியதாகும். பிற கோயில்களில் காணப்பெறும் இலிங்க வடிவிலிருந்து பெரிதும் வேறுபட்டதாகலின் 'செந்தழல் புரைதிரு மேனி' என்றார்.

அடுத்த அடியாகிய 'திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி' என்பது நன்கு விளங்குமாறில்லை. இந்த அடியில் வரும் 'உறை கோயில்' என்பதுதான் பிரச்சினைக்குரிய தொடராகும். உறை கோயில் என்பது வினைத் தொகையாகும். செந்தழல் திருமேனி உடையான் உறைந்த, உறைகின்ற, எக்காலத்தும் உறையப்போகின்ற கோயில் என்ற பொருளைத் தந்துநிற்பதாகும் அவ்வினைத் தொகை. 'செந்தழல் புரை திருமேனி' என்றதால் தழலை

ஒத்த மேனி என்றார். தழலைக் காணலாமேனும் அதற்கெனத் தனிவடிவம் இல்லை. அதேபோலக் குருநாதர் கண்ணால் காணப்பெற்றாலும் அவருக்கென்று தனிவடிவம் எதுவுமில்லை ஆகவேதான், திருப்பெருந்துறைக் கோயிலிலும் தனியாக ஒரு வடிவம் வைக்கப்படவில்லை.

செந்தழல் புரையும் அவன் திருமேனி என்று அடிகளார் கூறினாலும், அவன் திருப்பெருந்துறைக் கோயிலிலுள் உறைகின்றான் என்று பாடியுள்ளார். இதனை ஏற்றுக்கொள்வதானால் தழல்போன்ற வடிவுடைய பெருமான் உறைகின்ற இடம் திருப்பெருந்துறைக் கோயில் என்பது விளங்குகின்றது. இந்த அடிப்படையை வைத்துக் கொண்டு பேசுவதானால், அடிகளார் நிகழ்ச்சிக்கு முன்னரே, திருப்பெருந்துறையில் ஒரு கோயில் இருந்தது என்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

ஆனால், இதே பாட்டில் மூன்று இடங்களில் 'காட்டி' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார். செந்தழல் மேனி காட்டி, அந்தணன் ஆவதும் காட்டி, உறை கோயில் காட்டி என்று வருவதை மீண்டும் ஒருமுறை சிந்தித்தால் இவை மூன்றுமே அடிகளார் காண்பதற்காக அந்த விநாடியில் உருவாக்கப் பெற்றவையோ என்று ஐயுறத் தோன்றுகிறது.

திருமேனி ஒன்று அல்லாமல் எல்லாத் திருமேனிகளையும் உடைய அவன், இந்த விநாடியில் செந்தழல் புரை திருமேனியைக் கொண்டான். எத்தனையோ மானிட வடிவிருக்க, அந்தண வடிவைக் கொண்டான். அடிகளார் காண்பதற்காகவே மேனியும், அந்தணவடிவும் காட்டியவன் ஒரு திருக்கோயிலையும் காட்டினான் போலும். குருநாதராக வந்தவர் திருப்பெருந்துறையைப் பொறுத்தமட்டில் இங்குத்தான் உறைகின்றேன் என்று சொல்லி ஒரு கோயிலைக் காட்டினார்போலும். மேனியும், அந்தண வடிவும் மறைந்ததுபோல அந்தக் கோயிலும் மறைந்திருக்க வேண்டும். எனவேதான், உறைகோயில்

என்று வினைத்தொகையைப் பயன்படுத்தினார் போலும். எதிர்காலத்தில் உறையப்போகும் கோயில் என்று பொருள் கொண்டால் ஒருவாறு இப்பிரச்சினையைக் சமாளிக்கலாம்.

கோயில் மூத்த திருப்பதிகம்

நீத்தல் விண்ணப்பத்தில் 'என்னை விட்டுவிடாதே' என்று நாற்பத்தெட்டுப் பாடல்களில் பேசிய அடிகளார், மனத்தில் ஏதோ ஒரு தென்பு பிறக்க, அதன் விளைவாக இரண்டு பாடல்களில் (152, 153) 'விட்டுவிடாதே' என்று கெஞ்சுவதற்குப் பதிலாக, இறைவனை எச்சரிக்கை செய்கின்றார். இதிலுள்ள ஐம்பது பாடல்களில் மனத்தில் தோன்றிய துயரம் உள்ளத்தைச் சென்று தாக்க, ஆறாத் துயரத்தில் அழுந்தி, எக்காரணங்கொண்டும் தம்மை விட்டு விடக்கூடாது என்று தொடங்கும் இப்பாடல்கள் சொல்லச் சொல்ல துயரம் மிகுதிப்படுதலைக் காட்டுகின்றன.

நீத்தல் விண்ணப்பத்தின் முதல் நாற்பது பாடல்களில் அவருடைய மனத்தில் தோன்றிய இந்த ஆதங்கம் நம்பிக்கையை இழந்த நிலையை (despair) அடைந்து விடுகிறது. என்றாலும் அடுத்துள்ள ஏழு பாடல்கள் முடிவதற்குள் இந்த நம்பிக்கை இழந்த நிலை மாறி, புதிய தென்பு பிறந்து, விடமாட்டான் என்ற உறுதிப்பாடு மனத்துள் தோன்ற, அதன் 48, 49ஆம் பாடல்களில் அவனையே கேலிசெய்யும் நிலை தோன்றிவிட்டது. எச்சரிக்கை செய்தாலும் தம் முன்னைய நிலையை உணர்ந்து 50ஆவது பாடலில், தாம் கேலி செய்தது தவறாக இருப்பினும் அதனை மன்னிக்க வேண்டும் என்று பழைய முறையில் வேண்டிக்கொள்கிறார்.

இத்தகைய நிலைமை கோயில் மூத்த திருப்பதிகம் வரையுள்ள 377 பாடல்களில் நீத்தல் விண்ணப்பம் தவிர வேறெங்கும் காணமுடியாது. நீத்தல் விண்ணப்பம் திருப்பெருந்துறையில் அருளியதாகும். குருநாதர்

மறைந்தவுடன் ஏற்பட்ட அதிர்ச்சியில் தோன்றிய பாடல்களாகும், இவ்விண்ணப்பம். இவை தவிரச் சதகம் உள்பட பின்வரும் பாடல்களில் இத்தகைய நம்பிக்கை இழந்த நிலையைக் காண்பது இயலாத காரியம். காரணம், அவருடைய உள்ளத்தில் தோன்றிய தென்பு, நம்பிக்கை இழந்த நிலைக்கு அவரைத் தள்ளவில்லை.

தில்லையைப்பற்றிப் பாடப்பெற்றுள்ள கோயில் மூத்த திருப்பதிகத்தின் பத்துப் பாடல்களில் ஒரு வகை வளர்ச்சியைக் காணலாம். உடையாள் என்று தொடங்கும் முதல்பாடல் இறையிலக்கணத்தின் ஒரு பகுதியையும், அடிகளாருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பையும் தத்துவ ரீதியாக எடுத்துக் கூறத் தொடங்குகிறது.

ஆனால், இரண்டாவது, மூன்றாவது பாடல்களிலேயே இந்தத் தத்துவ ஆராய்ச்சி அடிபட்டுப் போய், அடிகளாருக்கே உரிய உணர்ச்சி கொப்பளிக்கும் பாடல்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. தத்துவ ஆராய்ச்சியில் தொடங்கிய முதல்பாடல் உள்ளத்து உணர்ச்சியாய் வளர்ந்து, தாம் எதிர்பார்த்த அனுபவம் கிட்டாமையால் மனம் நொந்து போன அடிகளார், நல்காது ஒழியான் எனத் தொடங்கும் பத்தாவது பாடலில் உள்ளக் குமுறலை வெளியிடுகிறார். இந்தக் குமுறலின் இடையே நல்காது விடமாட்டான் என்ற சிறுநம்பிக்கையும் தலைகாட்டு கின்றது.

இந்நிலைக்கு முற்றும் மாறாகக் கோயில் மூத்த திருப்பதிகம் நம்பிக்கை இழக்கும் மனநிலையில் தொடங்குகிறது. 'அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்' என்று சாதாரணமாக வேண்டிக்கொண்டு முதற்பாட்டைத் (388) தொடங்கியவர், அடுத்த பாடலில் அவ்வாறு அருள்செய்வதற்கு அவன் கடமைப்பட்டவன் என்பதை நினைவூட்டுகிறார். 'எனை முன்னின்று ஆண்டாய்; யானும் அதுவே முயல்வுற்றும் பின்னின்று

ஏவல் செய்கின்றேன்' என்று சொல்லிக் கொண்டு வந்தவர், தாம் செய்யும் குற்றேவலில் ஏதோ ஒரு பிழை நேர்ந்துவிட்டதாகவும், அது காரணமாக அடியார்கள் உடன்செல்லாது பிற்பட்டு ஒழிந்ததாகவும் கூறினார்.

இதிலுள்ள சிறப்பு என்னவென்றால், தாம் எவ்வித முயற்சியும் செய்யாமல் இருக்கவும் திருப்பெருந்துறையில் (குருநாதர்) அவராகவே வந்து, முன்னின்று தடுத்து ஆட்கொண்டார் என்பதாகும். அவராகவே ஆட்கொண்டு இருப்பினும் அதனை எளிதாக ஒதுக்கிவிடாமல் தாம் குருநாதர் சொன்ன வழியே சென்றதாகவும் கூறுகிறார். 'யானும் அதுவே முயல்வுற்றுப் பின்னின்று ஏவல் செய்கின்றேன்' (379) என்று நிகழ்காலத்தால் கூறியதன் பொருள் இதுவேயாகும். குருநாதர் காட்டிய வழியிலேயே செல்லத் தொடங்கி (முயல்வுற்று), அவர் மறைந்துவிட்ட பிறகும் (பின்னின்று), அவ்வழியிலேயே செல்வதாகக் (ஏவல் செய்கின்றேன்) கூறுகிறார். அப்படிப்பட்ட ஒருவரை வழிநடத்திச் சென்று ஏற்றுக்கொள்வதுதானே முன்னின்று ஆண்டவனுக்குரிய கடமை? அதனை அவர் செய்ய வில்லை என்பதை எல்லையற்ற மனவருத்தத்துடன் குறிப்பாகக் கூறுகிறார்.

'பிற்பட்டு ஒழிந்தேன்' என வரும் தொடர் இருவகைப் பொருளை உடையது. முன்னேறிச் செல்லாமல் பிற்பட்டு ஒழிந்தது தம்முடைய குற்றம் என்று அடிகளார் ஏற்றுக்கொள்வதுபோல இத்தொடர் அமைந்துள்ளது. ஆழ்ந்து நோக்கினால் முன்னின்று ஆண்டவன், தன்னால் ஆட்கொள்ளப்பட்டவன் எவ்வளவு பின்தங்கினாலும் அவனை இழுத்து முன்னேற்ற வேண்டியது அவன் கடமையாகும் என்ற பொருள் இரண்டாவதாக நிற்கின்றது.

இப்பொழுது இரண்டும் நடைபெறவில்லை. அதாவது முன்னேறவேண்டிய அடிகளார், தம்முடைய அறியாமை காரணமாகப் பிற்பட்டு ஒழிந்ததாக கூறுகிறார். ஆண்டவன்

பின்தங்கிய இவரை இழுத்து முன்னேற்றாமல் விட்டுவிட்டான் என்றும் கூறுகிறார். இரண்டு வகையிலும் துன்பம் அடைந்தவர் அடிகளாரே ஆவார். ஆதலால், நம்பிக்கை இழப்பு முழுவதுமாக அடிகளாரை ஆட்கொண்டுவிட்டது. இதனை 380ஆம் பாடலில் (3வதுபாடல்) 'அடியேற்கு உன் முகந்தான் தாராவிடின் முடிவேன்' என்று புலப்படுத்திப் பாடுகின்றார்.

இறந்துபடுவேன் (முடிவேன்) என்று கூறினாரேனும் அது நடைபெறுகின்றவரையில் தாம் என்ன செய்யப்போகிறார் என்பதை 'இரங்கும் கொல்லோ என்று அழும் அதுவே அன்றி மற்று என் செய்கேன்' (381) என்று பாடுகிறார்.

நம்பிக்கை இழப்பு என்பது 379ஆம் பாடல் தொடங்கி 381ஆம் பாடல் வரையுள்ள மூன்று பாடல்களில் ஒரு முழுவடிவு பெற்றுவிடுகிறது. நீத்தல் விண்ணப்பத்தில் நாற்பது பாடல்களுக்கும் மேலாக மெள்ளமெள்ள வளர்ந்த இந்த நம்பிக்கை இழப்பு கோயில் மூத்த திருப்பதிகத்தில் மூன்றே பாடல்களில் முழுவடிவு பெற்றுவிடுகிறது.

மனித மனம் மிக வினோதமானது. நம்பிக்கை இழப்பு முழுவதுமாக நேர்ந்துவிட்டாலும், ஏதாவதொன்றைப் பற்றிக்கொண்டு அந்த நம்பிக்கையை வளர்க்க முயல்வது மனித மனத்தின் இயல்பாகும். அறுந்துகொண்டிருக்கும் வேரைப் பற்றிக்கொண்டு தொங்குகின்றவன், தனது இறுதிக்காலம் சில விநாடிகளிலேயே வரப்போகிறது என்று அறிந்தவுடன், நம்பிக்கை இழப்பை முழுவதுமாக அடைந்து விடுகிறான். என்றாலும், மரத்திலிருந்து சொட்டுகின்ற தேனை நாக்கை நீட்டிப் பெற்று அனுபவிப்பது நம்பிக்கை இழப்பின் இடையே தோன்றும் ஒரு நம்பிக்கையாகும்.

அடிகளாருக்கும் இத்தகைய ஒருநிலை ஏற்பட்டதை 382ஆம் பாடல் தெரிவிக்கின்றது. 'பிரைசேர் பாலின்

நெய்போலப் பேசாதிரு'க்கிறான் அவன் என்ற உவமை, இந்த நம்பிக்கை துளிர்விடுவ'தை அறிவிக்கின்றது. தம்மைக் குருநாதர் ஒதுக்கிவிட்டார் என்று இதுவரையில் பேசியவர், இப்பொழுது 'பிரைசேர்' பாலின் நெய்போல'க் குருநாதர் உள்ளார் என்று பேசுவது துளிர்விடும் அந்த நம்பிக்கையைக் காட்டுவதாகும். பிரைசேர் பாலின் நெய்போல வெளிப்பட்டு அருள்செய்யாமல் குருநாதர் மறைந்துள்ளார் என்று கூறுவதில் ஒரு கருத்துப் பொதிந்துள்ளது. பாலினுள் மறைந்திருக்கும் நெய், வெளிப்பட வேண்டுமேயானால், அந்தப் பாலுக்குப் பிரையிடவேண்டும். பிரையிடாவிட்டால் நெய் எளிதில் வெளிப்படப்போவதில்லை. பிறவிக் கடலைக் கடந்து முன்னேறக்கூடிய ஆற்றல் அடிகளாரிடம் இருப்பினும், திருவருள் என்ற பிரை குருநாதர் வடிவில் வந்து இடப்பட்ட பிறகே, அது வெளிப்படும்.

திருப்பெருந்துறையில் பிரையிட்டாகிவிட்டது. அவர் வழியே பணி செய்துகொண்டிருத்தலின், பிரையிட்ட பால் தயிராக மாறுவதற்குரிய காலக் கெடுவும் முடிந்துவிட்டது. இப்பொழுது பாலிலுள்ள நெய் வெளிப்படவேண்டும். தயிர் கடையப்படுவதுபோல, குருநாதரின் அருள் பணிபுரிய வேண்டும். ஆனால், அவர் பேசாது இருந்துவிடுகிறார். எனவே, அடிகளாரின் முன்னேற்றம் தடைப்படுகிறது. பிரையிட்டவர் கடைதலாகிய பணியைச் செய்யாமல் இருப்பாரேயானால் அது யாருடைய குற்றம் என்று கேட்கும் முறையில் 'பேசாது இருந்தால் ஏசாரோ?' என்கிறார்.

பிற்பட்டு ஒழிதல் தம் குற்றம் என்று 379ஆம் பாடலில் பேசியவர், இப்பொழுது சுருதியை மாற்றி, பேசாது இருத்தல் குருநாதரின் தவறு என்றும், இதனை அறிந்த உலக மக்கள் அவரை ஏசுவார்கள் என்றும் பேசுகிறார்.

ஏசுவார்கள் என்று பொதுவாகக் கூறினாரேனும், யாரை ஏசுவார்கள் என்ற வினாவிற்கு விடை கூறுமுகமாக, அடுத்த பாடலில் 'என்னை உனக்கு அடியான் என்று பிறரெல்லாம் பேசாநிற்பர்' என்று கூறுகிறார். இந்தத் தொடரை வைத்துக்கொண்டு பார்த்தால், 'பேசாநிற்பர்' என்பதற்கும் (382), 'ஏசாரோ' (383) என்பதற்கும் அதிக வேறுபாடில்லை என்பது விளங்கும்.

'குருநாதர் இட்ட பணியைத் தலைமேற்கொண்டு வாழும் திருவாதவூரரை இன்னும் அந்தக் குருநாதர் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று உன்னை ஏசுவார்கள். அடுத்தபடியாக 'அப்படி ஏற்றுக்கொள்ளாத ஒரு குருநாதரை, எங்கே தேடிப்பிடித்து இந்தத் திருவாதவூர் அவருக்கு அடியார் ஆயினார்' என்று என்னை ஏசுவார்கள்.

'பிறர் நின்னை ஏசினாலும், என்னை ஏசினாலும் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், யான் நின் அடியே பேணும் அடியவனாகவே இருப்பேன்' என்று அடிகளாரின் கூற்றில், நம்பிக்கை இழப்பின் இடையே ஒரு உறுதிப்பாடு தொனித்தலைக் காண்கின்றோம்.

384ஆம் பாடலில் நம்பிக்கை இழப்பு ஒரு புதிய வடிவத்தைப் பெறுகிறது. 'எஜமான் இல்லாத மாடுபோல் நான் திரிய வேண்டுமோ?' என்று கேட்கும்பொழுதே எஜமான் இல்லாத குற்றம் மாட்டைச் சேர்ந்ததன்று; மாட்டின் சொந்தக்காரனையே அக்குற்றம் சென்று சேரும் என்ற பொருள் தொனிக்க, 'என்னை இப்படி நிர்க்கதியாய் விட்ட குற்றம் உன்னையே சேரும்' என நேரடியாகக் கூறாமல் உவமையின் மூலமாகவே இப்பொருளைப் பெறவைத்துவிடுகிறார்.

385ஆம் பாடல் மறுபடியும் நம்பிக்கை இழப்பின் எல்லையைத் தொடுகிறது. 'ஆட்கொண்ட நீ அருளவில்லை

என்றால், என்னை அஞ்சேல் என்று சொல்வார் யார்?' என்று நொந்து கூறிவிட்டு, 'என்னையும் ஒரு பொருளாக மதித்துத்தானே நீ ஆட்கொண்டாய்?' என்ற பொருளில் 'பொருளா எனைப் புகுந்து ஆண்ட பொன்னே' என்கிறார். இந்த அளவு நடைபெற்றுவிட்ட பிறகு, என்னை மீட்டும் நின் அடியாராகிய அருளுடையார் கூட்டத்தில் சேர்க்காமல் இருந்துவிட்டால், இப்படியே நான் வாழ்ந்து இறந்து விட்டால், உலகத்தார் சிரிக்கமாட்டார்களா?

'சாதாரண மனிதனாகிய நான் ஏனைய மனிதர்களைப்போலச் செத்தால், பிறர் சிரிப்பதற்கு அதில் ஒன்றுமில்லை. ஆனால், பொருளாய் எனைப் புகுந்து ஆண்ட நீ இப்பொழுது சும்மா இருந்துவிட்டால் அதன் விளைவாக, ஏனையோர் போல நானும் செத்துவிட்டால் உலகத்தார் உன்னைப் பார்த்துத்தான் சிரிப்பார்கள், என்பது நம்பிக்கை இழப்பின் முடிமணி.

'தெருளார் கூட்டம்' என்று 385ஆம் பாடலில் கூறியவர், அவர்கள் யார் என்பதைச் 'சிரிப்பார் களிப்பார்' (386) என்ற அடுத்த பாடலில் விளக்குகிறார்.

இப்பகுதியின் நிறைவுப்பாடல் நம்பிக்கை இழந்த அடிகளார் உள்ளத்தில் தோன்றிய ஒரு புதிய கருத்தாகும். என்றாவது ஒருநாள் அவன் தமக்கு அருள்செய்யாமல் இருக்கப் போவதில்லை என்ற நினைவில், தம் வாழ்க்கை முறை எவ்வாறு செல்கின்றது என்பதை 'நாமம் பிதற்றி நயனநீர் மல்கா, வாழ்த்தா, வாய் குழறா, வணங்கா, மனத்தால் நினைந்து உருகிப் பல்கால் உன்னைப் பாவித்துப் பரவி நிற்கின்றேன்' என்று தன்னிலை விளக்கம் கூறியவர் ஒருபடி மேலே செல்கின்றார்.

'ஐயனே! அன்று நீ என்னை ஆண்டாய் என்று உரிமை கொண்டாடி, இப்பொழுது நீ அருள வேண்டும் என்று உன்னை வேண்டவில்லை. நீ படைத்த உயிர்களில்

ஓர் உயிர் இப்படி அவதிப்படுவதைப் பார்த்துக்கொண்டு இருப்பது உனக்கு அழகா? திருவாதவூரனை உன் அடியனாக மாற்றிய உன் கடமையை நினைவூட்ட எனக்கு உரிமையில்லை. ஆனால் நீ படைத்த உயிர்களுள் ஒன்று படும் அவஸ்தை இது; ஆதலால் அந்த உயிருக்கு அருள வேண்டும்' என்கிறார்.

தில்லையில் அருளிய இந்தப் பத்துப் பாடல்களில் எட்டுப் பாடல்கள் (378, 379, 381, 382, 383, 384, 385, 386) அடியார் கூட்டத்தைப் பல்வேறு சொற்களால் சுட்டுகின்றன. இதற்குரிய காரணம் என்ன? திருப்பெருந்துறையில் அடியார் கூட்டத்தின் இடையே அமரச் செய்த குருநாதர், அந்த நேரத்தில் என்ன கூறினார்? 'கோலம் ஆர்தரு பொதுவினில் வருக' என்றுதானே கட்டளையிட்டார்? எனவே, தில்லை சென்றவுடன் அடியார் கூட்டம் அங்கே நிறைந்திருக்கும், அவர்களிடையே தம்மை அமருமாறு செய்வார் குருநாதர் என்று அடிகளார் எண்ணியிருப்பின் அதில் தவறில்லை. இப்பொழுது தில்லை வந்தாகிவிட்டது. அடியார் கூட்டம் காணப்படவில்லை. தில்லைக் கூத்தனும் இரங்கி அருள் செய்யவில்லை. இரண்டு வகையிலும் ஏமாந்துவிட்டதை நினைந்துதான் 'இரங்கும் நமக்கு அம்பலக் கூத்தன் என்றென்று ஏமாந்து இருப்பேனை' (384) என்று பாடுகிறார்.

அடியார் கூட்டம் என்று இத்தனை இடங்களில் அடிகளார் குறிப்பிடுவது மனிதர்களாக வாழ்ந்துவரும் அடியார் கூட்டத்தை அன்று. திருப்பெருந்துறையில் குருநாதரோடு வந்து, அவருடனேயே மறைந்துவிட்ட அடியார் கூட்டத்தையே ஆகும்.

கோயில் திருப்பதிகம்

மனித மனத்தின் பொதுவான இயல்புகளில் ஒரு முக்கியமான இயல்பைப்பற்றி இங்கு நினைத்தல் வேண்டும்.

ஒருவருடைய வாழ்க்கையில் மிகச் சிறப்பாகக் கருதப்படும் ஒரு நிகழ்ச்சி, எந்த ஊரில் நடைபெற்றதோ, அந்த ஊரைப்பற்றிய நினைவும், அதை நினைக்கும்போது ஒரு தனிப்பட்ட மகிழ்ச்சியும் ஏற்படுதல் இயல்பேயாகும்.

அடிகளாரைப் பொறுத்தமட்டில் அவர் வாழ்க்கையை முழுவதுமாக மாற்றி, மணிவாசகராக வெளிவரச் செய்தது திருப்பெருந்துறை நிகழ்ச்சியே ஆகும். சொக்கன் பரிமேல் வந்தது; வந்திக்குக் கூலியாளாய் வந்தது; மண் சுமந்தது; பிரம்படிபட்டது ஆகிய அற்புதச் செயல்கள் அனைத்தும் மதுரையில்தானே நடந்தேறின? ஆனால், இந்த நிகழ்ச்சிகள் எதுவும் அடிகளார் மனத்தில் ஒரு பெருந்தாக்கத்தை ஏற்படுத்தின என்று கூறுவதற்கில்லை. இவ்வாறு கூறுவதால் இவற்றை அவர் குறைத்து மதிப்பிட்டுவிட்டார் என்று தவறாக நினைந்துவிட வேண்டா. இவை யாவும் செயற்கரும் செயல்களே ஆகும். இவற்றைச் செய்தவன் சொக்கனே என்பதை நன்கு அறிவார் அடிகளார். அப்படியானால் இவற்றை அல்லவா நினைவில் இருத்திப் பெரிதாகப் பாடியிருக்க வேண்டும்?

அவ்வாறின்றிக் குருநாதராக வந்து, தம்மை தடம் மாற்றியதையே விடாமல் கூறுகிறாரே ஏன்? மேலே காட்டிய அற்புதச் செயல்களைச் சொல்லும் பாடல்களை விட ஏறத்தாழ மூன்று பங்கு அதிகமாகத் தமக்கு அருள் செய்தமையையும் தம்மை மாற்றிப் பணிகொண்ட மையையும் அடிகளார் நன்றிப் பெருக்கோடு நினைக்கின்றார்.

இது ஏன் என்று ஒரு விநாடி நின்று நிதானித்தால் இதன் அடிப்படை எளிதில் விளங்கிவிடும். மேலே கூறிய அற்புதச் செயல்கள் சாதாரண உலகியல் நிகழ்வுகளுக்கு அப்பாற்பட்டுள்ளவையே என்பதை நாம் அறிவோம். அதனாலேயே அவற்றை இயற்கையினிறந்த நிகழ்ச்சிகள் என்று கூறுகின்றோம். இவை மாபெரும் சிறப்புடையவை

என்றாலும், இவற்றைவிடச் சிறப்புடையதும் ஒன்று உண்டு. அதுவே மனிதனுடைய மாற்றமாகும்.

மனிதனுடைய வாழ்க்கை முறையில்— நிலைமையில் எண்ணத்தில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு. ஆனால், அந்த மாற்றங்கள் பழைய நிலைக்கு நேர்மாறாக 180 பாகைக் கோணத்தில் செல்வதில்லை. சிறுசிறு மாற்றங்கள் நிகழலாம். ஆனால், சில நாட்களில் இந்த மாற்றங்கள் வன்மை இழந்து பழைய நிலைக்கே போய்விடுதலைக் கண்டுள்ளோம். இவ்வாறில்லாமல் முழு மாற்றத்தைப் பெற்று, அந்த மாற்றம் நிலையாக நிற்கவேண்டுமானால், அந்த மாற்றத்தை அந்த மனிதன் தானே செய்துகொள்ள முடியாது. நிலையான இம்மாற்றத்தைச் செய்யக்கூடியவன் இறைவன் ஒருவனே ஆவான்.

நரி பரியாதல், பரி நரியாதல், கூலியாளாய் வருதல் முதலிய மாற்றங்கள் அற்புத நிகழ்ச்சிகள் என்று சொல்லப்படினும் ஒரு சில நேரம் அற்புதம் காட்டி, மறுபடி பழைய நிலையை அடைந்து விடுகின்றன. இந்த மாற்றம் தாற்காலிக மாற்றம் (temporary change) என்று சொல்லப்பெறும்.

ஆனால், ஓர் அமைச்சரை அடியாராக்கி இருபத்து நான்கு மணிநேரமும் அதேநிலையில் இருக்கச்செய்து, அவர் மூலம் திருவாசகம் வெளிவர ஏற்பாடுகள் செய்யப் பெற்றதென்றால், திருவாதவூரர் பெற்ற மாற்றம் தாற்காலிக மானது அன்று; நிலையானது என்பது வெளிப்படை.

இந்த நிலைபேறான மாற்றத்தில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதலில் குருநாதர் வடிவுடன் ஒருவர் தோற்றமளித்தார். இரண்டாவதாக, அமைச்சர் தம்மை மறந்து குருநாதரின் பாதங்களில் சென்று வீழ்ந்தார். மூன்றாவதாக, குருநாதர் திருவடி தீட்சை செய்தார். நான்காவதாக, அடியார் கூட்டத்தினிடையே அமருமாறு

செய்தார். ஐந்தாவதாக, எதிரே இருந்த குருநாதர் தாம் யாரென்பதை உமையொருபாகன் கோலமாகக் காட்டினார். ஆறாவதாக, குருநாதர், சீடர்கள் ஆகிய அனைவரும் மறைந்து மணிவாசகர் தனியே விடப்பட்டார். ஏழாவதாக, மணிவாசகர் தம் உள்ளத்திற்குள் இதுவரை கண்டிராத பெரும் சோதியைக் காண்கிறார். இந்த;சு சோதி அவருள் நிலைத்துவிட்டது. குருநாதர் சோதிவடிவாக உள்ளே நுழைந்து, நெஞ்சில் ஒளிவடிவாகத் தங்கிவிட்டதே திருப்பெருந்துறை நிகழ்ச்சியில் மறக்க முடியாத சம்பவமாகும்.

இந்தப் பதிகத்திற்கு முன்னுள்ள பல பாடல்களில் இறைவனைச் சோதி என்று விளித்துள்ளார் என்றாலும் இந்த இடம் நுனிச்சிறப்புடையதாகும். இந்தப் பத்துப் பாடல்களில் 'எழுபரஞ்சோதி' (388) என்றும், 'மெய்ச்சுடரே' (390) என்றும், 'தூ ஒளியே' (391) என்றும், 'கொடுஞ்சுடர்க் குன்றே' (392) என்றும், 'எழுகின்ற சோதியே' (393) என்றும், 'எழுகின்ற ஞாயிறே' (394) என்றும், 'படர் ஒளிப் பரப்பே' (395) என்றும், 'ஆனந்தம் ஆக்கும் என்சோதி' (395) என்றும், 'சோதியாய் தோன்றும் உருவமே' (396) என்றும் எட்டுப் பாடல்களின் ஒன்பது இடங்களில் குறிப்பிட்டுள்ளமை சிந்திப்பதற்குரியதாகும்.

இப்பதிகம் எங்கு அருளப்பெற்றது என்பது தெரிய வில்லை. இதற்கு முந்தைய பதிகம் தில்லையில் அருளப் பெற்றது என்பதை ஏற்றுக்கொள்ளலாம். தில்லைக்கு வருக என்று ஆணை பிறந்தது திருப்பெருந்துறையில் எனவே, தில்லை வந்தவுடன் குருநாதர் தரிசனம் கிடைக்கும் என்றோ அல்லது திருப்பெருந்துறையில் உடனிருந்த அடியார் கூட்டத்தோடு மறுபடியும் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டுமென்றோ அடிகளார் நம்பியிருக்க வேண்டும். ஆனால், தில்லை வந்தும் அடியார் கூட்டத்தில் கலக்கும் வாய்ப்பு வரவில்லை.

இது இல்லையென்று ஆகிவிட்ட பிறகு, குருநாதரையாவது மறுபடி தரிசிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும்; அதுவும் நடைபெற்ற பாடில்லை.

இரண்டும் நடைபெறாத நிலையில் மனம் வருந்திய அடிகளார், திருப்பெருந்துறையையும் குருநாதரையும் மனத்துள் வரவழைத்துக்கொண்டு, அதே தியானமாக இருந்திருத்தல் வேண்டும். திருப்பெருந்துறையில் புறத்தே காட்சிதந்த குருநாதர் இப்பொழுது அகத்தே ஒளிவடிவாய்க் காட்சி தருகிறார். 'மகனே! உன் பார்வையைப் புறத்தே செலுத்தாமல், அகத்தே செலுத்துவாயாக திருப்பெருந்துறையில் மானுட வடிவுடன் உன் புறக்கண்களுக்குக் காட்சி தந்தேன். இப்பொழுது மானிட, குருநாதர் வடிவுகளுக்கு மூலமாகவுள்ள ஒளிவடிவத்தைக் காண்பாயாக' என்று ஒளிக்காட்சி தந்திருக்க வேண்டும். அதனால்தான் பத்துப்பாடல்களில் எட்டுப்பாடல்கள் ஒளிக்காட்சியை வர்ணிக்கின்றன. .. நான்கு பாடல்களில் புறத்தே காணப்படும் ஒளியாகவும் ....நான்கு பாடல்களில் அகத்தே காணப்படும் ஒளியாகவும் இறைவன் உள்ளான் என்று பாடுகிறார்.

ஒளிவடிவாக உள்ள ஒரு பொருளை, ஒன்று புறக்கண்களால் காணவேண்டும், இன்றேல் அகக்கண்களால் காணவேண்டும். இத்தனை இடங்களில் ஒளி என்று பொதுவாகக் கூறினாரேனும் அந்த ஒளி இந்த இரண்டு முறைகளில் காணக்கூடியதாய் அமைந்திருத்தல் வேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக, உள்ளே தங்கிய அந்த ஒளி என்ன பணியைச் செய்கிறது என்ற வினாத் தோன்றும். ஒளிவடிவாகக் காட்சி தருவது ஒருபுறம். அதைவிட ஆழமாக உணர்விற்கு உணர்வாய் விரிந்து நிற்பது மற்றொருபுறம். 'உரை, உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வே' (390) என்று கூறியது சிந்திப்பதற்குரியது. உணர்வு என்று கூறிவிட்டால் பசி,

தாகம், பாலுணர்வு போன்ற சாதாரண உணர்வுகளை இது குறித்துவிடும் என்று கருதிய அடிகளார், தாம் கூறவந்த உணர்வை இவற்றிலிருந்து பிரித்துக்காட்ட ஓர் உத்தியைக் கையாள்கிறார். 'உரை உணர்வு இறந்து நின்று' என்பதால் வாக்கில் வெளிப்படும் சொல்லையும், உள்ளத்தில் தோன்றும் சாதாரண உணர்வையும் குறித்தாராயிற்று. இவை இரண்டையும் கடந்து நிற்கின்ற ஒன்று உண்டு. அதற்கென்று ஒரு தனிப்பெயரைக் கொடுக்க அடிகளாருக்கே முடியவில்லை. உரை, உணர்வு இறந்து நின்றதோர் உணர்வு என்று சொல்லப்படும் இரண்டாவது உணர்வு தொழிற்படும்போது சில செயல்கள் நடை பெறுகின்றன. முதலில் கூறிய உரை உணர்வு தொழிற்படும் போது அது பெரும்பாலும் உலகியல் பற்றியே நடைபெறுவதாகும். இதனை எடுத்துக்கூற முடியும்; ஆதலால், இந்த உணர்வு ஓரளவு உரையுள் அடங்குவதாயிற்று.

உரையும், உணர்வும் இறந்த நிலையில் பெரும்பாலான மனிதர்களுக்குச் சாவு வந்துவிடும். ஆனால், அடிகளார்போன்ற மா ஞானிகளுக்கு உரையும், உணர்வும் இறந்த நிலையில் அந்த இடம் வெற்றிடம் ஆகாமல் ஒரு புதிய உரையிறந்த உணர்வு அங்கே முளைத்துவிடுகிறது. இதற்கு இரண்டே இரண்டு இயல்புகள் உண்டு. ஒன்று, இதில் 'நான்' கலப்பு இல்லை, இரண்டாவது இறைவனைப்பற்றி அசைபோடத் தொடங்கி, சற்று நேரத்தில் இந்த உணர்வு தன்னை இழந்து, இறையனுபவத்தில் ஒன்றிவிடுகிறது. ஒன்றிவிட்ட நிலையில் இறையனுபவம் என்றோ, இந்த உணர்வு என்றோ பிரிக்கமுடியாது. அதைத்தான் அடிகளார் 'நின்று உணர்வதோர் உணர்வே' என்கிறார்.

தில்லைக்கு வந்தும் குருநாதர் தரிசனமோ, அடியார் கூட்டமோ கிட்டாத நிலையில் மிக வருந்திக் 'கோயில்

மூத்த திருப்பதிகம்' என்ற பெயரில் பத்துப் பாடல்கள் பாடிய அடிகளார், இப்போது தலையே அமர்ந்துகொண்டு, ஒளிவடிவாக உள்ளத்துள் இருக்கும் ஒருவனைக் கொஞ்சம் கொஞ்சமாக அனுபவிக்கத் தொடங்குகிறார். அந்த ஒளியே இறையனுபவமாக மாறுகிறது. அந்த அனுபவத்தில் அடிகளாரிடம் தோன்றிய உரையிறந்த உணர்வு, இணையத் தொடங்கி, கடைசியாக உணர்வே வடிவாக இறையனுபவம் நின்றுவிடுகின்றது. இதனைச் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் புரிந்துகொள்ள வேண்டும்.

திருவாதவூரர், அடிகளாராக மாற்றப்பட்டபின் இந்த நாடகம் தொடங்குகிறது. முதலில் அவனையும் அவன் தந்த அனுபவத்தையும் உரைகளால் கூற முயன்றார். அப்படி உரைகளில் கூறும்பொழுதே மெள்ளமெள்ள உணர்வினுள் புகலாயினார். இப்பொழுது உரை கொஞ்சம் கொஞ்சமாக மங்கி உணர்வினுள் அடங்கிவிடுகிறது. சற்று நேரத்தில் இந்த உரை, உணர்வு இரண்டுமே இறந்துவிடுகின்றன. என்றால், எஞ்சியிருப்பது எது? அடிகளாரின் ஆன்மா, உரை, உணர்வு இரண்டையும் கடந்து எதனையும் அனுபவிக்கக் கூடிய, முன்னர்க் கூறப்பட்ட உரை இறந்த உணர்வு வடிவாகவே நின்று விடுகிறது; இங்கு அடிகளார் என்று பிரித்துப் பார்க்க ஒன்றுமில்லை. ஆனாலும் அவருடைய ஆன்மா பெற்ற இரண்டாவது வடிவமாகும் இந்த உணர்வு. இதில் 'நான்' இல்லாமலும், எதிரே உள்ள இறைப்பொருளை உணரவும் அனுபவிக்கவும் முடிகிறது. இப்படிக் கூறும்போது சற்றுக் கவனத்துடன் பொருள் கொள்ள வேண்டும்.

'நான்' இல்லாமல் ஒன்றை அனுபவிக்க முடியுமா? என்றால், உலகியல் அனுபவங்களை 'நான்' இல்லாமல் பெறமுடியாது என்பது உண்மை. ஆனால், இறையனுபவத்தில் புகும்பொழுது இந்த 'நான்' கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழக்கின்றது. எவ்வளவுக்கெவ்வளவு

இந்த 'நான்' சாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இறையனுபவ உணர்வு மிகுதிப்படுகிறது. இந்த 'நான்' எவ்வளவு குறைந்தாலும் அது ஒரு கடுகளவு இருக்கின்றவரை இறையனுபவத்தில் முற்றிலுமாக மூழ்கிவிட முடியாது. உரை இறந்த உணர்வில் இறையனுபவம் தொடங்கி அது வளரவளர 'நான்' அழிய, இறையனுபவம் வளர்ந்துகொண்டே சென்று, கடைசி நிலையில் 'நானே' இல்லாத இறையனுபவ மயமாய் நிற்கின்ற ஒரு நிலை தோன்றுகிறது. அதனைத்தான் 'உரை உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வே' என்று பாடுகிறார்.

ॐ ॐ ॐ

பாட்டு முதற்குறிப்பு அகராதி

	பாட்டு எண்
அங்கி, அருக்கன்	289
அத்தி உரித்து	293
அத்தேவர் தேவர்	219
அது, பழச்சுவை என	374
அம்பரம் ஆம், புள்ளித்	273
அம்பலத்தே கூத்து ஆடி	271
அயன் தலை கொண்டு	212
அயனை, அனங்கனை,	258
அரிக்கும், பிரமற்கும்,	237
அருணன், இந்திரன்	369
அரும் தவருக்கு	274
அருமந்த தேவர்,	239
அருளாது ஒழிந்தால்,	385
அரை ஆடு நாகம்	240
அரைசனே! அன்பர்க்கு;	390
அரைசே, பொன்னம்பலத்து	382
அலரவனும், மாலவனும்	260
அவம் ஆய தேவர்	238
அறுகு எடுப்பார்	199
அன்பினால் அடியேன்	389
அன்று ஆல் நீழல் கீழ்	287
ஆ! ஆ! அரி, அயன்	241
ஆ! ஆ! திருமால்	300
ஆட்டின் தலையை	305
ஆடு அரப் பூண்	341
ஆணோ, அலியோ	333
ஆய மொழிக் கிள்ளாய்	366
ஆவகை, நாமும் வந்து	210
இணை ஆர் திருவடி	275
இப் பாடே வந்து	363
இரங்கும் நமக்கு	384

	பாட்டு எண்
இரந்து இரந்து உருக	393
இன் இசை வீணையர்	371
இன்பம் தருவன்	353
இன்பால் மொழிக்	365
இன்று எனக்கு அருளி	394
ஈர் அம்பு கண்டிலம்	296
உகந்தானே! அன்பு	380
உடையாள் உன்-தன்	378
உண்ணப் புகந்த	306
உணர்ந்த மா முனிவர்	391
உய்ய வல்லார்	298
உருகிப் பெருகி	249
உரை மாண்ட	328
உலக்கை பல	200
உவலைச் சமயங்கள்	251
உள்ளப்படாத	230
உன்னற்கு அரிய சீர்	343
உன்னற்கு அரிய திரு	335
உன்னை உகப்பன்	354
எண் உடை மூவர்	323
எந்தை, எம் தாய்	276
எரி மூன்று தேவர்க்கு	280
என் அப்பன்	256
என்றும் பிறந்து	316
ஏகாசம் இட்ட	314
ஏசா நிற்பர்	383
ஏதம் இலா இன்சொல்	359
ஏர் ஆர் இளம் கிளியே!	358
ஏர் தரும் ஏழ் உலகு	349
ஏழைத் தொழும்பனேன்	327
ஒன்று ஆய் முளைத்து	222

	பாட்டு எண்
கட கரியும், பரி மாவும்	269
கண் அஞ்சனத்தர்	339
கண்ணப்பன் ஒப்பது	218
கயல் மாண்ட கண்ணி	245
கரணங்கள் எல்லாம்	223
கரு ஆய் உலகினுக்கு	228
கல் நார் உரித்து	243
கல் போலும் நெஞ்சம்	318
கள்வன், கடியன்	233
கறங்கு ஓலை போல்வது	242
கனவேயும் தேவர்கள்	244
காசு அணியின்கள்	198
காமன் உடல்	325
கார் உடைப் பொன்	356
கான் ஆர் புலித் தோல்	266
கிஞ்சுக வாய்	362
கீதம் இனிய	348
குலம் பாடி	254
குறைவு இலா நிறைவே!	392
கூவின பூம் குயில்	370
கொந்து அணவும்	357
கொன்றை, மதியமும்	347
கோயில் சுடுகாடு	257
கோல்-தேன் மொழிக்	364
கோல வரைக் குடுமி	336
கோலாலம்	262
சங்கம் அற்ற	208
சட்டோ நினைக்க	221
சலம் உடைய	272
சாடிய வேள்வி	299
சிரிப்பார், களிப்பார்	386
சீர் ஆர் திருவடித்	292
சீர் ஆர் பவளம் கால்	329
சுந்தரத்து இன்பக்	352
சுந்தர நீறு அணிந்து	197
தூடகம், தோள்வளை	201
தூரியனார் தொண்டை	309
செய்ய வாய்ப்	361
சோதியாய்த் தோன்றும்	396

	பாட்டு எண்
சோலைப் பசும் கிளியே	367
ஞானக் கரும்பின்	209
தக்கனார், அன்றே	310
தக்கனையும், எச்சனையும்	259
தச்சு விடுத்தலும்	297
தந்தது, உன்-தன்னை	397
தாது ஆடு பூஞ்சோலைத்	360
தாளி அறுகினர்	345
தான் அந்தம்	264
திண் போர் விடையான்	290
திரு ஆர் பெருந்துறை	236
திருமாலும் பன்றியாய்ச்	235
தினைத்தனை உள்ளது	217
தீது இன்லை மாணி	321
தெங்கு உலவு சோலைத்	337
தென் பால் உகந்து	263
தேரை நிறுத்தி	313
தேன் அகம் மா மலர்க்	211
தேன் ஆடு கொன்றை	279
தேன் பழச் சோலை	351
தேன் புக்க தண்	268
தையல் ஓர் பங்கினர்	346
தோலும், துகிலும்	232
நங்காய் ! இது என்ன	265
நஞ்சு அமர்	332
நல்காது ஒழியான்	387
நல்ல மலரின் மேல்	312
நன்றாக நால்வர்க்கும்	270
நா-மகள் நாசி	307
நாயின் கடைப்பட்ட	277
நாயேனைத் தன் அடிகள்	226
நான் ஆர் என்	216
நான் தனக்கு அன்பு	227
நான்மறையேனும்	308
நானும் என் சிந்தையும்	229
நித்த மணாளர்	340
நிலம், நீர், நெருப்பு,	319
நீண்ட கரத்தர்	342

பாட்டு	எண்
நீல உருவின்	350
நெறி செய்தருளி	282
நோய் உற்று, மூத்து	224
பங்கயம் ஆயிரம்	324
படம் ஆக என்	288
பண் பட்ட தில்லைப்	278
பப்பு அற வீட்டு	373
பல நாள் பரவிப்	283
பார்ப்பதியைப் பகை	302
பார், பதம் அண்டம்	395
பார் பாடும்,	247
பாலகானார்க்கு, அன்று,	311
பாலும், அமுதமும்,	285
பிரமன், அரி, என்ற	326
புத்தன் புரந்தரன்	250
புத்தன் முதலாய	320
புரதரனார் ஓரு	303
புவனியில் போய்ப்	377
பூவியல்வார்சடை	196
பூ ஏறு கோனும்	215
பூசுவதும் வெள் நீறு	255
பூத்து ஆரும் பொய்கைப்	315
பூதங்கள் தோறும்	372
பூ மேல் அயனோடு	234
பேர் ஆசை ஆம்	284
பொய் ஆய செல்வத்தே	231
பொருள் பற்றிச்	317
போற்றி! என்வாழ் முதல்	368
மலை அரையன் பொன் பாவை	267
மலை–மகளை ஓரு பாகம்	261
மா ஆர ஏறி	294
மாடு, நகை வாள்	205
மாது ஆடு பாகத்தன்	334
மாலே, பிரமனே	248
மாறி நின்று என்னை	388
மானம் அழிந்தோம்	322
மின் இடை, செம் துவர்	207
முத்திக்கு உழன்று	246
முத்து அணி கொங்கைகள்	204
முத்து நல் தாமம்	195
முந்திய முதல்	375
முழு–முதலே!	381
முன் ஆய மால்	291
முன், ஈறும், ஆதியும்	331
முன் நின்று	379
மூன்று அங்கு இலங்கு	330
மை அமர் கண்டனை	206
வட்ட மலர்க் கொன்றை	213
வணங்க, தலைவத்து;	281
வல் நெஞ்சக்	225
வளைந்தது வில்லு	295
வா இங்கே நீகுயிற்	355
வாள் தடம் கண்	202
வான் கெட்டு, மாருதம்	252
வானவன், மால், அயன்	286
விண்ணகத் தேவரும்	376
விண்ணோர் முழு–முதல்	253
வெம் சின வேள்வி	304
வெய்யவன் அங்கி	301
வெள்ளைக் கலிங்கத்தார்	344
வேதமும் வேள்வியும்	214
வேத மொழியர்	338
வைத்த நிதி, பெண்டிர்	220
வையகம் எல்லாம்	203

ॐ ॐ ॐ

பத்மவாசன்